# கலம்பகம்



வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய

# வீரகேரளம்புதூர்

# நவநீதகிருட்டிணன் கலம்பகம்


உரையாசிரியர்—பதிப்பாசிரியர்

டாக்டர் வே. இரா. மாதவன்

*தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 5*



பாவை

வெளியீட்டகம்

முன்றில் எண் : 1 (சி-1), முன்றில் சாலை,
குடியிருப்பு வளாகம், தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர் - 613 005.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the book | : | Veerakeralampudoor Navaneetha Kiruttinan Kalambagam by Dhandapani Swamigal. |
| Editor and commentator | : | Dr. V. R. MADHAVAN, M.A., B.Ed., Ph.D., Senior Lecturer, Dept. of Palmleaf Manuscripts, Tamil University, Thanjavur - 613 005. |
| Publisher & Copy right | : | Paavai Publications C-1, Tamil University Staff Quarters, Trichy Road, Thanjavur-613 005. |
| Publication No. | : | 6 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | May 1994 |
| Edition | : | First |
| Paper Used | : | 16 Kg Maplitho |
| Size of the Book | : | 21 x 14 Cms |
| Printing types used | : | 10 Point |
| No. of Copies | : | 1000 |
| No. of Pages | : | xxxii+324=356 |
| Price | : | 60/- (Rupees sixty) |
| Printers | : | Maruthy Press, 173, Peters Road, Royapettah Madras-600 014. |
| Artist | : | Amudone |
| Subject | : | Kalambagam—a kind of Prabhandha literature in Tamil-Edited and published from Palmleaf Manuscripts. |

THIS BOOK IS
PUBLISHED WITH THE FINANCIAL ASSISTANCE OF
TIRUMALA TIRUPATI DEVASTHANAMS
UNDER THEIR SCHEME
**"AID TO PUBLISH RELIGIOUS BOOKS"**

# காணிக்கை

தன் மகனைச் சான்றோன் எனக்கேட்டு
ஈன்ற பொழுதினும் பெரிதுவந்த

—தாய்க்கும்

மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் என வாழ்ந்த

—தந்தைக்கும்

இந்நூலைக் காணிக்கையாக்கி
வணங்குகிறேன்.

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | — ix |
| | ஆசியுரை | — xii |
| | வாழ்த்துரை | — xiii |
| | மதிப்புரை | — |
| | சிறப்புப்பாயிரம் | — xxiv |
| | என்னுரை | — xxv |
| | ஆங்கில முன்னுரை | — xxviii |
| | சுருக்கக் குறியீட்டு விளக்கம் | —xxxii |
| | பதிப்புரை | 1— 36 |
| | உரைக்காப்பு | 37— 39 |
| | வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம்—மூலமும் உரையும் | 41—296 |
| | செய்யுள் முதற்குறிப்பு அகராதி | 297—298 |
| | பின்னிணைப்பு : | |
| 1. | வீரகேரளம்புதூர்ப் பதிகங்கள், திருப்புகழ், வகுப்பு, விருத்தங்கள், கீர்த்தனை | 299—311 |
| 2. | தமிழிலுள்ள கலம்பக இலக்கிய நூல்கள் அகரநிரல் | 312—320 |
| | துணை நூல்கள் | 321—323 |

# அணிந்துரை

**முனைவர் ஔவை து. நடராசன்**

*துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.*

*கலம்பகம் என்பது பாவும் பாவினமும், பல்வகையுறுப்பும், அக, புறப்பொருளும் கலந்து அமைந்ததோர் சிற்றிலக்கியமாகும். கலம்பகங்களுள் காலப் பழமை சான்றது நந்திக்கலம்பகம். 'நந்தி கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' என நந்திக்கோன் கலம்பகத்தால் மாட்சி பெற்ற செய்தியைப் புலவர் புகழ்ந்தோதியதைப் பிறழவுணர்ந்தோர் கலம்பகம் கேட்டு நந்தி உயிர் நீத்தான் எனக் கதைத்தனர். நந்திக்கலம்பகம் தொடங்கி இன்று காறும் நூற்றுக்கு மேற்பட்ட கலம்பகங்கள் தமிழில் வெளிவந்துள்ளன. கலம்பகம் பாடியோருள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கலம்பகங்கள் பல பாடிய பெரும்புலவர் திலகமாவார். இம்மென்றால் இருநூறும் அம்மென்றால் ஆயிரமும் பாடவல்ல காளமேகத்தை ஒத்தவர் நம் சுவாமிகள். இவரியற்றி அச்சுருப் பெறாமலிருந்த வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகத்துக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் நூல் முழுமைக்கும் விரிவான முறையில் உரையும் வரைந்து அச்சியற்றியுள்ளார்.*

*தண்ணார் தமிழ் வளர்க்கும் தனிப்புகழாளர் பலர் தோன்றிய திருநெல்வேலிச்சீமையில், தென்காசிக்கருகில் அமைந்த வீரகேரளம் புதூரில் குடிகொண்ட நவநீதகிருட்டிணப் பெருமானைக் கலம்பக இலக்கியத்தாற் புலவர் கோமான் தண்டபாணி சுவாமிகள் வனப்புறப் பாடி மகிழ்கிறார்.*

நெடியவனைச் செஞ்சிறைப்புட் பரிமேற் செம்பொன்
நேரிழையோடு உன்னியுன்னி நிகம கோடி
முடிவில்நுவல் எட்டெழுத்தும் மொழிந்தெட் டான
முறையுணர்ந்து மெய்ஞ்ஞானம் முழுகும் மேலோர்
அடியவர்தம் வேடமொரு சிறிதும் இல்லா
ரானாலும் அவர்பதத்தூள் அணிவேன் கண்டீர்!

என முன்னைப்பத்திமை நெறிப்பனுவற் சாறாய்ப் பழுத்த இறையன்பு பொதுள இந்நூல் மிளிர்கிறது. கலம்பகத்தில் உலகியலும் இடம்பெற வேண்டுமென்ற நோக்கில், காதற்பாடல்களைப் புனைதலும் உண்டு. ஆயினும் வண்ணச் சரபம் தம் எண்ணத்திற்கினிய இறைவன் பேரருளையே யாண்டும் போற்றிப் புனைதலை இக் கலம்பகத்திற் காணலாம் கள்ளருந்திய களிப்பில் மிழற்றுவதாகப் புலவர் புனையும் 'களி, உறுப்புக் கூட சுவாமிகள்பால் அறநெறி பிறழாத் தன்மையதாய், மலர்த்தேன் அருந்தும் மாட்சியைக் குறிக்கின்றது. (37) ஆழ்வார்களிடத்தும், அருளிச் செயல்கள் மீதும் சுவாமிகள் ஆழங்காற்பட்ட அரும்புலமை நூல் முழுதும் அழகுற அமைந்துள்ளது.

மயன்வியக்கும் மணிமாட மறுகார்தண் டமிழ்விரைப்
புயல்புரையும் நெடுமேனிப் புனிதர்நீ புளிநீழல்
இயல்முனிவன் ஒரு பதிகம் இசைத்தானுக் கினிதருளும்
பயனெனக்கேன் அருள்கில்லாய் பலபாடல் பகர்ந்தேனே.

என நம்மாழ்வாரின் பெருமை பேசுவதைக் காணலாம். புயவகுப்பு, மறம், சித்து, அம்மானை, களி, மடக்கு, சம்பிரதம், ஊசல் எனப் பலவுறுப்பும் பாங்குற அமைந்த இக்கலம்பகம் எழிலுடையதாகும்.

பழைய நூல்களுக்கு உரை காண்பதற்குப் பன்னூற் புலமையும் இலக்கணச் செப்பமும் புலவர்க்கு வேண்டும். நுனித்தறி புலமையும், நுழைந்து நோக்கும் திறனும், உழைப்பும் விழிப்பும் வாய்ந்தார் புலவருள் அருகிவரும் நாளில் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச் சுவடித்துறை விரிவுரையாளர் முனைவர் வே. இரா. மாதவன் இந்நூலைப் பதிப்பித்த பாங்கினைக் காணும்போது மகிழ்ந்து பாராட்டுகிறேன். மடக்கு போன்ற பகுதிகட்கு உரைகண்டிருப்பதும் வைணவக் கலம்பக நூலாதலின் திவ்விய பிரபந்தத்தின்கண் அமைந்த ஒப்புமைப் பகுதிகளை ஆங்காங்கே காட்டி விளக்கி யிருப்பதும், புராணக் குறிப்புகளை விளக்கிச் சென்றிருப்பதும் இவ்வுரையாசிரியரின் பரந்த கல்வித்திறனைப் பறைசாற்றுகின்றன.

சமய ஒருமையோடு வண்ணச்சரபம் அருளிய கலம்பகத்தைச் சிரவைக் கௌமார மடாலயம் மகாசந்நிதானம் தவத்திரு சுந்தர சுவாமிகள் உரை எழுதிப் பதிப்பிக்குமாறு பணித்ததை ஆசிரியர் குறித்துள்ளார். வாழும் வண்ணச்சரபமாகத் திகழும் சுந்தர சுவாமிகள் வாய் திறந்தால் வண்ணம் பாடும் வளவிய புலமை குலவிடும் பெருந்தகையாளர். சிரவை ஆதீனத்து நல்வாழ்த்து ஆசிரியருக்கு அமைந்திருப்பது பாராட்டத்தக்கதாகும். நெடும் புலமைக்குச் சான்றாய், நினைத்தபோதெல்லாம் தம் பாட்டுத் திறத்தைப் பாலித்தவர் வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகளாவார். வீரையம்பதியில் கோயில் கொண்ட நவநீதகிருட்டிணப் பெருமானைக் கலம்பகப் பொருளாகக் கொண்டு தமிழ் நெஞ்சங்கள் குளிர, அடிகள் பாமழை பொழிந்திருப்பதைப் போற்றி மகிழலாம். கலம்பகம் பார்த்து ஒரு கலம்பகமும், அந்தாதி பார்த்து ஓர் அந்தாதியும் புனைவது எனும் பழமைப்போக்கு இடைக்காலத்திலே பெருகி நின்றதைச் சிலர் குறை கூறுதலும் உண்டு. எனினும் ஆர்வ மேலீட்டால் அறிஞர் மாதவன் அவர்கள் தாம் சேர்ந்துள்ள துறைக்கும் புகழீட்டுவதாய் இந்நூலை வெளியிடுகின்றார். இளமையும் புலமையும் இணைந்து அமைந்தமுனைவர் மாதவன் அவர்கள் தொடர்ந்து பணியாற்றித் துறைதோறும் தமிழுக்குத் தொண்டாற்றி, தமிழுலகுக்குப் பயனார்ந்த பனுவல்களை வழங்கவேண்டுமென வாழ்த்துகிறேன்.

தஞ்சாவூர்
12-5-94

ஔவை நடராசன்

# ஆசியுரை

சிரவைக் கௌமார மடாலய ஆதீனகர்த்தர்

## தவத்திரு சுந்தர சுவாமிகள்

தவத்திரு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த பெரும் தமிழ்க் கவிஞர்களுள் ஒரு சிறந்த கவிஞர். இலக்கணம், இலக்கியம். சாத்திரம். தோத்திரம், சுய சரிதை, புராணம், நாடகம் எனப் பலவிதமான நூல்களையும் இயற்றியவர். இவர் ஒரு பெரிய சமரச ஞானி.

சுவாமிகள் மொத்தம் ஆறு கலம்பகங்களை அருளிச் செய்துள்ளார்கள். அவற்றுள் இன்றுவரை நான்கு கலம்பகங்களே பதிப்பாகியுள்ளன. ஐந்தாவதாக வீரை நவநீதகிருட்டிணன் கலம்பகம் நல்ல உரையுடன் இப்போது வெளிவருகிறது.

இக் கலம்பகத்தைச் சிறந்த முறையில் உரை எழுதிப் பதிப்பித்தவர் பாராட்டிற்குரிய அன்பர் முனைவர் வே. இரா. மாதவன் அவர்களாவார். பதிப்பு அழகாகப் பாராட்டும்படி யுள்ளது. இந்த நற்பணியைச் செய்து முடித்த இவர் முன்னரே வண்ணச்சரபம் சுவாமிகளின் வைத்தீசுவரன் கோவில் பதிகங்கள், வேலூர்ப் பதிகங்கள், திவ்விய தம்பதியர் புகழ்மாலை ஆகிய நூல்களைச் சிறப்பாகப் பதிப்பித்தவர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் சுவடிப்புலத்தில் புகழோடு பணியாற்றி வருகிறார்.

பாராட்டிற்குரிய அன்பர் வே. இரா. மாதவன் அவர்களும் அவருடைய குடும்பத்தாரும் எல்லாம் வல்ல இறைவனின் தண்ணருளால் எல்லா நலங்களும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க எனப் பரமகுருநாதரின் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்து கின்றோம்.

தண்டபா ணிச்சாமி நவநீத
    கிருட்டிணன்மேல் சாற்று மேலாம்
ஒண்டகைய கலம்பகத்தை உரையுடனே
    பதிப்பித்த உண்மை அன்பன்
தண்டமிழின் அறிவுடையோன் மாதவப்பேர்க்
    கலைவல்லான் சால்பு மிக்கான்
மண்டுபெரு வளம்பெற்றுப் பல்லூழி
    வாழிஎன வாழ்த்து கின்றாம்.

**சுந்தர சுவாமிகள்**

# வாழ்த்துரை


**டாக்டர் ச.வே. சுப்பிரமணியன்**

**முன்னாள் இயக்குநர் :**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**டி.டி.டி, ஐ, (அஞ்சல்) தரமணி,**
**சென்னை-600 113.**

**மதிப்புறு இயக்குநர் :**
**உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,**
**தமிழூர்,**
**அடைக்கலப்பட்டணம் அஞ்சல்,**
**நெல்லை மாவட்டம்-627 808.**


மாணாக்க நண்பர் முனைவர் மாதவன் அவர்களின் 'வீர கேரளம்புதூர் - நவநீதகிருட்டிணன் கலம்பகம்' என்ற நூலைக் கண்டு, கற்று, மிகவும் மகிழ்ந்தேன். நான் வீரகேரளம்புதூரில் பிறந்துள்ளதால் இதற்கு வாழ்த்துரை எழுதத் தகுதியுடையவன் என்ற முறையில் எழுதுகிறேன்.

இக் கலம்பக நூல் இதுவரை அச்சில் வராத ஒன்று. ஏட்டிலிருந்து முதன்முதலாகச் சிறந்த பதவுரை, குறிப்புரை, விளக்கங்களுடன் வெளிவருகின்ற நூல். எதைச் செய்தாலும் முறையாகத் தெளிவாக, ஆழ்ந்த உழைப்புடன் செய்யும் பழக்கமுடையவர் மாதவன். அதே போன்று இதுவரை அச்சில் வராத இந்நூலையும் நன்கு ஊன்றி நோக்கிப் பதிப்பித்துள்ளார். இந்நூலுக்குத் தேவையான பதிப்புரை தந்துள்ளார். கலம்பகம் தோற்றம், வளர்ச்சி பற்றித் தெளிவுபடுத்தியுள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் எளிதான பதவுரையும், குறிப்புரையும், விளக்கங்களும் தந்துள்ளார். முதல் ஒரு பாடலுக்கு 53வது பக்கம் முதல் 77வது பக்கம் வரை 24 பக்கங்கள் பதவுரை, குறிப்புரை, விளக்கங்கள் தந்துள்ளமை அவர் பரந்த நூலறிவைக் காட்டுகிறது. தொல்காப்பியம், பரிபாடல், பாகவதம், ஆழ்வார் பாடல்கள் அனைத்திலிருந்தும் தேவையான இடங்களிலெல்லாம் சான்றுகள் தந்து தெளிவுபடுத்தியுள்ளார். அவர் ஏற்கனவே அச்சில் வராத பல நூல்களைப் பதிப்பித்துள்ளார். 'சித்திரக் கவிகள்' என்ற நூலை வெளியிட்டுள்ள அனுபவத்தால் பக்கம் 109 இல் உள்ள அடிமடக்குக் கவிதைக்கும் அதே போன்றுள்ள பிற கவிதைகளுக்கும் நல்ல விளக்கங்கள்

தந்துள்ளார். நூலின் இறுதியில், இதுவரை அறியப்பெறும் கலம்பக நூற்பட்டியலையும் இணைத்திருப்பது மிகவும் பயனுடையதாகும்.

டாக்டர் உ.வே. சாமிநாதையருக்குப் பிறகு தமிழகத்தில் பதிப்பாசிரியர் குறைந்துவிட்டனர். அக்குறைவைப் போக்கி நிறைவு செய்ய மாதவன் தோன்றியுள்ளார் என்பது என் கருத்து.

அவருடைய 'கண் மருத்துவம்' என்ற பதிப்பு ஆய்வு நூல் தமிழ் இருக்கும் வரை நிலைபெறும் நூல், தமிழ் உலகம் இருக்கும்வரை இருக்கும். மாதவனும் உலகம் உள்ளவரைப் புகழுடன் வாழ்வார் என்பதில் ஐயமில்லை.

இவரை மாணக்கனாகப் பெற்றதைப் பெரும் பேறாகக் கருதுகின்றேன்.

இவருடைய 'தமிழில் தலபுராணங்கள்' என்ற நூலை அச்சிட வேண்டும் என்ற ஆர்வத்தில் பல முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

தமிழால் வாழும் இச்சமுதாயத்தில் தமிழுக்காகவே வாழ்பவர் சிலர். அவருள் ஒருவர் மாதவன். அவர் தமிழுணர்வோடு எடுத்துக்கொண்ட வேலையைத் திறம்படச் செவ்வையாகச் செய்யும் ஆற்றலுடையவர். அவர் ஓவியர், கவிஞர், ஆய்வாளர். அனைத்தும் கடந்து சிறந்த உண்மையான உழைப்பாளி. அவர் நூலுக்கு வாழ்த்துரை எழுத எனக்குக் கொடுத்து வைத்துள்ளதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

அவர் இதுபோன்று தம் வாழ்நாள் முழுவதும், தமிழில் வெளிவராத நூல்களையெல்லாம் வெளியிட வேண்டும். அதற்காக அவர் நீண்ட காலம் வாழ வேண்டும் என வாழ்த்துகிறேன். 'யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய' என்று வாழ்த்தியதைப் போல் என் ஆயுளையும் சேர்த்து அவர் வாழ்ந்து தமிழுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்று முழு மன நிறைவோடு வாழ்த்தும்

அன்பன்

ச. வே. சுப்பிரமணியன்

தமிழூர்
6-5-96

# மதிப்புரை

**டாக்டர் த. கோ. பரமசிவம்**

**தலைவர், ஓலைச்சுவடித்துறை**
**தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்**

வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம் என்னும் இந்நூல் முப்பால் கண்ட சிறப்புப் போல நூற்பொருள், நூலாசிரியர், பதிப்பாசிரியர் எனும் மூவராலும் இயல்பாகவே சிறந்திருக்கிறது. இஃது ஓர் அருமையான தகுதிப் பொருத்தமாகும்.

ஆழ்வார்களும் ஆசாரியர்களும் தமிழ் மொழிக்குச் செய்த தொண்டு அளப்பரிது. அவ்வைணவர்களால் தமிழ் மொழி பெற்ற வாழ்வும், கண்ட வளமும், கொண்ட ஏற்றமும் நம் மொழி உள்ளளவும் நிலைத்து நிற்பனவாம். அவர்கள் வளர்த்துக் காத்தது மொழிப் பயிரா பத்திப் பயிரா என இவற்றுள் வேறுபாடும் உயர்வு தாழ்வும் காண முடியாதபடி அவர்தம் மொழிப்பற்றும் பாசமும் உயர்ந்திருந்தன. அவர்களால் செம்மையும் வளமும் பெற்ற நம் மொழியை இறைவனும் விரும்பிப் போற்றினான். கணிகண்ணன் பின்தொடர்ந்த பசுங்கொண்டல் வரலாறும் பிறவும் இதனை நிறுவும். ஆழ்வாராதியர் வரலாறும் இதனை உறுதி செய்யும். வடமதுரைக் கண்ணனை நம் தமிழ்த் தெய்வமாகவே உணருமாறு —தமிழறியும் பெருமாளாகவே போற்றி வழிபட்டனர் என்பதையும் வைணவ நூல்கள் தெளிவுறுத்தும்.

கலம்பகம் என்னும் சிற்றிலக்கியம் தமிழுணர்ந்தார் மீதே பாடபபடுவதாம். இதனை முதற் கலம்பகமாகப் போற்றப்பெறும் நந்திக் கலம்பகத்தும் காணலாம். நம் தமிழுணர்ந்து, தோய்ந்து, உறுதிப் பொருள் பயந்து, இம்மை மறுமை நலன்களைப் பேரின்பமாக வாரி வழங்கும் வள்ளல்பிரானாம் கண்ணபிரான் மீது பாடப் பெற்றதே இக் கலம்பகம். எனவே முதற்கண் பாடு பொருளால் இக் கலம்பகம் சிறப்புற்றது எனலாம்.

நூலாசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த புலவர்களுள் ஒருவர். அழிந்தவை போக அவர் பாடிய பாடல்களின் தொகை 50,000க்கும்

மேற்பட்டதாம். இலக்கிய வகைச் செறிவு, இலக்கண நூற் புலமை, சந்தப்பாடற்தெளிவு, வண்ணப்பாடல் வன்மை எனப் பல நிலைகளிலும் சிறந்த புலவராகத் திகழ்ந்தவர் நம் சுவாமிகள். அவர் சைவராகத் திகழ்ந்து முருகபத்தியிற் திளைத்தவர். எனினும், சமரச சமய உணர்வையே மக்களிடம் விதைத்து மகிழ்ந்தார். முருகன் மீது பாடிய பாடல்களுக்கு ஒப்ப திருமால் மீதும் ஆயிரக் கணக்கான பாடல்களைப் பாடி மகிழ்ந்தார். சைவ சமயக் குரவர்களையும் அருணகிரிப் பெருமானையும் போற்றியது போலவே ஆழ்வாராதிகளையும் போற்றிப் பாராட்டும் சமரசப் போக்கில் தலைநின்றவராவார், தமிழ்க் கடலை நீந்திக் கரை கண்டவராகிய நம் சுவாமிகள் இந்நூலின் ஆசிரியராகத் திகழ்வது இரண்டாவது பொருத்தமாகும்.

சங்க இலக்கியப் பாடல்கள் போன்றோ, காப்பிய இலக்கியப் பாடல்கள் போன்றோ ஒரே வகையிலான யாப்பைப் பின்பற்றி கலம்பகத்தைச் செய்ய முடியாது. நால்வகைப் பாவும் பாவினங்களும் விரவி வர இம்மாலையைத் தொடுக்க வேண்டும். தூது, பிள்ளைத்தமிழ், உலா போன்ற சிற்றிலக்கிய வகைகளைப் பாடுவதில் வல்லாரும் கலம்பகம் பாடுவதில் தடுமாறுவர், 'காரிகை கற்றுக் கவிபாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்' என வேதனைப்படுவார் இத்தகைய கலம்பக நூல்களைக் கனவிலும் செய்ய முடியாது. கலம்பக இலக்கிய வடிவம் அருகியமைக்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். இத்தகைய கலம்பக இலக்கியத்தில் ஆறுக்கு மேற்பட்ட நூல்களைப் பாடியவர் நம் சுவாமிகள், எனில் இந்நூலின் ஆசிரியராக அவர் திகழ்வதில் எவ்வளவு பொருத்தமும் மேன்மையும் இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கலாம்.

இந்நூலின் உரையாசிரியராகவும் பதிப்பாசிரியராகவும் திகழும் முனைவர் வே. இரா. மாதவன் அவர்கள் பல்லாற்றானும் சிறந்த பதிப்பாசிரியராவார். அவர்தம் சுவடிப் பதிப்புகள் சுவடியாய்வார் உலகில் பெருஞ்சிறப்பைப் பெற்றன. கண் மருத்துவம், மீனாட்சியம்மன் திருப்புகழ், சித்திரக்கவிகள், விராலிமலை வேலவர் குறவஞ்சி, வைத்தீசுவரன் கோயில் பதிகங்கள், வேலூர்ப் பதிகங்கள், திருவேங்கடவன் திருப்பாமாலை, வறுமைக்கு விடை கொடுத்த ஏழேழு வெண்பாமாலை, திவ்விய தம்பதியர் புகழ்மாலை போன்ற சுவடிப்பதிப்புகள் இவர்தம் பதிப்புத் திறமைக்கும் பதிப்பறத்திற்கும் கட்டியம் கூறுவன என்றால் அது மிகையாகாது. இவற்றுள், கண் மருத்துவம், சித்திரக் கவிகள் ஆகிய நூல்கள் தமிழக அரசின் பரிசைப் பெற்ற சிறப்பினைக் கொண்டன. அண்மைக் காலத்தில் வண்ணச்சரபம் தண்டபாணி

சுவாமிகளின் தமிழிலும் சமரசத்திலும் காதல் கொண்ட இப் பதிப்பாசிரியர் அவர்தம் நூல்களை ஆய்ந்து பதிப்பித்து வெளிப் படுத்தித் தமிழை வளப்படுத்துவதில் முனைந்திருக்கிறார். இத் தொடர் முனைப்பில் இன்று இக் கலம்பகம் வெளி வருகின்றது.

வைணவ மரபில் தோன்றிய இப்பதிப்பாசிரியர் ஆழ்வாராதியர் போன்றே திருமால் பத்தியிலும் தமிழ்ப்பற்றிலும் ஆழங்காற்பட்டு நிற்பவர். சுவடியியலிலும் வண்ணச்சரபரின் நூல்களிலும் தோய்ந்த ஈடுபாடும், கற்றுத்துறைபோகிய வல்லமையும் கொண்டவர். ஆதலின் இந்நூலுக்கு மரபு வழுவாமல் உரை எழுதிப் பதிப்பிப் பதற்கு இவர் முற்றிலும் தகுதியானவர் என்பது மூன்றாவது பொருத்தமாகும்.

அறச்செயல்களை உருவாக்கி அவற்றுக்கு மூலத்தைப் படைத் தளிப்பதினும் அவற்றை மரபு வழுவாமல் தொடர்ந்து செயற் படுத்தும் நல்லோரின் திறன் பாராட்டுக்குரியதாம். அந்த வகையில் ஒரு நூலை யாத்துப் பாடுவதினும் அதனை வெளிப்படுத்தி அதனால் தமிழ் மொழியும் தமிழ் மக்களும் பிறரும் பயனுறுமாறு செய்வதே சிறந்த தமிழ்த் தொண்டாகும் எனலாம். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்னுமாறு அமைந்த இத் தொண்டை எவ்வளவு போற்றினாலும் தகும்.

''ஒரு நூலினை எழுதுவோர், எழுதுவிப்போர், சேமிப்போர், சேமிக்கச் செய்விப்போர் முதலியவர்களைப் பார்க்கிலும் இதனை அச்சிடுவோரும் அச்சிடுவிப்போரும் மிகச் சிறந்தோராவர். இவர்களுள்ளும் ஒரு நூல் துலங்கி மிளிரத் திரவியோபகாரம் செய்து அச்சு வாகனமேற்றி விளங்கச் செய்வோர் மிகமிகச் சிறந்தோராவர்'' (உத்தர காலாமிர்தம், பதிப்புரை) எனப் பறங்கிப் பேட்டை குமாரசுவாமி ஆச்சாரியார் கருத்துரைப்பது போல, இம்முனைப்பில் ஈடுபட்ட மருதப்பதேவர், கௌமாரமடாலயத்தினர் போன்றோர் பாராட்டுக்குரியவரே. எனினும், நூலை வெளிப் படுத்திப் பரவச் செய்யும் நோக்கில் உரையெழுதிப் பதிப்பித்த இப் பதிப்பாசிரியரே நிறைந்த பாராட்டுக்குரியவராகின்றார்.

நல்ல சுவடிப்பதிப்பு ஒன்று வெளிவருவது தமிழுக்கும் தமிழினத்துக்கும் பெருமை சேர்ப்பதாகும். மரபு வழியில் வளமான உரையுடன் இந்நூல் சிறந்த சுவடிப்பதிப்பாக வெளிவருவதைக் கண்டு ஓலைச்சுவடித்துறையும் தமிழ்ப் பல்கலைக்கழகமும் பூரிப்பும் பெருமையும் கொள்கின்றன என்பதை ஈண்டுக் குறிப்பதில் நான் மகிழ்கின்றேன்.

தெளிவான நிறைவான பதிப்புரை, தேவையான நூலாராய்ச்சி, தொடர்புள்ள பின்னிணைப்புகள், விளக்கமான குறிப்புரைகள் என

அமைந்துள்ள இந்நூல் 'சுவடிப்பதிப்பு' எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழும் சிறப்புடையதாகும்.

மரபு வழுவாத சொற்பிரிப்புகள், மூலத்தையும் உரையையும் வேறுபடுத்தும் அச்சமைப்பு, மூலநூல் போன்ற அருமையும் நுண்மையும் கொண்ட விளக்கமான பொழிப்புரை, பாடல்களின் கருத்துரை, இலக்கணக் குறிப்பு, மொழிச் செறிவு, அரிய சொற் பொருள், விளக்கம் செய்யும் கதைக் குறிப்பு, புராண வரலாறு போன்றவற்றுடன் இனிது நடக்கும் இப்பதிப்பு பொருளினும் பொருளாய் உயர்ந்திருக்கின்றது. இப்பதிப்பின் அருமையைச் சுவடியாய்வாரும், தமிழுணர்வாரும், சமயம் அறிந்தாரும் மகிழ்ந்து போற்றுவர்.

'பாடுவார் பாடும் பரிசில் வரிசை எல்லாம் ஆடுவார் அன்றி அயலவர் அறிவரோ' எனத் திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம் கூறுமாறு சிறப்புடன் திகழும் இப்பதிப்பையும் வெளியீட்டையும் நெஞ்சாரப் பாராட்டி வரவேற்பது தமிழர் தம் கடனாம்.

நூறு பாடல்களைக் கொண்ட இந்நூலுக்கு மிக விரிவான நிலையில் பதிப்புரையும், நூலாராய்ச்சியும் அமைந்துள்ளன. நாற்பது பக்கங்களில் அமைந்த இவ் அறிமுகம், பேராசிரியர் ச. வையாபுரிப்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் போன் றோரின் முன்னுரை—நூலாராய்ச்சி போன்ற நுட்பமும் விரிவும் விளக்கமும் கொண்டதாகத் திகழ்கிறது.

கலம்பக இலக்கியப் பெயரின் ஆய்வு நினைந்து போற்றுமாறு நிறுவப் பெற்றுள்ளது. 'கலம்பகம் புனைந்த விலங்கலந் தொடை யல்' எனத் தொண்டரடிப் பொடியாழ்வார் போன்றோரின் சான்று களையெல்லாம் எடுத்துக்காட்டி, பல்வேறு வகைப்பட்ட யாப்பு வகைகளைக் கொண்டு தொகுக்கப்பெற்ற இலக்கிய வகையே இது என நிறுவியிருப்பது பாராட்டுக்குரியதாம்.

கலம்பக இலக்கியத்தின் பொதுத்தன்மை, நூலாசிரியரின் சமரச உணர்வு போன்ற நுண்ணிய வரலாறுகளை உணர்த்தும் வரலாறு, அவரை ஆதரித்துப் போற்றிய மருதப்பதேவர் வரலாறு மற்றும் ஈடுபாடு, தலச்சிறப்பு, தலத்தமைந்த நவநீத கிருட்டி ணனின் தனிச்சிறப்பு, இறைவனின் பொதுப் பண்புகள், உவமை மற்றும் பிற அணிநயம் போன்ற இலக்கியக் குறிப்பு எனப் பலவா றாக இப்பதிப்புரை பெரிய ஆய்வுரையாக நடம்பயின்றுள்ளது. நூற்பதிப்புக்கு வேண்டிய இன்றியமையா இக் குறிப்புரைகளும் ஆய்வுரைகளும், நூல் கற்பார்க்கும் வரலாறு போற்றியுணர்வார்க் கும் கழிபேருவகை யூட்டுவன என்றால் அது மிகையல்ல.

சுவடிப்பதிப்புகளில் எவ்வாறு நூலறிமுகம்—முன்னுரை—பதிப்புரை அமையவேண்டும் என்பதற்கு நல்ல எடுத்துக் காட்டாக இப் பதிப்புரை அமைந்திருக்கிறது என மீண்டும் ஒருமுறைச் சுட்டுவதில் பூரிப்படைகின்றேன்.

இறைவன் மீது பாடலைப்பாடி, அப்பாடலில் அமைந்த தலத்தின் சிறப்பை வெளிப்படுத்தி, அப்பாடலைப் பரவச் செய்வது என இவை யாவும் அத்தலத்தைப் போற்றிப் பாதுகாப்பதன் நோக்கமாக ஏற்பட்டவையே என இப்பதிப்பாசிரியர் கூறியிருப்பது பத்திப் பனுவலாய் அமைந்த நூல் அனைத்திற்குமுரிய பொது நோக்கமாகும். இச்சிறப்பை எடுத்துக்காட்டிய இப் பதிப்பாசிரியரின் நுண்மாண் நுழைபுலம் நினைந்து நினைந்து போற்றுதற்குரியதாம்.

நூலைச் சுவைப்பார் சிலர், நூலின் பொருளை உணர்ந்து மகிழ்வார் சிலர், நூலின் யாப்பிலும் இலக்கிய அணியிலும் நயம் கண்டு சுவைப்பார் சிலர், இவற்றிடையமைந்த மொழியைப் பயில்வார் சிலர், பொருண்மை தரும் உணர்வை—பக்தி, காதல், வீரம் எனச் சுவைப்பார் சிலர், நூலின் உரை மாண்பைச் சுவைப்பார் சிலர், நூலின் அமைந்த வரலாற்றை உணர்ந்து மகிழ்வார் சிலர். இப்படி நூலைச் சுவைத்துப் பயன்பெறுவார் பலதிறத்தினர் ஆவர். இவர்கள் அத்துணைப்போர்க்கும் நல்விருந்தாமாறு இப்பதிப்பு உரையாலும் குறிப்புரையாலும் சிறந்திருக்கிறது. வரவேற்கத் தக்க நன்முயற்சியாக இதனைக் கருதிப்போற்ற வேண்டும். இவ்வாறு பலர்க்கும் பயன்படுமாறு ஒரு நூலைப் பதிப்பித்து வெளியிடுதல் ஒரு தனிக்கலையாகும் அருமையுடையதாகும். இக் கலம்பகநூல் இவ்வகையில் தலை நிற்பதாகும்.

நூலின் பாடல்களைச் சுவாமிகளின் மொழி உணர்வுடனே, யாப்பின் சீர் கெடாமல், சிறப்புப் பெயர்கள் மட்டும் புலப்படுமாறு சந்திபிரித்தும் துணைவினை, பண்புத்தொகை போன்றவற்றைச் சீரமைதி நோக்கிச் சந்தி பிரிக்காமலும் அடிவரையறையும், சீர் வரையறையும் கெடாதவாறு அச்சிட்டிருப்பது ஓசை மரபைக் காப்பதாகும். ஒவ்வோர் உறுப்புக்கும் முன்பு அது குறித்த விளக்கத்தைத் தந்துவிட்டு யாப்பு வடிவத்தின் பெயரைத் தலைப்பாகத் தந்து மூலத்தைப் பொருளுணர்வுக்குத் தக நிறுத்தக் குறியீடுகளுடன் வேறுபட்ட அச்செழுத்தில் அச்சிட்டிருப்பது அழகுணர்வைக் காட்டுவதாகும்.

பொழிப்புரை வரைவதற்காக, அவ்வப்பாடலைத் தொடர்ந்து-சந்தி பிரித்து, அடி பிரித்து, எடுத்துக் காட்டித் தனியே உரை வரைந்திருப்பது நல்ல உரை உத்தியாகும். நீண்ட பாடல்களுக்கு

நச்சினார்க்கினியர் போன்றோரின் உரை மரபைப் பின்பற்றிப் பகுதி பகுதியாகப் பிரித்து (பக். 53: திருமகள் முதல் பேசக் கேள் வரை) பொருளுணர்வுடன் உரை வரைந்திருப்பது பாராட்டுக்குரிய பொருள் உணர்வாகும். நீண்ட செய்யுள்களைத் தொடர்ந்து படிப்பதும் உணர்வதும் இடையீட்டை யுண்டாக்கி பொருட் தொடர்பில் தொய்வை உண்டாக்கும். இதனை உணர்ந்து உரை வரைந்திருப்பது போற்றற்குரியதாம்.

சேவடிப் பூக்கள் எனும் தொடருக்குச் செந்தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகள் (53) என மரபு வழுவாமல் உரை எழுதுகின்ற அமைப்பிலேயே உரையமைப்பு தொடர்கிறது விமல ஞான குருகையன் எனும் தொடருக்கு—குற்றமற்ற மெய்ஞ்ஞானி யாகியவரும் திருக்குருகூருமாகிய நம்மாழ்வார் எனப் பொழிப் புரை தந்துவிட்டு அதனை மேலும் விளக்கும் முகத்தான் குறிப் புரையில், விமல—நம்மாழ்வார் சடவாயுவால் நேருகின்ற உலகியல் மாயையே அண்டப்பெறாதவராதலின் அவர் ஞானம் விமல ஞானம் எனப் போற்றப் பெற்றது. இயல்பாகவே குற்றங்கள் அண்டாத மெய்யறிவு என்றவாறு என விளக்கம் தந்து தெளிவிப்பது இவ் உரையாசிரியர் கையாளும் அருமையான முறை யாகும் (பக். 83, 84). இது, உரையாசிரியர் தாம் கூறும் உரைக்குக் காரண காரியம் காட்ட வேண்டுமே என்னும் அளவுநூல் பொறுப்புணர்வைக் காட்டுவதாகும்.

இவ் உரையாசிரியர் தந்திருக்கும் குறிப்புரைகள் அருமையும் பெருமையும் கொண்டன என்றால் அது மிகையாகாது. விளக்க உரை, இலக்கிய மேற்கோள் ஒப்புமைப் பகுதிகள், இலக்கணக் குறிப்பு, அரிய சொற்பொருள். புராண வரலாறு, பெயர்க் காரணங்கள் காட்டுதல், பாடற் கருத்துரைத்தல் எனப் பல நிலைகளில் அமைந்து சிறந்துள்ளது.

ஒப்புமைப் பாடல்கள் பரிபாடல் முதலிய சங்க இலக்கியங்கள், திவ்வியப் பிரபந்தம், பாகவதம் எனும் சமய இலக்கியங்கள் எனப் பலவகையிலும் மேற்கோள் பாடல்களுடன் அமைந்துள்ளன. ஆங்காங்கு வரும் கதைக்குறிப்பு மற்றும் புராண வரலாறுகள் பாகவதம் முழுவதையும் தெரிந்துகொண்ட உணர்வைத் தருகின்றன. திவ்வியப் பிரபந்தத்தை முழுதுணர்ந்த நிறைநிலையை யூட்டுகின்றன. இவை, உரையாசிரியர் என்பார் நூலாசிரியரை முழுவதுமாக உணர்ந்து உரை வரையும் உணர்வுடன் திகழவேண்டும் என்னும் கொள்கையை வலுவூட்டுவனவாம். உரையாசிரியரின் பரந்துபட்ட மொழியறிவிற்கு—டாக்டர் உ.வே. சாமிநாதையரவர் கள் தரும் ஒப்புமைக் குறிப்பு போன்ற குறிப்புகள் பரந்துபட்ட

இலக்கிய இலக்கண அறிவுக்குக் கட்டியம் கூறி மகிழ்விப்பனவாய்க் காட்சி தருகின்றன எனலாம்.

சொற்களுக்குச் சூழலும் மரபும் பொருந்துமாறு உரை வரைவது எளிதான செயலன்று, சொற்களின் பொதுப்பொருளையும் சிறப்புப் பொருளையும் மரபு நோக்கிப் பொருளாக்குவதை இவ் உரையாசிரியர் நுட்பமாகக் கையாண்டுள்ளார்.

வைணவ மரபினராகிய இவ் உரையாசிரியர் ஆங்காங்கே வைணவ மரபில் கையாளப் பெறும் சொற்களையும் பொருள்களையும் இணைத்திருப்பது பாகவதம் படிப்பது போன்ற உணர்வையூட்டுகின்றன.

சொற்களுக்குக் காரணம் காட்டிப் பொருளுரைப்பதும் உரை மரபுகளுள் ஒன்றாகும். இவ் உரையாசிரியரும் வேண்டிய இடங்களில் இம்மரபைக் காப்பாற்றியுள்ளார். இவ்வாறு தொடர்கின்ற குறிப்புரைகளில் உரையாசிரியரின் சொற்பொருளை விளக்க வேண்டும் என்ற பொறுப்புணர்வைக் கண்டு மகிழலாம். ஆழ்ந்த புலமையை வியக்கலாம்.

பாடலில் பயின்றுவரும் அணிவகைகள், வேண்டிய சொற்களுக்கு இலக்கணக்குறிப்பு போன்ற மொழியமைதியைச் சுட்டுதல் சிறந்த உரையாசிரியர்க்குக் கடனாகும். ஆங்காங்கே பயின்று வரும் யாப்பு வடிவங்களையும் பாவினங்களையும் தவறாது சுட்டிச் செல்லும் இவ் உரையாசிரியர் இலக்கணக் குறிப்புகளைத் தருவதிலும் கவனஞ் செலுத்தியுள்ளார்.

வடமொழிச் சொற்களை அவற்றின் இலக்கண அமைதியுடன் எடுத்துக்காட்டியும் சொற்பொருளைச் சுட்டியும் உரை வரைந்திருப்பது பாராட்டுக்குரிய மொழிக்கொள்கையாம். ஆயின், சில இடங்களில் இவர் கூறுகின்ற முடிபுகளை நாம் மீண்டும் சிந்திக்க வேண்டும். சமன்—யமன் என்னும் வடமொழித் திரிபு (பக். 143) என்கிறார். இது நல்ல தமிழ்ச் சொல்லாதல் வேண்டும். எல்லோரையும் சமமாகப் பாவிப்பவன் சமன் எனலாம். எனவே, இதனை வடசொல்லாகக் கருத முடியவில்லை. இவ்வாறே உரு, அரு என்பன முறையே ரூபம், அரூபம் என்பதன் வடமொழிச் சிதைவுகள் (பக் 192) எனும் உரையையும் நாம் சிந்திக்கவேண்டும்.

சொற்பொருள் நிலையில் இவ் உரையாசிரியரிடம் பெரிய மாறுபட்ட கருத்தைக் காணமுடியவில்லை. இது இப்பதிப்புக்கு அணியாகிறது. எனினும், குமுதம் எனும் சொற்கு மரபுரை அல்லி, செவ்வல்லி என்பனவேயாம். இவர் நீலோற்பலம் என உரைத்திருப்பது (பக்.184) அச்சுப்பிழை என்றே கொள்ளவேண்டும்.

கண்ணனின் திருவாய்க்கு நீலோற்பலம் உவமையாக முடியாது. உரையாசிரியரின் உரையும் குறிப்பும் மாறுபட்டுள்ளது. எனவே இதனை அச்சுப் பிழையாகத்தான் நீக்கவேண்டும் எனக் கருதுகிறேன்.

ஒவ்வொரு பாட்டையும் ஒட்டி அவ்வவ் இடத்திலேயே குறிப்புரை வரைந்திருப்பது நூலைக் கற்போரின் காலம், நேரம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு படைத்த அருமையான அமைப்பாகும். நூலின் இறுதியில் கொடுத்திருப்பின் நடை ஓட்டத்தில் ஒரு தொய்வை உண்டாக்கியிருக்கும். எனவே, இவர் கையாண்டிருக்கும் உடனடி நேர்க்கீட்டு விளக்கமுறை பாராட்டுக்குரியதாகும்.

புல்லறிவினர்க்கும் தெளிவு உண்டாக்க வேண்டிய கடப்பாட்டை நன்குணர்ந்த இவ் உரையாசிரியர் தெளிவான விரிவான குறிப்புரையைத் தருவதைத் தம் தவப் பயனாகவே கருதியுள்ளார் போலும். ஆங்காங்கு இவர் கொடுத்திருக்கும் வரலாற்றுக் குறிப்புகள், பாகவதக் கதைகள், புராண வரலாறுகள் போன்றன நூலுக்கே ஒரு முழுமையைத் தந்துச் சிறப்பிக்கின்றன. ஈரேழுலகம் (பக். 125), சித்தி எட்டு (பக்.217), எழுமேகம் (பக். 100) போன்ற ஒவ்வொன்றிற்கும் இவர் விரித்துக்கூறியுள்ள குறிப்புகள் மொழியும் மரபும் புராணமும் பயின்று சுவைப்பார்க்குப் பெரிதும் பயன்தரத் தக்கனவாம். இவ்வகைக் குறிப்புகள் அபிதான சிந்தாமணி, கலைக் களஞ்சியம் போன்ற பெருநூல்களைப் படித்துணரும் பண்பை ஊட்டுவனவாயுள்ளன.

இவ்வாறே, குறிப்புப் பொருள்களை விரித்து விளக்குமிடங்களிலும் தம் பெரிறுப்புணர்ந்தே தம் நுண்மாண் நுழைபுலத்தை வெளிப்படுத்தியுள்ளார் நம் மாதவனார். 'தமிழ் வேதம்' என்று கூறப்பெறும் திருவாய்மொழியைக் கற்றவரை அருகிருந்து காப்பவர் கண்ணபிரான் என்பது இவர்தம் அனுபவம். இந்நூலின் ஏற்றம் கருதி 'அருமைத் திருவாய்மொழி' என்றார் (பக். 224), 'முப்பழச்சாறு ஒல்கு தமிழ்ச் சடகோபாழ்வான் எனும் தொடர்க்கு இவர் வரைந்துள்ள உரையும் (பக். 200, 201, 202,) குறிப்பும், காட்டிய ஒப்புமையும் பிறவும் இவர்தம் மரபாண்மைக்குக் கட்டியம் கூறுவனவாய்த் திகழ்கின்றன. இவை இவ் உரையாசிரியரின் நூலறிவையும் பட்டறிவையும் புலப்படுத்துவதில் தலை நிற்பன எனலாம்.

நாயக நாயகி பாவத்தில் அமைந்துள்ள பாடல்களுக்கு இவர் தரும் விளக்கமும் பிறவும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து போற்றும் வண்ணம் அமைந்துள்ளன. காட்டாக, பக். 131, 132.

போன்ற பகுதிகளில் காணும் உரைவிளக்கங்கள் இவர்தம் தத்துவ ஈடுபாட்டுக்கு முத்திரை பதிப்பன.

இப் பதிப்பாசிரியர் தாம் தம் அச்சுக்கு எடுத்துக் கொண்ட சுவடி-நூலாசிரியரின் சுவடியாகும். நூலாசிரியர் தம் கைப்படவே எழுதிய சுவடியாகக் கருதத்தக்கது. மாற்றுச் சுவடியற்றது. எனவே இந்நூலுக்கு பாடவேறுபாடுகள் அமையவில்லை. பாட்டெண்ணிக்கை மாற்றம், இடைச்செருகல் போன்ற குழப்பங்களும் தோன்றவில்லை. தோன்றியிருப்பினும் இப்பதிப்பாசிரியர் நூலாசிரியரின் உணர்வுடன் ஒன்றியவராதலின் சிறப்பான ஆய்வுடன் மூலபாடத்தைத் தந்திருப்பார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மாதவனார் கைப்பட்ட நூல்கள் என்றாலே அதில் பயனுள்ள பல பின்னிணைப்புகள் இருக்கும் என்பதை அவர்தம் பதிப்பை ஒருமுறை கண்ணுற்றாரே உணர்ந்துவிடுவர். அந்த வகையில் இந்நூலில் அமைந்துள்ள பின்னிணைப்புகள் இவர்தம் பேருழைப்பை நம்முன் காட்டி வியப்பில் பாராட்ட வைக்கின்றன. கலம்பக இலக்கியத்துக்கு இவர் கொடுத்துள்ள பட்டியலை உருவாக்க எவ்வளவு முயன்றிருக்கவேண்டும்? எவ்வளவு அலைந்திருக்க வேண்டும்? வருங்கால சந்ததியினர்க்கு இவை எவ்வளவு உழைப்பையும் நேரத்தையும் மிச்சப்படுத்திவிட்டன! என எண்ணி வியந்து நன்றி பாராட்டுகின்றேன்.

மொத்தத்தில் நல்ல உரைப்பதிப்பாக இந்நூல் வெளிவருவது நம் தமிழர் அனைவர்க்கும் பெருமை தருவதாக உள்ளது என்பதை மட்டும் ஈண்டு முடிமணியாக்கி நிறைவு செய்கின்றேன்.

நூலையும் பொருளையும் ஊன்றிப் பயின்று தமிழ் இன்பத்திலும் கண்ணன் அருள் மழையிலும் மகிழ வாய்ப்பளித்த பாவை வெளியீட்டகத்தார்க்குப் பெரிதும் நன்றி பாராட்டி வண்ணச்சரபனார் வண்தமிழ் வெல்க, மாதவனார் மாத்தமிழ் வாழ்க எனக்கூறிப் பெருமை கொள்கிறேன். மாதவனார் இத்தகு நூல்களை மேலும் பலவாக வெளிப்படுத்தித் தமிழ் மொழியை வளப்படுத்தி வாழ்விப்பாராக. இத்திருப்பணிக்குத் திருமகள் கேள்வனின் திவ்விய அருள் நாளும் பெருகுவதாக.

தஞ்சாவூர்
9-5-94

**த. கோ. பரமசிவம்**

# சிறப்புப்பாயிரம்

சிரவையாதீனக் கவிஞர்
புலவர் ப. வெ. நாகராஜன், பி.லிட்., விஷாரத்

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

மண்ணினிற் பிறந்த பயன்மிகப் பெற்றே
மதியுடன் வாழ்ந்திடற் காக
வண்ணநற் றமிழில் எண்ணரு பனுவல்
வழங்கிய தண்டணி சாமி
கண்ணனைப் போற்றிக் கழறிய வீரைக்
கலம்பக நூற்குரை வகுத்து,
கண்ணினைக் கருத்தைக் கவர்ந்திடு மாறு
கவின்மிகு புத்தகம் பதித்தான். 1

அன்னவன் யாரோ என்றிடிற் புகழ்வேன்.
அறிவுசால் கலைபல வல்லோன்;
என்னவன் என்றே நல்லவர் நாடும்
இனியநற் பண்புள சீலன்;
முன்னமும் பலவா முத்தமிழ் நூல்கள்
முறையுடன் பதித்தவன்; நாளும்
பொன்னவிர் வேலூர் மாதவன் என்னப்
புகழ்நிலை பெற்றவன் தானே. 2

கலம்பகப் பாக்கள் கருதிய பொருளைக்
கற்பவர் எளிதினில் உணர்ந்தே
நலம்பெற, சீர்த்த உரையினைத் தருங்கால்
நயமொடு தக்கமேற் கோள்கள்
நிலம்புகழ் நாலா யிரத்தினிற் காட்டி,
நெஞ்சினில் நிலைக்கவைத் திட்டான்—
வலம்படை ஐந்து வயங்கெழிற் பாணி—
மாலருள் பெற்றுவா ழியவே! 3

# என்னுரை

எல்லாம் வல்ல கண்ணபிரானாகிய எம்பெருமானின் பெருமை களை விளக்கும் இக் கலம்பக நூலுக்கு உரை எழுதிப் பதிப்பிக்கும் பணியை நல்கிய திருவருளை நினைந்து போற்றி வணங்குகிறேன்

சுமார் பதினைந்து ஆண்டுகட்கு முன்பு சுவடிப் பதிப்புப் பணியில் முழுமையாக ஈடுபட்டபொழுது 'மீனாட்சியம்மன் திருப்புகழ்' என்னும் அரிய சந்தப் பாடல்களை முதன்முதலாக ஏட்டிலிருந்து பதிப்பிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன். அதனைத் தொடர்ந்து தமிழ்ச் சுவடிகளிலுள்ள சிற்றிலக்கியங்கள் பற்றிய ஆய்வை மேற்கொண்டு வந்தேன். அதற்கிடையில், பல்வேறு சுவடி களிலிருந்து நான் தொகுத்துப் பதிப்பித்த 'கண் மருத்துவம்' என்னும் நூலுக்குக் கிடைத்த வரவேற்பினைத் தொடர்ந்து என்னுடைய முனைவர் பட்ட ஆய்வுக்கான தலைப்பு, தமிழ் மருத்துவச் சுவடிகளை மையமாகக் கொண்டு அமைந்தது. தொடர்ந்து வந்த பதிப்புப் பணிகளில் 'சித்திரக் கவிகள்' என்னும் நூலுக்குக் கிடைத்த பாராட்டுகளால் அச்சில் வராத தமிழ்ச் சிற்றிலக்கியங்களை முறையாகப் பதிப்பித்து வெளியிட வேண்டு மென்ற ஆர்வம் மேலோங்கியது. அதன் தொடர்பாக, குறவஞ்சி, மாலை, பதிகங்கள், தலபுராணங்கள் போன்ற நூலாக்கப் பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்புகளும் ஏற்பட்டுவருகின்றன. இவ்வகையில், எனக்கு அவ்வப்போது ஊக்கமூட்டி நெறிப்படுத்தி வரும் பேராசிரியர் டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் அவர்கள் இக் கலம்பக நூலினை வெளியிட வேண்டுமென்ற ஆவலை நெடு நாளாகவே தெரிவித்து வந்தார்கள். அவர்தம் அன்பிற்கும் உதவிக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி என்றும் உரித்தாகும்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் நூல்கள் அனைத்தும் சீரிய முறையில் பதிப்பித்து வெளியிடப் பெற வேண்டு மென்னும் உயரிய நோக்குடன் அருந்தொண்டாற்றி வரும் கோவை கௌமார மடாலயம் மகாசந்நிதானம் தவத்திரு சுந்தர சுவாமிகள், இக் கலம்பக நூலுக்கு உரை எழுதிப் பதிப்பிக்க வேண்டுமென மிகவும் மனமுவந்து பணித்து, ஆசியுரையும் வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். மகாசந்நிதானம் அவர்கட்கு என் பணிவான வணக்கங்களை இவண் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

இக் கலம்பக நூலில் அரும்பொருள் விளக்கங்கள் எழுதிய விடங்களிலெல்லாம் உடனிருந்து அரிய கருத்துக்களை நல்கி உதவிய சிரவை ஆதீனக் கவிஞர் புலவர் ப. வெ. நாகராசன் அவர் களுக்கும் மிகவும் நன்றியுடையேன்.

எங்கள் குலதெய்வமான நவநீதகிருட்டிணனின் பெயரில மைந்த இக் கலம்பக நூலை உரையுடன் பதிப்பிப்பதற்குரிய பொருட் செலவினைக் கருத்தில் கொண்டபொழுது எல்லாம் வல்ல திருவேங்கடவனின் திருவருளே துணை நின்றது. திருமலை திருப்பதி தேவஸ்தானத்தார் இப் பதிப்புப் பணிக்கு நிதி நல்கை அளித்து நூல் வெளிவர உதவியமைக்காகச் செயலாட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றுமுள்ள பெரியோர்களுக்கும் பெரிதும் நன்றியுடையவனாவேன்.

தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறையில் விரிவுரை யாளராக என்னை நியமித்துப் பணித்ததுடன், நல்ல பல பதிப்பு களை உருவாக்க வேண்டுமென்ற ஆவலையும் புலப்படுத்திய மாண்புநிறை முதல் துணைவேந்தர் முதுமுனைவர் வ. அய். சுப்பிரமணியம் அவர்கள் அவ்வப்பொழுது என்னுடைய சிறு பணிகளையும் பார்வையிட்டுப் பல ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றமைக்காக என் நெஞ்சார்ந்த நன்றியறிதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்து துணைவேந்தராக விளங்கிய டாக்டர் ச. அகத்தியலிங்கம் அவர்களும் இத்தகைய பதிப்புப் பணிகளை ஊக்கி வந்தமையை இங்கு நன்றியோடு நினைவு கொள்கிறேன்.

என்னுடைய பதிப்பாய்வுப் பணிகளைத் தொடக்க காலம் முதலே கண்ணுற்றுவந்த மாண்புநிறை முன்னாள் துணைவேந்தர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியனார் அவர்கள் இக் கலம்பக நூல் பதிப்பைப் பார்வையிட்ட அளவில், நல்கை வேண்டி தேவஸ்தானத் தாருக்கு அனுப்பி வைக்கும்படி அன்போடு பரிந்துரைத்தார்கள். அவர்தம் மேலான கருத்திற்கேற்ப இப்பொழுது இந்நூல் வெளி வருவதற்காக நன்றி கூறும் கடப்பாடுடையேன். இவ்வகையில், திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஆழ்வார் திவ்வியப் பிரபந்தத் திட்டத்துறை துணை இயக்குநர் டாக்டர் பொன். சௌரிராஜன் அவர்களுக்கும் என் நன்றி உரித்தாகும்.

சுவடிப்பதிப்புப் பணிகளுக்கு மிகுந்த ஊக்க மூட்டியும், அருந்தமிழ் நூல்களை அச்சிலிட்டு வழங்க உதவியும், இத்துறையை வளப்படுத்தி வரும் மாண்புநிறை துணைவேந்தர் டாக்டர் ஔவை து நடராசன் அவர்கள் மிகவும் மனமுவந்து இந்நூலுக்கு

அணிந்துரை நல்கிச் சிறப்பித்துள்ளமைக்காக நன்றி பாராட்டி மகிழ்கிறேன்.

பல்கலைக் கழகப் பதிப்புப் பணிகளிலும் ஆய்வுப் பணிகளிலும் மற்றுமுள்ள இத்தகைய தனிப்பட்ட நூலாக்கப் பணிகளிலும் பயனுள்ள பல ஆலோசனைகளை வழங்கி நெறிப்படுத்தி வரும் சுவடிப்புலத்தலைவரும் சிறந்த வரலாற்று அறிஞருமான பேராசிரியர் டாக்டர் பா. சுப்பிரமணியன் அவர்களுக்கும், மதிப்புரை வழங்கிச் சிறப்பித்த ஓலைச்சுவடித் துறைத்தலைவர் டாக்டர் த. கோ. பரமசிவம் அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிய நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் பாவை வெளியீட்டகத்தாரின் தமிழ்ப் பணிகளுக்குப் பெரிதும் நன்றியுடையேன்.

மிக அழகிய முறையில் முகப்பு ஓவியத்தை வரைந்தளித்து உதவிய ஓவியக் கவிஞர் அமுதோன் அவர்களுக்கும் அச்சுப்பணிகளை மிகக் குறுகிய காலத்தில் செய்து உதவிய சென்னை மாருதி அச்சக உரிமையாளர் திரு. வி. ஹரிஹரன் அவர்களுக்கும் அச்சகப் பணியாளர்களுக்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் என் அன்பு கலந்த நன்றிகள் பலவாகும்.

இவ்வுரைப்பணிக்குப் பெரிதும் துணைநின்ற மூலநூலாசிரியர்களுக்கும் உரையாசிரியர்களுக்கும் என்றும் என் நன்றி உரியதாகும். இப் பதிப்புப் பணியில் காணும் குறைகளைப் பொறுத்தருளும் அறிஞர் பெருமக்கள் சிறப்புடைய நூலாக்கப் பணிக்குத் தக்க ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வே. இரா. மாதவன்**

# INTRODUCTION

Tamil language is one of the most copious refined, and polished language spoken by many people in South India and abroad. The name Tamil signifying 'sweet' is a characteristic of the language. Bhakthi literatures and prabandha literatures in tamil reveals this truth.

Kalambaham is one of the literary type found in Tamil. This type belongs to prabhandha literature in Tamil and Khandakavyam in Sanskrit. Kalambaham always lauds the god or sage on whom it was sung in about hundred songs of various metres It is a kind of prabhandha literature composed of different kinds of stanzas. It is an important Bhakthi ilakkiyam in Tamil. Hundreds of Kalambaham literatures are written and handed over by great Tamil poets for the post thousand years.

Many Saiva Kalambahams are published while Vaishnava Kalambahams are very few in number. Thiruvarangak Kalambaham, Alagar Kalambaham, Thiruvenkatak Kalambaham are among them. Now, an unpublished Vaishnava literature, Navaneetha Krishnan Kalambaham has been edited from a palmleaf manuscript and published with commentary.

Vishnu is called as Tirumal (meaning the Holy Great one) for over 2500 years in the Tamil Literary convention. The Alvar had sung their Nalayira divyap prabandham on Vishnu enshrined in the various temples all over Tamilnadu. They are traditionally said to be 108. But yet many more exist. Veerakeralampudoor Krishnan temple is one among them. Many Tamil poets had sung many poems on Lord Krishna in Veerakeralampudoor (Near Thengasi; Tirunelveli District, South Tamil Nadu) temple. Vannaccharabam Dhandapani Swamigal had also sung many poems on this temple and written in palmleaf manuscripts.

Vannaccharabam Dhandapani Swamigal (22-11-1839—5-7-1898) was the most eminent poet of the nineteenth

century. He was saiva ascetic and poet of considerable eminence, born of vellala parents at Thirunelveli, about hundred and fifty years ago. He acquired the reputation of a poet at an early period of his life. He was noted for composing poems readily and spontaneously. Besides his main juvenile productions, he was also the author of hundreds of others, of which consisting of more than fifty thousand verses on various subjects. His original hand written palmleaf manuscripts are all preserved now.

Eventhough Dhandapani Swamigal was a Saiva poet in nature he had no bias for cast, religion, creed etc., He was a great lover of Sri Nammalvar who deserves notice as a poet as well as one of the twelve Alvars or special votaries of Vishnu. He also pointed out the fact that the Lord Krishna himself admirad the poems of Nammalvar (Thiruvaimozhi), which the Vaishnavas regard equal to the Vedas. Dhandapani Swamigal was freely able to put into his compositions the great and immortal thoughts as well as poetry of Nammalvar and others. He had submitted his Thiruvarangat Thiruvayiram (thousand verses in praise of the Lord Sri Ranganatha of Srirangam) to the judgement of the learned assembly of Vaishnavas at Srirangam temple. In the same way, he had also sung Thirumalayiram (thousand verses in praise of the Lord Vishnu) and many other thousands of poems in praise of Thirumal at various temples in Tamilnadu.

He was a contemporary of Sri Irudayalaya Maruthappa Dever at Veerakeralampudoor who was a great admirer of Tamil language and literature. He composed many poems and the Navaneetha krishnan kalambaham under the patronage of this Devar. There are 104 songs in this kalambaham in various metres. All poems are in praise of Lord Krishna. They are certainly very impressive and sweet.

Some of the Highlights in this Kalambaham are as follows :—

Vishnu is the Supreme Being who governs all the functions.

The name vishnu means the Indweller in all. He is the protector and the preserver of all. He is the indwelling controller of all things and all beings.

The ten avatharas, descents into the earth or incarnation: Matsya; Kurma, Varaha, Narasimha, Vamana, Parasurama, Rama, Balarama, Krishna and Kalki. The stories connected with these ten avataras,

As Narayana, the Milky Ocean is His abode. The thousand headed Adisesha is His couch. Garuda is His mount and banner Sri (Lakshmi) is His Sakthi, whom he has placed on His chest. He is of blue complexion. Brahma the creator, was born out of His naval. The basil leaf is His favourite flower. His celestial abode is Vaikuntham, also called paramapadam. The earth or Bhudevi is also represented as His consort. A mole on His breast called Sri Vatsam is His distinguishing mark Kaustubham, a gem, is worn by him on His breast. He wields the panchayudha, the five weapons the conch, chakra, bow, sword and mace.

Devotion and surrender will redeem man and this redemption is achieved through the Grace of God. God's Grace is free and spontaneous but it cannot be compelled.

The path of devotion and surrender is open to all irrespec tive of class, caste or sex.

The wearing of the Vishnu mark tirumann, and the leaves of the basil plant are most valuable.

Chanting of the Lord Krishna's name is also most efficacious in warding off undesirable thoughts and in fixing the mind on him.

Considering the poems as a whole one cannot but be impressed by their literary achivement. The literary relish of the songs and their appeal as aham poems are immense The songs are easy and pleasent with a remarkable literary flavour. Most of the poems give us the most delightful picture of Krishnavatara.

Almost all the verses, seem to echo words, phrases, thoughts and patterns of the Alvar. The commentary has been written in the same way and with the help of Nalayira Divyap prabandham, Bhahavadam and many other Vaishnava literatures.

Many good principles enshrined in this Kalambaham will help the readers and be a guidance to them in their struggles in life. They will give a glimpse of our hallowed and glorious culture that has cradled innumerable religious systems, philosophic trends and spiritual movements.

I offer my humble salutions to Lord Venkateswara for what He has enabled me to write the commentary and edit this work. I am grateful to the Tirumala Tirupathi Devasthanams for the encouragement in publishing this Vaishnava literature.

My special thanks are due to Sri-la-Sri Sundaraswamigal of Kaumara matt at Coimbatore for giving me the original palmleaf MSS., of Dhandapani Swamigal and allowing me to write the commentry and publish the same.

My thanks are specially due to pulvar P. V. Nagarajan for the help he rendered in going through the commentry and making the necessary corrections and for the many valuable suggestions made.

I must express my profound gratitute to my revered Guru and Prof. Dr. S. V. Subramanian, former director of International Institute of Tamil Studies, Madras who had introduced me to this field and is always encouraging me to do works like this.

I desire further to express my gratefulness to Dr V. I. Subramaniam, the first Vice-Chancellor of Tamil University and the present Hon Director of International school of Dravidian Linguistics, Thiruvanatapuram, who had given me a chance to work in this department and always encouraging me by means of giving useful suggestions for better editing and publishing the rare palmleaf manuscripts.

I express my heartfelt thanks to Dr. D. Avvai Natarasan Vice-Chancellor of Tamil University and Dr. T.G. Paramasivam, Head of the Department of Palmleaf MSS., for their kind encouragement and help in publishing this book.

I must thank the kindness of Mr. V. Hariharaan and the staff of Maruthy Press, Madras for the neat execution of the job in printing this book in a very short period of time.

**V. R. MADHAVAN**

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அமல. | — | அமலனாதிபிரான் |
| அழ. கலம். | — | அழகர் கலம்பகம் |
| அறுவகை. | — | அறுவகையிலக்கணம் |
| எம். சத. | — | எம்பிரான் சதகம் |
| எழு. எழு. | — | எழுபா எழுபஃது |
| கம்ப. | — | கம்பராமாயணம் |
| குருபர. | — | குருபரதத்துவம் |
| குறள். | — | திருக்குறள் |
| குறுந். | — | குறுந்தொகை |
| சட. சத. | — | சடகோபர் சதகத்தந்தாதி |
| சட. பத்து. | — | சடகோபப் பத்து |
| சரு. | — | சருக்கம் |
| தனிப். தி. | — | ஊற்றுமலை தனிப்பாடற் திரட்டு |
| திருக்கு. | — | திருக்குறுந்தாண்டகம் |
| திருச். | — | திருச்சந்த விருத்தம் |
| திருப். | — | திருப்பாவை |
| திருப்பல் | — | திருப்பல்லாண்டு |
| திருமக. | — | திருமகளந்தாதி |
| திருமா. | — | திருமாலை |
| திருவ. கலம். | — | திருவரங்கக் கலம்பகம் |
| திருவ. திரு. | — | திருவரங்கத் திருவாயிரம் |
| திருவாய். | — | திருவாய்மொழி |
| திருவேங்க. | — | திருவேங்கடத்தந்தாதி |
| தீர்த்த. | — | தீர்த்தகிரிப் புராணம் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நாச். திரு. | — | நாச்சியார் திருமொழி |
| நாம. | — | நாமதீப நிகண்டு |
| பரி. | — | பரிபாடல் |
| பாக. | — | செவ்வைச் சூடுவார் பாகவதம் |
| புறத். | — | புறத்திரட்டு |
| புறப். வெ. | — | புறப்பொருள் வெண்பாமாலை |
| பெரிய. திரு. | — | பெரிய திருமொழி (திருமங்கையாழ்வார்) |
| பெரியா. திரு. | — | பெரியாழ்வார் திருமொழி |
| பெரு திரு. | — | பெருமாள் திருமொழி (குலசேகராழ்வார்) |
| பெரும். | — | பெரும்பாணாற்றுப்படை |
| பேயா. இயற். மூன். | — | பேயாழ்வார் இயற்பா மூன்றாந்திருவந்தாதி |
| பொய். இயற். | — | பொய்கையாழ்வார் இயற்பா முதற்திருவந்தாதி |
| மாறன. | — | மாறனலங்காரம் |
| வட வேங். சத. | — | வடவேங்கட நாராயண சதகம் |
| வள. திரு. பதி. | — | வளவனூர் திருமால் பதிகம் |

# பதிப்புரை

திருமால் வழிபாடு தமிழ்நாட்டில் தொன்மைக் காலத்தே தோன்றி வளர்ந்து வரும் சிறந்த இறைபக்தி நெறியாகும். தமிழக வரலாற்றில் சங்க காலத்திலேயே திருமால் நெறி சிறப்பாகப் போற்றப்பெற்றுள்ளது. பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் மாயோன் ஆகிய திருமால் முல்லைநிலத் தெய்வமாகக் காட்டப்பெறுகிறார். 'மா', 'மால்' ஆகிய தமிழ்ச் சொற்களுக்குக் கருமை என்றே பொருள் கூறுவர். கருமைநிறக் கடவுளான திருமாலை இச்சொற்கள் சுட்டுகின்றன. சங்க காலத்து முல்லை நில மக்கள் சுட்டிய மாயோன், ஆயர்குலத்தில் தோன்றிய கண்ணபிரானே ஆவார். கண்ணபிரான் அவதாரம் பற்றிய குறிப்புகள் பலவற்றைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களில் காணலாம். இந்திய மொழிகளில் கி.பி. பத்தாம் நூற்றாண்டிற்குப் பின்னரே பக்திப் பாடல்கள் மிகுதியாகத் தோன்றின என்பர். ஆயின், தமிழில் சங்க காலத்திலேயே அதாவது பரிபாடல் பாடிய காலத்திலேயே பக்திப் பாடல்களின் முழுமையை நாம் காண்கிறோம். பரிபாடலில் திருமால் கோயில் வழிபாடு பற்றிய குறிப்புகள் பல உள்ளன. பாண்டிய நாட்டிலுள்ள திருமாலிருஞ்சோலைமலை, இருந்தையூர். குளவாய் ஆகிய இடங்களில் திருமாலுக்குக் கோயில்கள் இருந்ததைப் பரிபாடல் சிறப்பாகப் பேசுகின்றது. இளங்கோவடிகள் தம் சிலப்பதிகாரத்தில், திருவரங்கத்தில் திருமாலின் கிடந்த கோலத்தையும் திருவேங்கடத்தில் திருமாலின் நின்றகோலத்தையும் காட்டுகின்றார். மேலும், 'கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே' என்பதான ஆய்ச்சியர் குரவைப் பாடல்களாலும் கண்ணபிரான் வழிபாட்டைப் புலப்படுத்துகின்றார். இவ்வாறு மிகத் தொன்மைக் காலத்தே தோன்றி வளர்ந்த திருமால் வழிபாட்டில் ஈடுபாடு கொண்ட பெரியோர்கள் திருமால்அடியார்கள் என்றே போற்றியழைக்கப் பெற்றனர்.

திருமாலின் அடியவர்கள், ஊர் ஊராகச் சென்று திருமால் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களைக் கண்டு வணங்கி வழி

பட்டனர். திருமாலின் திருவருளினைப் பாடிப் பரவினர். இவ்வாறு திருமாலின் திருவருள் பேற்றில் மூழ்கித் திளைத்த இவர்களை 'ஆழ்வார்கள்' என்றே பிற்காலத்தார் அழைத்தனர். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் திருவாய்மலர்ந்தருளிய திவ்வியப் பிரபந்தங்களே பிற்கால வைணவத் தமிழிலக்கியங்களுக்கு வித்துக்களாக அமைந்தன. ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களுக்குப் பின்னர்த் தமிழில் பல பக்திப் பனுவல்கள் தோன்றின. அவற்றுள் பல இன்றும் கிடைக்கின்றன. இயற்கை அழிவாலும் செயற்கை அழிவாலும் பல நூல்கள் இன்று கிடைத்தற்கரியவாயின. பல நூல்கள் இன்னும் அச்சாகமல் சுவடி வடிவிலேயே உள்ளன. இத்தகைய நூல்களை முறையாகப் பதிப்பித்து அச்சிட்டு வெளியிட்டால் தமிழகத்திலுள்ள பல திருப்பதிகளின் சிறப்புகள் புலனாகும். இவ்வகையில், பாண்டி நாட்டில் வீரகேரளம்புதூரில் கோயில்கொண்டெழுந்தருளியுள்ள நவநீதகிருட்டிணன் பேரில் இயற்றப்பெற்ற கலம்பக நூல் ஓலைச்சுவடியிலிருந்து பெயர்த்து எழுதப்பெற்று, உரை விளக்கங்கள் எழுதிச் சேர்க்கப்பெற்று முதன்முதலாகப் பதிப்பித்து அளிக்கப்பெறுகிறது.

## கலம்பக இலக்கியம்

தமிழில் தோன்றிய பல்வகைச் சிற்றிலக்கியங்களில் ஒன்று கலம்பகம் ஆகும். பலவாற்றாலும் அமைந்த கலவை இலக்கியங்களே 'கலம்பகம்' என்னும் பெயர் பெற்றன. இப்பெயர் பெறும் முறையும் ஆராயத்தக்கதாகும்.

கலம்+பகம் (12+6) எனப் பிரித்து உம்மைத் தொகையாகக் கொண்டு பதினெட்டு உறுப்புகளால் ஆன நூல் கலம்பகம் என்பர். இது அவ்வளவு சிறப்புடையதாகத் தோன்றவில்லை. ஏனெனில், கலம்பக இலக்கணம் கூறும் பன்னிருபாட்டியல், சிதம்பரப்பாட்டியல், வெண்பாப் பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல், பிரபந்த தீபிகை போன்றவை ஒன்றிற்கொன்று மாறுபட்ட உறுப்புகளைக் கூறுவதும்; பதினைந்து (பன்னிரு பாட்டியல், நவநீதப்பாட்டியல்), பதினாறு (தொன்னூல் விளக்கம்), பத்தொன்பது (வெண்பாப்பாட்டியல் பிரபந்த மரபியல், முத்துவீரியம், பிரபந்த தீபிகை), இருபது (சிதம்பரப் பாட்டியல்), இருபத்தொன்று (இலக்கண விளக்கம்) என

உறுப்பு எண்ணிக்கையிலும் வேறுபாடுகளைக் கூறுவதும் சிந்திக்கத்தக்கன. கால நிலைக்கும் நூலாசிரியர் தன்மைக்கும் ஏற்பவே இவ்வுறுப்புகள் இடம்பெற்றுள்ளன என்பது தெளிவு. எனவே, உறுப்பால் இப்பெயர் பெற்றது எனக் கொள்ள இயலவில்லை.

கலப்பு + அகம் எனப் பிரித்து, கலப்பைத் தன்னகத்துக் கொண்ட ஓர் இலக்கியம் என வேற்றுமைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகக் கொள்ள இது ஒரு கலவை இலக்கியம் என்பது தெளிவாகும். இதற்கு மேலும் சான்றாகப் பின்வருவனவற்றையும் கூறலாம்.

கலம்பக இலக்கியங்கள் ஐம்பாவும் இனமும் ஆகிய **பல்வகைப் பாடல்களால்** ஆனவை; தோள் வகுப்பு முதலான **பல உறுப்புகளை** உடையவை; அகம், புறம் ஆகிய இருவகைப் பொருட்களையும் கொண்டவை; ஒன்பான் சுவைகளில் **பலவகைச் சுவைகளைப்** பெற்றவை; உவமை, உருவகம் போன்ற **பலவகைப் பொருளணிகள்** பெற்றவை; மடக்கு, யமகம் போன்ற **பல சொல்லணிகள்** கொண்டவை; ஓசைநயம் மிக்க **பல சந்தப்பாக்களை** உடையவை; அத்துடன், தம்மகத்தே **பலவகைத் திணைப்பொருளையும்** கொண்டவை.

பெரும்பாணாற்றுப்படையில் 'பல்பூமிடைந்த படலைக் கண்ணி'[1] என்ற தொடருக்கு உரை கூறும் நச்சினார்க்கினியர் 'பல் பூக்கள் நெருங்கிய கலம்பகமாகிய மாலை' என்று விளக்குவர்.

திவ்வியப்பிரபந்தத்தின் திருப்பள்ளியெழுச்சியில் 'கலம்பகம் புனைந்த விலங்கலந் தொடையல்' எனும் தொடர் இச் சொல்லின் முதல் ஆட்சியைத் தருகின்றது. தொண்டரடிப் பொடியாழ்வாரின் இவ்வாட்சி, பல்வகை மலரும் கலந்து தொடுக்கப்பட்ட மலர்மாலையைக் குறித்தலால், கலவை எனும் அடிப்படைப் பொருண்மையின் சார்புடன் கலம்பகம் அமைந்தமை விளங்கும்.

'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே' என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரை எழுதிய

1. பெரும். வரி 174.

பேராசிரியர், "புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளும் தொடர்ந்து வரச் செய்வது...கலம்பகம் முதலாயினவும் சொல்லுப" என்பர்.[1]

எனவே, பலவகை மலர்களை இணைத்துக் கட்டியது போலப் பலவகையான செய்யுட்களையும் துறைகளையும் அமைத்துப் பாடுவது கலம்பகம் என்பது மிகவும் பொருத்த முடையதாகும். இவ்வாறு பலவகைப் பார்க்களையும் ஒரே புலவர் பாடுவது மிகவும் அருமையாகும். பலவகைத் திறம் மிக்க புலவர்களால் மட்டுமே இக் கலம்பக இலக்கியங்ளை இயற்றியளித்தல் இயலும் என்பதால் இவை எண்ணிக்கையிலும் குறைவாகவே கிடைக்கின்றன.

அக உறுப்புகளும் புறக்கூறுகளும் இடைமிடைந்து வரும் இவ்விலக்கியத்தன்மை புதுமை வாய்ந்ததாகும். பல பாவடிவங்கள் விரவும் நிலையும் நவமானதாகும். இதில், அம்மானை, ஊசல், குறம் போன்ற நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் இணைவதும் சுட்டத்தக்கதாகும்.

கலம்பக இலக்கியங்கள், பண்டை இலக்கிய நிலைக்கும் பிற்காலவகை வளர்ச்சிக்கும் இடைப்பட்ட நிலையில் அமைந்துள்ளமையும் இவண் குறிக்கத்தக்கதாகும்.

## பழமைத் தாக்கமும் புதுமைப் போக்கும்

கலம்பகங்களில் முதன் முதலாகப் பாடப்பெறும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்னும் 'கொச்சக ஒருபோகு' தொல்காப்பியர் காலந்தொட்டே வழங்கி வருவது. இது, தேவரைப் பாடுவதற்கான யாப்பு என்றே தொல்காப்பியம் கூறுகின்றது.[2] மேலும், கைக்கிளை, இரங்கல், மடல், பாண் போன்ற கலம்பக உறுப்புகளுக்கான வித்துகள் தொல்காப்பியத்திலேயே கிடைக்கின்றன. அடுத்து, சங்க காலத்தில் தோன்றிய இலக்கியங்களிலுள்ள அகத்துறைகளும் புறத்துறைகளும் கலம்பக இலக்கியப் பாடல்களுக்கு அடிப்படையாக அமையக்

---

1. தொல். பொருள். 551.
2. தொல். பொரு. செய். 138

காண்கிறோம். பதிற்றுப்பத்தில் தனியொரு தலைவனின் வீரமும் புகழும் குறித்துப் பாடியதை அடிப்படையாகக் கொண்டே பின்னாளில் கலம்பக இலக்கியங்களும் இயற்றப் பெற்றுள்ளன.

இதேபோன்று, சிலப்பதிகாரத்தில் வரும் ஊசல் வரியும் அம்மானை வரியும் கலம்பக இலக்கியத்தில் ஊசல், அம்மானை எனத் தனித்தனி உறுப்புகளாகவே மிளிர்கின்றன. இவற்றை யடுத்து வந்த தேவாரம், திருவாசகம் மற்றும் திவ்வியப் பிரபந்தப் பாடல்களின் தாக்கத்தாலும் தனித் தலத்திறைவர், மடத் தலைவர் ஆகியோர் மீது கலம்பகம் புனைய வழி கோலினர் என்பது அறியத்தக்கது.

## முதல் கலம்பகம்

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய நந்திக்கலம் பகமே இன்று கிடைக்கும் முதல் கலம்பக இலக்கியமாகும். மிகச் சிறந்த நூலாகிய இதை விஞ்சும் மற்றொரு கலம்பகம் இன்னும் தோன்றவில்லை என்பதே பெரும்பான்மையோர் கருத்து. அவ்வாறாயின் இந் நந்திக்கலம்பகத்திற்கு முன்பே தமிழில் பல கலம்பகங்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது. இதற்குப் பழந்தமிழ் நூல்களும் துணையாயின என்பதே குறிப்பு.

நம்பியாண்டார் நம்பி (கி.பி. 10 ஆம் நூ.) இவற்றிய ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், தமிழில் முனிவர் மீது இயற்றப்பட்ட முதல் கலம்பக நூலாகும்.

பன்னிருபாட்டியல் (கி.பி. 12 ஆம் நூ.) என்ற பாட்டியல் நூலே முதன்முதலில் கலம்பக இலக்கணம் கூறுகின்றது. எனவே, இக் காலகட்டத்தில் மிகப் பரவலாகக் கலம்பகங்கள் இயற்றப் பெற்றன எனத் தெரிகின்றது.

## சிறந்த கலம்பக ஆசிரியர்கள்

புகழேந்திப்புலவர் (கி. பி. 12 ஆம் நூ.) உதீசித்தேவர், இரட்டைப் புலவர்கள் (கி.பி.14 ஆம் நூ.) ஆகியோரும், தத்துவ ராயர் (கி.பி. 16 ஆம் நூ.), குமரகுருபரர், துறைமங்கலம் சிவப்

பிரகாசர் (கி.பி. 17 ஆம் நூ.) ஆகியோரும் சிறந்த கலம்பக ஆசிரியர்களாகத் திகழ்கின்றனர்.

தமிழில் முதன்முதலாக வைணவக் கடவுள்மீது எழுந்த முதற்கலம்பகம் திருவரங்கக் கலம்பகமே. கி.பி. 17ஆம் நூற்றாண்டில் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் இயற்றிய இலக்கலம்பகத்தின் தொடர்ச்சியாகத் தமிழில் பல கலம்பக நூல்கள் எழுந்துள்ளன.

அடுத்து, கி.பி. 18ஆம் நூற்றாண்டில் வீரமாமுனிவர், படிக்காசுப்புலவர், சீனிப்புலவர், கந்தப்பையர் போன்றோர் கலம்பகம் பாடினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் தமிழில் மிக அதிகமான கலம்பகங்கள் தோன்றியுள்ளன. தண்டபாணி சுவாமிகள், தொழுவூர் வேலாயுத முதலியார், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை, இராசப்ப நாவலர், வீரராகவ முதலியார், அட்டாவதானம் சபாபதி முதலியார், பூண்டி அரங்கநாத முதலியார், திருஎவ்வுளூர் இராமசாமி செட்டியார் போன்றோர் இருபதுக்கு மேற்பட்ட கலம்பகங்களை இயற்றியளித்துள்ளனர்.

தமிழில் மிக அதிகமாகக் கலம்பகம் பாடியவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளே ஆவார். புதுவைக் கலம்பகம் (இப்பொழுது கிடைப்பதில்லை), நெல்லைக் கலம்பகம், சென்னைக் கலம்பகம், மயிலாசலக் கலம்பகம், பழநிக் கலம்பகம், வீரை நவநீதகிருட்டிணன் கலம்பகம் ஆகிய ஆறு கலம்பகங்களை இவர் இயற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கலம்பகத்தின் பொதுவமைப்பு

1. பாட்டுடைத் தலைவரின் புகழைப் பாடுவது
2. தொடர்கதை அமைப்பற்றதாகப் பாடுவது
3. முதலில் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவும், அதனையடுத்து ஒரு வெண்பாவும், பின்னர் ஒரு கலித்துறையும் இடம்பெற்று மேலே பல யாப்புகளில் பாடல் அமைப்பது
4. அம்மானை அல்லது ஊசல் முக்கிய உறுப்பாக அமைப்பது
5. வகுப்புப் பாடல் கட்டாயம் அமைப்பது

6. பத்துக்கும் மேற்பட்ட யாப்புகள் அமைப்பது
7. நூல் மண்டலித்து முடிய அமைப்பது
8. அந்தாதியாக அமைப்பது
9. நூறு என்ற அளவிலேயே பாடல்களை அமைப்பது
10. அகப்பாடல், புறப்பாடல் கலந்து அமைப்பது
11. எட்டிற்கும் மேற்பட்ட கலம்பக உறுப்புக்களை அமைப்பது
12. அரசர், முனிவர், கடவுள் என்ற மூவரையே பாடு பொருளாகக் கொள்வது
13. புதிய உறுப்புக்களால் பாடல் அமைப்பது
14. ஆசிரியர் கூற்றாக மட்டும் அமையாது, வேறு மாந்தர் கூற்றுகளும் வர அமைப்பது

என இவ்வாறு சில பொது மரபுகளை இக் கலம்பக இலக்கியங்கள் கொண்டுள்ளன. பாடல்களில் அந்தாதித் தொடர்பும், பாட்டுடைத் தலைவனின் தொடர்பும் ஒருங்கு அமைவது கலம்பக இலக்கியத்தின் தனிச்சிறப்பாகும்.

## புகழ்ச்சிமாலை

கலம்பகத்தின் பொருள் பாட்டுடைத்தலைவரைப் 'புகழ்வது' என்ற ஒன்றுதான்; புகழும் செய்திகளே பல.

கலம்பு + அகம் = கலம்பகம் என்றும் பிரித்துப் பொருள் கொள்வர். கலம்புதல்—புகழ்தல். கலபம் என மயிலுக்குப் பெயர்வரக் காரணம் அது தோகையை விரிக்கும் தன்மையால் தான். எனவே, கலம்புதல் என்பதற்கு விரித்தல்—புகழ்தல் என்ற பொருண்மையைக் காட்டலாம் என்பர்.

முதலில் வரும் கலிப்பாவில் பாட்டுடைத்தலைவன் புகழ் பாடப்படும்; பின்னர் நூல் முழுவதும் அப்புகழே விரித்துரைக்கப்பெறும். இத்தகைய புகழும் தன்மையாலும் விரிக்கும் தன்மையாலும் கலம்புதல் என்ற பொருண்மை அடிப்படையில், கலம்பகம் என வந்தது என்றும் கூறுவர்.[1]

1. எஸ். சௌந்தரபாண்டியன், தமிழில் கலம்பக இலக்கியம், ப. 52.

## பல்வகைக் கூற்றுகள்

கலம்பகத்தின் நோக்கம் புகழ்வது. அதைப் பலவிதக் கூற்றுகளில் வைத்துப் பாடுவது மிகச் சிறந்த இலக்கிய உத்தி யாகும். காட்டாக, முதற்பாடல், புயவகுப்பு, பிறவும் கவிக் கூற்றாகவும்; தலைவன், தலைவி கூற்றுகளை உயர்தட்டு மக்கள் கூற்றாகவும்; தோழி, பாங்கன் கூற்றுகளை நடுத்தர மக்கள் கூற்றாகவும்; குறத்தி போன்றோர் கூற்றுகளைத் தாழ்த்தப் பட்ட மக்கள் கூற்றாகவும்; கட்குடியன் போன்றோர் கூற்றுகளை இழிநிலைப் படுத்தப்பட்ட மக்கள் கூற்றாகவும் பலவாறு பாடு வது மரபாக உள்ளது. ஆக, சமுதாயத்திலுள்ள எல்லாப்பிரிவு மக்களும் புகழ்வதாக அமைப்பது ஓர் சிறப்பாகும். சிறந்த நாடகப் பாங்கிலும் இது அமைகின்றது.

## தனிச் சிறப்புகள்

கலம்பக உறுப்புகள் எல்லா நூல்களிலும் ஒன்றுபோல அடுக்கி வருவதில்லை. மாறிமாறியும், இடையே தனிப்பாடல் களும் வரும். ஓர் உறுப்பைப் படித்ததும், அடுத்த உறுப்பு யாது என்ற அவாவைத் தூண்டும் வகையில் பாடுவதும் இக் கலம்பக இலக்கிய உத்தியாக உள்ளது. தமிழிலுள்ள பல யாப்பு களும் இதில் வருவதால் யாப்பியல் மரபுகளும் போற்றப் பெறு கின்றன.

பாட்டுடைத் தலைவரைப் புகழுமிடத்து அத்தலைவர் எழுந்தருளியிருக்கும் ஊர்ச்சிறப்பும், ஆலயச்சிறப்பும் எடுத் துரைக்கப்பெறும். குறிப்பாக, ஆலயச் சிறப்பை எடுத்துக் கூறி அதன்வழி அவ்வாலயத்தைக் காப்பாற்றுவது இக்கலம்பக ஆசிரி யர்களின் பெரும் பணியாக உள்ளமை உய்த்துணரத்தக்கது. ஆலயப்பணியை மக்கள் பணி இயக்கமாக ஆக்கவே கலம்பக இலக்கியங்கள் தோற்றுவிக்கப் பெற்றன என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்.

பொதுநிலையில், சங்க இலக்கியத்துறை மரபை மீட்டு வாழவைப்பதும், யாப்பியல் நெறிகளைப் போற்றுவதும், ஆலயப் பாதுகாப்பை முன்னிறுத்துவதும் இக்கலம்பக இலக் கியங்களின் முக்கிய குறிக்கோள்களாக இருப்பது அனைவரும் அறியத்தக்கதாகும்.

# நூலாசிரியர்—வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற தமிழ்க் கவிஞருள் மிகுதியான தமிழ் இலக்கிய வகைகளுள் அமைந்த மிக அதிகமான பாடல்களைப்பாடி, ஏடுகளில் தம் கைப்பட எழுதி வைத்த பெரும்புலவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் (22-11-1839 - 5-7-1898) ஆவார். இவர், திருநெல்வேலிப் பகுதியில் செந்தினாயகம் பிள்ளைக்கும் பேச்சி முத்தம்மைக்கும் திருமகனாகப் பிறந்தவர். பெற்றோரிட்ட பெயர் சங்கரலிங்கம் ஆகும். ஆறாவது வய்தில் தந்தையை இழந்த இவர் இயற்கையிலேயே கவிபாடும் வல்லமை பெற்றவர். சிறுவயதிலேயே பூசை, செபம், தியானம் இயற்றிவந்தவர். இளமையிலேயே லங்கோடு, கௌபீனம், முழுநீறு, தண்டம், பாதுகை, அக்கமாலை பூண்டு விரிந்த சிகையுடன் இருந்ததால் தண்டபாணி சுவாமிகள் என்னும் பெயரினைப் பெற்றார். முருக உபாசனையையும் வேல் வழிபாட்டினையும் மேற் கொண்டிருந்ததால் முருகதாசர் என்றும், சந்தப் பாடலான திருப்புகழ்ப் பாடல்களை மிகுதியாகப் பாடுவதில் நாட்டம் பெற்றிருந்ததால் திருப்புகழ்ச் சுவாமிகள் என்றும், வண்ணம் என்ற சந்தப் பெரும் பாடல்களை யாப்பதில் வல்லவரானதால் வண்ணச்சரபம் என்றும் அழைக்கப்பெற்றார்.

ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவியிலும் வல்லவர் இவர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் போன்று தலங்கள் தோறும் சென்று பாடும் இயல்பினைக் கொண்டிருந்த இவர் பல்லாயிரக்கணக்கான பாடல்களை எழுதியுள்ளார். திருவரங்கத் திருவாயிரம், திருமாலாயிரம், தில்லைத் திருவாயிரம், பழநித் திருவாயிரம், ஞாயிறு ஆயிரம், கணபதி ஆயிரம், புலவர் புராணம், குருபரதத்துவம், அருணகிரிநாதர் புராணம், அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், வண்ணத் தியல்பு போன்றவற்றுடன் அந்தாதி, கலம்பகம், கோவை, திருப் புகழ், வகுப்பு, மாலை, அலங்காரம், பதிகம், கவசம், பஞ்சகம் எனப் பலவகைகளில் பாடல்கள் இயற்றியருளியுள்ளார். இவர்

அனலிலும் புனலிலும் இட்டவை போக இப்பொழுது சுமார் 50,000 பாடல்கள் இவருடைய கையெழுத்தில் ஓலைச் சுவடிக ளாகப் பாதுகாக்கப் பெற்றுள்ளன.

தண்டபாணி சுவாமிகள் சிறந்த சமயப் பற்றுடையவர். புலால்மறுத்தல், தெய்வ வழிபாட்டில் உயிரிப்பலியைத் தவிர்த்தல், இறை வழிபாட்டில் சமயச் சமரச நிலையை வலியுறுத்தல் ஆகியவற்றிற்காகத் தம் வாழ்நாள் முழுமை யையும் அர்ப்பணித்தவர் இவர்.

சமய நிலையில் எத்தெய்வத்தை முன்னிறுத்திப் பாடி னாலும் அத்தெய்வமே முதன்மையானது எனத் துணிந்து கூறும் இவர் மற்றொரு தெய்வத்தை நிந்திப்பது என்பது இல்லை. ஏனெனில் அனைத்துத் தெய்வ வடிவங்களும் ஒரே பரம்பொருளின் பல்வேறு வடிவங்கள் என்னும் சமரச நிலை யைக் கொண்டவர் இவர். இருப்பினும், தொடக்க காலத்தில் சிவவேடம் பூண்டிருந்த இவர் திருமாலை அவ்வளவாக வழி பட்டாரில்லை. சமய நூல்களைக் கற்குமிடத்து நம்மாழ் வாரின் திருவாய்மொழியின் சிறப்பைப் படித்தறிந்த பின்பே வைணவ சமயத்தின் பெருமையை உணர்ந்தார் எனக் கூறுவர். இவருடைய குருபர தத்துவம் என்னும் நூலில் இருபத்து நான் காம் சருக்கமாகிய விட்டுணு தரிசனச் சருக்கத்தில் இதை இவரே கூறக் காணலாம்.

விண்டு தூடணைக் கொடியரில் ஒருவனா
　　விளங்கிய எனைஅன்னோன்
பண்டு செய்தவப் பயனகொடோ அல்லது
　　பழுதில்தன் ணருளாலோ
தொண்டு செய்பவர் அடியவர்க் காளெனும்
　　துணிவுடைக் குருகூரான்
கண்டு கூறிய தமிழ்மறைப் பொருள்கொடு
　　களிப்புறப் புரிந்தானே. (1)

எனத் திருவாய்மொழியின் சிறப்பை எடுத்துக்கூறித் திருமால் வடிவமே செப்பும் எத்தெய்வமும் எனத் தாம் தெளிவுற்றதையும் பின்வருமாறு கூறுகின்றார்.

சேய வார்சடைச் சிவனென, அயனெத்
தேவர்கோன் எனமற்றும்
ஆய பல்பொரு ளெனத்திரு மால்உறும்
அதிரக சியந்தன்னைத்
தூய சீர்ச்சட கோபன்முன் வெளிப்படச்
சொல்லியும். துயரெய்தித்
தீயர் பால்இது பரம்அது பரம்எனச்
செயும்சமர்க் கிசையேனே. (3)

என்னும் பாடலால் தம்முடைய மனத்தெளிவைப் புலப்படுத்து கிறார். காக்கும் கடவுளாகிய திருமாலே வாழ்நாளில் பரம் என்பதைத் தாம் உணர்ந்தவாறு தெளிவு படுத்துகின்றார்.

கலக நூல்வழி போய்ப்பரம் தேரினும்
கடலொடு மலைசூழும்
உலக சிட்டியில் அயன்பரம், அறியும்நாள்
உமாபதி பரம், இவ்வாறு
இலகு நாள்அரி யேபரம், ஆதலால்
இயங்குபல் மதத்தோர்தம்,
அலகி லாவழி பாடும்அன் னவனையே
அணுகுமென் றறிந்தேனே. (4)

என்னும் இவருடைய பாடல் இவர்தம் உளப்பக்குவத்தைக் காட்டும்.

திருமாலின் மாண்பை அறிய முதிர்ந்த மனப்பக்குவம் வேண்டும். தவமில்லாருக்குத் திருமாலின் மாண்பு தெளிவுறா தென்பதை இவர் ஓர் அரிய உவமையால் விளக்குவர்.

என்ன சொல்லினும் முலைத்துணை அரும்புறா
இளமகள், எழில்நீடும்
கன்னல் வில்லிதன் விழவினுக் கிசைவுறாக்
கணக்கெனக், களிறொன்று
முன்னம் உய்ந்தமை யாதிய ஆயிரம்
மொழியினும் தவமில்லார்
பன்ன காதிபன் மிசைதுயில் கொள்ளும்நம்
பகவன்மான் பறியாரே. (5)

என்பது இவர்தம் துணிபு.

வியாசர், சங்கரர் போன்றவர்களெல்லாம் திருமாலைப் பரம்பொருளாகக் கொண்டு பாடியதையும், நாரணற்கு அன்பு செய்யாதவர் வீடு பேறு பெற இயலாதென்பதை உணர்த்தியதையும் உணர்ந்த இவர் திருமாலைத் துதிக்கத் தொடங்கியதை விவரிப்பர்.

வியாச மாமுனி சங்கர மாமுனி
ஆதிய மேலோரும்
தயாநி தித்திரு மால்பதம் போற்றிய
சத்தியம் தெரிந்துஅப்பாற்
கயான னற்தொழும் ஒளவைசொல் லியவிதி
கண்டு, நா ரணற்கன்பு
செயார்கள் வீடுபெற் றுய்ந்திடா ரெனமிகச்
செப்பிடத் துணிந்தேனே. (8)

என்பர் இவர்.

இவ்வாறு இவர் திருமால் மீது ஈடுபாடு கொண்டு பாடிய பாடல்கள் பலவாம். திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் மீது திருஎழுகூற்றிருக்கை, திருவரங்கன் பேரில் திருவரங்கத் திருவாயிரம், திருவயிந்திரபுரம் பெருமாள் பதிகம் திருவனந்தபுரம் யமக அந்தாதி, திருக்கண்ணபுரம் பெருமாள் பதிகம், விஷ்ணுபுரம் ஒருபது கூற்றிருக்கை, அரி ஏகபாதத்தந் தாதி, திருமாலந்தாதி, திருமகளந்தாதி எனப் பல அரிய இலக்கியங்களை இவர் படைத்தளித்துள்ளார். இவையேயன்றி திருமால் திருப்பதிகள் பலவற்றிற்கும் சென்று அங்கு எழுந் தருளியுள்ள பெருமாள், இலக்குமி, அனுமார் ஆகியோர் பெயரில் பதிகம், திருப்புகழ், வெண்பா, அந்தாதி, வகுப்பு போன்றவற்றையும் பாடியுள்ளார். இவற்றுள் பல அவ்வப்போது அச்சாகியுள்ளன. பல இன்னும் அச்சாகவில்லை.

இவர் இயற்றிய வீரகேரளம்புதூர் நவநீதகிருட்டிணன் கலம்பகம் என்னும் இந்நூல் இன்னும் அச்சாகாமல் சுவடி வடிவிலேயே உள்ளது. திருமால்மீது இவ்வாசிரியர் கொண்ட பக்தியும் ஈடுபாடும் இக்கலம்பகத்தால் நன்கு விளங்கும்.

# வீரகேரளம்புதூர் நவநீதகிருட்டிணனை வணங்கிய மருதப்பதேவர்

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நன்னாட்டின் திலக மெனத் திகழ்வது திருநெல்லை. செந்தமிழ்ப் பெருக்கமும் செந்நெல்சூழ் சிறப்பும் ஒருங்கே பெற்ற இப்பகுதியில் வாழ்ந்த புலவர்களும் புரவலர்களும் மிகப்பலர். அவர்களால் எழுந்த இலக்கியங்களும் பல. சென்ற நூற்றாண்டில் நெல்லை மாவட்டத்தில் தென்காசிக்கருகில் உள்ள வீரகேரளம்புதூரை இருப்பிடமாகக் கொண்டு நல்லாட்சி புரிந்த வள்ளலும் ஊற்றுமலை ஜமீன்தாருமாகிய இருதயாலய மருதப்ப தேவரவர்கள் சான்றோர்களால் போற்றப்பெறும் தகைமை பெற்றவர். தமிழறிஞர்கள்பால் அவர் கொண்டிருந்த அன்பும் பரிவும் அளவிடற்கரியன. அதேபோன்று அவர்தம் குலதெய்வமாம் கண்ணபிரானிடம் அவர் கொண்டிருந்த பக்தியும் ஈடுபாடும் மிகவும் குறிப்பிடத்தக்கன.

## புலவர் போற்றிய வள்ளல்

ஊற்றுமலை ஜமீன்தார் இருதயாலய மருதப்ப தேவரவர்களைப் போற்றிப் பல புலவர்கள் பாடியுள்ளனர், சின்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார், இராமநாதபுரம் சமத்தானம் முத்துராமலிங்க சேதுபதி, மதுரை நீ. இராமலிங்கம் பிள்ளையவர்கள், திருச்செந்தூர் குஞ்சுபாரதிகள், புனல்வேலி வரதராஜ பாரதிகள், இராமசுவாமி பாரதிகள், வேம்பத்தூர் பிச்சு பாரதிகள், சர்க்கரை பாரதிகள், வீரகேரளம்புதூர் சுப்பிரமணிய சாத்திரிகள், கிருஷ்ணையங்காரவர்கள், புலிக்குளம் ஜமீன்தார் முத்துக்குமாருத் தேவரவர்கள், குன்னூர் ப. குமாரசுவாமி முதலியார், வெள்ளக்கால் வெ. அ. ப. சுப்பிரமணிய முதலியார், சொக்கம்பட்டிச் செம்புலிப் பெரியசாமித் தேவர், முகவூர் இராமசாமிக் குருக்களையா, முகவூர் அருணாசலக் கவிராயர், மீனாட்சிசுந்தரக் கவிராயர், சுப்பிரமணியக் கவிராயர், திருமலை நாயக்கன் புதுக்குடி திருக்கமலக் கவிராயர், புளியங் குடி முத்துவீரக் கவிராயர், மலையடிக்குறிச்சி முத்துசுவாமிப்

புலவர், இடைசெவல் இராமாநுசக் கவிராயர், அமுதாபுரம் சங்கரலிங்கத் தேவர், வண்டானம் முத்துசுவாமி ஐயர், சொக்கம்பட்டி சீனித்தேவர், வாசுதேவநல்லூர் பழனியாண்டிப் புலவர், கந்தசாமிப் புலவர், கல்போது புன்னைவனக் கவிராயர், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், இலஞ்சி விசுவகுல சுப்பிரமணியப் புலவர் போன்ற பல புலவர்கள் ஆயிரக்கணக்கான பாடல்களை இவர்மீது பாடியுள்ளனர். மருதப்ப தேவரின் வீரத்தையும் கொடைச் சிறப்பையும், ஆளுமைச் சிறப்பையும், பக்தி மேன்மையையும் இப்புலவர்கள் அனைவருமே வியந்து போற்றுவதைக் காண்கிறோம்.

'சொனலமுது தமிழுணர்ந்த இருதயாலய பாண்டிய துரைச் சிங்கேறு' என்றும், 'சந்தமா வரைத்தமிழ்தே ருளவி தயா லயபாண்டிய சரசவேள்' என்றும் இவரைப் போற்றுகிறார் புளியங்குடி முத்துவீரக் கவிராயர் அவர்கள்.

'கும்பமாதவனேர் புகழ் வீரைக் குபேரன்' என்றும், இதயாலய சக்கரேசுரன்', 'தமிழ்ச்சிங்கம்' என்றும், 'நீடுகவி சாற்றும் புலவர் தமிழ்ச் சங்க பீடமெனும் ஊற்றுமலை வேந்தன்' என்றும், 'தென்னாட்டுச் சிங்கம்' என்றும் போற்றுகிறார் வாசுதேவ நல்லூர்க் கந்தசாமிப்புலவர் அவர்கள்.

## திருவீரையின் சிறப்பு

இத்தகைய தமிழ்ச் சிங்கமாம் மருதப்பதேவர் வாழ்ந்த வீரை என்னும் வீரகேரளம்புதூரின் சிறப்பையும் புலவர்கள் வெகுவாகப் போற்றி உரைக்கின்றனர். கயல்நீர்க் கழனிவளங்களும், கமலவாவிகளும், கடிமதில்களும், மஞ்சடர்ந்த பொழில்களும், மணி மாட மாளிகைகளும் நிறைந்த இவ் வீரையூரைத் 'தமிழ்ப்பாண்டி வதனம் போலும் திருமலி வீரை' (36) என்றும், 'இசைப்பார் இசைக்கும் நலம் முழுதும் இயங்கும் வீரைப்பதி' (24) என்றும் தண்டபாணி சுவாமிகள் இக் கலம்பகத்தில் போற்றுகின்றார்.

வீரகேரளம்புதூரினை மருதப்பதேவர் தம் இருப்பிடமாகக் கொண்ட நாள் முதலாகவே தென்திசை புகழ் பெற்றது என்பர்.

"தக்கசினை நாவனின்ற காரணத்தாற் பரதகண்டஞ்
சம்புத் தீவா
மிக்கபெயர் பெற்றதுபோ லிருதயா லயமகிபன்
வீரை யூர்க்கண்
முக்கியசுந் தரவிலா சந்தனையுண் டாக்கியநாள்
முதலா யன்றோ
தெக்கணமும் பெற்றதச்சுந் தரத்திரிசொல் லாகியதென்
திசைப்பே ரொன்றே"

என இதை விளக்கும் புளியங்குடி முத்துவீரக் கவிராயர், வீரை யூரினில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் 'நவநீத கிருட்டிண காவலவன் பெற்றெடுத்த கண்மணி' என்றே இவரைப் போற்றுவர்.

'திருமால் என்றும் வாழ் வெற்றி வீரைநகர்' (45) என்றும், 'கராசலக் கோடு இறுத்தகைக் கண்ணபிரான் தங்கும் வீரை' (82) என்றும் இவ்வூரினைக் கண்ணபிரானோடு சேர்த்துச் சிறப்பிப்பர் தண்டபாணி சுவாமிகள்.

## வீரைநகர் நாரணனைத் துதித்தல்

உலகில் எல்லாப் பொருள்களையும் உயிர்களையும் உள்ளடக்கிக் காப்பாற்றும் இறைவனான கண்ணனே பெருந் தெய்வம் என்று ஆழ்வார் போற்றுவர்.

"மற்றும் ஓர் தெய்வம் உண்டே? மதியிலா மானிடங்காள்?
உற்றபோது அன்றி நீங்கள் ஒருவன் என்று உணர மாட்டீர்?
அற்றமேல் ஒன்று அறியீர் அவனல்லால் தெய்வ மில்லை!
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணைப் பணிமின் நீரே?"

என்பார் தொண்டரடிப்பொடியாழ்வார். (திருமாலை.9.)

"கண்ண னல்லா லில்லை கண்டீர் சரணது நிற்க வந்து
மண்ணின் பாரம் நீக்கு தற்கே வடமதுரைப் பிறந்தான்
திண்ணமா நும்முடை மையுண்டே லவனடி
சேர்ந்துய்ம்மினோ
என்னவேண்டாம் நும்ப தாது மவனன்றி மற்றில் லையே"
என்பார் நம்மாழ்வார். (திருவாய். 9:1:10)

"உருவாகிய ஆறு சமயங்கட் கெல்லாம்
பொருவாகி நின்றா னவனெல்லாப் பொருட்கும்,
அருவாகிய வாதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டு கொண்டேனே" [1]

என இவ்வாழ்வார் அருளியது போன்றே மருதப்பதேவரும் வீரகேரளம் புதூரிலுள்ள கண்ணபிரானை எந்நாளும் போற்றி வணங்கி வந்துள்ளமையைக் காண்கிறோம்.

"மூத்தளிக்கும் சங்கநிரை தவழ்ந்தேறுஞ் செழுங்கமுகு
மோகன் கைத்தா
னத்தளிக்குஞ் சங்கரன்வா மாம்பகம் தோங்குறச்செந்
நளின மொட்டிற்
கத்தளிக்குஞ் சங்கமர்ந்து காலாறால் வருடுறத்தேன்
காலா றாப்போய்த்
தத்தளிக்கும் சங்கவயல் வீரைநகர் முகுந்தனையா
தரிக்கின் றோனே"

என்றும்,

"தோற்றாவி வண்டிரும்பும் வீரைநகர் நாரணனைத்
துதிக்கின் றோனே"

என்றும், மருதப்பதேவர் நாரணனைத் துதித்தலைப் பாடுகிறார் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள். இவ்வாறே பல புலவர்களும் பாடுகின்றனர்.

## வண்ணச்சரபம் வாழ்த்துதல்

தலங்கள் தோறும் சென்று இறைவன் திருநாமங்களை அன்றி மானிடரைப் போற்றிப் பாடாத விரதங் கொண்டிருந்த வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அவர்கள், விதிவிலக்காக இவ் வீரகேரளம்புத்தூர் மருதப்ப தேவர்மீது மட்டும் சில பாடல்களைப் பாடியுள்ளமை இவண் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் வீரை மருதப்பர் போற்றி வணங்கிய நவநீதகிருட்டிணர் பேரில் கலம்பகம், பதிகங்கள், வகுப்பு, திருப்புகழ் போன்ற இலக்கியங்களையும் இவர் பாடியளித்திருப்பது போற்றற் குரியதாகும்.

---

1. திருவாய். 9:4;8.

"வரைநிகர்தோள் வலியதனாற் புலவோர் தங்கள்
வறுமையொடு பகைஞரையும் வதைத்துச் சூடும்
விரைமலிதார்க் கிளைவைமரு தப்பன் போற்றும்
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே" (11)

எனப் பதிகத்திலும்,

"மீளி மார்வி யந்த சீல னாமித
யால யாதி பன்ற னாள்கை யாலுயர்
வீர கேர ளம்பு தூரின் மேவிய பெருமாளே"

எனத் திருப்புகழிலும் போற்றும் தண்டபாணி சுவாமிகள்,

"துதிபகர்என் றனக்குலவா வருட்பேறும்
திருக்கோயிற் றொண்டே நாடும்
மதியிதயா லயற்கருமை மகப்பேறும்
இக்கணமே வழங்கி ஆள்வாய்"

எனக் கண்ணபிரானிடம் இவருக்காக வேண்டுவதையும் காணலாம்.

## திருக்கோயில் திருப்பணிகள்

பரம்பொருளாகிய கடவுளை நாராயணனாகிய கண்ண பிரானாகக் காண்பதும், எல்லா இயக்கங்களுக்கும் அக் கண்ணனே காரணம் எனத் தெளிவதும், வைணவத் தத்துவ மாகும். எல்லாவற்றிற்கும் காரணமான நாராயணனை அடைவதற்கு உண்டான வழி அவன் திருவடிகளே என்பது வைணவப் பெரியோர் கண்ட முடிபாகும். இறைவன் திருவடி களை அடைவதற்கு ஞான மார்க்கம், கர்ம மார்க்கம், பத்தி மார்க்கங்கள் உண்டெனினும், இவற்றைவிட உயர்ந்த சிறந்த எளிய வழி சரணாகதி மார்க்கமே யாகும். இறைவன் திருவடி களைப் பற்றுகிற சரணாகதியாகிய வழியைப் பின்பற்றினால் அவன் திருவடிகளில் புரியும் கைங்கரியம், குற்றேவல் அல்லது தொண்டு என்னும் சிறந்த பலனை நாம் அடையலாம். வைணவப் பெரியோராகிய ஆழ்வாராதிகள் தெளிந்து கூறிய இவ்வுண்மையான வழியை—அதாவது கண்ணபிரானுக்குச் செய்யும் திருத்தொண்டினை உள்ளன்போடு செய்து வந்தவர்

வீரை மருதப்பத் தேவர் என்பதை அவர் காலத்து வாழ்ந்த புலவர் பலர் பல தனிப்பாடல்களில் எடுத்துரைக்கின்றனர்.

"சுருப்பணியே ரிசைபாடித் துளிமதுவுண் முல்லைமலர்
தோய்திண் டோளி
னுருப்பணியேந் துலகமெலாந் தாங்கிதயா லயவேந்தா
யுயர்கா யாவின்
கருப்பணியேய் திருமேனி நவநீத கிருட்டிணற்குக்
கனிவாய்ச் செய்யுந்
திருப்பணியே பணியாகப் பூண்டனைநின் கீர்த்தியென்றுஞ்
சிறக்கந் தானே" [1]

என இதை விளக்குகிறார் புளியங்குடி முத்துவீரக் கவிராயர். மேலும்,

பூமாது நாமாது போர்விசய மாதுபுவிக்
கோமாது சேர்ந்துவள ருங்கோமான்—காமாது
சேரும் புரந்தரன்போற் செல்வம் படைத்தேழு
பாரும் புரந்தரன்பா தம்பணிவோன்—காரனைய
வண்ணத்தான் வீரை மருதுநவ நீதகிருஷ்ண
திண்ணத்தான் சித்தந் தினமகிழ—வண்ணமணித்
தேருந் திருப்பணியுஞ் செய்ய மணிப்பணியும்
ஆருந் திருக்கற்ற தாமென்ன—வூரும்
விசய மகுடமுதல் வெள்ளியினாற் சோதி
யிசையவீ ரைவா கனமுந்—திசைபுகழச்
செய்துபா லாழி யெனத் தெப்பமியற் றிற்சிறப்பா
யெய்துதிரு நாளு மியற்றியே—துய்ய
மனத்தன்பாய் முக்காலம் வந்தனைசெய் தேத்துங்
கனத்தன்பாய் மாநகுலன் காணில்... [2]

என இவர் நவநீதகிருட்டிணற்குச் செய்த திருப்பணிகளைப் பலவாறாகப் போற்றியுரைக்கின்றார் இப்புலவர்.

வீரை நவநீதகிருட்டிணன் ஆலயத் திருப்பணி செய்தது போலவே, மதுரை மீனாட்சிக்கும், செந்தில்நகர்ச் செவ்வேளுக்

---

1. தனிப். தி.
2. தனிப். தி.

கும், சாலிநகர்ச் சம்புவுக்கும், பாவநாசருக்கும், தென்காசி விசுவேசருக்கும், தென்கயிலைக் குற்றாலத்தப்பனுக்கும், சீரங்கக் கண்ணனுக்கும் வீரை மருதப்பர் திருக்கோயில் திருப் பணிகள் பல செய்துள்ளார்.

வீரைநகரில் அன்னசத்திரம் அமைத்து ஏழை எளியோருக் கெல்லாம் வாரி வழங்கிய இவ்வள்ளலைப் புண்ணியமெலாம் ஒருருவாய்ப் புகுந்ததன்ன கண்ணியவான்; கல்வியெல்லாம் கற்றறிந்தோன்; வாக்குக்கு அரிச்சந்திரன்; வன்மைக்கு உயர் வீமன்; காக்கும் தொழிலுக்குக் காகுத்தன்; கொற்றவர் சிங்கேறு; குணரத்னம் எனப் பலவாறு போற்றும் புலவர்,

"—நற்கொண்டல்
நாடுங் கொடையா னவநீத கிருஷ்ணதுரை
தேடுந் தவப்பேற்றின் செவ்வமென—நாடாளப்
பெற்ற விதயா லயமருதப் பேந்த்ரதுரை" [1]

என்றே அழைப்பர். இவ்வாறே மருதப்பர் நவநீத கிருட்டிணரிடத்து வைத்திருந்த பக்திப் பெருக்கினைப் பல புலவர்களும் எடுத்துரைக்கின்றனர்.

## ஆளுகைக்குகந்த ஆற்றல்கள்

இருதயாலய மருதப்ப தேவர் நற்குண—நற்செயல்களோடு தமிழறிவிலும் மேம்பட்டவர். பல தமிழ்ப் புலவர்களைத் தம்முடைய அவையிலேயே அமர்த்தி அன்றாடம் தமிழ் நூல் களை அலசி ஆராய்ந்தவர். திருநெல்வேலிப் பகுதிகளில் ஓலைச் சுவடிகளைத் தேடியலைந்த டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்கள் இவருடைய சிறப்புகளையெல்லாம் நேரில் கண்டு பாராட்டியுள்ளார்கள். [2]

'பழங்காலத்தில் வீரமும் கொடையும் கல்வியு முடையவ ராக இருந்த சிற்றரசர்கள் இப்படித்தான் இருந்திருப்பார் களோ!' என்று நான் நினைத்துப் பாராட்டினேன் எனக் கூறும் ஐயரவர்கள், இருதயாலய மருதப்பத் தேவருடைய காலப்

---

1. தனிப். தி.
2. என் சரித்திரம், பக். 694—702.

போக்கை நேரில் உணர்ந்து வியப்படைந்ததாக விளக்குகிறார். அன்றாடம் விடியற்காலை நான்கு மணிக்கே எழுந்துவிடும் தேவரவர்கள், பரிவாரங்களுடன் புறத்தே உலாவுவதற்குச் செல்வார். யானைக்கூடம், குதிரைப்பந்தி, காளைகள் கட்டு மிடம் எல்லாவற்றையும் பார்வையிட்டுக் கொண்டே செல்வார். ஊரைச்சுற்றியுள்ள சாலைகளில் ஒவ்வொரு சாலை வழியாகச் சென்று உலாவி வருவார். அந்தச் சாலைகளெல்லாம் அவரா லேயே அமைக்கப்பட்டவை; இருபுறமும் மரங்களைப் பயிராக்கிச் சாலைகளை ஒழுங்காக வைத்திருந்தார். தோட்டங் கள் நல்ல முறையில் வளர்க்கப்பெற்று வந்தன. உலாவி விட்டு வந்து எட்டுமணி முதல் பத்துமணி வரையில் தமிழ்ப் புலவர் களுடன் இருந்து தமிழ் நூல்களைப் படிப்பார். புதிய நூல் களையும் பழைய நூல்களையும் பன்முறை படித்து இன்புறு வார். அவருடன் இருந்த வித்துவான்கள் நல்ல புலமையுடை வர்கள். அவர்கள் சில பிரபந்தங்களை இயற்றியிருப்பதுடன் பல ஆண்டுக் காலமாக அவருடைய அவைப் புலவர்களாகவே இருந்தார்கள். பத்து மணிக்குமேல் கச்சேரிக் கட்டுக்குச் செல்லும் மருதப்பர் சமஸ்தானம் தொடர்பான வேலைகளைக் கவனிப்பார். பிறகு உணவு உண்டபின் மீண்டும் பிற்பகல் இரண்டு மணிக்குத் தமிழ்நூல் படிக்க உட்காருவார். நான்கு மணிவரையில் படித்துவிட்டு ஆறுமணிவரையில் சமஸ்தானம் தொடர்பான வேலைகளைப் பார்வையிடுவார். ஆறு மணிக்கு மேல் தம்மைப் பார்க்க வந்தவர்களுக்குப் பேட்டி அளிப்பார். தம் குடிகளுடைய குறைகளை விசாரிப்பார். அவர்கள் அவற்றை ஓலையில் எழுதி நீட்டுவார்கள். அவற்றையெல்லாம் பிறகு பார்த்து மறுநாள் தம் கருத்தைச் சொல்லுவார். வேற்றூரி லிருந்து வந்தவர்களுக்குச் சிறிதும் குறைவின்றி மரியாதைகள் நடைபெறும்.

## ஆலயச்சிறப்பு

மருதப்பதேவர் மாலையில் ஆலயத்துக்குச் செல்வார் அங்கேயுள்ள நவநீதகிருட்டிண சுவாமியின் ஆலயத்தில் இவருடைய ஆட்சியில் நித்திய நைமித்திகங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. கண்ணன் ஆலயம் சிறியதாக இருந்தாலும் பெரிய கோயில்களுக்கு நடைபெறுவன போன்ற சிறப்புக்களை ?கே பார்க்கலாம். பல வர்க்கான்னங்களும், லாடு, லட்டு,

ஜிலேபி, தேங்குழல் முதலிய பட்சண வகைகளும் கண்ண பிரானுக்கு நிவேதனம் செய்யப்படும். இவற்றையெல்லாம் புத்தூருக்கு நெய்யாற் செய்வார்கள். ஒரு லாடு உரித்த தேங்காயளவு இருக்கும், தேங்குழல் பெரிய சந்தனக்கல் அளவு இருக்கும். அந்தப் பிரசாதங்களை வெளியூரிலிருந்து வந்த விருந்தினர்களுக்குக் கொடுத்தனுப்பச் செய்வது ஜமீன்தார் வழக்கம்.

மாலையில் மருதப்பதேவர் சுவாமி தரிசனம் செய்யும் பொழுது அங்கே நல்ல பாட்டுக்களைச் சில சங்கீத வித்துவான்கள் பாடிக் கொண்டே இருப்பார்கள்.

## சீரிய ஆட்சிமுறை

இவ்வளவு ஒழுங்காகவும் திறமையாகவும் அவர் நடத்தி வந்த ஆட்சியை வேறிடங்களில் நான் பார்த்ததில்லை என்பார் ஐயரவர்கள். சிறிய ஜமீனாக இருந்தாலும் அவர் அதற்குத் தம் ஆட்சி முறையால் பெருமையை உண்டாக்கினார். அவர் ஒரு பெரிய தேசத்தின் அதிபதியாக இருந்தால் எவ்வளவோ நல்ல காரியங்களைச் செய்திருப்பாரென்று நான் எண்ணிப் பார்ப்பேன் என்பார் ஐயரவர்கள்.

## வண்ணச்சரபம் தொடர்பு

இவ்வாறு சிறந்த தமிழ்ப் புலமையும், சீரிய நல்லாட்சித் திறனும். புலவரைப் போற்றும் பெருந்தன்மையும் கொண்ட மருதப்பதேவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் சந்தப் பாடல்களில் மகிழ்ந்து தோய்ந்ததுடனல்லாமல் அவர்தம் சமய சமரசப் பொதுமைப் போக்கிலும் ஈடுபாடு மிகக்கொண்டு அவரை அன்புடன் போற்றி வணங்கலானார் எனத் தெரிகின்றது. தண்டபாணி சுவாமிகள் என்னும் முருகதாசர் பாடிய அரிஏகபாதத்தந்தாதி போன்றவற்றுக்கெல்லாம் அவரே பொருள் கூற அருகிருந்து கேட்டு மகிழ்ந்தவர் மருதப்பதேவர்.

"சூதத்தந் தாதிரைவா ரிக்கிணையாந் தனமேனி
துணைக்கட் டேவி
மாதத்தந் தாதிடனே யெனவருளு மாதேவன்
மன்றி லன்று

தாதத்தந் தாதிமியென் றாடுமரன் மேல்முருக
தாச ரொற்றைப்
பாதத்தந் தாதிசொல்ல மகிழுமித யாலயவிற்
பன்ன கோவே"[1]

எனப் பாடுகிறார் சொக்கம்பட்டிச் செம்புலிப் பெரியசாமித் தேவரவர்கள். இதன்வழி இவ்விருவர் கொண்டிருந்த நட்பும் புலனாகும்.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருவரங்கத் திருவாயிரம் நூலைத் திருவரங்கக் கோயிலிலே அரங்கேற்றிய போது பலருக்கும் அழைப்பு அனுப்பினர். நாடெங்கிலுமிருந்து பல புலவர்கள் வந்து திருவரங்கக் கோயிலில் கூடினர். அவ்வமயம் வீரகேரளம்புதூர் மருதப்பதேவர் இவர்பால் அன்புகொண்டு தம் அவைப் புலவரை அரங்கேற்ற வைபவத்திற்கு அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கதாகும். தேவரவர்களின் அவைப் புலவராகிய கந்தசாமிப் புலவர் கண்ணபிரான் பேரில் அரிய பிரபந்தங்களைப் பாடியவராதலால் அவரை அனுப்பி வைத்தமை மிகவும் பொருத்தமுடையதாகும். திருவரங்க அரங்கேற்றத்தில் இப் புலவரே கையேடு படிக்கத் தண்டபாணி சுவாமிகள் ஆயிரம் பாடல்களுக்கும் பொருளுரைத்து அரங்கேற்றினார் என்பது அரிய வரலாற்று நிகழ்ச்சியாகும்.

"பொன்னையுறழ் தமிழரச னாகிவீரை
புரந்தஇத யாலயன்தன் புலவனாகிப்
புன்னைவிழை கண்ணனிசை புகன்றவாய்மை
புனைந்தகந்த சாமிப்பேர்ப் புலவன்தானும்"[1]

"இவரனுப்பும் பத்திரிகை கண்டுசிந்தை
யினின்மகிழ்வுற் றரங்கநக ரினில்வந்துற்றார்"[2]

"கருச்சிறைதீக் கிடுமரங்கத் தாயிரம்பாக்
கழறமுதற் துவக்கியெழிற் கந்தசாமி

---

1. தண்டபாணி விஜயம், உத்தரபாகம், பா, 45.
2. தண்டபாணி விஜயம், உத்தரபாகம், பா. 44.

திருச்சிறந்த கையேடு படிக்கத்தாமே
செப்புபொருள் விரித்தனர்மெய்த் தேவரார்ப்ப" [1]

என்னும் பாடலடிகள் இவ்வரலாற்றை விளக்கும்.

"தென்குருகைச் சடகோபன் தனக்குமுன்னாள்
செறிமதுர கவிமமைந்தாங் கிந்நாளிந்த
வின்குரற்பா வலன்கையேட் டினுக்குவாய்த்தா
னென்றுபலர் தாமுமுரைத் தின்பமுற்றார்"

என அவ்வரங்கேற்ற நிகழ்ச்சி சிறப்புற்றதை விவரிப்பர்.

தண்டபாணி சுவாமிகள் நம்மாழ்வார் போன்றும் சுந்தசாமிப் புலவர் மதுரகவி போன்றும் அன்று ஏடுபடித்து எம்பெருமானின் பாடல்களுக்குப் பொருளுமுரைத்து அரங்கேற்றியதைச் சான்றோர்கள் பாராட்டி யுரைத்துள்ளனர். இத்தகைய பக்திப் பெருக்கினைக் கொண்ட புலவர்களைப் போற்றியவர் மருதப்பதேவர் என்பது குறிக்கத்தக்கதாகும்.

இருதயாலய மருதப்பத் தேவரவர்கள் நவநீதகிருட்டிணனிடம் கொண்டிருந்த பக்திப் பெருக்கும் தண்டபாணி சுவாமிகள் திருமால்மீது கொண்டிருந்த பக்திப் பெருக்கும் ஒருசேர இணைந்ததன் விளைவாகவே இந்த நவநீதகிருட்டிணன் கலம்பகம் உருவாகியுள்ளது என்பதை இக் கலம்பகத்தை ஆழ்ந்து கற்பார் நன்கு உணர்வர்.

## தமிழ் வளர்த்த மருதப்பர் பரம்பரை

இருதயாலய மருதப்ப தேவரின் முன்னோர் பலரும் தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளனர். பவணந்தி முனிவர் இயற்றிய நன்னூல் என்னும் இலக்கண நூலுக்கு அரிய உரை எழுதிய சங்கர நமச்சிவாயப் புலவர் இந்த ஊற்றுமலை ஜமீனின் சமஸ்தானப் புலவர்களில் முதன்மை வாய்ந்தவராவர். இச் சிறந்த புலவரைக் கொண்டு இவ்வரிய உரை நூலைச் செய்வித்தவர், முத்தமிழ்த் புலமையும் முறையரசுரிமையும் இத்தலத் தெய்திய இறைமகனாய ஊற்றுமலை

1. தண்டபாணி விஜயம், உத்தரபாகம், பா. 53.
2. தண்டபாணி விஜயம், உத்தரபாகம், பா. 54.

மருதப்பதேவர் என்பவராவர். மருதப்பர் என்பது இந்த ஜமீன் தலைவர்களுக்கெல்லாம் உரிய பொதுப் பெயராகும். இத் தேவர்மீது 'மதன வித்தார மாலை' என்ற நூலைக் கடிகை முத்துப் புலவரும், 'திருவருட்பா மாலை' என்னும் நூலைக் கன்றாப்பூர்க் கவிராயர் என்பாரும் பாடிப் பரிசுகள் பெற்றுள் ளனர். அவ்வழியினரான நவநீத கிருட்டிண தேவர்மீது 'வனசவிடுதூது' என்ற நூலைக் கன்றாப்பூர்க் கவிராயர் பாடி யுள்ளார்.

இருதயாலய மருதப்ப தேவர் செந்தமிழ்ப் புலமை பெற்றிருந்தமையால் புலவர் பலர் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்திருப்பர் பல புலவர்களோடு கலந்து பேசிப் பழகு தலையே அவர் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார். திருக் கமவக் கவிராயர் என்பவர் பல நூல்களியற்றித் தேவர்பால் பரிசு பெற்றுள்ளனர். புளியங்குடி முத்துவீரக் கவிராயர் என்பவர் இவருடைய ஆஸ்தான வித்துவானாக இருந்துள்ளார். புனல்வேலி இராமசுவாமி பாரதிகள் இருதயாலய மருதப்ப தேவர்மீது 'நாணிக்கண் புதைத்தல்' என்ற துறையமைத்து நூறு பாடல்களை ஒரு துறைக் கோவையாகப் பாடியுள்ளார். அதில், 'பார்க்குள் உயர்ந்த இதயாலய வள்ளல்', 'நீதி செலுத்து மிதயாலய வள்ளல்', 'தாயாய்க் கவிப்புலவோருக்கு வந்தன்ன தானமுடை யோயாதளிக்கு மிதயால யேந்திரன்', 'பொன் பாவலருக்குக் கண்ணனைப் போற்றரும் புங்கவன், 'தன்மதுரை இதயாலய பூபதி', 'மண்டலம் வாழ்த்தும் இதயாலயேந்திர வள்ளல்', 'நாவலர் தம்மிடத்தில் நேய மருவு மிதயாலய மன்னன்', 'காரிகை தண்டி யலங்கார மோடமை காவியங்கள், தேரிசை முல்லைத்துரை இதயாலய தீரன்'. 'ஐயன் பரம னவநீத கிருஷ்ணனருள் பெருகும் மெய்யன்', 'செஞ்சொற் குமணன் இதயாலயன்', ' அனக்கொடி நாட்டிய வாசவினான், கலையாவுங் கற்றோன்', 'வல்லோன் கிரந்தந் தமிழிங்கிலீசு வகை முதலாய், எல்லாந் தெரிந்த இதயாலயன்', அள்ளி நிதியதனை நாவலர்க்களிக்கு மெங்கள் வள்ளல்', 'நெஞ்சிற் சிவ சிந்தனை மறவாத நிருபன்', 'பகலும் இரவும் கவிநாவலர். பெற்றுப் புகழும் கிளுவைத்துரை இதயாலய பூபன்' எனப் பலவாறு புகழ்ந்துள்ளார். இவற்றால் இதயாலய மருதப்ப தேவரது கல்வி, ஈகை, எழில், குணம், தெய்வ பக்தி முதலாய அருங்குணங்கள் பல விளங்குகின்றன.

சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் அவர்கள் காவடிச் சிந்து பாடக் காரணமாயிருந்தவர் இதயாலய மருதப்ப தேவரே என்பது இவண் குறிக்கத் தக்கது. "சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் பல ஜமீன்தார்களிடத்தும் போய் அவர்கள் வியக்கும்படி பாடிப் பரிசு பெற்றுக் சுகமாகக் காலங் கழித்து வந்தார். இவரிடந்து ஊற்றுமலை ஜமீன்தாராக இருந்த இருதயாலய மருதப்ப தேவர் என்பவர் ஈடுபட்டுத் தம்மிடம் இருக்கும்படி செய்து மிக்க ஆதரவு அளித்தனர். இவருக்கு அவரால் கொடுக்கப்பட்ட ஆடையாபரணங்கள் மிக அதிகம், அதுகண்டு மற்றையோரும் இவருக்குச் சம்மானம் அதிகம் செய்வாராயினர். மேற்படி ஊற்று மலையார் கழுகு மலைக்குக் காவடி எடுத்துச் சென்ற பொழுது அவருக்குச் சிரம பரிகாரமாக இவரால் பாடப்பட்டதுதான் காவடிச் சிந்து என்பது. காவடிச்சிந்தின் முறை ஏற்பட்டது இவராலேதான்." என டாக்டர் உ. வே. சாமிநாதையர் (கலைமகள் 1943 பக். 243) கூறுவதால் நன்கு அறியலாம்.

இருதயாலய மருதப்ப தேவரும் அவர் மனைவியார் மீனாட்சி சுந்தர நாச்சியாரும் காசிவரை சென்று மீண்ட செய்தியினை அவருடைய சமஸ்தான வித்துவான் புளியங்குடி முத்து வீரக் கவிராயர் அவர்கள் கலிவெண்பாவால் அழகாகப் பாடியுள்ளார். மற்றும் அப்புலவர் மீனாட்சி சுந்தர நாய்ச்சியாரின் பொருளுதவியால் சங்கர நாராயணக் கோயில் கோமதியம்மைப் பிள்ளைத் தமிழைப் பாடிப் பதிப்பித்துள்ளார். அப்புலவர் அத்தலத்தின் புராணத்தில் ஒரு பகுதியைப் பாடியுள்ளார். எனவே, தேவரவர்களின் மனைவியாரும் தமிழ்ப்பற்று மிக்குடையராய்த் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து நூல்கள் இயற்றுவித்துத் தமிழ் மொழியை வளர்த்து வந்தனர் என்பதும் புலனாகும்.

வீரகேரளம்புதூர் என்னும் இவ்வூரின் நடுவில் அமைந்துள்ள நவநீத கிருட்டிணன் கோயிலை அழகுறக் கட்டிய இருதயாலய மருதப்ப தேவர் அங்கு நித்திய நைமித்திய பூசைகளும் திருவிழாக்களும் நடைபெற ஏற்பாடுகள் செய்துள்ள முறை வியக்கற்பாலதாகும். அக்கோயிற் பெருமானுக்குரிய திருவாபரணங்களும் வாகனங்களும் அமைந்துள்ளமை அவரது தெய்வ பக்தியை இனிது விளக்கும். கோவிலுக்கு அருகிலேயே

தேவர் தம் அரண்மனையையும் அமைத்துக் கொண்டுள்ளார். அந்நாட்டில் தேவரை அரசர் என்றே அழைத்தனர். நவநீத கிருட்டிணன் கோயிலில் பங்குனி மாதத்தில் கார்த்திகை நட்சத்திரம் கூடிய தினத்தில் கொடியேற்றிப் பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வாகனத்தில் பெருமாள் எழுந்தருளிக் காட்சியளிப்பர். அவ்வாகனங்களைச் சிறப்பித்துப் புலவர் பல்லோர் 'வாகனக்கவி' பல இயற்றியுள்ளனர்[1] என்பதும் இவண் அறியத்தக்கன.

இதற்கு சிறப்பு மிக்க தேவர் மீது பற்று மிகக் கொண்ட வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் இருதயாலய மருதப்ப தேவர் வணங்கிய கிருட்டிணர்மீது கலம்பகமும், பதிகங்களும், திருப்புகழும், வகுப்பும் பாடியுள்ளதுடன், மருதப்பர் மீது சில தனிப்பாடல்களையும் கீர்த்தனையும்[2] பாடியுள்ளமை படித்து இன்புறத் தக்கவையாம்.

## நூலாராய்ச்சி

நவநீதகிருட்டிணன் கலம்பகம் என்பது நவநீத கிருட்டிணனது கலம்பகம் என விரியும்; இது ஆறாம் வேற்றுமைப் பொருளில் தொக்கு நின்ற தொகைநிலைத் தொடர் மொழி. விட்டுணு புராணம், திருமகளந்தாதி என்பவற்றிற் போல, இனி, நவநீதகிருட்டிணனைப் பற்றிய கலம்பகம் எனப் பொருளுரைத்து, இத் தொடர்மொழியை இரண்டனுருபும் பொருளுந் தொக்க தொகையாகவும் கொள்ளலாம். நவநீத கிருட்டிணன் என்பது—திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக் கருகில் வீரகேரளம்புதூர் என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திருமாலினது திருநாமம்; புத்தம் புதிய வெண்ணெய் உண்ணும் கண்ணன் என்பது பொருள்.

நவம் என்ற சொல் புதுமை என்ற பொருள் தரும் என்பது பிங்கலம். நவநீதம் என்ற வடசொல்லுக்குப் புதிய தயிரினின்று கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய் என்று காரணப்பொருள்

---

1. தமிழ் வளர்த்த பெரியார்கள், பக். 16-25
2. வீரகேரளம்புதூர்ப் பதிகங்கள் முதலானவற்றை இந் நூலின் பின்னிணைப்பில் காண்க.

கூறுவர். இனி, நவநீதம் என்பது அடியார்களது அன்பு கொண்ட மனம் வெண்ணெய் போல எம்பெருமானது திருவுள்ளத்துக்கு உவப்பாமென்பதாம்.

கிருட்டிணம் (கிருஷ்ணம்) என்ற சொல் கறுப்பு நிறத்தைக் குறிக்கும். கருமை நிறமுடைய கண்ணபிரானுக்குக் கிருட்டிணன் (கிருஷ்ணன்) என்று பெயர் கூறுவர்.

வீரகேரளம்புதூரினை ஆட்சி செய்துவந்த இருதயாலய மருதப்பத்தேவரின் குலதெய்வமான நவநீதகிருட்டிணன் மீது வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இக் கலம்பக நூலை இயற்றியளித்துள்ளார். சுவாமிகள் தம் கைப்பட ஓலைச்சுவடியில் பதினேழு ஏடுகளில் இந்நூலை எழுதியுள்ளார். இந்நூலின் மூலம் மட்டும் அடங்கிய இச்சுவடி இதுவரை பதிப்பிக்கப் பெறவில்லை. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பெற்ற இம் மூலநூல் இப்பொழுதுதான் உரையுடன் வெளிவருகின்றது.

## நூலமைப்பு

நவநீதகிருட்டிணன் கலம்பகம் காப்புச் செய்யுள் இரண்டு, அவையடக்கம் ஒன்று, நூல் 100 பாடல்கள், நூற்பயன் ஒரு பாடல் ஆக மொத்தம் 104 செய்யுட்களானியன்றது. நூல், 'திருமகள் பூமகளொடு' எனத் தொடங்கி அந்தாதித் தொடை பெற்று நடந்து இறுதிப்பாடல் 'திருமாலே' என மண்டலித்து முற்றுப்பெறுகிறது. இது பொருள்தொடர் நிலைச் செய்யுள், சொல் தொடர்நிலைச் செய்யுள் என்னும் இரு வகைகளில் இரண்டாவது வகையைச் சேர்ந்தது. 'செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே' என்பது தண்டியலங்காரம் (12).

இந்நூலில், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாக்களும் பாவினங்களுமாக முப்பத்தைந்திற்கும் மேற்பட்ட தமிழ் யாப்பு வகைகள் இடம்பெற்றுள்ளன.

## கலம்பக உறுப்புகள்

புயவகுப்பு (10), தவம் (14,15), சித்து (18), தூது (21,22), ஊர் (23,24), அம்மானை (27), மறம் (33,34), களி (37,38), ஊசல் (51), இரங்கல் (25,58,79,80), தழை (60,61), சம்பிரதம்

(65), மதங்கு (70,71), குறம் (73,74), பாண் (77,78), கைக்கிளை (82,83), கழிக்கரைப் புலம்பல் (85,87), காலம் (கார்காலம்-89, 90, பனிக்காலம்-91, வேனிற்காலம்-93, காற்றுக்காலம்-94) ஆகிய பதினெட்டுக்கலம்பக உறுப்புகளை இந்நூல் பெற்றுள்ளது.

இக் கலம்பக உறுப்புகள் சிறப்பாகப் பாடப்பெற்றுள்ளதுடன், பக்திச் சுவைக்கு முதன்மையளித்திருப்பதும் இனிய சந்தப் பாடல்களை மிகுதியாகப் பாடியிருப்பதும் குறிப்பிடத் தக்கன.

## தலச்சிறப்பு

வீரை என அழைக்கப்பெறும் வீரகேரளம்புதூரின் சிறப்பை ஆசிரியர் இந்நூல் முழுவதிலும் விளக்கக் காணலாம். காட்டாக,

'நந்தமிழ் நாட்டின் ஒண்முகமே போன்று ஒருக்கால் உற்றார்க்
கும் தீவினை தீர்த்து ஒழுகுபுனற் பெயருக்கு ஓவாச்
சிற்றாற்றின் வடபாலில் திகழ் வீரை நகர்'

என முதற்பாடலிலேயே இத்தலத்தின் இருப்பிடத்தை விவரிக்கும் ஆசிரியர், இத்தலத்தின் இயற்கை எழிற்சிறப்பைப் பலபடப் பாராட்டுவர்.

செவிதூங்கும் வேழம் பல ஆர்க்கும் வீரைத் திருநகர்—3, செய்யநிறத் தமிழ் வீரை—4, கமல வாவிகொள் வீரை—5, கடிமதிற் தென் வீரை நகர்—8, கன்றுடன் பசுவெலாம் மகிழ்வுறு சீர் கண்ட பைம்பொழில் கொள் வீரை—9, கயல்தீர்க் கழனி வளங் காணும் வியனார்ந்த வீரைப்பதி—11, கையறவில்லார் வளர்சீர் வீரை—14, பார்புகழ் வீரையம்பதி—15, தென் அளகை நிகர் வீரை நகர்—18, சத்தமறை ஒலிடும் வீரைத்தலம்—19, மருதன்தன் மரபென்றும் வளர்துங்கம் இசை வீரை—23, இசைப்பார் இசைக்கும் நலம் முழுதும் இயங்கும் வீரைப் பதி—24, மாதவன் தமிழ் வீரை மாநகர்—25, மஞ்சடர்ந்த பொழில் எங்கணுஞ்சிகி மனங் கனிந்த கவி ஆடுமா மங்களம் பொலிய இந்திரன்சபை வளந்துலங்கு மெழில் வீரை—26, ஓதருஞ்சீர் வீரைநகர்—27, மிடலினர் பலர்புகழ் வீரை—29, காமர் வீரையூர்—35, தமிழ்ப் பாண்டி வதனம் போலும் திருமலி வீரை—36, பொழில் வளம்பொலி புண்ணிய வீரையூர்

—39, கர்மர் மாரனைப் பழியார் வீரை வளநகர்—40, ஆனென்றும் இன்பமுறும் வீரை—41, சீரணம் தவிர்நலம் திகழ்ந்த வீரை—43, திருமால் என்றும் வாழ் வெற்றி வீரை நகர்—45, விருது ஒன்று தென் வீரை—46, மயன் வியக்கும் மணிமாட மறுகார் தண்டமிழ் வீரை—47, நகரிற் சீரிய வீரை—48, குலிசன் ஊரினை நகத்தகும் வீரை—49, வேனில் வேள் விழாவறாத வீரையூர்—50, உவரிப்பொருள் கவர் வீரை—69, குராவினையும் கையாற் தழுவக் கருத்தொவ்வாக் கற்பினர்தம் ஒய்யாரத் துப்பால் உயர் வீரை—66, செந்தேன் பொழில் சூழ் வீரை—67, விழியிற் தமிழ்நாடுணர் வீரை—68, கராசலக்கோடு இறுத்த கைக்கண்ணபிரான் தங்கும் வீரை—82, கழங்கொலிக் கரத்தார் மலிதரு வீரை—84, தாங்கு பெருநிழல் கண்ட பல்மருது ஆர் வீரை—89, இந்தூரு மாடமலி வீரை—92, பற்பகல் கொடிதிகழ் மாமதிள் வீரை—90, மேதகு வளம்பொலி வீரை—99. என இத்தலச் சிறப்புகள் பலவாறு விளக்கப் பெறுகின்றன.

## வீரையும் கண்ணனும்

வீரகேரளம்புதூரின் சிறப்பை எடுத்துக் கூறிய ஆசிரியர், இத்தலத்தில் கண்ணபிரான் எழுந்தருளிச் சிறப்பித்துள்ளமையை ஒவ்வொரு பாடலிலும் நயம்பட விளக்குகிறார். இவற்றுள் வீரை என்னும் தலப்பெயரோடு இறைவனாகிய கண்ணபிரானின் பெயரையும் சேர்த்துக் குறிப்பிடுமிடங்கள் படித்தின்புறத்தக்கன. காட்டாக,

வீரைநகர்க் காவலன்-2, செய்யநிறத் தமிழ் வீரைத் திருக் கோயில் அமர்வோன் 4, வீரையின் மாயன்-5, வியன்வீரைப்பதி புரக்கும் விகிர்த மால்-6, நீலமால்வரையெனத் தமிழ் வீரையில் நிலவிய நெடியோன்-7, வீரையின் அரசு-9, வீரை மேவிய சீதரன்-12, வீதனையூர் வீரையன்-13, வீரையம்பதியில் மணி முகில் என நின்றருள் செய்வான்-15, வீரைநகர்க் கோயில் நவநீத கிருட்டிணனாம் ஞானகுருபரன்-16, வீரைத்தலத்தில் அடியார் போற்றத் தமிழும் தனமும் கனமு மலர்ச் சரணுந் தரும்ஓர் பெருமாள்-19, வீரைநகரில் மிளிரும் எம்பெருமான்-20, வீரை நகர்த் தொல்லோன்-21, அருட்புலவோர் புகழும் தென்வீரை நெடுமால்-22, வீரைப்பிரான்-28, திருவீரைக் கோயிலிடத்து

எங்கள் குருவான கண்ணன்-30, பெரியோர்மலி வீரைநகர்ப் பிரான்-31, வளவீரையில் மருவு வானவன்-32, திருமலி வீரையில் தேவரும் பிறரும் வழிபடக் கருமுகில் மானப் பொழியருள் விளக்கிப் பொலிந்த புண்ணியன்-36, பொழில்வளம் பொலி புண்ணிய வீரையூர்உழி ஓர் புள்ளில் உலாவும் ஒப்யாரன்-39, வீரையாளும் அரசு-41, வீரைநகர் வாழ் பெருமாள்-51, வீரையர் கோன்-52, வீரைமேவும் குணக்கொண்டல்-53, தனி வீரையில் மேவிய மாயன்-55, வீரையின்கட் குடிகொளும் அரி-58, வீரை நகர்த் தாடாளன்-59, வீரைப்பதிமால்-61, வீரையூர் நலமருவ ஓர்கையிடை புனையும் நவநீத மிக நகநிலை கொள்வான்-64, வீரை காக்கும் தொழிற் கண்ண்ன்-67, வீரை மாதவன்-70, வீரை நீலவண்ணன்-74; வீரையில் வாழண்ணல்-76, வீரைக் கண்ணுறுமால்-78, வீரைநகர்ப் புண்ணியன்-81, வீரைகாக்கும் நெடியவன்-89, வீரைக்கோயில் வளர் மாயவன்-90, வீரைவாழ் மலர்ச் செங்கண்ணன்-98, வீரைக்கு ஆதரமாகியவிரும் நாரணன்-99, வீரைநகர் வளர்நவநீத கிட்டிணத் திருமால்-100. என இவ்வாறு வீரை நகரோடு கண்ணனைச் சிறப்பித்துக் கூறும் ஆசிரியர், வீரையின் மேய வழிபட்டவர் வாழ்வு உறழ் மாயன்-68, வளவீரை வித்தகர் பேறா முதற் தேவு-97 என விளக்குவதுடன், வீரையிற் குலவும் இதயாலயற்கினிய நவநீத கிருட்டிணன்-10 என்றும், வீரைநகர் மருதற்கினியவன்-17 என்றும் பலவாறு புகழ்ந்துரைக்கக் காணலாம்.

## இறைவன் திருப்பெயர்

இத்தலத்திறைவனாம் கண்ணபிரானின் திருப்பெயர்களை ஆசிரியர் பலவாறு எடுத்துரைக்கின்றார். காட்டாக, அஞ்சனன்-26, அச்சுதநாதன்-100, அட்டாக்கரன்-5, 63, அண்டர் நண்பன்-26, அப்பன்-50, அம்மான்-94, ஆதிமால்-26, எம் பெருமான்-கா. 3, 20, ஐயன்-50, ஒப்யாரன்-39, கண்ண பிரான்-75, 82, கண்ணன்-கா. 1, 18, 28, 30, 33, 54, 55, 56, 67, 69, 84, கரியவன்-58, கள்ளன்-29, காகுத்தன்-55, கிட்டிணன்-63, கிரி-69, குழகன்-88, கொண்டல்-23, கோபாலன்-6, சீதரன்-12, சீலன் 69, சூதன்-19, 25, ஞானகுருபரன்-16, திருமால்-24, 45, 100, தீரன்-69, தொல்லோன்-21, நவநீதகிட்டிணன்-10, 16, 100, நாரணன்-14, 16, 32, 38, 43, 49, நெடுமால்-22, 27, நெடியோன்-7, 8, 89, நேமியான்-95, பவபயங்கரன்-26

பிரான்-96, புண்ணியன்-36, 81, புருடோத்தமன்-10, 66, புனிதன்-23, பெருமாள்-19, 84, மணிவண்ணன்-69, மறைமுலன்-69, மாதவன்-25, 70, மாயன்-57, முகுந்தன்-44, முதல்வன்-17, முதற்தேவு-97, வரதன்-97, வள்ளல்-29, விகிர்தன்-41 எனத் திருமாலின் திருப்பெயர்கள் பலவும் கூறக் காணலாம்.

### கண்ணன் திருவுருவம், குணநலன்கள்

கண்ணபிரானின் திருவுருவச் சிறப்பு, குணநலன்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுமிடங்கள் பலவாகும். காட்டாக,

காசைமென் பூந்துணர் வண்ணன்-55, காயாமலர்த் துணர் போல் நின்றெறிக்கும் கண்ணபிரான்-75, பொன்னிகர் பூவான்-85, மணிக்குன்ற வண்ணன்-28, கொண்டல் மேனியன்-49, கருமுகில்-16, புயல் புரையும் நெடுமேனிப் புனிதன்-47, புயல்நேரு மேனிப் புருடோத்தமன்-11, வானேய்த்த மேனி முகுந்தன்-76, மைக்கனமே நிகர் கிட்டிணன்-33, நீலமால் வரை-7, பச்சை நெடுமேனி அம்மான்-94, காரமர் நெடிய மேனிக் கருணை மால்வரை-40, தளஞ்செறிபூங் கண்ணன்-2, செங்கண் நெடுமால்-30, மலர்ச்செங் கண்ணன்-94, மலர்க்கண் அமுது-41, பூ அனைய திருத்தாளன்-59, நான்முகனைப் பயந்த வுந்தி நளினந்தான்-43, அந்தணன் குடிகொள் உந்தி கொண்டமுகில்-26, ஆரணஞ் செப்புநர் பலர்வரலான நாபியன்-58, செந்திருவை மார்பினிடத் தமைத்தோன்-93, ஐம்பெரும் படைகொள் ஆதிமால்-26, சங்காழிப் படைக்கை மால்-43, சுகம் ஒன்று ஊர்ந்து விண்வழி வரும் நாரணன்-32. என இவ்வாறு கண்ணபிரானின் திருவுருவைப் பலவாறு விளக்கும் ஆசிரியர் அக் கண்ணபிரானின் குணநலன்களைச் சுட்டியும் அவரை விளிக்கின்றார்.

### குழலிசைப்பவன்

அங்கையில் வேய்ங்குழல் கேட்கும் மால் மிக்குளான்-53, கானமலி குழல் வைத்த கை அமுது-17, கானவேயிசைக் கண்ணன்-33, வேயணிகைக் கோபாலன்-6,

### காத்தருளுபவன்

அழிவற்ற பதத்துறுமாறு அருள்வான்—68, காக்கும் தொழிற் கண்ணன்-67, சகம் காக்கு மலர்விழிக் கருணைத்

திருமால்—45, கருணை மால்வரை—40, கருணைக் கடல்—55, தண்அருள் விஞ்சும் அகநீர்மையோன்—23, பொழியருள் விளக்கிப் பொலிந்த புண்ணியன்—36, எடுக்கும் குன்றாற் பசுக்காத்தான்—60, அஞ்சல் அஞ்சல் என்றந்நாள் ஓர் ஆனைமுன்செல் அப்பன்-50, வன்தூணிடத்தி லிருந்துங் கனகன் மதலைக்கு இரங்கி வரும் பிரான்—96, வானவர் மட்குமுன் வாழ்வருள் பெட்பினான்-63, பாரளந்து விண்ணளந்து மாவலிக்கு ஆனியற்ற மெய்ப்பதம் கொடுத்த ஐயன்—50

**வலிமை மிக்கவன்**

அடல்வாணன் ஆண்மை குன்றப் பொருநிலை வலியுற் றோன்—58, வல்வாணன் ஒல்கக் காய்ந்த மணித்தோள் குழகன் —88, பொலார் உதிரந் திரண்டு ஆழி தோய ஒருங்கடுந்தீரன்—57, மீனென் றளக்க ரிடைசென்றும் அன்று வேதம் புரந்த விகிர்தன்—41.

**வைதாரையும் வாழ வைப்பவன்**

கள்ளன்என ஏசினர்க்கும் காதலறத் தீர்த்தருளும் வள்ளல் —29, இகழ் சிலர்க்கும் பேறு அளித்தோன்—66.

**பல குணநலன்களுடையவன்**

உள்ளக் கருத்தறிவான் வள்ளல்—8, மதுரங்குலவு செஞ் சொல்வனை தொண்டரொடு சென்றுவர நாணிடான்—23, விதுரன்தன் மனையுண்டி இனிதென்று நுகர்கொண்டல்—23, பன்மறையும் சொல் புனிதன்—23, வேதன் அரன் இந்திரற்கு மேலானான்—27, சிவனாதியர் தவநாடிய சீலன்—69, செக்கரை நேர் சிவன்முற் சிலரேயுணர் சித்துடையான்—63, முல்லைநிலத் தலைவன்—83, தொல்லாயர் பாடிக் களவன்—52, கொச்சை இடைமாதர்தம் கைம்மா முலைப்போர் விழைந்து எண்ணில் வடிவிற் கணந்தோறும் வாழ்கண்ணன்—28, வேரிமலி துளவணி தாள் துதிப்பவர்க் கெளியோன்—100, காரி மகனருள் திருவாய் மொழித் தமிழ்க் கினியோன்—100, அருமைத் திருவாய்மொழி கற்றுளார் பக்கம் விடாத விருப்பினான்—63, என இவ்வாறு அமையும் திருமாலின் திருவுருவம் மற்றும் குணநலன்கள் பற்றிய பகுதிகள் உய்த்துணரத்தக்கன.

## புராண வரலாறு, கதைகள்

கண்ணபிரானின் அவதாரச் சிறப்பை எடுத்துரைக்கும் பாகவதம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் மற்றும் பழைய நூல்களில் கூறப்பெறும் புராண வரலாறுகள், கதைகள் போன்ற வற்றை இக் கலம்பக நூலில் பல பாடல்களிலும் குறிப்பிடக் காணலாம். காட்டாக,

பாரதப்போரில் கீதையை உபதேசித்தது—கா. 2, பாற் கடலில் பள்ளி கொண்டது—1 (தரவு), 15, தேவகி மகனாகப் பிறந்து யசோதை மகனாக வளர்ந்தது—1 (தரவு), மருதமரம் முறித்தது—1 (தரவு), (சிவன்) மருதமர நிழலில் அமர்ந்தது—1 (தரவு), (சிவன்) பிச்சை எடுத்தது—1 (தரவு), பிரமனை நாபியில் பெற்றது—1 (அராகம்), 43, 58, 78, சிவன் முதலான எல்லாக் கடவுளும் வழிபட்டது—1 (அராகம்), 27, 69, எல்லாச் சமயமும் நானே என நிறுவியது—1 (அராகம்). தேவர்கள் அமுதம் உண்ண மோகினியாக வந்தது—1 ("), 42, கசேந்திரனுக்கு அருளியது—1 (தாழிசை), 12, 16, 42, 43, 50, 66, 97, நரசிம்ம அவதாரம் எடுத்து இரணியனைக் கொன்றது —1 (தாழிசை), 16, 46, 91, 96, துரௌபதிக்கு ஆடை அளித்தது-1 (தாழிசை) 26, 42. இராமாவதாரத்தில் அம்பினால் கடல் சுவறச் செய்தது-1 (தாழிசை), கோவர்த்தனகிரி ஏந்தியது—1 (தாழிசை) 10, 32, 42, 60, 66, 69, 76, 80, தசாவதாரம் செய்து மிகுபுகழ் பெற்றது—1 (தாழிசை), கோபியர் இன்பம் நுகர்ந்தது—1 (அம்போ.), 10, 28, 42, 67, சீதையுடன் கானகம் சென்றது—1 (அம்போ.) மதுகைடபன் என்னும் அசுரனைக் கொன்றது—1 (அம்போ.), வேதங்களை நிலைநாட்டியது—1 (அம்போ.), 23, 69, யாவையும் தானே ஆனது—1, 29, விளங்கனிமேல் கன்று எறிந்தது—2, 56,75, விண்ணும் மண்ணும் அளந்தது—2, 50,78, கருடன்மீது இலக்குமியுடன் சென்றது—8, 14, 32, பஞ்சபாண்டவ ராகிய அறத்தோரைச் சார்ந்து நின்றது—10, அசுரர்களை அழித்தது—10, குவலயாபீடம் கொன்றது—10, 25, 82, கம்சன் அனுப்பிய அசுரர்களைக் கொன்றது—10, அருச்சுனனுக்குத் தேர் ஓட்டியது—10, 19, 25, ஆழ்வார் பாடல்களைத் துளவ மாலையாகப் புனைந்தது—10, ஆயர்பாடியில் உறித்தயிர் வெண்ணெய் திருடி விளையாடியது—10, 52. அருச்சுனனைக்

காக்கச் சக்கரத்தால் சூரியனை மறைத்தது—10, 48, 69, பசுவினம் காக்க வேய்ங்குழல் ஊதியது—10, மன்மதனையும் பிரமனையும் பெற்றது—17, 25, 78, 100, தூது சென்றது—19, திருமகளை மார்பில் ஏந்தியது—20, விதுரன் அளித்த விருந் துண்டது—23, கதாயுதம் ஏந்தியது—25, வராக அவதாரம் எடுத்தது—27, துவாரகை அரண்மனையிலிருந்தது—29, நம்மாழ்வார் திருவாய்மொழியருளியது—36, 47, பெரியாழ்வார் ஆண்டாளை வளர்த்தது—36, மச்சாவதாரம் எடுத்து வேதங் களை மீட்டது—41, 42, தேவர்க்கு அமுதம் அளித்தது—42 இலக்குமியைத் தேவியாகப் பெற்றது—42, பாஞ்சசன்னியம் முழங்கியது—42, அட்டாட்சரத்தின் பொருளாயிருப்பது—42, திருக்கச்சியில் பேராடல் செய்தது—55, பஞ்சாயுதபாணியாக நின்றது—57, வாணாசுரனைக் கொன்றது—58, 88, பாம்பணை யில் பள்ளி கொண்டது—58, காளிங்க நடனம் ஆடியது—66, 80, விண்ணவர் ஊர்ப்பாணனை ஓர் பெண்ணாக்கிப் புணர்ந்தது—77, இலக்குமி ஓர் மகவு பெறச் செய்தது—78, நந்தகோபன், யசோதை உச்சி முகர்ந்தது—80, அகத்தியர் இலக்குமியைப் புகழ்ந்தது—93, தேவகியின் பெண் குழந்தை யைக் காத்தது—98, சிவன் செங்கல்லில் பொன் செய்தது—99, பூதனையாகிய பேய்ச்சி முலையுண்டது—54 ஆகிய பல புராண வரலாறுகளும் கதைகளும் ஆங்காங்கே கூறப்பெறுகின்றன. இவற்றின் விரிவான விளக்கங்கள் உரையில் கூறப்பெறும்.

## தன்னிரக்கம்

பாடல்களினிடையே ஆசிரியர் தன் உள்ளத்தைத் திறந்து ஆற்றாமையை வெளிப்படுத்தியும் பாடுகின்றார். தன்னிரக்கம் மிக்க இடங்கள் பல இதற்குச் சான்றாக அமையும். காட்டாக,

அடியேன் இந்த வெந்துயரில் மூழ்குதல் முறையோ—9; கடைக்கணித் தருளாயோ—7; ஆம்பலன் றோலிடச் சென்றளித் தாய் என்று அறைதலினால் நோம்பல வாதனையுந்தவிர்ப்பாய் என்ன நோக்குகின்றேன்—12; ஆரணத்தோடு ஆகமங்கட்கு உயிராய பசுமுற்று அலமரா வாறு அயர்வேற்கு அருள்புரியா தேனோ—16; பாரணங்கும் சீரணங்கும் பரிசு குன்றிலாரோ —16; பரிதிமதி ஒளிவு மட்கப் பாவமிகல் படிறோ—16; ஞான குருவென நிற்கும் நின் நிலைதேர் ஞாய மருவியும் இப்படி

அடியேன், மான மறதியுறத்தகு சிறியோர் வாயும் நகமெலி வுற்றிடல் முறையோ—17; சுத்த வெளிற்றுக் கவியொன்று சொன்னா னுடன்போய் மீண்டுவரும் தொன்மைக்குணம் இன்று இல்லை கொல்லோ—19; துயர்மிக் குழன்றேன் அருள்சுரந்து ஆள்—19; சித்தம் அறிய விளையாடல் செயும்நீ உலகத்தினர் காணச் சிறியேன் நிமித்தம் செயில் அமரர் சிரிப்பார் என நாணுதியோ—19; தங்கம் வெள்ளி ஆதியவே தஞ்சமென்பார் போற் றமியேன் பங்கமுற இன்னம் படுத்தா தருள்புரிவாய் —30; நகமுன் றேந்தியும் ஆனினம் புரந்தநீ நல்லோர்இகழ் பொல்லார் அவற்றினைக் கொலப் பார்ப்பதென் றிழப்பாய் —32, அவர்வரக் கண்டதில்லை எத்தவத்தில் என்ன பாவ முற்றதோ—35; என் அகம்விட்டு ஓவரும் ஆணவக் கரைஅற அழிக்குமாறு அறியாயோ—48, கலியிற் புண்படக் காண்பது முறையோ—49; கருத்துள் வந்து அந்நாள் கழறல் பொய்ம் மொழியோ—49; எனையோர் வேம்பிற் கசந்து வெறுத்து விடேல்—66, கோம்பிக்கு உருகுமயில் போற் பொன் உள்ளவரை நாடி, அருகும் இழிவால் தளர்ந்தேன் அந்தோ—66 என இவ்வாறு அமையுமிடங்கள் பல குறிப்பிடத்தக்கன,

## உவமை நயங்கள்

இடிநேர் தொனித்தவள வளை—10, அனல்போல் விழித்து நெடுமனைபோல் உறுக்கிவரும் அடல்வேழம்—10, இடைநோவுறப் பலபல கிரிபோல் எழுச்சியுறும் எழில் மாமுலைத் தொகுதி—10, புயல்நேரு மேனி—11, புலிமுற் போய மான்கன்றெனத் தளர—49, ஊசலெனவே திரியும் உள்ளத்தேன்—52, உலோபிகள்போற் துயர்மிகப் பெற்றொடுங் கிடேரே—70, அனைவரும் ஓவியமே போன்றோர்—70, அறுந்த திங்கட்சிறு கீற்றன்ன வாணுதல் ஆயிழையாள்—82, இரலை யன்ன விழிமினார்கள்—80, தென்குருகை ஆழ்வான்நேரி சீரியர்—81, அழல்கண்ட மென்மெழு காகுகின்றாள்—, 89 ஒடிவுறுங்கொல் என்னும் இடைக் கொம்பனையாள்—90 என இவ்வாறு அமையும் உவமைச் சிறப்பு மிக்க பகுதிகள் பலவாம்.

## அணிகள்

இக் கலம்பகத்தில் மடக்கு, சிலேடை முதலிய சொல்லணி களும், உவமை, உருவகம், தற்குறிப்பேற்றம் போன்ற பொருளணிகளும், வழியெதுகை, இயைபு, முரண் ஆகிய தொடை நயங்களும், தொனிப் பொருள்களும் மிகப் பலவாகப் பயின்று வந்துள்ளன, அவற்றை விரிப்பின் விரியும். அவற்றை ஆங்காங்கே உய்த்துணரலாம்.

## சிறப்புக் கூறுகள்

திருமால் அல்லாமல் பிறிது ஒருபரம் இன்று என்பது (7), வைணவர்கள் வடகலை தென்கலை எனப் பிரிவினை கொள்ளாது இணைந்து செயல்பட வேண்டுமென்பது (7). அட்டாக்கரத்தில் எவ்வகைப் பொருளும் இயலும் என்பது (36), உலக வாழ்க்கையின் மாயையிலிருந்து விடுபடவேண்டு மென்பது (15, 54) ஆகியவற்றை இந் நூலாசிரியர் மிகுதியாக இந்நூலில் வலியுறுத்துகிறார்.

பொதுநிலையில் இந்துசமயக் கடவுளிடையே ஏற்றத் தாழ்வு கருதா இயல்பினராகிய இந்நூலாசிரியர் திருமால் பக்தியில் தெளிந்தவராகயிருந்து இந்நூலை யாத்துள்ளார். வைணவப் பெரியோர்களில் நம்மாழ்வாரிடம் பெருமதிப்பும் அவர் அருளிய திருவாய்மொழியில் மிக்க ஈடுபாடும் கொண்ட இந்நூலாசிரியர் அந்த நம்மாழ்வார் வழியிலேயே நம்மையும் நடாத்திச் செல்ல விழைவது இந்நூலை ஆழ்ந்து கற்பார்க்கு நன்கு புலனாகும்.

திருமகள் கேள்வனாகிய திருமாலே இக்கலம்பக நூலுக்குத் தலைவன்; எம்பெருமானின் திருவடிகளுக்குத் தொண்டு செய்ய விழைந்திருப்போர் எவரும் கற்கத் தகுவது இது; எம்பெருமா னின் பெருமைகளைக் கூறி, அவரை உள்ளங்கை நெல்லிக்கனி யைப் போன்று நாம் அறிந்து கொள்ளும்படிச் செய்வது; எம்பெருமானிடம் பக்தியைத் தோற்றுவிப்பதுடன், தோன்றிய பக்தியினை மேன்மேலும் வளர்த்துப் பெருகுவிப்பதாகவும் இந்நூல் அமைந்துள்ளது. இத்தகைய சிறப்புகள் பலவற்றை யுடைய இக்கலம்பக நூல் தமிழ்ச் சிற்றிலக்கிய நூலாராய் வோர்க்கும் வைணவ நூல் ஆர்வலர்களுக்கும் பெருவிருந்தாகும்.

## உரைக்காப்பு

நவநீதகிருட்டிணன் கலம்பக உரையாசிரியர் தாம் இந்நூலுக்கு உரை எழுத முற்பட்டதைக் கூறித் தமக்கு நேரிடத்தக்க இடையூறுகளை நீக்கித் தம் உரைப்பணியை இனிது நிறைவேற்றும் பொருட்டுக் கலைமகளைப் பணிந்து வேண்டுகிறார். இது ஏற்புடைக் கடவுள் வாழ்த்தின் பாற்படும்.

### கட்டளைக் கலித்துறை

திருமறு மார்பன் திகழ்சரிதந் தன்னைத் தெளிந்தாய்ந்த
மருளறு ஆழ்வார் மொழிதமிழா மென்றே மதித்தந்நாள்
குருவருள் பெற்றுயர் தண்டபாணிப் பாவலன் கூறுஞ்சீர்
அருள்நவ நீதன் கலம்பகத் திற்குரை யான்தரலே. 1

(இ-ள்) அழகிய திருமார்பிலே ஒப்பற்ற ஸ்ரீவத்சம் என்ற மறு உடைய நாயகரான திருமாலின் வரலாறுகளை யெல்லாம் உள்ளத் தெளிவோடு உணர்ந்து உலகிற்குக் காட்டியவர்கள் ஆழ்வார்கள். மயர்வற மதிநலம் பெற்றுயர்ந்த இப் பெரியோர்கள் இவ்வுலக மக்களிடையே காணும் அஞ்ஞானமென்னும் மருளாகிய இருளைப் போக்க அவதரித்தவர்கள். இவ்வாழ்வார்கள் மொழிந்ததும் வேதங்களின் சாரங்களானதுமான திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களே உண்மையான தமிழ் என்று அன்றே மதித்தொழுகிய வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வீரகேரளம்புதூரிலே கோயில் கொண்டெழுந்தருளியுள்ள கண்ணபிரானாகிய நவநீதகிருட்டிணன் பேரில் இயற்றியுள்ள கலம்பக நூலிலும் இவற்றைத் தெளிவுறுத்துகின்றார். இத்தகைய அரிய கலம்பக நூலுக்கு அடியேன் உரை எழுத முற்பட்டுள்ளேன்.

**குறிப்புரை** : ஆழ்வார் அருளிய பாசுரங்களைத் 'தமிழ்' என்னும் சிறப்புச் சொல்லாலேயே வழங்குவர் ஆன்றோர்.

பொய்கை பூதம் பேய்உரைத்த பொருளில் தமிழும், புத்தூரில்
ஐயன் விஷ்ணு சித்தன்முனம் அறைந்த தமிழும், கலிகன்றி
செய்த தமிழும், மழிசைக்கோன் செப்பும் தமிழும், ஒப்பிலா
மெய்யன் தொண்ட ரடிப்பொடிமுன் விரித்த தமிழும்,
கொல்லிக் கோன்

செப்பும் தமிழும், திருப்பாணன் செய்ததமிழும், புதுவைநகர்
ஒப்பில் கோதை அன்புரையால் ஓதும் தமிழும், அவரவரைத்
தப்பொன் றின்றிப் பதிகத்துச் சாற்றும் பெயரும் தாமோதித்
தெப்பம் பிறவிக் கடற்கென்னத் தாமும் செய்த செழுந்தமிழ்கள்
(ஸ்ரீ ராமானுஜ வைபவம் 1:57,58)

எனத் தமக்கு நம்மாழ்வார் அருளிய திவ்வியப் பிரபந்தங்கள் அனைத்தையும் 'தமிழ்' என்ற பெயராலேயே நாதமுனிகள் அழைப்பதை வடிவழகிய நம்பிதாசர்வழி அறிகிறோம்.

பொய்யில் பரம கவிகளால் புகலப்பட்ட தமிழிவைகள்
ஐய தெய்வ நன்மாலை அதனால் இதனை நாமெல்லாம்
தெய்வ கானத் தியலிசையில் சேர்த்துக் கலியால் தீதுற்று
நையும் உலகில் பரத்திட வேண்டும் என்றான் நாதமுனி.
(ஸ்ரீ ராமானுஜ வைபவம் 1:67)

என்னும் வடிவழகிய நம்பிதாசர் மொழிக்கேற்பத் தம் நெஞ்சில் ஆழ்வார் மொழிந்த தமிழிடத்தே பற்று மிகக்கொண்ட வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், திவ்வியப் பிரபந்த நுண்கருத்துக்களெல்லாம் பொதிந்து விளங்குமாறு பல்வேறு சந்த அமைப்புகளும் யாப்பும் கொண்ட நூறு பாடல்களாலான இக் கலம்பக நூலை இயற்றியளித்துள்ளார். இந்நூலுக்கான தெளிவுரை இவண் அளிக்கப்பெறுகிறது.

**கழறிடு மன்பர்க் கருளுங் கருணைமால் காப்பதுவாய்க்**
**குழறிடு மென்னுரைப் புன்மையுங் காக்கும் குறையிலவே;**
**பழமறை யாதியாம் மாதவன் சேய்மகிழ்ப் பாமகளே!**
**தொழவருள் வாணியே! சொற்பொருள்**
**வாக்கருள் சொல்மகளே! 2**

(இ-ள்) திருவெட்டெழுத்து மந்திரத்தை எப்பொழுதும் மறவாமல் சொல்லுகின்ற அடியார்களுக்கு எல்லா நலன்களையும் அருளும் கிருபை மிகுந்த திருமாலே இவ்வுரைக்கும்

காப்பாவார். சிறு குழந்தையைப் போன்று மொழித் தெளிவின்றித் தடுமாறும் அடியேனுடைய குறை நிறைந்த உரைகளையெல்லாம் காக்கும் தெய்வமாகிய அத் திருமாலே காத்தருளுவார் எனத் துணிந்து இதை எழுத முற்பட்டுள்ளேன். பழமையான வேதங்களெல்லாம் தந்தருளிய எம்பெருமானாகிய அவர் தம் உந்திக்கமலத்திலே தோன்றிய நான்முகன் மனம் மகிழும் படியாக விளங்கும் பாமகளும், வேண்டுவார்க்கருளும் கலைமகளும், மொழிக்கு முதல்வியுமான இறைவியே, அடியேனுடைய இவ்வுரைப் பணிக்குத் துணையாக நின்று பொருள் நலம் சிறக்கும் வாக்குகளை நல்க வேண்டுமென உம்மைப் பணிந்து வணங்குகின்றேன். நல்வாக்கு அருளுவாயாக.

**குறிப்புரை :** மாதவன் சேய் என்றது திருமாலின் குழந்தையான பிரமனைக் குறித்தது. மாதவன் என்றது உரையாசிரியர் பெயரையும் குறித்தது. குழறிடும் உரை என்பதற்கேற்ப மாதவன் சேய் (குழந்தை) என அமைந்தது. உரையாசிரியர் எப்பொழுதும் மகிழ்ந்து ஏத்துகின்ற கலைமகளே எனினுமாம்.

உரைக்காப்புச் செய்யுள்களாகிய இவை இரண்டும் நிரையசை முதலாய் ஒற்றொழித்துப் பதினேழெழுத்துப் பெற்றுவந்த **கட்டளைக் கலித்துறை** களாம்.

# வீரகேரளம்புதூர்
# நவநீதகிருட்டிணன் கலம்பகம்

## காப்பு

காப்பு என்பது பாதுகாத்தல். அது இங்குப் பாதுகாத்தற் குரிய தெய்வத்தின் வணக்கத்திற்கு ஆகுபெயர். நூலாசிரியர் தமக்கு உண்டாகத்தக்க இடையூறுகளை நீக்கித் தமது நூலினை இனிது நிறைவேற்றும் பொருட்டுச் செய்யுந் தோத்திரம் இது. இக் காப்பு, வழிபடு கடவுள் வாழ்த்து, ஏற்புடைக் கடவுள் வாழ்த்து என இருவகைப்படும். திருமாலின் திருவவதாரமான கண்ணனின் திருவருட்சிறப்பைக் கூறும் நூலாகிய இக் கலம்பகத்திற்கு எல்லா இடையூறுகளையும் நீக்கியருளும் விநாயகரைக் காப்புக் கடவுளாகக் கூறுகிறார் ஆசிரியர். எனவே, இது வழிபடுகடவுள் வாழ்த்தின் பாற்படும். புறப்பொருள். பாடாண்திணை.

## நேரிசை வெண்பா

**சீரைத் திருவைச் செழிப்பைப் பொழிற்பெருக்கைக்**
**காரைப் பொருந்திக் களிகாட்டும்—வீரைக்**
**கலம்பகம்பு கன்றுகண்ணன் கான்மலரிற் சூட்ட**
**அலம்பகம்பு கானைதுணை யாம். 1**

சீரை திருவை செழிப்பைப் பொழிற்பெருக்கை—பேரழகும், தெய்வீகமும், செல்வச் செழிப்பும், மிகுதியான பொழில் களும் நிறைந்து

காரைப் பொருந்தி களிகாட்டும்—எப்பொழுதும் நீர்கொண்ட மேகங்கள் சூழ்ந்து மகிழ்ச்சியைத் தருகின்ற

வீரைக்கலம்பகம் புகன்று—வீரை என்னும் வீரகேரளம்புதூரில் கோவில் கொண்டெழுந்தருளியுள்ள நவநீதகிருட்டிணன் மீது இக்கலம்பக நூலை மொழிந்து

கண்ணன் கால்மலரில் சூட்ட—கண்ணபெருமானின் திருவடித் தாமரையில் சேர்ப்பிக்க

அலம்பு அகம் புகு ஆனை துணை ஆம்—தூய உள்ளங்களில் குடியிருக்கும் விநாயகர் துணையாவார்.

## குறிப்புரை

உலகில் அனைவரும் தாம் மேற்கொள்ளும் செயல்கள் அனைத்தும் நிறைவெய்துதல் வேண்டும் என்றே விரும்புவர். அதற்குத் தத்தம் ஆற்றலின் துணைமட்டுமே போதாது, 'தோன்றாத் துணையாக நின்று அனைத்தையும் இயங்கிவரும் தெய்வத்தின் துணையும் வேண்டும்' என்றும் கருதுவர். சான்றோர்கள் தாம் செய்யப்புகும் நூற்களினுள்ளும் முதற்கண் கடவுள் வாழ்த்துச் செய்யுட்களைச் செய்து, தாம் வழிபடுங் கடவுளையேனும் தாம் செய்யும் நூற்கு இயைபுடைய கடவுளை யேனும் போற்றி, அதன் பின்னரே நூலைத் தொடங்குவர்.

வேதங்களை வகுத்தவரும் புராணங்களை அருளிச் செய்த வரும் ஆகிய வியாசர் தாம் கண்ணனின் பெருமையைக் கூறும் பாரதம் எழுத விநாயகரையே வேண்டி அவர் எழுதப் பாரதம் கூறினார். காக்கும் கடவுளாகிய திருமாலும் தொழுது போற்றத் தக்கவர் விநாயகர். தன்னை வணங்கினார்க்கு விக்கினத்தை நீக்குபவர், தனக்குமேல் நாயகரிலாதவர் என்னும் பொருளி லேயே இவருக்கு இப்பெயர் தோன்றிற்று. எனவே, கண்ணன் பெயரிலான இக்கலம்பக நூலானது விநாயகர் துணையால் சிறப்புடன் நிறைவேறும் என ஆசிரியர் குறிப்பிடுவதன் மூலம் தான் ஒரு கருவி மாத்திரமே என்பதை உணர்த்துகிறார்.

அலம்புஅகம்— (அன்பால்) கழுவப்பட்ட உள்ளம்; தூய உள்ளம்.

இது, இருவிகற்பத்தால் வந்து நாளென்னும் வாய்பாட் டான் முடிந்த ஈராசு இடையிட்ட **நேரிசை வெண்பா.**

### கட்டளைக் கலித்துறை

**நிலம்பகச் சம்மதி யாதார் நெருங்கும் நெடுங்களத்தில்**
**இலம்பகம் ஈரொன்ப தால்தன்னில் வேறில்லை என்றுணர்த்தி**
**வலம்பகப் பார்த்தனை யாண்டானை வீரையில் வாழ்த்துதமிழ்க்**
**கலம்பக நூற்குநம் மாழ்வார்முன் னாம்பலர்காவலுண்டே. 2**

நிலம்பகச் சம்மதியா தார்—பாண்டவர்களுக்குச் சேரவேண்டிய நாட்டைப் பகிர்ந்தளிக்க மறுத்த துரியோதனாதிகள்

நெருங்கும் நெடுங்களத்தில்—நெருங்கியிருக்கும் பெரிய போர்க் களத்தில்

இலம்பகம் ஈரொன்பதால்—பதினெட்டு அத்தியாயங்களை யுடைய கீதையை உபதேசித்து

தன்னில் வேறு இல்லை என்று உணர்த்தி—உலகத்தில் இறைவனாகிய தன்னைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்பதை எடுத்துக்காட்டி

வல் அம்பு அக பார்த்தனை ஆண்டானை— வெற்றிச் சிறப்பும் வலிமையுமிக்க அம்பு எய்வதில் பெருமிதம் கொண்ட அருச்சுனனைக் காத்தருளிய கண்ணபெருமானை

வீரையில் வாழ்த்து தமிழ்க் கலம்பக நூற்கு —வீரகேரளம்புதூரில் வாழ்த்தி வணங்கும் இத் தீந்தமிழ்க் கலம்பகமாகிய இலக்கியத்திற்கு

நம்மாழ்வார் முன்னாம்பலர் காவல் உண்டே—சடகோபராகிய நம்மாழ்வாரும் மற்ற ஆழ்வார்களும் ஆசாரியர் அனைவரும் காவலாக இருப்பார்கள் என்பது உறுதி. ஏகாரம்-தேற்றம்.

## குறிப்புரை

பாரதப்போரில், பாண்டவர்கள் மற்றும் துரியோதனாதியர் ஆகிய இருதரப்பாரும் கண்ணபெருமானின் துணையை வேண்டினர். துரியோதனன் கண்ணபெருமானின் சேனையின் உதவியையே கேட்டுப் பெற்றான். ஆயின், அருச்சுனனோ தனி ஒருவனான கண்ணபெருமானின் துணையை மட்டுமே வேண்டினான். கடவுள் நமக்குத் துணையாக இருக்கும்பொழுது மற்றவை என்ன தீமை செய்துவிடும்? கடவுள்துணை இல்லாது போய்விட்டால் அனுகூலமான மற்றவையெல்லாம் இருந்துதான் நமக்கு என்ன நன்மை செய்துவிடும்? உலக வாழ்க்கையில் மிகவும் சிக்கலான கேள்விகள் இவை. மகாபாரதப் போரின் முடிவே இவ்விரண்டு கேள்விகளுக்கும் விடை தருகிறது.

தாம் படை எதையும் எடுத்துப் போர் புரிவதில்லையென்றும், பார்த்தனுக்குத் தேர் ஓட்டும் பணி புரிதலை மட்டும்

வைத்துக் கொள்வதென்றும் இசைந்த கண்ணபிரான் அவ்வாறே அருச்சுனன் தேரைச் செலுத்தினார்.

"மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும்
பலர்குலைய நூற்றுவரும் பட்டழியப், பார்த்தன்
சிலைவலையத் திண்தேர்மேல் முன்னின்ற
செங்கண் அலவலை......" (பெரியா. திரு. 2-1-2)

என்பார் ஆழ்வார்.

"உலகெலாங் கண்ண னன்றி யொன்றிலை யுணருங் காலைக்
கலவமா மயிலெ ருத்திற் கவின்கனிந் தொழுகு மேனி
மலர்துழா யலங்கன் மாலை மாயனுக் காற்று பூசை
அலர்தலை யுலகுக் கெல்லா மாற்றிய பூசை யாமால்"
(பாக. 10-41-85)

என்னும் மொழிக்கேற்ப யாவையும் தானாகி நிற்கின்ற கண்ண பெருமானைத் துணையாக வேண்டிப் பெற்ற அருச்சுனன் வெற்றியைப் பெற்றான். இதை உணர்த்துவதே பகவத் கீதை.

இத்தகைய எம்பெருமானின் திவ்விய குணங்களில் ஈடு பட்டுப் பாசுரங்கள் பாடித் துதிக்கும் ஆழ்வார்கள், அப்பெரு மானது தோத்திரமாகத் தாம் செய்யும் கலம்பகத்திற்கு நேரும் இடையூறுகளை நீக்கிப் பாதுகாப்பாரென்று கொண்டு அவர் களை இங்கு நினைவுகூர்கிறார் ஆசிரியர்.

இவ்வகையில் ஆழ்வார்கள் பன்னிருவரை முன்னதாக வணங்கிப் போற்றுதல் வைணவ மரபு.

வேதந் தொகுத்துத் தமிழ்ப்பாடல் செய்தவிம
லன்பொய்கை
பூதன் மயிலையர் கோன்புகழ்ச் சேரன்புத்
தூரன்தொண்டர்
பாதந் தருந்துகள் மாமழிசைக்குமன் பாணன் மங்கை
நாதன் மதுரகவி கோதைபா தங்கள் நண்ணுதுமே.
(திருவ. கலம். கா. 1)

எனப் பிள்ளைப்பெருமாளையங்கார் தம் திருவரங்கக் கலம் பகத்திலும்,

முதலாழ்வார் மூவர்தொண்டர் பாதப் பொடியார்
மதுரகவி மாறன் மழிசைக்கோ—விதவார்
குலசே கரன்கோதை பட்டர்பிரான் பாணன்
கலியன் திருவடிகள் காப்பு. (அழ. கலம். கா. 3)

என அழகர் கலம்பகத்திலும் ஆழ்வார்கள் பன்னிருவரைக் காப்பாகப் பாடி யிருப்பதைக் காணலாம்.

திருமாலைப் போற்றும் இலக்கியத்திற்கு ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் வாழ்த்துதல் ஏற்புடைக் கடவுள் வாழ்த்தின் பாற்படும். திருமாலடியார்களை வணங்குவதும் அவர்தம் துணையை நாடுவதும் பெரும் பேறு எனக் கருதுபவர் இவ் வாசிரியர்.

அண்டபிண்ட சராசரங்க ளத்தனையும்
நாரணனென் றறிவால் தேறிக்
கொண்டவரெல் லாநமது குருவாவார்;
ஏனையர்நங் குமாரர் போல்வார்;
சண்டனைக்கொன் றானுமலர்ப் பிரமனுநேர்
பாகதத்தர் சரணப் போதின்
வண்டனையேன் என்தலைமீ தவையுகுக்குந்
தாதுமுற்றும் வாய்ந்த துண்டே.

(திருவ. திருவா. பாயிரம். 4)

என்னும் தெளிவான கருத்துடையவர் இவர். அதன் காரண மாகவே முதற்கண் ஆழ்வாராதிகளைப் போற்றுகின்றார்.

நம்மாழ்வாரை முதலிற் கூறியது, திருத்துழாய் அங்குரிக்கும் போதே பரிமளத்தோடு தோற்றுதல் போல ஞானமாகிய பரிமளத்தோடு திருவவதரித்து மற்றை ஆழ்வார்களினும் மேம் படுதலாலென்க. பலர் என்றது ஆழ்வார்களைத் தொடர்ந்து வந்த வைணவ ஆசாரியர் பலரும் என்னும் பொருளிலாகும். ஆழ்வார்—பகவானுடைய மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்திலே முழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவர்.

வாழ்த்து, வணக்கம், தலைமைப் பொருளுரைத்தல் என்ற மங்களங்களுள் இது வாழ்த்தின்பாற்படும்.

நூல் செய்தவர்க்கு மாத்திரமேயன்றி, இந்நூலைப் படிக்கத் தொடங்குவோர் முதலியோர்க்கும் யாதோரிடையூறு மின்றி இந்நூல் முற்றப் போதற்கும் இக்காப்பு உளப்படுத்துவதாம்.

இதில், திரிபு என்னும் சொல்லணி பயின்று வந்தது.

இது. நிரையசை முதலாய், ஒற்றெழுத்து நீங்கிப் பதினேழு எழுத்துப் பயின்று வந்த **கட்டளைக் கலித்துறை.**

(**அவையடக்கம்**)

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

**எம்பெருமான் அருளாலோ, திருவுந்தித்**
**தாமரைமீ திருப்பான் சேர்வென்**
**கொம்பெழிற்கட் கடையாலோ, எனதுமனக்**
**களிப்பாலோ, கொடியார் கூட்டத்து**
**அம்பெயுங்கைச் சிலைஇருத யாலயப்பேர்**
**மகிபாலன் அதிட்டத் தாலோ**
**கம்பெகினத் தொடுமயங்கும் வயல்வீரைக்**
**கலம்பகநூல் கலிக்கு மாறே.** 3

எம்பெருமான் அருளாலோ—திருமாலின் திருவருள் காரணமாகவோ

திருஉந்தித் தாமரை மீதிருப்பான்சேர் வெண்கொம்பு எழில்கண் கடையாலோ—திருமாலின் திருவுந்தித் தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனின் தேவியாகிய கலைமகளின் அழகிய கடைக்கண் பார்வையின் காரணமாகவோ.

எனது மனக் களிப்பாலோ—(கண்ணன் திருஅவதாரச் சிறப்பையும் பேரருளையும் நினைந்து நினைந்து அகம்மிக மகிழ்ந்த) அடியேனுடைய உள்ள மகிழ்ச்சியின் காரணமாகவோ

கொடியார் கூட்டத்து அம்பு எய்யும் கைச்சிலை இருதயலாயப் பேர் மகி பாலன்—(நீதியும் நேர்மையும் தவறிய) தீயோர் கூட்டத்தின்மீது அம்புகளைப் பொழியும் வில்லினைக் கையிலேந்திய இருதயாலய மகிபாலன் என்னும் மன்னனின்

அதிட்டத்தாலோ—நல்வினையின் காரணமாகவோ.

கம்பு எகினத்தொடு மயங்கும் வயல் வீரை—சங்கும் அன்னமும் அருகருகே பொருந்தி வாழும் வயல்கள் நிறைந்த வீரகேரளம்புதூர் (மாநகரில் கோவில் கொண்டுள்ள கண்ணபெருமானுக்குரிய)

கலம்பக நூல்—இக் கலம்பக இலக்கியம்

கலிக்குமாறே—ஒலிக்கத் தொடங்குகிறது

## குறிப்புரை

இக்கவியால் நூலாசிரியர் இந்நூல் தோன்றுதற்குரிய காரணம் யாதோ என வியந்துறுகிறார். இதனால், இது என் செயலல்ல; இறைவன் இபக்க இந்நூல் என்வழி ஒலிக்கிறது என்கிறார். எனவே இது அவையடக்கமாயிற்று.

எம்பெருமான் என்றது இங்கு, மற்றவர் பேரும் மதியாது அரியாம் திருமாலின் மலரடிக்கு உற்றவரையே தனக்குற்றவ ரென்று கொண்ட உத்தமரும் நற்றவத்தாற் போற்றுபவரு மாகிய இராமாநுசரையும் குறிக்கும்.

ஆளவந்தாரது அபிமான சீடரான திருக்கோட்டியூர் நம்பி நலந்தருஞ் சொல்லாகிய 'ஓம் நமோநாராயணாய:' என்ற திருமந்திரத்தின் அர்த்த விசேடங்களை இராமாநுசருக்கு உபதேசித்தருளினார். அப்பொழுது, இந்த ரகிசியார்த்தத்தை எவருக்கும் வெளியிடாதிருக்க வேண்டுமென்று, ஆசாரியனாகிய நம்பிகள் இராமாநுசருக்குக் கட்டளையிட்டார். ஆயின், மந்திரோபதேசம் பெற்ற மறுநாள் இராமாநுசர் திருக்கோட்டி யூரிலுள்ள வைணவர்கள் யாவரையும் அவ்வூர்ப் பெருமாள் கோவிலில் கூடும்படிச் செய்து திருக்கோட்டியூர் நம்பியின் கட்டளையை மீறித் தான் பதினெட்டு முறை நடந்து உபதேசம் பெற்ற திருமந்திரத்தை ஓலை நறுக்குகளில் எழுதி எல்லோருக்கும் வழங்கிப் பகிரங்கமாய் மந்திரதானம் செய்தார். ஆசாரியரின் கட்டளையைத் தாம் மீறியது குற்றமே என்பதை யும் அவரிடமே ஒப்புக்கொண்ட இராமாநுசர் தம் செயலுக்கான காரணத்தையும் கூறினார்.

"அடியேன் விருப்பு வெறுப்பற்று யாவரையும் சமத்துவமாக எண்ணிக் கருணை மேலீட்டினால் ஸ்ரீமந் நாராயணனின் திருமந்திரத்தை ஆன்ம கோடிகள் யாவரும் உச்சரித்துப் பிறப்பிறப்பென்னும் பெருந்துயரை யொழித்து நற்கதி யடைந்து நலம்பெறும் பொருட்டு அங்ஙனம் துணிவு கொண்டு அதனை எவர்க்குமெடுத்தோதினேன்" என ஆசாரியரிடம் தெரிவித்தார் இராமாநுசர். இப்படிப்பட்ட நல்லெண்ணமும் நற்சிந்தையும் நமக்குண்டாகவில்லையே என மனம் வருந்திய நம்பிகள் இராமாநுசர்பால் கருணை கூர்ந்து பலவாறு வாழ்த்தி 'எம்பெருமானே நீர்' என அவரை அணைத்துக் கொண்டார். அது முதற்கொண்டு இராமாநுசருக்கு 'எம்பெருமானார்' என்ற திருப்பெயர் வழங்கலாயிற்று.

திருமாலின் திருவருள் அனைவருக்கும் பொது என்ற உண்மையை நிலைநாட்டிய எம்பெருமானாரின் சேவையா லேயே வைணவ நெறியைப் பலரும் உணரத்தலைப்பட்டனர். எனவே, எம்பெருமானாரின் அருளால் அவர்தம் அடியார் கூறும் திருவருட் சிறப்பாலேயே தானும் நூலை எழுதப் புகுந்த தாக ஆசிரியர் உணர்த்தும் நயம் போற்றத்தக்கது.

திருவுந்தித் தாமரை மீதிருப்பான்சேர் வெண்கொம்பு என்றது கலைமகளாகிய சரசுவதியை. இராமாநுசராகிய எம்பெருமானார் அவர்கள் வடநாட்டுத்தலப் பயணம் மேற் கொண்டபொழுது, பௌத்தர் முதலானோர்களை வாதில் வென்ற பிறகு காஷ்மீரம் சென்று பட்டிமண்டபம் என்ற சரசுவதிபீடத்திற்கு எழுந்தருளினார். சகலகலாவல்லியான சுரசுவதியைத் தரிசித்தார். அப்பொழுது சரசுவதி தாமே வாயிற்கதவைத் திறந்துகொண்டு எதிரே புறப்பட்டு வந்து எம்பெருமானாரைப் பார்த்து, "தஸ்யயதாக ப்யாஸம் புண்டரீக மேவமக்ஷிணி" என்ற சுருதிக்குப் பொருள் கேட்க "நீரைத் தன்னுடைய கிரணத்தாற் கவர்கின்ற சூரியனால் மலர்த்தப் பட்ட செந்தாமரைப்பூவில் முன்னிதழும் பின்னிதழும் அல்லாத நடுவிதழ் போலப் புடைபுரந்து மிளிர்ந்து செவ்வரி யோடி நீண்ட அப்பெரியவாய கண்கள்" என்ற திருமாலின் திருக்கண்களுக்கு உவமை கூறிப் பொருள் விளக்கினார் எம்பெருமானார். இதைக் கேட்ட சரசுவதி மகிழ்ந்து பேரானந்தம் பொருந்திய பாஷ்யத்தைத் தம் முடியில் சூடி,

எம்பெருமானாருக்கு ஸ்ரீபாஷ்யகாரரென்று திருநாமஞ்சாத்தி அவருக்கு அயக்கிரீவரையும் ஆராதனம் செய்யும்படி கொடுத்து மிகவும் புகழ்ந்து கொண்டாடினாள் என்பது வரலாறு.

இவ்வாறு இராமாநுசர் அருளும்முன்பு, வைணவத்தை இகழ்ச்சிப் பொருளுடனேயே பிற சமயத்தார் வழங்கி வந்தனர். கலைமகளாகிய சரசுவதியே நேரில்வந்து எம்பெருமானாரின் பொருள் விளக்கங்களை ஏற்று அங்கீகரித்த பின்பே வைணவ சமயம் தழைத்தோங்கத் தலைப்பட்டது. இது சரசுவதியின் கடைக்கண் அருள் என்பதாலேயே ஆசிரியர் இவ்வாறு கூறினார்.

எனது மனக்களிப்பாலோ என்றது ஆசிரியர் தாம் திருமால் சமயமாகிய வைணவத்தை உணர்வு பூர்வமாக அறிந்து ஏற்றுக் கொண்டதாகும். இந்நூலாசிரியர் தம் இளம் பருவம் முதலே வேலாயுதப் பூசையை மேற்கொண்டனர். அக்காலத்தில் வைணவ சமயத்தை வேற்று மனப்பான்மையுடன் கருதிப் பற்றற்றிருந்தனர். அந்நிலையில் திருவாய்மொழியைக் கருத்திற் கொண்டு படித்துணர்ந்தார். அதனால் தன் தெய்வம் ஒன்றே உயர்வு, ஏனையவை அப்படியன்றென்று கருதும் பேதநிலை நீங்கிச் சமயம் யாவும் கடவுள் ஒன்றிற்கே உரியதென்று சமரச நிலையுற்றனர். இதை இவர்தம் சுய சரிதையாகிய குருபரத்துவ நூலில் விட்டுணுதரிசனச் சருக்கத்தில்,

"விண்டுதூ டனைக் கொடியரின் ஒருவனா
விளங்கியஎனை, அன்னோன்
பண்டு செய்தவப் பயன்கொடோ அல்லது
பழுதில்தண் அருளாலோ,
தொண்டு செய்பவர் அடியவர்க் காளெனும்
துணிவுடைக் குருகூரான்
கண்டு கூறிய தமிழ்மறைப் பொருள்கொடு
களிப்புறப் புரிந்தானே."

என விளக்குகிறார்.

சரசுவதியின் கடைக்கண் அருளைப் பெற்ற எம்பெருமானார் திருவாய்மொழியின் அரும்பொருள்களை விளக்கி

யுரைக்கத் திருக்குருகைப்பிரானை நியமித்ததன்பின் திருவாய்மொழிக்கான வியாக்கியானங்கள் பெருகின. அத்தகைய வியாக்கியானங்களைக் கற்றுணர்ந்ததனால் ஆசிரியர் உள்ளத்திலுண்டான மகிழ்ச்சிப் பெருக்கினாலேயே இந்நூலை எழுதத் தொடங்கியதாகவும் ஆசிரியர் இங்கு உணர்த்துகிறார் எனலாம்.

அதிட்டம் என்பது அத்ருஷ்டம் என்னும் வடசொற்றிரிபு. நல்வினைப்பயன் என்பது பொருள். இருதயாலய மகிபாலன் என்னும் மன்னன் செய்த தவப்பயனாகத் திருமாலுறையும் வீரகேரளம்புதூரினை ஆட்சி செய்வதும், அத்தலக் கடவுளாகிய கண்ணபெருமானின் புகழைப் பாடுவதற்குத் துணை நல்குவதும் பற்றிக் கூறுகிறார் ஆசிரியர்.

ஆசிரியர் பல்லாயிரக்கணக்கான பனுவல்களைப் பாடும் வண்ணம் கலைமகளின் கடைக்கண் அருளைப் பெற்றவர் என்பதும், எம்பெருமானின் திருவருளை நன்குணர்ந்து தெளிந்தவர் என்பதும் இவ்வவையடக்கப் பாடலால் விளங்கும். தண்டாயுதபாணியாய்ச் சைவ வேடம் பூண்ட இவர் திருமாலின் புகழ் பாடும் நூலினை எழுதப் புகுந்ததற்கான காரணத்தையும், தம் தகுதியையும், சமயங்கடந்த ஞானத்தெளிவினையும் முதற்கண் எடுத்துரைத்து உள்ளுறையாக இப்பாடலை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கது.

இது, முதல் நான்கு சீரும் காய்ச்சீர்களும், மற்றையிரண்டும் மா, தேமாச் சீர்களுமாகிய **அறுசீராசிரிய விருத்தம்.**

# நூல்

## மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

### தரவுகள்

1. திருமகள்பூ மகளொடுதன் சேவடிப்பூக் களைத்தமது
மருமலர்க்கை யால்வருட மாசுணப்பா யலின்மீது 1

பாற்கடலிற் பொய்த்துயில்கூர் பான்மையைப்பல் வானவரும்
தோற்கஅடர் வார்க்கறுவும் தொழில்நிமித்தம் விடுத்தெழுந்து 2

தேவகிதன் மகவாகித் தீதில்அருட் தாதைகையால்
பாவமும்கண்டு ஓல்கமிகப் பழுத்தஇருட் பாநாளில் 3

ஆயர்தம்மை ரிடைஎய்தி. யசோதையென்னும் அருந்தவத்து ஓர்
தாயகமிக் குவப்பெய்தத் தவழ்ந்தினிதுஆ டியபருவத்து 4

இருமருதுஅட்ட டமைகருதி எண்ணின்மருது ஏற்று அவற்றின்
திருநிழல்வேட் டுற்றஅரன் சிந்தைநைதல் தீர்க்கினன்றி 5

முன்னாள்பிச் சொழித்தாண்ட முதுக்குறைக்கோர் குறையென்ன
உன்னாரங் தமிழ்நாட்டின் ஒண்முகமே போன்று ஒருக்கால் 6

உற்றார்க்கும் தீவினைதீர்த்து ஒழுகுபுனற் பெருக்கு ஓவாச்
சிற்றாற்றின் வடபாலில் திகழ்விரை நகர்நாப்பண் 7

அருள்மலிகண் ஆதியவாம் அவயவம்தோய் தருமருதின்
பெருநிழற்பால் நின்றருள்எம் பெருமானே பேசக்கேள்! 8

## அராகங்கள்

அருமறை முதலிய பலகலை நுவலென
அயனைமுன் அலர்மகள் அயர்வுற அருளினை, 1

தெருள்மலி தருசிவன் முதலிய கடவுளர்
செயசெய எனவழி படமிக நிலவினை, 2

ஒருபொருள் இருபொருள் பலபொருள் எனஇக
லுறுபல சமயமும் அருள்பொது நிலையினை, 3

கருமுகில் மிசைவரு மகபதி முதலினர்
கடலமு துணமகள் உருவமும் மருவினை 4

## தாழிசைகள்

ஆனையொன்று மூலமென அந்நாள் அழைத்திடப்போய்
ஏனைவிண் ணோர்நாண இடங்கர்நெடு நாவறுத்தாய்! 1

தந்தைசெய்யுந் தீமையிடைத் தட்டழிந்த தானவச்சேய்
சிந்தைகளி கூரவொரு சீயமாச்சென் றளித்தாய்! 2

பொல்லார்தம் புன்சபையிற் புண்படும்ஓர் பூவைஉய்ய
எல்லாரும் கண்டுமெச்சும் எண்ணில்கலைப் பேறீந்தாய்! 3

கார்கடல்நீர் முற்றும்அறக் கைச்சிலைஒன் றாற்கணக்கில்
வார்கணைமா மாரிபெய்தும் வல்லரக்கர் வாழ்வழித்தாய்! 4

ஆன்அனந்தம் இன்பமுற அந்தரத்துஆர்த் துப்பொழிந்த
வானமுற்றும் நாணமெய்த மாமலையொன் றேந்திநின்றாய்! 5

மீனாமை ஏனமுதல் வெவ்வே றுருச்சமைந்துற்று
ஆனாத கீர்த்தி அளவிறந்த கோடிகொண்டாய்! 6

நாற்சீர் அம்போதரங்கம்

பொதுவமி னார்தரு போகம் ஆர்ந்தனை!
கதுமென மாதொடு காடு சேர்ந்தனை!
அதுஇதுஎ னாதவர் ஆவி ஆர்ந்தனை!
மதுமுத லோர்நெடு மார்பு வார்ந்தனை!

முச்சீர் அம்போதரங்கம்

ஆர ணத்தொகை நாட்டினை;
கார ணத்தனி வீட்டினை;
அன்பர் தம்புடை மெயினை;
இன்ப துன்பமும் ஆயினை;

இருசீர் அம்போதரங்கம்

உளவ றிந்தனை;
துளவ ணிந்தனை;
உண்மை உற்றனை;
திண்மை பெற்றனை.

தனிச்சொல்

எனலால்

ஆசிரியச் சுரிதகம்

நின்மாட் டொன்று நெடிதுஇரக் கின்றேன்
என்மாட் டுன்னருள் இன்றுகொல்? உண்டுகொல்?
உன்னுருக் கொண்டென் உள்ளகத்து ஒருபொருள்
பன்னும் மாற்றம் பலவுள, ஆயினும்
ஒன்றும்இவ் வுலகத்து ஒளிரக் காண்கிலன்;
என்றும்அன் னவைபொய்த்து ஏகினும் ஏகுக!
மாதவப் பயிர்பொதி வன்களை யென்ன
ஏதமிக் காற்றும் இருங்கலிக் கஞ்சிப்
பரந்தநீர்ப் புணரிப் பார்மிசை பலவாறு
இரந்தலைந் தேங்கி இடையா வண்ணம்
பன்முனை வயிரப் படையான் பயந்த

விண்மகன் ஆளென வெள்காது ஓதி
நின்ற ஊரில் நீயும் நானும்
நன்றறிந் துய்ந்த நடுவர்பற் பலரும்
அறிதர நிகழ்ந்தபே ராடல்
நெறிவழி பிழையா நிசப்பட விளக்கே.

('திருமகள்' முதல் 'பேசக்கேள்' வரை)

திருமகள் பூமகளொடு—பெரிய பிராட்டியாகிய இலக்குமி மற்றும் பூமிப்பிராட்டியாரோடு

தன் சேவடிப் பூக்களை—செந்தாமரை மலர் போன்ற சிவந்த திருவடிகளை

தமது மருமலர்க் கையால் வருட—தமது மணம் மிக்க மலர் போன்ற திருக்கைகளால் தடவும்படி

மாசுணப் பாயலின் மீது—ஆதிசேடனாகிய படுக்கையின் மேலே

பாற்கடலில் பொய்த்துயில் கூர் பான்மையை—திருப்பாற் கடலின் நடுவிலே அறிதுயிலாகிய யோக நித்திரை கொள்ளும் தன்மையை

பல்வானவரும் தோற்க அடர்வார்—தேவர்கள் பலரும் தோற் கும்படியாக நெருங்கும் அசுரர்களை

கறுவும் தொழில் நிமித்தம்—அழியச் செய்வதற்காக

விடுத்தெழுந்து—விட்டு எழுந்து

தேவகிதன் மகவாகி—தேவகியின் பிள்ளையாகத் தோன்றி

தீதில் அருட் தாதை கையால்—குற்றமற்ற மெய்ஞ்ஞான முடையவராகிய வசுதேவர் கையால் ஏந்த

பாவமும் கண்டு ஒல்க மிகப்பழுத்த இருட்பா நாளில்—மகா பாவங்களும் கண்டு நாணமுறும்படி மிகக் கருமையான இருள்சூழ்ந்த இரவில்

ஆயர்தம் ஊரிடை எய்தி—இடையர்கள் வாழும் ஆயர்பாடி யாகிய கோகுலத்தை அடைந்து

யசோதை யென்னும் அருந்தவத்து ஓர் தாய் /அகம் மிக்குவப் பெய்த—(இடையர் தலைவனாகிய நந்தகோபனுடைய

மனைவியாகிய) யசோதை என்னும் அருமைத்தாயின் உள்ளம் மகிழும்படியாக

தவழ்ந்தினிது ஆடிய பருவத்து—அவளிடையே தவழ்ந்து விளையாடிய காலத்தில் (உரலில் கட்டியபொழுது)

இருமருது அட்டமை கருதி—இரண்டு மருத மரங்களை ஒடித்து வீழ்த்தியதைக் கருத்தில்கொண்டு

எண்ணின் மருது ஏற்று—பல தலங்களில் மருதமரத்தைத் தலவிருட்சமாகக் கொண்டு

அவற்றின் திருநிழல் வேட்டுற்ற அரன்—அவற்றின் நிழலில் விரும்பித் தங்குகின்ற சிவ பெருமான்

சிந்தை நைதல் தீர்க்கினன்றி—தன் மனவருத்தத்தைத் தீர்க்காவிடில்

முன்னாள் பிச்சொழித்தாண்ட முதுக்குறைக்கோர் குறை என்ன உன்னா—முற்காலத்தில் இரந்துண்ட இழிநிலையை நீக்கிய பேரறிவின் அருளிற்குக் குறைவு உண்டாகும் என நினைத்து

நம் தமிழ்நாட்டின் ஒண்முகமே போன்று—நம்முடைய தமிழ கத்தின் ஒளிமிக்க முகமே போல

ஒருங்கால் உற்றார்க்கும் தீவினை தூர்த்து—ஒருமுறை வந்து அடைந்தவர்க்கும் பாவங்களை ஒழித்து

ஒழுகுபுனல் பெருக்கு ஓவாச் சிற்றாற்றின்—வற்றாத நீர்ப் பெருக்கினை எப்பொழுதுமுடைய சிற்றாற்றுக்கு (சித்ரா நதிக்கு)

வடபாலில் திகழ் வீரை நகர் நாப்பண்—வடக்கே திகழும் வீரை என்னும் நகரத்தின் நடுவே

அருள்மலி கண் ஆதியவாம் அவயவம் தோய்தரு மருதின் பெரு நிழற்பால் நின்றருள்—அருள் நிறைந்தும், கணு முதலிய உறுப்புக்கள் பெற்றும் விளங்கும் மருத மரத்தின் பெரிய நிழலிலே எழுந்தருளியுள்ள

எம்பெருமானே—எங்கள் இறைவரே!

பேசக்கேள்—அடியேன் விண்ணப்பிப்பதைக் கேட்டருள்வீராக

## குறிப்புரை

கண்ணன் தேவகியின் வயிற்றில் பிறந்ததும், வசுதேவரால் கோகுலம் அடைந்து யசோதைபால் வளர்ந்ததும், மருதிடைத் தவழ்ந்ததும் ஆகிய கண்ணனின் இளம்பருவ வரலாறுகளைக் கூறி, கண்ணன் மருத மரத்தின் நீழலில் கோவில் கொண்டதற்கு ஒரு காரணத்தையும் கற்பித்து, வீரை நகரில் எழுந்தருளியுள்ள அப்பெருமானை ஆசிரியர் இம்முதற் பாடலில் முன்னிலைப்படுத்துகிறார்.

திரு—கண்டாரால் விரும்பப்படுந்தன்மை. திருமகள்—திருவாகிய மகள், ஸ்ரீதேவி. பூமகள்—நிலமகளாகிய மகள் பூதேவி: இருபெயரொட்டு. சேவடி—சிவந்த பாதம். 'மறுபிறப்பறுக்கும் மாசில் சேவடி மணிநிகழ் உருவின் மாஅயோயே' என்றும், 'நின்சேவடி தொழாரும் உளரோ' என்றும் கூறுவார் கடுவன் இளவெயினனார் தம் பரிபாடலில் (பரி. 3-2, 19). 'ஊது வண்டு உடுத்த போதுறையுஞ் சேயிழை காதலன் சேவடி' (பாக. 12-7-4) என்றும் கூறுவர்.

மாசுணம்—பாம்பு, இங்கு ஆதிசேடன். பாயல்—படுக்கை. பாற்கடல்—திருப்பாற்கடல். இது, ஏழு கடல்களுள் ஒன்று. இதில், திருமால், ஆலிலை மீதும் திருஅநந்தாழ்வான் மீதும் எழுந்தருளி அடியவர்க்கு அருள் செய்திருக்கின்றனர். 'அரவத்த மளியினோடும் அழகியபாற் கடலோடும், அரவிந்தப் பாவையுந் தானும் அகம்படி வந்து புகுந்து, பரவைத்திரை பல மோதப் பள்ளிகொள்கின்ற பிரான்' என்பார் பெரியாழ்வார் (பெரியா. திரு. 5-2-10). 'பாற்கடலுள் பையத் துயின்ற பரமனடி பாடி' என்றும், 'வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை, என்றும் கூறுவர் ஆண்டாள் (திருப் 2. 6). 'அரவணைத்துயில் அமலன்' என்றும் (பாக 10-1-7), 'ஆயிரந் தலைய நாகத் தறிதுயி லமர்ந்த அம்மான்' (பாக. 10-1-88) என்றும், 'அரவணைப் பள்ளியான்' (பாக. 10-1-72) என்றும், 'அராவணை துயின்ற அண்ணல்' (பாக. 10-7-1) என்றும் ஆன்றோர் போற்றுவர். பொய்த்துயில்—அறிதுயில்; அறியாநின்று செய்யுந்துயில்.

தேவகி— வசுதேவர் மனைவி, கம்சனது தங்கை. கம்சன் ஏவிய அசுரர்களுடையவும் கொடிய அரசர்களுடையவும்

திரண்ட சேனைகள் மேலே பொருந்தியிருப்பதனாலுண்டான மிக்க பாரத்தினால் துன்பமடைந்து துதித்த பூமி தேவியின் வருத்தத்தைத் தீர்க்கும் பொருட்டும், தேவர்களைக் காக்கவும் திருமால் கண்ணனாகத் திருவவதரிப்பதற்குத் தேவகி தான் இடமாக இருந்ததைக் குறிப்பர். ஈதில் அருட்தாதை என்றது வசுதேவரை. திருமாலை மகனாகப் பெற்றதனால் இவ்வாறு கூறினார். 'நானிலத்தவரும் புகழ் வசுதேவ னலஞ்செயப் பிறந்தவஞ் ஞான்று வானகத்தமரர் மாயனை யளிப்பான் மகிழ்தர இவன் என மதித்து' (பாக. 9-18-41) என்பது பாகவதம்.

பாவத்தின் நிறம் கருமை. 'பாபநிறத்தின் தாருக வர்க்கம்' என்பது திருப்புகழ். பழுத்த இருட் பாநாள் என்றது அடர்ந்த இருட்டுடன் கூடிய இரவுப்பொழுதை.

'நள்ளென்யா மத்திடை நரந்த நாறுதெண்
கள்ளுலாங் கருங்குழல் கன்னி தன்னையீன்
றள்ளிலைப் பூணினா ளசோதை கண்டுயில்
பள்ளிவாய் மென்மெலப் படர்குற் றானரோ'

(பாக. 10-1-71)

என வரும் பாகவதப் பாடல், வசுதேவர் கண்ணனை அடர்ந்த இருள் நேரத்தில் சுமந்து சென்றதைக் காட்டும். நள்ளென் யாமத்து—செறிந்த இருளையுடைய இடையிரவின்கண்; 'நள்ளென் றன்றே யாமம்' (குறுந் 6-1)

ஆயர்தம் ஊர்—கோகுலம்; நந்தகோபனுடைய ஊர்; கண்ணன் வளர்ந்து லீலைகள் செய்த ஊர். யசோதை—அசோதை; நந்தகோபன் மனைவி; கண்ணனை வளர்த்த தாய். அந்நாளில் கண்ணனை வளர்க்கும் பேறு பெற்றவளாதலால் 'அருந்தவத்து ஓர் தாய்' என்றார். கோகுலத்திலுள்ள கோபியர் வீட்டிலெல்லாம் கண்ணன் வெண்ணெயைத் திருடித் தின்றான். 'நின் மதலை மண்ணை அருந்தினன்' என்று ஆய்ச்சியர் கூற அசோதையான தாய் கண்ணபிரானுடைய கையைப் பற்றினளாய் 'வாயைக் காட்டுக' என வினவ, கண்ணன் வாயைத் திறந்து காட்டுகிறான். மணிவண்ணனது வாயில் உலகம் அனைத்தையும் கண்டாள் அசோதை.

விண்கண்டாள் விண்வளைக்கும் வெங்கதிருந்
தண்சுடரும் விளங்கக் கண்டாள்
மண்கண்டாள் மண்வளைத்த மாகடலும்
பேருயர்மால் வரையுங் கண்டாள்
தண்கொண்ட வெண்டோட்டுத் தளவநெடு
வனங்கண்டாள் தனையுங் கண்டாள்
பண்கொண்ட வண்டாற்றும் பசுந்துளவோன்
இவனெனவே பரவி னாளால்.

முருகொழுகு முகிழ்விரியு மொய்துளவோன்
மாயையினான் மறைத்த லோடும்
பருகுவனள் போனோக்கிப் பழுத்தொழுகு
மன்பினளாய்ப் பராவி யன்னை
பொருகளிறு வருக;வளர் போரேறு
வருக; வெழிற் பூவை வண்ண
வருக; வெனத் துகிரில்விளை மணிமுத்தங்
கொண்டனளுண் மகிழ்வு பூத்தாள்.

(பாக. 10-3-21, 22)

என இவ்வாறு கண்ணனின் இளம்பருவ விளையாட்டுக்களை யெல்லாம் அனுபவிக்கும் பேறு பெற்றவள் அசோதை. குழந்தைப் பருவத்துக் கண்ணனைக் கட்டியணைத்து முத்தமிட்டு மகிழும் உறவுநிலை அவளுக்குண்டானது பெரும் பேறு. இவ்வனுபவம் கண்ணனை ஈன்றோராகிய வசுதேவருக்கும் தேவகிக்கும்கூடக் கிடைக்கவில்லை. அதனாலேயே அசோதையை 'அருந்தவத்தள்' என்றார் ஆசிரியர். 'ஈன்றவர்க் கெய்த லாகாக் கன்னன்மென் றனைய தீஞ்சொற் கண்ணன திளமைத் தன்மை மன்னிய விருப்பிற்காண மாதரு நந்த கோனும் முன்னமெத் தவஞ்செய்தார் கொலோ!' (பாக. 10-3-22) என்பர் ஆன்றோர். மாதரும்—அசோதையும்.

தீமைகளை அழிக்கும் நிமித்தம் ஒரே இரவில் தேவகி மைந்தனாகப் பிறந்து, அசோதை மகனாக ஒளித்து வளர்ந்த தைக் கூறுகிறார் ஆசிரியர்.

'ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனா யொளித்து வளரத்

தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே' (திருப். 25)

என ஆண்டாள் குறிப்பிட்டபடியே கண்ணன் கம்சனையும் பிற அசுரர்களையும் அழிக்க ஆயர்பாடியில் தோன்றிய வரலாற்றை விளங்குகிறார் ஆசிரியர்.

**இருமருது அட்டமை**. கண்ணன் குழந்தையாயிருக்கும் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்த அசோதை கண்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற்கட்டி ஒரு உரலிலே பிணித்துவிட' கண்ணன் அவ்வுரலை இழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே எழுந்தருளியபொழுது, அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங் களிரண்டும் முறிந்து விழுந்த வளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன், மணிக்கிரீவன் என்னுங் குபேரபுத்திரர் இருவரும் சாபத் தீர்ந்து சென்றனர் என்பதாம்.

'பெருமா வுரலில் பிணிப்புண்டிருந்து, அங்கிருமா மருத மிறுத்த இப்பிள்ளை' (பெரியா. திரு. 1-2-10) என்பார் பெரியாழ்வார்.

'சுரும்பிமிர் கூந்தல் சோரத் தொடர்ந்தனள் யசோதை வீக்க விரும்பினை யுரலோடும்போய் வேரொடு மருதஞ் சாய்த்தாய்' (பாக. 1-4-35) என்பது பாகவதம்.

குபேர புத்திரர் இருவரும் இச்சாபம் பெற்ற காரணத்தைப் பின்வரும் பாடலும் தெளிவுறுத்தும்.

நிருவாணத் துடன்குளித்துப் பனைகள் போல
நின்றமையாற் சுரர்கள்முனி சாபத் தாலே
மருதாகி நிற்குமிடத் துன்னை யாயர்
மதியாமல் வெண்ணெய்க்கா உரலிற் கட்ட
வெருவாம லேதவழ்ந்து மருதைக் கிட்டி
விறற்றிகிரி யாவிரலா லறுத்து வீழ்த்தி
இருளான சாபந்தீர்த் தவரைப் பண்டில்
ஏற்றமுற வைத்தனையே எம்பி ரானே.

(எம். சத. 77)

நிருவாணமாகத் தடாகத்தில் சலக்கிரீடை செய்து பல பெண்கள் வெட்கப்பட்டுக் கரை மேல் வந்து, தங்கள் துணிகளை யுடுத்திக் கொள்ளச் சிலரைப் போக வொட்டாமல் தடுத்து அவர்களோடு அம்மணமாய்ப் பனை மரங்கள் போல நளகூபரன் மணிக்கிரீவன் என்னும் இருவர் நின்றதால், சுரர்முனியாகிய நாரதர் அவ்விருவரையும் மருதமரங்களாகச் சபித்தார். அச்சாபம் தீர்க்கவே கண்ணன் மருதிடைத் தவழ்ந்து அம்மரங் களை முறித்து அவர்களை ஆட்கொண்டார் என்பது வரலாறு.

சிவன் மருத மரத்தினைத் தலவிருட்சமாகக் கொண்டு அமர்ந்த காரணத்தை ஆசிரியர் நயம்பட உரைக்கின்றார். வடக்கே ஆந்திரத்திலுள்ள ஸ்ரீசைலம் (மல்லிகார்ச்சுனம்) தலைமருது எனப்பெறும். தெற்கில் நெல்லை மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்திற்கு அருகிலுள்ள 'திருப்புடைமருதூர்' (புடார்ச்சுனம்) கடைமருது எனப்பெறும். இவை இரண்டுக்கும் இடையிலிருக்கும் (மத்தியார்ச்சுனம்) திருவிடைமருதூர் இடைமருது எனப்பெறும். இச்சிவத்தலங்களில் மருதமரமே தலவிருட்சமாகும் (அர்ச்சுனம்—மருத மரம்). மருதவனம் என்னும் திருவிடைமருதூர்க் கோயிலிலுள்ள மருதமரத்தடியில் உரலில் கட்டுண்ட கண்ணனின் திருவுருவம் இன்னும் இருப்பது குறிப்பிடத்தக்கது. கண்ணன் குழந்தையாகயிருக்கும் பொழுதே மருத மரங்களைச் சாய்த்ததைக் கருதியே சிவன் மருதமர நிழலில் வீற்றிருக்கிறான் எனக் குறிப்பிட்டமை குறிப்பிடத் தக்கதாகும்.

அரன் பிச்சை ஏற்றது—தாருகவனத்து இருடிகளைக் கர்வபங்கஞ் செய்யத் திருமால் மோகினியுருக் கொண்டதும் சிவன் பிச்சாடனர் கோலங் கொண்டதுமான வரலாறு கூறப் பெற்றது.

இவை எட்டும் **ஈரடித் தரவுகள்**.

('அருமறை' முதல் 'மருவினை' வரை)

அருமறை முதலிய பலகலை நுவலென—கற்பதற்கு அரிய வேதம் முதலான பல கலைகளையும் சொல் என்று

அயனை முன் அலர்மகள் அயர்வுற அருளினை—முற்காலத்தில் திருமகள் தன் வழியாகப் பிள்ளைப்பேறு வாய்க்க

வில்லையே என வருந்தமுறும்படி பிரமனைப் பெற்றெடுத்தீர்

தெருள்மலிதரு சிவன் முதலிய கடவுளர்—தெளிவு மிக்க சிவபெருமான் முதலான கடவுளர் யாவரும்

செயசெய என வழிபட மிக நிலவினை—வெற்றி வெற்றி என (உம்மைத் துதித்து) வழிபடும்படியாகப் புகழ் பெற்று விளங்குகின்றீர்

ஒருபொருள் இருபொருள் பலபொருள் என இகலுறு பல சமயமும்—உள்பொருள் ஒன்று, இரண்டு, பல எனத் தமக்குள்ளே வாக்குவாதம் செய்யும் பல சமயங்களையும்

அருள் பொது நிலையினை—அடியவர்களின் பக்குவநிலைக் கேற்ப வழங்குகின்ற பொது நிலையை உடையவராக விளங்குகின்றீர்

கருமுகில் மிசைவரு மகபதி முதலினர்—மேகத்தை வாகனமாக உடைய இந்திரன் முதலான தேவர்கள்

கடல் அமுது உண— திருப்பாற்கடலிலே கடைந்த அமுதத்தை அடையும்படியாக

மகள் உருவமும் மருவினை—மோகினி என்னும் பெண்ணுருவமும் கொண்டருளினீர்.

## குறிப்புரை

திருமால் தன் உந்திக் கமலத்திலே நான்முகனைத் தோற்றுவித்தது, சிவன் முதலான பல தெய்வங்களும் வணங்கும் படியாக அருளியது, பல சமயங்களையும் அடியார்களின் ஆன்ம ஈடேற்றம் நோக்கி அருளியது, தேவர்களின் பொருட்டு மோகினி வடிவம் கொண்டது ஆகிய அருளிச்செயல்களை இப்பகுதியில் விளக்குகிறார் ஆசிரியர்.

'வாய்மொழி ஓலை மலர்ந்த
தாமரைப் பூவினுள் பிறந்தோனும், தாதையும்
நீயென மொழியுமால் அந்தணர் அருமறை;'

என்றும்,

'மாநிலம் இயலா முதன்முறை அமயத்து
நாம வெள்ள நடுவண் தோன்றிய
வாய்மொழி மகனொடு மலர்ந்த
தாமரைப் பொகுட்டுநின் நேமி நிழலே!' (பரி. 3)

என்றும், திருமால் பிரமனைத் தோற்றுவித்ததைப் பரிபாடல் விளக்கும். வாய்மொழி எனப்படுவன வேதங்கள். அவை தொடர்ந்து கேட்கப்பட்டு வருவன. அவ்வேதங்களை விளக்கு வதற்காகத் தோற்றுவிக்கப்பட்டதால் பிரமன் வாய்மொழி மகன் என்றே பரிபாடலில் கூறப்பெறுவன்.

'உந்தியெழுந்த உருவ மலர்தன்னில் சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தனன்' (பெரியா. திரு. 2-5-8) என்பார் பெரியாழ்வார். இங்கும் சந்தம் என்பது வேதத்தை.

அயன்—அஜன்; திருமாலினிடத்தினின்று தோன்றியவன்; (அ—திருமால்)

நான்முகனாகிய பிரமனும், பிறையை முடியிற் சூடிய உருத்திரனும், இந்திரன் முதலான தேவர்களும் திருமாலைப் போற்றியிருந்து அவருக்குக் குற்றேவல்களைச் செய்பவர்கள் ஆவார்கள்.

எண்மர் பதினொருவர் ஈரறுவர் ஓரிருவர்
வண்ணமல ரேந்தி வைகலும்—கண்ணி
ஒருமாலை யால்பரவி ஓவாது, எப்பொழுதும்
திருமாலைக் கைதொழுவர் சென்று.

(பொய். இயற்பா. முதற். 52)

என்பார் பொய்கையாழ்வார். இங்கு, வசுக்கள் எண்மர், உருத்திரர் பதினொருவர், ஆதித்தியர் பன்னிருவர், மருத்துவர் இருவர் ஆகிய முப்பத்துமூவரையும் தலைவராகக் கொண்ட தேவர்கள் திருமாலைத் தொழுபவர்கள் என்பது கருத்து.

உலகில் சமயங்கள் ஒன்று என்றும் பல என்றும் பலரும் வாதிடுவர். இது சமயவாதிகளுக்கேயுரியது. ஆயின், இச்சமய நெறிகள் யாவும் இறைவனாகிய ஒரே பரம்பொருளை அடையத்தகும் பல்வேறு வழிகள் என்பதை விளக்குவது திருமாலின் திருவவதாரப் பெருமையும் விளக்கமுமாகும்.

திருமாலை 'ஆறறிகடவுள்' (பரி. 3-43) எனப் பரிபாடல் அழைக்கும். சமயங்களுக்கெல்லாம் அதிதேவதை திருமாலே (வட. வேங். சத. 53) என்பது ஆற்றோர் வாக்கு. சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்னும் 'ஆறு நன்னெறித் தேவும் ஆம்விதம் ஆய்கிலார் அறிவாளரே' (வள. திரு. பதி. 6) என்பது இதே நூலாசிரியர் கருத்து. இதேபோன்று, 'ஆறிரண்டு தொன்னெறியும் அச்சுதன் கூத்தாகு மெனக் கூறியருள் உண்மைக்குரு' (சட. பத்து. 2) எனத் திருமால் பன்னிரு சமயங்களும் தானேயாகியிருக்கத் தோற்றுவித்ததை நம்மாழ்வார் விளக்கியவாறு எடுத்துரைப்பர் இந்த ஆசிரியர். பன்னிருநெறி என்பது அகச்சமயம் ஆறும், புறச்சமயம் ஆறுமாம். சௌரம் முதலாக மேலே கூறப்பட்ட ஆறும் அகச்சமயமாம். உலகாயதம், சமண், பௌத்தம், தார்க்கீகம், பூர்வ மீமாஞ்சை, மாயாவாதம் இவை ஆறும் புறச் சமயம் என்பர். இத்தகைய சமயங்களை யெல்லாம் அவரவர் பக்குவநிலைக்கேற்ப உண்டாக்கி யருளுபவரும் திருமாலே ஆவார்.

பண்ணியிடும் பணிபலவே பொன்னொன் றேயாம்
பாண்டத்தின் பேர்பலவே மண்ணொன் றேயாம்
வண்ணமிகும் பசுப்பலவே பாலொன் றேயாம்
வகைம்யழி னுடல்பலவே சீவ னொன்றாம்
நண்ணுமறு சமயங்கள் பேர்வே றல்லால்
நாதனீ யொருவனே யவர்கள் தம்மை
எண்ணியே செயுந்தொண்ட ரிச்சைக் கெல்லாம்
இரங்கிவரந் தருகின்றாய் எம்பி ரானே.

(எம். சத. 6)

எனவரும் கருத்துடைய பாடல்களையும் இவண் நோக்கல் தகும்.

**மோகினி அவதாரம் எடுத்தது** : அமிர்த மதன காலத்தில் தேவர் அசுரர் இருவரும் அமிர்தம் கடைந்தனர். அசுரர் அமிர்தம் உண்ணில் தேவர்க்கு நீங்காத் துன்பம் உண்டாம் என நினைத்த திருமால் அவர்களுக்கு அமிர்த விருப்பொழியத் தாம் மோகினி யெனும் பெண்ணுருக் கொண்டு, அமிர்தம் தேவர்க்குப் பங்கிடுகையில், அசுரர் இவ்வுருவத்தைக் கண்டு மயங்கி யிருந்தனர். அசுரர்களுள் இராகு கேதுக்கள் இருவரும் வேற்றுருக் கொண்டு அமுதம் புசிக்கத் தேவர் கூட்டத்தில்

இருந்தனர். அவர்களை இன்னவர் என்று அறிந்த மோகினி சட்டுவத்தால் அவர்களைப் புடைத்தனள் என்பது புராண வரலாறு.

'பொருவின் மோகினி வடிவமாய்ப் புத்தமுதத்தை இருவிசும்பின் வாழ் இமையவர்க் கீந்தனன் இறைவன்' (பாக. 1-1-30) என்னும் பாகவதம் திருமால் மோகினியாகிய பெண்ணுருவம் கொண்டதனைப் பின்வருமாறு விளக்கக் காணலாம்.

செய்யமணி மேகலை சிலம்பொடு சிலம்ப
மையொழுகு வார்குழலின் வண்டிசை மிழற்ற
வெய்யமுலை யாரமொடு வெள்வளை யெறிப்பப்
பெய்யுமுகில் வண்ணனொரு **பெண்ணுரு வெடுத்தான்.**

(பாக. 8-3-42)

இவ்வாறு பெண்ணுருவம் கொண்ட திருமால் விண்ணவர்க்குத் திருக்கையால் அமுதம் ஈந்ததைப் பல நூல்களிலும் (எம்.சத.14) பேசக் காணலாம்.

அருவினை, நிலவினை, நிலையினை, மருவினை என இயைபுத் தொடை பயின்று வந்தது.

இவை நான்கும் **ஈரடி அராகங்கள்.**

('ஆனையொன்று' முதல் 'கோடு கொண்டாய்' வரை)

ஆனையொன்று மூலமென அந்நாள் அழைத்திடப்போய்—கஜேந்திரனாகிய ஒப்பற்ற யானை 'ஆதிமூலமே' என அழைக்க அன்று உடனே சென்று

ஏனைவிண்ணோர் நாண—மற்றுமுள்ள தேவர்கள் எல்லாம் நாணமுறும்படியாக

இடங்கர் நெடுநாவறுத்தாய்—முதலையினுடைய நீண்ட வாயை அறுத்தெறிந்தீர்

தந்தை செய்யுந் தீமையிடை—இரணியகசிபன் என்னும் தகப்பன் செய்யும் கொடுமைகளால்

தட்டழிந்த—நிலை குலைந்த

தானவச்சேய்—அசுரர்குலக் கொழுந்தான பிரகலாதன்

சிந்தைகளிகூர—மனம் மகிழும்படியாக

ஒரு சீயமாச் சென்று அளித்தாய்—நரசிங்கத் திருவுருவாய்ச் சென்று ஆட்கொண்டருளினீர்

பொல்லார்தம் புன்சபையிற்—துரியோதனன் முதலிய பொல் லாதவர்கள் நிறைந்த குற்றம் நிறைந்த சபையில்

புண்படும் ஓர் பூவை உய்ய—ஆடை குலைந்து அவமானத்தால் நெஞ்சம் புண்பட்ட திரௌபதி என்னும் ஒருபெண் தப்பும் படியாக

எல்லாரும் கண்டு மெச்சும்—அங்கிருந்த சபையோரே அன்றி விண்ணோரும் மற்ற எல்லாரும் கண்டு போற்றும்படியாக

எண்ணில் கலைப்பேறு ஈந்தாய்—கணக்கற்ற ஆடைகளை யளித்து அருளுனீர்

கார்கடல்நீர் முற்றும் அற—கரிய கடல் நீர் அனைத்தும் வற்றும் படியாக

கைச்சிலை ஒன்றால்—கையிலேந்திய ஒற்றை வில்லால்

கணக்கில் வார்கணைமா மாரி பெய்தும்—கணக்கற்ற அம்பு களைப் பெருமழை போல் பொழிந்தும்

வல்லரக்கர் வாழ்வழித்தாய்—இராவணன் முதலான வலிய அரக்கர்களின் உயிரினைப் போக்கினாய்

ஆன் அனந்தம் இன்பமுற—பசுக்களின் கூட்டம் எல்லாம் மகிழ்ச்சி கொள்ளும் படியாகவும்

அந்தரத்து ஆர்த்துப் பொழிந்த—ஆகாயத்தில் பேரொலியுடன் பொழிந்த

வானம் முற்றும் நாணமெய்த—மேகக்கூட்டங்கள் முழுவதும் தோற்று நாணும்படி

மாமலை யொன்றேந்தி நின்றாய்—கோவர்ந்தனகிரி என்னும் பெருமலையை ஒரு விரலால் ஏந்தி நின்றீர்

மீன்ஆமை ஏனம் முதல் வெவ்வேறு உருவச் சமைந்துஉற்று—மச்சாவதாரம் கூர்மாவதாரம் வராகஅவதாரம் என வேறு வேறு உருவங்களைக் கொண்டு

ஆனாத கீர்த்தி அளவிறந்த கோடி கொண்டாய்—குறையாத
பெரும் புகழை அளவில்லாது பெற்றீர்.

## குறிப்புரை

திருமால் கஜேந்திரனுக்கு வீடுபேறு அருளியது; பிரகலாதன் என்னும் அசுரர்குலக் கொழுந்துக்காக நரசிங்க அவதார மெடுத்தது; திரௌபதியின் மானங் காத்தது; இராமாவதார மெடுத்து இராவண வதம் செய்தருளியது; கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துப் பசுக்குலத்தைக் காத்தருளியது; மற்றும் மீன், ஆமை, கேழல் முதலிய அவதாரங்களைக் கொண்டு பெரும் புகழ் படைத்தது ஆகியவற்றை ஆசிரியர் இப்பகுதியில் விளக்கக் காணலாம்.

ஆனை—கஜேந்திரன். இடங்கர்—முதலை.

**ஆனைக்கு முன்சென்று அருளியது** : பாண்டி நாட்டில் இந்திரத்யும்நனென்று ஓரரசன் மிக்க திருமால் பக்தியுடையவனாய் விளங்கினான். அவன் ஒருநாள் திருமால் பூசை செய்கையில் அகத்திய மகாமுனிவர் அங்கு எழுந்தருளினார். அப்பொழுது அவன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப்பூசிப்பதிற் செலுத்தியிருந்ததனால் அவரை வரவேற்கவில்லை. அம்முனிவர் தம்மை அரசன் அலட்சியஞ் செய்தானென்று மாறாகக் கருதிக் கோபித்து, 'நீ யானை போலச் செருக்குற்றிருந்ததனால், யானையாகக் கடவை' என்று சாபமிட்டனர். அவ்வாறே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினனாயினும், முன்செய்த திருமால் பக்தியின் மகிமையால் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரை மலர்களை, கொண்டு திருமாலை அருச்சித்துப் பூசை செய்து வந்தான். ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அருச்சனைக்காகப் பூப்பறிப்பதற்குப் போயிறங்கினபொழுது, அங்கே முன் நீர்நிலையில் நின்று தவஞ்செய்து கொண்டிருந்த தேவலரென்னும் முனிவரது காலைப் பிடித்திழுத்து அதனால் கோபங்கொண்ட அம்முனிவரது சாபத்தாற் பெரிய முதலையாய்க் கிடந்த ஹூ ஹூ என்னுங் கந்தருவன் அவ்யானையின் காலைக் கவ்வினான். அதை விடுவித்துக் கொள்ள முடியாமல் தவித்த கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று கூவியழைக்க, உடனே

திருமால் கருட வாகனத்திலேறி அங்கெழுந்தருளித் தம் திருவாழியாழ்வானைச் செலுத்தி, முதலையைத் துணித்து அதன் வாயினின்றும் கஜேந்திரனை விடுவித்தருளினார்.

இதனை, 'பதகமுதலை வாய்ப்பட்ட களிறு கதறிக்கை கூப்பி என் கண்ணா கண்ணாவென்ன உதவப் புள்ளூர்ந் தங்குறு துயர்தீர்த்த அதகன்' (பெரியா. திரு. 2-1-9) என்பார் பெரியாழ்வார்.

கரியுன்னி மூலமே என்ற மட்டிற் கராவை வதைத் தொரு நொடியிற் கரியைக் காத்நாய்' (எம்.சத.28) என்னும் படியாக 'ஆதி மூலமே' எனக் கூப்பிட்ட அளவில் சென்று காப்பாற்றியது மட்டுமன்றி 'ஏனை விண்ணோர் நாணஇடங்கர் (முதலை) நெடுநாவறுந்தது" என்பது இவண் சிந்திக்கத்தக்கது.

நாயக ராத்திரி யுஞ்சில தேவர்க்கு நாணிலைகொல்
தூயக ராத்திரி மூலம் எனாமுனம், துத்திப்பணிப்
பாயக ராத்திரி மேனிஅம்மான், பைம்பொன் வேங்கடவன்
தீயக ராத்திரி சக்கரத்தால் கொன்றசீர் கண்டுமே.

(திருவேங்க.24)

என்பார் பிள்ளைப்பெருமாளையங்கார். 'ஆதிகாரணனே வருக' என அரற்றிய யானையின் ஓலத்தைக் கேட்ட சிவன் ஆதியோர் தாம் அந்த ஆதிகாரணர் அல்லர் என்றும், திருமால் ஒருவரே ஆதிகாரணர் என்றும் வாளாவிருந்தனர்.

"வேதநூ லொருங்கு ணர்ந்து விரியுமெய் யறிஞ ருள்ளப்
போதுசேர் சோதி பொன்னிற் பொலியொளி
போல வெங்கும்
தீதுறா தருளின் யார்க்குந் தெரிவுறா துறைந்து நின்ற
**ஆதிகாரணன்**வந் தின்னே அளிக்கவென் றழைத்த தன்றே"

"அழைத்தது செவியிற் கேட்டும் அயனர னாதி யாயோர்
புழைக்கைவெங் கரிமுன் காப்பப் புகுந்தில ராதி யாகித்
தழைத்த**கா ரணனே** யென்ற தனிப்பெயர்ப் பொருள்**யாம்**
**அல்லோம்**
இழைத்தகா ரியம்யா மாவே மென்செய்து மாலின்
றென்றார்"

(பாக.8-2-29,30)

இவ்வாறு விண்ணோர் அனைவரும் நாணம் கொண்டு, ஒன்றும் செய்வதறியாது திகைத்து நின்ற தருணத்தில்,

"கூப்பிடு குரல்கேட் டோடிக் கொழுமணிக் கடிகை நெற்றிப்
பாப்பனை யகற்றி வெய்ய படர்சிறைக் கலுழன் ஊர்ந்து
தீப்பொழித் திலங்கு கூர்வாய்த் திகிரியைத் தாங்கி யாவும்
காப்பவன் பிறைவெண் கோட்டுக் களிற்றுமுன் னெய்துற்
றானால்"
(பாக. 8-2-31)

என்பது பாகவதம்,

தந்தை—இரணியன். தானவச்சேய்—அரக்கர் குலத்தில் தோன்றிய பிரகலாதன். சீயம்—சிங்கம்—நரசிம்மமாகிய திருமால்.

திருமாலே தெய்வமெனக் கூறி. அரிகரி நாராயணா எனத் துதித்த பிரகலாதன் பொருட்டுத் தூணில் நரசிம்மமாகத் தோன்றித் தேவரைத் துன்புறுத்திய இரணியகசிபுவைக் கொன்ற வரலாற்றைப் பரிபாடல் (பரி. 4-1-022) விளக்கக் காணலாம். 'அரியெங்கு முளனென்றோர் பாலன் சொல்ல அக்கணத்திற் றூணிரை சிங்க மானாய்' (எம். சத. 25) என்பர் பிறரும்.

'அரந்தை மிக்குறும் அவுணச் சேயினைச் சிரங்கள் ஆயிரம் திகழ்வெண் சீயமாய்ப் புரந்த நாரணன்' (சட. சத. 64), 'நான்பரமென் றிறுமாந்து பலரும் வழிபட மகிழ்ந்தான் நாசம் எய்த, ஊன்பதறிப் பெரிதேத்தும் ஒருமதலை களிகூர உதித்த சீயம்' (சட. சத. 75) என்றும் இந் நூலாசிரியர் பிறவிடங் களிலும் குறிப்பிடுவர்.

பொன்னார் — துரியோதனாதிகள். பூவை—திரௌபதி. கலை—ஆடை.

'உரிகின்ற துகில்வளரக் ருஷ்ணா வென்றே உரைத்தளவிற் றுரௌபதைக்கு மானங் காத்தாய்' (எம். சத. 28) என்பதற் கேற்ப, 'பஞ்ச வர்க்கொரு பாரி யின்புறப் பற்பல் ஆடைமுன் நல்கினாய்' (வள. திரு. பதி. 5) என இந்த ஆசிரியரே பலவிடங் களிலும் கூறக் காணலாம்.

அடுத்து, இராமபிரான் வானரசேனையோடு இலங்கை நோக்கிச் செல்லுகையில் கடலிற் செல்லும்படி வருணன் வழி விடாமையால் கடலை ஆக்நேயாத்திரத்தினால் வற்றச் செய்து விடுவதாகச் சினந்து வில்வளைத்தமையும், பின் அரக்கர்களை அழித்தமையையும் கூறுகிறார்.

'பரந்திட்டு நின்ற படுகடல், தன்னை
இரந்திட்ட கைம்மே லெறிதிரை மோதக்
கரந்திட்டு நின்ற கடலைக் கலங்கச்
சரந்தொட்ட கை... ..' (பெரியா. திரு. 1.6.7)

என்பார் பெரியாழ்வார்.

இராமபிரான் அம்பினால் கடலை வற்றச்செய்த நிகழ்ச்சியைக் கம்பரும் தம் உயுத்த காண்டத்தில் விளக்குவர்.

மாரியின் பெருந்துளி யினும்வரம் பிலவடிந்த
சீரியென் றவையெவற் றினுஞ்சீரிய தெரிந்து
பாரியங் கிரும்புன லெலாமுடி வினிற்பருகும்
சூரியன்கதி ரனையன சுடுசரந் துரந்தான்.
(கம்ப. உயுத். வரு. பா. 17)

எனவரும் பாடல்கள் இதைத் தெளிவுறுத்தும்.

கடலைக் கலக்கி வற்றச் செய்யும் அச்சுடுசரம் சூரியனின் கதிரையொத்தது என்பதைப் பாகவதமும் கூறும்.

கருணை கொண்டவக் கண்ணன் கருதலும்
வருணன் வந்தில னென்று மலர்விழி
அருணம் வந்தவ னம்பரத் தேவினான்
தருண வெய்யவன் போன்ற தழற்கணை.
(பாக. 9-9-88)

என்பது பாடல்.

இவ்வாறு இராமபிரான் கடலை வற்றச்செய்து, அரக்கரை அழித்த செய்திகளைப் புராணங்கள் நயம்பட உரைப்பதையும் காணலாம். காட்டாக, தீர்த்தகிரிப் புராணம் இந்நிகழ்ச்சியை,

உலவு சூரிய குலத்தி ராகவ னெனுமுழவன்
அலைய தாகிய வனத்தை அம்பழலினா லடக்கிப்
புலம தாகமேற் சேதுவாம் வரம்பையும் புணர்ந்து
நிலவி ராக்கதர் சோரியா மேரிநீர் நிறைத்து

இலங்கை யாகிய பெருவயல் செறிந்திரா வணனார்
அலங்கல் சேர்பல முடிகளைப் பறித்து வீடணனாற்
துலங்கு வான்பயிர் சமைத்துநல் லருட்புனல் சொரிந்து
விலங்கு றாதுயல் கதிருமுற் றிடும்படி விளைத்தான்.
(தீர்த்த. 1. தண்டகவனச் சருக்கம் 6)

என விளக்கும்.

இராகவன் என்னும் உழவன் கடலாகிய வனத்தைப் பாணமாகிய அழலினாலே திருத்தி, வயல் உண்டாக அதனிடத்துச் சேதுவாகிய வரம்யையும் கூட்டி, இராக்கதர் இரத்தமாகிய ஏரிநீரை நிறைவித்து, இலங்கையாகிய பெரிய வயலைச் செறிந்து, இராவணனுடைய பல முடிகளாகிய களைகளைப் பறித்து விபீடணன் என்றும் பயிரையுண்டாக்கி அப்பயிருக்கு நல்லருள் ஆகிய நீரைவிட்டு, சூரியன் முதலான பல கதிர்கள் முற்றும்படி விளைவித்தான் என இந்நிகழ்ச்சி மிகவும் சுவைபட விளக்கமுறுவது உய்த்தின்புறத்தக்கது,

'கடல்விழிவிட நிசிசரர் பொடிபட விருகண் சீறி' எழுந்ததைத் (திருவ. கலம். பா. 22) திருவரங்கக் கலம்பகத் தலைவியும் கூறுவள்.

மாமலை என்றது கோவர்த்தனம். இது, வடமதுரைக் கருகிலுள்ள மலை; இந்திரன் ஆயர்களிடம் மாறுகொண்டு, பசுக்கள் வருந்தும்படியாக விடாமழை பெய்விக்க கண்ணன் கோர்வத்தன மலையைத் தூக்கிக் குடையாய்ப் பிடித்து அப் பசுக்கூட்டத்தைக் காத்தருளிய வரலாறு கூறப் பெற்றது.

திருமால் மச்சம், கூர்மம், வராகம், நாரசிங்கம், வாமனன், பரசுராமன், இராமன், பலராமன், கண்ணன், கற்கி என வெவ்வேறு அவதாரங்களை யெடுத்து மிகுபுகழ் கொண்டா ரென்பதை ஆழ்வார் விளக்குவதும் இவன் ஒப்புநோக்கத் தக்கது. 'தேவுடைய மீனமா யாமையா யேனமா யரியாய்க்

குறளாய் மூவுருவிலி ராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய் முடிப்பான்' (பெரியா. திரு. 5-9-9) என்பார் பெரியாழ்வாரும்.

இவை ஆறும் **ஈரடித்தாழிசைகள்**.

('பொதுவமினார் முதல்' 'மார்பு வார்த்தனை'வரை)

பொதுவமினார் தரு போகம் ஆர்த்தனை—ஆயர்பாடியிலுள்ள கோபியர்கள் கொடுத்த இன்பத்தைத் துய்த்தீர்

கதும் என மாதொடு காடு சேர்ந்தனை—(கைகேயி கேட்ட வரத்திற்கு வாக்களித்த தந்தையின் சொல்லைக் காப்பதற்காக) சீதையுடன் விரைந்து காட்டைச் சென்று அடைந்தீர்

அது இது எனா தவர் ஆவி ஆர்த்தனை—(இறைவன்மீது பக்தி இல்லாமல்) பரம்பொருள் அத்தகையது, இத்தகையது என்று வீணே அரற்றித் திரியாமல் உண்மையாகத் தவத்தில் ஈடுபடும் அடியார்களுடைய உயிரையே தமக்கு இடமாகப் பொருந்தி இருக்கிறீர்கள்

மது முதலோர் நெடுமார்பு வார்ந்தனை—மது, கைடபன் போன்ற பல அசுரர்களின் வலிமை பொருந்திய பெரிய மார்புகளைக் கிழித்தீர்

## குறிப்புரை

திருமால் கண்ணனாக அவதரித்தபொழுது ஆயர்பாடி மகளிர்பால் இன்பம் நுகர்ந்ததும், இராமாவதாரத்தில் சீதையுடன் கானகம் சென்றதும், பரமபாகவதர்களின் உள்ளத்தே நித்திய வாசம் செய்வதும் மற்றும் பல அசுரர்களை அழித்ததும் ஆகியவற்றை இப்பகுதியில் விளங்குவர்.

பொதுவ மினார்—பொதுவர் மின்னார்—கோபியர்கள்—ஆயர்பாடி மகளிர். மாது—சீதை. மது—அசுரன்.

பொதுவர் என்பவர் குறிஞ்சி நிலத்துக்கும் மருத நிலத்துக்கும் நடுவிடமான முல்லை நிலத்திலுள்ளவர்; இடையர் என்னும் பெயர்க்குங் காரணம் இது. கண்ணன் ஆயர்பாடியில் இடைச்சியர் இன்பம் நுகர்ந்ததைப் பாகவதம், 'பண்டு வெண்ணெய் பாலொடும், அண்டர் மாதரார் நலம் உண்ட

காரெம் முண்ணிறை, கொண்டதென்று கூறுவார்' (பாக. 1-4-21) என விளக்கும். இங்கு அண்டர் மாதரார் என்றது இடைச்சியரை. கார்—கண்ணபிரான். நலம்—இன்பத்தை.

கொடிய கூனியின் சொற்கேட்ட கைகேயிக்குத் தந்தை யளித்த வரத்தைக் காப்பதற்காக உடனே இராச்சியத்தைத் தம்பி பரதனுக்கு அளித்து அருமைத் துணைவி சீதையுடன் இராமன் கானகம் சென்றதை, 'கொங்கைவன்கூனி சொற் கொண்டு, குவலயத் துங்கக் கரியும் பரியுமிராச்சியமும் எங்கும் பரதற்கருளி வன்கானடை அங்கண்ணன்' (பெரியா. திரு. 2-1-8) என விளக்குவர் பெரியாழ்வார்.

'மது கயிடவன் சடல மெழுகுபட வெங்குருதி மதுவினில் வழிந்தொழுக விறுக்கிநனி பிறிந்தன' திருமாலின் திருத்தோள்கள் (அழ. கலம்.) என்பது அழகர் கலம்பகம். கண்ணன் ஆலிலையின் மேலே சிறு குழந்தையாய் இருந்தபொழுது நீரெல்லாம் வற்றிப்போக, மீண்டும் உலகத்தை உண்டாக்கத் தேவர்களையும் படைத்தார் திருமால். பின்பு அத்தேவர்கள் கர்வங்கொண்டபொழுது அவர்களை யடக்க இவரே மதுகைட வர்களை உண்டாக்கினார். பின் அவர்களால் வருத்தப்பட்ட தேவர்களுடைய வேண்டுகோளின்படி அம் மதுகைடவர்களைச் சக்கரத்தாலே பிளந்து அவர்களது உடலாற் கடல் நீரை மூடச் செய்து பழையபடி உலகங்களைப் பெருமையுறச் செய்தார் என்பது வரலாறு.

உலகங்க ளீரேழு கற்பாந் தத்தில்
ஒருங்கவே யோர்கணத்தி லெளிதா யுட்கொண்டு
அலைவின்றிக் கற்பாந்த வெள்ளந் தன்னில்
ஆலிலைமேற் குழவியாய்த் துயின்ற வந்நாள்
சலிலமற மதுகயிட வரையுண் டாக்கிச்
சக்கரத்தாற் பிளந்துடலாற் சலத்தை மூடி
இலகமுனுண் டருளுலகை யுமிழ்ந்தே பண்டில்
ஏற்றமுற வைத்தனையே எம்பி ரானே.

(எம். சத. 83)

எனவரும் இப்பாடலால் கண்ணனின் முத்தொழிலும் விளக்கமுறும்.

இவை நான்கும் நாற்சீர் ஓரடி அம்போதரங்கங்கள்.

('ஆரணத் தொகை' முதல் 'ஆயினை' வரை)

ஆரணத்தொகை நாட்டினை—பற்பல வேதங்களை உலகில் நிலைநிறுத்தினீர்

காரணத் தனி வீட்டினை—மூலமாகிய பரமபதமென்னும் தனியான இன்பப்பெரு வீட்டினைக் கொண்டீர்

அன்பர்தம் புடை மேயினை—பரம பாகவதர்களாகிய அடியவர் பக்கமாகவே சேர்ந்தீர்

இன்ப துன்பமும் ஆயினை—உலகிலுள்ள எல்லா உயிர் களிடத்தும் இன்ப துன்பங்களுக்கெல்லாம் காரணமாக உள்ளீர்

## குறிப்புரை

திருமாலாகிய கண்ணன் மறையென்னும் வேதங்களை உலகினர்க்கு அளித்ததும், பேரின்ப வீடாகிய பரமபதத்தைக் கொண்டிருப்பதும், எப்பொழுதும் அடியார்கள் பக்கமே சேர்ந் திருப்பதும், உயிரினங்களின் இன்பம் துன்பம் யாவற்றிற்கும் காரணமாயிருப்பதும் இப்பகுதியில் கூறப்பெறும்.

ஆரணம்—வேதம், காரணம்—மூலமாகிய வீடு; பரமபதம். புடை—பக்கம். மேயினை—சேர்ந்தனை.

துன்னிய பேரிருள் சூழ்ந்துலகை மூட<br>மன்னிய நான்மறை முற்றும் மறைந்திட<br>பின்னிவ் வுலகினில் பேரிருள் நீங்கஅன்<br>றன்னம தானானே அச்சோ அச்சோ<br>அருமறை தந்தானே அச்சோ அச்சோ.

(பெரியா. திரு. 1-8-10)

என்னும் பாசுரம் வேதநாயகன் வேதங்களை யருளியதைக் குறிக்கும். கண்ணனை 'வேதமுதல்வன்' என்றும் (நாச்சி.திரு. 10-2), 'மறைகள் பாடினான்' என்றும் (பாக. 10-7-16) கூறுவர் ஆன்றோர்.

இம்மையில் காத்தருளும் கண்ணனை 'மறுமைக்கு மருந்து' (பெரிய. திரு. 7-10-5) என்றே கூறுவார் திருமங்கையாழ்வார்.

சார்ந்த விருவல் வினைகளும் சரித்து மாயப்பாற் றறுத்து
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி யகலம் கீழ்மே லளவிறந்து
நேர்ந்த ஒருவா யருவாகு மிவற்றி னுயிராம் நெடுமாலே.
(திருவாய். 1-5-10)

என நம்மாழ்வாரும் கண்ணன் பரமபதமாகிய வீட்டினை நல்கும் முறைமையை விளங்குவர்.

தம்மை யண்டி வந்தோரை வாழ்விப்பதே கண்ணனின் தனிச்சிறப்பு. 'நச்சுவார் முன்னிற்கும் நாராயணன்' (பெரியா. திரு. 1-3-11) என்பதும், 'நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணன்' (பெரியா. திரு. 2-3-2) என்பதும் ஆழ்வார் வாக்கு. 'தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு' என்றும், 'உள்ளுவா ருள்ளத்தே உறைகின்றவன்' என்றும் (பெரிய. திரு. 2-5-1, 7) கூறுவார் திருமங்கையாழ்வார். 'சன்ம சன்மாந் தரங்காத் தடியார்களைக் கொண்டுபோய் தன்மை பெறுத்தித் தன்தாளிணைக்கீழ்க் கொள்ளுமப்பன்' (திருவாய். 3-7-7) எனவரும் நம்மாழ்வார் பாசுரமும் எம்பெருமாள் அன்பர்தம் பக்கம் சேர்ந்திருந்தருளும் பாங்கினைத் தெளிவுறுத்தும்.

உயிர்களுக்குத் துன்பம் உண்டாவதற்கும் அத் துன்பத்தைப் போக்கி இன்பம் உண்டாவதற்கும் ஆதிகாரணனாய் இருப்பது கண்ணனே என்பது ஆன்றோர் முடிபு.

துன்பமு மின்பமு மாகிய செய்வினை யாயுல கங்களுமாய்,
இன்பமில் வெந்நர காகி இனியநல் வான்சுவர்க் கங்களுமாய்,
மன்பல்லு யிர்களு மாகிப் பலபல மாயம யக்குக்களால்,
இன்புறு மிவ்விளை யாட்டுடை யானைப்பெற் றேதுமல்
லல்லிலனே.
(திருவாய், 3-10-7)

என்னும் நம்மாழ்வாரின் கூற்றின்படி, கண்ணனின் திருவிளையாடலே இன்ப துன்பங்களின் காரணம் என்பது விளங்கும்.

இவை நான்கும் முச்சீர் ஓரடி அம்போதரங்கங்கள்.

('உளவறிந்தனை' முதல் 'பெற்றனை' வரை)

உளவறிந்தனை—மாற்றாரின் உட்கருத்தை அறிந்தீர்

துளவு அணிந்தனை—பரிசுத்தமான துளசி மாலையை எப்பொழுதும் சூடியுள்ளீர்

உண்மை உற்றனை—எப்பொழுதும் சத்தியத்தின் பக்கமே சார்ந்திருப்பீர்

திண்மை பெற்றனை—(இத்தனைக் காரணங்களால் எப்பொழுதும்) மெய்ம்மையாகிய வண்மையையுடையீர்.

## குறிப்புரை

கண்ணன் எப்பொழுதும் தம்மடியார்களின் உள்ளத்தையும், மாற்றாரின் உட்கருத்தையும் நன்கு அறிந்திருத்தல் பற்றியும், துளவ மார்பனாய் எப்பொழுதும் தூய உண்மையை நேசித்திருப்பது பற்றியும், எல்லாவற்றினும் திண்மை பெற்றிருப்பது பற்றியும் இப்பகுதி விளக்கும்.

துளவம்—துளசி. துளவு—அதனாலாகிய மாலைக்குக் கருவியாகுபெயர். திண்மை—வலி. அறிந்தனை, அணிந்தனை, உற்றனை, பெற்றனை என்பன முன்னிலை ஒருமை வினைமுற்றுக்கள். கண்ணனை 'உளங்கனிந்திருக்கும் அடியவர்தங்கள் உள்ளத்துளூறிய தேன்' (பெரிய. திரு. 4-3-9) என்றே எண்ணி மகிழ்வார் திருமங்கையாழ்வார்.

திருமாலின் திருச்சிறப்புக்கொரு காரணமாயமைந்தது அலர்ந்த பூவிதழ்களோடு கூடிய மனம் மிக்க துளசி மாலை 'நக்கலர் துழாஅய் நாறிணர்க் கண்ணியை" (பரி. 4-58) என்பது பரிபாடல்.

இவை நான்கும் **இருசீர் ஓரடி அம்போதரங்கங்கள்**.

எனலால்—இது. தனிச்சொல்.

("அருமறை முதலிய' என்பது தொடங்கி 'திண்மை பெற்றனை என்பது முடிய) இதுகாறும் பலவாறாகக் கூறப்பட்டவாறு.

இத் தனிச் சொல்லால் இதுவரை நடந்த அராகங்கள், அம்போதரங்கப் பகுதிகள் இனித் தொடரவிருக்கும் ஆசிரியச் சுரிதகத்துடன் இணைக்கப்படுகின்றன.

(நின் மாட் டொன்று' முதல் 'நிசப்பட விளக்கே' வரை)

நின்மாட்டு ஒன்று நெடிது இரக்கின்றேன்—உம்மிடத்தில் (அடியேன்) ஒரு வரத்தைப் பெரிதும் வேண்டுகிறேன்

என் மாட்டு உன்னருள் இன்று கொல்? உண்டுகொல்?—அடியே னிடத்தில் உம்முடைய அருள் உண்டா? இல்லையா?

உன் உருக்கொண்டு என் உள்ளகத்து ஒரு பொருள் பன்னும் மாற்றம் பல உள—உம்முடைய திருவுருவத்தை ஏற்று அடியேனுடைய தியானத்தில் பரம்பொருள் கூறியருளிய சொற்கள் பலவாகும்.

ஆயினும்—இருப்பினும்

ஒன்றும் இவ்வுலகத்து ஒளிரக் காண்கிலன்—இந்த உலகத்தில் அவ்வுரைகள் எதுவும் பலிக்கக் காணவில்லை.

என்றும் அன்னவை பொய்த்து ஏகினும் ஏகுக—ஒருநாளும் நிறைவேறாமல் அவை பொய்யாகிப் போனாலும் போகட்டும்

மாதவப் பயிர் பொதி வன்களை என்ன—பெருந்தவமாகிய பயிரிடையே மறைந்திருக்கும் கொடிய களை போன்று

ஏதம் மிக்கு ஆற்றும் இருங்கலிக்கு அஞ்சி—கொடுமை மிகப் புரியும் வறுமைக்கு அஞ்சி

பரந்த நீர்ப் புணரிப் பார்மிசை—பரந்துபட்ட அலைகடலால் சூழப்பட்ட இப்பூமியில்

பலவாறு இரந்து அலைந்து ஏங்கி இடையா வண்ணம்—பலவித மாகக் கையேந்தி அலைந்து அடியேன் வசங்கெடாதவாறு

பன்முனை வயிரப்படையான் பயந்த—பல முனைகளைக் கொண்ட வச்சிராயுதப் படையுடைய இந்திரனின் மகனாகிய

வில்மகன் ஆள்என—வில்லுக்குரிய அருச்சுனனின் அம்சமாகிய அருணகிரிநாதரின் அடியான் இவன் என்று

வெள்காது ஓதி நின்ற ஊரில்—சற்றும் வெட்கப்படாமல் (அடியேன்) சொல்லி நின்ற நகரில்

நீயும் நானும் நன்று அறிந்து உய்ந்த நடுவர் பலரும்—தேவரீரும் அடியேனும் ஐயந்திரிபற நன்கு கற்றறிந்த நடுநிலை யாளர்கள் பலரும்

அறிதர நிகழ்ந்த பேராடல்—நேரில் அறியும்படியாக நடை பெற்ற திருவிளையாடலை

நெறிவழி பிழையா நிசப்பட விளக்கே—உண்மைக்குப் புறம் பாகாதவாறு உடன் (அனைவருக்கும்) தெரிவிப்பீராக!

## குறிப்புரை

திருமாலாகிய கண்ணனிடத்தில் ஆசிரியர் ஒரு வரம் வேண்டுகிறார். பரம்பொருள் ஒன்றே என்னும் தெளிவை அனைவரும் உணர்தல் வேண்டுமென விழையும் அவர் அதற்கும் இறைவன் திருவருளையே நினைகிறார். தமக்கு முன்பு திருவரங்கம் போன்றவிடங்களில் பெருமாளே நேரில் வந்து போராடல் புரிந்ததை நினைவுகூர்ந்து, அவ்வண்ணம் இன்று அனைவரும் காணும்படி நேரில் வந்தருள் புரியுமாறு கண்ணனை வேண்டுகிறார்.

மாட்டு—ஏழனுருபு. கொல்—ஐயப்பொருளை உணர்த்தும் இடைச் சொல், "கொல்லே யையம்" (தொல், சொல், 268) ஏதம்—கொடுமை. கலி—வறுமை புணரி—கடல். பார்—பூமி மிசை—மேல்; இடையாவண்ணம்—வசங்கெடாதவாறு. வயிரப்படையான்—இந்திரன், வெள்காது—வெட்கப்படாது நிசப்பட—உண்மையாக.

இவர் முற்பிறப்பில் அருணகிரியாக யிருந்ததை வேறு பல நூல்களிலும் குறிப்பர். இப்பிறப்பில் சைவக்கோலம் பூண்டவ ராயினும் திருமால் பக்தி மிக்கவர் என்பதால் இவர் திருவரங்கத் திருவாயிரம் போன்ற நூல்களை அக்கோயிலிலேயே பலர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்தபொழுது, திருமாலே நேரில் வந்து திருவிளையாடல் புரிந்ததை இவர்தம் வரலாற்றில் காணலாம்.

இது பதினாறடி **நேரிசையாசிரியச் சுரிதகம்**.

இப்பாடல், தரவு, அராகம், தாழிசை. அம்போதரங்கம், தனிச்சொல். சுரிதகம் ஆகியன பெற்று அமைந்த **மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா**.

இத்துடன் இக்கலம்பகத்தின் முதற்பாடல் நிறைவேறியது. இதனுள், 'திருமகள்' முதல் 'பேசக்கேள்' வரை உள்ள எட்டுத் தரவுகளும் இந்நூலாசிரியர் வீரைநகர் இறைவனாகிய நவநீத கிருட்டிணனை முன்னிலைப் படுத்தும் விளி. 'அருமறை முதலிய' தொடங்கி, 'தின்மை பெற்றனை' வரையிலான அராகங்கள், தாழிசைகள், அம்போதரங்கள் யாவும் பாகவதர்கள் கண்ணனை எவ்வெவ்வாறெல்லாம் போற்றிப் பரவுகின்றனர் என்பதைக் கூறுகின்றன. 'எனலால்' என்னும் தனிச் சொல்லால் இணைக்கப்பட்ட இறுதிப் பகுதியாகிய ஆசிரியச் சுரிதகத்துள்ளே இந்நூலாசிரியரின் இறையனுபவமும் இறைவன் பால்செய்து கொள்ளப்பெறும் விண்ணப்பமும் அடங்கியுள்ளன.

## நேரிசை வெண்பா

**2. விளங்கனிமேற் கன்றெறிந்தாய்! விண்ணுமண்ணும் தாளால்**
**அளந்தறிந்தாய்! யாவையுந்தா னானாய்!—தளஞ்செறிபூங்**
**கண்ணா! தென் வீரைநகர்க் காவலா! கத்தும்என் சொல்**
**நண்ணாதென் கொல்லோ நவில்.**

விளங்கனிமேற் கன்றெறிந்தாய்—உம்மைக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்த வத்சாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி, விளாமரத்தின் மேல் எறிந்து, அம் மரவடிவாய் வந்த கபித்தாசுரனையும் கொன்றீர்

விண்ணும் மண்ணும் தாளால் அளந்தறிந்தாய்—திருவிக்கிரமாவதாரமாய்த் தோன்றியபோது நின் திருவடி கொண்டு விண்ணையும் மண்ணையும் அளந்தறிந்தீர்

யாவையும் தான் ஆனாய்—எல்லாம் நீரே ஆனீர்

தளஞ்செறிபூங்கண்ணா—அழகிய இதழ்கள் செறிந்த தாமரையை யொத்த கண்களை உடையவரே

தென் வீரைநகர்க் காவலா—அழகிய தெற்கேயுள்ள வீரைநகரின் தலைவரே!

கத்தும் என் சொல் நண்ணாது என் கொல்லோ நவில்—ஓயாமல் பாடிக் கதறும் அடியேன் சொற்கள் நின் செவிகளை வந்து அடையவில்லையா? சொல்வீராக.

## குறிப்புரை

கண்ணன் தம் இளம்பருவத்தில் விளங்கனி மேலே கன்றெறிந்ததும், பின் விண்ணும் மண்ணும் அளந்ததுமாகிய திருவிளையாடல்களை எடுத்துக் கூறிய ஆசிரியர் தம்முடைய விண்ணப்பத்திற்குச் செவிமடுக்குமாறு வேண்டுகிறார்.

விளங்கனி—விளாவின் வடிவமான கபித்தாசுரன். கன்று—கன்றின் வடிவமான வத்சாசுரன். தாள்—திருவடி. தளம்—பூவிதழ். காவலன்—காக்கும் நாயகன்; திருமால். நண்ணாது—நண்ணாதது—கிட்டாதது; அடையாதது.

**விளங்கனிமேல் கன்று எறிந்தது** : கம்சனால் ஏவப்பட்ட கபித்தாசுரன் விளாவின் வடிவமாய்க் கண்ணன் தன்கீழ் வரும் பொழுது மேல் விழுந்து கொல்லுவதாக எண்ணி வந்து நிற்க, அஃதறிந்த கண்ணபெருமான், அவ்வாறே தன்னைக் கொல்லும் பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்த வத்சாசுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின் மேல் எறிந்தார். இருவரும் இறந்து தமது அசுர வடிவத்துடனே விழுந்தனரென்பது வரலாறு.

"பன்றியு மாமையு மீனமுமாகிய பாற்கடல் வண்ணா உன்மேல்
கன்றினு ருவாகி மேய்புலத்தே வந்த கள்ள வசுரர் தம்மை
சென்று பிடித்துச் சிறுகைக ளாலே விளங்கா யெறிந்தாய் போலும்
என்றுமென் பிள்ளைக்குத் தீமைகள் செய்வார்கள் அங்ஙன மாவார்கள்"
(பெரியா. திரு. 3-3-7)

என்பார் பெரியாழ்வார்.

**விண்ணும் மண்ணும் தாளால் அளந்தது** : கண்ணன் வாமனாவதாரத்தில், காசிபர்க்கு அதிதியிடம் அவதரித்து மகாபலியிடம் மூன்றடி மண் யாசித்து, அவன்தர உலகமெல்லாம் ஈரடியாலளந்து ஓரடிக்கு இடம் பெறாததால் அவன் தலையிற் தமது திருவடியை வைத்துப் பாதாளத்தில் அழுத்தித் தேவர் பயம் போக்கினார் என்பர்.

மாவலி வேள்வியில் மாணுருவாய்ச் சென்று
மூவடிதா வென்றிரந்த இம்மண்ணினை,
ஓரடியிட் டிரண்டாமடி தன்னிலே,
தாவடி யிட்டா னாலின் முற்றும்
தரணி யளந்தா னாலின்று முற்றும்
(பெரியா. திரு. 2-10-7)

என்பது ஆழ்வார் பாசுரம்.

கண்ணன் மாபலிமுன் நிகழ்த்திய பேராடலையுணர்த்தும் நாச்சியார் 'ஓங்கி உலகளந்த உத்தமன்' (திருப். 3) என்றே புகழ்ந்தோதுவார்.

விண்ணும் மண்ணும் அளந்த திருவடிகளை இவண் குறிப்பிடுவது கருதத்தக்கது. 'ஒருபெருங் கமலத் தாளால் அற்றைநாட் பொதியப் பெற்ற அங்கண்மா ஞாலத் தானே' (பாக. 0-1-46) என அழைக்கும் ஆன்றோர் மொழிப்படியே இந் நூலாசிரியரும் 'பாரும் விண்ணும் அளந்த பொற் பாதனே' (எழு. எழு. 4) எனப் பிறிதோரிடத்தும் விளக்கக் காணலாம்.

யாவையுந் தானானாய் என்றது கண்ணபிரானின் பெருமையை வியந்தோதியதாம். 'ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய் அவனியாய் அருவரைகளாய், நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான்' (பெரியா. திரு. 4-10-5) என்பார் பெரியாழ்வார்.

"இவையு மவையு முவையு மிவரு மவரு முவரும்
யவையு யவரும் தன்னுள்ளே யாகியு மாக்கியும் காக்கும்
அவையுள் தனிமுத லெம்மான் கண்ணபிரா னென்னமுதம்
சுவையன் திருவின் மணாள னென்னுடைச் சூழலுளானே'
(திருவாய். 1-9-1)

எனக் கண்ணன் யாவையுந் தானானதைக் குறிப்பிடும் நம்மாழ்வார், எல்லாச் சமயங்களுக்கும் அவனே யாவான் என்பதை விளக்குமிடத்து,

யாவையும் யவரும் தானா யவரவர் சமயந் தோறும்
தோய்விலன் புலனைந் துக்கும் சொலப்படா துணர்வின்
மூர்த்தி

ஆவிசே ருயிரி னுள்ளா லாதுமோர் பற்றி லாத
பாவனை யதனைக் கூடில் அவனையும் கூட லாமே.

(திருவாய். 3-4-10)

எனக் கூறி அக்கண்ணபிரானை அடையும் விதத்தையும் கூறுவார். பின்பு அந்நெறியில் அவரே நின்று கண்டதையும் கூறுவார்.

உருவாகிய ஆறு சமயங் கட்கெல்லாம்
பொருவாகி நின்றா னவனெல்லாப் பொருட்கும்
அருவாகி யவாதியைத் தேவர்கட் கெல்லாம்
கருவாகிய கண்ணனைக் கண்டுகொண் டேனே.

(திருவாய். 9-4-8)

என்பது பாசுரம்.

கண்ணனின் கண்களுக்கு ஒப்புமையாகத் தாமரை மலர் கூறப்பெற்றது. கண்ணனின் கண்கள் தாமரை மலர்கள் இரண்டை இணை சேரப்பிணைத்து வைத்தாற் போலத் தோன்றுவன என்பதைக் 'கண்ணே, புகழ் சால் தாமரை யலரிணைப் பிணையல்' எனப் பரிபாடல் கூறும் (பரி. 2-53). அத் தாமரை மலரும் பல அடுக்கிய இதழ்களையுடையது என்பதை 'நின்னின் தோன்றிய நிரையிதழ்த் தாமரை அன்ன நாட்டத்து அளப்பரியவை' (பரி. 4-50,61) என்பர். நின்னிடத்திருந்து தோன்றிய அடுக்கமைந்த இதழ்களைக் கொண்ட 'தாமரை மலரினைப் போன்று விளங்கும் சிவந்த கண்களோடு அளப்பரிய சிரிப்பினையும் உடையோனே என்பது இதன் பொருளாகும்.

இது, மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த **இருவிகற்ப நேரிசைவெண்பா.**

## கட்டளை கலித்துறை

3. நவில்பூம் புளிநிழல் ஆழ்வானை நாடிமுன் நான்பகர்ந்த
கவிவாஞ்சை யாலவன் சொன்னசொற் போற்பயன் காண்பதென்றோ
செவிதூங்கும் வேழம் பலஆர்க்கும் வீரைத் திருநகரில்
புவிமான் களிப்பும் மலர்மான் சிறப்பும் பொலிதெய்வமே.

செவி தூங்கும் வேழம் பல ஆர்க்கும்—தொங்குகின்ற செவிகளையுடைய பல யானைகள் பேரொலி செய்கின்ற

வீரைத் திருநகரில்—(வளமை மிக்க) வீரகேரளம்புதூரில்

புவிமான் களிப்பும் மலர்மான் சிறப்பும் பொலி தெய்வமே— பூதேவியின் உவகையும் திருமகளின் அன்பும் பெற்று விளங்கும் பெருமானே

நவில்பூம் புளிநிழல் ஆழ்வானை நாடி—திருப்புளியமர நிழலில் எழுந்தருளியுள்ள நம்மாழ்வாரைப் போற்றி

முன் நான் பகர்ந்த கவி வாஞ்சையால் அவன் சொன்ன சொல் போல் பயன் காண்பது என்றோ—முன்னர் அடியேன் ஆசையுடன் பாடிய பாடல்கள் எல்லாம், அவ்வாழ்வார் பாசுரங்களை நீவிர் சூடியது போன்று சூடும் பெருமையை அடியேன் எப்பொழுது அடைவேனோ அறியேன்.

## குறிப்புரை

நம்மாழ்வார் மீது திருமால் கொண்ட அன்பும் அதனால் அவர் பெற்ற அருளும் பற்றிக் கூறும் ஆசிரியர் தாமும் அவ்வாறே கண்ணனின் திருவருள் பெற விழைகின்றார். 'சடகோபன் முதலினர்க் கருளிய பெருஞ் சேவை தனையெனக் கென்றருளுவாய்' என்பதே அவர்தம் விண்ணப்பம். 'வீறு சடகோபன் முதற் பதின்மர்முன் மேய பெரும்புகழ் எய்த வேண்டு'மென்பதே (திருவ. திரு. புகழ்ப்பத்து. 10) ஆசிரியரின் பேரவா.

புளிநிழல் ஆழ்வான்—நம்மாழ்வார். வாஞ்சை—ஆசை. வேழம்—யானை. புவிமான்—பூதேவி. மலர்மான்—திருமகள்.

நம்மாழ்வாரைப் பெரிதும் மதிக்கும் ஆசிரியர் அவர் பெற்ற அநுபூதியை அடிக்கடி நினைவுகூர்வர். ஒருநாள் திருமால் பாகவதர் வடிவில் ஆழ்வார்முன் சேவை வழங்கி, மகிழ மாலையைச் சூட்டினார். எமது திருமால் வைகும் பரமபதத்துக்கு வருக என்றனர். அதற்கு ஆழ்வார் கூறும் பதிலாவது,

"வைகுந்தம் அன்றிஒரு வயினறியேன்; வான்பரமும்
பொய்குன்றா மாயையுமாம் பூரணன்மால்
எனத்தேர்ந்தேன்
மெய்குன்றப் பகர்ந்தனையே வேறோநீ எனலும், அவன்
உய்கும்பல் உன்னுயர்ச்சி உணர்வுறச்செய் தேன்என்றான்"

(புலவர் புராணம், சடகோபாழ்வார் சருக்கம்.33)

என்று கூறியிருக்கின்றார். இத்தகையதொரு உன்னதநிலையை தமக்கு அருள வேண்டுமென்றே வீரை நவநீதகிருட்டிணனிடம் வேண்டுகின்றார் இவர்.

திருமால் எப்பொழுதும் சீதேவி, பூதேவியோடு காட்சி நல்குபவர் என்பதை 'இடமேவி நிலமாதும் வலமேவி மலர் மாதும் இன்புற்றிடப் படநாக அணைமீது துயில்வான்' என்றும், மீனேர்கண் இருவரொடு வெண் கடலில் துயில் கூர்வான்' என்றும் (சட. சதக. 54,74) உணர்த்துவர்.

'திருமடந்தை மண்மடந்தை யிருபாலும் திகழத் தீவினைகள் போயகல அடியவர்கட்கென்றும் அருள்நடந்து' (பெரிய திரு. 3-10-1) என ஆழ்வாரும் இக்கோலத்தைக் காட்டுவர்.

'திருமாதும் நிலமாதும் பத்தியாலே திருவடிகள் வருடியிட விழித்து றங்கும் கருணாகரா!' (எம்.சத.9) என ஆன்றோர் அழைப்பது போன்றே கண்ணபிரானாகிய முதல் தெய்வத்தை அழைத்து வேண்டுகிறார்;

இது, நிரையசை முதலாகிய **கட்டளைக் கலித்துறை.**

## கொச்சகக் கலிப்பா

4. தெய்யஎன்னும் இடைச்சொல்லின் திருட்டறியாப் புலவோரும்
வையஎன்னைத் துயர்செய்தாய் மனமிரங்கும் கணம்யாதோ?
பையரவின் மிசையாடிப் பசியமயில் இறகணிந்து
செய்யநிறத் தமிழ்வீரைத் திருக்கோயி லமர்வானே.

பையரவின் மிசை ஆடி—காளிங்கன் என்னும் கொடிய பாம்பின் மீது நடனம் ஆடியும்

பசிய மயில் இறகு அணிந்து—பச்சைநிற மயிலின் இறகினைச் சூடியும்

செய்யநிறத் தமிழ்வீரைத் திருக்கோயில் அமர்வானே—செந்தமிழ் வளங்கொழிக்கும் வீரகேரளம்புதூரில் கோயில் கொண்டெழுந்தருளியிருப்போரே!

தெய்ய என்னும் இடைச்சொல்லின் திருட்டறியாப் புலவோரும்—தெய்ய என்னும் இடைச்சொல்லின் திருட்டு அறியாத இளம்புலவர்களும்

வைய என்னைத் துயர் செய்தாய்—அடியேனை ஏசும்படியாகத் துன்புறுத்துகின்றாய்

மனம் இரங்கும் கணம் யாதோ—(அடியேனின் துயர் தீரும்படி) உள்ளம் இரங்கும் காலம் எப்பொழுது வருமோ? (கூறுவீராக)

## குறிப்புரை

தெய்ய என்னும் சொல் தானே தனியாக ஒருபொருளும் உணர்த்தாத இடைச்சொல்லாகும். மேலும் பிற இடைச் சொற்களைப் போல உருபு, விகுதி முதலியனவாகிப் பொருள் உணர்த்தாமல் வெறும் அசைச்சொல்லாகவே வரும். ஆனால், ஒலி அளவில் இது செய்ய என்னும் வாய்பாட்டில் அமைந்த வினைச்சொல் போல மருட்டும். இதையே திருட்டு என்றார். சொன்முடிபறியா இளம்புலவர்கள் என்றபடி.

இது, எல்லாச் சீர்களும் காய்ச்சீர்களாகிக் கலித்தளையால் நடந்த **கொச்சகக் கலிப்பா**.

## மடக்கு

### கட்டளைக் கலிப்பா

5. அமர ருந்தெரி யாதவ ரோதையா
ஆன்பு ரக்கும்மெ யாதவ ரோதையா
சமர சத்தர் மதிக்குமட் டாக்கரா
சலதி தன்னைம திக்குமட் டாக்கரா
விமல ஞானக் குருகைய னையனே
வெள்ளை மாதுக் குருகை யனையனே
கமல வாவிகொள் வீரையின் மாயனே
காத்தி யேல்மயல் வீரையின் மாயனே.

அமரரும் தெரியாத வரோதயர்—தேவர்களாலும் அறிய முடியாதபடி மிகச் சிறந்த அவதாரங்களை எடுத்தவரே!

ஆன் புரக்கும் மெய் யாதவர் ஓது ஐயா—பசுக்குலங்களைப் பாதுகாக்கின்றவர்களும் பொய்மை யற்றவர்களுமாகிய முல்லைநில மக்களால் புகழப் படுகின்ற தலைவரே!

சமரசத்தர் மதிக்கும் அட்டாக்கரா—சமய பேதமற்ற ஞானி களால் போற்றப்படுகின்ற திருவெட்டெழுத்தின் மெய்ப் பொருளாக விளங்குபவரே!

சலதி தன்னை மதிக்கும் மட்டாக்கரா—திருப்பாற்கடலைக் கடைகின்ற (வலிமையில்) குறையாத திருக்கரங்களை உடையவரே!

விமல ஞான குருகையன் ஐயனே—குற்றமற்ற மெய்ஞானியாகிய வரும் திருக்குருகூரருமாகிய நம்மாழ்வாரால் வணங்கப் பெறும் தெய்வமே!

வெள்ளை மாதுக்கு உருகு ஐயன் ஐயனே—வெண்மை நிறத்தின ளாகிய கலைமகளின்மேல் அன்பு கொண்டுள்ள பிரம தேவனின் தந்தையே!

கமல வாவிகொள் வீரையின் மாயனே—தாமரைத் தடாகங்கள் நிறைந்த வீரகேரளம்புதூரில் எழுந்தருளியுள்ள திருமாலே!

காத்தியேல் மயல் வீரையில் மாயனே—(தேவரீர் அருள்கூர்ந்து அடியேனை) பாதுகாத்தருளுவீராகில் நான் மாயையாகிய கடலில் வீழ்ந்து வீணே இறக்க மாட்டேன். உமது ஒப்பற்ற திருவடிகளை அடைந்து உய்வேன் என்றபடி.

## குறிப்புரை

வர + உதயா = வரோதயா வடமொழி குணசந்தி; மூன்றா மடியில் அயன் எனற்பாலது ஐயன் என நின்றது போலி.

பாற்கடலைக் கடைந்த தேவர், அசுரர் ஆகிய ஒவ்வொரு வருள்ளும் அந்தர்யாமியாக நின்று அச்செயல் புரிந்ததும் திருமாலே ஆதலின் 'மட்டாக்கரா' என்பதற்கு 'அளவற்ற கைகளை உடையவரே' எனினும் அமையும்.

நம்மாழ்வார் சடவாயுவால் நேருகின்ற உலகியல் மாயையே அண்டப் பெறாதவராதலின் அவர் ஞானம் விமல ஞானம் எனப் போற்றப் பெற்றது. இயல்பாகவே குற்றங்கள் அண்டாத மெய்யறிவு என்றவாறு.

உன்னை முறையாக வணங்கித் தவம் செய்து மேனிலை அடையும் தகுதி இல்லேனெனினும் தேவரீர் உம்முடைய

அளப்பரும் பெருங்கருணையாலே அடியேனை ஆட்கொண் டால் உய்வேன் என்பது கருத்து.

இப் பாடலின் ஒவ்வொரு அரையடியிலும் மடக்கணி பயின்று வந்துள்ளது. இஃது அடிதோறுந் தனித்தனியே வந்த **இறுதிமுற்றுமடக்கு.**

இது, முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான் வந்தது அரை அடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும் அவ்வடி நான்கு கொண்டு, நிரையசை முதலில் வருதலால் அரையடிக்கு ஒற்றொழித்துப் புன்னிரண்டு எழுத்துப் பெற்று வந்த **கட்டளைக் கலிப்பா.**

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

6. மாயவுல கிடைநிகழும் மனிதர்விலங்கு
ஆதியபல் வகைக்கும் வேண்டும்
நேயவழி உணவூட்டும் நீயெனைஏன்
அதிற்பெரிதும் நிர்ப்பந் தித்தாய்?
தீயவரைச் செருக்கமுயன் றுள்ளேன்மீது
உன்றன்உளத் திருத்தி யின்றோ?
வேயணிகைக் கோபாலா! வியன்வீரைப்
பதிபுரக்கும் விகிர்த மாலே.

வேய் அணி கைக்கோபாலா—குழலினைக் கையிலேந்திய இடையர்குலத்தரசே!

வியன் வீரைப்பதி புரக்கும் விகிர்த மாலே—பெருமை மிக்க வீரகேரளம்புதூரைக் காக்கும் நட்புடைய திருமாலே!

மாய உலகிடை நிகழும் மனிதர் விலங்கு ஆதிய பல்வகைக்கும்— தேவரீரின் மாயத்தின் விளைவாகிய இப்பூமியில் தோன்றும் மக்கள், விலங்குகள் முதலான பற்பல உயிரி னங்களுக்கும்

நேய வழி வேண்டும் உணவு ஊட்டும் நீ—அன்பு வழியிலே அவற்றிற்கு இன்றியமையாததாகிய போகப் பொருள் களை வழங்கிக் காப்பாற்றுகின்ற தாங்கள்

எனை ஏன் அதில் பெரிதும் நிர்ப்பந்தித்தாய்—அடியேனை ஏனோ அப்போகப் பொருள்கள் பெறுவதற்காகவே அலையுமாறு விட்டீர்

தீயவரைச் செகுக்க முயன்றுள்ளேன் மீது உன்றன் உளத்திருத்தி இன்றோ — (உயிர்க்கொலை போன்ற பாவங்களைச் செய்யும்) கொடியவரை அழித்து ஒடுக்க முயன்றுவரும் அடியேன் செயல் கண்டும் இன்னும் உம் உள்ளம் நிறைவு அடையவில்லையா? கூறியருள்வீராக.

## குறிப்புரை

பல்வகைக்கும் நேயவழி வேண்டும் உணவூட்டும் என இயையும். கல்லினுள் தேரைக்கும் தாய் வயிற்றிலுள்ள மகவிற்கும் அதனதன் தேவையை அறிந்து காலாகாலத்தே உணவளித்துப் பாதுகாக்கும் எம்பெருமானாகிய தேவரீர் அடியேன் மாட்டு எளிவந்த கருணை காட்டாமல் வெந்த சோற்றுக்கும் பிற உலக இன்பத் தேவைக்கும் அலையவிட்டது ஏன் எனக் கேட்கிறார். ஓர் உயிர் என்ற அளவிலேயே என்னைக் காக்க வேண்டியது உம் கடமையாக இருக்க, தீயவர்களை ஒடுக்குவதாகிய பணியிலும் ஈடுபட்டிருக்கின்ற அடியேனைச் சிறப்பாகப் பாதுகாக்கவேண்டும் என்பது குறிப்பு.

நேயம்—அன்பு. நிர்ப்பந்தித்தல்—வருத்தமடையுமாறு செய்தல். வேய்—குழல். திருத்தி—திருப்தி—மனநிறைவு. கோபாலன்—பசுக்களைக் காப்பவன் என்று பொருள்; இனிப் பசுக்களைக் காத்தலில் வல்லவரென்றுமாம். விகிர்த—(அடியாரிடம்) நட்புடையவரே.

உலகின் அனைத்து உயிர்களுக்கும் உணவூட்டுபவர் திருமாலே என்பதை, 'பாழியங்கைக்கரியாதிய வாழப் படி அளக்கும் நாழி தலையணையாக் கொண்ட சீரங்க நாயகனே' (திருவ. திருவா. சீரங்க நாயகமாலை. 46) என இவரே விளக்குவர்.

இவர்தம் சுயசரிதையாகிய குருபர தத்துவத்தில் மலையாளச் சருக்கத்தில், திருமால் சீனிவாசனென்னும் அந்தணராக வந்து சோறும் மோரும் மிளகாய் வற்றலும் வழங்கியதாக விளக்குவர்.

"ஒருகரத்திற் தாங்கும்மலை வாழையிலைச்
சோற்றிடை மற்றொரு கைமீது
மருவுவங்கச் சட்டியில்மோர், பெய்திரண்டு
பெருமிளகாய் வற்ற லோடுளவ்

உருசியினு மிக்கஉப்பும் கொடுத்தினிப்பல்
வேதியரோ டுணப்போ கின்றேன்
தருதிவிடை யெனப்பெரிது விரைந்தான்,அவ்
ஆச்சரியம் சாற்றற் பாற்றோ."

(குருபர. மலை. 12, 44)

என்னும் பாடலில் இதை விளக்குவர்.

இது, முதல் நான்குங் காய்ச்சீரும், மற்றவை மா, தேமாச் சீருமாகிய **அறுசீராசிரிய விருத்தம்.**

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

7. மால லாற்பிறிது ஒருபரம் இன்றெனும்
வயிணவ நெறிசார்ந்த
சீலர் தங்களிற் பிரிந்திகல் கொடிதறத்
தீர்ப்பதே விழைகின்றேன்;
கால வாதனைக் கடற்சுழி கடந்துயக்
கடைக்கணித் தருளாயோ?
நீல மால்வரை யெனத்தமிழ் வீரையில்
நிலவிய நெடியோனே.

நீல மால் வரை எனத் தமிழ் வீரையில் நிலவிய நெடியோனே— நீல நிறமுடைய பெரிய மலை போன்று, தமிழ்ச் சான்றோர் நிரம்பிய வீரகேரளம்புதூரில் கீர்த்தி பெற நிற்கும் திரிவிக்கிரமனானவரே!

மால் அல்லால் பிறிது ஒருபரம் இன்று எனும் வயிணவ நெறி சார்ந்த சீலர்—திருமால் ஒருவரைத் தவிர வேறொரு பரம் பொருள் இல்லை என்னும் நெறியைக் கொண்ட நற்குணச் சான்றோர்களாகிய வைணவப் பெருமக்கள்

தங்களில் பிரிந்து இகல் கொடிது அறத் தீர்ப்பதே விழைகின்றேன்—தங்களுக்குள்ளேயே (வடகலை, தென்கலை) இருபிரிவினராகப் பிரிந்து நின்று வாதஞ் செய்யும் கொடுமையை முற்றிலும் தேவரீர் நீக்கியருள வேண்டுமென அடியேன் விரும்புகின்றேன்

கால வாதனைக் கடற்சுழி கடந்து உய்யக் கடைக்கணித்து அருளாயோ—கலிகாலமாகிய துன்பந் தருகின்ற கடற்

சுழற்சியிலிருந்து விடுபட்டு உலகம் ஈடேறும்படியாக நீவிர் கிருபை செய்து அருள்புரிய மாட்டீரோ? அருள்வீராக.

## குறிப்புரை

நீல மால் வரை என்பதில் வரை—மலை—கண்ணனின் நிறத்திற்கும் வலிமைக்கும் பெருமைக்கும் உவமையாகக் கூறியிருப்பது நயமிக்கது

'தாமரைப் பூப்போலே செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ' என்றும் 'திங்களுமாதித்தியனு மெழுந்தாற் போல் அங்கணிரண்டும் கொண்டெங்கண்மேல் நோக்குதியேல் எங்கண்மேற் சாபம் இழிந்து வாழ்வோம் என்று (திருப். 22) நாச்சியார் வேண்டுவது போன்றே இவரும் கண்ணபெருமான் பாராமுகமா யிருப்பதைத் தவிர்க்க வேண்டுகிறார்.

திருமாலையே பரம் எனத் தேர்ந்த வைணவர்கள் தமக்குள் இகலுதல் குறித்து இவர் வருந்துகிறார். இது கலிகாலத்தின் தீமை போலும் எனக் குறிப்பிட்டு அதனை யடக்கி உலகம் கடைத்தேற அருள்புரிய வேண்டுமென இறைஞ்சுகிறார்.

மால்—திருமால். பரம்—பரம்பொருள். சீலர்—வைணவ அடியார்கள். பிரிந்திகல்—வடகலை, தென்கலை எனப் பிரித்து வாதிடுதல், காலம்—கலிகாலம். வாதனை—துன்பம். கடைக் கணித்தல்—செய்தருளுதல்.

'விண்டுவேபரம் எனச்சொலும் அவரெலாம் மெய்யடி யவரென்னக்கொண்டு தொண்டுசெய் உண்மையற்று, அவருள்ளும் கூறுபட் டிகல்கின்றோர்க் கண்டு மாலையும் இகழ்ந்து வாழ் நாள்சில கழித்திருந்தேன்' (குருபர. 24 விட்டுணு. சரு. 6) என இவர்தம் வாழ்நாளில் கண்ட வைணவ வாதிகளின் வேறுபாடு களை விளக்கி வருந்தக் காணலாம். மேலும், திருஅயிந்திர புரத்தில் வைணவர்களிடையே எழுந்த வடகலை தென்கலை பற்றிய வாதங்களுக்கு விடைகூறி, 'உலகமெல்லாம் உண்டு மிழ்ந்த நாராயணன் இந்த பேதவாதத்திற்கெல்லாம் அமைய மாட்டான்' என்பதையும் நிலைநாட்டினர் என்பது இவர்தம் வரலாற்றால் அறியலாம்,

இந் நூலாசிரியர், எந்தப் பெயரும் வடிவும் கடவுள் ஒன்றிற்கே உரியது. அறுவகைச் சமயமும் ஓரே தன்மையினது என்ற அனுபவம் கைவந்தவர். அறுசமயக் கடவுளரையும் சமமாகத் துதி செய்துவந்த இவர் அதற்கேற்ப அறுசமயக் கோலமும் தமது மேனியிலணிந்துவந்தார். உடல் முழுவதும் திருநீறு பூசி, இருதோள்களிலும் இரண்டு கலை நாமங்களையும் அணிந்து, துளசி, அக்கமணிமாலை புனைந்த கோலத்தோடே இவர் திருஅயிந்திரபுரம் என்னும் விட்டுணுதலம் சென்ற பொழுது, அத்தலத்திருந்த வடகலைக்குரிய அந்தணர் இவரைக் கண்டு வெறுப்புடன் வினாத் தொடுத்தனர். அப் பொழுது இவர் பின்வருமாறு விடை கூறினார் என்பர்.

"எங்கள் வடகலையை இடதுதோளில் ஏன் அணிந்தீர்கள்" என்றனர் அந்த அந்தணர்கள். அதற்கு இவர், விபூதி பூசி, அதன்மேல் நாமம் இட்டதைப் பற்றியும், நெற்றியில் அணியாதது பற்றியும் நீங்கள் வினவாமல், இடது தோளில் நாமம் இட்டதைப் பற்றி மட்டும் கேட்கிறீர்கள். உங்கள் மனத்தில் விபூதியின் மீதுள்ள வெறுப்பைவிட, அதிக வெறுப்பு தென்கலை மீது உள்ளதை யறிந்தேன் என்றனர். ஒரு நாராயணனது லீலா வடிவமே பத்து அவதாரங்களென்பதை ஒப்புகின்றீர்கள். அதுபோல, ஒரே பரம்பொருளின் லீலா வடிவமே சமயங்கள் ஆறும் என்றறிந்தேன். ஆதலால், திருநீறு, திருமண் இரண்டையும் சமமாகத் தரித்தேன். அன்றியும், நாம் கிழக்கு முகம் நோக்கியே எதுவும் செய்வது மரபு. அப்போது வலக்கை தென் புறமாவதால் தென்கலையை வலத்தோளில் இட்டேன். இடது தோளில் வடகலையை, வலது கையால் தரித்தேன். நெற்றியில் ஏதோ ஒன்றைத்தான் அணியவேண்டும். அப்படியானால் அரை வைணவனாவேன். இரண்டு நாமக்குறிகளும் சமம் என்றறிந்த நான் அப்படி அணியேன் என உலகமெல்லாம் உண்டுமிழ்ந்த நாராயணன் இவ்விதமான வேறுபாடுகளைக் கடந்தவன் என்று அவர்களுக்கு விளக்க அவர்களும் தெளிந்தனர் என்பதை இவர் தம் வரலாற்று நிகழ்ச்சியால் அறிகிறோம் (குருபர. விட்டுணு. 19-26).

இது, முதல்சீர் மாச்சீரும், இரண்டு முதல் ஆறு வரையான நான்கும் விளச்சீர்களும், ஏழாம்சீர் காய்ச்சீருமாகிய **எழுசீராசிரிய விருத்தம்.**

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

8. நெடியவனைச் செஞ்சிறைப்புட் பரிமேற் செம்பொன்
நேரிழையோடு உன்னியுன்னி நிகம கோடி
முடிவில்நுவல் எட்டெழுத்தும் மொழிந்தெட் டான
முறையுணர்ந்து மெய்ஞ்ஞானம் முழுகும் மேலோர்
அடியவர்தம் வேடமொரு சிறிதும் இல்லா
ரானாலும் அவர்பதத்தூள் அணிவேன் கண்டீர்!
கடிமதிற் தென் வீரைநகர்ப் புலவீர்! உள்ளக்
கருத்தறிவான் வள்ளல்என்சொல்
கடைப்பாற் றன்றே.

*கடிமதில் தென்வீரைநகர்ப் புலவீர்*—காவற்சிறப்புள்ள மதில்களையுடைய தென்வீரை நகரத்து அறிஞர்களே!

*நெடியவனைச் செஞ்சிறைப் புட்பரிமேல் செம்பொன் நேரிழையோடு உன்னி உன்னி*—சிவந்த இறகுகளையுடைய கருட வாகனத்தின் மேலே திருமகளுடன் வீற்றிருக்கும் நெடுமாலின் திருக்கோலத்தை இடைவிடாது தியானித்தும்

*நிகம கோடி முடிவில் நுவல் எட்டெழுத்தும் மொழிந்து*—பல வேதங்களும் தமது முடிந்த முடிபாகச் சொல்லுகின்ற அட்டாட்சரமாகிய விட்டுணு மந்திரத்தையே செபித்தும்

*எட்டான முறை உணர்ந்து*—அட்டமா சித்திகள் கைவரப் பெற்று

*மெஞ்ஞானம் முழுகும் மேலோர்*—உண்மையான ஆன்மஞானம் அடையப்பெற்ற பெரியோர்கள்

*அடியவர்தம் வேடம் ஒருசிறிதும் இல்லார் ஆனாலும்*—(வெளித் தோற்றத்தில்) திருமாலடியார்கள் போன்று கோலங்கள் கொண்டிருக்காவிடினும்

*அவர் பதத்தூள் அணிவேன் கண்டீர்*—அவர்களுடைய திருவடி பட்ட மண்ணையும் திருமண் ஆக அடியேன் அணிவேன்; இது உறுதி!

*உள்ளக் கருத்தறிவான் வள்ளல்*—அடியேன் உள்ளத்தே உறைந்திருக்கும் இவ்வுண்மையை அந்தக் கண்ணனும் அறிவார்

*என்சொல் கடைப்பாற் றன்றே*—அடியேன் மொழிகள் வீணானவையல்ல என்பதை அறிவீராக.

## குறிப்புரை

அடியவர்களை அவர்களின் புறக்கோலத்தையும் சடங்கு களையும் மட்டுமே கொண்டு போற்றுதல் பெரும்பான்மையோர் கொள்ளும் தொடக்க நெறி. உள்ளத்தால் இறைவனோடு இரண்டற ஒன்றிவிட்ட மெய்யடியார்கள் உலகியல் பற்றிய சமயச் சின்னங்கள் முதலியவற்றில் சிந்தை செலுத்த மாட்டார்கள். இத்தகைய மிக உயர்ந்த நிலையிலுள்ள அடியார்களைப் பலர் இனங்காண இயலாது. அத்தகையோர் மிகப்பலரால் சமய ஒழுகலாறற்றவர் என இகழவும் படுவர். தான் அவ்வாறு செய்யாமல், புறத்தோற்றத்திலும் ஆன்ம ஞானத்திற்கே முதலிடம் தருவதாக ஆசிரியர் கூறுகிறார்.

நெடியவன்—ஓங்கி உலகளந்த உத்தமனாகிய கண்ணபிரான். செஞ்சிறைப் புட்பரி—கருட வாகனம். செம்பொன் நேரிழை—இலக்குமி. உன்னி—நினைந்து. நிகம கோடி முடிவு—வேதாந்தம். வேத சிரசாகிய உபநிடதம் என்ப தூஉமது. எட்டெழுத்து—அட்டாட்சரம்.

இலக்குமியைச் 'செய்ய பொன் மேனித் திருவே' என்றும், 'செம்பொன் மேனி அணங்கரசே' என்றும் (திருமக. 25,42) இவர் குறிப்பர். இத்தகைய இலக்குமியுடன் திருமால் கருடன் மீதேறித் தன்னுள் வந்து காட்சியளித்ததையும் இவர் கூறுவர். 'அனைவரும் போற்றும் நெடுமாலும் நீயும் அடற்கருடன் தனையெழில் வாகன மாக்கொண்டு என் உள்வரும் சத்தியத்தை' (திருமக. 55) எனவரும் பாடலால் அதை உண்மை யென்றும் நிறுவுவர்.

திருமாலைத் தியானித்துச் சித்தியும் ஞானமும் பெற்றவர் மேலோர் என்பதால் அவர்கள் முக்திக்குரியவர் என்பது தானே பெறலாயிற்று. இவ் வாசிரியர் சித்திகளைப் பெற்ற பிறகே முக்தியடைய முடியும் என்னும் கொள்கையர். இதை இவர்தம் சத்திய வாசகம், கௌமார முறைமை ஆகிய நூல்களில் விளக்கக் காணலாம்.

'குருப்பகரு முபதேசப் பொருளை நம்பக் குறைவற வேயுரு வேறத் திருவுமேறி, இருட்பறந்து மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்தாய்' (எம்.சத. 24) என்பது ஆன்றோர் வாக்கு. பெரியதா யிருக்கின்ற பூசினிப் பூவின் கீழிருந்த பிஞ்சானது நாளுக்குநாள்

வளர்ந்து காயாகவே மேல்நின்ற பூக்குறைந்து சிறுப்பது போல் உள்ளத்தில் பொருந்திய ஞானத்தைப் பெருக வொட்டாமல் கூடத்தோடு கூடிய அற்பபுத்தியானது அதிக விருத்தியாகி மேலிட்ட நாளில் ஆசாரியர் உபதேசித்த திருமந்திரத்தின் பொருளை உண்மையெனக் கொண்டு அநுட்டானத்தில் யாதொரு குறையுமில்லாமல் உருப்போடுவதனால் அறிவின் செல்வம் வளர்ந்து அஞ்ஞான இருள் பறந்து 'நினக்கே தாசன்' என்னும் மெய்ஞ்ஞானம் விளங்கும்படிச் செம்பவரும் அப்பரம் பொருளே என்பது இதன் பொருள். இத்தகைய தொண்டர் மனத்தகத்தே உறைகின்றவரே அந்தப் பரம்பொருள் என்பது இவர் கருத்து.

சிவனீதலும் புயனீதலும் திரனீதல் சந்திரனீதலா
தவனீதல்விண் ணவரீதல்மா தவரீதலோ டெவரீதலும்
அவனீதலந் தனிலெண்ணினுன் **னடியாரடிப் பொடியாகுமோ?**
நவனீதமுண் கருமேகமே! நாராயணா! நாராயணா!

(வட. வே. சத. 3)

சிவனும் அயனும் இந்திரனும் சந்திரனும் சூரியனும் தேவர் களும் முனிவர்களும் இவர்களுடனே கூடப்பின்னும் யாவர்களுங் கொடுக்கா நின்ற பலன்களையெல்லாம் பூதலத்திலே எண்ணிப் பார்க்குமிடத்தில் நவநீதகிருட்டிணனுடைய அடியார் கள் திருவடித்துகளும் ஒப்பாக மாட்டாது என்னும் ஆன்றோர் வாக்கை உணர்ந்தே இவ்வாறு கூறினார் ஆசிரியர்.

தன்னையே நினைந்திருப்பவர்க்கு வற்றாத அன்பினை அருளுபவர் கண்ணபிரான். எனவே வள்ளல் என்றார்.

பனிக்கடலிற் பள்ளிகோளைப்
பழகவிட்டு, ஓடிவந்தென்
**மனக்கடலில்** வாழ வல்ல
மாய மணாள நம்பி;
தனிக்கடலே! தனிச் சுடரே!
தனி யுலகே என்றென்று
உனக்கிட மாயிருக்க வென்னை
உனக்குரித் தாக்கினையே.

(பெரியா. திரு. 5-4-9)

என்னும் பெரியாழ்வாரின் பாசுரப்படி, பரம்பொருளைத் தெளிந்தறிந்த ஞானத்தால் அப் பரம்பொருளே குடிகொண்டிருக்கும் உள்ளம் தனக்குக் கிடைத்ததை எண்ணிப் பூரித்த ஆசிரியர் 'உள்ளக் கருத்தறிவான் வள்ளல்' என்றும், தம் மொழி வீணல்ல என்றும் உறுதிபடக் கூறினார்.

இது. ஒன்று இரண்டு ஐந்து ஆறு ஆகியன காய்ச்சீர்களும், மூன்று நான்கு ஏழு எட்டு ஆகியன மாச்சீர்களுமாகிய **எண்சீராசிரிய விருத்தம்**

(இக் கலம்பக நூலில் ஆறு, ஏழு, எட்டு ஆகிய செய்யுட்களை முறையே ஆறுசீர், ஏழுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்களாலேயே அமைத்திருப்பதும் ஒரு சிறப்பாகும்.)

## எண்சீர் வண்ண விருத்தம்

(தந்த தந்ததன தானன தனனா)

9. அன்று வந்தென்மன மாம்வெளி யிடைநீ
அஞ்சல் அஞ்சலென ஓதிய அருள்நீர்
இன்று குன்றியது போல்வதென்? அடியேன்
இந்த வெந்துயரில் மூழ்குதல் முறையோ?
மன்றுள் ஒன்றுபல காவலர் எதிரே
வம்பு விண்டவனும் வாழ்வுறல் படிறோ!
கன்று டன்பசுவெ லாமகிழ் வுறுசீர்
கண்ட பைம்பொழில்கொள் வீரையின் அரசே.

கன்றுடன் பசுவெலாம் மகிழ்வுறு சீர்கண்ட பொழில்கொள் வீரையின் அரசே—(அன்று) ஆயர்பாடியில் கன்றுடன் பசுக்கூட்டமெல்லாம் மகிழும்படியாகக் காத்தருளி இன்று இந்தச் சோலைகள் நிறைந்த வீரை நகருக்குத் தலைவராக வீற்றிருப்பவரே!

அன்று வந்த என் மனமாம் வெளியிடை—முன்பொருநாள் வந்து என் மனக்காட்சியில் தோன்றி

நீ அஞ்சல் அஞ்சல் என ஓதிய அருள்நீர்—நீ அச்சமடையாதே அச்சமடையாதே என்று கூறிக் கிருபை செய்த நீவிர்

இன்று குன்றியது போல்வது என்—இப்பொழுது பாராதிருப்பது ஏனோ?

அடியேன் இந்த வெந்துயரில் மூழ்குதல் முறையோ?—அடியவ னாகிய நான் இவ்வாறு துன்பத்தில் அழுந்தியிருப்பது முறைமைதானா?

மன்றுள் ஒன்று பல காவலர் எதிரே வம்பு விண்டவனும் வாழ் வுறல் படிறோ? —சபையில் பல காவலர் முன்பு தீச்சொல் சொல்லியவனும் பிழைத்திருப்பது வஞ்சகம் தானோ? கூறுவீராக.

(நீதிமன்றத்தில் பொய்ச்சாட்சி சொல்பவரும் இக்காலத்தே நன்றாக வாழ்கின்றனரே, இது உம் ஆட்சியின் குறையோ எனினுமாம்.)

## குறிப்புரை

திருமாலாகிய கண்ணபிரான் தம்முடைய மனக்காட்சியில் தோன்றி யருளியதை நினைவுகூர்ந்து, இன்று தாம் படும் துயர் போக்கியருள நேரில் வர வேண்டுகின்றார் ஆசிரியர்.

'காராரு மேனிக் கவின்றோன்ற வன்றென் கனாவில்வந்த நீரான தின்றுன் னுளத்தில்லையோ' (திருவ. திரு. சீரங்கநாயக மாலை. 1) இப்பொழுதே வந்தருள்க என்பதே இவர்தம் வேண்டுகோள்.

அஞ்சல் என்பது சரணம். எதிர்மறை விளங்கோள். அபய மளித்துச் சரணாதலுக்கு ஆகி வந்தது. 'அஞ்சல் அஞ்சல் என் கிலாத ஆண்மை யென்ன ஆண்மையே' (கம்ப. பால. 12-49) என்பார் கம்பர். அஞ்சல் அஞ்சல் என்பது இங்கு விரைவினால் அடுக்கிற்று.

அடியேன் என்பது அடிமை யென்னும் பகுதியிற் பிறந்து தாழ்வுப் பொருள் தந்து நின்ற தன்மை ஒருமைச் சொல். 'திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்' (பெரியா. திருப்பல் லாண்டு .1) என்பார் ஆழ்வாரும்.

இது, 'தந்த தந்ததன தானன தனனா' என்னும் சந்தத் தில் அமைந்த **எண்சீர் வண்ண விருத்தம்.**

## புயவகுப்பு

பாட்டுடைத் தலைவனது தோள்களைப் பலபடியாக வருணித்துக் கூறுதல் புயவகுப்பு என்னும் உறுப்பாகும். இது புறத்திணையுள் பாடாண் திணையைச் சார்ந்த பாடாண் பாட்டு ஆகும். பாடாண் பாட்டு ஒருவருடைய புகழ், வீரம், கொடை ஆகியவற்றைப் புகழ்ந்துரைப்பதாகும்.

வகுப்பு என்பது வண்ணக்கவியாகும். 8, 16, 32 அல்லது 64 கலைகளையுடையதாகவும், நான்கு எதுகைகளைப் பெற்ற தாகவும், எடுத்துக் கொண்ட ஒரு பொருளின் புகழையே வகுத்துக் கூறுவதாகவும் அமைவது இதன் இலக்கணமாகும்.

"எட்டுப் பதினாறெண்ணான் கெட்டெட்டென்றுநாற் பகுதியிற் கலைவகுத் தொருநா லெதுகையு மோனையு மிலங்கக் காட்டி யொருபொருட் புகழே யுரைப்பது வகுப்பே" என்பது அறுவகையிலக்கணம் (யாப்பு. வண்ண வியல்பு. 25).

பின்வரும் புயவகுப்புப் பாடல் பதினாறு கலைகளைக் கொண்டதாகும்.

(தனதான நந்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன தத்தத் தனந்தனா)

10. அரசாளு மிக்கதிரு வுடையாரில் நற்குணர்தம்
அரணாமெ னப்பெரிது சுற்றிப் புரந்தவே;
அரவேறு கத்திகையன் நிகர்பாத கத்தர்குடை
அழிவாகி டத்தகும்வி தத்தைச் செய்கின்றவே;
அனல்போல்வி ழித்துநெடு மலைபோலு றுக்கிவரும்
அடல்வேழம் ஒற்றையின்ம ருப்பைக் கவர்ந்தவே;
அனையோடு தித்தகொடி யவன்ஏவ லிற்றொடரும்
அசுராதி யர்க்கொலைசெய் மற்பெற் றெழுந்தவே;

இரவேயெ னக்ககன நிறைவாய்அ றற்பொழியும்
எழுமேகம் வெட்குறஓர் வெற்பைச்சு மந்தவே;
இடிநேர்தொ னிந்தவள வளையோடு சக்கரமும்
இசைவாய்என் உட்கனவில் உறறுக் கவின்றவே;

எமகால னைச்சடையின் மிசைமோ தருச்சுனன்இ
ரதமாவி னைக்கடவும் நட்பிற் பொலிந்தவே;
இடைநோவு றப்பலபல் கிரிபோல் எழுச்சியுறும்
எழில்மாமு லைத்தொகுதி முட்டக் கிடந்தவே;

பரலோக நட்பர்உணர் புகழ்மாறன் முற்பதின்மர்
பகர்பாடல் கட்டுளவம் ஒக்கப் புனைந்தவே;
பனிநீர்ம கட்கினிய மகன்ஆர்வ மிக்குறஓர்
படையேவு தற்பொருதி ருட்டைப் புரிந்தவே;
பலவாம்உ றித்தயிர்கொள் விளையாட லைச்சொல்பவர்
பகைபாவ முற்றறஒ ழிக்கத் துணிந்தவே;
பணிவான்உ யிர்க்கிறுதி மருவாது அருக்கன்உறு
பகலூடி ருட்டைவரு விக்கத் தெரிந்தவே;

நரகாதி பத்தியம்எய்து ஒருபாவி முத்திபெற
நகுபாசி லைச்சிறிய தட்டிட் டெறிந்தவே;
நலமேமி குத்தபசு வினம்வாழ் வுறத்திகிரி
நடுவேது ளைத்தகுழல் வைத்துப் பயின்றவே;
நகர்மாசு ணத்திறைவர் பலர்வாய் உரைத்திடினும்
நகையார்பு கழ்க்குமுடி வற்றுப் படர்ந்தவே;
நளிர்வீரை யிற்குலவும் இதயா லயற்கினிய
நவநீத கிட்டிணர்தம் வெற்றிப் புயங்களே.

*நளிர் விரையில் குலவும் இதயாலயற்கு இனிய*—பெருமை மிக்க வீரை நகரில் மகிழ்வுடன் வீற்றிருக்கும் இருதயாலய மருதப்பதேவர் என்றும் இன்பமுடன் போற்றி வணங்குகின்ற,

*நவநீத கிட்டிணர்தம் வெற்றிப் புயங்கள்*—நவநீத கிருட்டிணனுடைய வெற்றி மிகுந்த திருத்தோள்கள்.

*அரசாளும் மிக்க திருவுடையாரில்*—அரசாட்சி செய்யும் மேன்மை மிக்கோருள்,

*நற்குணர்தம் அரண் ஆம் என*—(பாண்டவர்கள் போன்ற) நல்ல குணங்களை உடையவர்களுக்குக் காவலாகும் என்னும் படியாக,

*பெரிது சுற்றிப் புரந்தவே*—அவர்களைச் சுற்றியிருந்து காப்பாற்றுவன;

*அரவு ஏறு கத்திகையன் நிகர் பாதகத்தர்*—பாம்புக் கொடியை யுடைய துரியோதனன் போன்ற தீயவர்கள்,

குடை அழிவாகிடத்தகும் விதத்தைச் செய்கின்றவே—குடை (ஆட்சி) ஒழியும்படியான செயல்களைப் புரிந்தன;

அனல்போல் விழித்து நெடுமலைபோல் உறுக்கிவரும்—நெருப்பைப் போன்ற கண்களுடன் பெரிய மலை போன்று குதித்துக்கொண்டு மிக்க கோபத்துடன் வருகின்ற,

அடல்வேழம் ஒற்றையின் மருப்பைக் கவர்ந்தவே—வலிமை பொருந்திய குவலயாபீடமென்னும் மதயானையின் தந்தங்களைப் பறித்து எறிந்தன;

அனையோடு உதித்த கொடியவன் ஏவலில் தொடரும்—தன் தாயொடு பிறந்த மிகக் கொடியவனான கம்சன் தூண்டி அனுப்பியதால் தொடர்ந்து வருகின்ற,

அசுராதியர்க் கொலைசெய் மற்பெற்று எழுந்தவே—(சாணூரன், முஷ்டிகன் ஆகிய) அசுரர்கள் பெருமல்லர்களாக வந்து பெரும் போர் செய்தபோது அவர்களை அப்பொழுதே கொன்று வெற்றி பெற்றன;

இரவே எனக் ககனம் நிறைவாய் அறற் பொழியும்—சூரிய ஒளியே தெரியாதவாறும் இரவு என்று சொல்லும்படியாகவும் இருள் சூழ்ந்து, ஆகாயம் முழுவதும் நீர் நிறைந்து, கல் மழையாகப் பொழிகின்ற,

எழுமேகம் வெட்குற ஓர் வெற்பைச் சுமந்தவே—புஷ்கலாவர்த்தகம் முதலிய ஏழு மேகங்களும் வெட்கப்படும்படியாகக் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்து ஏழுநாள் சுமந்தன;

இடிநேர் தொனித்த வள வளையோடு சக்கரமும்—இடியோசை போன்று ஒலிக்கும் மாட்சிமை கொண்ட சங்கும் சக்கரமும்

இசைவாய் என் உட்கனவில் உற்றுக் கவின்றவே—திருக்கரங்களில் பொருந்தி அடியேனுடைய உள்மனத்துள் அழகுற நிறைந்தன;

எமகாலனைச் சடையின் மிசைமோதும் அருச்சுனன்—காலகாலனாகிய சிவபெருமானை வெல்லும் அருச்சுனனுடைய,

இரத மாவினைக் கடவும் நட்பிற் பொலிந்தவே—தேரின் குதிரைகளைச் செலுத்தும் செயலினைக் கொண்டு பொலிவடைந்தன;

இடை நோவுறப் பலபல் கிரிபோல் எழுச்சியுறும்—(ஆயர்குலப் பெண்களின்) மெல்லிய இடுப்பு வருந்தும்படியாக உயர்ந்த மலைகளைப் போலப் பூரித்துக் கிடக்கும்,

எழில்மா முலைத்தொகுதி முட்டக் கிடந்தவே—இளமையும் அழகும் மிக்க மார்பகங்கள் யாவும் நெருங்கி அணையுமாறு விளங்கின,

பரலோக நட்பர் உணர் புகழ்மாறன் முற்பதின்மர்—வைகுந் தத்தை விரும்புபவர்களாலேயே உணரத்தகும் பெரும்புகழ் படைத்த சடகோபாழ்வார் முதலான பத்து ஆழ்வார்கள்,

பகர் பாடல்கள் துளவம் ஒக்கப் புனைந்தவே—சொல்லுகின்ற திவ்வியப் பாசுரங்களையெல்லாம் துளசி மாலையை மகிழ்ந்து அணிவது போன்று அணிந்தன;

பணிநீர் மகட்கு இனிய மகன் ஆர்வம் மிக்குற—கங்கையின் மைந்தனாகிய பீஷ்மர் மனம் மகிழ்ச்சியடையும்படி,

ஓர் படை ஏவுதற் பொருதிருட்டைப் புரிந்தவே—ஒப்பற்ற சக்ராயுதத்தை ஏவுவதைப் போலப் பாசாங்கு செய்தன;

பலவாம் உறித்தயிர்கொள் விளையாடலைச் சொல்பவர்—(ஆயர்பாடியில்) பல இல்லங்களிலும் மகளிர் உறிகளில் வைத்திருந்த தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்டதைப் புகழ்ந்து துதிப்போரின் (கண்ணனின் பால லீலைகளைக் கூறுவோருக்கு)

பகை பாவம் முற்றற ஒழிக்கத் துணிந்தவே—இன்னல்களை யெல்லாம் அழிக்க முற்பட்டன;

பணிவான் உயிர்க்கு இறுதி மருவாது—தன்னை எப்போதும் வணங்குபவனாகிய அருச்சுனன் உயிர்க்குத் தீங்கு ஏற் படாதவாறு,

அருக்கன் உறு பகலூடு இருட்டை வருவிக்கத் தெரிந்தவே—சூரியன் பிரகாசிக்கின்ற பகற்பொழுதிலேயே (தன் சக்கரப் படை கொண்டு மறைத்து) போர்க்களத்தில் இருளை வரவழைத்துக் காட்டின;

நரகாதிபத்தியம் எய்து ஒருபாவி முத்திபெற—நரர்களுக்குத் தலைமை ஏற்றுத் துன்புறுத்தி வந்த தீயோன் ஒருவன் முத்தி அடை[illegible]படி;

நகு பாசிலைச் சிறிய தட்டிட்டு எறிந்தவே—பச்சிலையைச் சிறிய தட்டிலிட்டு வீசின;

நலமே மிகுந்த பசுவினம் வாழ்வுற—மன்னுயிர்கட்கெல்லாப் பயன்மிக அளிக்கும் பசுக்கூட்டங்கள் மகிழும்படியாக;

திகிரி நடுவே துளைத்த குழல் வைத்துப் பயின்றவே—மேலே துளை செய்யப்பட்டுள்ள இசையெழும் மூங்கிற் குழலைத் தாங்கின;

நகர் மாசுணத் திறைவர் பலர் வாய் உரைத்திடினும்—ஊர்ந்து செல்கின்ற பாம்புகளின் தலைவனாகிய ஆதிசேடன் போல ஆயிரம் வாய் படைத்தவர்கள் பலர் கூடிப் போற்றிப் புகழ்ந்திடினும்;

நசைஆர் புகழ்க்கு முடிவற்றுப் படர்ந்தவே—விருப்பம் மிக்க கீர்த்திக்கு எல்லையே இல்லாமல் நிறைந்தன.

## குறிப்புரை

கண்ணபிரானின் திருத்தோள்களின் சிறப்பினைக் கூற வந்த ஆசிரியர், அத்திருத்தோள்கள் நல்லாட்சி புரிவோருக்கு நல்லரணாகவும், கம்சன் போன்ற கொடிய மனம் படைத்தவர்களைக் கொன்றழித்து அறத்தை நிலைநாட்டியதாகவும், பல அசுரர்களைக் கொன்றழித்ததாகவும் கூறுகின்றார். கண்ணன் வெற்பைச் சுமந்து பசுக்காத்ததும், சங்கு சக்கரதாரியாகத் தம்முடைய கனவில் காட்சியளித்ததும், பார்த்தனுக்குத் தேரோட்டியாகத் திகழ்ந்ததும், கோபியர்களையெல்லாம் தழுவிக் கிடந்த மாட்சிமையையும் விளக்குவர். ஆழ்வார்களின் பாசுரங்களை மாலையாகச் சூடியதையும், ஆயர்பாடியில் உறித்தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடியுண்டதையும், அருச்சுனன் உயிரைக் காக்கச் சூரியனை மறைத்ததையும் கூறுவர். தீயோரை அழித்ததையும் பசுக்கூட்டங்கள் மகிழும்படிக் குழலிசைத்ததையும் இப்பாடலில் சிறப்பிக்கக் காணலாம்.

வேழம்—கம்சனால் ஏவப்பட்ட குவலயாபீடம் என்னும் மதயானை. கொடியவன்—கம்சன். இவன் ஏவலிற் தொடர்ந்த அசுராதியர்—சாணூரன், சுபலன், தோசலன் ஆகியோர். ககனம்—ஆகாயம். எழுமேகம்—சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காளமுகி, நீல

வருணம் என்னும் ஏழு மேகங்கள். வெற்பு—கோவர்த்தனமலை. வளை—சங்கு. மா—குதிரை. கிரி—மலை. புகழ் மாறன்—நம்மாழ்வார்; வலிய வினைகட்கு மாறாக இருத்தலாலும் பாண்டி நாட்டில் திருவவதரித்ததனாலும் மாறனென்று திருப் பெயர். பதின்மர்—பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேக ராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய பத்து ஆழ்வார்கள். துளவம் — துளவு — துழாய் — அதனாலாகிய மாலைக்குக் கருவியாகுபெயர். பனிநீர் மகட்கு இனிய மகன் என்றது பீஷ்மரை. பணிவான்—அருச்சுனன். அருக்கன்—சூரியன். பாவி—இரணியன். புயங்கள்—தோள்கள். புஜம் என்பதன் தற்பவம்.

**குவலயாபீடத்தின் மதம் அடக்கின வரலாறு**: வில்விழா என்கிற வியாஜம் வைத்துக் கம்சனால் வரவழைக்கப்பட்டு, கண்ணன் பலராமன் ஆகிய இருவரும் கம்சன் அரண்மனையை நோக்கிச் செல்லுகையில், அவனது அரண்மனை வாயில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயா பீடமென்னும் மதயானை கோபத்துடன் வர, கண்ணன், பலராமன் ஆகிய இருவரும் அதனை எதிர்த்து அதன் தந்தங் களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை யெடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக் கொண்டு அடித்து அந்த யானையை உயிர் தொலைத்துவிட்டு உள்ளே போயினர் என்பதாம்.

'துங்க மதக்கரியின் கொம்பு பறித்தவனே' (பெரியா. திரு. 1-5) என்றும், 'பொருகரியின் கொம்பொசித்தாய்' (பெரியா. திரு. 2-7) என்றும் பெரியாழ்வார் இதனைக் குறிப்பர்.

'புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதான்' (பெரிய திரு. 6-5) எனத் திருமங்கையாழ்வார் இதனைக் குறிப்பர்,

'மலைகடகளிறு வதைத்தனை' (திருவ. கலம். 1) என்று பிள்ளைப்பெருமாளையங்காரும், 'மதமடக்கினை' (அழ. கலம். 1) என அழகர் கலம்பகமுடையாரும் இதனைச் சுட்டுவர்.

**அசுராதியராகிய மல்லரை அழித்த வரலாறு** : கம்சனால் வலிய அழைக்கப்பட்டுக் கண்ணன் பலராமன் ஆகியோர் அவனது

சபையிற் செல்லுகையில், அவர்களை எதிர்த்துப் பொருது கொல்லும்படிக் கம்சனால் ஏவப்பட்ட சாணூரன், முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும் போர் செய்ய, அவர்களை யெல்லாம் கண்ணனும் பலராமனும் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டனர் என்பதாம்.

'தெருவின்கண் தீமைகள் செய்து சிக்கென மல்லர்களோடு, பொருது வருகின்ற பொன்னே' (பெரியா. திரு. 2-7-6) என்பார் பெரியாழ்வார்.

'தூதிற் சென்றப் பொய்யறைவாய் புகப்பெய்த மல்லர் மங்கக் காய்ந்தானை' (பெரிய. திரு. 2-5-5) என்பார் திருமங்கையாழ்வார்.

'புவிகிடுகிடென் றதிர வெதிர் தொடையறைந்துசமர்
பொருமலர் கலங்க முகமிடித்து மிகநுழைந்தன'
(அழ. கலம். 11)

என்பது அழகர் கலம்பகம்,

வில் வலிமை மிக்க அருச்சுனனுக்குத் தேரோட்டியாகத் திகழ்ந்த கண்ணபிரானைப் போற்றும் ஆழ்வார், 'பாரித்த மன்னர் படப் பஞ்சவர்க்கு அன்று தேருய்த்தகை' என்றும், 'தேரொக்க வூர்ந்தாய் செழுந்தார் விசயற்காய்' என்றும், 'விசயன் மணித்திண் தேர் ஊர்ந்தவன்' என்றும், 'பார்த்தன் சிலை வளையத் திண்தேர்மேல் முன்னின்ற செங்கண்மால்' என்றும், 'பார்த்தற்குத் தேரொன்றை யூர்ந்தார்' என்றும் (பெரியா. திரு. 1-6-6; 1-8-6; 1-9-3; 2-1-2; 2-6-5) காட்சிப் படுத்துவர்.

கண்ணபிரான் வேறு வேறு உருவாய்க் கோபியர் வீடுதோறும் விளங்கி அம்மடந்தையர் அனைவரையும் ஒருசேர மகிழ்வித்த மாண்பை யுணர்த்த வந்த ஆசிரியர் 'எழில்மா முலைத்தொகுதி முட்டக் கிடந்தன' அத்தோள்கள் எனக் கூறினார்.

திருமால், மலர்ந்த பூங்கொத்துக்களோடு கூடிய துளசியினது மனங்கமழுகின்ற கண்ணியைச் சூடியிருப்பதில் பெருமகிழ்ச்சி கொண்டவர். 'நக்கலர் துழாஅய் நாறினர்க்

கண்ணியை' (பரி. 4-58) என்பது பரிபாடல். 'மிக்க பராபர மூர்த்தி துளபத்தாமா' (எம். சத. 96) என்றே போற்றுவர் ஆன்றோர். பதின்மர் பாடும் பெருமானாக விளங்கும் கண்ணபிரான் அப்பதின்மர் பாடும் பாசுரங்களையே துளப மாலையாகப் புனைந்து அவர்கட்கு அருளினார் என்பர். மற்றெல்லா உலகங்களிலும் உயர்ந்த உலகமாகிய வைகுந்தத்தில் உறைபவராதலால் பரலோக நட்பர் என்றார்.

**வெற்பைச் சுமந்த வரலாறு** : திருவாய்ப்பாடியில் ஆயர்களெல் லோருங் கூடி மழையின் பொருட்டாக இந்திரனை ஆராதித்தற் கென்று சமைத்த சோற்றை அவனுக்கு இடாதபடி விலக்கிய கண்ணன் கோவர்த்தனமலைக்கு இடச்சொல்லித் தாமே ஒரு தேவதா வடிவமாய் அமுது செய்தருளினார். அப்பொழுது இந்திரன் பசிக்கோபத்தாலே புட்கலாவர்த்தம் முதலான ஏழு மேகங்களை ஏவி, ஏழுநாள் விடாது கல்மழையைப் பெய்வித் தான். அதனால் கன்றுகளும் பசுக்களும் ஆயர்களும் ஆய்ச்சிமாரும் துன்புற்றனர். அவர்தம் துன்பத்தைக் கண்ட கண்ணபிரான் கோவர்த்தன மலையையே ஒரு குடையாகத் தூக்கிப் பிடித்து அனைவரையும் காத்தார் என்பதாம்.

'மதுசூதனெடுத்து மறித்த மலை', 'செப்பாடுடைய திருமாலவன் தன் செந்தாமரைக் கைவிர லைந்தினையும் கப்பாக மடுத்து மணி நெடுந்தோள் காம்பாகக் கொடுத்துக் கவித்த மலை', 'சலமா முகில் பல்கணப் போர்க்களத்துச் சரமாரி பொழிந்தெங்கும் பூசலிட்டு, நலிவானுறக் கேடகம் கோப்பவன்போல் நாராயணன் முன்முகங்காத்தமலை' (பெரியா. திரு. *3-5-1-11*) என்பார் ஆழ்வாரும்.

இதையே, 'மலைதலைகவிழ எடுத்தனை' (திருவர. கலம். *1*) என்றும், 'ஏந்திய குடையும் மைவரையே' (அழ. கலம். *23*) என்றும் பிற கலம்பகங்களிலும் சுட்டுவர்.

ஆசிரியர் தம் உட்கனவில் கண்ணபிரான் சங்கு சக்கரதாரி யாகக் காட்சியளித்ததைத் தன்வரலாற்றில் விளக்குவர். 'நீலமேனியும் தாமரைக் கண்களும், நிலவுசெந்துவர் வாயும், பாலதேநிகர் சங்கமும், சக்கரப் படையும், ஒண்பணியாதிக் கோலம் யாவும்நன் கமைதரக் காட்டினன்' (குருபர. *24* விட்டுணு தரிசன சருக்கம். *15*) என்பர் இவர்.

'வெள்ளை விளிசங்கு வெஞ்சுடர்த் திருச்சக்கர மேந்து கையன்' (பெரியா திரு. 4-1-7) என்பார் ஆழ்வாரும்.

பாரதப் போரில் மூன்றாம் நாள் வீடுமனது போர் கண்டும் விசயன் வாளா இருக்கவே, கண்ணன் ஆழியுடன் தேரிலிருந்து இறங்கிய நிகழ்ச்சியை அடுத்துக் கூறுகிறார்.

கண்ணன் குழந்தைப் பருவத்தே ஆயர்பாடியில் பல இல்லங்களிலும் உறித்தயிரும் வெண்ணெயும் திருடியது ஓர் அருமையான விளையாட்டாகும்.

'பொத்த வுரலைக் கவிழ்த்ததன் மேலேறி
தித்தித்த பாலும் தடாவினில் வெண்ணெயும்
மெத்தத் திருவயிறார விழுங்கிய அத்தன்'
(பெரியா. திரு. 1-9-7)

என்பார் பெரியாழ்வார்.

'சேப்பூண்ட சாடுசிதறி, திருடி நெய்க்கு
ஆப்பூண்டு நந்தன்மனைவி கடை தாம்பால்
சோப்பூண்டு துள்ளித் துடிக்கத் துடிக்கஅன்
றாப்பூண்டான்'
(பெரியா. திரு. 2-1-5)

என்றும்,

'செப்பிள மென்முலைத் தேவகி நங்கைக்கு
சொப்படத் தோன்றித் தொறுப்பாடி யோம்வைத்த
துப்பமும் பாலும் தயிரும் விழுங்கிய அப்பன்'
(பெரியா. திரு. 2-1-6)

என்றும் கண்ணன் உறித்தயிர்கொள் விளையாடலைச் சொல்வார் ஆழ்வார். இவ்வாறு கண்ணன் 'திருடியுண்டான்' எனப் பாடிப் பரவுபவர்களின் பகை பாவமெல்லாம் ஒழிக்க உறுதி பூண்டவன் கண்ணபிரான்.

**அருச்சுனனைக் காக்க இரவியை மறைத்த வரலாறு:** பாரதப் போரிலே பதின்மூன்றாம்நாளில் அருச்சுனன் தன் மகனான அபிமந்யுவைக் கொன்ற சயத்திரதனை மறுநாள் சூரியன் மறை விற்கு முன்னே கொல்வதாகவும், கொல்ல முடியாமற் போனால் தீயிற்புகுந்து இறப்பதாகவும் சபதம் செய்தான். அவன்

சபதத்தை நிறைவேற்றியருளுதற் பொருட்டுக் கண்ணபிரான் பதினான்காம் நாட்போரில் பகலிலே சூரியனைச் சக்கரத்தால் மறைத்து வைக்க, அதுவரையில் இருந்தவிடந் தெரியாதபடி ஒளித்திருந்த அச்சயந்திரதன் அப்பொழுது சூரியன் மறைந்தது என்று எண்ணி வெளியில் வர, கண்ணபிரான் திருவாழியை வாங்கியருள, அருச்சுனன் அச் சைசயத்திரதனைக் கொன்றான் என்பர்.

'ஆழிகொண் டன் றிரவி மறைப்பச் சயத்திரதன் தலையை, பாழிலுருளப் படை பொருதவன்' (பெரியா. திரு. 4-1-8) என்பார் ஆழ்வாரும்.

சயிந்தவனை யிப்பகலே கொல்வேன் தப்பில்
தழலிறப்பே னெனவிசயன் சபதங் கூறப்
பயந்தவன்பெட் டிக்குளுறச் சக்க ரத்தால்
பகலைமறைத் திரவாக்கித் தருமன் சேனை
மயங்கியிடச் சயிந்தவனு மொளிப்பு நீங்கி
வரவிரவைப் பகலாக்கி விசயா வெய்யென்
றியம்பியந்தச் சயிந்தவனை வதைத்துப் பார்த்தன்
இறவாமற் காத்தனையே எம்பி ரானே.

(எம்.சத.63)

என்னும் பாடலால் இவ்வரலாறு விளக்கமுறும்.

**பசுவினம் மகிழும்படியாகக் குழலூதியது** : வேயின் குழலூதி வித்தகனாய் நின்ற ஆயனாம் கண்ணனின் குழலிசையால் விண்ணவரும் மண்ணினுள்ள உயிர்கள் அனைத்தும் மகிழ்ந்ததைப் பெரியாழ்வார் தம் திருமொழியில் (பெரியா. திரு 3—6) பலவாறு எடுத்துரைப்பர். கண்ணன் தன் திருக்கைகளால் குழலினை ஏந்தி இசைத்தபொழுது அங்கிருந்த பசுவினங்களெல்லாம் செவியுற்று அசைவற்று ஆனந்தப் பரவசமுற்றன என்பார் ஆழ்வார்.

சிறுவிரல்கள் தடவிப் பரிமாறச்
செங்கண்கோடச் செய்யவாய் கொப்பளிப்ப
குறுவெயர்ப் புருவம் கூடலிப்பக்
கோவிந்தன் குழல்கொடு தினபோது,

பறவையின் கணங்கள் கூடுதுறந்து
வந்துசூழ்ந்து படுகாடு கிடப்ப
கறவையின் கணங்கள் கால்பரப்பிட்டுக்
கவிழ்ந்திறங்கிச் செவியாட்ட கில்லாவே.
(பெரியா. திரு 3.-6-8)

என்பது பாசுரம்.

தெறிந்த கன்றுவாய் வைத்தவம் முலையுணா திரண்டு
கறித்த புல்லுணா கறவைபூங் கற்பகச் செங்கேழ்
முறிக்கொ ழுங்கவின் கவற்றிய முகிணகைச் செவ்வாய்
மறைக்கொ ழுந்தின்வே யின்னிசை யஞ்செவி மடுத்தே.
(பாக. 10-8-30)

என்பது பாகவதம்.

கண்ணனின் குழலிசையைக் கேட்டமாத்திரத்தில் துள்ளிய கன்றுகள் தம் தாய்ப்பசுவினிடம் முலை உண்ணப் புகுந்ததையே மறந்து முலை உண்ணாதவாயின. வாயினில் புல்லையெடுத்த பசுக்கள் கடித்த புல்லையும் உண்ணாவாயின. அனைத்தும் வேயின்னிசையில் மயங்கிக் களித்தன என்பதை மேற்காணும் பாடலும் புலப்படுத்தும்.

இப்பாடலுள், பதினாறாங்கலையில் உள்ள 'வெற்றிப் புயங்கள்' என்னும் எழுவாய் முதற்கலையில் உள்ள 'புரந்தவே, முதல் பதினைந்தாங் கலையிலுள்ள 'படர்ந்தவே' முடிய உள்ள பதினைந்து பயனிலைகளைத் தனித்தனியே பெற்று முடிந்தது. இதனை இறுதிநிலைத் தீபகஅணி என்பர்.

இது, முப்பத்திரண்டுசீர் **ஆசிரிய வண்ண விருத்தம்**. 'தனதான தத்ததன தனதான தத்தன தனதான தத்ததன தத்தத் தனந்தனா' என்பது சந்தக் குழிப்பாம். இது குறுஞ்சீர் வண்ணமாம் : 'குறுஞ்சீர்வண்ணம் குற்றெழுத்துப் பயிலும்' என்றது காண்க.

## நேரிசை வெண்பா

11. புயல்நேரு மேனிப் புருடோத் தமனைக்
கயல்நீர்க் கழனிவளங் காணும்—வியனார்ந்த
வீரைப் பதியில் விரும்புநலம் பெற்றபின்மற்
றாரைப் பொருட்படுத்த லாம்?

புயல் நேரும் மேனிப் புருடோத்தமனை—நீலமேகம் போன்ற நிறத்துடன் கூடிய மேனி கொண்ட திருமாலை,

கயல்நீர்க் கழனிவளம் காணும்—கயல் மீன்கள் நிறைந்து காணும் நீர்வளம் மிக்க வயல்களையுடைய,

வியனார்ந்த வீரைப்பதியில்—பெருமை மிக்க வீரகேரளம் புதூரில் (கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளவாறு),

விரும்புநலம் பெற்றபின்—யான் விரும்பிய வண்ணம் கண்டு களித்ததன் பின்பு,

மற்று ஆரைப் பொருட்படுத்தலாம்—அடியேன் இனி யாரை ஒரு பொருட்டாகக் கருதுவேன்? (கருத மாட்டேன் என்பதாம்)

## குறிப்புரை

வீரைப்பதியில் வீற்றிருக்கும் கண்ணபிரானே பரம்பொருள் எனதெளிந்துணர்ந்த பின்னே இவ்வுலகில் வேறு எப்பொருளும் ஒரு பொருட்டல்ல என்பது குறிப்பு.

கண்ணனின் திருமேனி நிறத்திற்கு மேகத்தை உவமையாகக் கூறுவர். 'கரும்புயல் வண்ணத் தண்ணல்' (பாக. 8-2-34) என்றும், 'பாற்றிரைத் துயிலும் பச்சைப் பசும்புயல்' என்றும், 'மாலையந்துழாய் மரகதப் பசும்புயல்' (பாக. 10-1-24,33) என்றும் ஆன்றோர் கூறுவர்.

பச்சைப் பசும்புயல் வண்ணனான திருமால் இரணியனைக் கொன்றழித்த பின்னர் அவன் மகன் பிரகலாதனின் அன்பினை மெச்சியபடியே அவன் வேண்டும் வரம்கேட்குமாறு வினவினார். அப்பொழுது பிரகலாதன், 'நின்னை வழிபடும் அன்பே அன்றி வரம் வேறு வேண்டுவதில்லை, என்றான்.

விழைவற வெறிந்தார் நாடும்
விழுப்பெருஞ் சுடரே! தூய
பழமறைக் கொழுந்தே! பச்சைப்
பசும்புயல் வண்ணா! நின்னை
வழிபடு மன்பே யன்றி
வரமெவன் பெறுவ தென்னாத்
தொழுதனன் வழுத்த லுற்றான்
தூயபே ரறிஞ னம்மா, (பாக. 7-2-95)

(இங்கு விழைவு—ஆசையை. அற எறிந்தார்—முழுதும் நாசம் செய்தவர். அறிஞன்—பிரகலாதன். எவன்—எதை. என்னா—என்று கூறி)

'கூடும் அன்பினிற் கும்பிடலே யன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்'

(பெரிய. திருக்கூட்டச். 8)

என இவ்வாறு ஆன்றோர் வாக்கின்படியே ஆசிரியரும், பரம் பொருளான கண்ணபிரானை வீரைநகரில் தரிசித்து மகிழ் வதையே பெரும் பேறாகக் கருதுகிறார்.

இது, இருவிகற்ப **நேரிசை வெண்பா.**

## கட்டளைக் கலித்துறை

**12. ஆம்பலன் றோலிடச் சென்றளித் தாய்என் றறைதலினால்
நோம்பல வாதனை யுந்தவிர்ப் பாய்என்ன நோக்குகின்றேன்
வேம்பல என்சொல் அறிந்தே மிகவும் விரும்புகின்றாய்
தேம்பலம் தீர்த்தருள் வாய்வீரை மேவிய சீதரனே.**

வீரை மேவிய சீதரனே-வீரகேரளம்புதூரினை விரும்பி வந்தமர்ந்திருக்கும் திருமகள் மகிழ் மார்பா,

ஆம்பல் அன்று ஓலிடச் சென்று அளித்தாய் என்று அறை தலினால்—கசேந்திராழ்வான் அன்று முதலை வாயினில் அகப்பட்டபொழுது 'ஆதிமூலமே' என்று கூவி அபயமிட்டு அழைத்தவுடன் சென்று காத்தீர் எனப் பலரும் கூறுவதால்,

நோம்பல வாதனையும் தவிர்ப்பாய் என்ன நோக்குகின்றேன்-அடியேனுக்குற்ற பல பெருந்துன்பங்களை யெல்லாம் தீர்த்தருள்வீர் என்றே உம்மை நோக்கியுள்ளேன்.

வேம்பல என்சொல் அறிந்தே மிகவும் விரும்புகின்றாய்—என்னு டைய பாடல்கள் அனைத்தும் இனியவை என்பதையும் மிகுதியாகவே தெரிந்து வைத்துள்ளீர்!

தேம்பு அலம் தீர்த்து அருள்வாய்—மெலிதலைத் தருகின்ற சஞ்சலமெல்லாம் ஒழித்துக் காப்பீராக!

## குறிப்புரை

கசேந்திரன் கூப்பிட்ட குரலுக்கு விரைந்து வந்து காத்த கண்ணபிரான் தம்முடைய வேண்டுதல் மொழிகளையும் ஏற்றருளுமாறு வேண்டுகிறார் ஆசிரியர்.

ஆம்பல்—யானை; க சே ந் தி ர ன். ஓலிடல் —அபயக் குரலிடுதல், என்ன—என.

அபராதமா கியபல்சரக் கடலாகவோ டமதேற்றியே
விபரீதநோ யலையிற்குளே விடதின்றதூழ் வினையென்
செய்வேன்
இபராசனைக் கரையேற்றுநீ எனையேற்றலிங் கரிதல்லவே
நபராசனே சுபராசனே நாராயணா நாராயணா.
(வடவே. சத. 13)

என அடியார் வேண்டுவது போன்றே தம்முடைய ஊழ்வினை யால் வந்துற்ற பல துன்பங்களையும் போக்கியருள வருமாறு வேண்டுகிறார் இவர். திருமால் அழைத்தும் வாராதிருக்கிறார் எனினும் தம்முடைய பாடல்களை அருள்கூர்ந்து கேட்டருளு கிறார் என்பதை யுணர்ந்த ஆசிரியர் அத்திருமாலின் சேவடியையே பற்றிப் பரவுகின்றார்.

காலசக் கரத்தொடு வெண்சங்கம் கையேந்தினாய்
ஞாலமுற் றுமுண்டுமிழ்ந்த நாராயண னேயென்றென்று
ஓலமிட்டு நானழைத்தா லொன்றும்வா ராயாகிலும்
கோலமாமென் சென்னிக்குன் கமலமன்ன குரைகழலே.
(திருவாய். 4-3-6)

என்னும் நம்மாழ்வாரின் மொழிக்கேற்பவே இவரும் கருதி யழைக்கக் காணலாம்.

செல்வத்திற்கிருப்பிடமாகிய இ ல க் கு மி தேவியை மார்பிடத்தே கொண்டவராதலால் கண்ணபிரானைச் சீதரனே என அழைக்கின்றார்.

இது நேரசை முதலாகி வந்த **கட்டளைக் கலித்துறை**.

## அடிமடக்கு

### கொச்சகக் கலிப்பா

13. சீதளநீர்ப் பதத்தானே சீதளநீர்ப் பதத்தானே
நாதருக்கார் தம்மானே நாதருக்கார் தம்மானே
காதலறத் தடுப்பானே காதலறத் தடுப்பானே
வீதனையூர் வீரையனே வீதனையூர் வீரையனே.

சீதள நீர் பதத்தானே—தாமரையின் தன்மையைப் பெற்ற திருவடிகளை உடையவரே!

சீதள நீர் பதத்தானே—குளிர்ச்சி மிக்க பாற்கடலாகிய இடத்தை உடையவரே!

நாத ருக்கார் தம்மானே—ஒலிச்சிறப்பு மிக்க வேதங்களை ஓதும் அந்தணர்களின் தலைவரே!

நாதருக்கு ஆர்த்து அம்மானே—ஞானிகளுக்குத் தம்மையே அநுபவிக்கும்படி அருளும் தலைவரே!

காது அல் அற தடுப்பானே—கொல்வதைப்போல் துன்புறுத்துகின்ற அறியாமையாகிய இருட்டு நெருங்காதபடித் தூரத்தே விலகச் செய்பவரே!

காதல் அறத்து அடுப்பானே—விரும்பத்தக்க தருமநெறியில் ஒழுகுபவர் மாட்டுத்தாமே வந்து பொருந்துபவரே!

வீதனை ஊர் வீர ஐயனே—கருடனாகிய பறவையைச் செலுத்துகின்ற வீரமிக்க தலைவரே!

வீதல் நை ஊர் வீரையனே — வறுமையை வருத்துகின்ற ஊராகிய வீரகேரளம்புதூரின் இறைவனே!

### குறிப்புரை

சீதளநீர்ப் பதத்தானே என்பதற்குக் குளிர்ச்சி மிக்க ஆகாய கங்கை தோன்றுகின்ற திருவடிகளை உடையவரே எனினுமாம். நீர் என்னும் சொல் கடலை உணர்த்தி இடத்தால் பாற்கடலைச் சுட்டியது. பதம்—திருவடி நிழல். ஆர்த்து—ஆரச் செய்யும்,

ஆர்த்து அம்மான்—வினைத்தொகை. வீதனை என்புழி தன் பகுதிப்பொருள் விகுதி. வீர ஐயன்—வீரையன் அகரந் தொக்கது. வறுமையை வறுத்துகின்ற ஊர் என்பது செல்வத்தை வளர்க்கின்ற திருமகளின் திருவருட் பார்வைக்கு இலக்காகிய ஊர் என்றபடி. நை ஊர்—வினைத்தொகை.

இப்பாடலில் பாடகமடக்கு என்னுஞ் சொல்லணி பயின்றது.

இது, எல்லாச் சீருங் காய்ச்சீர்களாகிய **கொச்சகக் கலிப்பா**.

## தவம்

தவத்தை விலக்கிப் பகவத் தியானத்தை வற்புறுத்துதல் தவமென்னும் உறுப்பின் இலக்கணம். இம்மை மறுமைப் பயன் களை நாடி உடம்பை வருத்திக் கொண்டு கொடிய நோன்பு களை மேற்கொள்வதைவிட இப் பாட்டுடைத் தலைவனைச் சரணடைவதும், அவன் புகழ் பேசுவதுமே போதும். அதுவே எல்லாப் பயனையும் தரும் என்னும் கருத்தில் இப்பகுதி அமையும். இதனை, ஆன்றோர் பாடல்கள் பலவற்றிலும் கூறக் காணலாம். காட்டாக.

> "ஊன்வாட யுண்ணா துயிர்காவலிட்டு உடலிற் பிரியாப்
> புலனைந்தும் நொந்து தான்வாட வாடத்தவஞ்
> செய்யவேண்டா...
> ...தில்லைத் திருச்சித்ரகூடஞ் சென்று சேர்மின்களே"
> (பெரிய. திரு. 3-2-1)

என்பார் திருமங்கையாழ்வார்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

14. ஐயமுற்றுத் தவமெதுவோ என்றேங்கித்
தடுமாறும் அறிவி வீர்காள்
செய்யநிறப் புட்பரிமேல் திருவொடுநா
ரணனிருந்த தீர்க்கம் நாடிக்
கையறவில் லார்வளர்சீர் வீரைமுதல்
ஊர்தோறும்போய்க் கவிகள் பாடித்
துய்யருக்குஆ ருயிராகித் துட்டருக்கோர்
எமனாகித் துணிதல் தானே.

ஐயமுற்றுத் தவம் எதுவோ என்று ஏங்கி—இறைவனைச் சென்றடைய முடியுமோ முடியாதோ என உள்ளத்தில் மிக்க சந்தேகத்துடன், உலக பந்தங்களையெல்லாம் நீக்கியும் அவை நீங்காது தவம் என்பது எதுவாகயிருக்கும் என்று பலவாறு ஏக்கமுற்று,

தடுமாறும் அறிவிலீர்காள் — மனங்கலங்கும் அறிவற்ற மூடர்களே!

செய்யநிறப் புட்பரிமேல் திருவொடு நாரணன் இருந்த தீர்க்கம் நாடி—சிவந்த வண்ண இறகுகளுடன் கூடிய கருடவாகனத்தின் மேலே இலக்குமிதேவியுடன் நாராயணன் வீற்றிருக்கும் பரிபூரண கோலத்தை மனத்தில் விரும்பி யிருந்து,

கையறவு இல்லார் வளர் சீர்வீரைமுதல்—ஒழுக்கமின்மை என்பதே இல்லாத செயலோங்கு தன்மை மிக்க பல பெரியோர்கள் வாழ்கின்ற பெருமையுடன் கூடிய வீரகேரளம்புதூர் முதலான,

ஊர்தோறும் போய்க் கவிகள் பாடி—திருமால் உறையும் திவ்வியத் தலங்களுக்கெல்லாம் சென்று பாசுரங்களை இசைத்து மகிழ்ந்து,

துய்யருக்கு ஆருயிர் ஆகி—மனம் மொழி மெய்யினில் மிகவும் பரிசுத்தமானவர்கட்கெல்லாம் பெருந்துணையாக இருந்து,

துட்டருக்கோர் எமன் ஆகித் துணிதல் தானே—தீயவர்கட்கெல்லாம் ஒரு காலனைப் போல அழிக்கும் துணிச்சலுடன் செயல்படுவதே பெருந்தவமாம்.

## குறிப்புரை

இறைவன் பேரருளை அடையவேண்டுமென்பதற்காக உடலை வருத்தித் தவம் மேற்கொள்ள வேண்டியதில்லை. அக் கண்ணபெருமான் காட்சி நல்கும் தலந்தோறும் சென்று தரிசித்துப் பாடி மகிழ்ந்து, நல்லோருக்கு உற்ற துணையா யிருந்து தீமைகளை ஒழிப்பதே பெருந்தவமாகும் என்பது கருத்து.

"காயோடு நீடு கனியுண்டு வீசு கடுங்கால் நுகர்ந்து நெடுங் காலம் ஐந்து தீயோடு நின்று தவம் செய்ய வேண்டா, திருமார்

பனைச் சிந்தையுள் வைத்து மென்பீர்" (பெரிய. திரு. 3-2-2) என்பார் திருமங்கையாழ்வார்.

பொருப்பிடை யேநின்றும் புனல்குளித்தும் ஐந்து
நெருப்பிடையே நிற்கவும்நீர் வேண்டா—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர் தூய்க்
கைதொழுதால்
அஃகாவே தீவினைக ளாய்ந்து.

(பேயா. இயற். மூன். 79)

என்பார் பேயாழ்வார்.

"காயிலை தின்றுங் கானி லுறைந்தும் கதிதேடித் தீயிடை நின்றும் பூவலம் வந்தும் திரிவீர்காள்! தாயினும் அன்பன் பூமகள் நண்பன் தடநாகப் பாயன் முகுந்தன் கோயில் அரங்கம் பணிவீரே'' (திருவர. கல. பா. 18) என இதே கருத்தைக் கூறுவார் பிள்ளைப்பெருமாளையங்கார்.

"தேறாது வனம்போய் யௌவனமும் போனீர் சிறுகிழங்கைக் கொண்டு பெருங்கிழங்கைக் கொண்டீர், ஏறாத பலஞ் சுவைத்தோர் பலமுங் காணீர் இலைமேய்ந்தும் பேறிலையே இதுவோ யோகம், மாறாது சருகு தின்று சருகுபட்டீர் வாயு நுகர்ந்தீர் வாய்மௌனமானீர், ஆறாத தீயினிற்பீர் தீயரே நும் மருந்தவமே தவம் அழகர்க் காட்படீரே'' (அழ. கலம். பா. 14) என்னும் அழகர் கலம்பகப் பாடலில், உபாயமறியாமையால் தவம் என்ற பெயரில் வீணாக உடம்பை அன்பில்லாமல் வருத்துவோரைத் 'தீயரே' என்றார். எனவே அத்தகைய பொய்த்தவமுடையோரையே 'துட்டர்' என இந்நூலாசிரியரும் குறிப்பிட்டு அத்தகையோரை விலக்க வேண்டுகிறார்.

இது, முதல் நான்கும் காய்ச்சீர்களும், மற்றை யிரண்டும் மாச்சீர்களுமாகிய **அறுசீராசிரிய விருத்தம்.**

## எழுசீர் ஆசிரிய விருத்தம்

**15. துணிவொரு கோடி பொருந்தினும், முதுநூல்**
**சொல்லற முழுதியற் றிடினும்**
**அணி நகைத் துவர்வாய் அரம்பையர் வலிதுற்று**
**அணைதலா தியநலம் பெறினும்**

பணியணைத் திருப்பாற் கடல்விடுத் தெழுந்து
 பார்புகழ் வீரையம் பதியில்
மணிமுகில் எனநின் றருள்செய்வான் மலர்த்தாள்
 மறந்தவர் பிறந்துழல் வாரே.

துணிவு ஒருகோடி பொருந்தினும்—இவ்வுலகச் செயல்களில் முழுவதுமாக ஈடுபட்டுப் பொருந்தினாலும்

முதுநூல் சொல்லற முழுது இயற்றிடினும்—பழமையான நன்மொழிகள் நிறைந்த நூல் பல எழுதினாலும்

அணிநகைத் துவர்வாய் அரம்பையர் வலிது உற்று அணைதல் ஆதிய நலம் பெறினும்—அழகு மிக்கதும் செம்பவள நிறத் துடனும் விளங்கும் புன்னகை யிதழ்களையுடைய தேவ லோகக் கன்னியர் வலிய வந்து அணைக்கும் சுகமே அடைந் தாலும்

பணிஅணைத் திருப்பாற்கடல் விடுத்து எழுந்து—திருப்பாற் கடலில் ஆதிசேடன் மீது அறிதுயில் கொண்டிருப்பதை விட்டு எழுந்து

பார்புகழ் வீரையம் பதியில்—இப்பூவுலகே போற்றி செய்யும் வீரகேரளம்புதூர் என்னும் திருத்தலத்தில்

மணிமுகில் என நின்று அருள் செய்வான்—அழகுமிக்க கருமேகம் போன்று கோலங்கொண்டு காத்தருள்கின்ற கண்ணபெருமானின்

மலர்த்தாள் மறந்தவர் பிறந்து உழல்வாரே—தாமரையை யொத்த திருவடிகளைத் தொழுது போற்றி செய்யாதவர் இவ்வுலகில் மீண்டும் மீண்டும் பிறந்தும் இறந்தும் துன்பமே பெறுவர்.

## குறிப்புரை

கண்ணன் திருவடிப் பெருமையினை வலியுறுத்திக் கூறுகிறார் ஆசிரியர். கண்ணபிரான் மலர்த்தாளை வணங்கு வதே வேலை என்பர் இவர்.

எய்துகடற் றீயெரித்தா னீர்ங்கவுண்மா யானைதுயர்
கொய்துதொண்ட ருள்ளக் குவைதீர்த்தான்—பெய்துவை
மாலை யரங்கன் மலர்த்தாள் கருதுமதே
வேலைநமக் கெப்பொழுது மே.

(திருவ. திருவா. வெண்பாவந்தாதி 85)

பணியணை—பாம்பணை. மணிமுகில்—மணிநிறவண்ணனாகிய கண்ணபிரான். 'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்' 'மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும் அன்னவர்தம் பாடலொடும் ஆடலவை யாதரியேன்', 'உம்பருலகாண்டு ஒருகுடைக்கீழ் உருப்பசிதன் அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்' எனப் பலவாறு கூறும் குலசேகராழ்வார், 'மன்னிய தண் சாரல் வடவேங்கடத்தான் தன் பொன்னியலும் சேவடிகளையே கண்டு களித்திருப்பேன்' என்பர் (பெரு. திரு. 4-2-11).

'அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே யென்னும் இச்சுவை தவிர யான்போய் இந்திர லோக மாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றே தொண்டரடிப்பொடியாழ்வாரும் கூறுவர் (திருமா. 2).

திருமாலின் திருவடிகளையே நினைந்து உய்வதற்கும் மாதவம் செய்திருக்க வேண்டுமென்பார் இந்நூலாசிரியர்.

என்ன கூறினும் அளவில்பல் பிறப்பிடை
ஏன்றமா தவஞ்செய்த
நன்ன லத்தின ரேகுரு பரன்பத
நளின நாண் மலர்ச்சீலம்
இன்ன வாறெனத் தெரிவர்மற் றவர்கள்பிஞ்
சினிற்பழுத் துதிர்ந்தாற்போல்
இன்னல் கூர்மனம் நிலைக்குமுன் கெடமுயன்
றின்பமற் றலைவாரே. (குருபர. 2-19)

என மக்கள் பிறந்துழல்வதன் காரணத்தையும் உவமையுடன் இவரே விளக்குவர்.

இது, முதல் மூன்று ஐந்து ஆறாஞ்சீர்கள் விளச்சீர்களும் இரண்டு நான்கு ஏழு ஆகியன மாச்சீர்களுமாகிய **எழுசீராசிரிய விருத்தம்.**

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

16. வாரணமும் இரணியன்தன் மதலையும்பாண் டவரோர்
மனைவியும்போற் தாம்வாழ்வான் வருத்திடினும் அருள்நீ
ஆரணத்தோ டாகமங்கட்கு உயிராய பசுமுற்று
அலமராவா றயர்வேற்கு அருள்புரியா தேனோ?
பாரணங்கும் சீரணங்கும் பரிசுகுன்றி லாரோ?
பரிதிமதி ஒளியுமட்கப் பாவமிகல் படிறோ?
நாரணப்பேர்க் கருமுகிலே! வீரைநகர்க் கோயில்
நவநீத கிருட்டிணனாம் ஞானகுரு பரனே.

*நாரணப்பேர்க் கருமுகிலே*—எல்லா உயிர்களுக்கும் ஆதாரமாகிய நீரையே இடமாகக் கொண்டு நாராயணன் என்ற திருநாமத்துடன் விளங்கும் நீலமேகவண்ண முடையோரே!

*வீரைநகர்க் கோயில் நவநீதகிருட்டிணன்ஆம் ஞானகுரு பரனே*—வீரகேரளம்புதூரிலே கோயில் கொண்டெழுந் தருளியுள்ள நவநீதகிருட்டிணன் கோலத்துப் பரமகுருவே!

*வாரணமும் இரணியன்தன் மதலையும் பாண்டவர் ஓர் மனைவியும் போல்*—கசேந்திரனும் பிரகலாதனும் திரௌபதையும் போன்று

*தாம் வாழ்வான் வருத்திடினும் அருள்நீ*—உள்ளத்தால் நினைத்து வருந்தியழைத்தவுடனே சென்றருளும் நீவிர்

*ஆரணத்தோடு ஆகமங்கட்கு உயிர்ஆய பசு முற்று அலமராவாறு அயர்வேற்கு*—வேதாகம சாத்திரங்களுக்கெல்லாம் ஆதார நிலை போல்வதான பசுக்கள் கொலையுண்டு துன்பப்படாதவாறு தடுக்க முயன்று வாடி, வருந்தும் அடியேனுக்கு

*அருள் புரியாதது ஏனோ?*—(உலகில் பசுக்கொலைகளைத் தடுத்து) இன்னும் கிருபை செய்யாதிருப்பது ஏன் என்று கூறுவீராக!

*பார் அணங்கும் சீர் அணங்கும் பரிசு குன்றிலாரோ*—பூமிதேவியும் சீதேவியும் நீவீர் அருளுவதைத் தடுக்கின்றார்களோ?

*பரிதி மதி ஒளியும் மட்கப் பாவம் மிகல் படிறோ*—சூரியனும் சந்திரனும் மறைய ஒளி மழுங்கி இருளே பரவும் என்பது பொய்யோ? கூறுவீராக.

## குறிப்புரை

பசுக்கொலையைத் தடுத்து நிறுத்த விழையும் ஆசிரியர் பசுக் கூட்டங்களைக் காத்த கண்ணன் திருவருளையே வேண்டி நிற்கிறார். இந்நூலாசிரியர் இயற்றிய திருவரங்கத் திருவாயிரம் என்னும் பெருநூலில் 'பசுக்காப்பு மாலை' என்ற பெயரில் 25 பாடல்கள் அடங்கிய ஒரு தனிப் பிரபந்தத்தையே உருவாக்கி அளித்துள்ளார். அதிலும்,

'மென்மலர்ப்புங் கவன்முதலாம் வித்தகர்வாய் விரித்தோதும்
பன்மறைக்கு முயிராய பசுக்காத்தற் கெழுவாயே' (7)

என இதேமுறையில் இவர் இறைவனை அழைக்கக் காணலாம். மேலும், ஞானமான அருளொளி இல்லாதவிடத்து அஞ்ஞான இருளாகிய கொடுமைகள் ஓங்கும் என்பதையும் தெளிவுறுத்து கிறார்.

நாரம்—நீர், அயநம்—இடம். திருமால், மகாப்பிரளய காலத்தில் எல்லாப் பொருளும் நீரில் ஒடுங்கினபோது அதனை இடமாகக்கொண்டு எல்லாவற்றையும் தோற்றுவித்தார் என்பது வேதபுராணாதிகளின் துணிபு. எனவே இவருக்கு நாராயணன் என்னும் பெயர் வழங்கும். நீரைத் தன்னிடத்தே கொண்டது கருமுகில். அதேபோன்று நீரிடத்திருப்பார் நாராயணன். அவர் தொழில் காத்தல். அவ்வகையில் பசுக்கூட்டத்தைக் காக்க வேண்டுவதும் அவர் கடமை எனவே கூறுகிறார் ஆசிரியர்.

'செங்கண் கதிர் மதியம் போல் முகத்தான்' (திருப். 1) என்னும் ஆண்டாள் பாசுரப்படி. கண்ணனின் கண்களைச் சூரியனாகவும் சந்திரனாகவும் காணும் ஆசிரியர் அவற்றின் அருளொளி மழுங்காமல் பரவவேண்டுவது உய்த்துணரத்தக்கது. 'கதிரிரவி மதியிரண்டுங் கண்ணாங் கண்ணா' (எம். சத. 1) என்பார் பிறரும்.

கோவி னங்கள் நடுக்கமு றாமலோர்
குன்றெடுத் துக்குடை பிடித்திட்டநீ
ஆவி நீங்க அவற்றினைச் செற்றுண்பார்க்கு
ஆக்கம் ஈந்த அதிசயம் என்கொலோ?

பாவி கட்கெம னாமெனப் போர்செயும்
பண்பி ழந்து பரதவிக் கின்றையோ?
காவி நாண்மலர்க் காடுறழ் மேனியிற்
கமல மென்னக் கவின்றருள் கண்ணனே.

(எழு. எழு, பா. 11)

என இவ்வாறு தாம் கண்ணனைப் பாடுமிடங்களிலெல்லாம் பசுக்கொலையைத் தடுத்தருள வேண்டுவது இவர்தம் தனிக் கொள்கைச் சிறப்பாகும்.

ஆதிமூலமே என வாரணம் அழைத்ததுமே சென்று காத்தார்; 'அரியெங்கு முளனென்றோர் பாலன் சொல்ல அக்கணத்திற் றூணினர சிங்கமானார்', 'உரிகின்ற துகில்வளரக் கிருஷ்ணா வென்ற உரைத்தளவிற் றுரௌபதைக்கு மானங் காத்தார்' (எம். சத. 28) என்பர். ஆயின்' பசுக்களைக் காக்க வருக என வழைத்தும் வாராதிருப்பது ஏனோ? உம்மருகேயிருக்கும் திருமகளும் பூமகளும் வரவிடாது தடுக்கின்றார்களோ? என இவர் வியப்புடன் இங்கு வினவுகிறார்.

இந்தாவெனா வெனதிச்சைநீ
யெளிதீவையேல் இழிவாகுமோ?
சந்தானமா மலராலருச்
சனைசெய்குவார் தவிர்வார்களோ?
வந்தானபேர் துதியார்களோ
வசுதேவர்சொற் குறையாகுமோ?
நந்தாதபெண் ணகைசெய்வளோ?
நாராயணா நாராயணா.

(வடவே. சத. 49)

என்பாரின் வியப்பு வினாக்களும் இவண் ஒப்புநோக்கத்தகும்.

பாண்டவர்—பாண்டு மக்கள்; தத்திதாந்தநாமம். கோயில்-கோவில்; தேவாலயம். வகரம் யகரமானது. இலக்கணப் போலி. குரு—அஞ்ஞான இருளைப் போக்குபவன். 'கு'—இருள். குருபரன்—சிறந்த ஆசாரியன்; பரமகுரு; தனது குருக்களுக்குக் குரு.

இது நான்கு எட்டாஞ் சீர்கள் மாச்சீர்களும் மற்றவை காய்ச் சீர்களுமாகிய **எண்சீராசிரிய விருத்தம்**.

## எண்சீர் வண்ண விருத்தம்

(தான தனதன தத்தன தனனா)

17. ஞான குருவென நிற்கும்நின் நிலைதேர்
ஞாய மருவியும் இப்படி யடியேன்
மான மறதியு றத்தகு சிறியோர்
வாயும் நகமெலி வுற்றிடல் முறையோ?
கான மலிகுழல் வைத்தகை அமுதே!
காம னுடன்அய னைத்தரு முதல்வா!
மீன உருவொட ளக்கரும் அளைவாய்
வீரை நகர்மரு தற்கினி யவனே.

கானம் மலி குழல் வைத்த கை அமுதே—இனிய இசையைப் பொழியும் குழலினைக் கையில் ஏந்தியிருக்கும் அமுத மயமானவரே!

காமனுடன் அயனைத் தரும் முதல்வா—எல்லாவுயிர்களுக்கும் பொதுவான மன்மதனையும் எல்லாவுயிர்களையும் படைத் தருளும் பிரமனையும் படைத்தளித்த முழுமுதற் கடவுளே!

மீன உருவொடு அளக்கரும் அளைவாய்—மச்சாவதாரத்தில் கடலைக் கலக்கியவரே, அளவிடவியலாத வெண்ணெய் உண்ட வாயனாய் விளங்கும் நவநீதகிருட்டிணரே!

வீரைநகர் மருதற்கு இனியவனே—வீரகேரளம்புதூரினை விளங்க வைக்கும் மருதப்பனாகிய இருதயலாயருக்கு இன்பம் அளிப்பவரே!

ஞான குரு என நிற்கும் நின் நிலை தேர் ஞாயம் மருவியும்—அன்று அருச்சுனனுக்காகப் போரில் பகவத்கீதையை அருளி அனைவருக்கும் ஞான குருவாய் நின்ற உம்முடைய பேரருளை நன்குணர்ந்து தெளிந்த பின்பும்,

இப்படி அடியேன் மானம் மறதி உறத்தகு சிறியோர் வாயும் நக மெலிவுற்றிடல் முறையோ—எளியேனாகிய நான், அவமானத்திற்கெல்லாம் அஞ்சாத கீழ்மக்களின் ஏளனத் திற்கு ஆளாகித் தவிப்பது நியாயந்தானோ? கூறுவீராக.

## குறிப்புரை

கண்ணபிரானே தம்முடைய ஞானகுரு எனத் தேர்ந்த பின்னும் கீழ்மக்களின் ஏளனத்திற்குத் தாம் ஆளாவது முறையோவெனத் தன்னிரக்கத்தோடு வேண்டுகிறார் ஆசிரியர்.

கண்ணபிரானின் வேணுகானத்தால் பட்டமரமும் துளிர் விடும். துன்பத்தால் பட்டுப்போன தம்முடைய மெலிவையும் அவரே போக்குவார் என்ற கருத்திலேயே 'கான மலிகுழல் வைத்தகை அமுதே' என அழைத்தார்.

இசையிலக்கணத்திற்குப் பொருத்தமான மிக இனிய இசைப் பாட்டைக் கேட்ட மாத்திரத்தில் மேகங்கள் வந்து கவிந்து இனிமையாக முழங்கி, நீர்த்துளிகளைப் பொழிதலும், பட்டுப்போன மரங்களுந் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்தலும், புலி முதலிய கொடு விலங்குகளும் கொடுமை நீங்கி நெஞ்சுருகித் திகைத்து நிற்பதும், நாகங்கள் படமெடுத்து ஆடுத லொழிந்து பிரமித்து நிற்பதும், கருங்கல்லுங் கரைந்து உருகுவதும், பசுக்களும் எருதுகளும் செவியாட்டாமல் சித்திரம் போல நின்று கேட்டலும் இயல்பு.

பட்டபா தவந்தளிர் படைப்ப தன்றியும்
மட்டுவேய்ங் குழலுமாந் தளிர்ப டைத்தல்போல்
தொட்டுநீள் விரலினாற் றொளைகள் பொத்தியும்
விட்டுநல் லிசையினை விரித்த வண்ணமும்.

(பாக. 3-1-13)

பட்ட பாதவம்—பட்டுப்போன மரம். மட்டு—தேன்; வேய்ங் குழலுக்கு அடை; தேன் போன்ற சுவையையுடையது. விரலுக்கு மாந்தளிர் உவமை.

'படுமரன்களுநறிய பசியதண் டளிர்தழைய' (பாக. 10-8-22) 'வட்ட வாயழற் றிகிரியான் வடித்தவே யிசையால் பட்ட பாதவந் தளிர்ப்பவும்' (பாக. 10-8-32) என்று பிறவிடத்தும் கூறுவர்.

'ஆயர், தறித்தமரம் அத்தனையுந் தழைத்தலர்ந்து பழுத்துத...கருங்கற்றான் வெண்ணெயெனக் கரைந்தோட... தொனித்த குழலிசைத்தோய் கேள்' (அழ. கலம்ப. 1) என அழகர் கலம்பக ஆசிரியரும் அழைப்பர்.

**காமனுடன் அயனைத்தரு முதல்வன்** : மதனன், நான்முகன் ஆகிய 'இருவர் தாதை' (பரி. 1-30) எனத் திருமாலைப் பரிபாடல் அழைக்கும்.

காமன் என்பது ஆண் பெண்களுக்கு வேட்கையை (காமத்தை) யுண்டாக்குங் கட்டழகுடைய கடவுள்; மன்மதன்; வேள். கண்ணபிரானுக்கு ருக்குமணிப் பிராட்டியின் திருவுதரத்திலே மன்மதனமிசமாய்ப் பிரத்யும்நனென்னுங் குமாரன் தோன்றியதை யுட்கொண்டு 'காமனை வாய்த்தான்' (அழ. கலம். 36) என அழகர் கலம்பகமும் கூறும். அயன்—பிரமன்.

படைத்தல், காத்தல் (மகிழ்வித்தல்), அழித்தல் ஆகிய முத்தொழிலும் இயற்றி முதல்வனாக விளங்குதற்பொருட்டே கண்ணபிரான் காமனையும் பிரமனையும் ஈன்றனர் என்பர்.

சிட்டிக்கப் பிரமாவைக் கருணை யாலுன்
திருநாபிக் கமலத்தே செனிக்கச் செய்தாய்
மட்டற்ற செனனமெல்லாங் காமத் தாலே
வர்த்திக்க மன்மதனை மனத்திற் றந்தாய்
நெட்டுற்ற விப்புவியிற் பிறந்த வெல்லாம்
நீறாக்க உருத்திரனைப் பிரம னீந்தான்.

(எம். சத. 11)

என்று பிறரும் இதை விளக்குவர்.

ஊழி முதல்வனும், அனைத்துக்கும் ஆதியும் திருமாலே என்பர் ஆன்றோர்.

'ஊழி யாவரும் உணரா ஆழி முதல்வ' (பரி. 2-19), 'முன்னை மரபின் முதுமொழி முதல்வ', 'அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வன்', 'அவுணர்க்கும் முதல்வன்', 'கால முதல்வன்' (பரி. 3—47, 53, 56, 62) என எல்லாவற்றிற்கும் திருமால் முதல்வனானதைக் குறிக்கும் பரிபாடல், இவ்வுலகத்து உயிர்களுக்கெல்லாமும் காவலனாக விளங்குபவன் என்பதைக் கூறுமிடத்தும் 'பொன்னணி நேமி வலங்கொண்டு ஏந்திய **மன்னுயிர் முதல்வன்**' (பரி. 1-54, 55) என்றே விளக்கும்.

'இருநில வளாகம் போற்றும் இலங்கிதழ்க் கமலப் பொற்றாள் **ஒருமுதல்**' (பாக. 10-7-36) என்பர் ஆன்றோர்,

'தேவராய்த் தேவர்க்குந் தெரியாத வொளியுருவாய்
மூவராய் மூவர்க்குண் முதல்வனாய் நின்றோய்நீ
(திருவ. கலம். 1)

என்பார் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

மீன உரு என்றது மச்சாவதாரத்தை. மீன் முதலான பத்து அவதார வடிவில் திருமாலைக் காண்பது எளியோருக்காகும். உயர்ந்த ஞானிகள் கண்ணனென்னும் திருவுருவத்தையே பரம்பொருளாகத் தியானிப்பர்.

அடைத்துழாய்ப் படலை மாலை அமலநின் னிலைமை தேரார்க்
குடைப்பெரு மாயை தன்னால் உருப்பல காட்டு வாயால்
படைக்கய னாகி மற்றைப் படைப்பெலாங் காப்ப நீயாய்த்
துடைப்பமுக் கண்ண னாகித் தோன்றுமா போல மாதோ.
(பாக. 10-6-21)

அடை—இலை. அமல—கண்ணா! தேரார்க்கு—அறியாதவர்களுக்கு. மாயை தன்னால் பல உருக்காட்டுவாய். துடைப்ப—அழிப்பதற்கு. தோன்றுமாபோலக் காட்டுவாய்.

இது, முழுவதும் ஈரசைச் சீர்களாலானதும் 'தான தனதன தத்தன தனனா' என்னும் சந்தத்திலுமமைந்த எண்சீர் வண்ண விருத்தம்.

## சித்து

இரசவாதிகள் தமது திறமையை ஒரு தலைவனுக்கு எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்தல், சித்து என்னும் உறுப்பின் இலக்கணமாம்; இரசவாதமாவது—ஒரு லோகத்தை மற்றொரு லோகமாக மாற்றுதல். சித்தர் என்பவர் இரும்பு முதலான தாழ்வான லோகங்களைப் பொன் முதலிய உயர்ந்த லோகங்களாகச் செய்யும் வல்லமையுள்ளவர். எம்பெருமானைச் சரணம் அடைந்தோர் தாம் அப்பிரானை யடைதற்கு முன்பிருந்த தாழ்வான நிலையினின்று மாறி உயர்ச்சி பெறுவ ரென்பது இங்குக் கருதத்தக்கது. இச்செய்யுள் சிலேடையாக இருபொருள் பயப்பதாக இயற்றப்படும்.

## இரட்டையாசிரிய விருத்தம்

18. இனியுனக் கொருகுறையும் இல்லைமுக் காலும்நிசம்
என்றுநம் புன்றன் ஆணை
இப்பொழுது தான்மலைவி டுத்துவந் தோம்முன்னம்
எண்ணில்கல கத்தி ருந்தோம்

பனிமலர்க் கொம்பைக்கொ ணர்ந்துன துகையிற்
பளிச்செனத் தரவும் வல்லோம்
பன்னிரண் டாயசம யத்தும்க லந்துரிமை
பலபேசி உறவு செய்வோம்

நனிவருந் தாதுவகை ஐந்துமறி வோம்பெருக
நல்லரச மும்கு டிப்போம்
நாகங்க ளைந்தரித் தகமொடு புறத்துமிக
நடமாடு வோம்ந மக்குக்

கனிகிழங் கன்றிஉண வெய்தவிலை, இன்றுநாம்
கழறுணவு முழுதும் அருள்வாய்
கண்ணனைத் தென்அளகை நிகர்வீரை நகருடு
கருதும்ஒரு சித்தர் யாமே.

*இனி உனக்கு ஒரு குறையும் இல்லை*—இதன் பிறகு உங்களுக்கு எவ்விதமான குறையும் இருக்காது

*முக்காலும் நிசம் என்று நம்பு*—இறப்பு எதிர் நிகழ்வு ஆகிய மூன்று காலங்களிலும் உண்மை என்றே நம்புவீராக!

*உன்றன் ஆணை*—உம்மீதே இது சத்தியம்!

*இப்பொழுதுதான் மலை விடுத்து வந்தோம்*—சிறிது முன்புதான் நாங்கள் எங்கள் இருப்பிடமாகிய மலையை விட்டுக் கீழே வந்தோம்

*முன்னம் எண்ணில் கல் அகத்து இருந்தோம்*—இதற்கு முன்பு பல்வேறு மலையிடங்களிலும் குகைகளிலும் வாழ்ந்திருந்தோம்

*பனிமலர்க் கொம்பைக் கொணர்ந்து உனது கையில் பளிச்செனத் தரவும் வல்லோம்*—பனிப்பூக் கொம்பைக் (பார்வதியைக்) கொண்டு வந்து உம் கையில் விரைவில் தருவதில் யாம் வல்லமையுடையோம்

பன்னிரண்டு ஆய சமயத்தும் கலந்து உரிமை பல பேசி உறவு செய்வோம்—சொல்லப்பெறும் பன்னிரு சமயங்களிடத்தும் கலந்து அவற்றின் பொதுவானவற்றைக் கூறி அவற்றிடையே இணக்கம் ஏற்படுத்துவோம்

நனி வருந்தாது வகை ஐந்தும் அறிவோம்—பொன் முதலான ஐந்து வகைத் தாதுக்களையும் மாற்ற வல்லோம்

பெருக நல்ல ரசமும் குடிப்போம்—அத்தகைய உயரிய இரசவாதங்களையும் செய்வோம்

நாகங்களைத் தரித்து அகமொடு புறத்தும் மிக நடமாடுவோம்—உடலெங்கும் நாகங்களை ஆபரணமாகப் பூண்டு உள்ளும் வெளியேயும் உலா வருவோம்

நமக்குக் கனி கிழங்கு அன்றி உணவு எய்தவில்லை—எங்களுக்குப் பழங்கள் கிழங்குகள் தவிர வேறு உணவு கிடைக்கப் பெறவில்லை

இன்று நாம் கழறு உணவு முழுதும் அருள்வாய்—இன்று நாங்கள் கேட்கும் உணவு வகைகளையெல்லாம் கொடுத்து மகிழ்விப்பீராக!

கண்ணனைத் தென் அளகை நிகர் வீரைநகர் ஊடு கருதும் ஒரு சித்தர் யாமே—தெற்குப் பகுதியில், குபேரனுடைய ஊர் போல விளங்கும் வீரகேரளம்புதூரில் வீற்றிருக்கும் கண்ணபிரானையே அநுதினமும் போற்றி வாழும் சித்தர் நாங்களே!

இது, ஒன்று மூன்றாம் சீர்கள் விளச்சீர்களும், இரண்டு நான்கு ஐந்தாம் சீர்கள் காய்ச்சீர்களும், ஆறு ஏழாஞ் சீர்கள் மாச்சீர்களுமாகி வந்தது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும் வந்த **பதினான்கு சீர் இரட்டையாசிரிய விருத்தம்.**

## தாழிசை

19. சித்தம் அறிய விளையாடல் செயும்நீ உலகத்தினர்காணச்
சிறியேன் நிமித்தம் செயில்அமரர் சிரிப்பார்
என நா ணுதியோமுன்
பத்தர் விடும்ஓர் தூதாகிப் பரிதூண் டிடும்கு தனும்ஆன
பழைய மொழிஈ ரேழுலகும் பரந்து முழங்கல் படிறாமோ?

சுத்த வெளிற்றுக் கவியொன்று சொன்னா னுடன்போய்
மீண்டுவரும்
தொன்மைக் குணம்இன் றிலைகொல்லோ, துயர்மிக்
குழன்றேன் அருள்சுரந்துஆள்
சத்த மறைஒ லிடும்வீரைத் தலத்தில் அடியார் பலர்போற்றத்
தமிழும் தனமும் கனமுமலர்ச் சரணுந்தரும்ஓர் பெருமாளே

சத்த மறை ஒலிடும் வீரைத்தலத்தில்—வேத ஒலிகள் எப்பொழுதும் முழங்கிக் கொண்டிருக்கும் வீரகேரளம்புதூர் என்னும் திருநகரில்

அடியார் பலர் போற்றத் தமிழும் தனமும் கனமும் மலர்ச் சரணும் தரும் ஓர் பெருமாளே—தொண்டர்களெல்லாம் போற்றும்படியாக நல்ல தமிழ்ப் புலமையையும், செல்வத்தையும், பெருமையையும் நாடினோருக்கெல்லாம் அடைக்கலமாகத் திருமலரடிகளையும் அளித்துதவுகின்ற ஒப்பற்ற பரம்பொருளே!

சித்தம் அறிய விளையாடல் செய்யும் நீ—அடியேன் உள்ளம் உணரும்படியாகத் திருவிளையாடல்களைப் புரியும் நீவிர்

உலகத்தினர் காணச் சிறியேன் நிமித்தம் செய்யில் அமரர் சிரிப்பார் என நாணுதியோ?—இவ்வுலக மக்களெல்லாம் பார்க்கும்படியாக, எளியவனான அடியேன் பொருட்டு நேரில் வந்து ஆடல் புரிந்தால் தேவர்கள் ஏளனம் செய்வார்கள் என்று வெட்கப்படுகிறீரோ?

முன் பத்தர் விடும் ஓர் தூதாகி—முன்பு தொண்டர் அனுப்பும் ஒரு தூதனுமாகி

பரி தூண்டிடும் சூதனும் ஆன—(அருச்சுனனின்) தேர்க் குதிரைகளைச் செலுத்தும் பார்த்தசாரதியும் ஆனீர் என்னும்

பழையமொழி ஈரேழு உலகும் பரந்து முழங்கல் படிறாமோ—தொன்மை வரலாறுகள் பதினான்கு உலகெங்கும் பேசப் பெறுதல் பொய்யாகுமோ?

சுத்த வெளிற்றுக் கவி ஒன்று சொன்னான் உடன்போய் மீண்டுவரும் தொன்மைக் குணம் இன்று இல்லை கொல்லோ—ஒரே ஒரு வெண்பாப் பாடல் புகன்ற

திருமழிசையாழ்வார்பின் போய் வந்த அந்தப்பழைய இயல்புகூட இப்பொழுது தேவரீரிடம் இல்லை போலும்!

துயர் மிக்கு உழன்றேன், அருள் சுரந்து ஆள்—துன்பமே மிகுந்து மனம் கலங்கி வாடுகின்றேன், காத்தருள்வீராக.

## குறிப்புரை

மனவெளியிலே காட்சியருளியிருக்கின்ற கண்ணபிரானாகிய பரம்பொருள் நேரில் வந்து, பலரும் அறியும்படியாக ஆட்கொள்ள வேண்டுகிறார் ஆசிரியர்.

சித்தம்—உள்ளம். அமரர்—தேவர்கள். பரி—அருச்சுனனின் தேர்க்குதிரைகள். சூதன்—தேர்ப்பாகன்; கண்ணபிரான். பழைய மொழி — மகாபாரதம். ஈரேழுலகம்—கீழேழு மேலெழு ஆக உலகம் பதினான்கு. அவை, பூலோகம், புவர்லோகம், சுவர் லோகம், ஜனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்திய லோகம் இவை மேலுலகங்கள்; அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாளம் என்பன கீழுலகங்களாம். படிறு—தீம்பு. பொய். இலை—இல்லை யென்பதன் இடைக்குறை.

கண்ணபிரான் பஞ்சவர் தூதனாய்ப் பாரதம் செய்ததைக் கூற வந்த பெரியாழ்வார் 'மெச்சூது சங்கமிடத்தான் நல்வேயூதி பொய்ச்சூதில் தோற்ற பொறையுடை மன்னர்க்காய், பத்தூர் பெறாதன்று பாரதம் கை செய்த அத்தூதன்'. (பெரியா. திரு. 2-1-1) என்பார்.

'தொண்டர்க்கொரு தூதனு மாம்நெடுமால்' (திருமக. 91) என இவ்வாசிரியரே பிறிதோரிடத்தும் கூறுவர்.

## திருமழிசையாழ்வார் பின் சென்றது

திருமழிசையாழ்வாரின் மாணவராகிய கணிகண்ணர் காஞ்சியில் ஆழ்வார் எழுந்தருளியிருக்கையில் கைங்கர்யம் செய்து கொண்டிருந்து அச்சந்நிதியில் கைங்கர்யம் செய்த விருத்தையிடத்து அன்புவைத்து அவ்விருத்தையைக் குமரியாக்கினார். இதைக் கேள்வியுற்ற பல்லவராயன் என்ற மன்னன்

தன்னை யௌவன புருடனாகச் செய்யக் கேட்டனன். கணி கண்ணர் மறுத்தனர். அதனால் அம்மன்னன் என் நாட்டை விட்டு நீங்குக என்றனன். இதனைக் கணிகண்ணர் திருமழிசை ஆழ்வாருக்கறிவித்து நீங்க ஆழ்வாரும்,

"கணிகண்ணன் போஎன்றான்; காமருபூங் கச்சி
மணிவண்ணா நீஇங்கு இராதே—துணிவுடனே
செந்நாப் புலவன்யான் செல்கின்றேன்; நீயுமுன்றன்
பைந்நாகப் பாய்சுருட்டிக் கொள்." (தனிப். 99)

என்று ஊரைவிட்டு நீங்கினர். இதனால் பெருமாளும் நீங்கினர். பெருமாள் நீங்கவே நகரம் வெறுமையடைந்தது. இதனால் மன்னன் துக்கமடைந்து இருவரையும் வேண்டி மீண்டும் எழுந்தருளச் செய்தனன்.

தமிழ் முனிவராகிய அகத்தியர்க்கும் தமிழை வளர்த்த பாண்டியர்கட்கும் சங்கப் புலவர்கட்கும் செந்தமிழ்ப் பாண்டி நாடு சிறப்புற்றதால், அந்நாட்டில் விளங்கும் வீரகேரளம்புதூரில் கண்ணபிரான் கோயில் கொண்டு விளங்குவதால் 'தமிழும் தனமும் கனமுமலர்ச் சரணுந் தரும்ஊர் பெருமாளே' எனப் புகழ்ந்தார்.

இது, பன்னிருசீர்த் தாழிசை.

### நிலைமண்டில ஆசிரியப்பா

20. பெருமலர்ப் பொகுட்டுப் பீடம் நீத்துக்
கருமணி வரையெனக் காண்குநர் கருத
வீரை நகரில் மிளிரும்எம் பெருமான்
மாரை நீங்கா வாழ்வுறு மங்காய்!
நின்னருட் துளியால் நிலவணி சடையான்
அன்ன வாகனன் அம்பொனூர்க் கிழவன்
ஆதிய கடவுளர் அகமிக மகிழ்ந்தனர்
மாதிரம் புகழ்வாள் மருதன் ஆதிய
காவலர் தாமும் களிமிகப் பெருகினர்
நாவலந் தீவின் நரர்சிலர் செருக்கினர்
அன்னர்வாழ்வு அடியேற்கு அருளினும் அணியேன்
இன்னல் கூர்ந்து இராவது ஏற்பவர்வேட்கை

அருள்நலம் பொருத்தின் அதுமதி; அருளாது
இருள்கலிப் பேயால் இடர்படக் கண்டாய்
கொண்கன்ஆங் கியற்றக் கூறிய பின்அவ்
வண்கவின் தரச்செயல் மாண்பன்று, அவன்நின்
தகையறி பொருட்டே சாற்றிலன் போலும்
மிகைபடும் உரித்தென் மீதுஅவன் கொளல்சான்று
அன்றிசை முனிமுதல் அரனார் அறியத்
தன்திருக் கரத்தாற் தமனியச் சிமிழுள்
காட்டிய பொருளைக் கடைய னேன்தலை
சூட்டிய வாறாம் சுடரறிந் துளதே.

பெருமலர்ப் பொகுட்டுப் பீடம் நீத்து—சிறப்பு மிக்க தாமரை மலர் இருக்கையை விட்டு எழுந்து

கருமணி வரை எனக் காண்குநர் கருத—நீல மணிக்குன்றோ எனப் பார்ப்பவர்களெல்லாம் வியக்கும்படியாக

வீரைநகரில் மிளிரும் எம்பெருமான் மாரை நீங்கா வாழ்வுறு மங்காய்—வீரகேரளம்புதூரில் ஒளிவீசி நிற்கும் எங்கள் தலைவராகிய திருமாலின் மார்பகத்தை அடைந்து, எப்பொழுதும் நீங்காது இருக்கும் இலக்குமியே!

நின்னருட் துளியால்—உம்முடைய கிருபையின் காரணமாக

நிலவு அணி சடையான் அன்ன வாகனன் அம்பொனூர்க்கிழவன் ஆதிய கடவுளர் அகம்மிக மகிழ்ந்தனர் — பிறைச் சந்திரனைத் தலையிலே சூடிய சிவபெருமானும், அன்னப் பறவையை வாகனமாகக் கொண்ட பிரமனும், தேவலோகத் திற்குத் தலைவனான இந்திரனும், மற்றுமுள்ள கடவுளர் அனைவரும் உள்ளம் நிறைய இன்புற்றனர்

மாதிரம் புகழ் வாள் மருதன் ஆதிய காவலர் தாமும் களி மிகப் பெருகினர்—வெற்றிச் சிறப்பும் வீரமும் பொருந்திய மருதப்பன் முதலான மன்னர் பலரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்

நாவலந் தீவின் நரர் சிலர் செருக்கினர்—நாவலந்தீவிலுள்ள சில மக்களும் களிப்புற்றனர்

அன்னர் வாழ்வு அடியேற்கு அருளினும் அணியேன்—அவர்களுடைய இன்ப வாழ்க்கையெல்லாம் எனக்கு அளித்தாலும் நான் ஏற்பதாகயில்லை

இன்னல் கூர்ந்து இரவாது—துன்பப்பட்டு யாசிக்காமல்

ஏற்பவர் வேட்கை அருள்நலம் பொருத்தின்—பெறுவோரின் தேவையறிந்து கொடுக்கும் நன்மையை அடியேனுக்குக் கூட்டினால்

அது மதி—அதுவே போதுமானது

அருளாது—இந்த வரத்தை வழங்காமல்

இருள்கலிப் பேயால் இடர் படக் கண்டாய்—கொடிய வறுமை யென்னும் பேயால் அடியேன் துன்பமடைய விட்டீர்

கொண்கன் ஆங்கு இயற்றக் கூறிய பின்—உம்முடைய கணவ ராகிய திருமால் அவ்விடத்து நின்னருளைக் காட்டுமாறு சொல்லிய பிறகு

அவ்வண் கவின் தரச்செயல் மாண்பு அன்று—அவ்வாறு நல்குவது ஒன்றும் பெருமையல்ல

அவன் நின் தகை அறி பொருட்டே சாற்றிலன் போலும்—அவரும் உம்முடைய ஈகைத் தன்மையை நன்கு அறிந்த தனாலேயே இன்னும் அவ்வாறு கூறியருளவில்லை என எண்ணுகிறேன்

மிகைபடும் உரித்து என் மீது கொளல் சான்று—அடியேன் மேல் அவர் கொண்டுள்ள பேரன்பிற்குச் சாட்சியமும் உள்ளது

அன்று இசைமுனி முதல் அரனார் அறிய—அன்றொருநாள் இசைமுனி முதலாக சிவபெருமானும் அறியும்படியாக

தன் திருக்கரத்தால் தமனியச் சிமிழுள் காட்டிய பொருளை—தம்முடைய திருக்கைகளால் பொற்சிமிழுள் காட்டிய பொருளை

கடையனேன் தலை சூட்டிய வாறாம் — எளியேனாகிய அடியேன் தலையில் அணிவித்தபடியாம்

சுடர் அறிந்துளதே—விளக்கம் பெற்றதென்பதை அறிவீராக.

## குறிப்புரை

அண்ட சராசரங்கள் அனைத்தையும் காத்து அருள்பாலிக் கும் திருமாலின் சக்தியாகவும், எல்லா வகையான செல்வங் களுக்கும் அதிதேவதையாகவும் விளங்கும் இலக்குமி தேவியைப்

போற்றி வேண்டுகிறார் ஆசிரியர். தம்முடைய வறுமைத்துயர் தீர்க்க அவள் வாராதிருப்பதைக் கண்டு, அவள் தன் கொண்கனாகிய திருமாலின் கட்டளைக்காகக் காத்திருக்கிறாளோ என ஐயுறுகிறார் வைணவ குரு பரம்பரையில் திருமாலுக்கு அடுத்துத் திருமகள் ஆசாரிய வம்சத்தில் வருகிறாள். அவளைச் சரணமடைந்தால், எம்பெருமானிடம் அவளே சேர்ப்பிப்பாள். இதன் காரணமாகவே இந்நூலாசிரியரும் திருமகளந்தாதி என்னும் நூலையும் இயற்றி அணிவித்துள்ளார். இவ்வாறு தாமும் ஓர் அடியராய் அடிமை பூண்டு திருமாலுக்குத் தொண்டு செய்து வருவதை எம்பெருமானே அறிவாராதலால் அவர் கூறுவார் எனத் தாமதம் செய்தல் வேண்டா. இப்பொழுதே வருக என வேண்டுகிறார்.

பெருமலர்—தாமரை மலர். கருமணி வரை—மரகதக்குன்று மாரை—மார்பகத்தை. நிலவணி சடையான்—சிவபெருமான். அன்னவாகனன்—பிரமன். அம்பொனூர்க் கிழவன்—இந்திரன். இருள்—அஞ்ஞானம். கொண்கன்—கணவன்—கண்ணபிரான்.

கண்ணபிரானின் திருமேனிக்கு நீலமணிக்குன்று உவமையாகக் கூறப்பெற்றது. 'கருமாணிக்கக் கிரிபோல் நிறத்த மெய்யா' (எம். சத. 1) என்பார் ஆன்றோர்.

திருப்பாற்கடலைக் கடையுங்கால் தோன்றிய திருமகள் திருமாலின் மார்பில் ஏறியமர்ந்து அன்று முதல் என்றும் அவனை நீங்காதிருக்கின்றவள் எனப் புராணங்கள் கூறும். திருமாலைக் கூறுமிடங்களிலெல்லாம் 'திருவுறை மார்பன்' என்றே ஆன்றோர் குறிப்பிடுவர். 'மேனித் திருஞெமர்ந்து அமர்ந்த மார்பினை' (பரி. 1-8) என்றும், 'செய்யோள் சேர்ந்த நின்மாசில் அகலம்' (பரி. 2-31) என்றும், 'பொன்னின் தோன்றிய புனைமறு மார்ப' (பரி. 4-59) என்றும் பரிபாடல் கட்டும். 'மாயவன் மார்பிற் திருப்போல்' (கலி. 145), 'திருமாது வீற்றிருக்கும் கமல மார்பா' (எம். சத. 1) எனப் பிறரும் திருமாலைக் குறிப்பிடுவர். இத்தகைய திருமகளைப் போற்றிப் புகழெய்தியவர்கள் சிவன், இந்திரன், பிரமன் போன்ற பலராவர் என்பதையும் இவர் குறிப்பிடுவது எண்ணத் தக்கது. கண்டம் கரியன், முழுதும் கரியன், கடகரியன் அண்டம் கடந்தவன் ஆதிய தேவர் அனைவரும் நின், தொண்டடன்பினால் உய்ந்துளாரே என்று ஒருமென்

துன்பொழித்துஆள், ஒண்டங்க மேனித் திருவேளச் சீரும் உடையவளே! (திருமக. 58) என இதை இவர் வேறிடத்தும் விளக்கக் காணலாம்.

அஞ்ஞானமாகிய இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில் தாம் இடர்ப்படுவதை 'இருள்கலிப் பேயால் இடர்படக் கண்டாய்' எனத் திருமகளிடம் எடுத்துரைத்துத் தமக்காக இரங்கியருள வேண்டுகிறார்.

அருளும் பொருளும்நின் ஆடலென் றோர்ந்தும்
அகிலத்துள்ளே
இருளுந்து பாழ்மிடிப் பேயால் வருந்தெற்கு இரங்கல் என்றோ?
சுருளும் கருங்குழற் றோகாய்விண் ணாடர் தொழுமுனிவர்
தெருளும் திருநெடு மால்உரத் தேவளர் செந்திருவே.

என இதே வகையில் திருமகளந்தாதியிலும் (பா. 15) வேண்டுவதை ஒப்புநோக்கலாம்.

இது, பெரும்பாலும் ஈரசைச் சீர்களாலான, எல்லா அடிகளும் நாற்சீராயமைந்த நிலைமண்டில ஆசிரியப்பா.

## வண்டுவிடுதூது

### நேரிசை வெண்பா

21. சுடர்போமுன் வீரைநகர்த் தொல்லோன்முன் போயென்
இடர்யாவும் நன்றா யியம்பிப்—படர்மார்பிற்
பூண்டதுழாய் வாங்கிவரப் போதாய்; புதுப்பூந்தேன்
வேண்டளியே நொந்தேன் மிக.

புதுப்பூந்தேன் வேண்டு அளியே—புத்தம் புதிதாக மலர்ந்திருக்கும் மலரையே நாடித் திரிந்து மயக்கந்தரும் மதுவை அருந்தும் வண்டே!

நொந்தேன்மிக—நான் என் தலைவனைப் பிரிந்த வேதனையால் மிக வாடுகிறேன்

கடர் போம்முன் வீரை நகர்த் தொல்லோன் முன்போய்—சூரியன் மறைவதற்கு முன்பாக வீரகேரளம்புதூரில் கோயில் கொண்டுள்ள கண்ணபிரான் முன்னே சென்று

என் இடர் யாவும் நன்றாய் இயம்பி—நான் அவரைப் பிரிந்து வாடும் துன்பங்களையெல்லாம் எடுத்துச் சொல்லி

படர்மார்பில் பூண்ட துழாய் வாங்கி வரப்போதாய்—பரந்து விரிந்த அவர்தம் மார்பகத்தே அணிந்திருக்கும் துளப மாலை வாங்கி வரச் செல்வாயாக!

## குறிப்புரை

இது, தலைவனைப் பிரிந்த தலைவி தன் காதல் நோயைத் தலைமகனுக்குச் சொல்லி மாலையும் வாங்கிவரத் தூது போய் வருமாறு வண்டை விடுத்தது. தலைவி கூற்று. பாடாண்திணை.

தலைவனின் பிரிவுத் துயரத்தால் வருந்தும் தலைவி இன்னது செய்வதென்று அறியாது திகைத்து நிற்கின்றாள். அங்குச் சோலையிலே பறந்து திரிகின்ற வண்டைப் பார்க்கின்றாள். அது நிறம் முதலியவற்றால் எப்பெருமானுக்குப் போலியாக விளங்கக் கண்டு இது நமக்கும் நமது தலைவருக்கும் இனிதாகுமென்று கொண்டு அதை நோக்கி 'என்னுடைய நிலைமைகளை எனது தலைவரான வீரை நகர்க் கண்ணன் பக்கல் சொல்லி அதற்கு அவர் அருளிச் செய்கின்ற திருத்துழாய் மாலையை வாங்கி மீண்டுவந்து எனக்குத் தருமாறு நீ தூதாக வேண்டும்' என வேண்டுகின்றாள்.

பிரிந்த தலைவன் வந்திடுவனென்று ஆறி இருக்வொண்ணாதே அவன் வரவுக்கு விரைந்து தூது விடும்படியானது ஆற்றாமை மிகுதி. நீ அவ்வாறு தூது சென்று தலைவரது திருத்துழாய் மாலையை வாங்கிவருமளவும் ஆறி இருப்பேன் என்பது குறிப்பு. தன்னால் இயன்றளவும் வெளிப்புலப்படாது அடக்கினமை தோன்ற, 'நொந்தேன் மிக' என்றாள்.

தோத்திரப் பிரபந்தங்களில் அகப்பொருட்கிளவித் துறைகளை இடையிடையே கூறுதல் இலக்கிய மரபாகும். இன்பக் களஞ்சியமான அகப்பொருட்கிளவித் துறைகளை ஞானநூல்களாகிய தோத்திரப் பிரபந்தங்களில் கூறுதற்குக் காரணம், கடுத்

தின்னாதாளைக் கட்டிபூசிக் கடுத்தின்பிப்பார் போல் சிற்றின்பங் கூறும் வகையாற் பேரின்பத்தைக் காட்டி நாட்டுதல் என்பர். இவ்வாறு வெளிப்படையாகக் கூறப்பெறும் சிற்றின்பத்துறைச் செய்யுள்கட்கெல்லாம் பேரின்பத்தின் பாற்படுத்தும் உள்ளுறை பொருளே காணத்தகும். அன்றியும் இங்குக் கூறியது, உலக வாழ்க்கைச் சிற்றின்பம் அன்று. எம்பெருமானைச் சேரவேண்டு மென்று அவன் மீது கொண்ட அவாவினை எடுத்துரைத்தது. எம்பெருமானுடைய சேர்க்கையை விரும்புகின்ற பேரின்பக் காதலானது, வீடுபேற்றுக்கு வழி வகுப்பதாகும். கண்ணபிரான் மீது கொண்ட காதலால் கோபியர்களும் முத்தி பெற்றனர் என்பது புராண வரலாறு ஆகும்.

தண்டபாணிசுவாமிகளின் ஞானக்கண்ணுக்கு இலக்கான எம்பெருமான் மறைந்தவளவிலே அவரது நிலையான பேரருளைப் பெற விரும்பிய சுவாமிகள், தமது நிலைமையை அப்பெருமான் சந்நிதியில் விண்ணப்பம் செய்து அவனளிக்குந் திருத்துழாய் மாலையைத் தம்மிடம் கொண்டுவந்து கொடுக்கும் படி குணஞ் செயல்களில் அவனோடு ஒத்தவரான பாகவதரை வேண்டுதல், இதற்கு உள்ளுறைப் பொருள்.

வண்டைப் போன்றே கண்ணபிரானும் கோபியர் ஒவ்வொருவரிடத்தேயும் இன்பம் பருகி அருளியதைக் குறிக்கவே 'புதுப்பூந்தேன் வேண்டளியே' என்றார்.

துழாய்—துளவு—அதனாலாகிய மாலைக்குக் கருவியாகு பெயர். மக்களல்லாதார் கேட்பனவாகக் கூறுதல் என்னும் வகையில்,

ஞாயிறு திங்கள் அறிவே நாணே
கடலே கானல் விலங்கே மரனே
புலம்புறு பொழுதே புள்ளே நெஞ்சே
அவையல பிறவும் நுதலிய நெறியாற்
சொல்லுந போலவும் கேட்குந போலவும்
சொல்லியாங் கமையும் என்மனார் புலவர்

(தொல். பொருள். 8. செய். 192)

என்னுஞ் சூத்திரத்தால் அஃறிணைப் பொருள்கள் கேட்பன போலச் சொல்லப் பட்டன.

**தொல்லோன் என்பது** : அனைத்துக்கும் ஆதியானவர் திருமால். இவர்தம் தொன்னிலைச் சிறப்பை, வேதங்களால் புகழப் பெறும் தன்மையைப் பரிபாடலில் காணலாம். பழைமை யான கண்ணபிரானைத் 'தொல் புருடோத்தமன்' என்றே கூறுவர் (பாக. 8-5-4). மேலும்,

*மன்று மாயுளு மதிகளு மிக்கிலர்க் கலியில்*
*தன்னை போர்முறை சாற்றிய தவத்தினர் தமக்கும்*
*பன்னு தொல்கதை பத்தியிற் கேட்குநர் தமக்கும்*
*துன்னு வெம்பவந் தீர்த்துவி டருளுவன்* **தொல்லோன்.**

(பாக. 1-1-12)

என்னும் பாடலால் தொல்லோனாகிய கண்ணபிரானின் திருவருட்சிறப்பை யுணரலாம். இதன் காரணமாகவே இத் தலைவியும் திருமாலின் திருத்துழாய் மாலையை வாங்கிவர வண்டைத் தூது அனுப்புகின்றாள்.

இது, முற்கூறியது போன்ற இருவிகற்ப **நேரிசை வெண்பா.**

# இதுவுந்தூது

## கட்டளைக்கலித்துறை

22. **மிகநொந்த மங்கையர் சொற்றூது போதற்கு மேகமும்சில்**
**ககமும் கழிவென்னத் தேர்ந்துஅனை யாரையும்**
**கைத்துஎனதுள்**
**அகமென்ற பாவியை விட்டேன் அதுவும் அருட்புலவோர்**
**புகழும்தென் வீரை நெடுமால்முன் போயது போயதுவே.**

மிக நொந்த மங்கையர் சொல் தூது போதற்கு—கண்ணபிரானு டைய பிரிவுத் துயரத்தால் மிக வாடும் அடியேனுடைய துன்பத்தை எடுத்துக் கூறுமாறு தூது அனுப்புவதற்கு

மேகமும் சில் ககமும் கழிவு என்னத் தேர்ந்து—முகிலும் வண்டும் பறவையும் பொருத்தமற்றவை என்பதை அறிந்துணர்ந்து

எனது உள் அகம் என்ற பாவியை விட்டேன்—எப்பொழுதும் வாராத தலைவனுக்காக வருந்தித் தவிக்கும் அடியேனு டைய உள்ளமாகிய நெஞ்சத்தை அவர்பால் தூதாக விடுத்தேன்

அதுவும் அருட்புலவோர் புகழும் வீரை நெடுமால் முன் போயது போயதுவே—(அடியேன் முன்பு அவர்பாலனுப்பிய மேகமும் வண்டும் பறவையும் போலவே) அந்நெஞ்சமும் பாகவதர் போற்றும் வீரைநகர் நெடியோனாகிய கண்ணபிரானிடம் போய்ச் சேர்ந்தது சேர்ந்ததுதான்! இன்னும் திரும்பவே யில்லை.

## குறிப்புரை

தலைவி தன் ஆற்றாமையால் தலைவன்பால் ஒவ்வொன் றாகத் தூது அனுப்புகிறாள். கருமுகிலும், கருவண்டும், நாரையும் பிறவும் அவ் எம்பெருமான் திருமலர்ப்பதத்தை அடைந்ததும் திரும்புவதேயில்லை. இதனால் களைப்படைந்தாள் தலைவி. இறுதியாகத் தன் நெஞ்சத்தையே தூதாக விடுத்தனள். தூது சென்ற அவள் நெஞ்சும் எம்பெருமான் இடத்தே சென்றடைந்த பின் மீளவர விரும்பாது அங்கேயே தங்கிவிட்டது. என் செய்வேன் யான் என வியக்கின்றாள் தலைவி.

இது, நெஞ்சத்தைத் தூது விடுத்த தலைமகள், அது மீண்டு வாராததைத் தோழிமாரை நோக்கி இரங்கிக் கூறியது.

இதேபோன்று, தூதுப் பொருள்களுள் எதனிடத்தும் நம்பிக்கை கொள்ளாமல் "நெஞ்சை யொளித்தொரு வஞ்சகமில்லை" என்றபடி எனது நெஞ்சினிடத்து நம்பிக்கை கொண்டு அதனைத் தலைவர்பால் தூதனுப்பி அது மீண்டு வாராமையால், இதனை யாரிடத்துக் கூறி யாறுவேனென்று அரற்றுகிறாள் அரங்கனைக் காதலிக்கும் தலைவி ஒருத்தி.

"நீரி ருக்கமட மங்கை மீர்கிளிகள்
தாமி ருக்கமது கரமெலாம்
நிறைந்தி ருக்கமட வன்ன முன்னநிரை
யாயி ருக்கவுரை யாமல்யான்

நாரி ருக்கிலுமென் நெஞ்ச மல்லதொரு
வஞ்ச மற்றதுணை யில்லையென்
றாத ரத்தினொடு தூது விட்டபிழை
யாரி டத்துரைசெய் தாறுவேன்

சீரி ருக்குமறை முடிவு தேடரிய
திருவ ரங்கரைவ ணங்கியே
திருத்து ழாய்தரில்வி ரும்பி யேகொடு
திரும்பி யேவருத லின்றியே

வாரி ருக்குமுலை மலர்ம டந்தையுறை
மார்பி லேபெரிய தோளிலே
மயங்கி யின்புறமு யங்கி யென்னையு
மறந்து தன்னையும றந்ததே.

(திருவர. கலம். 24)

திருமாலின் திருவடிகளைச் சேர்ந்ததும் உள்ளம் தன்னையும் மறந்தது; தான் வந்த காரணத்தையும் மறந்தது. அவர் திருவடி நிழலையே இருப்பிடமாகக் கொண்டு விட்டது என்பது தன் உள்ளக்கிடக்கையைக் கூறியது.

இது, நிரையசை முதலாகி வந்த **கட்டளைக் கலித்துறை.**

## ஊர்

### கலிநிலை வண்ணத்துறை

(தனதந்த தனதந்த தனதந்த
தனதந்த தனதானனா)

23. அதுலன்பன் மறையுஞ்சொல் புனிதன்தண்
அருள்விஞ்சும் அகநீர்மையோன்
மதுரங்கு லவுசெஞ்சொல் வனைதொண்ட
ரொடுசென்று வரநாணிடான்
விதுரன்தன் மனையுண்டி யினிதென்று
நுகர்கொண்டல் மிகவாழும்ஊர்
எதுஎன்கில் மருதன்தன் மரபென்றும்
வளர்துங்கம் இசைவீரையே.

அதுலன்—ஒப்பில்லாதவர்

பன்மறையும் சொல் புனிதன்—வேதங்கள் பலவற்றையும் அருளும் பரிசுத்த மானவர், பல வேதங்களாலும் புகழப் படும் தூயவர் எனினுமாம்

தண் அருள் விஞ்சும் அக நீர்மையோன்—எப்பொழுதும் உள்ளங் குளிர்ந்த அருளையே மிகுதியாகக் கொண்டிருக்கும் குணம் பொருந்தியவர்

மதுரம் குலவு செஞ்சொல் வனை தொண்டரொடு சென்று வர நாணிடான்—இனிமை நலம் பொருந்திய மதுர கானம் தரும் திருமழிசையாழ்வார் பின் சென்று வரவும் தயங்காதவர்

விதுரன் தன் மனை உண்டி இனிது என்று நுகர் கொண்டல்—பாண்டவருக்குத் துணையான விதுரன் இல்லத்துச் சென்று அவனளித்த உணவை இனிதென உண்டு களிப்புற்ற மேகவண்ணர்

மிக வாழும் ஊர் எது என்கில்—உளம் மகிழ்ந்து விருப்பமுடன் வாசம் செய்கின்ற தலம் எங்குள்ளது என்று கேட்பீராயின்

மருதன்தன் மரபு என்றும் வளர் துங்கம் இசை வீரையே—மருதப்பனுடைய குலத்தினர் எப்பொழுதும் சிறப்புடன் வாழ்ந்து பெருமை மிகக் கூடிநிற்கும் வீரகேரளம்புதூரே ஆம்!

## குறிப்புரை

தலைமைக்குரிய பத்து அங்கங்களுள் ஊர் என்பதும் ஒன்றாகும். பாட்டுடைத் தலைவனின் ஊர் இன்னதென்பதனையும் அது இத்தகைய சிறப்பினை உடையது என்பதும் இத்துறையில் கூறப்பெறும். பொருள் இலக்கணத்தின்படி இதனை ஒருபுடை ஒப்புமை நோக்கிப் புறப்பொருள், பாடாண்திணை, நாடு வாழ்த்து என்னும் துறையின்பாற்படுத்தலாம். ("தாட்டாழ் தடக்கையான் நாட்டது வளமுரைத்தன்று" என்பது அத்துறையின் இலக்கணம். (புறப். வெ. மா. 205). இங்கு நாட்டிற்குப் பதிலாக ஊர் சிறப்பிக்கப்படுகிறது. தாம் வணங்கும் தலைவனது விருப்பமுள்ள ஊர் இது என்று கூறுவதில் பெருமிதமடைகிறார் ஆசிரியர்.

விதுரன்—திருதராட்டிரனுக்கும் பாண்டுவுக்குந் தம்பி முறையாகிறவன்; பாண்டவர்களுக்குந் துரியோதனாதியர்க்குஞ் சிறிய தகப்பன்; வேதவியாச முனிவரிடத்து அம்பாலிகையினால் அனுப்பப்பட்ட பணிப் பெண்ணினிடத்துப்

பிறந்தவன். பரமபாகவதர்களில் ஒருவன். கண்ணன் பாண்டவர்க் காகத் துரியோதனாதியரிடம் தூது பேசுதற்பொருட்டு அத்தினாபுரிக்கு எழுந்தருளியபோது, அங்கு வேறு யாருடைய வீட்டிற்குஞ் செல்லாமல் ஞானபக்திகளிற் சிறந்த விதுரனுடைய திருமாளிகையினுட் புக்குத் தங்கி அங்கு அவனால் மிக்க அன்புடன் அமைக்கப்பட்ட விருந்துணவை அமுது செய்தருளி னான் என்பது வரலாறு. இது, எம்பெருமான் அடியவர்க் கெளியனென்பதைக் காட்டும். 'இந்திராதியர்க்கு நல்விருந் திட்டு வந்து விதுரன் சாலைக் கரும்புது விருந்தா மருந்தே' (அழ. கலம். 5) என அழகர் கலம்பகமும் இதை விளக்கும்.

கொண்டல்—கண்ணபிரானின் நிறத்திற்கும் பண்புக்கும் மேகம் உவமையாயிற்று. 'அருண்மாரிக் கொண்டல்' (பாக. 10-2-2-) என்பது பாகவதம்.

இது, 'தனதந்த தனதந்த தனதந்த தனதந்த தனதானனா' என்னும் சந்தத்தில் அமைந்து, ஐந்து சீர்களைக் கொண்ட **கலிநிலை வண்ணத்துறை**.

## இதுவுமது

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

24. இசைப்பார் இசைக்கும் நலமுழுதும்
  இயங்கும் வீரைப் பதித்திருமால்
நசைப்பால் அரங்கம் திருவயிந்தை
  நாகை வடவேங் கடம்குடந்தை
கசைப்பாங் கவிரூர் கண்ணபுரம்
  காஞ்சி அனந்தை முதற்பலவூர்
திசைப்பா லனரும் தொழவுளவாம்
  சேட னாலும் செப்பரிதே.

இசைப்பார் இசைக்கும் நலம் முழுதும் இயங்கும்—எம்பெரு மானுடைய திவ்ய நாமங்களையே பாடும் பரம பாகவதர் கள் விரும்பிக் கேட்கும் நன்மைகளை யெல்லாம் கொடுத் தருளுகின்ற

வீரைப்பதித் திருமால் நசைப்பால்—வீரகேரளம்புதூரில் உறைகின்ற எம்பெருமான் விரும்பும் திருப்பதிகள்

அரங்கம் திருவயிந்தை நாகை வடவேங்கடம்—திருவரங்கம், திருவயிந்திரபுரம், நாகப்பட்டினம், வேங்கடமாமலை

குடந்தை கசைப்பு ஆங்கு அவிர் ஊர்—கும்பகோணம், திருவல்லிக்கேணி

கண்ணபுரம், காஞ்சி, அனந்தை முதற் பல ஊர்—திருக்கண்ண புரம், காஞ்சிபுரம், திருவனந்தபுரம் முதலான பல தலங்கள்

திசைப்பாலனரும் தொழ உளவாம்—அட்டதிக்குப் பாலகர் களும் வணங்கும் படியாகச் சிறப்புற்றுள்ளன

சேடனாலும் செப்ப அரிதே—(அத்திருத்தலங்களின் பெருமை களையெல்லாம்) ஆதிசேடனாலும் விளக்குவது அருமை யாம்.

## குறிப்புரை

கண்ணபிரான் விரும்பி உறையும் திருப்பதிகள் சிலவற்றை இப்பாடலில் கூறுவர். இது, பிரபந்தங்களுக்குரிய 'ஊர்' என்னுந் துறையின்பாற்படும்.

திருமால்—திருமகளையுடைய மால்; ஸ்ரீய:பதி; மால்—விட்டுணு; திருமகளிடத்தே மால் (வேட்கை) கொண்டவன்—திருமால் என்பதுமாம். திருவயிந்தை—திருஅயிந்திரபுரம் என்பதன் மரூஉ. அயிந்திரபுரம்—அஹீந்த்ரபுரம். சேடன்—ஆதிசேடன்.

திருமாலின் திவ்விய தலங்கள் நூற்றெட்டனுள் தலைமை பூண்டது திருவரங்கம் ஆதலின் அதனை முதலாவதாகக் கூறினார். இத்தலம் சோழ நாட்டுத் திருப்பதிகள் நாற்பதில் முக்கியமானது; 'கோயில், திருமலை, பெருமாள் கோயில்' என்று வைணவர்களால் பெரிதும் எடுத்துக் கூறப்படுகின்ற மூன்று தலங்களுள் முதலது. 'கோயில்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் மறுபெயருடையது; பூலோக வைகுண்டம்' எனப்படு கின்ற மகிமையுடையது; 'போகமண்டபம்' எனப்படுவது. இத்தகைய சிறப்புகள் அனைத்தும் ஒருங்கே பொருந்தியதனால் இத் தலத்தை முதற்கண் வைத்தார்.

திருமால் திருவுள்ளமுவந்து தங்கிய இடமே திருவரங்கம் ஆகும். ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், சூரிய மண்டலம்,

யோகிகளுடைய உள்ளக் கமலம் என்னும் இவையனைத்தினும் இனியதென்று திருமால் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்கும் இடமானதுபற்றி 'ரங்கம்' என்று இத்தல விமானத்திற்குப் பெயர் உண்டாயிற்று. திருமால் இங்கு ரதியை (ஆசைப் பெருக்கத்தை) அடைகின்றனனென்க. ரங்கம் என்னும் வடமொழி தமிழில் அரங்கம் என நின்றது. அந்த அரங்கம் என்ற விமானத்தின் பெயர் இங்குத் திருப்பதிக்கு ஆனது. தானியாகுபெயர். இனி, ஆற்றிடைக் குறை (நதியிடையே யுயர்ந்த திடர்) ஆதலால், திருமகளார் திருநடனஞ் செய்யுமிட மாயிருத்தலாலும், ஸ்ரீ வைணவர்களுடைய திருவுக்கு (மேன் மைக்குக்) கூத்துப் பயிலுமிடமாயிருத்தலாலும் திருவரங்க மென்னும் இப்பெயர் வந்ததெனினுமாம்.

இது, ஒன்று இரண்டு நான்கு ஐந்து மாச் சீர்களும், மூன்று ஆறாம் சீர்கள் காய்ச்சீர்களுமாகி வந்த **அறுசீராசிரிய விருத்தம்.**

## மடக்கு

### இரங்கல்—தாழிசை

25. செப்ப மார்புகழ் மிக்குளான் நலம்
செப்ப மார்பிடை சிந்தியான்
தீய தானவர் வேர்கெல்வான் மதி
தீய தாம்நவை தீர்க்கிலான்

கைப்ப ருங்கதை ஒன்றினான் அனம்
கைப்ப ருங்களி செய்கிலான்
காம ராயனை நல்கினான் என்மெய்க்
காம ராய விழைந்திலான்

துப்ப லங்கிதழ் தந்திலான் பலர்
துப்ப லங்கமென் றேவினான்
சூத னாப்பரி தூண்டினான் கொடுஞ்
சூத னாஎனை மால்செய்தான்

மைப்ப கட்டைவ தைத்துளான் விழி
மைப்ப கட்டைம திக்கிலான்
மாத வன்தமிழ் வீரைமா நகர்
மாத வன்தனி வஞ்சனே.

செப்பம் ஆர் புகழ் மிக்குளான்—சிறப்புப் பொருந்திய கீர்த்தி மிக்கவர் (ஆனால்)

நலம் செப்ப மார்பிடைச் சிந்தியான்—(அவர் பிரிவால் வருந்தும் எனக்கு) இன்சொல் சொல்லி, ஆட்கொள்ள நெஞ்சாலும் நினைக்காதவராக இருக்கிறார்

தீய தானவர் வேர் செல்வான்—கொடிய அரக்கரை அடியோடு இல்லாமல் ஒழித்தருளுவார் (ஆனால்)

தீ அது ஆம் நவை தீர்க்கிலான்—(துன்புறுத்துவதில்)நெருப்பைப் போன்று விளங்கும் (பிரிவுத் துயராகிய) குற்றத்தைப் போக்கியருள மறுக்கிறார்

கை பரும் கதை ஒன்றினான்—தன் திருக்கரத்தில் பெரிய கதாயுதம் ஒன்றைத் தாங்கியுள்ளவர் (ஆனால்)

அனக் கைப்பு அறும் களி செய்கிலான்—உணவை வெறுக்கச் செய்யும் பிரிவுத்துயரை இல்லாமற் செய்யும் மகிழ்ச்சியை அளிக்காமலிருக்கிறார்

காம ராயனை நல்கினான்—மன்மதனைப் பெற்றெடுத்தார் (ஆனால்)

என் மெய் காமர் ஆய விழைந்திலான்—என்னுடைய உடலின் அழகை ஆராய்ந்து துய்க்க விருப்பமில்லாதவராக இருக்கிறார்

துப்பு அலங்கு இதழ் தந்திலான்—பவளத்தைப் போல ஒளிரும் இதழ்களை முத்தமிடத் தந்தருள மாட்டார் (ஆனால்)

பலர் துப்பு அலம் கம் என்று ஏவினான்—பலராலும் இகழப்படுகின்ற துன்பத்தை மேகத்தைப் போன்று (என்மாட்டு உண்டாக்கினார்

சூதனா பரி தூண்டினான்—அருச்சுனனுக்குத் தேர்ப்பாகனாகக் குதிரைகளைச் செலுத்தினார். (ஆனால்)

கொடும் சூதனா எனை மால் செய்தான்—தீமை மிக்க வஞ்சகராகி என்னை மயங்க வைத்தார் (ஆனால். என்மீது அன்பு காட்டவில்லை)

மை பகட்டை வதைத்துளான் கரிய குவலயாபீடமாகிய யானையைக் கொன்றிருக்கிறார் (ஆனால்)

மை பகட்டை மதிக்கிலான் —(என்) கண்களின் அஞ்சனப் பூச்சின் கவர்ச்சிக்கு ஆளாகமலிருக்கிறார்

மாதவன் தமிழ் வீரை மாநகர் மாதவன்—அகத்தியரால் வளர்க்கப்பெற்ற தமிழ் மொழி பயிலும் வீரகேரளம்புதூரில் கோயில் கொண்டுள்ள திருமால்

தனி வஞ்சனே— (என்னைப் பொறுத்தவரை) ஒப்பற்ற வஞ்சகரே ஆவார்.

## குறிப்புரை

மார்பு என்பது உடலுறுப்பை அன்றி உள்ளத்தைக் குறித்து நின்றது. தீ அது ஆம் நவை என்புழி அது பகுதிப்பொருள் விகுதி; ஆதல் உவமைப்பொருட்டு, ''ஆள்வாரிலி மாடு ஆவேனோ'' என்பது போல. கைப்பறுங் களி எனற்பாலது மடக்சணி நோக்கிக் கைப்பரும் என நின்றது. தான் சிறந்த அழகினையுடையவளாக இருந்தும் கண்ணன் அதனை அறிந்து துய்க்க மறுக்கிறான் என்னும் வேதனையைத் தலைவி 'என் மெய்க் காமர் ஆய விழைந்திலான்' என வெளிப்படுத்துகிறாள். என் அழகு ஒப்பனையால் விளைந்த வெளித்தோற்றம் மட்டும் அல்ல உண்மையான அழகே என்பதுவும் மெய்க்காமர் என்பதால் தொனிக்கிறது.

கண்ணனின் இதழுக்குப் பவளம் உவமை. ''திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ'' (நாச். திரு. 7-1); 'பவளவாய் கமலச் செங்கண்' என்பார் தொண்டரடிப்பொடி யாழ்வார். (திருமா.2)

துப்புதல் என்னும் வினை இகழ்வதைக் குறிக்க வந்தது துன்பம் மேகங்கள் சூழ்வதைப் போன்று நெருங்குகிறது என்றவாறு. துன்பத்திற்குக் காரணம் தலைவன் ஆதலின் அவன் ஏவினான் என்கிறாள். என்று உவம உருபு.

தலைவன் தன் உடலழகைக்கூட உணரவில்லை என்பதால் அவன் என் உள்ளத்தின் தூய காதலை எப்படி உணரப் போகிறான் என்னும் ஆற்றாமை வெளிப்படுகிறது. முன்னர் மெய்க்காமர் ஆய விழைந்திலான் என்றதும் இதுபற்றியே.

இச் செய்யுள் கண்ணனின் பிரிவாற்றாமையால் இரங்கும் ஒரு தலைவியின் கூற்று. பாடாண்திணை. கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்.

இது, அடிதோறும் பதினான்கு சீர்கள் கொண்ட நாலிசை.

## பதினான்கு சீர் வண்ண விருத்தம்

(தந்த தந்ததன தந்த தந்ததன
தந்த தந்ததன தானனா)

26. வஞ்ச கம்பலதெ ரிந்து கொண்டகரு
மந்தி யென்றகுண மேவியே
மன்றி டந்தொறும்நு ழைந்தி ருந்துபெரு
வம்ப றைத்திகலும் நாவலீர்

வெஞ்ச மன்பகடி வர்ந்தெ திர்ந்துமிக
மிண்டி நின்றுசம ராடும்நாள்
வெண்க ளங்கொள்ககம் ஒன்றில் அஞ்சலென
விண்டு வந்தருள்செய்து ஆள்வதார்?

மஞ்ச டர்ந்தபொழில் எங்க ணுஞ்சிகிம
னங்க னிந்தகவி ஆடுமா
மங்க ளம்பொலிய இந்திய ரன்சபைவ
ளந்து லங்குமெழில் வீரைவாழ்

அஞ்ச னன்பவப யங்க ரன்பொருவில்
ஐம்பெ ரும்படைகொள் ஆதிமால்
அந்த ணன்குடிகொள் உந்தி கொண்டமுகில்
அண்டர் நண்பனென ஓதுமே.

வஞ்சகம் பல தெரிந்து கொண்ட கருமந்தி என்ற குணம் மேவியே—பொய்களையே அறிந்துகொண்ட கருங்குரங்கு என்ற தன்மையைப் பொருந்தியே

மன்று இடந்தொறும் நுழைந்து இருந்து பெருவம்பு அறைந்து இகலும் நாவலீர்—சபைகள்தோறும் சென்று பெருந்தீச் சொற்களையே சொல்லி வாக்குவாதம் செய்யும் நாவினை யுடையவர்களே!

வெஞ்சமன் பகடு இவர்ந்து எதிர்ந்து—இயமனானவன் தன் வாகனமாகிய எருமையின் மேல் ஏறி எதிர்வந்து

மீண்டி நின்று சமர் ஆடும் நாள்—நெருங்கி நின்று போராடும் அந்நாளில்

வெண் களங்கொள் ககம் ஒன்றில் அஞ்சலென விண்டு வந்து அருள் செய்து ஆள்வது ஆர்—வெண்ணிறக் கழுத்தினைக் கொண்ட கருடப்பறவை மீதேறி ஆகாயத்தில் தோன்றி, அஞ்ச வேண்டாம் என்று அருளி ஆட்கொள்வது யார் தெரியுமா?

மஞ்சு அடர்த்த பொழில் எங்கணும் சிகி மனம் கனிந்து அகவி ஆடுமாம்—மழை மேகம் சூழ்ந்த சோலைகளில் எல்லாம் மயில்கள் மகிழ்ந்து கூவி விளையாடும்

மங்களம் பொலிய இந்திரன் சபை வளம் துலங்கும் எழில் வீரை வாழ் அஞ்சனன்—சிறப்புடன் விளங்கி, தேவலோகம் போன்ற வளமை பெற்றிலங்கும் அழகு நகரமான வீர கேரளம்புதூரில் வாசம் செய்கின்ற திருமால்

பவ பயங்கரன்—பாவங்களை அழித்துப் பிறப்பறுத்து மேன்மையே தருபவர்

பொருவில் ஐம்பெரும் படைகொள் ஆதிமால்—குற்றமில்லாத பஞ்சாயுதமாகிய சக்கரம், வில், வாள், தண்டு, சங்கு ஆகியவற்றை ஏந்தியிருக்கும் முழுமுதற் கடவுளாகிய விட்டுணு

அந்தணன் குடிகொள் உந்தி கொண்ட முகில்—பிரமன் வசிக்கின்ற கொப்பூழினையுடைய மேகவண்ணராகிய கண்ண பெருமான்

அண்டர் நண்பன் என ஓதுமே—ஆயர் தம் துணையாவார் என்று அறிந்து சொல்லுவீராக!

## குறிப்புரை

பொய்ப்புலவரின் இழிநிலையை எடுத்துக்கூறி, வாழ்வின் இறுதிநாளில் வந்து காப்பவன் கண்ணபிரானே என்பதை உணர்ந்து ஓதுமாறு வேண்டுகிறார் ஆசிரியர்.

வஞ்சகம்—கபடம்; பொய். கருமந்தி—கருங்குரங்கின் பெண். மன்று—சபை. வம்பு—வீணே நிந்தித்துப் பேசுதல்; நிட்டூர வார்த்தைகளைக் கூறுதல். சமன்—யமன் என்னும் வடமொழித் திரிபு. பகடு—எருமை; இது யமனின் வாகனம்.

மிண்டி—நெருங்கி. சமர்—போர். சமராடும் நாள்—இறுதிக் காலம். களம்—கழுத்து. ககம்—ஆகாயத்திற் செல்வது; இது, இங்குப் பறவைகளுக்கு அரசனான பெரிய திருவடிகளை (கருடனை) உணர்த்திற்று. மஞ்சு—மேகம். சிகி—மயில்.

கண்ணபிரானின் கருமை நிறத்திற்கு அஞ்சனம்—மை உவமையாயிற்று. 'ஆயர் குலத்தினில் வந்து தோன்றிய அஞ்சன வண்ணன்' (பெரியா. திரு. 1-7-11) என ஆழ்வார் கூறியவாறே இவரும் 'அஞ்சனன்' என்றார்.

திருமால் பிறப்பிறப்பை நீக்கியருள்பவர் என்ற பொருளில் அவரைப் பவபயங்கரன் என்றார். 'பிறவியற்று நீள் விசும்பிற் பேரின்ப முய்க்கும் திறமளிக்குஞ் சீலத்திருமால்' (திருவாய். 1-7) என்னும் நம்மாழ்வார் மொழியும் இங்கு நோக்கத்தக்கது.

ஐம்படை—பஞ்சாயுதம். திருமாலின் படைக்கருவிகள். 'அங்கை யாழி சங்கு தண்டு வில்லும் வாளு மேந்தினாய்'(திருச். 24) என்பார் திருமழிசைப்பிரான். 'சக்கரஞ்சங் குயர்கதைவா டனுவோடைந்தும் தரித்தருளும் பரமபுருடா கமலக் கண்ணா' (எம். சதக. 96) என்பார் பிறரும்.

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற வொள்வாள்,
காலார்ந்த கதிக்கருட னென்னும் வென்றிக்
கடும்பறவை யிவையனைத்தும் புறஞ்சூழ் காப்ப,
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
மாலோனைக் கண்டின்பக் கலவி யெய்தி
வல்வினையே னென்றுகொலோ வாழு நாளே.

(பெரு. திரு. 1-8)

என்பார் குலசேகரப் பெருமாளும்.

அனைத்துக்கும் முதன்மையானவர் என்பதால் கண்ண பிரானை 'ஆதிமால்' என்றார்.

ஆதியான வானவர்க்கு மண்டமாய வப்புறத்து
ஆதியான வானவர்க்கு மாதியான வாதிநீ
ஆதியான வானவாண ரந்தகாலம் நீயுரைத்தி
ஆதியான காலநின்னை யாவர் காணவல்லரே.

என்றும்,

ஆதியாதி யாதிநீயொ ரண்டமாதி யாதலால்,
சோதியாத சோதிநீ அதுண்மையில் விளங்கினாய்,
வேதமாகி வேள்வியாகி விண்ணினோடு மண்ணுமாய்
ஆதியாகி யாயனாய மாயமென்ன மாயமே.

(திருச். 8, 34)

என்றும் திருமழிசைப்பிரான் 'ஆதிமால்' விளக்கம் தரக் காணலாம்.

அந்தணன் என்றது பிரமனை. 'உந்திமேல் நான்முகனைப் படைத்தா னுலகுண்டவ னெந்தை பெம்மான்' (பெரிய திரு. 5-4-1) என்பார் திருமங்கையாழ்வார். முகில் என்றது கண்ண பிரானை. கொண்டல் வண்ணம் கண்ணனின் திருமேனிக்கு உவமையாயிற்று. 'முன்செய்த வினையே முகப்படா யென்னும் முகில்வண்ணா' (திருவாய். 7-2-2) என்பார் நம்மாழ்வாரும். 'மின்னில் பொலிந்ததோர் கார்முகில் போலக் கழுத்தினிற் காறையொடும் தன்னில் பொலிந்த இருடீகேசன்' (பெரியா. திரு. 1-7-3) என்பார் பெரியாழ்வார்.

அண்டர்—வானோர். தேவர்களுக்கெல்லாம் தலைவன் கண்ணபிரான். ஆயினும், இங்கு அண்டர் என்றது இடையர் 'அண்டர் மால் வரையினை யன்புற் றேத்தினார்' (பாக 10-11-13) என்பது பாகவதம்.

இது, 'தந்த தந்ததன தந்த தந்ததன தந்த தந்ததன தானனா' என்னும் சந்தத்திலமைந்த **பதினான்குசீர் வண்ண விருத்தம்.**

## அம்மானை

அம்மானை என்பது மகளிர் விளையாடும் விளையாடல் களில் ஒன்று. அவ் விளையாட்டின்போது பாடப்பெறும் பாடலும் அப்பெயராலேயே வழங்கும். அம்மானை ஆடும் பொழுது மூன்று பெண்கள் பாட்டுடைத் தலைவனைப் பற்றிப் புகழ்ச்சியாகவோ நிந்தாத் துதியாகவோ பாடும்படி இப் பாடல் அமைக்கப்பெறும். இதன் இலக்கணம்: "அம்மனை கைக்

கொண் டாடுநர் தம்மையு மம்மனை யாய்மதித் தாங்கொர் கர்த்தாவினை நிந்தாத் துதிதுதி பெறநிகழ் துதலும் அந்தாதித் திடை யடிமடக் காகவு மீற்றடி யிரட்டுற விசைத்ததைத் தாபித் தாற்றலி னமைக்கு மம்மனை மடக்கொன்றுள" (மாறன. சொல்லணி. 16); "இரண்டு நாலைந் தெனுமடி யீற்றிற் தன் பெயர் குலவத் தக்கவம் மானையைந் தடிக்கலிப்பாப் போலு மதனிடை சொல்லலும் மறுத்தலும் விடையும் தானே கூறினர் பற்பலர் குவலயத் திடத்தே"; "அம்மானை யீற்றின் விடை மொழி யதனுள் ளிருபொருள் காட்டிடன் மிகையா முப்பொருள் நாற்பொருள் மொழி யதனுள் ளிருபொருள் காட்டிடன் மிகையா முப்பொருள் நாற்பொருள் மொழியினும் இசைவுறின் நலமே" (அறுவகை யாப்பு. இயலிசை. 29, 30).

இவ்வகை யமைப்பில் அமைந்த அம்மானை என்னும் ஓர் உறுப்பாக இப்பாடல் அமையும்.

## (கலித்தாழிசை)

27. ஓதருஞ்சீர் வீரைநகர் உற்றநெடு மால்ஒருவன்
வேதனரன் இந்திரற்கும் மேலானான் அம்மானை
வேதனரன் இந்திரற்கு மேலானான் ஆமாகில்
பூதலத்துஏ னத்திற் புகுவானேன் அம்மானை
போதகனா வைத்துப் புரந்தான்காண் அம்மானை.

ஓத அருஞ்சீர் வீரைநகர் உற்ற நெடுமால் ஒருவன்—சொற்களால் சொல்லுதற்கு அரிதான சிறப்புடைய வீரகேரளம்புதூரினை அலங்கரிக்கின்ற விட்டுணு ஒருவரே

வேதன் அரன் இந்திரற்கும் மேல் ஆனான்—பிரமன், சிவபெருமான், இந்திரன் ஆகியோர்களுக்கெல்லாம் மேலான கடவுள் ஆவார் (இது, முதற்பெண் கூற்று)

வேதன் அரன் இந்தி அரற்கும்—கடவுள், எப்பொருட்கு மிறைவன், இலக்குமி, அநந்தன் போன்றவர்

ஏவல் ஆனான் ஆமாகில்—பணிவிடை செய்ய ஏற்பவர் என்றால்

பூ தலத்து ஏனத்தில் புகுவான் ஏன்—நிலவுலகில் பன்றியின் உருவம் பெற்றது எதற்காக? (இது. இரண்டாவது பெண்ணின் வினா)

போதகனா வைத்துப் புரத்தான் காண்—குழந்தையை எடுத்துக் காப்பது போன்று காப்பாற்றினார் என்பதை அறிவாயாக (இது மூன்றாம் பெண் இருவர் கொண்ட பொருளுக்கும் பொருந்துமாறு விடை கூறுவது—இறுதிப் பகுதி)

## குறிப்புரை

கண்ணபிரானின் வராக அவதாரச் சிறப்பு இங்கு விளக்கப் பெறும்.

## ஏனமான வரலாறு

இரணியனது உடன்பிறந்தவனான இரணியாக்கன் என்னும் கொடிய அசுரன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி எடுத்துக்கொண்டு கடலில் மூழ்கிச் சென்ற போது, தேவர், முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் திருமால் வராக வடிவமாகத் திருவவதரித்துக் கடலினுள் புக்கு அவ்வசுரனை நாடிக் கண்டு பொருது கொன்று பாதாள லோகத்தைச் சார்ந்திருந்த பூமியை அங்கு நின்று கோட்டாற் குத்தி எடுத்துக்கொண்டு வந்து பழையபடி விரித்தருளினார் என்பதாம்.

குழந்தை கிணற்றில் விழுந்தால் உடனே அதிற் குதித்துக் குழந்தையை எடுக்கும் தாய்போலப் பூமி கடலினுட் புக்கவளவிலே நீருக்கும் சேற்றுக்கும் பின்வாங்காத வராக வடிவ மாய்க் கடலினுட் புக்குப் பூமியை எடுத்ததற்காகக் கொண்ட அத்திருமேனியின் பெருமையை விளக்குவர்.

"எண்ணற் கரியதோர் ஏனமாகி இருநிலம்புக் கிடந்து"

என்பார் பெரியாழ்வார் (பெரியா. திரு. 4-1-9).

"பாசிதூர்த்துக் கிடந்த பார்மகட்கு பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்"

என்பது நாச்சியார் திருமொழி (நாச். திரு. 11-8).

'ஏனத்தினுருவாகி நிலமங்கை யெழில் கொண்டான்'
(பெரிய திரு. 2-3)என்றும்,

'பாராளவும் முதுமுந்நீர் பரந்த காலம், வளைமருப்பில்
ஏரா ருருவத் தேனமா யெடுத்தவாற் றலம்மானை'
(பெரிய திரு. 9-8-3) என்றும்,

'ஆதிமுனேன மாகி யரணாய மூர்த்தி'
(பெரிய திரு. 11-4-3) என்றும் கூறுவர் திருமங்கையாழ்வார்.

'இறைவ னானமால் ஏனமா யிருநில மெடுத்தான்'
(பாக. 1-1 25) என்பது பாகவதம்.

புண்ணியந்தெய் வதமுஞ்சேர் பூலோ கத்தைப்
புற்பாய்போற் சுருட்டிக்கொண் டேபா தாளம்
நண்ணிரணி யாட்சனைப்பின் தொடர்ந்தே யேகி
நலமுடனே யாதிவரா கத்தே வாகி
மண்ணுலக மனைத்துமிடந் தெடுத்தோர் கோட்டில்
வைத்துவர வவன்மறிக்க வதைத்துத் தேவர்
எண்ணவுல கீரேழும் படியப் பண்ணாய்
இறைவாநா ராயணனே எம்பி ரானே.

(எம். சதக. 86)

என்னும் பாடலும் திருமால் ஏனமான வரலாற்றை விளக்கும்.

திருமால் திரிவிக்கிரமனாகி ஓங்கி உலகளந்த காரணத்தால் 'நெடுமால்' என்றார். ஒப்பற்றவன் என்பதால் 'ஒருவன்' என்றார். 'அருந்திறல் மைந்துடை ஒருவன்' (பரி. 1-47) எனப் பரிபாடலும் கூறும். திருமாலே யன்றி வேறொரு கடவுளில்லாமல் ஒருத்தனே எல்லாவற்றுக்கும் முதற் கடவுள் என்பதாம்.

தெளிக்குநான் மறையு மின்னந்தெளிவதற் கரியதெய்வ
விளக்கமே ஞானா னந்த வெள்ளமே நினது மாயை
வளைத்திடப் பட்டோர் நின்னை மதிப்பரே மூவ ராக
உளத்தெளி வுற்றோர் பார்ப்ப ருன்னைமற் றொருவ
னென்றே.

(பாக. 10-1-41)

என்பது பாகவதம்.

*தெளிக்கும்—எல்லாப் பொருளையும் தெளிவாகக் கூறும். நின்னை—உம்மோடு. உருபுமயக்கம். மதிப்பரே; ஏ : அசை நிலை. நினது மாயையால் வளைத்திடப் பட்டோர் நின்னை மூவரில் ஒருவனாக மதிப்பர். உளத்தெளிவுற்றோர் உன்னை ஒருவன் என்றே பார்ப்பர். எனவே, ஒருவன் என்றது ஒப்பற்ற தனி முதலான கண்ணபிரானே ஆகும்.*

*இது, நான்கு அடிகளால் நணித்து வந்து ஈற்றடி எண்சீராய் மிக்கு ஏனையடிகள் அளவடிகளாய் நின்ற* **கலித்தாழிசை.**

## (நற்றாயிரங்கல்)

### தாழிசை

28. அம்மானை யைப்பொற் கழங்கைத்தொ
டாள்முச்சி லதைநாடிடாள்
அவிர்தூசு குருகாழி அமையப்பெ
றாள்பாலொடு அமுதுண்டிடாள்

மெய்ம்மானு டைத்திங்கள் வருமென்று
யிர்ப்பாள்மை விழிமூடிடாள்
வீரைப்பி ரான்என் றிரங்குங்கொ
லோஎன்றும் விள்வாள்ஐயோ!

இம்மாதி னைப்பெற்றே டுக்கச்செய்
தவமுற்றும் அறியாய்கொலோ
இன்னம்து ழாய்நல்கி டாதுற்றி
டேல்கொச்சை இடைமாதர்தம்

கைம்மாமு லைப்போர்வி ழைந்தெண்ணில்
வடிவிற்க ணந்தோறும்வாழ்
கண்ணா! மணிக்குன்ற வண்ணா!
பழுத்துள்ள கள்ளத்தனே!

*அம்மானையைப் பொன் கழங்கைத் தொடாள்—(என் மகள் தான் காதலிக்கும் உம்மையே நினைந்து நினைந்து) அம்மானை, பொன்னாலான கழங்கு ஆகியவற்றைக் கையில் எடுப்பதுமில்லை*

முச்சிலதை நாடிடாள் அவிர்தூசு குருகுஆழி அமையப் பெறாள்—அவிழ்ந்த கூந்தலையும் முடிவதில்லை, ஒளிவீசும் ஆடை, கைவளை, மோதிரம் ஆகிய அணிகலன்களையும் அவள் அணிவதில்லை

பாலொடு அமுது உண்டிடாள்—பாலும் சோறும் அவள் உண்பதேயில்லை

மெய்ம் மானுடைத் திங்கள் வரும் என்று உயிர்ப்பாள்—தலைவன் வரும் காலம் வருமென்றே நம்பி உயிர் வாழ்ந்திருக்கின்றாள்

மை விழி மூடிடாள்—கண் உறங்குவதுமில்லை

வீரைப் பிரான் என்று இரங்கும் கொலோ என்றும் விள்வாள்—வீரகேரளம்புதூர்த் தலைவராகிய நீவிர் எப்பொழுது மனமிரங்குவீரோ என அடிக்கடிப் பெருமூச்சு விடுவாள்

ஐயோ, இம் மாதினைப் பெற்றெடுக்கச் செய்த தவம் முற்றும் அறியாய் கொலோ—இப்படிப்பட்ட பெண்ணை நான் ஈன்றெடுக்க என்ன தவம் செய்தேனோ தெரியவில்லையே!

இன்னும் துழாய் நல்கிடாது உற்றிடேல்—(என் மகளைப் பற்றி இவ்வளவு கூறியும்) இப்பொழுதும்கூட உம் திருமாலையை அளித்தருளாமல் இருக்காதீர்

கொச்சை இடை மாதர்தம் கைம்மா முலைப்போர் விழைந்து—ஆயர்குலப் பெண்களை மருவி அவர்களுடைய மார்பில் அணைய விரும்பி

எண்ணில் வடிவில் கணந்தோறும் வாழ் கண்ணா—(கோபியர் இல்லந்தோறும்) கணக்கற்ற உருவங்களை (அவர்கள் விரும்பிய பொழுதெல்லாம்) எல்லாக் காலங்களிலும் பெற்று வாழும் கண்ணனே!

மணிக்குன்றவண்ணா! பழுத்துள்ள கள்ளத்தனே!—நீலமலை போன்ற நிறத்தவரே! தீர்ந்த திருட்டுத்தன முடையவரே! (என் மகளின் பிரிவுத் துயரைத் தீர்த்தருள்வீராக)

## குறிப்புரை

இது, தலைமகனோடு புணர்ந்து பிரிந்த தலைமகள் பிரிவாற்றாமை யாற்படுகிற பலவகைத் துன்பங்களையுங் கண்டு ஆற்றாளான நற்றாய் தன் ஆற்றாமை மிகுதியால் இரங்கிக் கூறியது.

அம்மானை, கழங்கு—இவை பெண்கள் ஆடும் விளை யாட்டுகள். தூசு—ஆடை. குருகு—கைவளை. ஆழி—மோதிரம். அமுது—அம்ருதம்; வடசொல்; (உண்டவர்க்கு) மரணத்தைத் தவிர்ப்பது என்று காரணப்பொருள் பெறும். இங்கு அமுது என்பது சோற்றைக் குறிக்கும். வீரைப்பிரான்—கண்ணபிரானாகிய நவநீதகிருட்டிணன். மாது—பெண் (தலைவி). கொலோ—ஐயப்பொருளை உணர்த்த வந்த இடைச் சொல். துழாய்—துளவு. அதனாலாகிய மாலைக்குக் கருவியாகு பெயர். கொச்சை—திருந்தாதப் பேச்சு. இங்கு இடையர்குல மகளிரின் இளமையைக் குறித்தது. இடைமாதர்—கோபியர். கண்ணா—கண்ணோட்டம் (கருணை) உடையவனே என்றுமாம். ஏ—பிரிநிலையோடு தேற்றம். கண்ணபிரானின் மேனி வண்ணத்திற்கு நீல மணிக்குன்றம் உவமை ஆயிற்று.

ஆயர்குலப் பெண்கள் கண்களிலும், மனங்களிலு மட்டுமே யன்றி அவர்களை மகிழ்விப்பதற்காக 'வேறு வேறுருவாய் மடந்தையர் வீடுதோறும் விளங்கினாய்' (வள. திரு. பதி.) என ஆசிரியர் பலவிடத்தும் திருமாலைக் கூறுவர். கண்ணபிரான் இவ்வாறு பதினாறாயிரம் கோபியர்களைப் புணர்ந்ததன் காரணத்தையும் ஆன்றோர் விளக்குவர்.

பொன்னுலகைச் செயித்தநர காசு ரன்தான்
பூதலத்திற் கொடுவந்து வைக்குந் தேவ
கன்னியர்கள் பதினாறா யிரம்பேர் தம்மைக்
கலியாண முகுர்த்தமொன்றிற் பண்ணிக் கொண்டே
நன்னெறிசே ரவரவர்க்கோர் புருட னாகி
நாடோறு மவரவர்க ளுடனே கூடி
என்னகத்தி லேயிருப்பா ரெங்கும் போகார்
என்னவுற்றாய் மாயவனே எம்பி ரானே.

(எம். சதக. 68)

சுவர்க்கலோகம் முழுமையும் வெற்றி கொண்ட நரகாசுரன் பூமியிலுள்ள உத்தம சத்திரியர்களையும் வென்று பதினா றாயிரங் கன்னியர்களையும் சிறை கொண்டான். அக் கன்னியர் களைக் காக்கும்பொருட்டு ஓரே சுபமுகூர்த்தத்தில் பதினாறா யிரம் மணவாளக் கோலங் கொண்டு திருமணம் புணர்ந்தார் கண்ணபிரான். நல்லொழுக்கம் வாய்ந்த அக் கோபியர் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு அன்புநாயகனாகி நாள்தோறும் ஒருவரையும் விட்டுப் பிரியாமல் 'என் வீட்டிலே யிருக்கிறார், என்னைப் பிரிவதே யில்லை' யென்று அவர்கள் ஒவ்வொருவரும் எண்ணும்படித் திருவிளையாடல் செய்தது கண்ணபிரானின் அருட்செயல்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு காணும் பெண்களின் கருத்துள் என்றும் தங்கி யிருப்பதே கண்ணபிரானின் பேரன்பும் பெருமை தரும் செயலுமாகும். 'கண்ணைக் குளிரக் கலந்தெங்கும் நோக்கிக் கடிகமழ் பூங்குழலார்கள் எண்ணத்து ளென்று மிருந்து தித்திக்கும் பெருமானே எங்களமுதே' (பெரியா. திரு. 2-3-11) எனப் பெரியாழ்வாரும் இதையே நினைந்து போற்றுவர்.

இத்தகைய கருணையுள்ளங் கொண்ட கண்ணபிரானாகிய தலைவன், தன்னுடைய மகளாகிய தலைவியின் அன்பினை மெச்சி இன்னும் வரவில்லையே என ஏங்கியிரங்கி வேண்டு கிறாள் நற்றாய்.

இது, பதின்சீர் நாழிகை.

## மருட்பா

29. கள்ளன்என ஏசினர்க்கும் காதலறத் தீர்த்தருளும்
வள்ளல் ஒருவன்றி மற்றில்லை—அள்ளற்
கடல்வளை துவரைக் காவல் நீத்து
மிடலினர் பலர்புகழ் வீரைத்
தடமதிற் கோயிற் தங்கினன் அவனே.

கள்ளன் என ஏசினர்க்கும்—(ஆயர்பாடியில்) பல இல்லங்களில் திருடியவன் என்று பழிபடத் தூற்றினவர்க்கும்

காதலறத் தீர்த்து அருளும் வள்ளல் ஒருவன் அன்றி மற்று இல்லை—ஆசை தீர அவர்கள் வேண்டுதல்களை நிறை

வேற்றி வைக்கும் கொடையாளி அக் கண்ணன் அல்லது வேறு யாருமில்லை

அள்ளல் கடல் வளை துவரைக் காவல் நீத்து—நெருங்கிய அலைகளோடு கூடிய திருப்பாற்கடலிடத்தையும், துவாரகாபுரி அரண்மனையையும் விட்டுவிட்டு,

மிடலினர் பலர்புகழ் வீரைத் தடமதில் கோயில் தங்கினன் அவனே—வலிமை மிக்கோர் பலருடைய போற்றுதலுக்குக் காரணமான மலை போன்ற அரண்களையுடைய வீரகேரளம்புதூர்க் கோயிலில் வந்து தங்கியுள்ள எம்பெருமான் அவரே.

## குறிப்புரை

ஆயர்பாடியிலுள்ள கோபியர் இல்லங்களையெல்லாம் விடுத்து, திருப்பாற்கடலை விட்டெழுந்து, துவாரகை நகரிலுள்ள தம்முடைய அரண்மனைக் காவலையும் நீங்கி, இங்கு வீரகேரளம்புதூரில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானின் பெருமைச் சிறப்பைக் கூறுகிறார் ஆசிரியர்.

கள்ளன்—கள்வன் (வெண்ணெயைத்) திருடியவன்—கண்ணபிரான். வள்ளல்—கண்ணபிரான். அள்ளற்கடல் வளை—திருப்பாற்கடல். துவரை—துவாரகை நகர். த்வாரகா என்னும் வடமொழியின் சிதைவு. காவல்—அரசாட்சி.

அனைத்துக்கும் மூலமாகிய கண்ணபெருமானைக் 'கள்வன்' என நான்முகன், சிவன், இந்திரன் ஆகியோரும் போற்றிப் புகழ்வர்.

'கள்வா எம்மையு மேழுலகும், நின்
னுள்ளே தோற்றிய இறைவ வென்று,
வெள்ளேறன் நான்முக னிந்திரன் வானவர்
புள்ளூர் திகழல் பணிந்தேத் துவரே.

(திருவாய். 2-2-11)

என்பார் நம்மாழ்வார்.

மாயனாகிய கண்ணன் தன் இளமையில் ஆயர்பாடி இல்லங்களில் வெண்ணெயைத் திருடியுண்ட மாட்சிமையைக் கூறும் திருமங்கையாழ்வார் கண்ணனைக் '**கள்ளக்குழவி**' (பெரிய

திரு. 10-5-9) என்றே கூறி மகிழ்வர். இத்தகைய குழந்தை யாகிய கண்ணனைக் குறித்து ஆய்ச்சியர் யசோதையிடத்தே முறையிடுகின்றனர். '**கள்வன்** உறங்குகின்றான் வந்து காண் மின்கள்' (பெரிய திரு. 10-7-3) என்றே தாயை அவர்கள் அழைத்ததைக் கூறுவர் ஆழ்வாரும். அத்தகைய ஆயர் மகளிரின் சொல்லையெல்லாம் பொய்யாக்கி. அவர்களையும் காத்தருளி யவன் கண்ணன் என்பர் ஆன்றோர்.

'கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான்' (பெரிய திரு. 11-5-11) என்றாலும் அடியார்தம் உள்ளத்தே உறைந்து அவர் வேண்டும் பரமபதம் நல்கும் வள்ளல் தன்மை பொருந்தியவர் கண்ணபிரானே என்பர். அவர் செய்யும் கள்ளத்தன்மையிலும் அறமே மேலோங்கி நிற்கும். அதற் காகவே அவர் கள்ளக்குழவியாகவும், ஓங்கி உலகளந்த நெடுமாலாகவும் பல்வேறு உருவம் சமைத்தார் என்பது வரலாறு.

ஆக்கமும் அழிவும் இன்றி அகண்டமாய் அமல மாகி
வாக்கொடு மனத்துக் கெட்டா **வள்ளலே**! அறத்தின்
வாழ்வே!
தீக்கவுந் தீயோர் தம்மைச் செய்வினை நலத்தி னோரைக்
காக்கவு மன்றோ கோடி கடவுளிவ் வுருவம் அம்மா.
(பாக. 10-1-42)

என்பது பாகவதம். கோடி—கொள்கின்றாய். கடவுள் இவ்வுரு வம்—தெய்வத் தன்மையையுடைய இந்த உருவத்தை என்பதாம்.

'**வள்ளலே** மதுசூதனா என்மரகத மலையே, உனைநினைந்
தெள்கல் தந்த வெந்தா யுன்னை யெங்ஙனம் விடுகேன்'
(திருவாய். 2-6-4)

என்பார் நம்மாழ்வார்.

ஒருவனன்றி மற்றில்லை என்றது ஞானசோதியாம் கண்ண பிரானின் முத்தொழிற் சிறப்பைப் போற்றியேயாம்.

ஆதியி **லொருவ யாகி**
அந்தமென் றுரைக்கும் போழ்தும்
ஏதமி **லொருவ யாகி**
இயம்புமிந் நடுவிற் பேதம்

ஓதுயிர் பலவு மாகி
உறைதல்போ லுறைவாய் ஞான
சோதிஉன் விளையாட் டெல்லாஞ்
சொல்லவல் லுநர்யா ரம்மா. (பாக. 7-2-100)

ஆதிமா மாயை யாகி
அகத்தகங் கார மாகிப்
பூதமாய்ப் பொறியா யந்தப்
பொறிக்குறுங் குணங்க ளாகிப்
பேதமா முயிரா யொன்றாய்ப்
பிறங்குசித் தாகி வைகும்
கோதிலா நின்னை யன்றிக்
குறிக்குமோர் பொருளு முண்டோ? (பாக. 7-2-101)

எனவரும் பாகவதப் பாடல்களும் கண்ணனைத் தவிர மற்றோர் தெய்வமில்லை யென்பதை யுணர்த்தும்.

கண்ணபிரான் துவாரகை நகரில் அரசாட்சி செய்ததை விடுத்து இங்கு எழுந்தருளினார் என்பதை, 'துவரைக் காவல் நீத்து வீரைத் தடமதிற் கோயிற் தங்கினான்' என்றார்.

பல்லாயிரம் பெருந்தேவி மாரொடு பௌவமெறி துவரை
எல்லாரும் சூழச் சிங்கா சனத்தே இருந்தானைக்
கண்டாருளர்
(பெரியா. திரு. 4-1-6)

என்றும்,

பதினாறா மாயிரவர் தேவிமார் பணிசெய்ய, துவரை
என்னும்
அதில்நா யகராகி வீற்றிருந்த மணவாளர்
(பெரியா. திரு. 4-9-4)

என்றும் கூறுவர் பெரியாழ்வார்.

'காதல் செய் துவரை யிந்தக் கண்ணனாற் சிறந்த தென்பார்' (பாக. 1-4-27) எனவரும் பாடல்களால் கண்ண பிரானின் துவரை அரசாட்சி விளக்கமுறும்.

கண்ணபிரானானவர் தம்மிருப்பிடமாகிய திருப்பாற் கடலையும், துவரையையும், வைகுந்தத்தையும் விட்டு இம் மண்ணுலகத்தே எழுந்தருளி அடியார் மனத்தகத்தே வீற்றிருக் கும் அழகை ஆழ்வார்களும் போற்றியுரைப்பர்,

**பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு, ஓடிவந்தென்**
மனக்கடலில் வாழ வல்ல மாய மணாள நம்பி,
தனிக்கடலே தனிச்சுடரே, தனியுலகே யென்றென்று,
உனக்கிட மாயிருக்க வென்னை யுனக்குரித் தாக்கினையே.

தளவரை வாய்மிளிர்ந்துமின்னும் தவள நெடுங்
கொடிபோல்,
சுடரொளி யாய்நெஞ்சி னுள்ளே தோன்று மென்சோதி
நம்பீ,
**வடதடமும்வை குந்தமும் மதிள்து வராபதியும்,**
**இடவகை களிகழத் திட்**டென் பாலிட வகைகொண் டனையே
(பெரியா. திரு. 5-4-10/1)

என ஆழ்வார் போற்றியது போன்றே இந்நூலாசிரியரும் கண்ணபிரான் வீரைத் திருநகரில் கோயில் கொண்டருளி ஆங்குள்ள அடியார் மனத்திலெல்லாம் குடிகொண்டிருப்பதை எடுத்துரைக்கின்றார்.

இது, முதலிரண்டு அடிகளும் வெண்பாவடிகளால் மற்றவை ஆசிரியவடிகளாய், அவற்றுள்ளும் ஈற்றயலடி முச்சீரதாய் வந்த **மருட்பா.**

## இன்னிசை வெண்பா

30. **தங்கம்வெள்ளி யாதியவே தஞ்சமென்பார் போற்தமியேன்**
**பங்கமுற இன்னம் படுத்தா தருள்புரிவாய்;**
**செங்கணெடு மாலே! திருவீரைக் கோயிலிடத்**
**தெங்கள்குரு வானகண்ண னே!**

செங்கண் நெடு மாலே—சிவந்த தாமரை மலர் போன்ற கண்களையுடைய நெடியோனாகிய திருமாலே!

திருவீரைக் கோயிலிடத்து எங்கள் குரு ஆன கண்ணனே—செல்வமகள் குடிகொண்டிருக்கும் வீரகேரளம்புதூர்க் கோயிலில் எங்களுக்கெல்லாம் ஞானாசிரியனாக அருளுகின்ற கண்ணபெருமானே!

தங்கம் வெள்ளி ஆதியவே தஞ்சம் என்பார் போல்—பொன்னாபரணங்கள், வெள்ளியாலான பொருள்கள் போன்ற

வற்றையே செல்வமெனத் துணையாகக் கொள்ள விழைவார்கள் போல.

தமியேன் பங்கம் உற இன்னம் படுத்தாது அருள்புரிவாய்—வறியவனாகிய அடியேன் ஈனமடையும்படித் துன்புறாமல் கிருபை செய்வீராக.

## குறிப்புரை

திருவுக்கும் திருவாகிய செல்வன் எனப் போற்றப்பெறும் செங்கண் நெடுமால் அல்லாமல் வேறு தஞ்சமாக அடையக் கூடிய பொருளில்லை என்பதை ஆசிரியர் இங்கு விளக்குகிறார்.

தஞ்சம்—கதியற்றவராற் சரணமாக அடையப் படுபொருள்.

கண்ணபிரானின் தாமரை மலர் போன்ற சிவந்த கண்களால் அவரைச் 'செங்கண்மால்' (பரி. 3-60), 'செங்கண் செல்வ' (பரி. 4-10) என அழைப்பர். 'செங்கண் நெடியகரிய மேனி' (பெரிய. திரு. 9-5-7) என்பர் ஆழ்வார். '**செங்கண்** திருமுகத்துச் **செல்வத்** திருமால்' (திருப். 30) என்பார் ஆண்டாளும்.

'மலர்ந்த செங்கமலக் கண்ணனாகிய கண்ணன்' (பாக. 1-1-36) என்பது பாகவதம்.

கண்ணபிரான் அஞ்ஞான விருளைப் போக்குபவர், ஆதலால் எங்கள் 'குருவான கண்ணனே' என்றார்.

அறிந்தறிந்து வாமனன் அடியிணை வணங்கினால்,
செறிந்தெழுந்த ஞானமோடு செல்வமும் சிறந்திடும்,
மறிந்தெழுந்த தெண்டிரையுள் மன்னுமாலை
வாழ்த்தினால்
பறிந்தெழுந்து தீவினைகள் பற்றறுதல் பான்மையே.
(திருச். 74)

என்னும் திருமழிசையாழ்வார் வாக்கிற்கேற்ப இவரும் கண்ணன் கழலிணைகளையே வேண்டுகிறார்.

கண்ணபிரானைத் தஞ்சமடைந்தால் ஞானமும் செல்வமும் தானே வருமென்பது குறிப்பு.

இது, நாளென்னும் வாய்ப்பாட்டால் முடிந்த **இன்னிசை வெண்பா.**

### கலிநிலைத்துறை

31. **கண்ணும்கருத் தும்கொடுத் துன்உருக் காணுமாறே**
**எண்ணும்துணி வும்கொடுத் தாய்பிறி தென்செய்**
**வேன்யான்?**
**விண்ணும்புவி யும்துணைத் தாள்கவர் வென்றி யோர்ந்தே**
**நண்ணும்பெரி யோர்மலி வீரை நகர்ப்பி ரானே.**

*விண்ணும் புவியும் துணைத்தாள் கவர் வென்றி ஓர்ந்தே*—தேவலோகமும் பூலோகமும் எம்பெருமானாகிய உம் மலரடிகளால் அளந்து திரிவிக்கிரமனாய் நின்ற காரணத்தை நன்கு ஆராய்ந்தே!

*நண்ணும் பெரியோர் மலி வீரைநகர்ப் பிரானே*—(உம்மிடம் விரும்பி வந்து) சேரும் ஆன்றோர்கள் நிறைந்த வீரகேரளம் புதூர் வாழ் இறைவரே!

*கண்ணும் கருத்தும் கொடுத்து உன் உருக்காணுமாறே*—காணும் விழியிரண்டும் ஆழ்ந்துணரும் உள்ளமும் அளித்து உம்முடைய பேரெழிலைக் காணும்வண்ணம்!

*எண்ணும் துணிவும் கொடுத்தாய்*—நினைக்கும் தெளிவினையும் அளித்துள்ளீர்!

*பிறிது என் செய்வேன் யான்*—(இப்படி உம்மையே எண்ணிப் பாடாமல்) நான் வேறு என்ன செய்வேன் கூறுவீராக.

### குறிப்புரை

வீரகேரளம்புதூரில் வீற்றிருக்கும் கண்ணனின் பேரெழிலை கண்களால் கண்டவுடன் கருத்தொருமித்து, அவரைப் பற்றிய பெருமைகளெல்லாம் எண்ணிப் பார்க்கும் துணிவு ஏற்பட்டது. அதன் காரணமாகவே அவரைப் பாடும் பாடல்கள் தானாகத் தோன்றுகின்றன. இதற்கும் அந்தக் கண்ணபிரானே காரணம் என்கிறார் ஆசிரியர்.

கண்ணுள்ளே நிற்கும் காதன்மை யால்தொழில்
எண்ணிலும்வரு மென்னினி வேண்டுவம்
மண்ணும்நீரு மெரியும்நல் வாயுவும்
விண்ணுமாய் விரியு மெம்பி ரானையே.

(திருவாய், 1-10-2)

என்னும் நம்மாழ்வார் பாசுரப்படி, கண்ணனின் திருகோலத்தைத் தன்னுள்ளே கொண்ட இவர் அக்கண்ணன் புகழையே பாடுகின்றமைக்குக் காரணம் அவன் எங்கும் நிறைந்திருப்பதே என்கிறார்.

கண்ணுள் நின்றகலான் கருத்தின் கண்பெரியன்,
எண்ணில் நுண்பொருள் ஏழிசையின் சுவைதானே,
வண்ண நன்மணிமா டங்கள்சூழ் திருப்பேரான்
திண்ணமென் மனத்துப் புகுந்தான் செறிந்தின்றே.

(திருவாய். 10-8-8)

என்பார் நம்மாழ்வாரும்.

பாரமாய பழவினைப் பற்றறுத்து, என்னைத்தன்
வாரமாக்கி வைத்தான் வைத்ததன்னி என்னுள் புகுந்தான்
கோரமா தவம்செய்தனன் கொலறியே
னரங்கத்தம்மான்திரு
வாரமார்ப தன்றோ அடியேனை யாட்கொண்டதே.

(அமல. 5)

என்னும் திருப்பாணாழ்வார் மொழிப்படியே இந்நூலாசிரியரும் கண்ணபிரான் தம்மை ஆட்கொண்டதைப் புலப்படுத்துகின்றார்.

'எயிற்றிடை மண்கொண்ட வெந்தை யிராப் பகலோதுவித்து, என்னைப் பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான்' (பெரியா. திரு. 5-2-3) எனவரும் ஆழ்வார் கூற்றும் கண்ணனைப் போற்றி செய்வதற்கு அவனே காரணமாவான் என்பதை வலியுறுத்தும்.

அவனருளால் அவன்தாள் வணங்கும் பேறும் பெற்றபின் அவனையே பாடிப் பரவுவதே அடியார் தொழிலாம். அதையே அடியேனும் செய்கின்றேன். பிறிதென் செய்வோன் யான் என்கிறார் ஆசிரியர்.

பொன்னைக் கொண்டுரை கல்மீதே
நிறமெழ வுரைத்தாற் போல்
உன்னைக் கொண்டென் நாவகம்பால்
மாற்றின்றி யுரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டென் னுள்வைத்தேன்
உன்னையு முன்னிலிட்டேன்
என்னப்பா வென்னிரு டீகேசா
என்னுயிர்க் காவலனே.

(பெரியா. திரு. 5-4-5)

எனவரும் பெரியாழ்வார் பாசுரமும் இவண் ஒப்புநோக்கத்தகும்.

இது, நெடிலடி நான்காய் அமைந்து, முதற்சீரிலும் நான்காம் சீரிலும் மோனை பெற்று வந்த **கலிநிலைத்துறை.**

## கலித்துறை

32. நகமன் றேந்தியும் ஆனனம் புரந்தநீ நல்லோர்
இகழ்பொல் லார்அவற் றினைக்கொலப் பார்ப்பதென்
றிழப்பாய்?
ககம்ஒன் றூர்ந்துவிண் வழிவரும் நாரணா! கமல
மகள்கொண் கா! வள வீரையில் மருவுவா னவனே.

ககம் ஒன்று ஊர்ந்து விண்வழிவரும் நாரணா—கருடப் பறவை மீதேறி ஆகாயமார்க்கமாக வந்தருளும் நாராயணரே!

கமலமகள் கொண்கா—தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் கணவரே!

வள வீரையில் மருவு வானவனே—எல்லாச் செல்வங்களும் பொருந்திய வீரகேரளம்புதூரில் வாழ்கின்ற தேவபிரானே!

நகம் அன்று ஏந்தியே ஆன்இனம் புரந்த நீ— (கோவர்த்தன) மலையை அன்றொருநாள் ஒரு விரலால் தூக்கிப் பிடித்துப் பசுக்கூட்டங்களையெல்லாம் காத்த நீவிர்.

நல்லோர் இகழ் பொல்லார் அவற்றினைக் கொல்லப் பார்ப்பது என்று இழப்பாய்—உயிர்களிடத்து அன்பு கொண்ட நல்லவர்கள் தூற்றும் படியாக உயிர்க்கொலை புரிவோர் அப்

பசுக்களைக் கொல்வதைப் பார்த்துக் கொண்டிருப்பதை என்று நிறுத்துவீரோ? (தெரியவில்லையே) விரைந்து வந்து காப்பீராக.

## குறிப்புரை

ஆயர்பாடியில் இந்திரன் கோபத்தால் விடாது பெய்த கல் மழையினைத் தடுக்கக் கோவர்த்தன மலையையே குடையாகப் பிடித்து ஆவினம் காத்த எம்பெருமான் உலகில் பசுக்கொலை நிகழ்வதைப் பார்த்தும் தடுக்காதிருப்பதை எண்ணி இந்நூலாசிரியர் வேதனையுறுகிறார். உயிர்க்கொலையைத் தடுப்பதே அவர்தம் விண்ணப்பம்.

நகம்—மலை; கோவர்த்தனமலை. ஆனினம்—பசுக்கூட்டம் நல்லோர் இகழ் பொல்லார்—பசுக்கொலை புரிவோர். ககம்—கருடன், கமலமகள்—தாமரையில் வீற்றிருப்பவள்; இலக்குமி. கொண்கன்—கணவன்; கண்ணபிரான்.

'திருவின் கணவன்' (பரி. 3-90), 'பொற்றாமரையாள் கணவன்' (திருவர. கலம். 5) என்றும் ஆன்றோர் அழைப்பர்.

வானவன் — வானவர் தலைவரான கண்ணபிரான். 'வானவர் தங்கள் கோன்' (திருக்கு. 20) என்பார் திருமங்கையாழ்வார்.

'வானவ ராதி யென்கோ வானவர் தெய்வ மென்கோ
வானவர் போக மென்கோ வானவர் முற்று மென்கோ'
(திருவாய். 3-4-7)

எனப் பரவும் நம்மாழ்வார்.

வானத்தும் வானத்துள் ளும்பரும் மண்ணுள் ளும்மண்ணின்கீழ்த்
தானத்தும், எண்டிசையும் தவிராது நின்றான் தன்னைக்
கூனற் சங்கத் தடக்கை யவனைக் குடமாடியை **வானக்
கோனைக்** கவிசொல்ல வல்லேற்கினி மாறுண்டே.
(திருவாய். 4-5-9)

என்றே புகழ்ந்தோதுவார்.

ஆனினங்களைக் கொல்லுதல் கூடாதென்னும் உயர் கொள்கையையுடைய இந்நூலாசிரியர் இந்நூலிலும் இன்னும் பிற நூல்களிலும், திருமாலைப் பரவுமிடங்களிலெல்லாமும் இதையே வலியுறுத்திப் பாடக் காணலாம்.

காவற் றொழில்பூண் டுலகேழையுங் காக்க வந்தோன்
ஆவுக் கிடரோன் றனுகாவகை யாழி மேய்ந்த
தூவற் கருங்கார் சொரிகின்றவம் மாரி காத்தான்
கோவத் தனமோர் குடையாமெனக் கொண்டு நின்றே.

(பாக. 10-11-22)

என்பது பாகவதம்.

காக்கும் கடவுளாம் கண்ணன் உலகேழையும் காக்க வந்த பொழுது, ஆயர்பாடியில் ஆவினம் இடர்ப்பட்டது கண்டு அன்று 'மாரி காத்தான்' என நின்றருளினார். இதை விண்ணவரும் மண்ணவரும் ஏத்திப் போற்றினர்.

நிலங்காத்த கோவே! நெடுங்குன்றின் மாரி காத்தென்
குலங்காத்த தெய்வக் கொழுந்தேயருள் வாழி பெண்ணாப்
புலங்காத் துயர்விட் புலஞ்சேர்பொலங் கோதை மாதர்
கலங்காத்த கண்ணன் தனைச்சார்ந்தது காமதேனு.

(பாக. 10- 1-34)

தேவ மாதரது மங்கலநாணைக் காத்த எம்பெருமானே! எனது குலத்துதித்த பசுக்கூட்டங் காத்த கோவே! எனக் காமதேனு மகிழ்ந்துரைத்ததாகவும் கூறுவர். இத்தகைய சிறப்புடைய கண்ணபிரான் உலகின்கண் நிகழும் பசுக்கொலை புரிவோரைத் தடுக்காதது ஏனோ எனப் புலம்புகின்றார் ஆசிரியர்.

கோவி னங்கள் நடுக்கமு றாமலோர்
குன்றெடுத் துக்குடை பிடித்திட்டநீ
ஆவி நீங்க அவற்றினைச் செற்றுண்பார்க்கு
ஆக்கம் ஈந்த அதிசயம் என்கொலோ?
பாவி கட்கெம னாமெனப் போர்செயும்
பண்பி ழந்து பரதவிக் கின்றையோ?
காவி நாண்மலர்க் காடுறழ் மேனியிற்
கமல மென்னக் கவின்றருள் கண்ணனே.

(எழு. எழு. 11)

எனப் பிறிதோரிடத்தும் இவர் இதையே வினவக் காணலாம்.

இது, முற்கூறியது போன்றே ஐஞ்சீரால் ஆன நான்கடிகளா யமைந்த கலித்துறை.

## மறம்

தமது மகளை மணம் பேசும்படி மன்னனால் அனுப்பப் பட்ட தூதனை நோக்கி மறவர்கள் மணம் மறுத்து அம் மன்னனை இகழ்ந்து பேசினதாகச் செய்யுள் செய்வது, மறம் என்னும் உறுப்புக்கு இலக்கணமாம். இதனை மகட்பாற் காஞ்சி என்னும் துறையின் இனமாகக் கூறுவர். மகட்பாற் காஞ்சி என்பது புறப்பொருள் திணை பன்னிரண்டனுள் காஞ்சித்திணைக்குரிய பல துறைகளில் ஒன்று. அதாவது—நின்மகளை எனக்குத் தருகவென்று சொல்லும் மன்னனோடு மாறுபடுவது; "ஏந்திழையாட்டருகென்னும் வேந்தனோடு வேறு நின்றன்று" என்பது புறப்பொருள்வெண்பாமாலை. இந்நூலில், பின்வரும் இரண்டு செய்யுள்கள் இத்துறையில் அமைந்துள்ளன.

### எண்சீர்த் தாழிசை

33. வான கத்துமென் தேவ ரல்லர்யாம்
மலையில் உற்றவன் மறவர் காண்மகத்து
ஊன ருந்தியும் பெண்கள் நல்கிடேம்
உயிரின் மானமிக்கு உயர வைத்துளேம்
ஆன தன்மைநின் அரச றித்திடா
ததும ணஞ்செயற்கு ஆதல் நிம்பமே
கான வேயிசைக் கண்ணன் வீரையூர்
கருதும் வீரவேல் மருதன் ஆணையே.

வானகத்து மென் தேவர் அல்லர் யாம்—(தூதனே!) விண்ணுலகிலிருக்கும் வலிமையில்லாத தேவர்கள் அல்ல நாங்கள்

மலையில் உற்ற வன்மறவர் காண்—குன்றுகளையே இருப்பிடமாகக் கொண்ட வலிமை மிக்க வேடர்கள் என்பதை அறிவாயாக

மகத்து ஊன் அருந்தியும் பெண்கள் நல்கிடேம்—பெரிய இறைச்சி உணவினை உண்போமானாலும் மகளிரை (உன் மன்னனுக்கு) அளிக்க மாட்டோம்

உயிரின் மானம் மிக்கு உயர வைத்துளேம்—உயிரைவிட மானத்தையே பெரிதாகக் கருதுபவர்கள் நாங்கள்

ஆன தன்மை நின் அரசு அறிந்திடாதது—(என்னும்) இக்குலப் பெருமையை உன் மன்னன் அறியமாட்டான்

மணம் செயற்கு ஆதல் நிம்பமே—அரசு (மரம்) மணக்க வேண்டியது வேம்பையே

கானவேய் இசைக் கண்ணன் வீரையூர் கருதும் வீரவேல் மருதன் ஆணையே—குழலூதும் புகழ் மிக்க நெடுமால் வாழும் வீரகேளம்புதூரில் வெற்றிச் சிறப்புடன் விளங்கும் மருதப்பன் ஆணை இது என்பதை நீயும் அறிவாயாக.

## குறிப்புரை

மறவர்தம் மாண்பினைக் கூறும் இப்பகுதியில் அம்மறவரின் மன்னவராகத் திகழும் மருதப்பனின் புகழும் கூறப்பெற்றது.

மலை—மறவர் இருப்பிடம். அரசு—அரசனுக்கு ஆகுபெயர். நல்கிடேம்—நல்க மாட்டோம். வைத்துளேம்—வைத்துள்ளோர். ஆணை—சபதம்.

இது, மாச்சீரும் விளச்சீரும் விரவி வந்த எண்சீர்த் தாழிசை.

## இதுவுமது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

34. ஆண்மகனே! உனைத்தூதிங் கனுப்பு மன்ன
னானால்வந்து அமர்புரிந்துஎம் அயிலால் மாய்ந்து
சேண் மடவார் முலைபுணர்வான்; எங்கள் பெண்கள்
சிவனிடத்தும் குகன்வலத்துந் திகழ்கின் றார்பார்!
மாண்மலிகங் கையும்மகவான் மகளும் அஞ்சி
வாழ்க்கைகுன்றிப் படும்பாடு மதித்தோர் முன்னைக்
கோண்மறைத்தான் தனைவீரை நகரிற் பல்கால்
கும்பிட்டெம் குலராயே கொண்டார் அன்றே.

உன்னைத் தூது இங்கு அனுப்பும் மன்னன் ஆண்பிள்ளை யானால்—உன்னை இவ்விடத்தில் (பெண் கேட்டுத்) தூதாக அனுப்பியிருக்கும் அரசனானவன் உண்மையிலேயே வலியவனானால்.

வந்து அமர் புரிந்து எம் அயிலால் மாய்ந்து—வேண்டுமானால் இங்கு வந்து எம்முடன் போரிட்டு, எம்முடைய வேலால் உயிர் துறந்து

சேண் மடவார் முலை புணர்வான்—வீர சுவர்க்கம் புகுந்து தேவலோகப் பெண்களை அடைவானாக

எங்கள் பெண்கள் சிவன் இடத்தும் குகன் வலத்தும் திகழ் கின்றார் பார்—எங்கள் வேடர்குலப் பெண்கள் சிவபெருமானின் இடப்பக்கத்திலும் அறுமுகப் பெருமானின் வலப்பக்கத்திலும் சிறப்புற்று விளங்குவதைக் காண்பாயாக

மாண்மலி கங்கையும் மகவான் மகளும் அஞ்சி—மாட்சிமை நிறைந்த கங்கா தேவியும் இந்திரன் மகளும் பயந்து

வாழ்க்கை குன்றிப் படும்பாடு மதித்தோர்—தம் வாழ்வு குலைந்து படுகின்ற நிலையை யுணர்ந்தவர்கள் (அவர்கள் படும் பாட்டினை ஆராய்வாயாக)

முன்னைக் கோள் மறைத்தான் தன்னை—முன்பு சூரியனைச் சக்கரத்தால் மறைத்தவரை

வீரை நகரில் பலகால் கும்பிட்டு எம் குலராயே கொண்டார் அன்றே—வீர கேரளம்புதூரில் பல காலங்களிலும் வணங்கி எங்களுடைய குடும்ப விளக்கே எனக் கொண்டாடினர் காண்.

## குறிப்புரை

இதுவும் மறவர் மகள் மறுத்துக் கூறியதாகும். தூதனுப்பிய மன்னன் வீரனானால் நேரில் வந்து போர் புரிந்து மாயட்டும் எனத் தன் வலிமையைப் பேசுகிறான் மறவன்.

அமர்—போர். அயில்—வேலாயுதம். சிவனிடத்து இருப் பவள்—பார்வதி. குகன் வலத்து இருப்பவள்—வள்ளி. இருவரும் மறவர்குல மகளிர் என்றார். மகவான் மகள்—இந்திரன் மகளான தெய்வயானை.

இது, முதல் இரண்டு ஐந்தாம் ஆறாம் சீர்கள் காய்ச்சீர்களும், மூன்று நான்கு ஏழு எட்டாம் சீர்கள் மாச்சீர்களுமாகிய **எண்சீராசிரிய விருத்தம்**.

## பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்

85. கொண்டல் வண்ண மேனியும்
குவிந்த பொற்கி ரீடமும்
கோவை வாயும் முண்டகம்
குலாவு கண்க ளும்திருத்
துண்ட மும்செவிக் கணிந்த
குண்ட லங்க ளும்கையிற்
சோதி ஆழி சங்கமுற்
சொலும்பல் சீரும் என்னுளே

அண்ட ரும்பொ றாமைஎய்த
வந்த துண்டு பொய்சொனால்
ஆயி ரம்பி றப்பில்நீசம்
ஆவ துண்டு அவர்வரக்
கண்ட தில்லை எத்தவத்தில்
என்ன பாவ முற்றதோ?
காமர் வீரை யூரிலென்
கவிக்க வாவும் நேயரே!

*கொண்டல் வண்ண மேனியும் குவிந்த பொற்கி ரீடமும்*—கார்மேகம் போன்ற உடலும், அழகுமிக்க பொன்னாலான திருமுடியும்

*கோவை வாயும் முண்டகம் குலாவு கண்களும்*—கோவைப்பழம் போன்று சிவந்த வாயும், தாமரை மலரை யொத்த விழிகளும்

*திருத்துண்டமும் செவிக்கு அணிந்த குண்டலங்களும்*—(ஒளி வீசுகின்ற) திருமுகமும், காதில் பூண்ட குண்டலங்களும்

*கையில் சோதி ஆழி சங்கம் முதற் சொல்லும் பல்சீரும்*—திருக்கரங்களில் ஒளி பரப்பும் சக்கரமும் சங்கும் எனச் சொல்லப்பட்ட சிறப்பியல்புகளையெல்லாம்

என்னுளே அண்டரும் பொறாமை எய்த வந்தது உண்டு— (ஒருங்கே காட்டியருளும் திருக்கோலமுடன்) தேவர்கள் எல்லாம் பொறாமையால் எரிச்சலடையும்படியாக அடியேன் அகத்தில் (கண்ணன் அன்றொருநாள்) வருகை புரிந்தது உண்மை

பொய் சொன்னால் ஆயிரம் பிறப்பில் நீசம் ஆவது உண்டு— (அவ்வாறு அவர் வந்தாரில்லை எனப்) பொய் பேசினால் ஆயிரம் பிறவிகளிலும் ஈனமே உண்டாகும்

அவர் வரக்கண்டது இல்லை— (அன்று வந்தவர்) இன்னும் அத்தகையவர் அடியேன் முன் பலரறியத் தோன்றவில்லை

எத்தவத்தில் என்ன பாவம் உற்றதோ—அடியேன் முற்பிறப்பில் செய்த தவத்தில் எப்படிப்பட்ட குறை சேர்ந்ததோ? (தெரியவில்லை)

காமர் வீரை ஊரில் என் கவிக்கு அவாவும் நேயரே—அலங்கார அழகுமிக்க வீரகேரளம்புதூரில் என்னுடைய பாடலை விரும்பும் அன்பரே! (அவர் நேரில் வந்து காட்சியளித் தருளுவாரென்றே காத்திருக்கிறேன் என்பதாம்)

## குறிப்புரை

கண்ணபிரான் அன்றொருநாள் தம்முன்னே தோன்றி யருளிய திருக்கோலத்தை நினைவு கூர்கிறார். அதைஅவ்வெம் பெருமான் பலரறிய நேரில் வந்து நல்காததற்குத் தம் தவக் குறையே காரணம் எனவும் அமைதி கொள்கின்றார்.

கொண்டல்—மேகம். கிரீடம்—திருமுடி. கோவை—கொவ்வை. முண்டகம்—தாமரை. துண்டம்—திருமுகம். ஆழி—சக்கரம். அண்டர்—வானோர்; தேவர்கள். நீசம்—ஈனம்.

'கொண்டல் வண்ணா இங்கே போதராயே; (பெரியா. திரு.2-9-4) எனப் பெரியாழ்வார் அழைத்தது போன்றே இவரும் கண்ணபிரானை நினைத்த அளவில் மனவெளியில் அவர் கொண்டல் வண்ணனாய்த் தோன்றினார்.

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்டவாயன், என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோ னணிய ரங்கன்என் னமுதினைக்
கண்டகண்கள், மற்றொன்றினைக் காணாவே.

(அமல. 10)

எனத் திருப்பாணாழ்வார் செப்பியது போன்றே இவர் முன் தோன்றியருளிய நீலமேனியே இவரைப் பெரிதும் கவர்ந்தது. எனவே, 'கொண்டல் வண்ணத்தை' முதற்கண் கூறினார்.

'கருவி மாமுகிற் கொழுந்தெனக் கண்கவர்மேனி' (பாக. 10-1-3) என்பது பாகவதம்.

கொண்டல் வண்ணா குடக்கூத்தா
வினையேன் கண்ணா கண்ணாஎன்
அண்ட வாணா வென்றென்னை
யாளக் கூப்பிட்ட மைத்தக்கால்
விண்டன் மேல்தான் மண்மேல்தான்
விரிநீர்க் கடல்தான் மற்றுத்தான்
தொண்ட னேனுன் கழல்காண
வொருநாள் வந்து தோன்றாவே.

(திருவாய். 8-5-6)

என வேண்டுவார் நம்மாழ்வார். இத்தகைய காட்சியை எம்பெருமான் இவருக்கு நல்கியதாக இவர் தம் குருபரதத்துவ நூலில் தெளிவாகக் குறிப்பிடுவர்.

நீல மேனியும் தாமரைக் கண்களும்
நிலவுசெந் துவர்வாயும்
பால தேநிகர் சங்கமும் சக்கரப்
படையும்ஒண் பணியாதிக்
கோலம் யாவும்நன் கமைதரக் காட்டினன்'

(குருபர. 24. விட்டுணு. 15)

என்பர்.

'இக்க ணாஇநாள் காண்பதற் கெத்தவம்
எப்பவத் திழைத்தோமோ
தக்க பத்திஅப் பவத்திலேம் என்றெணித்
தணிக்கருங் களிகூர்ந்தேன்

பொக்கம் அன்றிது சத்தியம் சத்தியம்
புணரிசூழ் புவியீரே'
(குருபர. 24. விட்டுணு. 17)

இத்தகைய திருக்கோலத்தைக் காணத்தாம் இப்பிறவியில் எத்தவமும் செய்யவில்லை, ஆயின் முற்பிறவியில் செய்தோம் போலும் என்பதாக இவர் கூறுகிறார். இவ்வாறு தாம் கண்ட காட்சி பொய்யல்ல உண்மையே என்பதையும் அழுத்தம் திருத்தமாகக் கூறுவார். அதையேதான் இங்கும் 'அண்டரும் பொறாமை எய்த வந்தது'ண்டு பொய் சொனால் ஆயிரம் பிறப்பில் நீசம் ஆவதுண்டு என்கிறார். அன்று கனாவில் காண்பதற்குத் தம்முடைய முற்பிறப்பில் செய்த தவமே காரணமென்னும் இவர், நேரில் வராதது பற்றி 'அவர்வரக் கண்டதில்லை எத்தவத்தில் என்ன பாவமுற்றதோ' எனத் தம்மையே இங்கு நொந்து கொள்கின்றார்.

இது, ஒன்று இரண்டு நான்கு ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மூன்று ஆறாஞ் சீர்கள் விளச்சீர்களுமாய் வந்தது அரையடியாகவும், அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும் வந்த **பன்னிருசீர் ஆசிரிய விருத்தம்.**

## நேரிசை ஆசிரியப்பா

36. நேயமோர் சிறிதும் நெஞ்சிற் குறியார்
வாயல் கண்டு மறுகுறப் படுத்தும்
பாழ்த்த தீவினைப் படுதுயர் களைந்திட்டு
ஆழ்த்தமெய் உணர்வார் அடியரிற் கூட்டிப்
பார்த்தன் தன்பாற் படிநலங் குறிக்கும்
நீர்த்தவர் பெருமை நிகழ்த்திய மாற்றம்
மெய்ப்படக் காட்டி விடாய்அற மாற்றிப்
பொய்ப்படா நினது பூம்பதம் புகுத்தாய்!
நின்னிறை வுணரார் நெறியிடைப் பழகி
அன்னியம் வகுத்திட்டு அகமிகச் செருக்கி
அந்த வண்ணம் அயர்தரும் என்னை
இந்த வண்ணம் இயக்கிய கருணை
உலகமுற் றுணராது ஒழிதல்நன் றல்ல
திலக வாணுதற் சேயிழை மடவார்
ஆதி யேடணைக்காட்டு அலையினும் அருட்பெரு

நீதிவேட் டுளஎன் நெஞ்சமுற் றறிவாய்!
எவ்வகைப் பொருளும் இயலும்எட் டெழுத்தில்
தவ்வரு முதலைத் தணவுந ரேனும்
ஆருயிர்க் கோறல் அழிதசை யருந்தல்
தீருமாண் பினரேல் சிதடர்அன் றென்னக்
கோடல்மட் டாண்டும் கொழிதமிழ்ப் பனுவல்
பாடல்மிக் கேற்றும் பரிசுநல் கிலையே!
விண்மரு புளிக்கீழ் வீற்றிருந் தானும்
மண்மகள் தன்னை வளர்த்தளித் தானும்
வருதமிழ்ப் பாண்டி வதனம் போலும்
திருமலி வீரையில் தேவரும் பிறரும்
வழிபடக் கருமுகில் மானப்
பொழியருள் விளக்கிப் பொலிந்தபுண் ணியனே.

*விண்மரு புளிக்கீழ் வீற்றிருந்தானும்*—விண்ணோர் புகழும் புளிய மரத்தடியில் அமர்ந்திருந்த சடகோபாழ்வாரும்

*மண்மகள் தன்னை வளர்த்து அளித்தானும்*—(இப்பூவுலகில் தோன்றியருளிய) பூமாதேவியாகிய ஆண்டாளைக் கண்டெடுத்து வளர்த்து ஆளாக்கி (கண்ணபிரானுக்கு) அர்ப்பணம் செய்த பெரியாழ்வாரும்

*வருதமிழ்ப் பாண்டி வதனம் போலும் திருமலி வீரையில்*—வாழ்ந்து புகழ் பெற்றுவரும் செந்தமிழ் நாடாகிய தென் பாண்டியின் முகமே போன்று செல்வங் கொழிக்கும் வீரகேரளம்புதூரில்

*தேவரும் பிறரும் வழிபடக்*—விண்ணுலகத்தவர்களும் மண்ணுலகத்தவரும் போற்றிசைக்கும்படியாக

*கருமுகில் மானப் பொழியருள் விளக்கிப் பொலிந்த புண்ணியனே*—நீர்கொண்ட மேகம் போன்று கருணையைப் பொழிவித் தருளும் பரிசுத்தமானவரே!

*நேயம் ஓர் சிறிதும் நெஞ்சில் குறியார் வாயல் கண்டு*—(அடியேன் உள்ளத்தே யிருக்கும்) அன்பினைப் பற்றிக் கொஞ்சமும் நினைக்கத் தெரியாதவர்கள் மூலமாக

*மறுகுறப்படுத்தும் பாழ்த்த தீவினைப் படும்துயர் களைந்திட்டு*—மனங்குழம்பச் செய்யும் கொடுமைகளை யெல்லாம் விலக்கி விட்டு

ஆழ்த்த மெய் உணர்வார் அடியரில் கூட்டி—ஆழமான உண்மைகளை அறிந்தவர்களாகிய பாகவதர்களுடன் சேர்த்து

பார்த்தன் தன்பால் படிநலம் குறிக்கும்—(பாரதப் போரில்) அருச்சுனன் பக்கம் அறவழி நிற்கின்ற

நீர்த்தவர் பெருமை நிகழ்த்திய மாற்றம்—குற்றமற்ற குணங்களையுடைய பெரியோர்களின் சிறப்புகளை (எடுத்துக் காட்டிச்) செய்த மாறுபாடுகளை

மெய்ப்படக் காட்டி விடாய்அற மாற்றி—உண்மை விளங்கும் படி (இப்போது) செய்தளித்து, ஆசை அற்றுப் போகும்படி மாறுதல் செய்து

பொய்ப்படா நினது பூம்பதம் புகுத்தாய்—(எக்காலத்தும்) பூரண நிலை பெற்று விளங்கும் உமது திருமலரடிகளை அடையச் செய்வீராக!

நின் நிறை உணரார் நெறியிடை பழகி—உம்முடைய பூரண நிலையை அறியாதவர்களாகிய பிற சமயத்து வழிகளிலேயே சென்று பழக்கப்பட்டு

அன்னியம் வகுத்திட்டு அசம் மிகச் செருக்கி—வேற்றுமை பாராட்டி, உள்ளத்தில் அகங்காரம் கொண்டு

அந்த வண்ணம் அயர்தரும் என்னை—அவ்வாறே வருத்தம் கொள்ளும் அடியேனை

இந்த வண்ணம் இயக்கிய கருணை உலகம் முற்றும் உணராது ஒழிதல் நன்று அல்ல—இப்படி ஆட்கொண்ட விதத்தை உலகமக்கள் எல்லோரும் அறியும்படியாகச் செய்யாது (அவர் முன்தோன்றாது) இருப்பது நல்லதல்ல

திலக வாள்நுதல் சேயிழை மடவார் ஆதி ஏடணைக் காட்டும் அலையினும்—திலகமுடன் ஒளிவீசும் நெற்றியினையுடைய பெண்கள் முதலான ஆசைகளையே (திரும்பத் திரும்ப) காண்பிக்கும் (இவ்வுலக வாழ்க்கையாகிய துன்பக் கடல்) அலைகளைக் காட்டிலும்

அருட்பெரு நீதி வேட்டுள என் நெஞ்சம் முற்றும் அறிவாய்—(உம்முடை திவ்விய அவதார) அருளிச் செயலென்னும்

உண்மை நிலையையே வேட்கை கொண்டுள்ள அடியேனு டைய உள்ளத்தை முழுவதுமாக உணர்வீராக!

எவ்வகைப் பொருளும் இயலும் எட்டெழுத்தில்—(வேதத்தி னுடைய்) எல்லாப் பொருள்களும் கூடியதான விட்டுணு மந்திரத்தில்

தவ்வரு முதலைத் தணவுநரேனும்—தோன்றும் முதல்நிலையை நீங்கியவராலும்

ஆருயிர்க் கோறல் அழிதசை அருந்தல் தீரும் மாண்பினரேல்— பசுக்கொலை ஊண் உண்ணல் இவற்றைத் தீர்க்கும் மாட்சிமை யுடையவரானால்

சிதடர் அன்று என்னக் கோடல் மட்டு ஆண்டும்—அறிவில்லாத வர்கள் அல்லர் என உணரும் அளவில் ஆட்கொண்டும்

கொழிதமிழ்ப் பனுவல் பாடல் மிக்கு ஏற்றும் பரிசு நல்கிலையே —(சொற்பொருள்வளம்) கொழிக்கும் பாசுரங்களை அளவில்லாது யான் பாடி நீவிர் ஏற்று அருள்புரியவில்லையே (ஏனென்று கூறி யருள்வீராக)

## குறிப்புரை

'விண்ணவர் போற்றும் சடகோபாழ்வாரும் ஆண்டாளை வளர்த்து அரங்கனுக்கு அளித்திட்ட பெரியாழ்வாரும் போற்றி செய்யும் கண்ணபிரானே! அடியேன் இகபர சுகங்களை யெல்லாம் விடுத்து, பெறுதற்கரிய பேரின்ப வீடாகிய உம்முடைய பரமபதம் காண அருள் செய்வாய்' எனவேண்டுகிறார் ஆசிரியர். ஆழ்வாராதிகளைப் போன்றே தாமும் திருவுறை மார்பன் மீது பனுவல்கள் பல பாடியும் தம்முன் வந்து பாரோர் அறியும் படியாக ஆட்கொள்ளவில்லையே என ஏங்குகிறார். தம்மையும் ஓர் அடியாராக ஆட்கொள்ளவே விழைகின்றார்.

நேயம்—அன்பு. பார்த்தன்—அருச்சுனன். பூம்பதம்—திருவடி நீழல். அகம்—யானென்னும் அகப்பற்று. ஏடணை—மண், பெண், பொன் என்ற மூவாசை. எட்டெழுத்து—விட்டுணு மந்திரம். சிதடர்—அறிவில்லாதவர். நல்கிலையே—நல்கவில்லையே. புளிக்கீழ் வீற்றிருந்தார்—சடகோபாழ்வார். மண்மகளை வளர்த்தான்—பெரியாழ்வார். மான—உவமஉருபு. புண்ணியன்—கண்ணபெருமான்.

எம்பெருமானது திருவடி நீழல் (பூம்பதம்) விரும்பும் இவர், 'பொய்ப்படா நினது பூம்பதம்' என்றதாவது—தன்னையடைந் தவரைப் பிறவிக் கடலுள் அழுந்தாதபடி குறிக்கொண்டு பாது காத்துப் பரிசுத்தமாகிய முத்தியென்னும் அக்கரையிற் கொண்டு சேர்க்கும் திறம் பற்றியேயாகும்.

குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
　　படுதுய ராயின வெல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
　　அருளொடு பெருநில மளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
　　தாயினு மாயின செய்யும்
நலந்தருஞ் சொல்லைநான் கண்டு கொண்டேன்
　　நாராய ணாவென்னும் நாமம்.

(பெரிய திரு. 1-1-9)

என்னும் திருமங்கையாழ்வாரின் மொழிப்படி எவ்வகைப் பொருளும் இயலும் எட்டெழுத்தின் பெருமையை இவரும் நினைந்து போற்றுகிறார்.

'நல்கித்தான் காத்தளிக்கும்' பெருமையுடையவர் எம்பெருமான் என்பது நம்மாழ்வார் (திருவாய். 1-4-5) கூற்று. ஆயின், கொழிதமிழ்ப் பனுவல் பாடல் மிக்கேற்றும் உரிய பரிசுநல்கிலையே என்பது இந்நூலாசிரியரின் ஆற்றாமை. இதன் பொருட்டே இவர் நம்மாழ்வாரையும் பெரியாழ்வாரையும் இங்கே நினைவுகூர்கின்றார்.

பூதேவியார் திருமாலை இப்பூவுலகில் அடையும்பொருட்டு ஆண்டாளாக அவதரித்தார். பெரியாழ்வாருடைய நந்தவனத் திலே திருத்துழாயினிடத்தே மண்ணில் கிடைத்ததால் மண்மகள் என்றார். பெரியாழ்வார் மண்மகள் தன்னை வளர்த் தளித்தார் என்பதை, 'நந்தவனங் கொத்தநிலத் தெழுந்த பெண்ணை நம்மாழ்வார் புத்திரியா வளர்த்த நாளில்' (எம். சத. 45) என விளக்குவர் பிறரும்.

கண்ணனின் உருவமேயன்றி அவர்தம் திருவருட் பெருக் கிற்கும் கருமுகிலை உவமையாகக் கூறினார். 'கருமுகில் போலுருவா' (பெரியா. திரு. 1-5-6) என்பார் பெரியாழ்வாரும்.

இது, ஈற்றயலடி—முச்சீரடியும், மற்றையடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாய் வந்த **நேரிசையாசிரியப்பா.**

## களி

கள்ளை விரும்பிக் குடிப்பவர் அக் கள்ளைச் சிறப்பித்துக் கூறுவதாகவோ அல்லது குடிமயக்கத்தில் தாறுமாறாகப் பேசுவதாகவோ செய்யுள் செய்வது களி என்னும் உறுப்புக்கு இலக்கணமாம். மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் பொருந்தாக் கூற்றாகக் காணப்படினும் இவ்வுறுப்பு சிலேடை வகையால் சரியான பொருள் பயப்பதாகவே பாடப்படும். கலம்பகங்களில் இடம்பெற்றுள்ள களிப்பாடல்களேயன்றி அகத்துறை வண்ணங்களைப் போலச் சில களி வண்ணங்களும் காணக்கிடைக்கின்றன.

### நேரிசை வெண்பா

37. புண்ணருந்தச் சம்மதியோம் போதப் புதுமலர்த்தீம்
கண்ணசையுள் ளோம்பொய் கழறிடோம்—விண்ணவரில்
சூரனிடம் வீரையில்மால் தொட்டவளை விட்டதன்றோ
பாரதம்நன் றாயுணர்ந்து பார்.

புண் அருந்தச் சம்மதியோம்—பிற உடல்களின் புண் ஆகிய புலாலை உண்ண ஒருப்பட மாட்டோம்

புதுமலர் தீம் கள் நசை போத உள்ளோம்—அன்றலர்ந்த பூக்களில் உள்ள இனிய தேனின் மேல் நிரம்பிய விருப்பம் உடையேம்

பொய் கழறிடோம்—நாங்கள் இல்லாத ஒன்றைக் கூற மாட்டோம்

விண்ணவரில் சூரனிடம்—தேவர்களுக்குள்ளே ஒருவனாகிய சூரியனின்பால்

வீரையில் மால் தொட்ட வளை—வீரையில் எழுந்தருளியுள்ள நவநீதகிருட்டிணப்பெருமாள் தான் ஏந்தியுள்ள சக்ராயுதத்தை

விட்டதன்றோ பாரதம்—(சயத்திரதனை விசயன் கொல்ல வாய்ப்பாகச் சூரியனை மறைக்குமாறு) செலுத்திய வரலாறு பாரதம் அல்லவா?

நன்றாய் உணர்ந்து பார்—சொல்லையும் பொருளையும் நன்கு சிந்தித்துப் பார்ப்பாயாக.

## குறிப்புரை

"உண்ணாமை வேண்டும், புலாஅல் பிறிதொன் றன்
புண்; அது உணர்வார்ப் பெறின்" (குறள் : 257)

என்றாராதலின் 'புண்' என்றார்.

சூரன் என்றது இங்குச் சூரியனை. சூரியனுக்குச் சூரன் என்றும் ஒரு பெயர்.

"ஆதவனன் அருக்கன் அருணன்கனலி மார்த்தாண்டன்
சோதிபிதிர்க் கோள்பருதி சூரன் இனன்—ஆதித்தன்
ஏழ்பரியோன் ஓராழித் தேரோன் இருள்வலிஎன்
றாழ்விகத்தன் சண்டனுதை யன்" (நாம. 92)

என்பர் நிகண்டு நூலார்.

வழக்காற்றின் மிகுதியால் நமக்குச் சூரன் என்ற உடனே முருகப் பெருமானை எதிர்த்த சூரபதுமனே நினைவுக்கு வருகிறான். சூரியன் தேவர்களுள் சிறப்பிடம் பெற்றவனா தலின் விண்ணவரில் சூரன் என்றார். சூரனிடம் தொட்டவளை என்றமையானே சூரியன் மீது செலுத்தப்படவில்லை, அதை மறைக்குமாறு இடையே செலுத்தப்பட்டது என்பது பெறப்படு கிறது. இப் பாடல், களி என்ற கலம்பகத்தின் உறுப்பு அமைய ஒரு பாடலைப் பாடுமாறு சோழன் கூற ஒட்டக்கூத்தர் பாடிய பின்வரும் பாடலை நினைவுறுத்தும்.

"புள்ளிருக்கும் தார்மார்பன் பூம்புகார் வாழ்களியேம்
கள்ளிருக்கும் கள்ளையுண்டு சோர்விலேம்—உள்ளபடி
சொல்லவா வாலிது ரோபதையை மூக்கரிந்தது
அல்லவா மாபா ரதம்"

(தனிப்பாடல் திரட்டு. 120)

இது, இருவிகற்பத்தால் வந்து நாளென்னும் வாய்பாட்டின் முடிந்த **நேரிசை வெண்பா.**

## இதுவுமது

### கட்டளைக் கலித்துறை

38. பாரணைந் தான்திங்கள் என்றூழ்பைங்
கிள்ளைப் பறவைநட்டான்
காரமுற் றாள்கம லத்திரு
மாதெண் கரப்பிரமன்
ஊரன்னத் தாசைவைத் தான்மதன்
கால்வையம் ஒன்றச்சென்றான்
நாரணன் வீரைப் புலவீர்பொய்
யன்று;மெய் நம்மொழியே.

திங்கள் பார் அணைந்தான்—சந்திரன் உரோகிணியை (மிக விரும்பிப்) புல்லினான்

என்றூழ் பைங்கிள்ளைப் பறவை நட்டான்—சூரியன் பசிய குதிரைகள் (கட்டிய தேரில்) பறப்பதை மிக விரும்பினான்;

கமலத் திருமாது காரம் உற்றாள்—தாமரையில் உள்ள இலக்குமி பொன் எனப்பெற்றாள்

எண்கரப் பிரமன் ஊர் அன்னத்து ஆசை வைத்தான்—எட்டுக் கைகளை உடைய பிரமதேவன் தான் இவர்ந்து செல்லும் அன்னப்புள்ளை மிக நேசித்தான்

மதன் கால்வையம் ஒன்றச் சென்றான்—மன்மதன் (தென்றல்) காற்றாகிய தேரில் மனமொத்து உலாவினான்

நாரணன் வீரைப் புலவீர்—திருமால் எழுந்தருளியுள்ள வீரகேரளம்புதூரில் வாழும் அறிஞர்களே!

நம்மொழி பொய்யன்று, மெய்யே.

### குறிப்புரை

சொற்கிடக்கையால் சந்திரன் பூமியில் விழுந்தான், சூரியன் பச்சைக் கிளியாகிய பறவையை விரும்பினான், இலக்குமி சினங் கொண்டவளானாள், பிரமன் ஊரார் சோற்றை விரும்பினான். மன்மதன் தன் கால்கள் நிலத்தில் தோய நடந்தான் எனப் பொருள் தருகிறது.

பார்—உலகம், உரோகிணி நட்சத்திரம்; கிள்ளை—கிளி, குதிரை; பறவை—பட்சி, பறத்தல் அதாவது வேகமாகச் செல்லல்; காரம்—சினம், பொன்; ஊர் அன்னம்—ஊராரின் சோறு (ஆறன்தொகை), இவரும் அன்ன வாகனம் (வினைத் தொகை); கால்—அடி, காற்று(தென்றல்); வையம்—நிலம், தேர். இவை செம்மொழிச் சிலேடைகள்.

சந்திரன் தன் மனைவியர் இருபத்தெழுவரில் உரோகிணியை மிக விரும்பியதால் தக்கனின் சாபம் பெற்ற வரலாறு வெளிப்படை. சூரியனின் தேரில் பூட்டியுள்ள ஏழு குதிரைகளைப் பச்சை நிறமானவை எனல் மரபு.

"விசும்பொடு பூதலம் விளங்க நாடொறும்
பசும்பரித் தேரிவர் பானு மூர்த்தியே"

என்றும்,

"செச்சை மாலிகை யான்இவர் மயில்எனத் திகழ்ஏழ்
பச்சை வாம்பரித் தேர்இவர் பானுபுங் கவனே"

என்றும் இவரே தம் ஞாயிறு ஆயிரம் (பா. 79,807) நூலில் குறிப்பிடக் காணலாம்.

மன்மதன் தென்றல் தேரை உடையவன் என்பதை யாவருமறிவர். கமலத்திரு கார்அம் உற்றாள் எனப் பிரித்துத் திருமகள் கரிய நிறத்தினள் ஆனாள் என இல்பொருள் கூறினுமமையும்.

இது, நேரசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை.**

## கலிவிருத்தம்

39. மொழியொ ணாத முதற்பதம் நல்கும்நீ
பழியில் ஆண்மைப் பயன்தரல் பாவமோ?
பொழில்வ ளம்பொலி புண்ணிய வீரையூர்
உழியொர் புள்ளில் உலாவும்ஓய் யாரனே!

பொழில் வளம் பொலி புண்ணிய வீரையூர்உழி—சோலைகள் நிறைந்து அழகு மிக்கு விளங்கும் மங்களகரமான வீரகேரளம்புதூரில்

புள்ளில் உலாவும் ஒய்யாரனே—கருடப்பறவையின் மேலேறிப் பொழுதினைக் கழிக்கும் அலங்கார மோகம் கொண்டவரே!

மொழி ஒணாத முதல் பதம் நல்கும் நீ—(உம்மை அடைந்தவர்க்கு) சொல்லுவதற்கு அரிதான வீடுபேற்றினை அளிக்கும் நீவிர்

பழிஇல் ஆண்மைப் பயன்தரல் பாவமோ—(இம்மையில்) குற்றமற்ற மெய்ம்மைப்பயன் அளித்தால் குறையுண்டாகுமோ? கூறுவீராக.

## குறிப்புரை

தம்மையே நம்பிச் சரணடைந்தவர்க்கு ஒப்பற்ற வீடு பேற்றை நல்கும் கண்ணபிரான் இம்மையிலும் மெய்ம்மைப் பயன் நல்குமாறு வேண்டுகிறார் ஆசிரியர். திருமாலின் திருவடிப் பேறு என்பது சொல் விளக்கங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது. எனவே, மொழியொணாத முதற்பதம் என்றார். ஒய்யாரன்—அலங்காரன், ஆடம்பரன்.

இது, நாற்சீரடி நான்காய் அமைந்த **கலிவிருத்தம்**. இதில் அடிதோறும் பன்னிரண்டு எழுத்துக்கள் அமைந்துள்ளது.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

40. **ஆரணற் பயந்த துண்டேல் அவன்விதி பழுதா னாலும்**
**தீரம்நன் றருள வல்லாய் என்னவே சிந்திக் கின்றேன்**
**காரமர் நெடிய மேனிக் கருணைமால் வரையே காமர்**
**மாரனைப் பழியார் வீரை வளநகர் வாழ்வன் னானே.**

காரமர் நெடிய மேனிக் கருணை மால் வரையே—நீர் மேகம் போன்ற உடல் வண்ணமும் நெடுங்குன்றம் போன்ற உருவமும் கருணையுள்ளமும் கொண்ட திருமாலே!

காமர் மாரனைப் பழியார் வீரை வளநகர் வாழ்வு அன்னானே—பேரழகு மிக்க மன்மதனைப் போன்ற அழகு மிக்கோர் வாழ்கின்ற வீரகேரளம்புதூரில் இருப்பவரே!

ஆரணர் பயந்தது உண்டேல்—(தாமோதரனாகிய உமது கொப்பூழ்க் கொடியில்) பிரமனைப் பெற்றது என்பது உண்மையானால்

அவன் விதி பழுது ஆனாலும்—அப்பிரமனுடைய எழுத்தில் (அடியேன் தலையெழுத்தில்) குற்றம் ஏற்பட்டாலும்

தீரம் நன்று அருள வல்லாய் எனவே சிந்திக்கிறேன்—மனத் திடமும் அறிவும் வலிமையும் (அடியேனுக்கு) அருளுவீர் என்றே எண்ணியிருக்கின்றேன். காத்தருள்வீராக.

## குறிப்புரை

நல்வினை, தீவினைகளுக்கேற்ப அவரவர் விதியை எழுதுபவன் பிரமன். இவ்விதி மாறாதது என்பர். ஆயின், அப்பிரமனையே தம் வயிற்றில் பிறப்பித்தவர் திருமால். எனவே, அவரை வணங்கினால் ஊழ் வினையால்—விதியால் ஏற்படும் துன்பங்களைத் தீர்க்கும் அறிவும் வலிமையும் மனத் தைரியமும் உண்டாகும் என்பது ஆசிரியர் துணிபு.

ஆரணர்—பிரமன். விதி—ஊழ். தீரம்—அறிவு, வலி, மனத் தைரியம். கார்—நீர்மேகம். மாரன்—மன்மதன். வரை—மலை, நெடுங்குன்றம். என்னவே—எனவே.

'கார்மலி மேனி நிறத்துக் கண்ணபிரான்' என்னும் பெரியாழ்வாரின் பாசுரப்படியே (பெரியா. திரு. 2-4-10) இவரும் வீரையூரமர்ந்த கண்ணனின் நெடிய மேனியைக் 'காரமர் நெடியமேனி' என்றார். வரை—நிறத்திற்கும், வலிமைக்கும், பெருமைக்கும் உவமை.

இது, முதலும் நான்கும் விளச்சீர்களும் மற்றை நான்கும் மாச்சீர்களுமாகிய **அறுசீராசிரிய விருத்தம்.**

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

41. நானென் றெழுந்த இருளைத் தடிந்துன்
நளினப் பதங்கள் கருதித்
தேனென் றினித்த அருளின் பம்உண்டு
திகழ்கின்ற நாளும் வருமோ?
மீனென் றளக்கரிடை சென் றும்அன் று
வேதம் புரந்த விகிர்தா!
ஆனென் றும்இன்பம் உறும்வீரை யாளும்
அரசே! மலர்க்கண் அமுதே!

மீன் என்று அளக்கர் இடை சென்றும் அன்று வேதம் புரிந்த விகிர்தா (அசுரன் வேதங்களை ஒளித்தபொழுது) மீன் உருவம் எடுத்துக் கடலிடத்தே போய் வேதங்களை மீட்டு வந்த தலைவரே!

ஆன்என்றும் இன்பம் உறும் வீரை ஆளும் அரசே—பசுக்கூட்டங்கள் எப்பொழுதும் (உம் கிருபையால்) மகிழ்ச்சியுடன் உலாவும் வீரகேரளம்புதூரினை ஆட்சி புரிகின்ற மன்னவரே!

மலர்க்கண் அமுதே—தாமரை மலர் போன்ற அழகிய விழிகளையுடைய அமுதமயமானவரே!

நான் என்று எழுந்த இருளைத் தடிந்து—யான், எனது என்னும் அகங்கார மமகாரமாகிய மயக்கத்தை (அடியேனிடமிருந்து) அறுத்து

உன் நளினப் பதங்கள் கருதி—உமது தாமரைத் திருவடிகளையே நினைந்திருந்து

தேன் என்று இனித்த அருள் இன்பம் உண்டு—தித்திக்கும் தெவிட்டாத அமுதம் என்னும்படியான உமது கிருபையைப் பெற்று விளங்கும்

திகழ்கின்ற நாளும் வருமோ—ஒளி பொருந்திய காலமும் (அடியேனுக்கு) வரக்கூடுமோ? கூறுவீராக.

### மீன் வடிவெடுத்த வரலாறு

சோமுகனென்னும் அசுரன் வேதங்களைத் திருடிச் சென்று கடலில் ஒளித்துப்போக, தேவலோகத்தளவுஞ்சென்று கடல் வெள்ளம் பரந்த காலத்தில், திருமால் அவ்வெள்ள முழுவதையும் தனது உடலின் ஒருபுறத்திலே அடக்கவல்ல மிடுக்கையுடைய மீனாய் வந்து திருவவதரித்து அசுரனைத் தேடிக் கொன்று வேதங்களைக் கொணர்ந்து வந்தனர் என்பர்.

"கொழுங்கயலாய் நெடுவெள்ளங் கொண்ட காலம்
குலவரையின் மீதோடி யண்டத் தப்பால்
எழுந்தினிது விளையாடு மீச னெந்தை
இணையடிக்கீழ் இனிதிருப்பீர்" (பெரிய திரு.6-6-2)

எனவும்,

"வானோ ரளவும் முதுமுந்நீர் வளர்ந்த காலம், வலியுருவில்
மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட தண்டாமரைக்
கண்ணன்"
(பெரிய திரு. 8-8-1)

எனவும்,

"நிலையிட மெங்குமின் றி நெடுவெள்ள மும்பர்
வளநாடு மூட விமையோர்,
தலையிட மற்றெமக்கொர் சரணில்லை யென்ன
அரணாவ னென்னு மருளால்,
அலைகடல் நீர்குழம்ப அகடாட வோடிய
கல்வானு ரிஞ்ச, முதுகில்
மலைகளை மீதுகொண்டு வருமீனை மாலை
மறவா திறைஞ்சென் மனனே".
(பெரிய திரு. 11-4-1)

எனவும் மீனுருக்கொண்டருளிய திருமாலை ஏத்துகின்றார் திருமங்கையாழ்வார்.

"அருமுறைகொ ளிருக்கெசுர் சாமத்தி னோடும்
அதர்வண மாகியசதுர் வேதங்கள் தம்மைத்
திருடியெடுத் துக்கொண்டே யுததி சேரும்
தீயனுக்கா மச்சாவ தார மாகி
ஒருசெலுவிற் சமுத்திரத்தைச் சுருக்கி யேவைத்
துக்கிரத்தாற் சோமுகா சுரனைக் கொன்றிட்டு
இருளறவே விதிபடைக்க வவ்வே தத்தை
இரங்கியளித் தனையரியே எம்பி ரானே."
(எம். சத. 84)

எனவரும் கோபாலகிருட்டிணதாசர் பாடலாலும் இவ்வரலாறு விளங்கும்.

அஞ்ஞான இருளாகிய அகங்காரத்தை அழித்துப் பிரமன் முன் பெற்றிருந்த நால்வேதங்களையும் கருணையோடு அச் சதுர்முகனுக்கே கொடுத்தது போன்றே தமக்கும் அருள வேண்டுகின்றார் ஆசிரியர்.

நளினப் பதங்கள்—தாமரைத் திருவடிகள். அளக்கர்—கடல்

இது, மாச்சீர்களாலான எழுசீராசிரிய விருத்தம்.

## மடக்கு

### பதினான்கு சீர்த் தாழிசை

42. அமுதமுன் அமரர்க் களித்த வானவனே
அளவறக் களித்த வானவனே
அம்புயப் பொகுட்டா தனத்திரு வினனே
ஆன்செய் வந்தனத் திருவினனே

குமுதம்நேர் வாயாற் சங்கம் ஆர்த்தவனே
கோபியர் சங்கம் ஆர்த்தவனே
குஞ்சரம் புரப்பவி ரைந்தமா திரனே
கோவென விரைந்த மாதிரனே

சமுசயம் அறுக்கு மந்திரத் தவனே
தாழ்வில்எண் மந்திரத் தவனே
தானவர்க் கஞ்சா தரித்தவம் மானே
சட்டுவந் தரித்தவம் மானே

திமுதநீர்க் கரந்து மீண்டுவந் தானே
சீரற மீண்டுவந் தானே
திரைமலி தவளவீ ரைநா ரணனே
செழும்பொழில் வீரைநா ரணனே.

*அமுதம் முன் அமரர்க்கு அளித்த வானவனே—(பாற்கடலில் தோன்றிய) அமுதத்தை முற்காலத்தில் தேவர்கட்கு (மட்டும்) பங்கிட்டுக் கொடுத்த பெருமையை உடையவரே!*

*அளவு அற களித்த வானவனே—கணக்கற்ற (பகைவர்களாகிய அசுரர்களை ஒழித்ததால்) பெருமிதங்கொண்ட தேவரே!*

*அம்புயப் பொகுட்டு ஆதனத் திருவினனே—செந்தாமரை மலரின் நடுப்பாகமாகிய இருக்கையை உடைய இலக்குமியைத் தேவியாகப் பெற்றவரே!*

*ஆன் செய் வந்தனத் திருவினனே — பசுக்கூட்டங்களால் (கோவர்த்தனகிரி கொண்டு காத்ததால்) செய்யப்படுகின்ற வணக்கங்களாகிய மேன்மையை உடையவரே!*

*குமுதம்நேர் வாயால் சங்கம் ஆர்த்தவனே—அல்லி மலரைப் போன்ற வாயில் பாஞ்சசன்னியமாகிய சங்கை வைத்து முழங்கியவரே!*

கோபியர் சங்கம் ஆர்த்தவனே—ஆயர் மகளிர் கூட்டத்தால் நன்கு அனுபவிக்கப்பெற்றவரே! (கோபியர் ஆடைகளை ஒளித்து வைத்தவரே! எனினும் ஆம்)

குஞ்சரம் புரப்ப விரைந்த மா திரனே— (ஆதிமூலமே எனக் கூவியழைத்த) கசேந்திரனைக் காக்க வேகமாகச் சென்ற வலிமையை உடையவரே!

கோ என இரைந்த மாது இரனே—கோவிந்தா! கோபாலா! என்று (துரியோதனன் சபையில்) அரற்றி ஒலித்து அழைத்த திரௌபதியின் வேண்டுகோளை ஏற்றவரே! (ஏற்று அவளுக்கு ஆடை நல்கி மானங்காத்தவரே!)

சமுசயம் அறுக்கும் அம் திரத்தவனே—(ஆன்மாக்களுக்கு உய்யும் நெறியில் ஏற்படும்) ஐயங்களைப் போக்கியருளும் அழகையும் நிலைபேற்றையும் உடைய பரம்பொருளே!

தாழ்வு இல் எண் மந்திரத்தவனே—குறைவற்ற திருவெட்டெழுத்தாகிய அருமறையின் பொருளாயிருப்பவரே!

தானவர்க்கு அஞ்சாது அரித்த அம்மானே—அசுரர்களுக்குப் பயப்படாமல் அவர்களை ஒழித்தருளிய தலைவரே!

சட்டுவம் தரித்த அம் மானே—(திருப்பாற்கடலில் தோன்றிய அமுதத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்தளிக்க) அகப்பையை ஏந்திய அழகிய (மான்போன்றவளாகிய) மோகினியானவரே!

திமுதநீர்க் கரந்து மீண்டு வந்தானே— (சோமுகனென்னும் அசுரன் வேதங்களைந் திருடிக் கடலில் ஒளித்துப் போக, தேவலோகத்தளவுஞ் சென்று கடல் வெள்ளம் பரந்த காலத்தில்) கடல் வெள்ளம் முழுவதையும் தமது உடலின் ஒருபுறத்திலே அடக்கவல்ல மிடுக்கையுடைய மீன் வடிவம் எடுத்து அசுரனைத் தேடிக் கொண்டு வேதங்களை மீட்டுக் கொணர்ந்தவரே!

சீர் அறம் ஈண்டு உவந்தானே—சிறப்புப் பொருந்திய தருமத்தை இவ்வுலகில் நிலைநிறுத்த விரும்புபவரே!

திரைமலி தவள வீரை நார் அண் அனே—அலைகள் நிறைந்ததும் வெண்மை நிறமுடையதுமாகிய (திருப்பாற்) கடலினிடத்து விருப்பம் பொருந்திய தாயனையவரே!

செழும் பொழில் வீரை நாரணனே—வளமை மிக்க சோலை
களால் சூழப்பட்டுள்ள வீரகேரளம்புதூரில் திருக்கோயில் கொண்டுள்ள திருமாலே!

## குறிப்புரை

ஆமையாய் இருந்து மந்திரத்தைத் தாங்கியும், அதன் மேலமர்ந்து அம்மலை சாயாத வண்ணம் நிலைநிறுத்தியும், தேவர்களோடு சேர்ந்து கடைந்தும் அருள் புரிந்ததோடு அமுதம் தோன்றியபோது அதனை அசுரருக்குக் கொடுக்காமல் தேவர் களுக்கு மட்டுமே பகிர்ந்தளித்தமையும் திருமாலின் பெருமை களாம்.

'அள்ளலாக் கடைந்தவன் தருவரைக் கொராமையாய்
உள்ள நோய்கள் தீர்மருந்து வானவர்க்களித்த''

எனத் (திருச். 88) திருமழிசைப்பிரானும்,

'பொங்குநீள் முடியமரர்கள் தொழுதெழ அமுதினைக் கொடுத்தளிப்பான்' (பெரிய திரு. 5-8-6) எனத் திருமங்கையாழ் வாரும் கூறுவதும் இவண் அறியத்தகும்.

பல்வேறு அவதாரங்கள் எடுத்து மிகப்பல அசுரர்களைக் கொன்ற வெற்றிக் களிப்பு தேவர்களில் திருமாலுக்கே உரியது. அதனால் அளவறக் களித்த வானவனே என்றார்.

திருமால் வாய்க்குக் குமுதம் உவமை. குமுதம்—நீலோற் பலம். 'குமுதமென் முகைவாய்' (பாக. 10-34-18). 'பற்றார் நடுங்கமுன் பாஞ்ச சன்னியத்தை வாய்வைத்த போரேறே' (பெரியா.திரு.3-3-5) என்பார் பெரியாழ்வார்.

அறத்தை நிலை நிறுத்துவதற்காக யுகங்கள் தோறும் நான் நிலவுலகில் அவதாரம் செய்வேன் எனக் கண்ணன் கீதையில் கூறியுள்ளதைக் கருத்தில் கொண்டு 'சீர் அறம் ஈண்டு உவந் தானே' என்றார்.

திருமால் கடல் வெள்ளத்தை அடக்கி வேதங்களை மீட்க மீன் அவதாரம் செய்ததைத் 'திமுதநீர்க் கரந்து மீண்டு வந்தானே' என்றார் "ஒருசேலா பொருசெலுவுட் கரந்த, ஆழிப் பெரும்புனல்" என்றார் பிறரும் (அழ.கலம். ப. 13).

திருமால் திருப்பாற்கடலில் பெருவிருப்பு உடையவர்தான். ஆனால் அவர் ஆன்மாக்களின் மீது தாயைப் போன்று கைமாறு கருதாப் பெருங்கருணை உடையவர். அதனால்தான் அப்பாற் கடலையும் விட்டுப் பிரிந்து தம் அடியார்களுக்கு அருள் புரிவதற்காக வீரையில் எழுந்தருளியுள்ளார் என்பது ஈற்றுப்பகுதியின் உட்பொருளாகும்.

அம்புயம்-அம்புஜம்—நீரில் தோன்றுவது என்பது பொருள். ஆதனத்திரு—இருக்கையை உடைய திருமகள். இரண்டன் உருபும் பயனும் உடன் தொக்கதொகை; வந்தனத்திரு—வந்தனமாகிய செல்வம், இருபெயரொட்டு; அனே—அன்னே என்பதன் இடைக்குறை.

இது, ஒவ்வோர் அரையடியிலும் வந்த சொற்களே மீண்டும் வந்து இருபொருள் தரும் மடக்கணியின்பாற்படும்.

இது, பதினான்கு சீர்த் தாழிசை.

## வேற்றொலி வெண்டுறை

43. நாரணனே! சங்காழிப் படைக்கை மாலே!
நான்முகனைப் பயந்தவுந்தி நளினத் தானே!
வாரணமுன் சென்றாங்குஎன் முன்னும் இன்னே
வருகவெனச் செந்தமிழால் வாழ்த்து வார்க்குச்
சீரணம் தவிர்நலம் திகழ்ந்த வீரையிற்
பூரணத் திருவருட் பொலிவுண் டாகுமே.

நாரணனே சங்கு ஆழிப் படைக்கை மாலே—நாராயணா! சங்கமும் சக்கரமும் (தீமையை யழிக்கக்) கையில் ஏந்தியிருக்கும் திருமாலே! (சங்கு சக்கரதாரியே!)

நான்முகனைப் பயந்த உந்தி நளினத்தானே—பிரமனைப் பெற்றெடுத்த தாமோதரனே!

வாரணம் முன் சென்றாங்கு என் முன்னும் இன்னே வருக எனச் செந்தமிழால் வாழ்த்துவார்க்கு—(ஆதிமூலமே என அழைத்த) கசேந்திரன் முன்பு சென்று காத்தது போல, (எமது துன்பங்களைப் போக்க) எங்கள் முன்னாலும் இப்பொழுதே வந்து காத்தருள்வீராக என்று சிறப்புமிக்க பாசுரங்களால் போற்றுபவர்கட்கு

சீரணம் தவிர் நலம் திகழ்ந்த வீரையில்—பழவினைகளை யெல்லாம் போக்கும் சிறப்பு மிக்க வீரகேரளம்புதூரில்

பூரணத் திருவருள் பொலிவு உண்டாகுமே—(கோயில் கொண்டு விளங்கும் கண்ணபிரானின், முழுமையான கருணையழகு தோற்றமாகும்.

## குறிப்புரை

"இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான் நம்மை யுடையவன் நாராயணன் நம்பி" (நாச்சியார் திருமொழி. 6-8) என ஆண்டாள் மொழிந்தபடியே, கண்ணபிரானையே பற்றுக் கோடாக நம்பி 'நாரணனே' என அழைக்கின்றார் ஆசிரியர்.

சங்கொடு சக்கரமும் கையில் ஏந்தி எல்லா உயிர்களையும் காத்தருளும் திருமாலின் சீர்மையை அடுத்துக் கூறுகின்றார்.

"காமர்வெண் ணிலவுமிழ் கடவுட் சங்கொடு
தீமுகத் துமிழும்வெந் திகிரி நீள்கதை"

(பாக. 10-1-62)

எனத் திருமாலின் படைக்கருவிகளைக் கூறுவர்.

"சங்குசக்கரம், அங்கையில் கொண்டான்,
எங்கும் தானாய, நங்கள் நாதனே"

(திருவாய். 1-8-9)

என்பார் நம்மாழ்வாரும்.

இவ்வாறே, 'சங்காழிப் படைக்கை மாலே' என அழைக்கும் ஆசிரியர், 'சங்குடன் ஆழி ஏந்து செங்கைப் பரந்தாமன்' (சட. சத 110) என வேறொரு நூற்கண்ணும் எண்ணி மகிழ்கின்றார்.

நான்முகனையே தம் நாபிக்கமலத்தில் தோற்றுவித்ததால் அனைத்துக்கும் அந் நாராயணனே காரணம் என்பதை இங்கு வலியுறுத்துகின்றார்.

"உந்தி யெழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன்"

(பெரியா. திரு. 2-5-8)

என்பார் பெரியாழ்வார்.

இத்தகைய நாராயணனை நம்பி அழைத்தவர்க்கு நற்பதம் கிடைக்குமென்பதை விளக்கவே கசேந்திரனுக்கு அன்று அருளினார் என்பர்.

"வார ணம்கத றும்தினம் அங்குபோய்
வாழ வைத்த மரகதக் குன்றமே" (எழு. எழு. 32)

என இவ்வரலாற்றைப் பிறிதொரு நூலிலும் புகழ்ந்துரைக்கும் ஆசிரியர் அங்கும் பிரமன் தந்தையாக இணைத்து எண்ணி யுள்ளமை ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.

"ஆர ணந்தரு வானைமுன் தந்துளாய்
அம்பு யாதனத் தங்கனை யேங்குற
வார ணம்பிழைக் கும்படி சென்றசீர்
வாழ்த்து வாருள் வயங்குறு மாயனே"
(எழு. எழு. 60)

எனவரும் அப்பாடலடிகள் நினையத்தக்கன.

இன்னே வருகவென்பது—இப்பொழுதே வருக என அழைப்பதாகும். செந்தமிழால் வாழ்த்துவார் என்றது தமிழ்ப் பாமாலை சூட்டிய ஆழ்வார்களைக் குறித்தது.

இது, நான்கடியாய், முதலிரண்டடியில் முதலிரண்டு, ஐந்தாம், ஆறாம் சீர்கள் தேமாங்காய்ச் சீர்களும், மூன்று, ஏழாம் சீர்கள் புளிமாச் சீர்களும், நான்கு, எட்டாம் சீர்கள் தேமாச் சீர்களும் வந்து; பின்னிரண்டடியில் மூன்றாஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்று சீர்களும் விளச்சீர்களுமாய் வந்த அளவடிகளாய் அமைந்து; முன்னிரண்டடியும் ஓரோசை யாய், ஏனைய யிரண்டடிகள் வேறோசையாய் வந்த **வேற்றொலி வெண்டுறை.**

## நேரிசை வெண்பா

44. உண்டுண் டுறங்கி உறங்கி ஒளிவளையார்
தொண்டுண்ட ணைந்தணைந்து சோர்ந்தாலும்—
வண்டுண்ட
செங்கமலத் தாள்முகுந்தற் தென்வீரை யூரினிற்கண்டு
அங்கமலத் தாழ்வொழிக்க லாம்.

உண்டு உண்டு உறங்கி உறங்கி—(இவ்வுடலைப் பாதுகாப்பதற் காக இதுவரையில் தினமும்) திரும்பத் திரும்ப உணவு அருந்தியும், பெரும்பாலும் தூக்கத்திலேயே காலம் கழித்தும்

ஒளிவளையார் தொண்டு உண்டு அணைந்து அணைந்து சோர்ந்தாலும்—மின்னுகின்ற வளையல்களை அணிந்த பெண்களின் பணிவிடைகளை ஏற்று அவர்களை அடிக்கடி மருவிப் புணர்ந்தும் (இவ்வுடலும் வாழ்க்கையும் கசந்து) சலிப்படைந்து மெலிந்தாலும் (பரவாயில்லை, இனி)

வண்டு உண்ட செங்கமலத்தாள் முகுந்தரைத் தென் வீரை ஊரினில் கண்டு—(எப்பொழுதும் அடியார் கூட்டம் போன்று) வண்டுகள் மொய்த்திருக்கும் சிவந்த தாமரை மலரைப் போன்ற திருவடிகளையுடைய திருமாலைத் தென் தமிழகத்திலுள்ள வீரகேரளம்புதூரில் வந்து தரிசித்தால்

அங்கம் மலத் தாழ்வு ஒழிக்கலாம்—இவ்வுடலால் ஏற்படுகின்ற குற்றங்களையும் கீழ்மையான இழிவுத் தன்மைகளையும் அறவே தீர்க்கலாம்.

## குறிப்புரை

இவ்வுலக வாழ்க்கையில் அமிழ்ந்து சோர்ந்தாலும் வீரை நவநீதகிருட்டிணனை வணங்கினால் உய்யலாம் என்பது குறிப்பு. இதன் காரணம் பற்றியே முகுந்தன் எனக் கூறினார், (அடியார்களுக்கு) முத்தியின்பத்தையும் இவ்வுலகவின்பத்தையும் கொடுப்பவன் என்பதால்—(மு—முத்தி, கு—பூமி, த—கொடுப் பவன்) முகுந்தன் என அழைக்கப் பெற்றார்.

"குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்
இன்று முதலாக வென்னெஞ்சே—என்றும்
புறனுரையே யாயினும் பொன்னாழிக் கையான்
திறனுரையே சிந்தித் திரு"

(இயற்பா. முதற்திருவந்தாதி 41)

எனப் பொய்கையாழ்வார் அருளிச் செய்தது போன்றே இவரும் கண்ணபிரானைத் தஞ்சமடைய வேண்டுகிறார்.

"சார்ந்த விருவல் வினைகளும் சரித்து மாயப் பற்றறுத்து
தீர்ந்து தன்பால் மனம்வைக்கத் திருத்தி வீடு திருத்துவான்
ஆர்ந்த ஞானச் சுடராகி யகலம் கீழ்மே லளவிறந்து
நேர்ந்த வுருவா யருவாகு மிவற்றி னுயிராம் நெடுமாலே"
(திருவாய். 1-5-10)

என்னும் பாசுரத்தில் நம்மாழ்வார் நினைந்து போற்றிப் பரவி யதையே இவ்வாசிரியரும் இங்கு நயம்பட எடுத்துரைப்பது ஒப்பு நோக்கத்தக்கதாம்.

"உண்டுறங்கி மானா ருரகபடத் தாவன்மிகக்
கொண்டுழலு மென் றனைக்கைக் கொள்ளாயோ—
திண்டுமிண்டுக்
கார னொருவன்வசை காதலித்தும் வீடளித்த
சீரரங்கக் கோயிலர சே"
(திருவ. திரு. வெண்பாவந்தாதி-71)

எனப் பிறிதொரு நூலிலும் இவர் இவ்வாறே குறிப்பிடக் காணலாம்.

உண்டுண்டு, உறங்கியுறங்கி, அணைந்தணைந்து என அடுக்கிக் கூறியது மீளயியலாத உலக வாழ்வியலைக் குறிப்பிட வாம். ஒளிவளையார் — மகளிர். தொண்டு — பணிவிடை. அங்கம்—உடம்பு. மலம்—குற்றம்.

இது, இருவிகற்பத்தால் வந்து நாளென்னும் வாய்பாட்டான் முடிந்த **நேரிசை வெண்பா.**

## கட்டளைக் கலித்துறை

45. ஒழிக்கரும் ஆணவப் பேய்தலைக் கேறலின் ஓகைமிஞ்சிக்
கழிக்கரு வாதனைக் காளா யுளீர்சகம் காக்குமலர்
விழிக்கரு ணைத்திரு மாலென்னும் வாழ்வெற்றி வீரைநகர்
உழிக்கரு டப்பரிச் சேவைகண் டேத்தி உருகுமினே.

ஒழிக்க அரும் ஆணவப்பேய் தலைக்கு ஏறலின்—(எத்தனை முறையுணர்ந்து தவிர்த்தும்) அழிப்பதற்கு அரிதான (நான் பெரியன் என்கிற) ஆங்கார குணம் உச்சிவரை நிறைந் திருப்பதால்

ஓகை மிஞ்சி—(நெஞ்சம் முழுவதும்) உவகை மிகுதியாகி

கழிக்க அரும் வாதனைக்கு ஆளாய் உள்ளீர்—போக்குதற்கரிய துன்பத்திற்கு ஆட்பட்டு இருக்கின்றீர்கள் (மீண்டும் மீண்டும் கருவில் பிறந்திறக்கும் துன்பத்திற்கு ஆளாக இருக்கின்றீர்கள்)

சகம் காக்கும் மலர்விழிக் கருணைத் திருமால் என்றும் வாழ் வெற்றி வீரை நகர் உழி—உலகத்தையே (தம் அருட் பார்வையால்) காத்தருளும் தாமரைக் கண்ணனாகிய எம்பெருமான் அனுதினமும் கோலங் கொண்டிருக்கின்ற வீரச்சிறப்பு மிக்க வீரகேரளம்புதூரினிடத்தே

கருடப் பரிச்சேவை கண்டு ஏத்தி உருகுமினே—திருமால் கருடன்மீது உலாவரும் அற்புதக் காட்சியைத் தரிசித்துப் போற்றி அகம் மகிழ்வீராக.

## குறிப்புரை

நான் என்னும் ஆங்காரத்தை ஆணவப் பேய் என்றே கூறினார். இது வந்தால் ஒழிப்பதும் அரிது. இதனால் நிலையற்ற மனமகிழ்ச்சியே உண்டாம். இதுவே தீராத பிறப்பிறப்பிற்கும் காரணமாம். இவற்றை யொழிக்க வேண்டுமாயின் வீரைத் திருமாலின் திவ்விய கோலங்களைக் கண்டு களிக்க வாருங்கள் என அழைக்கின்றார் ஆசிரியர்.

ஓகை—உவகை என்பதன் மரூஉ, செருக்கு. வாதனை—துன்பம். சகம்—உலகம். உழி—ஏழன் உருபு.

கண்ணபிரான் தம் கடைக்கண் நோக்காலேயே இவ்வுலகைக் காத்தருளுகின்றார் என்பதைச் ‘சகம் காக்கும் மலர்விழிக் கருணைத் திருமால்’ என்னும் தொடரால் விளக்குகின்றார்.

“பொன்னியல் பழுத்து வானிற் பொருதரு மாட வீதி
துன்னிய சாத கம்போற் சூழ்ந்துநோக் குநர்கட் கெல்லாம்
கன்னியந் துழாய்மி லைந்த கருமுகில் கடைக்கண்
நோக்கால்
மன்னிய கருணை வெள்ள மழையினை வழங்கு மென்பார்”
(பாக. 1-4-30)

எனவரும் பாகவதப் பாசுரம் கண்ணனின் கடைக்கண் நோக்கால் உண்டாகும் கருணை மழையைக் காட்டும்.

சாதகம் என்பது மேகத்துளியை உண்ணும் பறவை. இப் பறவை போன்று தன்னை நோக்கிக் கொண்டிருப்பவர்களுக்கு, மேகம் போன்ற கண்ணபிரான் கருணையென்னும் மழையை வழங்குவான் என்பது இதன் பொருள். இவ்வகையிலேயே ஆசிரியரும், பெருமாளைச் சேவிப்பவர்களுக்கெல்லாம் கருணை மழையைப் பொழிவிப்பாரென அறுதியிட்டுக் கூறுகின்றார்.

தானல்லாத உடம்பை யானென்றுந் தன்னோடியை பில்லாத பொருளை எனதென்றுங் கருதுகின்ற அகங்கார மமகாரங்களை அறுத்தல் காரணமாகவே கருடப் பரிச்சேவை யைக் கண்டேத்துகின்றார்.

இது, நிரையசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை**.

## கலிவிருத்தம்

46. உருவென் றருவென்று உழல்புன் சமயத்து
இருள் துன் றியிடைந்து அழும்ஏழ் மையீர்!
விருதொன் றுதென்வீ ரையின்மால் ஒருதூண்
வருபண் பைமதிக் கின்மயக் கறுமே.

உரு என்றும் அரு என்றும் உழல் புன் சமயத்து இருள் துன்றி இடைந்து அழும் ஏழ்மையீர்—இறைவனுக்கு உருவம் உண்டு என்றும் (அறுசமயம் என்றும்), இறைவன் உருவம் இல்லாதவன் என்றும் (சமணம் போன்றதென்றும்) உலைந்து திரிந்து, அற்பமான கொள்கைகளையுடைய சமயங்களின் மயக்கங்கள் நெருங்கித் தம் வசங்கெட்டுப் புலம்பும் பேதைமையுடையோரே!

விருது ஒன்று தென் வீரையின் மால் ஒருதூண் வரும் பண்பை மதிக்கின் மயக்கு அறுமே—வெற்றிச் சிறப்புமிக்க வீரகேரளம்புதூரில் கோயில் கொண்டிருக்கும் திருமால் (அன்றொருநாள் பிரகலாதனுக்காக) ஒரு தூணிலிருந்து வெளிப்பட்டு (நரசிங்கமாய்) காட்சியளித்தருளிய இறை குணத்தை உணர்வீராயின் (சமயங்கள் என்று வேறுபாடு காட்டும்) மயக்கநிலை ஒழியுமே (காண்பீராக).

## குறிப்புரை

உரு, அரு என்பன முறையே ரூபம், அருபம் என்பதன் வடமொழிச் சிதைவுகள்.

புன்சமயம் என்பது புறச்சமயம். வேதாந்தரங்களை உண்மைத் தெய்வமாக நம்பின வேதத்துக்குப் புறம்பாகிய சமயங்கள் இவை. இவற்றால் துன்பமே மிகும்.

சமயங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வழியைச் சொல்லி இறைவனிடம் ஆற்றுப்படுத்துவன என்பதை அறிதல் வேண்டும். அவ்வாறன்றி இவற்றால் பேதங்கள் பேசுதல் அறிவுடைமை யாகா என்பதை இங்கே எடுத்துரைக்கின்றார்.

> "வணங்கும் துறைகள் பலபல வாக்கி, மதிவி கற்பால்
> பிணங்கும் சமயம் பலபல வாக்கி, அவைய வைதோ
> றணங்கும் பலபல வாக்கிநின் மூர்த்தி பரப்பி
> வைத்தாய்
> இணங்குநின் னோரை யில்லாய், நின்கண் வேட்கை
> யெழுவிப்பனே"
> (இயற்பா—திருவிருத்தம். 96)

என்பார் நம்மாழ்வாரும்.

வைணவம், சைவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் என்றும்; கபிலமதம், கணாதமதம், பதஞ்சலிமதம்; அட்சபாதமதம், வியாசமதம், ஜைமினிமதம் என்றும்; பௌத்தம், சமணம், பைரவம், காளாமுகம், லோகாயதம், சூனியவாதம் என்றும் வெவ்வேறு வகையில் அறுசமயங்கள் கூறப்பெறும். இவ்வாறு சமயங்கள் பலபல வாக்கி அதனுள்ளே தம்மையே நடுநிலையாக்கி அனைவரையும் உய்விப்பதே எம்பெருமானின் திருவருள் என்பர் ஆன்றோர்.

## தூணில் வெளிவந்தருளியது

தேவர்கள், அசுரர்கள், முனிவர்கள், மனிதர்கள் இவர்கள் கையினாலும், போர் செய்தற்குரிய ஆயுதங்களினாலும், பூமியிலும், சூரியன் முதலிய கிரகங்கள் உலாவுகின்ற ஆகாயத்திலும், பகலிலும் இரவிலும், ஓரிடத்துக்கு உள்ளிடத்திலும், புறத்திடத்திலும், சாகாதவரம் பெற்றவன் இரணியன். இவன்

மகன் பிரகலாதனுக்குபதேசித்த குருவாகிய சுக்கிரன் 'இரணியாய நம' வென்று சொல்ல, இளஞ்சிறு பிள்ளையாகிய பிரகலாதன் 'அரியரி நாராயணா! என்றே திரும்ப மொழிந்தான். சினங்கொண்ட இரணியன் சிறுவனைக் கொல்ல முனைந்தான். அப்போது, 'தூணிலும் இருப்பான் எங்கள் துணைவன்' எனப் பிரகலாதன் கூறியதை மெய்ப்பிக்கவே எம்பெருமான் தூணில் வெளிவந்தருளினார்.

"அளந்திட்ட தூணையவன் தட்ட, ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்க வுருவாய்"

(பெரிபா. திரு. 1-5-9)

எனப் பெரியாழ்வாரும் விவரிப்பர்.

"இடித்ததோ ரசனி பென்ன வெறுழ்வலி கனகன் சீறி
அடித்ததூ ணத்து நின்று மாலவ் பாகப்பெ ரண்டம்
வெடிப்பமால் வரைப லிப்ப வெடிபட நகைத்து வெய்தின்
வடித்தபூந் துளவ மாலை ஆளரி முளைத்த தம்மா."

(பாக. 7-2-84)

என்பது பாகவதம்.

சமயங்கள் கடந்த நிலையில், எல்லாவற்றிற்கும் முதன்மையானவன் என்பதை அறிவுறுத்திய எம்பெருமானார் நரசிங்க உருவாய்த் தூணில் வெளிப்பட்டார். வரையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள இவரை வழிபடின் அஞ்ஞானம் விலகி ஞானம் பிறக்கும் என்பது குறிப்பு.

இது, முழுவதும் புளிமாச் சீர்களாலான கலிவிருத்தம்.

## கொச்சகக் கலிப்பா

41\. மயன்வியக்கும் மணிமாட மறுகார்தண் டமிழ்விரைப்
புயல்புரையும் நெடுமேனிப் பனிதாங்கி புரிகுழல்
இயல்முனிவன் ஒருபதிகம் இசைதராலுங் கினிதருளும்
பயினனைக்கேன் குறைவில்லாய் பப்பாடல் பகர்ந்தேனே.

மயன் வியக்கும் மணி மாடம் மறுகு ஆர் தண்தமிழ் விரை—
(சிற்பக்கலையில் வல்லவனான) மயன் என்னும் தேவலோகச் சிற்பி வியக்கும்படியான (உயர்ந்த சிறந்த) மணிமாடங்களும் தெருக்களும் நிறைந்து, தமிழ்ச் சிறப்பு மிக்க விரலோரைப்புதூரில

புயல் புரையும் நெடுமேனிப் புனிதா—மேகம் போன்று கறுத்து உயர்ந்து காணும் நெடியோரே! பரிசுத்தமானவரே!

நீ புளிநீழல் இயல் முனிவன் ஒருபதிகம் இசைத்தானுக்கு இனிது அருளும் பயன் எனக்கு ஏன் அருள்கில்லாய்—திருப்புளியமர நிழலிலே இருந்த சடகோபஆழ்வார், மதுரகவியாழ்வார் ஒரு பதிகம் பாடியதற்காகவே கிருபை செய்தது போன்ற சிறப்பை நீவிர் அடியேனுக்கு இன்னும் நல்கவில்லையே அதன் காரணம் எதுவோ? (அறியேன்)

பல பாடல் பகர்ந்தேனே—(சமய வேறுபாடுகளைக் கடந்து நீரே முதல்வர் என உணர்ந்து) உம்மீது இதுவரை பல்லாயிரக் கணக்கான பாசுரங்களைப் பாடியுள்ளேனே. (அடியேனுக்கும் அருள்வீராக.)

## குறிப்புரை

வீரை நவநீதகிருட்டிணனைப் 'புயல் புரையும் நெடுமேனிப் புனிதன்' என்றே இவர் அழைப்பது நயம் மிக்கது.

'பச்சைப் பசும்புயல் வண்ணன்' (பாக. 7-2-95)
'கரும்புயல் வண்ணத் தண்ணல்' (பாக. 8-2-34)
'பாற்றிரைத் துயிலும் பச்சைப் பசும்புயல்' (பாக. 10-1-24)
'மாலையந் துழாய் மரகதப் பசும்புயல்' (பாக. 10-1-33)

எனப் பாகவதமும் புயல்வண்ணனைக் காட்டும். மழை மேகம் போன்று கருணையைப் பொழிபவன் என்ற பொருளிலேயே இவ்வாறு கூறுவர்.

ஆசிரியர், நம்மாழ்வாரிடத்து ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர். மதுரகவியார் பாடிய ஒரு பதிகத்திற்காக ஓராயிரம் பாசுரங்கள் பாடி மகிழ்வித்த பெருமையை உடையவர் நம்மாழ்வார் என்பதால் அவர்மீது இவர் அளவிலாக் காதலுற்றார்.

"குருகை நாதன்முன் கோதறும் அன்புமேற் கொடுதன்
அருகு வந்தொரு பதுகவி உரைத்தவற்கு அவர்மின்
மருவு மார்பினன் ஆயிரங் கவிகொடு வழங்கும்
பெருமை யீந்தனன் கருணையிற் பெரியவர் எவரே."
(சட. சத. 24)

என இவர்தம் அந்தாதி நூலிலும் வியந்துரைப்பர்.

திருவரங்கத் திருவாயிரம், திருமாலாயிரம் என ஆயிரக் கணக்கில் இவரும் கண்ணபிரானை ஏத்திப் பாடியுள்ளார். எனவே, 'பலபாடல் பகர்ந்தேனே' என்றார்.

மறுகு—தெரு, ஆர்—நிறைந்த. புயல்—மேகம். புரையும்—போன்ற.

இது. கருவிளங்காய்ச்சீரும் புளிமாங்காய்ச்சீரும் விரவி வந்த் கொச்சகக் கலிப்பா.

## அறுசீர் ஆசிரிய விருத்தம்

48. பகலில் காரிருள் வருத்தியும் போக்கியும்
பார்த்தனைப் புரந்தாய்என்
அகம்விட்டு ஓவரும் ஆணவக் கரைஅற
அழிக்குமா றறியாயோ?
நகரிற் சீரிய வீரையில் நாரணா!
நமன்கெட வடுந்தாளென்
சிகரத்து உன்திருத் தாள்புனை மலருறச்
செயிலினும் வலிதன்றே.

பகலில் கார்இருள் வருத்தியும் போக்கியும் பார்த்தனைப் புரந்தாய்— (பாரதப் போரில்) பகற்பொழுதிலேயே சூரியனை மறைத்து (இரவு தோன்றும்படியாக) கரிய இருட்டை உண்டாக்கியும் பிறகு மீண்டும் ஒளியை வரவழைத்தும் அருச்சுனனைக் காப்பாற்றினீர்!

என் அகம் விட்டு ஓவரும் ஆணவக் கரை அற அழிக்குமாறு அறியாயோ — அடியேனுடைய (அறியாமையாகிய) அகங்கார உள்ளத்தில் உயர்ந்து வரும் (நான் என்னும்) ஆணவ அலைகளைப் போக்கும் வழி வகைகளை அறிய மாட்டீரோ?

நகரில் சீரிய வீரையில் நாரணா —பேரூர்களிலெல்லாம் சிறந்த தான வீரகேரளம்புதூரில் கோலங்கொண்டிருக்கும் நாராயணரே!

நமன் கெட வடுந்து ஆள் என் சிகரத்து உன் திருத்தாள் புனைமலர் உறச்செயினும் வலிது அன்றே—காலன் வருந்தும்படியாக (மரணபயம் அறுத்து) அடியேனுடைய தலைமீது உம்மிரு திருவடிகளை வைக்கச் செய்வது ஒன்றும் (உமக்கு) அரிய செயலல்லவே (வைத்தருள்வீராக)

## குறிப்புரை

பார்த்தன்—அருச்சுனன். பாரதப் போரில் அருச்சுனனைக் காக்க இரவியையே மறைத்த மாயத்தைச் செய்தவர் கண்ணபிரான். (காண்க பா. 10) இத்தகையவர், தம் மரண பயத்தையும் போக்கியருள வேண்டுமென்கிறார். அத்துடன், நாளும் திருமாலின் திருவடிச் சேவையையே வேண்டுகின்றார்.

இது, முதலில் மாச்சீரும், ஈற்றுச்சீர் காய்ச்சீரும், மற்றைய நான்கும் விளச்சீருமாகி வந்த **அறுசீராசிரிய விருத்தம்.**

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

49. வலியம் யாமெனச் செருக்குபுன் குணத்தோர்
வான நாட்டிடை வாழ்தக ரேனும்
புலிமுன் போயமான் கன்றென தளரப்
புகுந்துன் மெய்யருட் புகழ்சொலல் விழைந்தேன்
கலியிற் புண்படக் காண்பது முறையோ?
கருத்துள் வந்தநாள் கழறல்பொய்ம் மொழியோ?
குலிசன் வானினை நகத்தரும் வீரைக்
கொற்ற வாசனைக் கொண்டல்மே னியனே.

குலிசன் வானினை நகத்தரு வீரைக் கொற்றவாசனைக், கொண்டல் மேனியனே—இந்திரனுடைய தேவலோகத்தையும் வென்றசெய்யான அழகும் வளமும் மிக்க வீரகேரளம் புதூரின் வீரத்தலைவரே! இத் திருத்தலத்தில் வாசஞ் செய்யும் கார்மேக வண்ணா!

[illegible] வான நாட்டிடை வாழ்தகரேனும்—[illegible] என்றும் இறப்புடைய இந்திரன் [illegible] தேவலோகத்தில் வசிப்பவர்களாயினும் (அமரர்)

புலிமுன் போய மான்கன்று எனத் தளரப் புகுந்து உன்மெய் அருட்புகழ் சொலல் விழைந்தேன்—புலியின் எதிரே சென்ற மான்கன்று போல நடுக்கமுறுமாறு செய்து, உம்முடைய உண்மையான அருளிச் செயல்களைப் பாட ஆவல் கொண்டேன்.

கலியில் புண்படக் காண்பது முறையோ—(அடியேன்) வறுமையிலும் சிறுமையிலும் உழன்று வேதனைப்படுதல் முறையாகுமோ?

கருத்துள் வந்து அந்நாள் கழறல் பொய் மொழியோ—அடியேன் மனக்காட்சியில் அன்றொருநாள் தோன்றியுரைத்த மொழிகளெல்லாம் உண்மையில்லையோ? (எல்லாம் பொய் தானோ? மொழிந்தருள்வீராக.)

## குறிப்புரை

கண்ணபிரானின் திருவருட் செயல்களையெல்லாம் புகழ்ந்து பாடும் தமக்கு இன்னும் நேரில் வந்து அருளவில்லையே என ஏங்குகிறார் ஆசிரியர். முன்பு தம் வாழ்வில் கருத்துள் வந்ததையும் நினைவு கூர்கிறார்.

குலிசன் ஊர்—இந்திரலோகம். புலிமுற்போய மான்கன்று-தளர்ச்சிக்கு உவமை.

கலிகொண்ட நெஞ்சினர் எக்காலத்தும் கடவுளருளைப் பெறமாட்டார். அக்கலிதான் நீங்குதற்கும் கருணைக் கடலான எம்பெருமானின் இன்னருள் முதற்கண் வேண்டும் என்பர்.

அறிவு என்பதே தெளிவைத் தருவதுதான். அதன்கண் தெளிவு குன்றி மயக்கம் ஏற்படும்போது, துன்பங்கள் தோன்றுகின்றன. அவற்றைக் களைவதிலும் தோன்றாத் துணையாய் உள்ளிருந்து இயக்கியருளுகிறார் எம்பெருமானார். உயிர் அதற்கு உட்படும்போது மயக்கம் அறும். உயிர் அதனை விலகிச் செல்லும்போது இருள் சூழும். இருளின் விளைவான நலிவுகளும் பிறவும் அலையலையாக எழுந்து வருத்தும். இவற்றினின்றும் விடுபட எம்பெருமானை உள்ளத்தானாக உணர்ந்து அரும்பதம் அடைதல் வேண்டும் என்பது குறிப்பு.

"பிறவியெனுங் கடலழுந்திப் பிணிப்பசியோ டிந்திரியச்
சுறவநுங்கக் கொடுவினையின் சுழலகப்பட் டுழல்வேனோ?
வறமுடையா யென்னப்பா வரங்காவென் னாருயிருக்
குறவுடையா யடியேனை யுய்க்கொள்வ தொருநாளே".
(திருவ.கலம்.69)

என வேண்டுவார் பிள்ளைப்பெருமாளையங்காரும்.

இது, முதல், நான்கு, ஐந்து, எட்டாம் சீர்கள் மாச்சீர்களும் மற்றைய நான்கும் விளச்சீர்களுமான **எண்சீராசிரிய விருத்தம்.**

## பதினான்குசீர்த் தாழிசை

50. மேனி முற்றும் நீற ணிந்து
உருத்தி ரக்கணங் கள்போல்
மின்னு மென்னை நின்ன ருட்கண்
வேட்கை யெய்த விட்டநீ

நானி லத்தோர் எட்பொ ரப்பு
னைந்து லாவுவார் கள்தம்
நாறல் வாயும் ஏசல் காணல்
ஞாய மென்க லாகுமோ?

வேனில் வேள்வி ழாவ றாத
வீரை யூரில் நாரணா!
வேலை சுற்று பார ளந்து
விண்ண ளந்துமா வலிக்கு

ஆனி யற்ற மெய்ப்ப தம்கொ
டுத்த ளித்த ஐயனே!
அஞ்சல் அஞ்சல் என்ற நாள்ஓர்
ஆனை முன்செல் அப்பனே!

மேனி முற்றும் நீறு அணிந்து—உடல் முழுவதும் திருநீறு பூசி

உருத்திரக் கணங்கள் போல் மின்னும் என்னை—சிவகணங்களைப் போல ஒளி வீசும் அடியேனை

நின் அருட்கண் வேட்கை எய்த விட்ட நீ—உம்முடைய திருவருள் பார்வையைப் பெற வேண்டுமென்ற தீராத விருப்பத்தை (அடியேனுள்ளே) ஏற்படுத்தியிருக்கும் நீவீர்

நால் நிலத்தோர் எட்பொரப் புனைந்து உலாவுவார்கள்தம்—இவ்வுலகத்தவர்கள் அனைவரும் இகழும்படியாகக் கற்பனை செய்துரைத்துத் திரிவார்களுடைய

நாறல் வாயும் ஏசல் காணல் ஞாயம் என்கல் ஆகுமோ—(சுடுசொற்களே பேசும்) தீ மணம் வீசும் வாய்கள் பழிப்பதைப் பார்த்து வாளாயிருப்பது முறையாகுமோ?

வேனில் வேள் விழா அறாத விரையூரில் நாரணா—வேனில் விழா, வேள் விழா போன்று பல விழாக்கள் மலிந்த வீர கேரளம்புதூரில் கோலஞ் செய்யும் நாராயணரே!

வேலை சுற்று பார் அளந்து விண் அளந்து மாவலிக்கு ஆணி அற்ற மெய்ப்பதம் கொடுத்து அளித்த ஐயனே!—(வாமன அவதாரமெடுத்து) உம் திருவடியால் இக்கடல்சூழ் மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் அளந்து எல்லையில்லாத இன்பம் நல்கும் (உம் திருவடிகளையுடையும்) வீடு பேற்றினை மாபலிச்சக்கரவர்த்திக்கு அருளிய இறைவரே!

அஞ்சல் அஞ்சல் என்று அந்நாள் ஓர் ஆனைமுன் செல் அப்பனே—(ஆதிமூலமே என ஓலமிட்டழைத்தபோது) பயங்கொள்ளாதே என (இதோ வந்தேன் என) அன்றொரு நாள் கசேந்திராழ்வார் முன்னே சென்ற எந்தையே! (அடியேனுக்கும் காட்சி தந்து அவ்வண்ணம் மொழிந்தருள்வீராக.)

## குறிப்புரை

உருத்திரக்கணம்—சிவகணம் — சிவசேவைப் பரிவாரர். நூலாசிரியர் தம் உடல் முழுவதும் திருநீறு அணிந்து சிவவேடம் பூண்டவர். ஆயினும், கண்ணபிரானிடம் வேட்கை மிகக் கொண்டு பல்லாயிரம் பாடல்களைப் பாடியவர். அதுவும் கண்ணபிரானின் திருவருளே என எண்ணி மகிழ்ந்தவர். எள்ளி நகையாடும் உலகத்தோரின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகாதவாறு தம்மைக் காத்தருளவேண்டுகிறார்.

அஞ்சல்—சரணம்—எதிர்மறை வியங்கோள். அஞ்சல் அஞ்சல்—விரைவினால் அடுக்கிற்று. மாவலி—(மகாபலிச் சக்கரவர்த்தி)—வடசொற்றிரிபு. வேலை—கடல். ஆணியற்ற—எல்லையற்ற மெய்ப்பதம்—திருவடிப் பேறு.

இது, பதினான்கு சீர்த் தாழிசை.

## ஊசல்

பாட்டுடைத் தலைவன் ஊஞ்சலாடும்பொழுது அதை ஊக்கி விட்டுக்கொண்டு பாடுவதாக அமையும் உறுப்பு ஊசல் எனப்பெறும். இது, ஆசிரிய விருத்தத்தாலாதல், கலித்தாழிசை யாலாதல் 'ஆடீருசல்', "ஆடோமோவூசல்'', 'ஆடுக ஊசல்' என ஒன்றால் முடிவுறக் கூறப்பெறும்.

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

51. அப்பணி சென்னியன்அனையார் பத்தி ஓர்கால்
அம்புயப்பூ வினன்போல்வார் கருமம் ஓர்கால்
முப்பழச் சாறுஒல்குதமிழ்ச் சடகோ பாழ்வான்
முதலினர்மெய் ஞானம்விட்டம் மொழியா மோன
மெய்ப்பல கைஎட்டெழுத்தும் வடங்க ளாக
வீரைநகர் வாழ்பெருமாள் ஆடீர் ஊசல்
செப்பரும் சீர்த்திருவும் நிலமகளும் சேரத்
தேவகியார் செல்வர்இருந்து ஆடீர் ஊசல்.

அப்பு அணி சென்னியன் அனையார் பத்தி ஓர்கால்—கங்கை யாகிய நீரினைத் தலையிலே சூடிக்கொண்டிருக்கும் சிவ பெருமான் போன்ற தேவர்களின் அன்பு வழிபாடு ஒரு காலாகவும்

அம்புயப் பூவினன் போல்வார் கருமம் ஓர்கால்—(உம்முடைய) உந்திக் கமலத்தில் வீற்றிருக்கும் பிரமன் போன்றவர்களின் (ஆக்கல் போன்ற) தொழில்கள் ஒரு காலாகவும்

முப்பழச்சாறு ஒல்கு தமிழ்ச் சடகோபாழ்வான் முதலினர் மெய் ஞானம் விட்டம்—மா, பலா, வாழை என்னும் பழங்களைக் குழைத்துச் செய்யப்பெற்ற மதுரம் போன்ற பாசுரங்களை இசைக்கும் சடகோபாழ்வார் ஆகிய பெரியோரின் மெய் ஞானமே உத்திரமாக

மொழியா மோனம் மெய்ப்பலகை—சொல்லுதற்கரிய மௌனமே மெய்ப் பலகையாக

எட்டெழுத்தும் வடங்கள் ஆக—நாராயணாய என்னும் விட்டுணு மந்திரமே கயிறு ஆக (அமைத்து ஊஞ்சலாக்கி அதில்)

**வீரை நகர் வாழ் பெருமாள் ஆடீர் ஊசல்—வீரகேரளம்புதூரில் வாசஞ்செய்கின்ற கண்ணபெருமானே! ஊசலாடுவீராக**

செப்ப அரும் சீர்த் திருவும் நிலமகளும் சேரத் தேவகியார் செல்வர் இருந்து ஆடீர் ஊசல்—தேவகி மைந்தரே! சொல்லுதற்கு அரிதான சிறப்புகளுடன் கூடிய பெரிய பிராட்டியாரோடும் பூமிப்பிராட்டியாரோடும் சேர்ந் திருந்து ஊசல் ஆடுவீராக'

## குறிப்புரை

'திருமாது புவிமாதோ டாடிரூசல்' என்பார் பிள்ளைப் பெருமாளையங்காரும் (திருவர. கலம். 58).

*சுற்றுமண்டச் சுவரிரெண்டு கால்க ளாகத்*
*தோற்றமுறும் விண்நெடிய விட்ட மாகப்*
*பற்றுமழை மாரிபொற்சங் கிலிக ளாக*
*பாற்கடல்சூழ் புவனமொரு பலகை யாகக்*
*கற்றுணர்ந்த மாதவத்தோர் மகிழ்ந்து ஞானக்*
*கரங்களினால் அலங்கரித்த ஊசல் மீதில்*
*பொற்றடங்கை அர்ச்சுனன்சா ரதியாய்த் தோன்றி*
*பொலிந்துநின்ற மாதவனார் ஆடீ ரூஞ்சல்.*

எனக் கண்ணனை ஊஞ்சலாட்டுகிறார் 'ஆழ்வார் திருநகரி ஆதிநாதர் ஊஞ்சல்' இலக்கிய ஆசிரியர்.

இவ்வாறு பாட்டுடைத் தலைவரைப் பலவாறு ஊஞ்சலாட்டு வது மரபு. இவ்வகையில் அமைந்த இப்பாடலின் நயம் பாடியுணரத்தக்கது.

அப்பணி சென்னியன்—கங்காதரன்—சிவபெருமான். அம்புயப் பூவினன்—நான்முகன். ஒல்குதல்—குழைதல். மெய் ஞானம்—உண்மை ஞானம். விட்டம்—உத்திரம். திரு—திருமகள் —இலக்குமி. நிலமகள்—பூதேவி. சீர்த்திரு—இருபெயரொட்டு. தேவகி—கண்ணனின் தாய், வசுதேவர் மனைவி, கம்சனது தங்கை.

வேதத்தின் உட்பொருளையெல்லாம் தமிழில் திருவாய் மொழியாக இசைத்தருளியபடியினாலே 'தமிழ்ச் சடகோபாழ்

வான்' என்றே நம்மாழ்வாரைச் சிறப்பித்துக் கூறுகிறார். 'புளிக்கீழ் மகிழ்அம் தமிழ்க்கரசே' (அழ. கலம். கா. 2) என்று பாடியோரும், இவர் சிறந்த தமிழ் வேதத்தைப் பாடியருளியவர் என்ற கருத்திலேயே 'தமிழ்க்கரசு' என்றனர். 'ஞான ஆபரணத் தைத் தமிழ்செயு நம்மாழ்வார்' (எம். சத. 31,) என்பர் பிறரும். ஞானபாகமாகிய தமிழ் வேதத்தை வெளியிட்டருளியவர் என்பதே இதற்கும் பொருளாம்.

"தாயின் மென்முலைப் பாலமு துண்பதும் தணந்த
வாயி னாற்தமிழ் மறைசெய்து பிறப்புஇல்
வாழ்வடைந்தோன்"
(குருபர. 1. வரலாற்றுச் சருக்கம். பா. 6)

எனத் தன் வரலாற்று நூலிலும் ஆசிரியர், 'தமிழ் மறை செய்த வர்' என்றே நம்மாழ்வாரைக் குறிப்பர்.

நம்மாழ்வார் பாடியருளிய தமிழ்மீது பற்றுக்கொண்ட இவர் சடகோபர் சதகத்தந்தாதி இயற்றியபொழுதும் அதில், 'எய்தரும்பதம் எய்தி இன்றமிழ் பெய்த மாறன்' (66) 'ஏழ்வகை யின் இசைத்தமிழ்ப்பாய் பொழி மேகம்' (70), 'கான முறுந் தமிழ் மறைக்கோர் தலைவன்' (83), 'பாகுநேர் தமிழ்ப் பனுவல் மாறன்' (56), 'சாரமிக்க தமிழ்ச் சடகோபன்' (40), 'நத்தி வேதம் நறுந்தமிழாகச்செய் சத்தியாழ்வார்' (21) என இவ்வாறு தமிழோடு சார்த்திக் கூறுவதில் பெருமை கொள்வர்.

திருமாலே தெய்வம் அன்றி மற்றொருவர் இல்லை என்பதை நம்மாழ்வாரின் திருவாய்மொழியால் உணர்ந்த இவர்,

'அன்றும் இன்றுமற் றென்றும்வாழ் மாதவன் அன்றி
ஒன்றும் நானறியேன் எனத் துணிந்துசொல் உரவோன்'
(சட. சத. 27)

என்றே புகழ்வர்.

இது, முதற்சீர் விளச்சீரும் இரண்டு ஐந்து ஆறாஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மூன்று நான்கு ஏழு எட்டாஞ்சீர்கள் மாச்சீர்களு மாகிய **எண்சீராசிரிய விருத்தம்.**

## நேரிசை வெண்பா

52. ஊசலென வேதிரியும் உள்ளத்தேன் ஓர்மையின்றிப்
பேசலும்கேட் டின்பம் பெருக்குமோ—வாசத்
துளவனணி வீரையர்கோன் தொல்லாயர் பாடிக்
களவனணி தண்டைக் கழல்.

ஊசல் எனவே திரியும் உள்ளத்தேன்—(அங்குமிங்கும் அலை பாய்ந்து கொண்டு) ஊஞ்சலைப் போலவே அலைந்து திரியும் நெஞ்சத்தை யுடையேன் (அடியேன்)

ஓர்மை இன்றிப் பேசலும் கேட்டு இன்பம் பெருக்குமோ—துணி வில்லாமல் பிதற்றுவதைச் செவியுற்ற பின்பு (உம் உள்ளத் தில்) மகிழ்ச்சி மேலிடுமோ?

வாசத் துளவன் அணி வீரையர்கோன் தொல்லாயர் பாடிக் களவன் அணி தண்டைக் கழல்—நறுமணம் பொருந்திய திருத்துழாய் மாலையை அணிந்தவரே! பெருமை மிக்க வீரையூரின் தலைவரே! தொன்மைச் சிறப்பு மிக்க ஆயர் பாடியிலுள்ள கோபியர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவரே! (வெண்ணெய் திருடியவரே) அழகு பொருந்திய தண்டையைத் திருவடிகளிலே அணிந்தவரே! (என அனைவரும் புகழத்தக்கவரே அடியேன்மீது இரக்கம் கொள்ளலாகாதோ? அருள்வீராக.

### குறிப்புரை

ஓர்மை—துணிவு. உலக இன்பங்களிலும் மாயைகளிலும் மூழ்கிய மயக்கத்தால், மனத்திண்மையின்றி, எதையும் துணிவாக மொழிய இயலாத நிலையை எடுத்துரைக்கின்றார். நிலையில்லா மனத்திற்கு ஊசல் உவமையாயிற்று.

வாசம்—வாசனை—நறுமணம்.

தொல்லோனாகிய கண்ணபிரான் பிறப்பதற்கு இடமாகிய தால் ஆயர்பாடியைத் 'தொல்லாயர்பாடி' என்றார்.

தொல்லாயர்பாடியில் ஆய்ச்சியர் இல்லங்கள்தோறும் வெண்ணெயைத் திருடி உண்டவன் என்பதால் கள்வன் என்றார். ஆயினும், அடியவர் உள்ளங்களைக் கொள்ளை கொள்பவன் என்ற பொருளே சிறப்புடையதாம். கண்ண பிரானைக் கள்வன் என்றே விண்ணவரும் அழைப்பர் என்பர்.

"கள்வா எம்மையு மேழுல குந்நின்
னுள்ளே தோற்றிய இறைவ வென்று
வெள்ளே றன்நான்முக னிந்திரன் வானவர்
புள்ளூர் திகழல் பணிந்தேத் துவரே?"

(திருவாய். 2-2-10) என்பார் நம்மாழ்வார்.

'கண்வழி நுழையுமோர் கள்வனே கொலாம்'

(கம்ப. மிதிலைக். 55) என்பர் கம்பர்.

"திருவருள் செய்பவன் போல வென்னுள் புகுந்து,
உருவமு மாருயிரு முடனே யுண்டான்,
திருவளர் சோலைத் தென்காட்கரை யென்னப்பன்,
கருவளர் மேனிஎன் கண்ணன் கள்வங்களே."

(திருவாய். 9-6-5)

என்னும் பாசுரத்தில் உள்ளங்கவர் கள்வனாகிய கண்ண பிரானின் இயல்பை விளக்குவார் நம்மாழ்வார்.

கழல்—திருவடி.

இது, இருவிகற்ப ந்தால் வந்து மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்த நேரிசை வெண்பா

## கட்டளைக் கலித்துறை

53. கழல்வேட்டுன் மெய்ப்புக ழேபக
ராதருங் கானகத்தில்
விழல்வாய்ப்ப நீர்இறைப் பாரென்ன
வேபைம்பொன் வெஃகி நொந்தேன்
அழல்வாட்டு மென்மெழு காகாமுன்
ஆண்டருள் அங்கையில்வேய்ங்
குழல் கேட்கும் மால்மிக்கு ளாய்வீரை
மேவும் குணக்கொண்டலே.

அங்கையில் வேய் குழல் கேட்கும் மால் மிக்குளாய் வீரை மேவும் குணக் கொண்டலே—அழகிய கையில் புல்லாங்குழலை மிக்க விருப்பமுடன் இசைப்பவரே! வீரகேரளம்புதூரில் விரும்பி வாழும் பெருங்குணமுடைய மேக வண்ண முடையவரே!

கழல் வேட்டு உன் மெய்ப்புகழே பகராது—(அழியாப் பேரின்ப வீட்டை நல்கும் உம்முடைய) திருவடிகளை வேண்டி உம்முடைய திருப்புகழை ஓதாமல்

அருங் கானத்தில் விழல் வாய்ப்ப நீர் இறைப்பர் என்னவே பைம்பொன் வெஃகி நொந்தேன்—அருமையான குறிஞ்சி நிலத்தில் புன்மையான புற்கள் வளரும்படியாகத் தண்ணீரை இறைத்துக் கொட்டுபவர்களைப் போலவே (அடியேனும்) பசும் பொன் போன்ற செல்வத்தையே விரும்பியிருந்து (இதுகாறும்) துன்பப்பட்டேன்

அழல் வாட்டும் மென் மெழுகு ஆகா முன் ஆண்டு அருள்—(அடியேன்) தீயினால் உருகும் மெழுகாய்க் கரைந்து அழியும் முன்பாக வந்து ஆட்கொள்வீராக!

குறிப்புரை

இவ்வுலக வாழ்க்கையின் இழிவினை எடுத்துக்கூறி, அம்மாயையில் அழியாதவாறு உடனே வந்து ஆட்கொள்ளுமாறு கண்ணபிரானிடம் வேண்டுகிறார் ஆசிரியர்.

கழல்—திருவடி. வேட்டல்—விரும்பல். விழல்—புல். வெஃகி—மிக விரும்பி. மால்—வேட்கை.

'குன்றனைய குற்றஞ் செயினும் குணங்கொள்ளும்' (இயற்பா. முதற்றிருவந்தாதி. 41) தன்மையுடையவராதலால் 'குணக்கொண்டல்' என்றே கண்ணபிரானை இங்கு ஏத்துகின்றார்.

"வண்ணமால் வரையே குடையாக
மாரிகாத் தவனே மதுசூதா.
கண்ணனே கரிகோள் விடுத்தானே
காரணா களிறட் டபிரானே.
எண்ணுவா ரிடரைக் களைவானே.
ஏத்தரும் பெருங்கீர்த் தியினானே,
நண்ணிநா னுன்னை நாடொறு மேத்தும்
நன்மையே யருள்செய் யெம்பிரானே."
(பெரியா. திரு. 5-1-9)

என ஆழ்வார் வேண்டுவது போன்றே இவரும் 'வள் நல் கழலினை வேட்டு மெய்ப்புகழே பாட விழைகின்றார். இவ்வாறு

பாடாது கழிந்த நாட்களையும் பொருளாசை கொண்டு திளைத்த நாள்களையும் 'விழலுக்கிறைத்த நீருக்கு' வொப்புமை யாக்குகின்றார்.

உலக இன்பங்களுக்காக அலைந்துருகிப்போவதை 'அழல்வாட்டு மென்மெழுகு' போன்றதென விளங்குகின்றார்.

இது, நிரையசை முதலாக வந்த **கட்டளைக்கலித்துறை.**

## கலி விருத்தம்

54. **குணங்கும் மாதர்தம் குயத்து மால்கொளும்**
**சுணங்கல் போலுமென் தொழும்பும் கொள்வையோ?**
**அணங்கு மாய்அமு தளித்து வானவர்**
**கணங்கொள் வாய்திரு வீரையிற் கண்ணனே.**

அணங்குமாய் அமுது அளித்து வானவர் கணம்கொள் வாய் திருவீரையில் கண்ணனே—மோகினியாக வந்து தேவர் களுக்கு அமுது அளித்து. செல்வச் சிறப்பு மிக்க வீரகேரளம் புதூரில் வாழும் கண்ணபிரானே!

குணங்கும் மாதர் தம் குயத்து மால் கொளும்—(வயது செல்லச் செல்ல இயற்கையில்) வளைந்து மெலிந்து வற்றிப் போகும் பெண்களுடைய நகில்கள் மீது விருப்பம் கொள்கின்ற

சுணங்கல் போலும் என் தொழும்பும் கொள்வையோ—மெலிந்த வனாகிய அடியேனுடைய அடிமைப்பணியையும் (உம் திருவுள்ளத்தில்) ஏற்று அருள்வீர்களோ? கூறுவீராக.

### குறிப்புரை

பெண் இன்பமே பேரின்பமாகக் கருதி அவர்கள் உடலழகில் மயங்கி ஆட்பட்டு அல்லலுறும் தன்மையை இங்கே எடுத்துரைக் கின்றார். இளமாதர்தம் நகில்களின் எதிர்கால மாற்றத்தை உணராது இச்சை கொள்ளும் இழிநிலையையும் புலப்படுத்து கின்றார்.

'மாதரார் கயல்கணென்னும் வலையுள் பட்டழுந்து வேனை, போதரே [illegible] ால்லிப் புந்தியில் புகுந்து தன்பால் ஆதரம் பெருக [illegible] கன்' (திருமா. 11) எனத் தொண்டரடிப் பொடியாழ்வார அருளிச்செய்தபடியே இவரும்

பெண்மாயையில் உழல்கின்ற தன்னை ஆட்கொள்ளக் கண்ணபிரானை வேண்டுகின்றார்.

'வாரார்மென் முலைமாதர் மயல்கொண்டு தடுமாறும் அடியேன்' என்றும், 'குமுதத் தினையொத் தவிர்பொற் பிதழார் குயம்நத் திமிகக் குலையத் தகுமோ' என்றும் இவரே வேறிடத்தும் (சட. சத, 45, 84) குறிப்பிடக் காணலாம்.

குணங்கும்—வளையும். குயம்—நகில், முலை. சுணங்கல்—மெலிவு. தொழும்பு—அடிமைவேலை. அணங்கு—அழகு, மோகினி.

கண்ணனே — கண்ணோட்டம் உடையவனே என்பது குறிப்பு. நீலமணியும் நீலோற்பல மலரும் போன்ற வண்ண முடையோனின் தாமரைக் கண்களின் சிறப்பால் அவனுக்குக் கண்ணன் என்றே பெயரிட்டனர் என்பர்.

"மண்ணைக் கிளைக்குஞ் சுடர்நீலமும் வண்டு தேறல்
உண்ணக் கிளைக்கும் நறுநீலமும் ஒத்த கோல
வண்ணற்குத் தண்ணங் கமலத்தலர் போல்மலர்ந்த
கண்ணற்குக் **கண்ணனெ**வோர்பெயர் கட்டுரைத்தான்"
(பாக். 10-3-9)

எனக் கண்ணனின் பெயர்க் காரணம் கூறுவர். மேலும், மற்றை யுகந்தொறும், வெண்மை நிறத்தையும் செம்மை நிறத்தையும் கொண்ட திருமால், கலியுகத்தில் பார்ப்பவர் கண்களைக் கவர்கின்ற கருமை நிறத்தை அடைந்து கண்ணன் என்றே பெயர் கொண்டார் என்பர்.

"பொருவில் வெண்மையுஞ் செம்மையும் பொன்மையும்
மரபி னுற்றனன் மற்றை யுகந்தொறும்
விரவ லுற்ற கலியில் விழிகவர்
கருமை யெய்துபு **கண்ணனென் றாயினன்**".
(பாக. 10-3-10)

என்பது பாடல்.

'காரொக்கு மேனிக் கரும்பெருங் கண்ணனே' என்றே அழைப்பர் பெரியாழ்வாரும் (பெரியா. திரு. 1-8-6)

"மாதரார் கண்க ளூடே வாவுமான் தேரிற் செல்வான்
யாதினு முயர்ந்தோர் தன்னை யாவர்க்குங் **கண்ணனென்றே**
ஓதிய பெயர்க்குத் தானே யுறுபொரு ளுணர்த்திவிட்டான்"
(கம்ப. உலாவியற். 6)

எனக் கம்பர் கூறும் நயமும் இவண் ஒப்புநோக்கத்தக்கது.

இது, முதலும் மூன்றாம் சீரும் மாச்சீர்களும் இரண்டும் நான்காம் சீரும் விளச்சீர்களுமாகி வந்த **கலிவிருத்தம்.**

## கட்டளைக் கலிப்பா

55. **கண்ண னைக்கரு ணைக்கட லேநிகர்**
காகுத் தன்தனைக் காசைமென் பூந்துணர்
வண்ண னைத்தனி வீரையில் மேவிய
மாய னைத்தினம் வாழ்த்தெடுக் கின்றவர்
எண்ண முற்றுப் பெறாதெனச் சொல்லன்மின்
ஏழை மானிடர் காள் ஒரு பாடலால்
அண்ண லம்திருக் கச்சியிற் செய்தபே
ராடல் பாரில் அனேகர் சொல் வார்களே.

ஏழை மானிடர்காள்—அறியாமையை உடைய மாந்தர்களே!

கண்ணனை, கருணைக் கடலே நிகர் காகுத்தன் தன்னை—கண்ணபெருமானை, கருணைக் கடல் போன்ற இராமனை

**காசை மென் பூந்துணர் வண்ணனை, தனி வீரையில் மேவிய மாயனை** — காயாமலர்ப்பூங்கொத்து போன்ற நீலவண்ணரை, சிறப்பு மிக்க வீரைபூரினில் விரும்பி வாழும் மாயோனை

தினம் வாழ்த்தெடுக்கின்றவர் எண்ணம் முற்றுப் பெறாதெனச் சொல்லன்மின் -நாள்தோறும் துதித்துப் போற்றி செய்பவர் எண்ணங்கள் நிறைவேறாது எனக் கூறாதீர்

ஒரு பாடலால் அண்ணலம் திருக்கச்சியில் செய்த பேராடல் பாரில் அனேகர் சொல்வார்களே—திருமழிசையாழ்வாரின் 'கணிகண்ணன் போகின்றான்' என்னும் ஒரு வெண்பாவால் காஞ்சி நகர் சொன்னவண்ணம் செய்த பெருமானை திருவிளையாடலைப் பற்றிக் கூறுவார்களே, (அவற்றை யெல்லாம் கேட்டறிந்தாலும் உம்முடைய இழிகுணத்தை விட்டொழிப்பீராக.)

## குறிப்புரை

தசரத மைந்தனாகத் தோன்றிய இராமன் கருணையால் சிறப்புற்றவன். கருணைக்கடல் என்றே இக்காகுத்தனை அழைப்பர். நீர் நிறைந்த கடல் போலக் கருணை நிறைந்தவர் என்பதனால் 'கருணை வாருதி' (திருவ. கலம். 97) என்பார் பிறரும். 'பூந்துழா யலங்கல் மாலை அருட்கடல்' என்பது பாகவதம் (10-1-44).

காசை—காயாமலர். பூந்துணர்—பூங்கொத்து. கண்ண பிரான் காயாம் பூப்போன்ற நிறத்தவர் என்பர். காயாவின் இதழ் விரிந்த மலரைப் போன்று விளங்கும் கார்வண்ணத் திருமேனியை உடையோரே என்றே (பூவை விரிமலர் புரையும் மேனியை (பரி. 1—7) எனவும், பறவாப் பூவைப் பூவி னோயே' (பரி.3—73) எனவும் பரிபாடல் அழைக்கும்.

'காயாமலர் நிறவா' (பெரியா.திரு. 1-5-6) எனவும், 'காயாம் பூ வண்ணங் கொண்டாய்' (பெரியா.திரு. 3-3-6) எனவும் அழைப்பர் பெரியாழ்வார்.

'பூவைப் புதுமா மலர்போ லெழில்பூத்த தோன்றல்' (10-3-6) என்றும், 'பறவாப் பூவை வண்ணத்தன்' (10-6-7) என்றும் பாகவதம் கூறும்.

'பூவைப் பூவண்ணா' (திருப். 23) என்றே ஆண்டாளும் அழைப்பர்.

'இணர்கொள் காயாம்பூ வண்ணன்' (திருவ. கலம். 20) என்பார் பிள்ளைப்பெருமாளையங்காரும். இணர்கொள் என்பதும் கொத்தாக மலர்ந்த என்ற பொருளிலேயே கூறப் பெற்றமை காண்க.

கண்ணன் மாயச் செயல்களையுடையவன் ஆதலால் மாயன் என்றார்.

மாயன் (1-9-6), மாயக்கூத்தன் (8-5-1), மாயப்பிரான் (8-6-4), மாய மயக்கு மயக்கான் (8-7-4) எனத் திருவாய்மொழி யிலும் விளக்கக் காணலாம்.

அண்ணல் என்பது முல்லைநிலத் தலைவனின் பெயர். பகை வரை வென்ற திறலுடையோன் என்ற பொருளில் 'செருவேம்

பட்ட செயிர்தீர் அண்ணல்' (1-29) எனப் பரிபாடல் கூறும். இத்தகைய காவலனான கண்ணன் ஏவலனாகவும் திகழ்வதையும் பரிபாடல் விளக்கும். 'நின் ஆர்வலர் தொழுதகை அமைதியின் அமர்ந்தோயும் நீயே; அவரவர் ஏவ லாளனும் நீயே; (4-70-72) எனத் தொண்டர்க்கு ஏவலாளன் ஆகின்ற நிலையை உரைத்துப் போற்றுவர்.

'வந்தனம் செய்பவர் குற்றேவலும் செய்யும் மாயன்' (திருமக. 54) என இந்நூலாசிரியரே பிறிதொரு நூலிலும் உரைப்பர்.

இது, முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான் வந்தது அரையடியாகவும் அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும் அவ்வடி நான்கு கொண்டு, நேரசை முதலில் வருதலால் அரையடிக்கு ஒற்றொழித்துப் பதினோரெழுத்துப் பெற்று வந்த **கட்டளைக்கலிப்பா**.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

56. களங்கமற்ற மெய்ஞ்ஞானக் கண்ணீந் தாளும்
கண்ணனைத்தென் வீரைநகர்க் கண்ணே கண்டு
விளங்கனியிற் கன்றெறிந்த தாதி யான
விளையாடல் களைத்தமிழால் விளம்பப் பெற்றேன்
அளங்கருதிப் பானையினை வியந்து பேசா
தனவாய பொருளைவிளித்து அகம்ஓல் காமல்
இளங்கவிஞர் மதிப்பதெண்ணிப் புலம்ப மாட்டேன்
யானடைந்த அநுபூதிக்கு எண் இன் றாமே.

களங்கம் அற்ற மெய்ஞ்ஞானக்கண் ஈந்து ஆளும் கண்ணனை—குற்றமில்லாத மெய்ஞ்ஞானவுணர்வு நல்கி (அடியேனை) ஆட்டுவிக்கின்ற கண்ணபெருமானை

தென்வீரை நகர்க் கண்ணே கண்டு—தென்திருப்பதியாம் வீரகேரளம்புதூரிலே தரிசித்து

விளங்கனியில் கன்று எறிந்தது ஆதியான விளையாடல்களைத் தமிழால் விளம்பப் பெற்றேன்—கண்ணன் விளவெறிந்தது முதலான பேராடல்களை (திவ்வியப் பிரபந்தப் பாசுரங் களாகிய ஆழ்வார்களின்) தமிழ்ப் பாடல்களால் சொல்லக் கேட்டு அடியேனும் பாடினேன்

அளம் கருதி பாணையினை வியந்து பேசாது—(கண்ணனின் பேராடல்களின்) பெருக்கம் காரணமாக (ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என) முழுவதையும் விளக்கிச் சொல்லாது

அனவாய பொருளை விளித்து அகம் ஒல்காமல்—அத்தகைய உட்பொருள்களை மட்டுமே கூறி, மனம் தளராமல்

இளம் கவிஞர் மதிப்பது எண்ணிப் புலம்ப மாட்டேன்—சிறு புலவர்கள் (அடியேனை) பாராட்ட வேண்டுமென்பதற்காக வீணாகப் பாடமாட்டேன்

யான் அடைந்த அநுபூதிக்கு எண் இன்று ஆமே—(கண்ணால்) ஆட்கொள்ளப் பெற்று) அடியேன் பெற்ற பேரின்பத்திற்கு (தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாதது மான பேரின்பத்திற்கு) அளவே கிடையாது.

## குறிப்புரை

அநுபூதி என்பது தானே கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல இயலாததுமான அறிவு ஆகும். இதற்குப் பொருள் களிடத்தே தெளிவு தேவை. இத்தெளிவினைப் பெற்றவர் இந் நூலாசிரியர். நம்மாழ்வார் போன்ற ஆழ்வாரின் பாசுரங்களால் கண்ணபிரானின் அருளிச் செயல்களை யெல்லாம் முழுதுணர்ந் தவர் இவர். தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்னும் பெருநோக்கில் தம் இறையனுபவங்களைப் பாடல் களாக மொழிந்தவர். பயன் கருதாப் பண்பாளர் என்பதை இப்பாடல் விளக்கும்.

களங்கம்—குற்றம். மெய்ஞானக்கண்—நேரில் அறியக் கூடாதவற்றையும் அறியத்தகு மறிவு. நகர்க்கண்—நகரிடத்து. அளம்—பெருக்கம். அனவாய—ஒப்பான. அகம்—மனம், ஒல்காமல்—தளராமல். எண்—அளவு, இலக்கம்.

இது, முதல், இரண்டு, ஐந்து, ஆறாம் சீர்கள் காய்ச்சீர் களும் மற்றைய நான்கும் மாச்சீர்களுமான **எண்சீராசிரிய விருத்தம்.**

## பதின்சீர் வண்ண விருத்தம்

(தந்தனந் தான தானன தந்தனந் தான தானன
தந்தனந் தான தானன தானனா)

57. இன்றுடன் போன நாள்களும் வந்திடுந்
தேதி யோடுசொல்
என்றும்நின் பாரம் நானென நாடும்நீர்
ஒன்றுதந் தாய்பொ லார்உதி ரந்திரண் டாழிதோயஒ
ருங்கடுந் தீரா! வீரமும் ஈவதேன்?
நன்றுபண்பி யாவும் நீதரல் என்கைவம் போதென்வீரையில்
நந்துதண் டாழி வாள்சிலை யோடுளாய்!
மன்றுள்நின் றாடி னான்அயன் இந்திரன் தேவர் மானிடர்
மண்கலுழ்ந் தான்எ னாநிகழ் மாயனே!

இன்றுடன் போன நாள்களும் வந்திடும் தேதி யோடுசொல்—(அடியேன் பலவாறு போற்றிப் பாடியும்) இந்நாள் வரையும் இனி வரப்போகும் நாள்களையும் கூட்டியுரைப்பீராக

என்றும் நின் பாரம் நான் என நாடும் நீர் ஒன்று தந்தாய்—எக்காலத்தும் உன்னுடைய துன்பச் சுமைகளை யெல்லாம் நானே சுமப்பேன் என்று அடியேனை நாடி வந்த நீவீர் எல்லாம் ஒன்று என அருளினீர்கள்

பொலார் உதிரம் திரண்டு ஆழி தோய ஒருங்கு அடும் தீரா—தீக்குணமுடைய அசுராதிகள் (முற்றிலும் அழிந்ததால் அவர்களுடைய) இரத்த ஆறு பெருகி கடலைச் சென்றடையுமாறு போரிட்டழிக்கும் வெற்றிச் செல்வரே!

வீரமும் ஈவது ஏன்—(அடியேனுக்கு) வலிமையை அளிப்பது எதற்காகவோ?

நன்று பண்பு யாவும் நீ தரல் என்கை வம்போ—நல்லவை எல்லா வற்றையும் நீரே அருளுகிறீர் எனக் கூறுதல் பொய்யோ

தென் வீரையில் நந்து தண்டு ஆழி வாள் சிலையோடு உள்ளாய்—வீரகேரளம்புதூரில் சங்கு, தண்டம், சக்கரம், வாள், வில் என்னும் பஞ்சாயுதபாணியாய் விளங்கு கின்றவரே!

மன்றுள் நின்று ஆடினான் அயன் இந்திரன் தேவர் மானிடர் மண்கலுழ்ந்தான் எனா நிகழ் மாயனே—சபைகள்தோறும்

காலைத் தூக்கி நின்று ஆடும் சிவபெருமான், பிரமன், தேவேந்திரன், தேவலோகத்தவர் மற்றும் மண்ணுலக மக்கள் எல்லாம் (நீவிர்) மண்ணுலகில் வந்து கலங்கி அழுதீர் என்று சொல்லும்படியாகக் கண்ணன் அவதார மாய் நின்ற மாயக் கண்ணபிரானே! (திருவாய் மலர்ந்தருளு வீராக.)

பாரம்—சுமை. பொலார்—பொல்லாதவர். உதிரம்—இரத்தம். ஆழி—கடல். நந்து—சங்கு. தண்டு—தண்டாயுதம். ஆழி—சக்கரம். சிலை—வில். மன்று—சபை. எனா—எண்ணிடைச்சொல்.

மாயோன்—மாயையையுடையவன்; மாயையாவது—கூடாததையுங் கூட்டுவிக்குந் திறம்; ஆச்சரியகரமான குணங்களையும் செயல்களையு முடையவனென்றுமாம்.

இது, ஒன்று மூன்று நான்கு ஆறு ஏழு ஒன்பது பத்தாம் சீர்கள் விளச்சீர்களும், இரண்டு ஐந்து எட்டாம் சீர்கள் மாச்சீர் களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **பதின்சீர் ஆசிரிய வண்ண விருத்தம்.** 'தந்தனந் தான தானன தந்தனந் தான தானன தந்தனந் தான தானன தானனா' என்பது **சந்தக்குழிப்பாம்.**

## இரங்கல்

### பதின்மூன்றுசீர் வண்ண விருத்தம்

(தான தந்தனந் தத்தன தனதன
தான தானனந் தத்தன தனதன
தான தானனந் தத்தன தனதன தத்தானா)

58. மாயன் ஆரணஞ் செப்புநர் பலர்வர
லான நாபியந் தக்கரி யவன்அடல்
வாணன் ஆண்மைகுன் றப்பொரு சிலைவலி யுற்றோனோர்
பாய வானவெங் கட்கடு அரவணை
ஓவி வீரையின் கட்குடி கொளும்அரி
பாலெ னாதுநெஞ் சத்துயர் முழுதும்உ ரைப்பாரார்?

> கார னான்முன்ஒஞ் சத்தகு தகையது
> நாரை மீன்அருந் தித்திரி பிழையது
> காமர் ஓதிமம் தத்தைஅ னவன்மகன் நட்டூர்ஆன்
>
> ஈர மீறிஅங் குற்றுள மகிழ்வன
> தோழி மார்மயங் கிப்புணர் பவர்அனை
> ஏகி டாள்சினந் தெட்டுணை யுரிமையும் விட்டாளே.

**மாயன் ஆரணம் செப்புநர் பலர் வரல் ஆன நாபி**—மாயவன், வேதத்தைச் சொல்பவர்கள் பல பேர் தோன்றுவதற்குக் காரணமான (பிரமனை உந்திக் கமலத்திலே தோற்றுவித்த) பத்மநாபன்

**அந்தக் கரியவன் அடல் வாணன் ஆண்மை குன்றப் பொருசிலை வலி உற்றோன்**—நீலமேகவண்ணன், போரிட வந்த வாணாசுரனின் ஆண்மை கெடும்படியாகச் சண்டையிட்ட வில்வலிமையுடையோன்

**ஓர் பாயல் ஆன வெம்கண் கடு அரவணை ஒவி**—வெம்மையான நஞ்சினையுடைய (ஆதிசேடன் என்னும்) பாம்பாகிய படுக்கையை விட்டு (எழுந்து வந்து)

**வீரையின் கண் குடி கொள்ளும் அரி பால்**—வீரகேளம்புதூர் கோயிலிலே வாசங் கொண்டிலங்கும் (என் தலைவனாகிய) திருமாலினிடத்தே

**எனது நெஞ்சத்துயர் முழுதும் உரைப்பார் யார்**—(தலைவனை விட்டுப் பிரிந்துழலும்) என்னுடைய உள்ளத்துத் துன்பத்தை யெல்லாம் சென்று சொல்லி வருவார் யார் இருக்கிறார்கள்? (யாரும் இல்லையே)

**கார் அனான் முன் ஒஞ்சத் தகு தகையது**—மேகமானது (என் தலைவனாகிய நீலமேகவண்ணனின் மேனி நிறத்தைக் கண்டு) அன்னவர் முன்னே செல்லவும் வெட்கப்படும் தன்மையுடையது

**நாரை மீன் அருந்தித் திரி பிழையது**—நாரையானது மீன்களை நீரில் பிடித்துத் தின்னும் குற்றமுடையது (என் தலைவன் மீன் அவதாரம் செய்தவன், நாரைக்கு அவனுருவம் மீன் போன்றே தோன்றும் ஆகையால் அதுவும் பொருந்தாது)

**காமர் ஓதிமம் தத்தை அனவன் மகன் நட்டு ஊர் ஆன் உற்று உளம் மகிழ்வன**—அழகிய அன்னமும் கிளியும் அத்தகைய

வரின் (என் தலைவனின்) மக்களாகிய பிரமனும் ஏறச் செலுத்தும் ஊர்திகள்; மேலும், வீரகேரளம்புதூரின் சோலையின் வனப்பைக் கண்டு அங்கேயே தங்கி நெஞ்சம் நிறைவன (ஆகையால் அவையும் பொருத்தமில்லை)

தோழிமார் மயங்கிப் புணர்பவர்—(என்னைச் சுற்றியிருக்கும் என்னுடைய) தோழிப் பெண்களோ (என் தலைவனைப் போன்ற ஆண்மை மிக்கவர்களைக் கண்டாலே) மயக்கம் கொண்டு அணையும் இயல்பினர் (எனவே அவர்களும் தூதாகச் செல்லத் தகுதியற்றவர்)

அனை ஏகிடாள் சினந்து என் துணை உரிமையும் விட்டாளே— அன்னையோ (நான் சொன்னாலும்) போகமாட்டாள். என்மீதும் கோபங்கொண்டு எள்ளளவுகூட அன்பில்லாத வளாக மாறிவிட்டாள்!

இது, தலைவனிடம் தூது அனுப்பத்தக்க தூதுப் பொருள் அமையாது வருந்தும் தலைவி இரங்கிக் கூறியதாகும்.

## குறிப்புரை

வீரையில் குடிகொள்ளும் என் தலைவரிடத்து மேகத்தைத் தூதனுப்பலாமென்று பார்த்தாலோ அது கார்மேக வண்ண னான கண்ணனாகிய என் தலைவர் முன்னே செல்ல நாணும்; நாரையை அனுப்பலாமென்றாலோ அது ஓடும் மீனைத் தின்னும் இயல்புடையது. மச்சாவதாரமெடுத்த என் தலைவ ரைப் பார்த்தால் அதற்கு மீனாகவே தோன்றும். அதனால் அதுவும் எனக்கு இணங்கி வராது; அன்னப்பறவையும் கிளியும் தூது சென்றால், என் தலைவன் வாழும் வீரகேரளம்புதூரின் இயற்கை எழிலில் மயங்கி அங்கேயே தங்கிவிடுமாகையால் அவையும் பொருந்தா; இன்ப துன்பங்களில் எனக்குத் துணையா யிருந்து உதவுகின்ற தோழியர்களைத் தூதனுப்பலாமென்று பார்த்தாலோ அவர்கள் என்னோடொத்த பருவமுடைய இளமகளிராதலால், அத்தலைவரழகில் ஈடுபட்டு ஆழ்ந்திடுவாரே யன்றி என் காதலை அவரிடம் சொல்லி மறுமொழி கொண்டு மீண்டு வரமாட்டார்கள்; என் அன்னையோ சொன்னாலும் செல்ல மாட்டாள். நான் எதைத்தான் தூது அனுப்புவேனோ! என அரற்றுகிறாள் தலைவி.

ஆரணம்—வேதம். அடல்வாணன்—போர் செயும் அசுரன். சிலை—வில். பாயல்—படுக்கை. வெங்கடு—வெம்மையான நஞ்சு. அரவணை—ஆதிசேடன். ஒவி—ஒழித்து. கார்—மேகம். அனான்—அன்னவன், தலைவன், ஒஞ்சுதல்—வெட்கப்படுதல். தகை—குணம். காமர்—அழகு. ஓதிமம்—அன்னம். தத்தை—கிளி. அனவன்—அன்னவன். அனை—அன்னை (விகாரம்). உரிமை—ஆசை. ஈற்றேகாரம். இரக்கக்குறிப்பு.

இது, ஒன்று ஐந்து ஒன்பதாம் சீர்கள் மாச்சீர்களும், ஈற்றுச் சீர் காய்ச்சீரும் மற்றைய ஒன்பது சீர்கள் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட **பதின்மூன்றுசீர் வண்ண விருத்தம்.** 'தான தானனந் தத்தன தனதன தான தானனந் தத்தன தனதன தான தானனந் தத்தன தனதன தத்தானா' என்பது **சந்தக்குழிப்பாம்.**

## சவலை வெண்பா

**59. ஆளாவார் சென்னி அணிபூ வனையதிருத்**
**தாளா!நம் வீரைநகர்த் தாடாளா!**
**தேளாம் மிடியொழித்துச் சித்தியெட்டும் நல்கியென்றும்**
**மீளாக் கதியில் விடு.**

ஆளாவார் சென்னி அணி பூ அனைய திருத்தாளா—தேவரீருக்கு அடியாரான பாகவதர்கள் தலையில் சூடும் தாமரை போன்ற திருவடிகளை உடையவரே!

நம் வீரைநகர்த் தாடாளா—எங்கள் வீரகேரளம்புதூரில் வாழுபவரே!

தேள்ஆம் மிடி ஒழித்து சித்தி எட்டும் நல்கி என்றும் மீளாக் கதியில் விடு—தேள் போன்று துன்பத்தைத் தரும் என் வறுமையை நீக்கி அட்டமாசித்தி என்பனவற்றை யெல்லாம் தந்து, எப்பொழுதும் நீங்காத பேரின்பவீட்டை அருளுவீராக!

### குறிப்புரை

வறுமையும் பிணியும் மூப்பும் தரும் இவ்வுலக வாழ்க்கைத் துன்பங்களிலிருந்து விடுபடுமாறு செய்து, மெய்யறிவு நல்கி, மோட்சமாகிய பரமகதியை அருளுமாறு வேண்டுகிறார்.

மிடி—வறுமை, சித்திஎட்டு—எண்வகை சித்திகள். அவை, அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராசத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம். இவற்றுள், ஆன்மாப் போலாதல் அணிமா. மகத்துவமாதலே மகிமா. தன்னுடல் கண்டிப்பின்றாய்க் கண்டிப்புள்ளவற்றையுருவ வல்லவனாதல் கரிமா. இலகுத்துவமாதலே இலகிமா. வேண்டுவன வடைதலே பிராசத்தி. நிறையுளனாதலே பிரகாமியம். ஆட்சியுளனாதலே ஈசத்துவம். எல்லாந் தன்வசமாக்க வல்லனாதலே வசித்துவம் யோகசித்தர்குரிய இந்த சித்தி எட்டால் (பிறப்பிறப்பற்ற) மோட்சகதி அடையலாம் என்பர்.

இது, முதலாமடியும் மூன்றாமடியும் மட்டும் நாற்சீராய், ஏனைய இருவடிகள் முச்சீராய், தனிச்சொல்லின்றி, ஒரு விகற்பத்தான் வந்து, மலர் என்னும் வாய்பாட்டால் முடிந்த **சவலை வெண்பா**.

## தழை

தலைவன் கையுறையாகத் தருகின்ற தழையாடையைப் பற்றிய செய்யுள். கையுறை ஏற்கப் பாங்கியைத் தலைவன் வேண்டல், பாங்கி தலைவியை வேண்டல் அல்லது தலைவி கையுறை ஏற்றமை, பாங்கி தலைவர்க்குரைத்தல் ஆகிய துறைகளில் இச் செய்யுள் அமையும். தழை—மலர்களை யிடையிட்டுத் தளிர்களாற் செய்வதோர் உடை. இங்ஙனந் தொடுத்த தழையை ஆடையாக உடுத்துக் கொள்ளுதல் குறிஞ்சி நிலத்து மகளிரியல்பு.

### கட்டளைக் கலித்துறை

60. **விடுக்கும் தழையன்றி மாலையொன் றீயும்பொய்**
**வேட்கையன்அன்று**
**எடுக்கும்குன் றாற்பசுக் காத்தான்தென் வீரை யிடத்தினிது**
**கொடுக்கும் துழாயலங் கற்சீர் இரண்டும் குலாவுவதால்**
**படுக்கும் கொடுமை யலார்க்கரு ளோலைப் பாதியன்றே.**

விடுக்கும் தழை அன்றி மாலை ஒன்று ஈயும் பொய் வேட்கையன் அன்று— (உம்முடைய தலைவர்) கையுறையாகத் தந்தனுப்பியுள்ள இத்தழை மட்டுமல்லாமல் மாலை ஒன்றையும்

அளித்துள்ளார் என்பதால் அவர் விருப்பத்தில் ஐயங் கொள்ளாதே. அவர் பொய் வேடதாரி அல்லர்

அன்று எடுக்கும் குன்றால் பசுக்காத்தான்—கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து ஆயர்பாடியிலுள்ள பசுக்கூட்டங்களையெல்லாம் காப்பாற்றியவர் அவர்

தென் வீரை இடத்து இனிது கொடுக்கும் துழாய் அலங்கல் சீர் இரண்டும் குலாவுவதால் படுக்கும் கொடுமை—வீரைநகரில் மகிழ்ந்து கொடுத்த இத் திருத்துழாய் மாலையில் தளிராகிய தழை என்பதும் உண்டு, அதுவே பூமாலையாக ஆவதும் உண்டு. இவ்விரண்டு சிறப்புகளை உடையதாகை யால் இதைப் பெற்றவர் துன்பங்கள் எல்லாம் தீரும்

அயலார்க்கு அருள் ஓகை பப்பாதி அன்றே—(தீமை புரியும் கொடுஞ்செயல் புரிபவர் அல்லாத) நல்லோருக்கெல்லாம் அவர் அருளும் உவகை பாதிபாதி என்று தவறாக எண்ணாதே. (அவர் அருள் முழுமையானதே) இதை ஏற்றுக் கொள்வாயாக.

## குறிப்புரை

இத்துறை, தலைமகளைக் குறை நயப்பித்துச் சேட்படை கூறத் துணிந்து நின்ற தோழியிடத்தில் தலைமகன் தழை கொண்டு சென்று 'இத்தழை வாங்கிக்கொண்டு என்குறை முடித் தருளுவீராம்' என்று வேண்ட, அதனை அருமையாக ஏற்றுக் கொண்ட தோழி, தலைமகளிடஞ் சென்று, அவள் குறிப்பறிந்து 'இத்தழை நமக்கு எளியதொன்றன்று; இதனை ஏற்றுக் கொள்வாயாக' எனத் தலைமகளைத் தழை ஏற்பித்தது.

அலங்கல்—தளிர், பூமாலை. ஓகை—உவகை என்பதன் மரூஉ. பப்பாதி—பாதிபாதி.

இது, நிரையசை முதலாக வந்த கட்டளைக் கலித்துறை.

## இதுவுமது

### பன்னிருசீர்த் தாழிசை

61. பாதிக் கலைவாண் மதிநுதற்பொற்
பாவை யனையீர் எனதுமகள்
பலவா மகளிர் விளையாட்டிற்
பழகும் வீரைப் பதிமாலை

வீதிக் கருடன் மிசைகண்டே
மெலிந்து பலகோ ரணிசெய்து
வீழ்ந்தே கிடந்தாள் அன்றொருநல்
விறலி கொணர்ந்த விரைத்துளவால்

சோதிக் கமல முகமலர்ந்து
சொற்சோர் வின்றி ஆன்பாலும்
சோறும் அருந்தி வளைகலன்பொற்
சுண்ணம் களபம் தொடுத்தணிந்து

மாதிக் கறிய இன்றென்பால்
வருவான் கலக்கள னச்செருக்கி
மலரால் அரங்கும் அலங்கரித்து
வளஞ்சேர் துதிசொற் றிருந்தாளே.

*பாதிக் கலை வாள் மதி நுதல் பொற்பாவை அனையீர்*—பிறைச்சந்திரனைப் போலவும் ஒளிவீசுவதுமான நெற்றியையுடைய தங்கப்பதுமையைப் போன்ற பெண்களே!

*எனது மகள் பல ஆம் மகளிர் விளையாட்டில் பழகும் வீரைப்பதி மாலை*—என்னுடைய பெண்ணானவள் (அன்று ஆயர்பாடியில்) எண்ணற்ற கோபியர்கள் இடையே பற்பல ஆடல்களில் மூழ்கித் திளைத்த வீரகேரளம்புதூர்த் தலைவரான திருமாலானவர்

*வீதிக் கருடன் மிசை கண்டே மெலிந்து பல கோரணி செய்து வீழ்ந்தே கிடந்தாள்*—தெருவில் கருடப்பறவை மீது அமர்ந்து வந்ததைப் (கருட சேவையினை) பார்த்து (அவர் மீது காதல் கொண்டு) உடல் மெலிவுற்று, சொல்லுதற்கரிய பலவித நோய்கள் பெற்று (பேச்சு மூச்சின்றி) தரையில் படுத்திருந்தாள்

அன்று ஒரு நல் விறலி கொணர்ந்த விரைத்துளவால் சோதிக் கமலமுகம் மலர்ந்து—அத்தகைய ஒருநாளில் இளம்பருவத் தோழி ஒருத்தி (தலைவரிடத்திருந்து) கொண்டு வந்த நறுமணம் கமழும் திருத்துழாயால் (அவள் மயக்கம் தீரும் படியாக) அவள் நிலையை ஆராய்ந்தபொழுது (அதுவரையில் சோர்ந்து காணப்பட்ட அவள்) அத்துழாயால் ஒளி வீசும் தாமரை மலர் போன்று முகமலர்ச்சி யுண்டாகி

சொல் சோர்வு இன்றி ஆன் பாலும் சோறும் அருந்தி—(ஆனந்த மேலீட்டினால்) வாயில் படபடவென சொற்கள் தடுமாற்றமின்றி வெளிவரவும், பசுவின் பாலும் சோறும் உண்டு

வளை கலன் பொற்சுண்ணம் களபம் தொடுத்து அணிந்து—கையில் வளையல்களையும் உடல் முழுவதும் ஆடை அணிகலன்களையும் பொற்சுண்ணமும் நறுமணமிக்க சாந்தினையும் மிகப் பலவாக அணிந்து கொண்டு

மா திக்கு அறிய இன்று என்பால் வருவான் கலக்க எனச் செருக்கி—(அழகும் சிறப்பும் பொருந்திய) தாயே! எல்லாத் திசையிலுள்ளவர்களும் அறியும்படியாக (என் இறைவர்) இன்றையதினம் என்னிடம் வருவார், வந்து என்னை அணைப்பார் என்று மிக்க களிப்புடன்

மலரால் அரங்கும் அலங்கரித்து வளம்சேர் துதி சொற்றிருந்தாளே—பூக்களால் சபையைச் சிங்காரித்த வண்ணம், (நலம் தருகின்ற நாராயணா என்னும்படியான) பல போற்றிப் பாசுரங்களை அவள் வாயில் சொல்லிக் கொண்டேயிருந்தாள் (என்னே அவள் மகிழ்ச்சி!)

**குறிப்புரை**

தலைவனின் தழையைப் பெற்ற தலைவி பிரிவுத்துயரம் நீங்கி இன்பக்கடலில் மூழ்கி, தலைவன் இன்றே வருவான் என மகிழ்ந்திருந்ததைக் கண்ணுற்ற நற்றாயின் கூற்று இது.

மதி—சந்திரன். வாணுதல்—பெண். பொற்பதுமை—தங்கப்பதுமை. கோரணி—கோளாறு. விறலி—பதினாறு வயதுப் பெண், பாடன் மகடூ, தலைவியின் இளம்பருவத் தோழி. துளவு—துழாய். ஆன்பால்—ஆவின்பால். களபம்—கலவைச்

சாந்து. செருக்கி—அகங்கரித்தலோடு களித்து. அரங்கு—சபை. துதி—தோத்திரம், போற்றிப் பாடல். சொற்றல்—சொல்லல்.

இது, பன்னிருசீர்த் தாழிசை.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

62. இருந்தமிழ்ச்சொல் மழைபொழியும் புலவீர்! செஞ்சொல்
ஏற்றமெல்லாம் மருதனைப்போல் இனிது தேறும்
அருந்தகைய மன்னர்களே! வயிரம் குன்றா
அன்பர்காள்! வீரையின்மால் அடியார் பாதம்
தருந்தரும வடிவான துகளைச் சென்னி
தாங்கியபின் என்மனத்திற் றானாத் தோன்றும்
பெருந்தனத்துப் பனுவல்கள் எத்தனையோ சற்றே
பேசுகின்றேன் இதுபகர்தல் பெருமைக் கன்றே.

*இருந்தமிழ்ச்சொல் மழை பொழியும் புலவீர்*—(பல்லாயிரம் ஆண்டுகளாகியும் இன்னும் இளமையோடு இருக்கும்) சிறந்த தமிழ் மொழியால் எண்ணற்ற பாசுரங்களைப் பாடும் புலமையுடையோரே!

*செஞ்சொல் ஏற்றம் எல்லாம் மருதனைப் போல் இனிது தேறும்*—(நீவிர் சொல்லும்) செம்மை மொழியின் பெருமை யனைத்தும் மருதப்பனைப் போன்றே ஏற்றம் பல பெறும்

*அருந்தகைய மன்னர்களே வயிரம் குன்றா அன்பர்காள்*—நற்குணமும் பெருமையும் மேன்மையும் மிக்க அரசர் பெருமக்களே! வலிமை மிகப் பெற்ற அன்புடையவர்களே!

*வீரையின் மால் அடியார் பாதம் தரும் தரும வடிவான துகளைச் சென்னி தாங்கிய பின்*—வீரகேரளம்புதூரில் கோயில் கொண்டுள்ள கண்ணபெருமானின் தொண்டர்தம் காலடிகள் அளிக்கும் அறத்தின் சின்னமான துகள்களை (அடியேனுடைய) தலையில் அணிந்த பின்பு

*என் மனத்தில் தானாத் தோன்றும் பெருந்தனத்துப் பனுவல்கள் எத்தனையோ*—அடியேனுடைய உள்ளத்தில் இயல்பாக உண்டாகும் சிறப்புடைய பாடல்கள் கணக்கற்றன

சற்றே பேசுகின்றேன் இது பகர்தல் பெருமைக்கு அன்றே— (அப்பனுவல்களில்) சிலவற்றை மட்டுமே இப்பொழுது பாடுகின்றேன். இவ்வாறு பாடுவது அடியேன் புலமைச் சிறப்பைக் காட்டுவதற்காக அல்ல என்பதை அறிவீராக. (எம்பெருமானின் திருப்புகழைப் பரப்பவே அடியேன் பாடுகிறேன்.)

## குறிப்புரை

'அரும்பிக் கண்ணீர் சோர்ந்து அன்பு கூறும் அடியவர்கட் காரமுத மானான்' (பெரிய திரு. 2-10-4) எனத் திருமங்கையாழ்வார் மொழிவதற்கேற்ப அடியவர்க்கருளும் அமுதமய்மான கண்ணபிரானின் தொண்டருக்கும் தொண்டனாக இருக்கவே விழைகின்றார் இந்நூலாசிரியர். இத்தகு மனநலங்கொண்ட ஓராழ்வார் 'தொண்டரடிப்பொடி' என்றே அழைக்கப் பெறுவதும் இவண் எண்ணல் தகும். திருமால் தொண்டர்தம் பாதத் தூளிகளைத் தலைமேல் தாங்கியதாலும், திவ்வியப்பிரபந்த சாரங்களை யெல்லாம் செவியினால் சுவைத்துணர்ந்ததாலும் மனத்தில் தானாகவே பனுவல்கள் தோன்றுகின்றன என்பது இவர்தம் அனுபவ உண்மை. இப்பனுவல்களை ஏதோ பெருமைக்காகப் (சைவ வேடம் கொண்டவர் திருமாலைப் பாடுகிறார் எனப் பெருமைக்காகப்) பாடவில்லை என்பதும் இங்கே வலியுறுத்தப்பெறுகிறது.

இது, முதல், இரண்டு, ஐந்து, ஆறாம் சீர்கள் காய்ச்சீர்களும், மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீர்கள் மாச்சீர்களுமாகிய **எண்சீராசிரிய விருத்தம்.**

### எழுசீர் வண்ண விருத்தம்

(தத்தன தானன தத்தன தானன
தத்தன தானன தத்தனா)

63. மைக்கன மேனிகர் கிட்டிணன் வானவர்
மட்குமுன் வாழ்வருள் பெட்பினான்
அக்கர மாவன எட்டுடை யான்அரு
மைத்திரு வாய்மொழி கற்றுளார்

பக்கம்வி டாதவி ருப்பினன் வீரையர்
பற்பல நாளும்வ ழுத்துகோ
செக்கரை நேர்சிவன் முற்சில ரேயுணர்
சித்துடை யானெனல் மெய்ச்சொலே.

மைக்கனமே நிகர் கிட்டிணன் வானவர் மட்கும் முன் வாழ்வு அருள் பெட்பினான்—(அடர்ந்த மை போன்ற)கருமேகமே போன்ற கண்ணபெருமானானவர் தேவர்கள் அழியும் முன்பாக அவர்களுக்கு அபயம் அருளிய பெருமைக் குரியவர்

அக்கரம் ஆவன எட்டு உடையான்—(ஓம் நாராயணாய நம என்னும்) திருமந்திரவெழுத்து எட்டின் வடிவாக இருப் பவர்

அருமைத் திருவாய்மொழி கற்று உளார் பக்கம் விடாத விருப்பினன்—(ஆழ்வார்களிற் சிறந்தோராகிய) நம்மாழ் வார் இயற்றியருளிய திருவாய்மொழியைப் படித்துணர்ந் தோர் அருகேயே தங்கியிருக்கும் ஆவலுடையவர்

வீரையர் பற்பல நாளும் வழுத்தும் கோ—வீரைநகர அன்பர்கள் அனுதினமும் போற்றிப் பரவும் தலைவர்!

செக்கரை நேர் சிவன் முதல் சிலரே உணர் சித்து உடையான் எனல் மெய்ச் சொல்லே—செவ்வானம் போன்று செம்மை நிறமான சிவபெருமானையொத்த ஒருசிலர் மட்டுமே அறியக்கூடிய மாயவித்தைகளை யெல்லாம் (சித்து விளை யாடல்களையெல்லாம்) செய்ய வல்லவர் என்று பலரும் கூறுவது உண்மையே யாகும் (அடியேனும் கண்டு கொண்டேன்).

## குறிப்புரை

மை—அஞ்சனம். கனம்—மேகம். அஞ்சனம் போன்று அடர்ந்த கருமேகத்தினைக் கண்ணபிரானின் மேனிக்குவமை யாகக் கூறினார். 'அஞ்சன வண்ணனை ஆயர்கோலக் கொழுந் தினை' என்றே பெரியாழ்வாரும் (பெரியா. திரு. 3-2-1) அழைப்பர்.

> 'கண்ணும்வாண் முகமுஞ் செய்ய கமலமொத் தலர்ந்த
> மைக்கார் வண்ணன்' (10-7-44)

என்று பாகவதம் கூறும்.

வானவர்—தேவர்கள். மட்கும்முன்—அழியும்முன்பாக. பெட்பினான்—பெருமையுடையான். அக்கரம்—எழுத்து. அக்கர மாவன எட்டுடையான்—நாராயணனாகிய எம்பெருமான்.

"எட்டுமெட்டு மெட்டுமாயொ ரேழுமேழு மேழுமாய்
எட்டுமூன்று மொன்று மாகி நின்ற வாதி தேவனை
எட்டி னாய பேதமோ டிறைஞ்சி நின்ற வன்பெயர்
எட்டெ ழுத்து மோதுவார்கள் வல்லர் வான மாளவே."

(திருச். 77) என்பார் திருமழிசையாழ்வார்.

திருமங்கையாழ்வார் தாமருளிய பெரிய திருமொழி முதற் பத்தின் தொடக்கத்திலேயே அட்டாச்சரத்தின் பெருமையை விரிவாக எடுத்துரைப்பர். 'வாடினேன்' எனத் தொடங்கும் பாசுரம் முதலாக இந்நாமத்தின் பெருமையை உய்த்துணரலாம்.

"பேசுமின் திருநாம மெட்டெழுத்தும் சொல்லிநின்று
பின்னரும்
பேசுவார் தமையுய்ய வாங்கிப் பிறப்பறுக்கும் பிரான்"
(பெரிய திரு. 1-8-9)

"தேனும் பாலு மமுதுமாய திருமால் திருநாமம்
நானும் சொன்னேன் நமரு முரைமின் நமோ
நாராயணமே"
(பெரிய திரு. 6-10-6)

என இவ்வாறு எட்டெழுத்தின் மகிமையை இவ்வாழ்வார் விளக்குவர்.

"அக்கரமைம் பத்தொன்றாய்ச் சொல்லாய்ச் சொல்லின்
அருத்தமுமா மெட்டெழுத்தின் வடிவு மாகி
எக்கணிலும் அணுவுக்கும் அணுவாய் நின்றும்
எழிற்குருவா யுதிக்கின்றாய் எம்பி ரானே"
(எம். சத. 96)

என்னும் பாடலடிகள் மொழியில் கண்ணபிரான் எட்டெழுத்தின் வடிவமாகி நின்றதைக் குறிக்கும்.

தமிழ் வேதம் என்று கூறம்பெறும் திருவாய்மொழியைக் கற்றவரை அருகிருந்து காப்பவர் கண்ணபிரான் என்பது இவர்தம் அனுபவம். இந்நூலின் ஏற்றம் கருதி 'அருமைத் திருவாய்மொழி' என்றார்.

கோ—தலைவர். செக்கர்—சிவப்பு, செவ்வானம். சிவபெருமானின் செம்மை நிறத்துக்குவமை. சித்து—மாயவித்தை. மெய்—உண்மை.

இது, முழுவதும் விளச்சீர்களான **எழுசீர் வண்ண விருத்தம்.** 'தத்தன தானன தத்தன தானன தத்தன தானன தத்தனா' என்பது சந்தக் குழிப்பாம்.

## எண்சீர் வண்ண விருத்தம்

(தனனதன தானதன தனனதன தானதன
தனனதன தானதன தனனதன தானனா)

64. சொலபமல ஓர்பெரிய தவமுளது லோகரெதிர்
சொலினுமதி யார்களிது சரதமெழில் வீரையூர்
நலமருவ ஓர்கையிடை புனையும்நவ நீதமிக
நகநிலைகொள் வானைஅவன் அடியவர்கள் பாடலால்
மலநிகள மானதடை முறியநனி பேசிஇகல்
வலியதகு வேசர்முடி இடறலும்அ வாவியே
தலமகள்அ கோவெனம ணியகொடிதெ லாமும்அழி
தலின்முயல் ஓர்பாகவ தனதுபிறகு போதலே.

லோகர் எதிர் சொல்லினும் மதியார்கள்—மெய்யறிவு இல்லாத உலகமக்கள் எம்பெருமானே நேரில் வந்து வாக்கருளினாலும் உணரமாட்டார்கள் (அத்தகைய அஞ்ஞானம் மிக்கவர்கள் அவர்கள்)

இது சரதம்—இதுவே உண்மை நிலையாகும்

எழில் வீரையூர் நலம் மருவ ஓர் கையிடை புனையும் நவநீதம் மிக நகம் நிலைகொள்வானை—அழகுமிக்க வீரகேரளம் புதூர் என்னும் நகர் சிறக்கும்படியாக, தம்முடைய ஒரு கரத்திலே வெண்ணெயை ஏந்தி இப்பூமியில் வந்து தங்கிய எம்பெருமானாகிய கண்ணபிரானை

அவன் அடியவர்கள் பாடலால் மலம் நிகளமான தடை முறிய நனிபேசி—அவருடைய திருவருள் பெற்ற அடியவர்களாகிய ஆழ்வார்கள் போன்றோரின் திவ்வியப்பிரபந்தப் பாசுரங்களால், அறியாமை, வினைகள் ஆகிய விலங்குகள் அகலும் படியாகப் போற்றியும்

இகல் வலிய தருவேசர் முடி இடறலும் அவாவியே—பகை யுணர்ச்சி மிக்க கொடிய அரக்கர்களின் தலைகள் கவிழும் படியாக விரும்பியும்

தலமகள் அகோ என மன்னிய கொடிது எல்லாமும் அழிதலில் முயல்—பூமாதேவி வருந்தும்படியாக நிலைபெற்ற கொடுமைகள் அனைத்தும் ஒழியும்படியாகவும் அரும் பணியாற்றுகின்ற

ஓர் பாகவதனது பிறகு போதலே—ஒப்பற்றதொரு அடியாரது நெறியைப் பின்பற்றுகின்ற

ஓர் பெரிய தவம் உளது—ஓர் உன்னதமான தவம் இருக் கின்றது (இதை உணர்வீர்களாக)

சொல் அபம் அல—(அடியேனுடைய) மொழியில் வேறுபாடு எதுவுமில்லை (அறவீர்களாக.)

## குறிப்புரை

அஞ்ஞான இருளில் மூழ்கிக் கிடக்கும் உலக மக்கள் இறைவனே நேரில் வந்து பேசினாலும் உணரும் தகுதியற்றவர் கள். கண்ணபிரான் உலகில் அவதரித்தபோதெல்லாம் அவரை நேரில் நிந்தித்தவர்களே மிகுதி. ஆனால், கண்ணபிரான் புகழ் பாடும் பாகவதர்களுக்கு இவ்வுலக மக்களை நெறிப்படுத்தும் ஆற்றல் மிகுதி. ஆழ்வார்களின் அருளிச் செயல்களைத் தம் ஆற்றலுக்கு உரமாக்கிக் கொள்பவர்கள் இந்தப் பாகவதர்கள். அத்தகைய அடியாரைப் பின்பற்றுவதே மிகப்பெரிய தவநெறி யாகும் என அறுதியிட்டுக் கூறுகிறார் ஆசிரியர்.

லோகர்—உலக மக்கள், சரதம்—உண்மை. நவநீதம்—புதிய வெண்ணெய். நகம்—பூமி. மலம்—குற்றம். நிகளம்—விலங்கு. தலமகள்—பூமகள்—பூமாதேவி. அகோ—அதிசயச் சொல்—வியப்புடன் கூடிய ஒரு குறிப்புமொழி. மனிய—மன்னிய—நிலை பெற்ற. பாகவதன்—திருமாலடியார்.

இது, தனனதன தானதன தனனதன தானதன தனனதன தானதன தனனதன தானனா' என்னும் சந்தக்குழிப்பிலமைந்த எண்சீர் வண்ண விருத்தம்.

## சம்பிரதம்

இந்திர சாலம் முதலிய மாயவித்தை வல்லவர் தமது சிறப்பைத் தாமே எடுத்துக் கூறுவதாகச் செய்யுள் செய்வது சம்பிரதம் என்னும் உறுப்பின் இலக்கணமாம். இது இருபொருள் பயப்பதாக அமையும்.

### இரட்டையாசிரிய விருத்தம்

65. போதனைப் பலகோடி புவனமொடு தரவுந்தி
பூத்தநெடு மால்புரக்கும்
புனிதவீ ரைப்பதிப் புலவீர்என் மொழிகளிற்
பொய்யின்று, சிறிதுகேண்மோ

ஆதவர்க ளொடுகூடி விளையாடினேன் செறுவில்
அண்டாரை வேர்கெல்லினேன்
அம்புயம் தடமலை யசைத்திடக் கண்டேன்
அரக்கர் உருளச்சிரித்தேன்

காதகத் தொழிலோரை மிகமதித்தேன் சிறிது
கடலைக் கடைந்தும் உண்டேன்
கன்னியரை அன்னையரெனத்தக்கபே ரொடும்
கலகங்கள் பெரிதுசெய்தேன்

பூதம்ஒன் றைப்பதத்தால் மிதித்தேன்; பெரும்
புற்றினைக் கொண்டுவந்தேன்
புண்ணியம் பேசினேன் அகளங் கரச
புஞ்சபூர ணத்துற வெய்தியே.

போதனைப் பல கோடி புவனமொடு தர உந்தி பூத்த நெடுமால் புரக்கும் புனித வீரைப்பதிப் புலவீர்—எண்ணற்ற அண்டங்களைப் படைப்பதற்காகத் தம்முடைய உந்திக் கமலத்தில் பிரமனைத் தோற்றுவித்த திருமால் ஆகிய கண்ணபிரான் காத்தருளும் புண்ணிய நகராகிய வீரகேரளம்புதூரில் விளங்கும் சான்றோர்களே!

என் மொழிகளில் பொய் இன்று சிறிது கேண்மோ—அடியேனுடைய கூற்றுகளில் பொய் ஒன்றுமில்லை (எல்லாம் மெய்யே) சற்றுச் செவிமடுத்துக் கேட்பீராக!

**சம்பிரதப்பொருள்**

ஆதவர்களோடு கூடி விளையாடினேன்—பல சூரியன்களுடன் சேர்ந்து ஆடல் புரிந்தேன்

செருவில் அண்டாரை வேர் கெல்லினேன்—போரிட வந்த பகைவர்களை வேரோடு கிள்ளி (தோண்டி) எறிந்தேன்

அம்புயம் தடமலை அசைத்திடக் கண்டேன்—வலிமை மிக்க தோள்கள் பெருங்குன்றுகளை அசைப்பதைப்பார்த்தேன்

அரக்கர் உருளச் சிரித்தேன்—அசுரர்கள் தோல்வியுற்று மடிந்து உருண்டு விழுமாறு அவர்களைப் பார்த்து நகைத்தேன்

காதகத் தொழிலோரை மிக மதித்தேன்—கொலைகள் செய் வோரை நன்கு போற்றினேன்

சிறிது கடலைக் கடைந்தும் உண்டேன்—சிறிதளவு கடல் நீரைக் கடைந்தும் சாப்பிட்டேன்.

கன்னியரை அன்னையர் எனத்தக்க பேரோடும் கலகங்கள் பெரிது செய்தேன்—மணமாகாத பெண்களைத் தாயானார் கள் எனச் சொல்லுமாறு குழப்பம் பல புரிந்தேன்

பூதம் ஒன்றைப் பதந்தால் மிதித்தேன்—கொல்ல வந்த பூதம் ஒன்றைக் காலால் நசுக்கிக் கொன்றேன்

பெரும் புற்றினைக் கொண்டு வந்தேன்—பெரிய பாம்பினைக் கொணர்ந்தேன்

புண்ணியம் பேசினேன்—வேதங்களிலும் மேலான ஞானத்தைப் பற்றியே எடுத்துரைத்தேன்

அகளங்க ரச புஞ்ச பூரணத் துறவு எய்தியே—அகளங்க அரச புஞ்ச பூரணத் துறவு எய்தியே (இவற்றையெல்லாம் செய்தேன்)

**இயற்கைப்பொருள்**

ஆதவர்களோடு கூடி விளையாடினேன்—இடையர்களாகிய யாதவர்களுடன் சேர்ந்து ஆடல் புரிந்தேன்

செருவில் அண்டு ஆரை வேர் கெல்லினேன்—வயலில் முளைத்த ஆரைச் செடியின் வேர் எடுத்தேன்.

அம்புயம் தடமலை அசைத்திடக் கண்டேன்—தாமரையைத் தண்ணீர் அலைகள் அசைத்திடக் கண்டேன்

அரக்கர் உருளச் சிரித்தேன்—சாராயம் குடித்தவர்கள் புரண்ட போது நகைத்தேன்

காதகத் தொழிலோரை மிக மதித்தேன்—காத்தல் தொழில் புரியும் (அதகரை) மருத்துவரை மிகவும் மதித்தேன்

சிறிது கடலைக் கடைந்தும் உண்டேன்—கொஞ்சம் கடலைப் பருப்பைக் கீரையோடு சேர்த்துக் கடைந்தும் சாப்பிட்டேன்.

கன்னியரை அன்னையர் எனத்தக்க பேரொடும் கலகங்கள் பெரிது செயதேன்—இளம்பெண்கள், ஆயர்குலத் தாய்மார் கள் ஆகியோருடன் கூடி விளையாடிப் பேரொலி எழுப்பினேன்

பூதம் ஒன்றைப் பதத்தால் மிதித்தேன்—பூமியைக் காலால் மிதித்துக்கொண்டே இருக்கிறேன்

பெரும் புற்றினைக் கொண்டு வந்தேன்—பெரிய புல்லை உடைய தினையை எடுத்து வந்தேன்

புண்ணியம் பேசினேன்—தூய்மையே பேசினேன்

அகளங்க ரச புஞ்ச பூரணத்து உறவு எய்தியே—குற்றமற்றதும் இனிமையின் திரட்சியினதுமாகிய முழுமுதற் பொருளான இறைவனின் துணைகொண்டே

## குறிப்புரை

அனைவராலும் செய்தற்குரிய எளிய செயல்களையே தன் சொல்லாற்றலால் செய்தற்கரிய செயல்களைப் போலக் கூறுவது இது.

ஆதவர்—சூரியர், யாதவர் (இடையர்); அம்புயம்—அழகிய தோள், தாமரை; அரக்கர்—அசுரர், காதகத் தொழிலோர்—கொலைகள் செய்வோர், காத்தல் தொழில் புரியும் மருத்துவர்; கலகம்—குழப்பம், பேரொலி; பூதம்—பூதம், பூமி; புண்ணியம்—அறம், தூய்மை.

இது, இரட்டையாசிரிய விருத்தம்.

## நேரிசைப் பஃறொடை வெண்பா

66. துறவாது வேடமிட்டுத் தொண்டரொடு கூடி
அறமலிதற் காவனசெய் யாமல்—பிறவிப்
பிணிமலிதற் கான பிழையனந்தம் செய்தேன்
அணிதமிழ்க்கும் வேட்கையுற்றா யன்றோ!—பணிலமொடு
சக்கரமும் ஏந்தித் தமியேன் மனவெளியூடு
அக்கனவில் வந்ததுபொய் யாகாமே—திக்கறியப்
பட்டப் பகலிற் பறவையர சேறிவந்தென்
இட்டப் படியருட்பே றீந்தருள்வாய்—துட்டர்களைக்
கொல்வதஞ்சிப் பேடிக் குணங்காட்டி னற்றிருத்தி
வில்வலிமைக் கீர்த்தி மிகக்கொடுத்தாய்—கல்வரைஒன்று
ஏந்திப் பசுக்காத்திட்டு இந்திரனும் வானவரும்
காந்தியநெஞ் சேங்கிஒல்கக் கண்டுவந்தாய்—நீந்திக்
கரையேற வல்லார் கருத்துங் கலங்கத்
திரைவீசும் வாவியிலோர் தீக்கண்—வரைபோலும்
பாம்பிற்கும் அம்பொற் பதஞ்சூட்டி னாய்எனையோர்
வேம்பிற் கசந்து வெறுத்துவிடேல்—கோம்பிக்கு
உருகும யில்போற்பொன் உள்ளவரை நாடி
அருகுமிழி வாற்தளர்ந்தேன் அந்தோ—ஒருகுறையும்
இல்லாத ருள்வதனுக் கேதேனும் ஓர்தடைநின்
கூத்துள் அடக்கமெனக் கோடாநு கோடிமறை
ஏத்தும் உலவா இசைபொய்யோ—ஆத்துமப்பேர்
ஆனந்தத் தாசை அணுவுமரு வாக்கவிஞர்
போனதற் கஞ்சிப் புழுங்குகின்றேன்—தானம்
தராவிடினும் என்சொற் தமிழ்விலைப் பொன்தந்தால்
கராசலம்போன் றுய்ந்துகொள்வேன் கண்டாய்—
குராவினையும்
கையாற் தழுவக் கருத்தொவ்வாக் கற்பினர்தம்
ஒய்யாரத் துப்பால் உயர்வீரை—எய்யாப்
புகழ்பொருந்தக் காக்கும் புருடோத் தமனே
இகழ்சிலர்க்கும் பேறளித்தோ னே.

*குராவினையும் கையால் தழுவக் கருத்து ஒவ்வாக் கற்பினர் தம் ஒய்யாரத் துப்பால் உயர் வீரை எய்யாப் புகழ் பொருந்தக் காக்கும் புருடோத்தமனே—குரா மரத்தினையும் தம் கரங்களால் தொட விரும்பாத கற்பு நலம் மிக்கவர்கள் வாழும் அழகும் மேன்மையும் மிக்க வீரை நகரை (இதுகாறும் எந்த நகரும் அடையாத) பெருஞ் சிறப்புடன் வாழ்வித்தருளும் ஆண்மையில் சிறந்த அரசரே!*

இகழ் சிலருக்கும் பேறு அளித்தோனே—(உம்மை) வெறுத்துப் பேசியவர்களுக்கும் வீடுபேறு நல்கியவரே!

துறவாது வேடம் இட்டுத் தொண்டரோடு கூடி—(மண், பெண், பொன் என இவ்வுலக ஆசைகள்) எதையும் துறக்காமல், வெறும் வேடதாரியாகி, அடியார் கூட்டத்தில் சேர்ந்து

அறம் மலிதற்கு ஆவன செய்யாமல் பிறவிப்பிணி மலிதற்கான பிழை அனந்தம் செய்தேன்—தருமம் தழைப்பதற்கு வேண்டியதைச் செய்யாது, (மீண்டும் மீண்டும் பிறந்து இறந்து உழலும்) பிறவிநோய் உண்டாவதற்கான குற்றங் களையெல்லாம் அளவில்லாமல் புரிந்தேன்

அணி தமிழ்க்கும் வேட்கை உற்றாய் அன்றோ—(ஆழ்வார் களின்) பெருமை மிக்க திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களுக்கு ஆசை கொண்டீர் அல்லவா?

பணிலமொடு சக்கரமும் ஏந்தி தமியேன் மனவெளி ஊடு அக்கனவில் வந்தது பொய் ஆகாமே—சங்குடன் சக்கரமும் கையில் ஏந்திக் கொண்டு வறியவனாகிய அடியேனுடைய உள்ளத்தின்கண்ணே அன்றொருநாள் கனவில் (நீவிர்) வந்து காட்சியருளியது பொய்யாகிவிடாமல்

திக்கு அறியப் பட்டப்பகலில் பறவை அரசு ஏறி வந்து என் இட்டப்படி அருள் பேறு ஈந்து அருள்வாய்—எல்லாத் திசைகளும் பார்க்கும்படியாக, சூரியன் ஒளி வீசும் பகற் பொழுதில் கருடன் மீதமர்ந்து எழுந்தருளி அடியேனு டைய விருப்பத்திற்கேற்பப் பெறுதற்கரிய பேரின்ப வீட்டினை அளிப்பீராக!

துட்டர்களைக் கொல்வது அஞ்சி பேடிக்குணம் காட்டிநர் திருத்தி வில் வலிமைக் கீர்த்தி மிகக் கொடுத்தாய்—கொடியவர் களைக் கொல்லப் பயந்து ஆண்மையின்மையைக் காட்டிய வனைத் (அருச்சுனனைத்) திருத்தி அவனுடைய கைவில் லின் பேராற்றலைக் காட்டினீர்

கல்வரை ஒன்று ஏந்திப் பசு காத்திட்டு இந்திரனும் வானவரும் காந்திய நெஞ்சு ஏங்கி ஒல்கக் கண்டு உவந்தாய்—(கோவர்த்தனகிரி என்னும்) பெருங்கல் மலையை ஒரு விரலால் தாங்கி நின்று பசுக்கூட்டங்களைக் காப்பாற்றி, இந்திரனும் தேவர்களும் பொறாமையால் மனம் வெதும்பி ஏக்கமுற்று மெலிவதைப் பார்த்து மகிழ்ந்தீர்

**நீந்திக் கரை ஏற வல்லார் கருத்தும் கலங்கத் திரை வீசும் வாவியில் ஓர் தீக்கண் வரை போலும் பாம்பிற்கும் அம்பொற் பதம் சூட்டினாய்**—(பாவங்களே நிறைந்த பிறவியாகிய துன்பக்கடலை) நீந்திக் கடக்க வல்லவர்களின் (ஞானிகளின்) நெஞ்சமும் நடுக்கும்படியாக (தீமையே நிறைந்த) அலைகள் வீசும் நீர்ப்பரப்பில் தோன்றிய பெருந்தீப்பிழம்பைக் கண்களால் பொழிந்து கொண்டிருக்கும் மலை போன்ற (காளிங்கன் என்னும்) பாம்புக்கும் (அதன் தலைமீது ஏறி நடனம் செய்து) உம்முடைய திருவடிகளை அளித்தீர்கள்!

**என்னை ஓர் வேம்பில் கசந்து வெறுத்து விடேல்**—அடியேனை வெறுக்கத்தக்க ஒருவனாக எண்ணித் தள்ளிவிட வேண்டாம்

**கோம்பிக்கு உருகும் மயில் போல் பொன் உள்ளவரை நாடி அருளும் இழிவால் தளர்ந்தேன் அந்தோ**—பச்சோந்திக் காக மயக்கம் கொள்ளும் மயிலைப் போன்று, செல்வம் உடையவர்களைத் தேடிச் சேர்ந்து இரந்து இழிந்து மெலிந்தேன், என்னே என் நிலை!

**ஒரு குறையும் இல்லாது அருள்வதனுக்கு ஏதேனும் ஓர் தடை நின் வல்லாண்மையில் பெரிதாய் வந்து உள்ளதோ**—(துன்பப்பட்டு வருந்திச் சரணடைவோருக்கு உடன் அருளாமல்) உம்முடைய குறைவில்லாத கிருபையை நல்கும் வல்லாண்மையில் என்ன தடை ஏற்பட்டதோ அறியேன்! (ஏதாகிலும் தடை உள்ளதா எனத் தெரிவிப்பீராக)

**எல்லாம் நின் கூத்துள் அடக்கம் எனக் கோடாநு கோடி மறை ஏத்தும் உலவா இசை பொய்யோ**—அண்ட சராசரங்கள் அனைத்தும் இயங்கும் இயக்கம் எல்லாம் உம்முடைய பேராடலில் அடங்கும் என்று வேதங்களெல்லாம் புகழ்ந்து ஏத்துவது பொய்யாகுமோ?

**ஆத்துமப் பேரானந்தத்து ஆசை அணுவும் மருவாக் கவிஞர் போனதற்கு அஞ்சிப் புழுங்குகின்றேன்**—இவ்வுலகில் புழங்கும் சீவாத்துமாக்கள் பரமாத்மாவாகிய உம்மைச் சரணடைதல் வேண்டும் என்னும் பேரவாவை ஒரு சிறிதும் கருதிக் கைவரப் பெறாத போலிப் புலவர்களின் இழி தன்மைக்கு அஞ்சி மனம் வெதும்புகின்றேன்

தானம் தராவிடினும் என்சொல் தமிழ் விலைப் பொன் தந்தால் கராசலம் போன்று உய்ந்து கொள்வேன் கண்டாய்—(நீவிர்) தருமமாக எதையும் அடியேனுக்கு அளிக்க வேண்டாம். (உம்மைப் புகழ்ந்து பாடும் பாடலுக்கேற்ப) அடியேனு டைய மொழிக்குத் தக்க மதிப்பாகப் (பேரின்பத்தினை) பொன்னை அளித்தால் போதும். யானையைப் (கசேந்திர னைப்) போன்று அடியேனும் பேறு பெற்றவனாவேன். காண்பீராக.

## குறிப்புரை

கனவில் வந்தருளும் கண்ணபிரான் இங்கு நனவிலும் வந்து காட்சியருளுமாறு வேண்டுகிறார். தம்முடைய போற்றிப் பாடல் களுக்குப் பயனாக இறைவர்தம் இன்னருளை வேண்டுகிறார்.

தொண்டர்—அடியார், அனந்தம்— அளவின்மை. வேட்கை—விருப்பம், ஆசை. பணிலம். சங்கு. தமியேன்—வறியவன். பறவை அரசு—கருடன். இட்டம்—விருப்பம், ஆசை துட்டர்—கொடிய துரியோதனாதிகள்.பேடிக் குணம்—பேயறிவு, ஆண்மையின்மை. கல்வரை—கோவர்த்தனகிரி. ஒல்கல்—மெலிதல். தளர்தல். தீக்கண் வரை போலும் பாம்பு என்றது காளிங்கனை. பதம்—திருவடி. கோம்பி—பச்சோந்தி. பச்சோந்தி யின் நிறம் மாறும் தன்மையைக் கண்டு மயில் மயக்கம் கொள்வது, பொன் உள்ளவரை நாடி அருகும் இழிநிலைக்கு உவமையாயிற்று. அந்தோ—இரக்கக்குறிப்பு. கூத்து—திருவிளை யாடல். மறை—வேதம். கராசலம்—யானை, கசேந்திரன். குரா—குராமரம், துப்பு—ஆண்மை.

## பாம்பிற்கும் அம்பொற்பதஞ் சூட்டிய வரலாறு

யமுநா நதியில் ஓர் மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் நஞ்சாகிய அக்கினியினாற் கொதிப்படைந்த நீருள்ளதாய்ப் பருகுவதற்குத் தகுதியற்றதாக்கிய காளிய னென்னும் கொடிய நாகத்தைக் கண்ணபிரான் திருவுள்ளங் கொண்டு, அம்மடுவிற்கருகிலுள்ள ஒரு கடம்ப மரத்தின் மேலேறி அம்மடுவிற் குதித்துக் கொடிய அந்நாகத்தின் படங் களின் மேல் ஏறித் துவைத்து நடனம் செய்து நசுக்கி

வலியடக்கினார். அப்போது மாங்கலியப் பிச்சை நல்க வேண்டு மென்று தன்னை வணங்கி வேண்டிய நாக கன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற் சென்று வாழும்படி விட்டருளினார் என்பர்.

"கானகமா மடுவில் காளிய னுச்சியிலே
தூய நடம்பயிலும் சுந்தர வென்சிறுவா"
(பெரியா. திரு. 1-5-6)

என்றும்,

"நஞ்சுமிழ் நாகங் கிடந்த நற்பொய்கை புக்கு
அஞ்சப் பணத்தின்மேல் பாய்ந்திட் டருள் செய்த
அஞ்சன வண்ணனே" (பெரிய. திரு. 1-8-3)

என்றும் அழைப்பார் பெரியாழ்வார்.

"சூடு தார்மகுட கோடி மேலமரர்
சூடு சேவடி சிவப்பநின்
றாடல் வாளரவி னுச்சி மீதுநட
மாடினான் மறைகள் பாடினான்"
(10-7-16)

என்றும் பாகவதம் கூறும்.

புருடர்களில் சிறந்தவன் ஆதலால் புருடோத்தமன் என்பர். 'தொல் புருடோத்தமன்' (8-5-4) என்றே பாகவதம் கூறும். கொடியவர்களை அழிப்பது மட்டுமே ஆண்மையாகாது. பகைவருக்கும் அருளும் பாங்கினைக் கொண்டவனே பகவான் ஆவார். தம்மை இகழ்ச்சியாகக் கூறிய இரணியன் போன் றோருக்கும் சிசுபாலன் முதலான கொடியோருக்கும் வீடுபேறு அளித்த பேரருளாளர் கண்ணபிரான் என்பதை இங்கே எடுத்துக் காட்டுகின்றார்.

இறைவன் கனவில் தோன்றுவது இயலாத ஒன்றன்று. ஒன்றைத் தொடர்ந்து நினைப்பதால் மனவெளியூடே கனவில் வருவது இயற்கை என்பர்,

"ஒருவனொரு மூர்த்தியினை உபாசித்தால்
அஃதுடலோ டொன்றி நின்று
திருவிளையாட் டியற்றுதலும், வேறுருவாத்
தோன்றுதலும் திறந்தான் கண்டீர்!
குருவடிவ நாட்டமும்விட் டறிவறிவென்
போர், வினையாற் குலைகின் றோரே
ஒருவிதநூல் உணர்ச்சியினாற் பிதற்றுகின்றோர்
இந்தவுண்மை உணரார் அன்றே."

(குருபர. 8-81)

என இவ்வாறு தம் அனுபவத்தைக் கூறும் இந்நூலாசிரியர் கனவு—நனவு ஆகும் வரையில் காத்திருக்க வேண்டும் என்பதை யும் எடுத்துரைக்கின்றார்.

"செந்திலைத் தவம்உளீர்! கனவினிற் பகர்கின்ற
தெய்வமொழி களைநம் பிநீர்
வெந்நிலைப் புவியிற் குதிக்கவேண்டாம், நனவில்
மிளிறுமட் டும்பொ றுமினே."

(குருபர. 10-30)

என்பது இவர்தம் வேண்டுதல்.

இக்கருத்திலேயே இங்கும் கண்ணபிரானை நேரில் வந்தருளப் பாடுகின்றார்.

இது, முழுவதும் வெண்டளைகளாலான சீர்கள் கொண்டு, முப்பது அடிகளைக் கொண்ட **நேரிசைப் பஃறொடை வெண்பா.**

நேரிசை வெண்பாக்களைத் தங்கள் உளங்கொள்ளுமளவும் அடுக்கிக் கொண்டே போய் இரு வெண்பாக்களின் இடைகளில் எல்லாம் எதுகையும் தளையும் பொருந்துமாறு தனிச்சொற் களைப் பெய்வதால் உண்டாகும் பா பஃறொடை வெண்பா என்பது இவர்தம் கருத்து. சிலர் இதனைக் கலிவெண்பா என்றும் கூறுவர்.

நேரிசை வெண்பா வேணமட் டடுக்கி
இடைதொறுந் தனிச்சொல் இசைவுறப் பொருத்தல்
பஃறொடை வெண்பா ஆகும்; இதனைக்
கலிவெண் பாவெனக் கழறுநர் உளரே.

(அறுவகை. 4. யாப். 21)

என இவரே இதற்கு இலக்கணமும் கூறுவர்.

## கட்டளைக் கலித்துறை

67. அளிக்கொந் தளகமின் னார்தம்மை
நாடி அகம்பெரிது
களிக்குந் தமியனை ஆண்டால்நின்
மெய்ப்புகழ்க் காமர்குன்றாது
ஒளிக்கும்ப மென்முலைக் கோபியர்
கூட்டம் ஒருங்கணைந்தாய்
துளிக்குஞ்செந் தேன்பொழில் சூழ்வீரை
காக்கும் தொழிற்கண்ணனே.

ஒளிக்கும்ப மென்முலைக் கோபியர் கூட்டம் ஒருங்கு அணைந்தாய்—அழகிய கச்சினகத்தே யானையின் மத்தகம் போன்று குவிந்ததும் மென்மையானதுமான நகில்களையுடைய ஆயர்குலப் பெண்கள் எல்லோரையும் ஒரே நேரத்தில் கூடியின்புற்று இருந்தவரே!

துளிக்கும் செந்தேன் பொழில் சூழ் வீரை காக்கும் தொழில் கண்ணனே—இனிக்கும் தேனைத் தம்மகத்தே கொண்ட பூக்கள் நிறைந்த சோலைகளால் சூழப்பெற்ற வீரைநகரை காப்பதே தொழிலாகக் கொண்ட கண்ணபெருமானே!

அளிக் கொந்தளகம் மின்னார் தம்மை நாடி அகம் பெரிது களிக்கும் தமியனை ஆண்டால் நின் மெய்ப்புகழ்க்காமர் குன்றாது—வண்டுகள் மொய்க்கும் மணம் மிக்க அழகிய கூந்தலையுடைய மகளிரை விரும்பிச் சேர்ந்து களித்திருக்கும் அடியேனை ஆட்கொள்வதால் உம்முடைய பெரும்புகழுக்கு இழுக்கு ஒன்றும் ஏற்படாது (அதனால் விரைந்து வந்து அருள் புரிவீராக)

### குறிப்புரை

கண்ணபிரான் கோபியர் பதினாறாயிரம் பேரை ஒருங்கே கூடி மகிழ்ந்தவர் என்பர். எனவே மகளிரை விரும்பி இல்லற இன்பம் நுகரும் தமக்கு அத்தகையவர் அருளுவதில் தடையேதுமில்லை என்கிறார் ஆசிரியர்.

'பண்டு வெண்ணெய் பாலொடும், அண்டர் மாத ரார்நலம்
உண்ட காரெம் முன்னிறை. கொண்ட தென்று கூறுவார்'
(பாக. 1-4-21)

எனப் பாகவதமும் கூறும்.

கோபியர்—கோவியர்—பசுக்களைக் காப்பவன் என்னும் பொருளதாகிய கோபன் என்பதன் பெண் பாலாகிய கோபீ என்பதன் திரிபாகிய கோவி என்பதன் பலர்பால். கொந்தளகம் —கூந்தல். தமியன் வறியவன்—அடியவன்—ஆசிரியரைக் குறித்தது. காமர்—பேரழகு.

காத்தல் தொழில் புரிபவன் கண்ணனே,

'விண்ணகம் வணக்கு மாற்றல்
வெந்திற லவுணர்த் தேய்த்துக்
கண்ணகன் ஞாலங் காக்குங்
காவலன்' (பாக. 1-4-55)

எனக் கண்ணகன் ஞாலங் காக்குங் காவலனாகவே கூறுவர்.

"உடைத் தெழு கருணை வெள்ளம் ஒழுகியின் னமுத மூறும்
கடைக்கணோக் குதவி யாவி காத்தனன் உலகங் காப்பான்"
(பாக. 10-7-9)

என்றவிடத்தும் 'உலகு காப்பான்' என்றே கண்ணனை அழைப்பர். எனவே, தம்மைக் காப்பது கண்ணனின் கடமை என்றும் ஆசிரியர் குறிப்பாக உணர்த்துகிறார்.

இது, நேரசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை.**

## கலிவிருத்தம்

68. தொழிலற் றொருதுன் பமும்இன்ப மும்அற்று
அழிவற் றபதத்து உறுமா றருள்வான்
விழியிற் றமிழ்நா டுணர்வீ ரையின்மேய
வழிபட் டனர்வாழ் வுறழ்மா யவனே.

தொழில் அற்று ஒரு துன்பமும் இன்பமும் அற்று அழிவு அற்ற பதத்து உறுமாறு அருள்வான்—(இவ்வுலகப் பற்றுக்களினாலுண்டாகும்) செயல்களெல்லாம் ஒழித்து எவ்வகைத் துயரமோ மகிழ்ச்சியோ நம்மை அண்டாமல், என்றும் அழிவில்லாத திருவடிப் பேற்றினை அடையுமாறு அருள்பவர்(யார் என வினவு வீராயின்)

வழியில் தமிழ்நாடு உணர் வீரையின் மேய வழிபட்டவர் வாழ்வு

உறழ் மாயனே—(ஞான நூலோர்களில்) குறைவற்ற தமிழ் நாட்டினர் நன்குணர்ந்த வீரை நகரின்கண் கோயில் கொண்டுள்ள இறைவரைப் போற்றிச் செய்தவர்களைக் காத்தருளும் மாயோனாகிய திருமாலே ஆவார்!

## குறிப்புரை

இவ்வுலக வாழ்க்கையாலுண்டாகும் நல்வினை, தீவினை களையெல்லாம் ஒழித்து, அழியா ஆனந்தப் பெருவீட்டை அருள வல்லவர் கண்ணபிரானே என்பது கருத்து.

"இருவினைப் பகுதியு மின்ப துன்பமும்
கருணையும் வெகுளியுங் கருத்து மாயினை"
(திருவ. க்லம் .1)

என்பார் பிள்ளைப்பெருமாளையங்கார்.

நல்வினை தீவினை இவற்றின் பிரிவுகளும் அவற்றாலுண் டாகும் சுகதுக்கங்களும் எல்லாமுமாயினை என்றே எம்பெரு மானை ஏத்துவர். "கண்ட வின்ப துன்பம் கலக்கங்களுந் தேற்ற முமாய்த், தண்டமும் தண்மையும்" (திருவாய். 6-3-2) என்றார் நம்மாழ்வாரும்.

பதம்—பரமபதம். வழிபட்டவரை வாழ்விப்பதில் வல்லவர் எம்பெருமான் என்பதை இவண் வலியுறுத்துகிறார்.

"இங்கே திரிந்தேற் கிழுக்குற்றெ
ன்னிருமா நிலமுன் னுண்டுமிழ்ந்த
செங்கோ லத்த பவளவாய்ச்
செந்தா மரைக்க ணென்னம்மான்
பொங்கேழ் புகழ்கள் வாயவாய்ப்
புலன்கொள் வடிவென் மனத்ததாய்
அங்கேய் மலர்கள் கையவாய்
வழிபட் டோட வருளிலே"
(திருவாய். 8-10-4)

என்பது நம்மாழ்வார் பாசுரம்.

இது, முழுவதும் புளிமாச்சீர்களாலான கலிவிருத்தம்,

### எண்சீர்க்கட்டுத் தாழிசை

69. அவமேயுழல் பவவேர்கெலும் அட்டாக்க ரம்நட்டாய்
அவனானபின் அவளானதென் றறியாரு ணர்கிரியே
கவலைக்கடல் சுவறப்பொரு கண்ணாமணி வண்ணா
கவளங்கொள்ஓர் குவடன்றடர் கையா அருள்மெய்யா
சிவனா தியர்தவ நாடியசீலா மறைமூலா
திவவூடிருள் நவலீலைசெய் தீரா முதல்வீரா
உவரிப்பொருள் கவர்வீரையில் உற்றாய் பலநற்றாய்
உவலைப்பழி நுவலாதெனை ஒருவேளை யில்மருவே.

அவமே உழல் பவ வேர் கெல்லும் அட்டாக்கரம் நட்டாய்—இவ்வுலகத்தில் வீண் செயல்களிலேயே சிக்கித் தவிப்பவர்களின் பாவங்களை அடியோடு போக்குவிக்கும் விட்டுணு மந்திரமாகிய என் எழுத்துக்களின் விளக்கமானவரே!

அவன் ஆன பின் அவள் ஆனது என்று அறியார் உணர் கிரியே—ஆண் பெண் ஆனது (தேவகி மைந்தனாகப்பிறந்து யசோதையின் பெண் குழந்தையிடத்தில் மாறிச் சென்று வளர்ந்தது) என்பதைத் தெளிந்து அறியாதவரும் உணருமாறு (கம்சன் உணருமாறு) செய்த மலையோனே!

கவலைக் கடல் சுவறப்பொரு கண்ணா! மணிவண்ணா!—பிறவித் துன்பமாகிய கடலை வற்றச் செய்யும்படிப் போரிடும் கண்ணபெருமானே! நீல நிறத்தவரே!

கவளம் கொள் ஓர் குவடு அன்று அடர் கையா! அருள்மெய்யா!—குவலயாபீடமாகிய யானையைக் கொன்ற கரத்தரே! மெய்யருளை நல்கும் இறைவரே!

சிவன் ஆதியர் தவம் நாடிய சீலா! மறை மூலா—(முப்புரங்களை வென்ற) சிவபெருமான் முதலானவர்கள் தவம் இருந்து அருள் பெற விழையும்படியான பெருமை பெற்ற நற்குண நலம் மிக்கவரே! வேதங்களுக்கெல்லாம் மூலகாரணமானவரே!

திவம் ஊடு இருள் நவ லீலை செய் தீரா! முதல் வீரா!—(பாரதப் போரில் அருச்சுனனைக் காப்பாற்ற) பகலிலேயே இரவை உண்டாக்கி (சக்கராயுதத்தால் சூரியனை

மறைத்து) புதியதோர் பேராடலைப் புரிந்த வலியவரே! தலைசிறந்த வெற்றியுடையவரே!

உவரிப்பொருள் கவர் வீரையில் உற்றாய் பல—கூடல் பொருள்கள் பல விளங்கும் வீரகேரளம்புதூரில் பல விளையாடல்கள் புரிந்து விளங்குபவரே!

நற்றாய் உவலைப் பழி நுவலாது என்னை ஒருவேளையில் மருவே—(என்னைக் காக்கும்) நற்றாய் முதலானவர்கள் அலர் கூறாதவாறு ஒரு பொழுதாகிலும் வந்து என்னை அணைப்பீராக!

## குறிப்புரை

தம்மைக் காணாது அயலிருக்கும் தலைவனை உடனே வந்து கூடுமாறு தலைவி அழைப்பது இப்பாடல்.

இதில், முதலில் அட்டாக்கரத்தின் பெருமையைக் கூறுகிறார். 'நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு நாராயணா வென்னும் நாமம்' (பெரிய திரு. 1-1-10) எனத் திருமங்கையாழ்வார் குறித்தது போன்றே இவரும் 'அவமே யுழல் பவவேர் கெல்லும் அட்டாக்கரம்' என்றார்.

அவம்—வீண். பவம்—பிறவிநோய், பாவம். கிரி—மலை—மலையோனான கண்ணனைக் குறித்தார். கிரி—நிறத்திற்கும் வலிமைக்கும் பெருமைக்கும் உவமை. சுவறுதல்—வற்றச் செய்தல். கண்ணா—கண்ணோட்டம் (கருணை) உடையவனே என்றுமாம். திவம்-பகல். நவம்—புதியது. உவமை—பொய்.

இது, எண்சீர்க்கட்டுத் தாழிசை.

## மதங்கு

ஆடல் பாடல் வல்ல இளம் வயதுப்பெண் மதங்கி எனப் படுவள். இரண்டு கைகளிலும் வாளையெடுத்துச் சுழற்றிக் கொண்டு தானும் சுழன்று ஆடுவாள் ஓர் இளம் மாதின் அழகு மிகுதியை ஒருவன் பாராட்டிக் கூறுவதாகச் செய்யுள் செய்வது, இதன் இலக்கணம். இக் கலம்பக உறுப்பு மதங்கு என்றும், மதங்க மென்றும், மதங்கியா ரென்றும் வழங்கப்பெறும்.

## எண்சீர் ஆசிரிய விருத்தம்

70. மருமலிபூங் குழல்மதங்கி ஒருத்தி வீரை
மாதவன்சீர் வீணைதொட்டு வாசித் திட்டாள்
அருகிலுற்றார் அனைவரும்ஓ வியமே போன்றார்
அணிநார தாதியர்மிக் கழுக்கா றுற்றார்
பொருவில்கலை மகள்உவகைப் பொலிவு கொண்டாள்
பூதரம்புள் விலங்குமுதற் புகல்வ எல்லாம்
உருகினதோற் பறையறைந்திட்டு அசுணம் கொல்வார்
உலோபிகள்போற் துயர்மிகப்பெற் றொடுங்கினாரே.

*மரு மலி பூங்குழல் மதங்கி ஒருத்தி வீரை மாதவன் சீர் வீணை தொட்டு வாசித்திட்டாள்*—நறுமணம் மிக்க பல மலர்களைத் தன் கூந்தலிலே சூடிய மதங்கி என்னும் இளம் பெண், வீரகேரளம்புதூரில் வாசம் செய்யும் கண்ணன் திருப்புகழைச் சொல்லி வீணையையும் சேர்த்து இசைத்தாள்

*அருகில் உற்றார் அனைவரும் ஓவியமே போன்றார்*—(அவளுடைய இசையைக் கேட்ட) அருகிலிருந்தோர் எல்லாம் தம்மை மறந்து (ஆடாமல் அசையாமல்) சித்திரத்தை யொத்துக் காணப்பட்டனர்

*அணி நாரத ஆதியர் மிக்க அழுக்காறு உற்றார்*—(இசைக்கலையில் வல்லவரான) சிறப்புடைய நாரதர் முதலானவர்களும் (அம்மதங்கி மீது) பொறாமை அடைந்தனர்

*பொருவு இல் கலைமகள் உவகைப் பொலிவு கொண்டாள்*—(இசைக் கலைக்குத் தெய்வமான) ஒப்பற்ற சரசுவதி தேவி மகிழ்ச்சியால் பூரிப்படைந்தாள்

*பூதரம் புள் விலங்கு முதல் புகல்வன எல்லாம் உருகின*—மண்ணுலகிலுள்ள மலைகள், பறவைகள், மிருகங்கள் ஆகிய சொல்லப்பெறுவன அனைத்தும் (அவள் இசைத்த இசையினைக் கேட்டு) மயக்கம் கொண்டன

*தோல் பறை அறைந்திட்டு அசுணம் கொல்வார் உலோபிகள் போலத் துயர் மிகப் பெற்று ஒடுங்கினாரே*—(பசு போன்ற விலங்குகளின்) தோலால் செய்யப்பட்ட பறைகளை ஒலித்து, அசுணம் முதலானவற்றைக் கொலை செய்கின்றவர் அவை கிடைக்காது வருந்தி, பொய் வேடதாரிகளைப் போன்று துன்பமுற்றுச் செயலற்றுப் போனார்கள்.

## குறிப்புரை

மதங்கி என்னும் இளமங்கையினிடத்துத் தனக்கு உண்டான வேட்கையை ஒருகாமுகன் வெளிப்படுத்துவதாகவே இச் செய்யுளைக் கலம்பகங்களில் அமைப்பர். இவ்வாறு கூறுமிடத்து அம்மங்கையின் உறுப்பு நலன்களை விவரித்துக் கூறுவதும் மரபு. ஆயின், இங்கு ஆசிரியர், வீரை மாதவன் சீர் பாடும் மதங்கி ஒருத்தியின் இசையின் பெருமையையே விவரித்துக் கூறுகிறார்.

மதங்கியின் இசையைக் கேட்டவர்கள் சித்திரம் போலானார்கள், நாரதர் முதலானவர்களும் பொறாமை கொண்டனர், கலைமகளுக்குண்டான மகிழ்ச்சிக்கு அளவேயில்லை, தேவர்கள் மனிதர்களேயன்றி இப்பூவுலகிலுள்ள பறவை, விலங்கு ஆகிய உயிரினங்களெல்லாம் உருகி மயங்கின, இவை மதங்கியின் இசையால் மட்டும் நிகழவில்லை. அவ்விசை மாதவன்சீர் பேசுவதாலெழுந்தது ஆகையால் அனைவரும் மகிழ்ந்தனர் என்பது குறிப்பு.

மரு—நறுமணம். மலி—மிகுந்த. மதங்கி—ஆடல் பாடல் வல்ல பதினாறு வயதுப்பெண். ஓவியம்—சித்திரம். அழுக்காறு —பொறாமை. பொருவு—உவமை, ஒப்புமை. பூதரம்—மலை, புள்—பறவை. அசுணம்—கேகயப்புள். உலோபிகள்—பொய் வேடதாரிகள்.

அசுணம் இசையினால் இறக்கும் என்பர்.

"ஊற்றினிற் களிறு துஞ்சும் ஒளியினிற் பதங்க மாயும்
நாற்றத்தின் வண்டு வீயும் சுவையின்மீ னாச மெய்தும்
ஏற்றதோ ரிசையி னாலே இறக்குமா லசுணங் கல்வி
ஆற்றலிற் புலன்க ளைந்து மடக்கிடல் வேண்டு மன்றே."
(பாக. 11-3-6)

என்பது பாகவதம்.

களிறு பரிசத்தினால் இறக்கும். விட்டிற்பூச்சி ஒளியினால் இறக்கும். வண்டு நறுமணத்தினால் இறக்கும். மீன் சுவையினால் இறக்கும் அசுணம் இசையினால் இறக்கும் என ஐந்து புலன்களால் அழியும் விலங்குகளைக் கூறுவர் (புறத். 292., திருவேங்க. 28). இவற்றுள் அசுணம் இசை அறிவதொரு

விலங்காக் கூறப்பெறும். மதங்கியின் இசையால் அசுணம் மயங்கியது என்பதை இங்கே குறிப்பிடுவர்.

இது, ஒன்று, இரண்டு, ஐந்து, ஆறாம் சீர்கள் காய்ச்சீர் களும், மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த எண்சீராசிரிய விருத்தம்.

## இதுவுமது

### எண்சீர்த் தாழிசை

71. நாரியர்க்கெ லாமும்வெட்கம் நல்குபொற்பொ டுற்றஇந்
நன்மதங்கி வீரைமேவும் நாரணற்பு கழ்ந்துளாள்
ஆரியன்தன் நாவிலுற்ற மங்கையோ! அவன்கையால்
அன்றுதான வர்ச்செகுத்தி டப்படைத்த பெண்கொலோ!
காரினங்கள் சென்றுகண்டு ணப்படாத பாற்கடற்
கண்பிறந்த நங்கைமார்க ளிற்சிறந்த யாவளோ!
பாரினிற்சொல் ஓசைபாவ ராகதாளம் ஓர்கிலார்
பஞ்சமத்தி என்னவும் பழிக்கஅஞ்சி லார்களே!

நாரியர்களுக்கு எல்லாமும் வெட்கம் நல்கு பொற்போடு உற்ற இந்த நல்ல மதங்கி வீரை மேவும் நாரணரைப் புகழ்ந்து உள்ளாள்— (தேவலோகப்) பெண்கள் அனைவரும் வெட்கித் தலைகுனியும்படியான அழகோடு விளங்கும் இச்சிறப்பு மிக்க மதங்கியானவள் வீரை நகரை விரும்பி வாழும் கண்ணபெருமானைப் போற்றி யிசைத்து இருக் கின்றாள்

ஆரியன் தன் நாவில் உற்ற மங்கையோ—(அம்மதங்கி) நான் முகன் நாக்கில் வாழும் கலைமகளோ!

அவன் கையால் அன்று தானவர் செகுத்திடப் படைத்த பெண் கொல்லோ—சந்தோப சந்தர்களை அழிப்பதற்காகப் பிரமனால் உண்டாக்கப்பட்ட திலோத்தமையோ!

கார் இனங்கள் சென்று கண்டு உண்ணப்படாத பாற்கடல் கண்ணே பிறந்த நங்கைமார்களில் சிறந்த யாவளோ— கருமேகங்கள் அலைந்து திரிந்தும் வற்றாத திருப்பாற் கடலிலே தோன்றிய அரம்பையர்களுள் ஒருத்தி ஆவாளோ இவள்!

பாரினில் சொல் ஓசை பாவம் ராகம் தாளம் ஓர்கிலார் பஞ்ச மத்தி எனவும் பழிக்க அஞ்சி இலார்களே—இவ்வுலகில், பாடலாகிய (அவளுடைய) மொழியையும் அதன் ஓசை யையும், பாவத்தையும், அதற்குரிய ராகம், தாளம் ஆகிய ஐந்தினையும் ஆராயாதவர்கள்கூட (அவளை) பஞ்சமத்தி வல்லபம் மிக்கவள் எனத் துதிக்க அஞ்ச மாட்டார்கள்

## குறிப்புரை

இப்பாடலிலும் மதங்கியின் இசைச் சிறப்பை புகழ் கின்றனர். வீரை நாரணரைப் புகழ்ந்து பாடும் அவளுடைய இசையைக் கேட்டவர்களுக் கெல்லாம் வியப்பு மேலிடுவதாக விவரிக்கின்றார். இதுவும், மதங்கியின் இசையைக் கேட்ட ஒருவனின் கூற்றாகவே அமைகின்றது.

நாரி—பெண்ணைக் குறிக்கும் வடசொல். பொற்பு—அழகு. பொலிவு. நாரணர்—கண்ணபிரான். ஆரியன்—நான்முகன். தானவர்—அசுரர். செகுத்தல்—அழித்தல். கார்—மேகம். பார்—பூமி. ஓர்கிலார்—ஆராயாதவர், தெளியாதவர். பஞ்ச மத்தி—அழகு மிக்கவள், வல்லபம் மிக்கவள் என்பதுடன் பஞ்சமம் என்னும் பண்ணில் வல்லவள், சத்த தாளத் தொன்றான பஞ்சமத்தை இசைப்பவள் என்பதுமாம்.என்னவும்- எனவும் பழிச்சுதல்—துதித்தல்.

மதங்கியின் இசை கேட்டவர் சொல், ஓசை, பாவம், இராகம், தாளம் இவற்றை அறியாதவர்கள் ஆயினும் அவளைப் பஞ்சமத்தி எனப் பாராட்டுவர் என்பது நயமானதாகும்.

இது. நான்கு, எட்டாம் சீர்கள் விளச்சீர்களும், மற்றைய ஆறு சீர்கள் காய்ச்சீர்களுமாகிய **எண்சீர்த் தாழிசை.**

## அடிமடக்கு

### கட்டளைக் கலிப்பா

72. அஞ்சி லம்பணி வார்தரு மாலினான்
அஞ்சி லம்பணி வார்தரு மாலினான்
நஞ்சி றைக்கும் பலவாய வார்வனே
நஞ்சி றைக்கும் பலவாய வார்வனே

கஞ்சி யாதிய கோவில னேகத்தே
கஞ்சி யாதிய கோவில னேகத்தே
வஞ்சி யொல்குதென் வீரையின் மன்னனே
வஞ்சி யொல்குதென் வீரையின் மன்னனே.

அம் சிலம்பு அணிவார் தரும் மாலினான்—அழகிய சிலம்பு புனைகின்ற கோபியர் அளிக்கும் மயக்கத்தை யுடையவர்

அஞ்சி அலம் பணிவார் தரும் மாலினான்—தீமையைக் கண்டு அஞ்சி, சஞ்சலத்தோடு தஞ்சமடையும் அடியவர்களுக்குத் தம்முடைய இன்னருளைத் தந்தருளும் பெருமையை உடையவர்

நம் சிறைக்கும் பலவாய வார்வனே—நமக்குண்டாகும் காமம் போன்ற தடைகளை முறியடிக்கத் தக்க வலிமையைத் தரும் அன்புடையவர்

நஞ்சு இறைக்கும் பலவாய வார்வனே—விடத்தைப் பொழியும் பல வாயையுடைய ஆதிசேடனுக்கும் நாயகர்

கஞ்சி ஆதிய கோவில் அனேகத்தே—காஞ்சிபுரம் முதலான திருத்தலங்கள் பலவற்றிலும் எழுந்தருளியிருப்பவர்

கம்சி யாதிய கோவிலான் ஏகத்தே—கம்சன் போன்ற கொடிய வர்களைத் தனியொருவராயிருந்து வென்ற இடைய னானவர் (ஆகிய இவர் யாரெனின்)

வஞ்சி ஒல்கு தென் வீரையின் மன்னனே—வஞ்சிக்கொடி போன்ற மெல்லியலார் நிறைந்த வீரகேரளம்புதூரின் தலைவரே

வஞ்சி ஒல்கு தென் வீரையின் மன்னனே—தருமதேவதை யானவள் அகங்குழைந்து வீற்றிருக்கும் வீரகேரளம் புதூரின் தலைவரே ஆவார் (அவரைப் பணிவீராக.)

இது, முதற்கண் மாச்சீர் பெற்று நாற்சீரான் வந்தது அரையடியாகவும் அஃது இரட்டி கொண்டது ஓரடியாகவும் அவ்வடி நான்கடி கொண்டு, நேரசை முதலில் வருவதால் அரையடிக்கு ஒற்றொழித்துப் பதினோரு எழுத்துப் பெற்று வந்த கட்டளைக் கலிப்பா.

## குறம்

தலைமகனைக் களவொழுக்கத்தாற் புணர்ந்து பிரிந்து ஆற்றாது மெலிந்து வருந்திய தலைமகளைக் கண்ட செவிலித் தாய், இவள் நோய்க்குக் காரணம் இன்னதென்று அறியாமல், நிமித்தங் கண்டு கூறவல்ல கட்டுவிச்சியை அழைத்து வினவ, அவள் குறியிலக்கணப்படிச் சிறு முறத்திலே நெற்குறி கண்டு அதனால் உண்மை யுணர்ந்து கூறுகின்றது போன்று செய்யுள் அமைத்தல் குறம் என்னும் உறுப்பின் இலக்கணமாகும்.

### அறுசீர்த் தாழிசை

73. மன்னர் மன்னவர் போற்றுசீர் மருதன் வீரையின் மாயவன்
பன்னகப் பகையேறி யேறியே பவனி வந்ததைப் பார்த்ததால்
இன்ன மையல்இத் தையல்கொண் டேங்கு கின்றனள்
பாங்குளீர்
அன்ன வன்துளவ னுப்புவான் அப்போ தென்குறி அவிருமே.

பாங்கு உள்ளீர்—அழகு பொருந்திய தாயே (குறி கூறக் கேட்பீராக)

மன்னர் போற்று சீர் மருதன் வீரையில்—அரசர் களுக்கெல்லாம் அரசராக விளங்குபவர் பாராட்டும் மேன்மையைப் பெற்றமருதப்பன் அரசாட்சி செய்யும் வீரகேரளம்புதூரில்

மாயவன் பன்னகப் பகை ஏறி ஏறியே பவனி வந்ததைப் பார்த்ததால் இன்ன மையல் இத்தையல் கொண்டு ஏங்கு கின்றனள்—கண்ணபிரானானவர் பாம்புக்குப் பகையாகிய கருட வாகனத்தில் ஆடம்பரமாக உலா வந்ததை இப்பெண்ணானவள் நேரில் கண்டதாலேயே இத்தகைய மயக்கத்தை அடைந்து ஏக்கமிட்டுள்ளாள்

அன்னவன் துளவம் அனுப்புவான் அப்போது என் குறி அவிருமே—(அவ்வாறு உலா வந்து தலைவியின் நெஞ்சத் தைக் கொள்ளை கொண்ட அத்தலைவன்) அத்தகைய கண்ணபிரானே விரைவில் தம் திருத்துழாய் மாலையைக் கையுறையாக அனுப்பி வைப்பார். அவ்வேளையில் நான் சொன்ன குறி எத்தகையது என்பதை நீங்களே நன்கு புரிந்து கொள்வீர்கள்

## குறிப்புரை

தலைவியின் துயரத்திற்குக் காரணம் தலைவனின் பிரிவுத் துன்பமே என்றும், தலைவன் விரைவில் மாலை அனுப்புவான் அதனால் அவள் துயர் தீரும் என்றும் குறத்தி குறி சொல்வதாக இப்பாடல் அமைந்துள்ளது.

மருதன்—இருதயாலயமருதப்ப தேவர். பன்னகம்—பாம்பு. பவனி—திருவீதியுலா. மையல்—மயக்கம், மோகம். தையல்—அழகு; அஃதுடையாருக்கு ஆகுபெயர். அன்னவன்—மாயவனாகிய கண்ணபிரான். துளவம்—துழாய், மாலை. அவிரும்—விளங்கும்.

துழாய், துளவம்—துளவு—அதனாலாகிய மாலைக்குக் கருவியாகு பெயர்.

இது, முதல், நான்காம் சீர்கள் மாச்சீர்களும் ஏனைய நான்கு சீர்கள் விளச்சீர்களுமாகிய **அறுசீர்த்தாழிசை**,

## இதுவுமது

### எண்சீர்க் கட்டுத்தாழிசை

74. என்குறியை ஈனமென்று தள்ளிடாதே கையில்
 எழுநெற்கை ஒன்றியதில் ஏது சூதே
நின்குணத்தை நானறிவேன் என்னையறிவாய் வீரை
 நீலவண்ணன் ஆள்வானென்று நெஞ்சிற் குறியாய்
புன்குலத்தர் நிந்தைநாளைத் தீரும்பாரம்மே வேண்டும்
 பொன்னும் நெல்லும் தந்துகஞ்சி போத வாரம்மே
வன்குறப்பெண் ஆனநான் பொய்விண்டிடேனே எங்கள்
 வள்ளிகண்முன் வந்துசெவ்வேள் கொண்டு ளானே.

என் குறியை ஈனம் என்று தள்ளிடாதே—குறத்தியாகிய நான் சொல்லும் குறிச் சொல்லை இழிவு என எண்ணி விலக்காதிருப்பாயாக (தாயே!)

கையில் ஏழு நெல் கை ஒன்றியதில் ஏது சூதே—என்னுடைய கையில் ஏழு நெல் இருந்தது. அதில் கை பொருந்தியிருந்ததில் சூழ்ச்சி எதுவும் இல்லை

நின் குணத்தை நான் அறிவேன். என்னை அறிவாய்— உம் முடைய (தலைவிக்காக ஏங்கும்) நல்ல உள்ளத்தை நான் நன்கு உணர்ந்தவள். அவ்வாறே (நானும் உண்மை யானவள் என்பதை) நீங்களும் என்னை நன்கு உணர் வீர்கள்

விரை நீலவண்ணன் ஆள்வான் என்று நெஞ்சில் குறியாய்—வீர கேரளம்புதூரில் விரும்பி வாழ்கின்ற மணி நிறத்து மாயவ னாகிய கண்ணன் வந்து (உம் மகளை மணம் புரிவார்) ஆட் கொள்வார் என்பதை உள்ளங்கொள்வீராக

புன்குலத்தர் நிந்தை நாளை தீரும் பார் அம்மே—தாயே! (அலர் பரப்பு) இழிகுணத்தோரின் இகழ்ச்சியான பேச்சுக் களெல்லாம் நாளையே ஒழியும் காண்பீராக

வேண்டும் பொன்னும் நெல்லும் தந்து கஞ்சி போத வார் அம்மே—தாயே! எனக்கு நிறையத் தங்கமும், சோறாக்கத் தானியங்களும், இப்பொழுது குடிப்பதற்குக் கஞ்சியும் கொடுத்து உதவுவீராக

வன் குறப்பெண் ஆன நான் பொய் விண்டிடேனே—வலிமை பொருந்திய குறவர் மரபில் வந்தவளான நான் ஒருநாளும் பொய் சொல்ல மாட்டேன்

எங்கள் வள்ளி கண்முன் வந்து செவ்வேள் கொண்டு உள்ளானே—எங்களுடைய குறக்குலப் பெண்ணான வள்ளி என்பவளுக்கும் (என்னைப் போன்ற குறப்பெண்தான் குறி கூறினாள்) குறத்தி குறி சொன்னவாறே அவள் காதலித்த முருகப்பெருமான் அவள் எதிரில் தோன்றி அவளை மணந்துகொண்டு இப்பொழுதும் கொலு வீற் றிருக்கிறான் என்பதை அறிவீராக. (எனவே, உங்கள் மகளையும் விரைவில் கண்ணன் மணம் முடிப்பான் என மகிழ்வீராக.)

## குறிப்புரை

குறத்தி தன் குறி தப்பாது என்பதை எடுத்துக் கூறுவ தாகவே இப் பாடலும் அமைகின்றது. குறவர்கள் பொய் கூறமாட்டார்கள், சூதோ சூழ்ச்சியோ செய்ய மாட்டார்கள், வள்ளிக்குச் செவ்வேளே கணவனாவான் எனக் குறி சொல்லி அதை மெய்ப்பித்தவர் வழியில் வந்தவர்கள் இவர்கள்.

எனவே, இங்கும் குறப்பெண் சொல்லும் குறி தப்பாது. காதலுற்ற பெண்ணைக் கண்ணனே வந்து நேரில் மணம் முடிப்பான் என்பதே அவளின் உறுதிமொழி.

ஈனம்—இழிவு, சூது—சூட்சி. ஆள்வான்—பெண்ணை மணப்பான் என்பது. நிந்தை—இகழ்ச்சியான பேச்சு, தூற்றுதல். அம்மே – அம்மையென்பதன் விளி. 'அம்ம கேட்பிக்கும்' (தொல். 276) போத—மிகுதியாக. செவ்வேள்—முருகன்.

இது, எண்சீர்க் கட்டுத்தாழிசை.

## நேரிசை வெண்பா

75. உளங்கலந்த காட்சிதந்தாய் ஊரறிய ஓர்சீர்
களங்கமற நல்கக் கருதாய்—விளங்கனியிற்
கன்றெறிந்த வீரையினிற் காயா மலர்த்துணர்போல்
நின்றெறிக்கும் கண்ணபிரா னே.

விளங்கனியில் கன்றெறிந்த வீரையினில் காயாமலர்த் துணர்போல் நின்று எறிக்கும் கண்ணபிரானே—(கம்சனால் ஏவப்பட்ட கபித்தாசுரன் மற்றும் வத்சாசுரன் ஆகிய இருவரையும் கொல்ல அவர்கள் கொண்ட உருவமாகிய) விளா மரத்தினையும் கன்று வடிவத்தினையும் ஒருசேர அடித்து எறிந்து கொன்றவரும் வீரகேரளம்புதூரில் காயா பூங்கொத்தினைப் போன்ற நீல நிறத்துடன் காட்சி நல்கி டும் தீமையெல்லாம் அறுத்தெறிகின்ற கண்ண பெருமானே!

உளம் கலந்த காட்சி தந்தாய்—(அன்று அடியேன் மனம் மகிழும்படியாக சங்கு சக்கரதாரியாய்) கனவில் வந்து காட்சி யருளினீர்!

ஊர் அறிய ஓர் சீர் களங்கம் அற நல்கக் கருதாய்—(அவ்வாறு நீர் காட்சி தந்தது பொய் என்று பிறர் நகைக்காமல்) அத்தகைய பெருமைக்குப் பங்கம் ஏற்படாதவாறு ஊரார் அறியும்படி இப்பொழுது நேரில் பலர் அறிய வந்து அருள் வீராக.

## குறிப்புரை

*கனவில் வந்து காட்சி தந்த கண்ணபிரான் ஊரார் அறியும் படி நேரில் வந்து அருள்புரிய வேண்டுகிறார். விளங்கனியிற் கன்றெறிந்த வீரச்செயல் இங்கும் கூறப்பெற்றது. காயா மலர் கண்ணபிரானின் நிறத்துக்கு உவமை. துணர்— பூங்கொத்து.*

*இது, இருவிகற்பத்தால் வந்து நாள் என்னும் வாய் பாட்டான் முடிந்த* **நேரிசை வெண்பா.**

### கட்டளைக் கலித்துறை

76. **ஆனேங் குறுங்கொடுங் காலத்தில் முற்றும் அதைமறந்து**
**தானேற்றம் எய்த முயலாமல் ஆண்டநின் தண்ணருளுக்கு**
**ஏனேனித் தாமதம் ஈதுநின் பாரமன் றென்குதியோ**
**வானேய்த்த மேனி முகுந்ததென் வீரையில்**
**வாழண்ணலே,**

*வான் ஏய்த்த மேனி முகுந்தா! தென் வீரையில் வாழ் அண்ணலே—நீலமேக வானம் போன்ற நிறங்கொண்ட முகுந்தா! வீரைநகரில் கோயில் கொண்டுள்ள அன்பிற் சிறந்தவரே!*

*ஆன் ஏங்குறும் கொடுங் காலத்தில் முற்றும் அதை மறந்து தான் ஏற்றம் எய்த முயலாமல்—(ஆயர்பாடியில் இந்திரன் கோபத்தினால் கல் மழை மொழிந்தபோது) பசுக்கூட்டங் கள் உம்மை நாடிக் காப்பாற்ற அழைத்தபொழுது, அவற்றை அசட்டை செய்யாமல் (நாம் எல்லாவற்றினும் மேலானவர் எனக் கருதி வாளா இருக்காமல்) நம்முடைய நலமே பெரிதெ என எண்ணாது*

*ஆண்ட நின் தண் அருளுக்கு ஏன் இனி இத்தாமதம்—(உடனே கோவர்த்தனகிரியைக் கையால் குடையெனத் தூங்கிப் பிடித்து) அப்பசுக்கூட்டங்களைக் காத்த உம்முடைய அகங்குளிர்ந்த அன்பு (இப்பொழுது அடியேன் அழைக்கவும் வாராதிருக்க) ஏனோ இன்னும் அடியேனுக்குக் கிட்டவிடா மல் தாமதம் செய்கின்றீர்?*

*ஈது நின் பாரம் அன்று என்குதியோ—(அடியேனுக்கு அருளுவது) இது உம்முடைய கடமையல்ல என்று சொல்லுகின்றீரோ! (அதையும் நேரில் வந்துரைப்பீராக!)*

## குறிப்புரை

விடாது பெய்த கடுமழையால் துன்பமுற்ற பசுக்கூட்டங்கள் ஏக்கங் கொண்ட காலத்தில். கோவர்த்தன மலையையே குடையாகத்தாங்கிப் பிடித்துக் காத்தவர், ஏன் இன்னும் வந்து தம்மைக் காக்கவில்லை என்பது இவர்தம் ஐயம். பாரம்—கடமை. பொறுப்பு. தம் போன்ற அடியாரைக் காப்பதும் கண்ணபிரானின் பொறுப்புத்தானே என்பது இவர் வாதம்.

"தார்மா ரிதரப் புலவோ ரெழுநள்ள
கார்மா ரிவிலக் கினைகண் ணமதன்
போர்மா ரிமலர்க் கணைபோ கவிழி
நீர்மா ரிநிறுத் திலையென் பர்சிலர்"

(பாக. 1-4-36)

என்பது பாகவதம்.

ஏழுநாள் இந்திரன் பெய்த கடுமழையை விலக்கிய கண்ணபிரான் எங்கள் கண்ணீர் மழையை விலக்காதது என்னை? என்பது இப்பாடலின் பொருள். இது, இப்பாடலுடன் ஒப்புநோக்கத்தக்கது.

இது, நேரசை முதலாக வந்த கட்டளைக் கலித்துறை.

## பாண்

பரத்தையரைப் புணர்தற் பொருட்டுத் தலைமகளைப் பிரிந்து சென்ற தலைமகனால், தலைமகளது கருத்தையறிந்து அவளைச் சமாதானப்படுத்தி அவளிடம் தான் வரும்படி பேசி வருமாறு அனுப்பப்பட்ட பாணனுக்குத் தலைவி வெகுண்டு கூறுவதாக அமைவது பாணனொடு வெகுளுதல் என்னும் துறையின் இலக்கணமாகும்.

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

77. அண்ணகரிற் கடையாகிப் பெண்பாற்றூ
துரைத்துஉயி ரோடலையும் பாணா!
தண்ணளிவாரிதியனைய வீரையின்மால்
இங்குவரும் தகுதியுண்டு அந்நாள்

விண்ணவர்ஊர்ப் பாணனைஓர் பெண்ணாக்கிப்
புணர்ந்ததெண்ணி விழைந்துள் ளாயோ?
கண்ணகன்மா ஞாலமிசை உனைப்போலும்
ஆடவரைக் காணொண் ணாதே.

அண்ணகரில் கடை ஆகி, பெண்பால் தூது உரைத்து உயிரோடு அலையும் பாணா—(ஆணுமல்லாமல் பெண்ணுமல்லாமல்) அலிகளிலும் கீழானவனாகி, ஒரு பெண்ணிடம் தூது சொல்லி வாழும் பாணனே!

தண்ணளி வாரிதி அனைய வீரையின் மால் இங்கு வரும் ததி உண்டு—வீரகேரளம்புதூரில் உறைகின்ற, கருணைக் கடலாகிய திருமால் (என்னிடத்திலே) இங்கு வரக்கூடிய பருவம் உள்ளது

அந்த நாள் விண்ணவர் ஊர்ப் பாணனை ஓர் பெண்ணாக்கிப் புணர்ந்தது எண்ணி விழைந்து உள்ளாயோ—அந்த நாளில், முன்பு தேவலோகத்திலிருந்த யாழ்வல்ல நாரதரை ஒரு பெண்ணாகச் செய்து அணைந்ததை நினைந்து, அதே போன்று நீயும் அவரை அணையலாம் என விரும்பி யிருக்கிறாயா?

கண் அகல் மா ஞாலம் மிசை உன்னைப் போலும் ஆடவரைக் காண ஒண்ணாதே—இந்த அகன்று விரிந்த உலகத்திலே உன்னைப் போன்ற இழிவான ஓர் ஆண் மகனைப் பார்ப்பது மிக அரிதாகும்.

## குறிப்புரை

தலைவனின் தோழனாக இருப்பவன், அத் தலைமகன் பொருட்டுப் பெண்ணிடம் தூது வந்ததை இழிவாகப் பேசும் தலைவி, தலைவன் வரும் காலத்தை நோக்கிக் காத்திருப்பதை இங்கே உணர்த்துகிறாள். அண்ணகர்—அலிகள். வாரிதி—கடல். ததி—பருவம்.

கண்ணகன்மா ஞாலம்—இடமகன்ற பூமி. மிசை—மீது. ஒண்ணாதே—இயலாதே.

இது, முதல் நான்கு சீர்கள் காய்ச் சீர்களும் இறுதி இரண்டு சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த அறுசீரடிவிருத்தம்.

## இதுவுமது

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

78. ஒண்ணுதற்பொன் உரத்திருந்தும் உந்திப் பூவால்
ஒருமகற்பெற் றார்அதுகண் டூடல் தீர்ப்பான்
நண்ணுமக வொன்றுஅவளும் பெறச்செய் தாண்டார்
நான்ஒருசேய் பெறலும்மெல்ல நழுவிப் போனார்
விண்ணும்மண்ணும் அளந்ததிரு வடிக்கென் வீடு
வெகுதூரம் அன்றுமெய்யா விரும்பில் வீரைக்
கண்ணுறுமால் செவிகுளிர இசைக்கும் பாணா
கைம்மகவு ஆடலிற்பெரிது காமம் அன்றே.

*ஒள் நுதல் பொன் உரத்து இருந்தும் உந்திப்பூவால் ஒரு மகனைப் பெற்றார்*—ஒளி பொருந்திய நெற்றியினை யுடைய இலக்குமிதேவி மார்பகத்தே இருந்தும், (எம்பெருமானனவர்) தம்முடைய கொப்பூழ்க் கொடியில் தோன்றிய தாமரைப் பூவில் பிரமனை மகனாகப் பெற்றெடுத்தார்

*அது கண்டு ஊடல் தீர்ப்பான் நண்ணும் மகவு ஒன்று அவளும் பெறச் செய்து ஆண்டார்*—அவ்வாறு அவர் பெற்றதை அறிந்த திருமகளின் ஊடலைப் போக்குவதற்காக, அவளும் ஒரு குழந்தையைப் பெறுமாறு அருளினார்

*நான் ஒரு சேய் பெறலும் மெல்ல நழுவிப் போனார்*—நான் ஒரு குழந்தையைப் பெற்ற உடனே மெதுவாக (கள்ளனைப் போல) இங்கிருந்து சென்று விட்டார்

*விண்ணும் மண்ணும் அளந்த திருவடிக்கு என் வீடு வெகுதூரம் அன்று மெய்யா விரும்பில்*—அவர் இங்கு வரவேண்டுமென விரும்புவது உண்மையானால் அவர் வருவதில் ஒன்றும் தடையில்லை. அவர்தான் விண்ணையும் இம்மண்ணுலகை யும் ஓரடியால் அளந்தவராயிற்றே! அதனால், இம் மண்ணுலகிலுள்ள என் வீட்டிற்கு வர அதிகமான தொலைவு இல்லை. வரலாம்.

வீரைக் கண் உறும் மால் செவி குளிர இசைக்கும் பாணா—வீரை நகரினைச் சேர்ந்திருக்கும் திருமாலின் காதுறப் பாட்டிசைக்கும் பாணனே!

கை மகவு ஆடலில் பெரிது காமம் அன்றே—(அவர் எனக்கு அளித்த) குழந்தை யொன்று கைகளிலே தவழுவதைக் காட்டிலும் காமம் (அவரை அணையும் காமமாகிய புணர்ச்சி) ஒன்றும் பெரிதல்ல. (என்பதை அவருக்கு உணர்த்துவாயாக.)

## குறிப்புரை

தலைவன் வரவுக்காகக் காத்திருக்கும் தலைவி பாணனைப் பார்த்துப் பாடியது இது.

கண்ணபிரான் பிரமன், மன்மதன் ஆகியோரைத் தம் பிள்ளைகளாகப் பெற்றது போன்றே தமக்குமொரு பிள்ளையை அளித்தார். அதுவே அவர்தம் உறவுக்குச் சாட்சி என்பது அவள் துணிபு.

பொன்—இலக்குமி. உரம்—மார்பு. உந்திப்பூவால் பெற்ற மகவு—பிரமன்.

'உந்தியெழுந்த உருவ மலர்தன்னில்
சந்தச் சதுமுகன் தன்னைப் படைத்தவன்'
(பெரியா. திரு. 2-5-8)

என்பார் பெரியாழ்வாரும்.

விண்ணும் மண்ணும் அளந்த திருவடிக்கு என் வீடு வெகு தூரமோ! என்பது தலைவியின் ஆற்றாமை.

இது, முதல், இரண்டு, ஐந்து, ஆறாம் சீர்கள் காய்ச் சீர்களும், மூன்று, நான்கு, ஏழு, எட்டாம் சீர்கள் மாச்சீர்களு மான **எண்சீராசிரிய விருத்தம்.**

## இரங்கல்

### வஞ்சி விருத்தம்

79. அன்றில்ஒ லிக்கும் அயர்ந்துளம்
கன்றிய மங்கை களிப்புற
வென்றிகொள் வீரையில் மேயமால்
என்றிசை யுங்கொல் இரங்கியே.

அன்றில் ஒலிக்கும் அயர்ந்து உள்ளம் கன்றிய மங்கை களிப்புற—அன்றில் பறவைகள தம்முள் உண்டாக்கும் ஓசையைக் கேட்ட மாத்திரத்தில் மனம் நைந்து போகக் கூடிய இப்பெண் மகிழ்ச்சி கொள்ளுமாறு

வென்றிகொள் வீரையில் மேய மால் என்று இசையும் கொல் இரங்கியே—எப்பொழுதும் வெற்றிச் சிறப்பினையே கொண்டிலங்குகின்ற வீரகேரளம்புதூரினை விரும்பி வாழும் எம்பெருமான் இரக்கங் கொண்டருளப்போவது எந்நாளோ அறிகிலேனே!

### குறிப்புரை

இது, தலைமகளைப் புணர்ந்து சென்று மீண்டு வாராதிருக்கும் தலைமகனையே நினைந்து வாடும் தலைவியின் நிலை கண்டு செவிலித்தாய் கூறிய கூற்று.

அன்றில்—ஒரு பறவை. கன்றிய—மனம் நைந்த. மங்கை—தலைவி. வென்றி—வெற்றிச் சிறப்பு. கொல்—ஐயப்பொருளில் வரும் இடைச்சொல். 'கொல்லேயையம்' (தொல். சொல். 268). எப்பொழுதோ என்ற ஐயப்பொருளை உணர்த்தியது.

இது, முதலும் ஈற்றுச்சீரும் விளச்சீர்களும் இடைச்சீர் மாச்சீராகிய சிந்தடி நான்கு கொண்ட **வஞ்சி விருத்தம்.**

# தலைவி இரங்கல்

## எண்சீர்த் தாழிசை

80. இரலையன்ன விழிமினார்கள் எண்ணிலாரை வீரைமால்
இடமனுப்பி னேன்எனக்கி சைந்தவாறி யம்பிலார்
பரவைநீர்வி ரும்புமேகம் ஆதியாய வற்றினைப்
பார்த்துரைத்த சொல்லெலாம் பயன்படாமை ஞாயமே
கரவில்நெஞ் சைஏவினேன், அதுந்துணிந்து போயதுஎன்
காரியங்க ளைச்சொலிக்க ணத்தழைத்து வந்திடாது
அரவைவென்ற தாளைவெற்பு எடுத்ததோளை நந்தனோடு
அசோதைமோந்த உச்சிஆதி யைப்பொதித் தயர்ந்ததே.

*இரலை அன்ன விழி மின்னார்கள் எண் இலாரை வீரை மாலிடம் அனுப்பினேன் எனக்கு இசைந்தவாறு இயம்பிலார்*—கருமான் கண்களை யொத்த கண்களையுடைய பெண்கள் பலரை வீரைநகர்த் தலைவரிடம் தூதுவிட்டேன். (அவர்கள் தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொண்டார்களே தவிர) என்னுடைய நெஞ்சம் விரும்பிய வண்ணம் என்னைப்பற்றி அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை

*பரவை நீர் விரும்பும் மேகம் ஆதி ஆகியவற்றினைப் பார்த்து உரைத்த சொல் எல்லாம் பயன்படாமை ஞாயமே*—கடலின் தண்ணீரைக் குடிக்கும் கொண்டலையும் தூது வரச்சொல்லி அனுப்பினேன். (அவையும் சென்று திரும்பவில்லை) அவையும் அங்கேயும் தங்கிவிட்டன. என் சொற்களில் எதற்கும் பயன் இல்லை. அதுவும் நியாயம் தானா!

*கரவு இல் நெஞ்சை ஏவினேன் அதுவும் துணிந்து போயது*—கள்ளங்கபடற்ற என் உள்ளத்தைத் தூதாக அனுப்பினேன். அதுவும் (திருமாலை அடைகிறோம் என்ற களிப்பில்) மிக்க துணிச்சலுடன் சென்றது

*என் காரியங்களைச் சொல்லி கணத்து அழைத்து வந்திடாது*—(இங்கு நான் பிரிவால் வருந்திப் புலம்பும்) என்னுடைய

செயல்களையெல்லாம் அவரிடம் எடுத்துக்கூறி உடனே அவரை இங்குக் கூட்டி வராமல்

அரவை வென்ற தாளை வெற்பு எடுத்த தோளை நந்தனோடு அசோதை மோந்த உச்சி ஆதியைப் பொதிந்து அயர்ந்ததே—(எம்பெருமானாகிய என் தலைவர் கண்ண னாக அவதரித்த பொழுது) காளிங்கன் என்னும் பாம்பை அடக்கி அதன்மீது நடனமாடிய திருவடிகளையும், பசுக் கூட்டங்களைக் காக்கக் கோவர்த்தன கிரியைத் தூக்கிய தோள்களையும், ஆயர்பாடியில் யசோதையும் அவள் கணவர் நந்தனும் அடிக்கடி சீராட்டிப் பாராட்டி மகிழ்ந்து முகர்ந்த திருமுடியையும் கண்டு அப் பேரெழிலிலேயே மூழ்கி மயங்கிக் கிடந்ததே! நான் என் செய்வேன்?

## குறிப்புரை

இது, தலைமகளைப் பிரிந்த தலைவனின் வரவை நோக்கித் தலைவி பறவை, மேகம் ஆகியவற்றைத் தூதாக அனுப்பி ஓய்ந்து, இறுதியில் வஞ்சமற்ற அவள் நெஞ்சத்தையே அனுப் பவும், அது எம்பெருமானின் பேரெழிலில் மயங்கிக் கிடப்பதை அறிந்த அவள் இரங்கிக் கூறிய கூற்று.

இரலை—கருமான். அன்ன—உவமையுருபு. மினார்—மின்னார் என்பதன் இடைக்குறை. பரவை—கடல். ஞாயம்—நியாயம். ஏகாரம் வினா; கரவு—களவு, வஞ்சகம். போயது—போனது. அரவு—பாம்பாகிய காளிங்கன். வெற்பு—கோவர்த் தனகிரி. சொலி—சொல்லி. உச்சி—தலை.

தலைவி தன் நெஞ்சம் கள்ளம் கபடு இல்லாதது என்றும், வஞ்சகம் ஏதுமில்லாதது என்றும், அதனால் அது தலைவனாகிய கண்ணபிரான் மீது 'துணிந்து' தூது போனது என்றும் கூறு கிறாள். என் காரியங்கள் என்றது அவள்தம் காதலை. கணத் தழைத்து வந்திடாது என்பதில் அவளுடைய பிரிவாற்றாமை வெகுவாகப் புலப்படும். தலைவனைக் கணப்பொழுது பிரிந்து இருப்பது ஒரு யுகம்போல அவளுக்குத் தோன்றுகிறது. விரைவு வேண்டி அவள் இவ்வாறு மொழிந்தாள்.

"மண்ணவர்க் களப்பில் காலம் வைகுந்த மருவி னோருக்
கெண்ணிடிற் கணமாம் போல வெங்களுக் களப்பில் காலம்
கண்ணநிற் கலந்து வைகிற் கணமரைக் கணமே யேனும்
அண்ணனிற் பிரியி னென்னோ வாயிர முகமா மென்றே."
(பாக. 1-4-59)

'பூமியிலுள்ளோருக்கு அளவிறந்த காலமாகவுள்ளது வைகுந்தப் பதவியை அடைந்தவர்களுக்குக் கணப்பொழுது ஆவது போல, உன்னோடு அளவிறந்த காலம் நாங்கள் சேர்ந்திருந்தாலும், அது கணம் அல்லது அரைக்கணப்பொழுதாம். உன்னைக் கணப்பொழுது பிரிந்திருந்தாலும் அஃது ஆயிரம் யுகம் போலாகி விடும்' எனத் துவரையில் கண்ணனிடம் மனத்தைப் பறிகொடுத்த கோபியர்களின் நெஞ்சத்தை ஒத்ததாகவே இங்குள்ள தலைவியின் நெஞ்சமும் தவிப்பதைக் காணலாம்.

நந்தன்—திருவாய்ப்பாடியிலுள்ள இடையர்கட்குத் தலைவன்; யசோதைக்குக் கணவன்; கண்ணனை வளர்த்த தந்தை. அசோதை—யசோதை—கண்ணனின் வளர்ப்புத் தாய்.

"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்" (திருப். 1)

என்பார் ஆண்டாளும்.

இது, எண்சீர்த்தாழிசை.

## இன்னிசைப் பஃறொடை வெண்பா

81. அயனுரைத்த வேதத் தமைதருபல் தேவும்
புயல்நிறத்து வீரைநகர்ப் புண்ணியனே யென்றோர்ந்து
கொண்டலும் பொல்லாக் குவலயத்து வாஞ்சையறக்
கண்டாலும் நெஞ்சக் கவலையற மாட்டாது
கணணார அன்னோற் கருடப் பரிமீது
விண்ணாடர் சூழ விளங்கும் படிபார்த்துத்
தென்குருகை ஆழ்வான்நேர் சீரியர்செஞ் சொற்பயனை
நன்குணர்ந்து சித்திஒரு நாலிரண்டும் பெற்றமைந்து
பேசாத மோனப் பெருங்கடலிற் புக்குஒருபேர்
ஆசானா நின்றால் அறும்.

அயன் உரைத்த வேதத்து அமைதரு பல தேவும்—பிரமன் சொன்ன வேதங்களில் காணும் வெவ்வேறு தெய்வங்களெல்லாம்

புயல் நிறத்து வீரை நகர்ப் புண்ணியனே என்று ஓர்ந்து கொண்டாலும்—வீரைநகரில் வாசம் செய்யும் நீலமேக வண்ணனான கண்ணனே எனத் தெளிவு கொண்டேன் ஆயினும்

பொல்லாக் குவலயத்து வாஞ்சை அறக் கண்டாலும் நெஞ்சக் கவலை அறமாட்டாது—இப்பூவுலகில் (எம்பெருமானை) ஆசை தீரக் கண் முன்னே பார்ப்பேனாயினும் அடியேனுடைய உள்ளத்திலிருக்கும் துயரம் தீராது (பின் எப்படித் தீருமென்றால்)

கண்ணார அன்னோர் கருடப்பரி மீது விண்ணாடர் சூழ விளங்கும்படி பார்த்து—(இம் மண்ணுலக மக்களே அன்றி) தேவலோகத்தவரும் சுற்றியிருந்து பார்க்கும்படியாகக் கருடப்பறவையின் மேலே ஏறி அடியேன் கண்ணாரக் காணுமாறு அவர் வந்து

தென் குருகை ஆழ்வான் நேர் சீரியர் செஞ்சொல் பயனை நன்கு உணர்ந்து—ஆழ்வார்திருநகரிலேயுள்ள சடகோபாழ்வார் போன்ற ஒப்பற்ற ஆழ்வார்களின் திவ்வியப் பிரபந்தப் பாசுரங்களின் உண்மைப் பொருளை உய்த்துணர்வித்தும்

சித்தி ஒரு நால் இரண்டும் பெற்று அமைந்து—எண்வகையான சித்திகளையும் கிடைக்கப் பெறச் செய்தும்

பேசாத மோனப் பெருங்கடலில் புக்கு—மௌனமாய் ஞான சாகரத்து மூழ்கச் செய்தும்

ஒரு பேர் ஆசானாக நின்றால் அறும்—ஒப்பற்றதோர் ஞான குருவாக அருளினால் அடியேனுடைய உள்ளக் கவலைகள் தீரும்.

## குறிப்புரை

வானவர்க்கும் வானவனாய், எல்லாமாகி நின்றவன் கண்ணனே என்பதைத் தெளிந்த பின்பும், அவரே கனவிலும் நனவிலும் வரக் கண்டும் நெஞ்சக்கவலை அறமாட்டாது என்கிறார். கண்ணபிரானின் கருடப்பரிச் சேவையை அனை

வரும் உடனிருந்து பார்க்குமாறு அருள வேண்டுகிறார். நம்மாழ்வார் போன்றோரின் திவ்விய மொழிகளின் உட்பொருளை உணர்ந்தும், சித்துக்கள் கைவரப்பெற்றும், ஞானகுருவாகக் கண்ணனைக் கண்டால் உள்ளக் கவலைகள் தீரும் என்பது இவர்தம் கருத்து

"நவின்றுரைத்த நாவலர்கள் நாண்மலர்கொண்டு, ஆங்கே
பயின்றதனால் பெற்றபய னென்கொல்—பயின்றார்தம்
மெய்த்தவத்தால் காண்பரிய மேகமணி வண்ணனையான்
எத்தவத்தால் காண்பன்கொ லின்று"

(இயற்பா. இரண்டாந் திருவந்தாதி—86)

என விளம்புவார் பூதத்தாழ்வார். இவ் வினாவிற்கு விளக்கமாகவே இப்பாடல் அமைகின்றது. கண்ணனை ஞானகுருவாக அடைதலே மெய்ப்பயனை யளிக்கும் என்பது குறிப்பு.

அயன்—அஜன்; திருமாலினிடத்தினின்று தோன்றியவன்—பிரமன். (அ—திருமால்). புயல்—மேகம். குவலயம்—பூமி. வாஞ்சை—ஆசை. விண்ணாடர்—தேவலோகத்தவர். தென் குருகை ஆழ்வான்—நம்மாழ்வார். புக்கு—புகுந்து. ஆசான்—குரு.

இது, முதல் ஒன்பது அடிகளும் நன்னான்கு சீர்களை உடையனவாகியும், பத்தாவதாகிய இறுதியடி முச்சீரானியன்றதாகியும், வெண்டளைகள் பெற்றும், தனிச்சொல்லின்றியும் மலர் என்னும் வாய்பாட்டான் முடிந்தும் வந்த **இன்னிசைப் பஃறொடை வெண்பா.**

## கைக்கிளை

கைக்கிளை என்பதற்குச் சிறுமையையுடைய உறவு என்பது பொருள். தலைவி அறியாது தலைவன் மட்டும் காதல் கொள்வதும், தலைவன் உணராது தலைவி அவன்மீது காதல் கொள்வதும் எனப் பாடுவது இத்துறையின் இலக்கணமாகும். இது ஒருதலைக்காமம் ஆகும். இவ்வுறுப்புப் பொதுவாக மருட்பாவால் அமையும். ஆயின், இங்கு ஒரு கட்டளைக் கலித்துறையாலும் ஒரு அறுசீர் ஆசிரிய விருத்தத்தாலும் அமைகின்றது.

## கட்டளைக் கலித்துறை

82. அறுத்ததிங் கட்சிறு கீற்றன்ன
வாணுதல் ஆயிழையாள்
வெறுத்துள்ள போதும் எனதாசை
யிப்படி மேலிடுமேல்
கறுத்தகண் காட்டி நகைத்தால்என்
னாம்கொல் கராசலக்கோடு
இறுத்தகைக் கண்ணபி ரான்தங்கும்
வீரை யிடத்தன்பனே.

கராசலக்கோடு இறுத்த கை கண்ணபிரான் தங்கும் வீரை இடத்து அன்பனே—(குவலயாபீடம் என்னும்) யானையின் தந்தங்கள் இரண்டையும் ஒடித்தெறிந்த புயங்களை யுடைய நவநீதகிருட்டிணர் வாழ்கின்ற வீரகேரளம் புதூரிலுள்ள நண்பனே!

அறுத்த திங்கள் சிறு கீற்று அன்ன வாள் நுதல் ஆயிழையாள் வெறுத்து உள்ள போதும்—வட்ட நிலவைப் பாதியாக நறுக்கியது போன்று, சின்னஞ் சிறிய கீற்றாய் விளங்கும், ஒளி பொருந்திய அழகிய நெற்றியையுடைய என் தலைவி என்னை விரும்பாதபோதிலும்

எனது ஆசை இப்படி மேலிடுமேல் (அவளுடைய பேரெழிலில் மயங்கி) என்னுடைய அளவற்ற காதல் மோகம் இவ்வாறு மிகுக்கும் போது

கறுத்த கண் காட்டி நகைத்தால் என் ஆம் கொல்—(அவள்) தன்னுடைய கருநிற விழியால் நோக்கிப் புன்முறுவல் செய்தால் என்னவாம்! (தாங்க இயலாது.)

### குறிப்புரை

இது, தலைவன் தான் காதல் கொண்ட தலைவியை வியந்து கூறியது.

அன்ன—உவம உருபு. வாணுதல்—வாள் நுதல். ஆயிழை—வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. நகைத்தல்—முறுவலித்தல். கொல்—ஐயப்பொருளை உணர்த்தும் இடைச்சொல். கராசலக்கோடு—குவலயாபீடம் என்னும் யானையின் கடிய கொம்புகள். அன்பனே என்றது பாங்கனை.

"கொடியவெங் குவலயா பீடக் கோட்டினை
அடியொடு மகழ்ந்தவெந் திறனு மார்பொடும்"
(பாக. 3-1-17)

எனக் கம்சனுடைய பட்டத்து யானையாகிய குவலயாபீடத்துக் கோட்டினையே அடியோடு ஒடித்தெறிந்த கண்ணனுடைய தீரத்தைப் பாகவதத்தில் பாராட்டக் காணலாம். அத்தகைய வீரமிக்க கண்ணபிரான் கோயில் கொண்டிருக்கும் வீரையி லிருக்கும் பாங்கனை விளித்துக் கூறுவதாக இது அமைகின்றது.

இது, நிரையசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை.**

## இதுவுமது

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

83. அன்பிலராய்த் தாயிடம் சொற்று அடிக்கவும்செய்
தார்முலைக்கும் ஆசை கொண்டு
முன்பியைந்த முல்லைநிலத் தலைவன் இந்நாள்
வீரையிற்பல் மோக மானார்
நின்பிணையல் நல்கெனநின் றிரந்தாலும்
இரங்குகிலார் நெடுநீர்ப் பாரில்
வன்பிழைத்தார்க் கிதம்புரிந்து வணங்குநருக்கு
ஊறுசெய்யும் வழக்கும் உண்டே.

அன்பு இலராய் தாயிடம் சொற்று அடிக்கவும் செய்தார் முலைக்கும் ஆசை கொண்டு முன்பு இயைந்த முல்லை நிலத்தலைவன்—கண்ணன் சிறுவனாக இருந்தபோது அவனுடைய குறும்புகளை யசோதையிடம் கூறி அடி வாங்கித் தந்த ஆயர்குல மகளிரின் நகிலை விரும்பினான்

இந்நாள் வீரையில் பல மோகம் ஆனார்—அத்தகைய அவன் இன்று வீரை நகரின் மீது விருப்பம் கொண்டு கிடக்கின்றான்

நின் பிணையல் நல்கு என நின்று இரந்தாலும் இரங்குகிலார்—உம்முடைய திருத்துழாய் மாலையைத் தந்தருளுங்கள் என்று மகளிரே வலியச் சென்று கெஞ்சினாலும் இரங்காமல் உள்ளான்

நெடுநீர்ப் பாரில் வன் பிழைத்தார்க்கு இதம் புரிந்து வணங்கு நருக்கு ஊறு செய்யும் வழக்கும் உண்டே—மூன்று பக்கங் களிலும் பெரிதும் தண்ணீரினால் சூழப்பெற்ற இவ்வகன்று விரிந்த உலகத்தில். வலிமை பேசித் திரிபவர்க்கு அருளே நல்கி, உம்மையே சரண் அடைந்தேன் என மன மொழி மெய்களால் போற்றுவோர்க்குத் துன்பமே உண்டாகும் படிச் செய்வதும் வழக்கமாகவே உள்ளன.

## குறிப்புரை

இது, தலைவன் மீது மோகம் கொண்டு மாலை வேண்டி இரந்து கேட்கும் தலைமகள் கூற்று. ஒருதலைக்காதலை உணர்த்திற்று.

தாய்—தலைவின் தாய். சொற்று—சொல்லி. முல்லை நிலத் தலைவன் — கானகநாடன் — கண்ணபிரான். பிணையல்—மாலை. இதம்—நன்மை. ஊறு—தீமை. வழக்கு—வழக்கம்.

வம்பு செய்பவருக்கு நலம் புரிவதும், நன்மை புரிபவரை வாட்டுவதும் உலக இயல்பாக இருப்பதை இங்கே காட்டுகிறார்.

இது, முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும், ஐந்து, ஆறாம் சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த **அறுசீராசிரிய விருத்தம்.**

### எழுசீர் ஆசிரிய விருத்தம்

84. வழங்கென இரக்கும் பேறருள் கில்லாய்
 மாநிலத் திடையுழல் கின்றேன்
பழங்கண்மிக் குதவும் மிடியொடு நோயும்
 படர்வுறப் பண்ணவும் நினையேல்;
கழங்கொலிக் கரத்தார் மலிதரு வீரைக்
 கண்ணனே கானநான் மறைக்கோர்
கிழங்குறழ் வளமை கிளர்நவ நீத
 கிருட்டிணப் பெயர்ப்பெரு மானே.

கழங்கு ஒலி கரத்தார் மலிதரு வீரைக் கண்ணனே—கழங்கு ஆட அவற்றைக் கையிலேந்தி ஓயாது ஆடிக் கூச்சலிடும் இளம்பெண்கள் நிறைந்த வீரகேரளம்புதூரிலிருக்கும் கண்ணபிரானே!

கான நான்மறைக்கு ஓர் கிழங்கு உறழ் வளமை கிளர் நவநீத கிருட்டிணப் பெயர்ப் பெருமாளே—ஆதி மறைகளை அகழ்ந்தெடுத்து வந்த அழியாச் செல்வமாக்கியளித்த நவநீதகிருட்டிணரே

வழங்கு என இருக்கும் பேறு அருள்கில்லாய்—நின்னருளைக் கொடுப்பாயாக என உரிமையோடு கேட்கும் பேறுகூட நீர் அடியேனுக்கு இன்னும் அருளவில்லை

பழங்கண் மிக்குதவும் மிடியோடு நோயும் படர் உறப் பண்ணவும் நினையேல்—துன்பங்கள் மிகுதியாகி, கெடுதலையுண்டாக்கும் வறுமையுடன் உடல் நோய்களும் மிகுதியாகுமாறு (அடியேனைத் துன்புறுத்த) மனத்தாலும் எண்ணாதீர்கள் (இதுவே அடியேன் விண்ணப்பம்).

## குறிப்புரை

இறைவனிடம் வேண்டியவாறெல்லாம் கேட்பதற்கும் அருகதையும் துணிவும் வேண்டும். அந்தத் துணிவை அளிப்பவரும் எம்பெருமானே என்பதால் அதையே இங்கு வேண்டுகிறார். கில்லாய்—மாட்டாய். 'என்னுடை நன்னெஞ்சந் தன்னை அகல்விக்கத் தானும் கில்லானினி' (திருவாய். 1-7-8) என்பார் நம்மாழ்வாரும். பழங்கண்—துன்பம். மிடி—வறுமை. நினையேல்—மனத்தாலும் எண்ணாதீர்.

இது, முதல் மூன்று ஐந்து ஆறாம் சீர்கள் விளச்சீர்களும், இரண்டு நான்கு ஏழாம் சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த **ஏழுசீராசிரிய விருத்தம்.**

### எண்சீர்க் கட்டுவிருத்தம்

85. பெருமை யுடையானும் அருமை நடையானும்
பேத மொழிப்பானும் வாத மழிப்பானும்
தருமர் நசையானும் கருமர் வசையானும்
தன்னிக ராவானும் பொன்னிகழ் பூவானும்
அருமறை வையானும் திருமரு மெய்யானும்
ஐம்படை வைத்தானும் வெம்படை நைத்தானும்
கருணை செறிந்தானும் தருண மறிந்தானும்
காரைமுன் வென்றானும் வீரையில் நின்றானே.

பெருமை உடையானும் அருமை நடையானும்—பொலி
வும் மாட்சிமையும் பெற்றவரும், அரிய திருவிளையாடற் (கூத்து) சிறப்பினைக் கொண்டவரும்.

பேதம் ஒழிப்பானும் வாதம் அழிப்பானும்—பகைவர்களை (இருவினைகளை, வேற்றுமைகளை) ஒழிப்பவரும், பெருங் காற்றினை (முறைப்பாட்டினை) அழிப்பவரும்

தருமர் நசையானும் கருமர் வசையானும்—குந்தி புதல்வர்களில் ஒருவரான தருமனுடைய அன்புக்குரியவரும் (எமனிட மிருந்து காப்பவரும்), ஆய்ச்சியரின் இகழ்ச்சிக்குரியவரும்

தன் நிகராவானும் பொன் நிகழ் பூவானும்—தமக்குத் தாமே ஒப்புமையானவரும், காயா மலர் போன்ற நிறத்தவரும்

அருமறை வையானும் திருமரு மெய்யானும்—மேலான வேதங்களெல்லாம் விளக்க முடியாதவரும், திருமகளை மார்பிடத்தே வைத்தவரும்

ஐம்படை வைத்தானும் வெம்படை நைத்தானும்—சக்கரம், சங்கு, கதை, வில், வாள் ஆகிய ஐந்து ஆயுதங்களைக் கரங்களில் ஏந்தியவரும், கோபம் கொண்ட பகைவர் படையை நசித்தவரும்

கருணை செறிந்தானும் தருணம் அறிந்தானும்—கிருபை மிக்கவரும், மோட்சம் அளிக்கத்தகும் சமயம் அறிந்தவரும்

காரை முன்வென்றானும் வீரையில் நின்றானே—மேகத்தை முன்பு வென்றவருமாகிய நாராயணர் வீரகேரளம் புதூரிலே எழுந்தருளியுள்ளார் (எல்லோரும் சேவித்துய் வீர்கள் என்பதாம்).

## குறிப்புரை

எம்பெருமானின் திவ்விய குணங்களை நிரல்பட எடுத்துக் கூறி, அத்தகையவர் இத்தலத்தில் காட்சி தந்தருள்வதையும் விளக்குகின்றார்.

**இது, எண்சீர்க் கட்டுவிருத்தம்**

## கழிக்கரைப் புலம்பல்

வீரை நவநீதகிருட்டிணனிடம் மனத்தைப் பறிகொடுத்த தலைவியொருத்தி கடற்கரையிலுள்ள ஒவ்வொரு பொருளையும் கூவியழைத்து, அவள் தலைவனிடமிருந்து மாலை வாங்கி வரும்படி பாடுகிறாள். நெய்தல் திணையில் பாடப்பெறும் இத்தகைய செய்யுள் கழிக்கரைப் புலம்பல் என்னும் துறையின் பாற்படும்.

### பன்னிருசீர்த் தாழிசை

86. நின்றி டாத மேகமே பொன்றி டாதென் ஆகமே
நீடி மிஞ்சு புன்னையே நாடி கழ்ந்த தென்னையே
அன்றில் மேவு தாலமே தின்றல் யாவும் ஆலமே
அலையெ றிந்த சங்கமே நிலையி ழந்தது அங்கமே
வன்றி றற்றி ருக்கையே ஒன்றி லன்செ ருக்கையே
வந்து போன தோணியே நொந்து ளேன்உள் நாணியே
வென்றி மாரன் முரசமே துன்றல் முற்றும் விரசமே
வீரை மால்முன் ஓதியே தாரை யீமின் நீதியே.

நின்றிடாத மேகமே பொன்றிடாது என் ஆகமே—ஓரிடத்திலும் தங்காது செல்லும் மேகமே! (அவர் இன்னும் வாராததால்) என்னுடைய உடல் அழியாமல் இருக்காது

நீடி மிஞ்சு புன்னையே நாடு இகழ்ந்தது என்னையே—வானளவும் நீண்டு வளர்ந்த புன்னை மரமே! (அவர் என்னை வந்து புணர்ந்து சென்றார் என்பதைக் கேட்டு அலர் தூற்றி) ஊரார் எல்லாம் தூற்றியது என்னைதான்

அன்றில் மேவும் தாலமே தின்றல் யாவும் ஆலமே—அன்றிற் பறவைகள் வாழும்படியாக அடர்ந்த இலைகளையுடைய பனை மரமே! (அவரை நினைந்து நினைந்து எதுவும் எனக்குப் பிடிக்கவில்லை) நான் தின்னும் சோறும் அருந்தும் பாலும் எல்லாம் ஆலகால விடம் போலவே கசக்கின்றன

அலை எறிந்த சங்கமே நிலை இழந்தது அங்கமே—கடல் அலைகள் கரையில் கொண்டுவந்து சேர்த்த சங்குகளே!

(அவர் என்னிடம் கூறியபடி விரைவில் வராததால்) இயல்பு நிலையிலிருந்து மாறுபட்டு அழகு குறைந்தது என்னுடைய உடல்தான்

வன்திறல் திருக்கையே ஒன்றிலன் செருக்கையே—கடல் அலைகளில் பாய்வதில் வலிமை மிக்க திருக்கை மீனே! (அவர் என்னை வந்து காணக்கூடாது என்னும்) ஆணவத்தை விடுவாரில்லை

வந்து போன தோணியே நொந்து உள்ளேன் உள் நாணியே—(மீன் பிடிப்பதற்காக கடலுக்குள்) செல்வதும் பின் கரைக்கு வருவதுமாக, அலைகளில் மிதக்கும் மரக் கலங்களே! (அவர் இப்படி எனக்குத் துரோகம் செய்ததை எண்ணி எண்ணி) மனம் வெதும்பி, என் மனநிலையில் வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டுக் கொண்டிருக்

வென்றி மாரன் முரசமே துன்றல் முற்றும் விரசமே—(காதல் கலைகளில்) வெற்றியே முழங்கும் மன்மதன் பறையே! (அவர் என்னைக் கைவிட்டதனால்) எனக்கு வந்து சேர்வதெல்லாம் ஊரார் நிந்தையேதான்

வீரை மால் முன் ஓதியே தாரை ஈமின் நீதியே—(என்னுடைய இத்தகைய துன்பங்களையெல்லாம் உணர்ந்த நீங்கள்) வீரகேரளம்புதூரில் வாழும் கண்ணபிரானிடம் சென்று வலியுறுத்திக்கூறி, அவரிடமிருந்து திருத்துழாய் மாலையை வாங்கி வந்து என்னிடம் தருவீர்களாக. அதுவே நியாயமானதும் முறையானதுமான செயலாகும்.

## குறிப்புரை

இது, நெய்தற் றிணைக்கவி, கழிக்கரைப் புலம்பல். நவநீத கிருட்டிணரிடம் நெஞ்சம் பறிகொடுத்த தலைவி இரங்கிப் பாடும் பாடல்.

பொன்றல்—அழிதல். ஆகம்—உடம்பு. புன்னை—புன்னை மரம். அன்றில்—பறவை. தாலம்—பனைமரம். ஆலம்—விடம், ஹாலாஹலம் என்ற வடசொல்லின் சிதைவு. அலை—கடல் அலை. சங்கம்—சங்கு. அங்கம்—உடம்பு, திருக்கை—ஒருவகைக் கடல்மீன். செருக்கு—ஆணவம், தோணி—படகு, மரக்கலம்,

நாணம்—வெட்கம். மாரன்—மன்மதன். துன்றல்—நெருங்கல், சேரல். விரசம்—நிந்தை. தார்—மாலை. ஈற்றேகாரம்—இரக்கக் குறிப்பு.

இது, அடிதோறும் வழியெதுகைகளும் இயைபுத் தொடையும் பொருந்தி மிகுந்த ஓசையின்பத்தைப் பயந்த **பன்னிருசீர்த் தாழிசை.**

## இதுவுமது

### பன்னிருசீர் மடக்குத் தாழிசை

87. தியங்கும் பலரா மீனாரே
சிரிப்பார் பலரா மீனாரே
திரையி னதுகைக் குலவளையே
சிந்தி னதுகைக் குலவளையே
வயங்கு முருவில் லவனானே
வளரு முருவில் லவனானே
மலரு மருவார் கேதகையே
மலியு மருவார் கேதகையே

கயங்குங் காராம் பல்மலரே
கரும்போர் காராம் பல்மலரே
கணித்தற் கரிய வண்டினமே
கருத்துட் கரிய வண்டினமே
இயங்குஞ் சவளக் கண்ணனையே
என்னே சவளக் கண்ணனையே
இணக்க வீரைக் கேகலனே
இளையான் வீரைக் கேகலனே.

*தியங்கும் பலர் ஆம் மீனாரே சிரிப்பார் பலர் ஆம் மீனாரே—கடலில் அங்கங்கே பலராக அலைந்து திரியும் மீனவர்களே (என்னுடைய இழி நிலையை பார்த்து) ஏளனம் செய்பவர்களே மிகுதி. இதற்கு அந்த மச்சாவதாரமெடுத்தோரே காரணம் என்பதை அறிவீராக*

*திரையினது கைக்குலவு வளையே சிந்தினது கைக்குலவளையே—அலைகளின் கரங்களிலே ஒளி வீசி வருகின்ற சங்குகளே! (என் தலைவர் வராமையினால் என் உடல் மெலிந்து அதனால்) கழன்று விழுந்தவை என் கைவளையல்களே*

வயங்கும் உருவில்லவ னானே வளரும் முருவில்ல வனானே— உருவில்லாவிடினும் எப்பொழுதும் நடக்கும் மன்மதனே! (என்துன்பம் மிகுவதற்குக் காரணம்) அழகிய வில்லை ஏந்திய அந்த எம்பெருமானே

மலரும் மருவு ஆர் கேதகையே மலியும் மருவார் கேதகையே— நறுமணம் மிக்க மலரைக் கொண்ட தாழையே! என்னை அவர் நயமுடன் கைகளால் அணைப்பாரில்லை. கைகள் என்ன குற்றம் புரிந்தனவோ அறியேன்

கயங்கும் கார் ஆம்பல் மலரே கரும்போர் காராம் பல்மலரே— மெல்லிய இதழ்கள் கொண்ட அழகிய ஆம்பல் மலரே! மன்மதன் எய்யும் பல மலர் அம்புகளால் எனக்கு அச்சமும், மனத்துள் போராட்டமுமே மிகுகின்றன

கணித்தற்கு அரிய வண்டினமே கருத்துள் கரிய வண்டினமே— எண்ணுதற்கு அரிதான வண்டினமே! என்னுடைய எண்ணத்துள்ளெல்லாம் தினமும் இருப்பவர் அக் கரியவ ரான கண்ணபிரானே

இயங்கும் சவளக் கண் அனையே என் நேசவளக்கண்ணனையே —மீன்களைப் பிடித்து விற்றுக்கொண்டு அங்குமிங்கும் அலை பாயும் கண்களுடன் திரியும் செம்படவ மகளிரே! என் அன்புக்குரியவரான கண்ணனையே நான் தேடுகிறேன் (கண்டால் கூறுவீர்களாக)

இணக்க வீரைக்கு ஏகலனே! இளையான் வீரைக்கே கலனே— கடலில் இயல்பாகப் போகும் மரக்கலமே! இளமை நலம் மிக்க என்னுடைய கண்ணபிரானானவர் இந்த வீரகேரளம் புதூருக்கே அணிகலனாகத் திகழ்பவர்.

## குறிப்புரை

இதுவும் நெய்தற் றிணைக்கவி. கழிக்கரைப் புலம்பல். கண்ணபிரானிடம் நெஞ்சம் பறி கொடுத்த தலைவி இரங்கிப் பாடும் பாடல்.

இது, மூன்று ஆறு ஒன்பது பன்னிரண்டாம் சீர்கள் காய்ச் சீர்களும் மற்றைய எட்டுச் சீர்களும் மாச்சீர்களுமாகி வந்து அடிதோறும் வழியெதுகைகளும் இயைபுத் தொடையும் பொருந்தி இனிய ஓசையின்பத்தைப் பயந்த **பன்னிருசீர் மடக்குத் தாழிசை.**

## நேரிசை வெண்பா

88. கலனணிந்த மங்கையரைக் கண்டுள் உருகி
நலனழிந்தி டாதுனருள் நல்காய்—பலவளமும்
வாய்ந்த திருவீரை மன்னாவல் வாணன்ஒல்கக்
காய்ந்தமணித் தோள்கொள்குழ கா.

*பலவளமும் வாய்ந்த திருவீரை மன்னா—நீர்வளமும் நிலவளமும் எனப் பல வளமைச் சிறப்புடைய திருமகள் குடி கொண்டிருக்கும் வீரகேரளம்புதூரின் அரசே!*

*வல் வாணன் ஒல்க காய்ந்த மணித்தோள் கொள் குழகா—வலிமைபொருந்திய வாணாசுரன் தளரும்படியாக அவனை வதைத்த, திருத்துழாயணிந்த புயமுடையோரே! தேவகி மைந்தா!*

*கலன் அணிந்த மங்கையரைக் கண்டு உள் உருகி நலன் அழிந்திடாது உன் அருள் நல்காய்—(புற அழகிற்காக) பொன், முத்து முதலியவற்றாலான அணிகலன்களை அணிந்திருக்கும் பெண்களைப் பார்த்து (அவர்களை அடைய வேண்டுமென) மனத்தினுள்ளே உருகி நினைந்து, (உம்முடைய திருவடிகளை அடைய வேண்டுமென்னும் மெய்யுணர்வு ஆகிய) நன்மைகள் எல்லாம் சிதையாதவாறு உம்முடைய இன்னருளை அளிப்பீராக!*

### குறிப்புரை

*பெண்டிரின் மாய மயக்கால் மதியிழக்காமல் இருக்க மாயவன் திருவருளே வேண்டுகின்றார் இவர். வீரையில் கோயில் கொண்டுள்ள மாயவன்அன்று வாணனை அழித்த வரலாற்றை எடுத்துரைத்துத் தம்மையும் காக்கவேண்டுகிறார்.*

*குழகன்—அழகன், இளமையானவன், கண்ணன். 'குழகனே யென்றன் கோமளப்பிள்ளாய்' என்பார் குலசேகராழ்வார் (பெரு.திரு. 7-7), 'குழகன் சிரீதரன் கூவக்கூவநீ போதியேல்' என்பார் பெரியாழ்வார் (பெரிய. திரு. 1-4-5).*

## வாணன் கரங்களை வீசிய வரலாறு

பலிசக்கரவர்த்தியின் மகனான பாணாசுரனது மகளான உஷையென்பவள், ஒருநாள் ஒருபுருடனோடு தான் சம்போகஞ் செய்ததாகக் கனாக்கண்டு, அவனிடத்தில் மிகவும் ஆசை கொண்டு, தன் உயிர்த்தோழியான சித்திரலேகைக்கு இச் செய்தியைத் தெரிவித்தாள். அவள் மூலமாய் அவன் கிருட்டிணனது பேரனும் பிரத்யும்நனது குமாரனுமாகிய அநிருத்தனென்று அறிந்து கொண்டாள். அவனைப் பெறுதற்கு உபாயஞ் செய்ய வேண்டுமென்று அத் தோழியையே வேண்ட, அவள் தன் யோகவித்தை மகிமையால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக் கொண்டு வந்து அந்தபுரத்திலே விட உஷை அவனோடு போகங்களை அநுபவித்து வந்தாள். இந்தச் செய்தியைக் காவலாளராலறிந்த அப்பாணாசுரன் தன் சேனையுடன் அநிருத்தனை எதிர்த்து மாயையினாலே பொருது நாகாத்திரத்தினாற் கட்டிப்போட்டான். துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாம் கலங்கியிருந்த போது, நாரதமகாமுனிவரால் நடந்த வரலாற்றை அறிந்து கொண்ட கண்ணபிரான் பெரிய திருவடிகளை நினைந்தருளி உடனே வந்து நின்ற அவர் தோள்மேல் ஏறிக்கொண்டு பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளிப் போர் செய்து சக்கரத்தை எடுத்துச் செலுத்தி அப்பாணனது ஆயிரந்தோள் களையுந் தாரை தாரையாய் இரத்தம் ஒழுக அறுத்துவிட்டனர்.

"மாயப்பொருபடை வாணனை ஆயிரந்தோளும்
பொழிகுருதி
பாயச் சுழற்றிய ஆழிவல் லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே"
(திருப்பல்-7)

"சென்றங்கு வாணனை ஆயிரந்தோளும்
திருச்சக்கரமதனால்
தென்றித் திசைதிசை விழச் செற்றாய்"
(பெரியா.திரு. 5-3-9)

என வாணாசுரனை வதைத்த வரலாற்றை விளக்குவார் பெரியாழ்வார்.

இது, இருவிகற்பத்தால் வந்து நாளென்னும் வாய் பாட்டான் முடிந்த **நேரிசை வெண்பா**.

## கார் காலம்

கார் காலத்தில் திரும்பி வருவதாகக் கூறிப் பிரிந்து சென்ற தலைவன் அக் கார் காலம் வந்தும் திரும்பி வராததால் தலைவியின் பிரிவாற்றாமை மிகுந்ததைக் காட்டுமாறு பாடுவது இத் துறையின் இலக்கணமாகும். இது முல்லைத் திணையில் நிகழ்வதாகும்.

### கட்டளைக் கலித்துறை

89. குழல்கண்டு நாணுறு மேகஞ்சற் றேசினைக் கொண்டிடினும்
அழல்கண்ட மென்மெழு காகுகின் றாள்கழங் கம்மனைமென்
தழல்கண்ட கைக்கன்னி என்செய்கு வாள்வந்து தாங்குபெரு
நிழல்கண்ட பன்மருதார் வீரை காக்கும் நெடியவனே.

தாங்கு பெரு நிழல் கண்ட பல் மருது ஆர் வீரை காக்கும் நெடியவனே—பெரிய நிழலைத் தரும் மருதமரங்கள் அனேகம் நிறைந்த வீரை நகரினைக் காத்தருளும் கண்ணபிரானே!

குழல் கண்டு நாண் உறும் மேகம் சற்றே சினைக் கொண்டிடினும்—என் மகளின் கூந்தலைப் பார்த்து வெட்கங் கொண்ட மேகங்கள் நாணத்தால் (ஒன்றுடன் ஒன்று நெருங்கிச் சேர்ந்து) கருப்பம் (கருமைநிறம்) அடைந்தாலும்

அழல் கொண்ட மென்மெழுகு ஆகுகின்றாள்—(அம்மேகத்தைக் கண்டதும்—அதன் கருமை நிறத்தால்) தன் தலைவனாகிய கண்ணனை நினைந்து, பிரிவுத்துயர் மிகுந்து, தீயில் எரியும் மெழுகு போல உருகிப் போகின்றாள்

கழங்கு அம்மனை மென்தழல் கண்ட கை கன்னி என் செய்கு வாள் வந்து—பருவ மகளிர் விளையாடும் கழங்கு, அம்மனை, தழற்கல் ஆகியவற்றைக் கையிலேந்திய கன்னிப் பெண்ணாகிய அவள் வந்து என்ன குற்றம் செய்தனளோ? (அவளை வந்து காப்பாற்றுவாயாக.)

### குறிப்புரை

நீலமேக வண்ணனான கண்ணனின் கருமை நிறத்தை மனத்தகத்தே கொண்ட தலைவி, வானத்தில் மேகக் கூட்டங் களைக் கண்டவிடத்தெல்லாம் தன் தலைவன் நினைவு கொள் கின்றாள். உடல் மெலிகின்றாள். இயல்பான மகளிர் விளையாட்டுகளில் ஆர்வமில்லாதவளாகிறாள் என இவ்வாறு தலைவி கார்காலத்தில் பிரிவால் துயருறுவதைக் காட்டுகிறார்.

பிரிவுத் துயரமாகிய நெருப்பில் அவள் மென்மையான உடலும் உருகியது என்பதற்கு 'அழல் கண்ட மென் மெழுகை' உவமையாக்கினார். மருது—மருத மரம். நெடியவன்—கண்ணபிரான். ஆர்—நிறைந்த.

இது, நிரையசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை.**

## இதுவுமது

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

நெடியவில்லும் கருநிறமும் பேரருளும்
கமலமும்பொன் னேர்சீர் மின்னும்
படிமிகவாழ் தலின்விருப்பும் பாவவுயிர்
நடுங்கொலியும் படைத்துப் பற்பல்
கொடிதிகழ்மா மதிள்வீரைக் கோயில்வளர்
மாயவன்போற் கொண்மூத் தோற்றிற்று
ஒடிவுறுங்கொல் என்னும்இடைக் கொம்பனையாள்
களியொடின்னல் உற்றா ளன்றே.

முதல் இரண்டடிகள் மேகத்திற்கும் மாயவனுக்கும் சிலேடை:

**மேகம்**

நெடிய வில்லும்—நீண்ட வானவில்லையும்

கரு நிறமும்—கரிய வண்ணத்தையும்

பேர் அருளும்—உயிர்களுக்கு மழை பொழிந்து உதவும் மிக்க கருணையையும்

கமலமும்—நீரையும் (நீருண்ட மேகம் என்றவாறு)

பொன் ஏர் சீர் மின்னும்—ஒளியாலும் எழிலாலும் சிறப்புடைய மின்னலையும்

படிமிக வாழ்தலின் விருப்பும்—உலகத்து உயிர்கள் நன்றாக வாழ்தலால் தம் மீது கொள்ளும் வேட்கையும்

பாவ உயிர் நடுங்கு ஒலியும் படைத்து—உயிர்களுக்குத் தீமை புரிகின்ற (பாம்பு போன்றவை) அஞ்சுகின்ற இடிமுழக்கத்தையும் பெற்று

**மாயவன்**

நெடிய வில்லும்—சார்ங்கம் என்னும் நீண்ட வில்லையும்

கருநிறமும், பேர் அருளும்—கொண்டல் வண்ணமும் கருணையும்

கமலமும்—திருவுந்தித் தாமரையும்

பொன் ஏர் சீர் மின்னும்—திருமகளாகிய அழகும் சிறப்பும் மிக்க பெண்ணையும்

படிமிக வாழ்தலில் விருப்பும்—உலகத்தில் உயிர்களை எல்லாம் காத்தற் தொழில் புரிவதில் இச்சையும்

பாவ உயிர் நடுங்கு ஒலியும் படைத்து—மறத்தன்மை மிக்க அசுரர்களை அஞ்சப் புரிகின்ற சங்க நாதத்தையும் பெற்று

பற்பல் கொடி திகழ் மா மதிள் வீரைக்கோயில் வளர் மாயவன் போல் கொண்டு தோற்றிற்று—வெவ்வேறு வண்ணங் களிலான கொடிகள் பல பறந்து கொண்டிருக்கின்ற உயர்ந்த அரண்களையுடைய வீரை நகர்க் கோயிலிலே வாசஞ் செய்கின்ற கண்ணபிரானைப் போன்று மேகமும் தோன்றியது

ஒடிவு உறும் கொல் என்னும் இடை கொம்பு அனையாள் களியொடு இன்னல் உற்றார் அன்றே—எப்பொழுது முறியுமோ என மிக மெல்லிய கொடி போன்ற இடையை யுடைய தலைவி உவகையுடன் துன்பம் மிகப் பெற்றாள். அன்று ஏ—அசை.

## குறிப்புரை

கார் காலம் வந்ததும் திரும்பி வருவதாகக் கூறிப் பிரிந்து சென்ற தலைவனை எண்ணி ஆற்றியிருக்கிறாள் தலைவி. கார் காலம் வந்து விட்டது ஆனால் காதலன் வரவில்லை. எனவே வருந்துகிறாள். எனினும் வார்த்தை தவறாத தன் மணாளன் விரைவில் வந்துவிடுவான் என்னும் நம்பிக்கையால் மகிழ்ச்சியும் அடைகிறாள்.

மேகங்களைப் பார்த்த உடனே கார்காலம் வந்துவிட்டது என மகிழ்ச்சி. அடுத்த கணம் தலைவன் வரவில்லையே என்ற வருத்தம் என்பது தோன்ற களியொடு இன்னல் என வரிசைப் படுத்தினார்.

இது கவிக்கூற்று. பாங்கியின் கூற்று எனினும் இழுக்கின்று

வில்—வானவில், சார்ங்கம்; கமலம்—தண்ணீர், உந்தித் தாமரை; பொன்—ஒளி, திருமகள்; மின்—மின்னல், மின்னலைப் போன்ற பெண், இரண்டாவது பொருளில் உவம ஆகுபெயர். படிமிக வாழ்தலின் என்புழி மேகத்தின்மேற் செல்லும் பொழுது இன் என்னும் ஐந்தனுருபு ஆல் என மூன்றன் பொருளில் வந்த உருபு மயக்கம். மாயவன் பக்கலில் கூறும்போது இன் ஏழன் உருபு. கொண்மூ—மேகம். களி—மகிழ்ச்சி. இன்னல்—துன்பம்.

கொண்மூ மாயவன்போல் தோற்றிற்று; கொம்பனையாள் களியோடு இன்னல் உற்றாள் என்பது முடிவு.

‘ஆழிமழைக் கண்ணா’ (திருப். 4) என்னும் ஆண்டாள் பாசுரத்தை இப்பாடல் நினைவூட்டுகிறது.

இது, முதல் இரண்டு மூன்று நான்காம் சீர்கள் காய்ச்சீர் களும், ஐந்து ஆறாம் சீர்கள் மாச்சீர்களுமாகி வந்த **அறுசீராசிரிய விருத்தம்.**

## பனிக்காலம்

### வெண்டளைக் கலிப்பா

91. ஆளரியாய் ஆடகனை அட்டான் அணிவீரை
வாளரிக்கண் மின்னார் மகிழ்ந்தார் சிலர்சிலர்தாம்
தேளணுகக் கண்டாரிற் சிந்தைநொந்தார் செங்கதிர்வெங்
கோளதன்தேர் தையிற் குறுகும்நாள் வந்ததென்னே

ஆளரியாய் ஆடகனை அட்டான்—நரசிம்ம மூர்த்தியாகி இரணியனை அழித்தார் ஆகிய கண்ணபெருமானின் ஊராகிய

அணி வீரை வாள் அரிக்கண் மின்னார் சிலர் மகிழ்ந்தார்—அழகிய வீரைநகரில் வாள் போன்றதும் செவ்வரிகளை உடையதுமாகிய கண்களையுடைய மகளிர் சிலர் (தம் காதலர் வரலால்) மகிழ்ந்தனர்

சிலர்தாம் தேள் அணுகக் கண்டாரில் சிந்தை நொந்தார்—(இன்னும் தம் தலைவர் வராத நிலையில்) வேறு சிலபேர் கொட்டுவதற்குத் தேள் வருவதைப் பார்த்தவர் போல உள்ளம் கலங்குகின்றார்கள்.

செங்கதிர் வெம் கோள் அதன் தேர் தையில் குறுகும் நாள் வந்தது என்னே—சூரியனின் தேர் தையில் (மகரராசியில்) வந்தது என்னே.

#### குறிப்புரை

ஆளரி—சிங்கவேறு, நாரசிங்கமாகிய கண்ணபிரான். ஆடகன்—இரணியன். ஆடகம்—பொன்னைக் குறிக்கும்போது ஹாடக மென்னும் வடமொழியின் விகாரம். வாள் அரிக்கண்—வாள் போன்றதும் செவ்வரி படர்ந்ததுமாகிய கண்கள். மின்னார்—பெண்கள். என்னே—இரக்கச் சொல்.

பனிக் காலத்தே கூடியிருந்த காதலர் மகிழ்வும் பிரிந்திருந்தோர் நடுக்கமும் எய்தினர் என்றவாறு.

இது, அடிதோறும் நாற்சீர் பெற்று வெண்டளை பயின்று வந்த வெண்டளைக் கலிப்பா.

## எழுசீர் முடுகு விருத்தம்

92. வந்தூரும் மாரன் முதல்வாளி வெந்து
மடிகின்ற காலம் வரலும்
இந்தூரு மாட மலிவீரை மாயன்
இருதோள்பு ணர்ந்த மடவார்
நொந்தூரு மாயும் இகழத்த ளர்ந்து
நோற்கின்ற மாதர் பெருமோ
கந்தூரு மாறு கருதாமல் ஆடை
கலன்மாலை கோடல் இயல்பே.

வந்து ஊரும் மாரன் முதல்வாளி வெந்து மடிகின்ற காலம் வரலும்—தென்றலாகிய தேரைச் செலுத்தி வரும் மன்மதனுடைய முதல் கணையாகிய தாமரை கருகி அழிகின்ற பனிக்காலம் தோன்றியதும்

இந்து ஊரும் மாடம் மலி வீரை மாயன் இருதோள் புணர்ந்த மடவார்—சந்திரன் தம்மீது தோயும்படி வானளாவிய மாளிகைகள் நிறைந்த வீரகேரளம்புதூரில் திருக்கோயில் கொண்டு விளங்கும் கண்ணபெருமானின் பெரிய புயங்களைத் தழுவி மகிழ்ந்தவராகிய மகளிர்

நொந்துஊரும் ஆயுதம் இகழத் தளர்ந்து—மனம் வருந்தி, ஊராரும் தாயாரும் பழிக்கும் பழிகளால் உள்ளம் ஒடிந்து

நோற்கின்ற மாதர்—தம் தலைவனை விரையில் காணவேண்டும் என நோன்பிருக்கும் பெண்களுடைய

பெருமோகம் தூருமாறு கருதாமல்—பெரிய காதலால் விளைந்த துயரத்தை அழித்தொழிக்க மனங்கொள்ளாமல்

ஆடை கலன் மாலை கோடல் இயல்பே—அவர்களுடைய உடையையும், கைவளை முதலிய அணிகலன்களையும் மலர் மாலைகளையும் பறித்துக் கொள்ளுதல் உனக்கு அழகாகுமோ?

### குறிப்புரை

காமனின் மலர்க்கணைகள் ஐந்தில் தாமரை முதலாவது. இம்மலர் பனியில் கருகி வாடிவிடும் தன்மையது.

பனிக்காலம் வந்ததால் வீரைக் கண்ணபிரானின் காதலியர் பலர் பிரிவாற்றாமையால் மிக வருந்துகின்றனர். அவர்களுடைய துயரத்தைக் கண்ட பிறர் அலர் தூற்றிப் பழிக்கின்றனர். காதலனின் கடமை அவர்களை அணைந்து துயரத்தை துடைப்பது ஆகும். ஆனால் கண்ணன் அவ்வாறு செய்யாமல் காலம் நீட்டிக்கிறான். அதனால் அவர்கள் மிகமெலிந்து உடைகளையும் வளைகளையும் இழக்கின்றனர். இது தகுமா என்பது கருத்து. தகாது என்பது குறிப்பு வினா எதிர்மறையின் பொருட்டு.

இது கண்டோர் கூற்று. கவிக்கூற்று எனினுமாம்.

இது, முதல் மூன்று ஐந்தாம் சீர்கள் காய்ச்சீர்களும், நான்கு ஆறு ஏழாம் சீர்களுமாகி வந்த **எழுசீர் முடுகு விருத்தம்.**

## வேனிற் காலம்

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

93. இயல்முனிபோற் றியபுகழ்ச்செந் திருவை மார்பி
 னிடத்தமைத்தோன் வீரைநகர்க் கேகி வைகிக்
கயலெழுதும் கேதனத்தான் தென்றற் தேர்ஊர்
 கடுவேனிற் காலமதைக் கழிக்கை நன்றாம்
வியனுறுமற் றெத்தலத்தில் வசித்திட் டாலும்
 வெய்யவன்தீக் கதிர்ச்சுட்டால் வெதும்பி ஏங்கிப்
பயமிகக் கொண்டல மருவீர் சொன்னேன்போம்
 பாருலகீர் மருதனனம் பாலிப் பானே.

இயல் முனி போற்றிய புகழ்ச் செந்திருவை மார்பின் இடத்து அமைத்தோன் வீரை நகருக்கு ஏகி வைகி—அகத்திய முனிவர் துதி செய்த சிறப்புமிகு இலக்குமி தேவியை மார்பினிடத்தே தங்கியிருக்க வைத்திருக்கும் திருமால் குடிகொண்டிருக்கும் வீரகேரளம்புதூருக்குச் சென்று தங்கி

கயல் எழுதும் கேதனத்தான் தென்றல் தேர் ஊர் கடுவேனில் காலமதைக் கழிக்கை நன்றாம்—மீன்கொடியோ னாகிய

மன்மதன் தன்னுடைய தேராகிய தென்றலிலே ஊர்ந்து வரும் கோடைக்காலத்தை மகிழ்ச்சியுடன் போக்குவது சிறப்பாகும்

வியன் உறு மற்று எத்தலத்தில் வசித்திட்டாலும் வெய்யவன் தீக்கதிர்ச் சூட்டால் வெதும்பி ஏங்கி பயம் மிகக் கொண்டு அலமருவீர்—பெருமை மிக்க வேறு எந்த ஊரில் (இக்காலத்தில்) தங்கினாலும் சூரியனுடைய நெருப்புப் போன்ற கிரணங்கள் வீசும் வெம்மையில் வெந்து அதனால் துன்பம் மிகுந்து (இக்காலம் என்று போகுமோ என) அச்சமுடன் வருந்துவீர்கள்

சொன்னேன் போம் பார் உலகீர் மருதன் அன்னம் பாலிப்பானே—நான் கூறுவது போன்றே (வீரை நகருக்குச்) செல்வீராக! உங்கள் அனைவருக்கும் எல்லாக் காலங்களிலும் மருத வள்ளல் உறுதியாகச் சோறு அளித்து உபசரிப்பார் என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

## குறிப்புரை

வீரகேரளம்புதூரின் இயற்கைச் சிறப்பையும் இருதயாலய மருதப்பத் தேவரின் விருந்தோம்பல் சிறப்பையும் இங்கே எடுத்துரைக்கின்றார். திருமகளே மார்பிலிருக்கும்படியாக இவ்வூரில் குடிகொண்டிருக்கும் திருமாலைச் சுட்டி இதன் செல்வச் சிறப்பை விளக்குகிறார். வேனிற்காலத்தில் இயற்கையிலேயே இங்கு வெப்பம் குறைவாக இருப்பதை அறியலாம். (அருகில் குற்றாலமலை இருப்பதும் அறியத்தக்கது!) இக்காலங்களில் இங்குப் பலரும் வந்து கூடுவர். அவர்கள் அனைவரையும் மருதப்பத்தேவர் விருந்தோம்பி உபசரித்து அனுப்புவது வழக்கம். எனவே, இங்கு அனைவரையும் ஆற்றுப் படுத்துகிறார் ஆசிரியர்.

இயல்முனி—அகத்தியர். செந்திரு—இலக்குமி. கயல்—மீன். கேதனம்—கொடி. மன்மதன் மீன்கொடி யுடையவன். தென்றல்—மன்மதனின்தேர், தென்றல் காற்று. வியன்—பெருமை. தலம்—ஊர். வெய்யவன்—சூரியன். அலமரல்—அச்சங் கொள்ளுதல். மருதன்—இருதயாலய மருதப்பத்தேவர் அனம்—அன்னம், சோறு, உணவு. பாலித்தல்—அருளுதல்.

இது, முதல் இரண்டு ஐந்து ஆறாம் சீர்கள் காய்ச்சீர்களும், மூன்று நான்கு ஏழு எட்டாம் சீர்கள் மாச்சீர்களுமாகிய வந்த **எண்சீராசிரிய விருத்தம்.**

## காற்றுக் காலம்

### இரட்டையாசிரிய விருத்தம்

94. பாலுததி யிற்பரும் பாம்பணைத் துயில்கொண்ட
பச்சைநெடு மேனி அம்மான்
பார்மடந் தைக்குவகை நல்கவென வீரையம்
பதியில்வந் துற்ற படியே

மேலுலகம் ஆதிகளில் மருவுபழ அடியார்கள்
வெப்பம் தணிப்ப ஏகும்
வேலைஅவன் ஊர்கருட னுடன்என்மு னேகொணர
வெஃகினு முடிக்குங் கொலோ?

நாலுதிசை களும்நடுந டுங்கவட மேருவின்
நடுச்சென்னி மூன்று பேர்த்து
நளிர்கடலில் இட்டுஆயி ரத்தெட்டு மாற்றுப்பொன்
நல்கு மாற்றைப் பெருக்கிச்

சாலும்ஒளி யுற்றஇரு சுடரும்உடு வினமும்
தரைப்புழுதி ஆட ஆட்டித்
தன்னில்வலி யார்இலர் எனும்செருக் குற்றுலவு
சண்ட மாருத மூர்த்தியே.

**பால் உததியில் பரும் பாம்பு அணைத் துயில் கொண்ட பச்சை நெடுமேனி அம்மான்**—திருப்பாற்கடலில் ஆதிசேடன் என்னும் பாம்பணையில் அறிதுயில் புரிந்த மரகதமணி போன்ற நெடியோனாகிய திருமால்

**பார் மடந்தைக்கு உவகை நல்க என வீரையம்பதியில் வந்து உற்றபடியே**—பூமாதேவிக்கு மகிழ்ச்சியுண்டாகும்படியாக வீரகேரளம்புதூரிலே வந்து தங்கியவாறே

**மேல் உலகம் ஆதிகளில் மருவும் பழ அடியார்கள் வெப்பம் தணிப்ப ஏகும் வேலை**—விண்ணுலகம் போன்றவற்றில்

கூடியிருக்கும் திருமாலடியார்கள் துயரத்தைப் போக்கப் போகும்பொழுது

அவன் ஊர் கருடனுடன் என் முன்னே கொணர வெஃகினும் முடிக்கும் கொல்லோ—அத் திருமால் ஏறிச்செல்லும் கருடனுடன் அவரை என் எதிரில் கொண்டுவந்து நிறுத்த ஆசைப்பட்டாலும் உம்மால் முடியுமோ?

நாலு திசைகளும் நடுநடுங்க வடமேருவின் நடுச்சென்னி மூன்று பேர்த்து—நான்கு திசைகளும் நடுங்கும்படியாக வடக்கே யுள்ள மேரு மலையின் மத்தியிலுள்ள தலைகள் மூன்றையும் பெயர்த்து எடுத்து

நளிர் கடலில் இட்டு ஆயிரத்து எட்டு மாற்றுப் பொன் நல்கு மாற்றைப் பெருக்கி—குளிர்ச்சி மிக்க கடலிலே வைத்து, ஆயிரத்தெட்டு மாற்றுப் பொன் தருமாறு செய்யும் ஆற்றைப் பெருக்கி

சாலும் ஒளியுற்ற இரு சுடரும் உடுவினமும் தரைப்புழுதி ஆட்ட ஆட்டி—மிகுந்த ஒளி வீசும் சூரியன், சந்திரன் மற்றும் விண்மீன்களும் தரையில் விழுந்து புரளும்படியாக அவர்களையும் ஆட்டுவித்து

தன்னில் வலியார் இலர் என்னும் செருக்கு உற்று உலவும் சண்டமாருத மூர்த்தியே—என்னைவிட வலிமை மிக்கவர் எவருமே இல்லை யென்ற ஆணவத்துடன் திரியும் பெருங்காற்றுத் தலைவனே கூறுவீராக.

## குறிப்புரை

சண்டமாருதம் என்னும் பெருங்காற்றாவது தன்னைவிட வலியவர்கள் யாருமில்லை என்ற செருக்குடன் அனைத்துப் பொருள்களையும் ஒருங்கே தூக்கிச் செல்லும் வல்லமை யுடையதாகும். ஆயின், கருடன்மீது விண்ணில் உலா வரும் கண்ணபிரானை அவ்வாறே என் முன்னே அழைத்து வந்து சேர்ப்பிக்க முடியுமா என வினவுகிறார் ஆசிரியர்.

பாலுததி—பாற்கடல். பாம்பணை—ஆதிசேடன். பச்சை நெடுமேனி அம்மான்—கண்ணபிரான், 'பச்சைமா மலைபோல் மேனி' (திருமா. 2) என்பார் தொண்டரடிப் பொடியாழ்வார்,

'பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர் பாசத்தகப்பட்டிருந் தேன்' (நாச். திரு. 5-9) என்பார் நாச்சியாரும்.

''பாற்றிரைத் துயிலும் பச்சைப் பசும்புயல்'' (10-1-24)
''மாலையந் துழாய் மரகதப் பசும்புயல்'' (10-1-33)

என்பது பாகவதம்.

அம்மான்—தலைவன், எம்பெருமான். பார்மடந்தை—நிலமகள், பூமி. மேலுலகம்—விண்ணுலகம். பழவடியார்—திருத்தொண்டர்கள். மூன்று சென்னி—காளத்தி, திரிசிர மலை, திருக்கோணமலை. 'திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்' என்பார் பெரியாழ்வாரும் (திருப்பல்லாண்டு—11). முன்னே என்பது முனே என இடைக்குறையாயிற்று.

வெஃகினும்—ஆசைப்படினும். கொலோ—கொல்லோ—ஐயப்பொருளை உணர்த்திய அசைச்சொல். இருசுடர்—சூரியனும் சந்திரனும். உடுவினம்—விண்மீன்கள்.

இது, பதினான்குசீர் **இரட்டையாசிரிய விருத்தம்.**

## குறளடி வஞ்சிப்பா

95. மூர்த்திகள் பலர் சீர்த்திதோய்தர
நான்மறைத்திரட் பான்மொழியினுஞ்
சக்கரத்தொடெட் டக்கரங்கொடு
வீரையிற்திகழ்ந் தாரையல்லதென்
நெஞ்சகத்திலர் வஞ்சமன்றிது
நேமியோன்முத லாமிகவழக்கு
ஒன்றைநன்குணர்ந் தென்றுநாளலா
தின்றெனுந்தவ ரன்றியேழ்வகை
நாள்வகுத்தொவொன் றாள்வகைப்படு
பன்மதத்தரு முன்மொழிந்துள
வெண்பொறிப்படு நண்பரென்றுளார்

அறிவார்

மற்றையர் வேட்கை வழிபல வாறாச்
சொற்றலை புலமைத் தொழிலனென் குரவே.

மூர்த்திகள் பலர் சீர்த்தி தோய்தர நான்மறைத்திரள்பால் மொழியினும்—பரம்பொருளான இறைவனின் வடிவங் களும் வரலாறுகளும் வெவ்வேறு விதமாக வேதங்களில் கூறப்பெற்றாலும்

சக்கரத்தொடு எட்டு அக்கரம் கொண்டு விரையில் திகழ்ந்தாரை அல்லது என் நெஞ்சகத்து இலர்—சக்கராயுதத்துடன் எட்டெழுத்து மந்திரமும் புணைந்து வீரகேரளம்புதூரில் நவநீதகிருட்டிணராய் வீற்றிருந்தருளும் கண்ணபிரானை அன்றி அடியேனுடைய உள்ளத்தில் வேறெந்த உருவமும் (கடவுளரும்) இல்லை

வஞ்சம் அன்று இது—இதில் பொய் ஏதுமில்லை

நேமியான் முதல் ஆம் இக வழக்கு ஒன்றை நன்கு உணர்ந்து—சூரியன் முதலாக எண்ணும் உலக வழக்காகிய ஒன்றைத் தெளிவாக அறிந்து

என்று நாள் அலாது இன்று எனும் தவர் அன்றி—எல்லா நாள் களும் சூரியனுடையதே என்னும் தவசிகள் தவிர

ஏழ்வகை நாள் வகுத்து ஒவ்வொன்று ஆள் வகைப்படு பல்மதத் தரும் முன் மொழிந்துள—ஏழு நாள்களும் ஏழு சமயங் களை வழிபடுவதற்காகவே எழுந்தன என்று அச்சமயத் தவர்கள் முன்பு சொல்லியுள்ளதை

எண் பொறிப்படும் நண்பர்கள் என்று உளார் அறிவார்—அட்டமா சித்தியுடைய நண்பர்கள் என்று கூறத் தக்கவர்கள் அறிவார்கள்

மற்றையர் வேட்கைவழி பலவாறாச் சொற்றலை புலமைத் தொழிலன் என்குநரே—மற்றவர்கள் எல்லாம், விரும்பிய வண்ணம் பலவாறு சொல்லித் திரியும் பாவலன் இவன் என்று இகழ்வார்கள்.

## குறிப்புரை

ஏழு நாள்களும் ஏழு சமயங்களை வழிபடற்பொருட்டே எழுந்தன என்பதும் இங்கு கூறப்பெற்றது. திருமால் வாரத்தின் ஏழு நாள்களும் தானாய் விளங்குவதும் இங்கு உணர்த்தப் பெறும்.

## ஏழு சமய வழிபாட்டின் முறைபற்றியே, கிழமைகள் ஏழாயின என்பது:

சமயங்கள் யாவும் மக்கள் வாழ்வில் பயன்பெற ஏற்பட்டவைகளேயாம். அவ்வாறு சமயங்கள் பல வழியிலும், ஆறு சமயங்கள் சிறந்தன. அவை, சௌரம், சைவம், சாத்தேயம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம் என்பவையாகும். இவற்றுடன் ஒன்றுபட்டதும் வேறாவதும் ஆக அதீதம் என்று ஒன்றுண்டு, இந்த ஏழு சமய வழிபாட்டின் முறைபற்றியே, கிழமைகள் ஏழாயின என்பர்.

"அநந்த பேதத்து அறுவகைச் சமயமும்
அவைமுழுது ஒருவலும் தழுவலும் ஆகும்
அதீத நெறிஒன்றும் ஆய ஏழும்
வழிபடற் பொருட்டே வாரம்ஏ ழாயவே."

என இவர்தம் சத்திய சூத்திரம் நூலில் (12-பா, 6) விளக்குவர்.

| சமயம் | கிழமை | கடவுள் |
|---|---|---|
| சௌரம் | ஞாயிறு | சூரியன் |
| சைவம் | திங்கள் | சிவன் |
| சாத்தேயம் | செவ்வாய் | சத்தி |
| வைணவம் | புதன் | திருமால் |
| காணாபத்தியம் | வியாழன் | கணபதி |
| கௌமாரம் | வெள்ளி | முருகன் |
| சமயாதீதம் | சனி | பொதுக்கடவுள் (பரம் பொருள்) |

என இவ்வாறு கொள்வர்.

இது, இருசீரடி பதினொன்று கொண்டு தனிச்சொற் பெற்று அகவற் சுரிதகத்தான் முடிந்த குறளடி வஞ்சிப்பா; அறிவார் யென்பது தனிச்சொல்; ஈற்றிரண்டடியும், நிலைமண்டில ஆசிரியச் சுரிதகம்.

## பதினான்குசீர்ப் பெருந்தாழிசை

96. என்றூ ரிடையிற் கடலில் விரசை
என்னும் நதிக்கப் புறத்திலே
இருக்குங் கதியில் வீரை முதற்சொல்
எண்ணில் பதியில் இலங்கியே

வன்றூ ணிடத்தி லிருந்துங் கனகன்
மதலைக் கிரங்கி வரும்பிரான்
வலிதென் மனத்தும் புகுந்து கமல
மலர்ச்செஞ் சரணம் பதித்ததால்

கன்றூழ் உடையார்க் கினிய சமயக்
கலக முழுதும் கழிந்துபோய்க்
காலித் திரளும் கோயிற் தொகையும்
கருணைக் குரியா ரனைவரும்

துன்றூ றொழிப்ப தொன்றே கருதித்
துணிந்து செந்தமிழ்க் கவிகளால்
துதித்தும் மதித்தும் தவிக்கு மெய்த்தவம்
சொலித்து வளரத் தொடுத்ததே.

என்றூழ் இடையில், கடலில், விரசை என்னும் நதிக்கு அப்புறத்திலே இருக்கும் கதியில்—சூரியன் நடுவிலும் பாற்கடலிலும் விரஜை யாற்றிற்கு அப்புறத்துள்ள வைகுந்தத்திலும்

வீரை முதல் சொல் எண்ணில் பதியில் இலங்கியே—வீரை நகர் போன்ற சொல்லப்பெற்ற கணக்கற்ற திருத்தலங்களிலேயும் காட்சியருளி

வன் தூண் இடத்தில் இருந்தும் கனகன் மதலைக்கு இரங்கி வரும் பிரான்—(உன் இறைவன் இங்கும் இருப்பானோ எனக் கல்தூணைக் காட்டிக் கேட்ட இரணியன் ஆணவத்தைப் போக்க) கல்தூணிலிருந்தும் (நரசிம்மமாக) வெளிவந்து இரணியன் மகனான பிரகலாதனுக்கு (அவன் பக்தியை முன்னிட்டு) அவன் அன்புக்கு மகிழ்ந்தருளிய கண்ணபிரானானவர்

வலிது என் மனத்துள் புகுந்து கமலமலர்ச் செஞ்சரணம் பதித்ததால்—(அன்றொருநாள்) அடியேனுடைய உள்ளத்திலே தோன்றி, அவர்தம் தாமரைத் திருவடிகளை வைத்தருளியதால்

கன்று ஊழ் உடையார்க்கு இனிய சமயக் கலகம் முழுதும் கழிந்து போய்—அற்பமான விதிகொண்டவர்களுக்கு மகிழ்ச்சி தரும் சமயப் பூசல்கள் அனைத்தும் அழிந்து போகவும்

காலித் திரளும் கோயில் தொகையும் கருணைக்கு உரியார் அனைவரும் துன்று ஊறு—பசுக் கூட்டங்களும் தேவாலயங் களும் அன்புக்குரியவரெல்லோரும் படுகின்ற துன்பங்களை யெல்லாம்

ஒழிப்பது ஒன்றே கருதித் துணிந்து—ஒழிப்பதை மட்டுமே கருத்தில் கொண்டு

செந்தமிழ்க் கவிகளால் துதித்தும் மதித்தும் தவிக்கும் மெய்த்தவம் சொலித்து வளரத் தொடுத்ததே—செம்மை நலஞ் சான்ற பாசுரங்களால் போற்றியும் உருவேற்றியும் உருகிப் பாடியும் பரவுவதாகிய உண்மையான தவம் அடியேனுக்கு வாய்க்கப் பெற்றது.

## குறிப்புரை

எம்பெருமான் தம் திருவடிகளை மனத்தளவில் பதித்ததன் காரணமாகவே தமக்கு மெய்த்தவப் பேறு கிடைத்தது என்கிறார்.

என்றூழ்—சூரியன். விரசை—விரஜை. கதி—பரமபதம், வைகுந்தம். பதி—திருத்தலம். கனகன்—இரணியன். மதலை—இரணியன் மகன் பிரகலாதன். பிரான்—தலைவன், 'எண்ணற்கரிய பிரானே' என்பார் பெரியாழ்வார் (2-3-2). கமலமலர்ச் செஞ்சரணம்—எம்பெருமான் திருவடி. காலித் திரள்—பசுக்கூட்டம். கோயில்—கோவில்; தேவாலயம். வகரம் யகரமானது, இலக்கணப்போலி. சொலித்தல்—பிரகாசித்தல்.

இது. முதல் ஆறு சீர்கள் மாச்சீர்களும் ஏழாம் சீர் விளச்சீரு மாகி வந்தது அரையடியும், இவை இரட்டித்து ஓரடியாகி வந்து, இனிய ஓசையைத் தந்த **பதினான்குசீர்ப் பெருந்தாழிசை.**

### நேரிசை வெண்பா

97. **தொடங்கியஎன் மாதவச்சீர் தொல்லுலகிற் றோன்றாது**
**அடங்கி ஒழிய அழியேல்—கடங்கவிழ்க்கும்**
**மத்தகயம் காத்த வரதா! வளவீரை**
**வித்தகர்பே றாமுதற்தே வே.**

கடம் கவிழ்க்கும் மத்தகயம் காத்த வரதா—மதத்தினைப் பொழியக் கூடிய கசேந்திரன் என்னும் யானையைக் காப்பாற்றி யருளிய கலிவரதரே!

வள வீரை வித்தகர் பேறு ஆம் முதல் தேவே—எல்லா வளங் களும் பொருந்திய வீரகேரளம்புதூரில் வாழும் பெரியோர்கள் செய்த தவப்பயனாய் இங்கு கோயில் கொண்டு கொலு வீற்றிருக்கும் ஆதி முதல்வரே!

தொடங்கிய என் மா தவச்சீர் தொல் உலகில் தோன்றாது அடங்கி ஒழிய அழியேல்—(உம் திருவருளை அடைய வேண்டுமென்ற ஒன்றையே கருதி) அடியேன் தொடங்கி யுள்ள பெரும் விரதத்தைத் தடை செய்து அழிக்காமல் காத்தருள்வீராக.

## குறிப்புரை

கடங்கவிழ்க்கும் மத்தகயம் என்றது கசேந்திரனை. கடம்—வடசொல்; யானைக்கன்னத்தின் பெயர். அதிலிருந்து வழிகிற மதநீர்க்கு ஆகுபெயராயிற்று.

வரதன்—அடியார்களுக்கு வேண்டும் வரம் அளிப்பவன்; பேரருளாளன், கண்ணபிரான்.

> 'பதகமுதலை வாய்ப்பட்ட களிறு
> கதறிக்கை கூப்பி என்கண்ணா கண்ணாவென்ன
> உதவப் புள்ளூர்ந் தங்குறு துயர்தீத்த
> அதகன்' (பெரியா. திரு. 2-1-9)

என ஆழ்வார் மொழிந்தபடியே கசேந்திரனுக்கு அருளிய வரதன் தனக்கும் அவ்வாறே அருள வேண்டுகிறார்.

தேவாதி தேவன் (திருப். 8) ஆகிய கண்ணபிரானை 'முதற் தேவே' என்றே இங்கு அழைக்கிறார். 'அலர்பசுந் துழாயணி முதற்தேவு' என்பது பாகவதம் (10-1-10). எல்லாவற்றுக்கும் முதற் கடவுள் என்பது பொருள்.

> 'முதலாவார் மூவரே, அம்மூவ ருள்ளும்
> முதலாவான் மூரிநீர் வண்ணன்' (இயற்பா.
> முதற்திருவந்தாதி 15)

என்பார் பொய்கையாழ்வார்.

'ஆதி யான வானவர்க்கு மண்ட மாயவப் புறத்து
ஆதி யான வானவர்க்கு மாதி யான வாதிநீ
ஆதி யான வானவாண ரந்த காலம்நீ யுரைத்தி
ஆதி யான கால நின்னை யாவர் காண வல்லரே!
(திருச்.8)

எனத் திருமழிசைப்பிரான் அருளிச் செய்ததும் இவரை முதற் தேவு எனச் சுட்டும்.

''முதல்தனி வித்தேயோ முழுமூ வுலகாதிக் கெல்லாம்
முதல்தனி யுன்னை யுன்னை யெனைநாள் வந்து
கூடுவன் நான்.
முதல்தனி யங்கு மிங்கும் முழுமுற் றுறுவாழ் பாழாய்
முதல்தனி சூழ்ந்த கன்றாழ்ந் துயர்ந்த முடிவி லீயோ''
(திருவாய். 10-10-9)

என்னும் நம்மாழ்வாரின் பாசுரம் இவண் ஒப்புநோக்கத்தகும்.

இது, இருவிகற்பத்தால் வந்து நாளென்னும் வாய்பாட்டான் முடிந்த **நேரிசை வெண்பா.**

### கட்டளைக் கலித்துறை

98. வேயூதும் வாய்விண்டு நீயன்று
சொன்னசொல் மெய்ப்படிற்புன்
நாயூடும் சேரத்தகார் தாமும்
எள்ள நலிகுவனோ?
தாயூணிற் பங்கிட்டும் காக்கவல்
லாய்தந்தை தன்னையட்டுஓர்
சேயூறு தீர்த்தவ னேவீரை
வாழ்மலர்ச் செங்கண்ணனே.

தாய் ஊணில் பங்கு இட்டும் காக்க வல்லாய்—தாய் உண்ணும் உணவிலும் உரிய பங்களித்துக் கருவிலுள்ள குழந்தையையும் காக்க வல்ல கருணாகரனே!

தந்தை அட்டு ஓர் சேய் ஊறு தீர்த்தவனே—தந்தையாகிய இரணியனைக் கொன்று ஒப்பற்ற மகனாகிய பிரகலாதனுக் கருளியவரே!

விரைவாழ் மலர்ச் செங்கண்ணனே—வீரகேரளம்புதூரில் வாசம் செய்கின்ற செந்தாமரைக் கண்ணா!

வேய் ஊதும் வாய்விண்டு நீ அன்று சொன்ன சொல் மெய்ப் படில்—குழலிசைக்கும் திருவாயினை மலர்வித்தருளி நீவிர் அன்றொருநாள் (அடியேன் உள்ளகத்தே) கூறிய மொழி உண்மையானால்

புன் நாயூடும் சேரத் தகார் தாமும் எள்ள நலிகுவனோ—(இவ் வுலகில்) இழிந்த நாய்க்கூட்டத்திலும் சேரத் தகாதவர்கள் பலரும் நகைக்கும் படியாக (அடியேன்) மெலிந்து வாடு வேனோ? (ஆகவே, நீவிர், கூறியதை இப்பொழுது மெய் யாக்குவீராக.)

## குறிப்புரை

கனவில் வந்து பேசியருளிய கண்ணபிரான் பலரறிய நேரில் வந்து தனக்கு அருளுமாறு வேண்டுகிறார்.

இது நேரசை முதலாக வந்த **கட்டளைக் கலித்துறை.**

### நேரிசை யாசிரியப்பா

99. செங்கலிற் பொன்செய் சிவன்முதற் பலர்பால்
அங்கண்மா ஞாலத்து அழலினும் கொடிய
மிடியறக் களைதல் வேண்டிப் போற்றி
வடிதமிழ் விலையும் வாங்கப் பெறாஅது
சீர்பல பலவும் செறிதரு திருநின்
மார்பகம் அகலா வண்மை நாடி
நின்திரு முன்னர் நேர்ந்தவா றிசைக்கேன்
வென்றியெய் திடற்காம் வியனிசைக் குதியோ
அன்ன வாறே அருளாது ஓரீஇ
இன்னல்மிக் குறவிட் டிருக்குதி கொல்லோ
மேதகு வளம்பொலி வீரைக்கு
ஆதர மாகி யவிரும்நா ரணனே.

மேதகு வளம் பொலி வீரைக்கு ஆதரம் ஆகி அவிரும் நாரணனே—மேன்மையான பல வளங்கள் சிறக்கின்ற வீரைநகருக்கு அன்பாய் ஒளிரும் நாயகராய் விளங்கும் நாராயணரே!

செங்கல்லில் பொன் செய் சிவன் முதல் பலர் பால்—சுந்தர மூர்த்தி நாயனாருக்காகச் செங்கல்லினைத் தங்கமாகச் செய்த சிவபெருமான் முதலிய பல்வேறு தெய்வங்களிடமும்

அங்கண் மா ஞாலத்து அழலினும் கொடிய மிடி அறக் களைதல் வேண்டிப் போற்றி—இப்பூமியில் தோன்றக் கூடிய தீயினும் கொடுமையான வறுமை அறவே ஒழியும்படி யாகக் கேட்டுப் பாடியும்

வடிதமிழ் விலையும் வாங்கப் பெறாது—குற்றமற்றுத் தெளிந்த தமிழ்ப் பாட்டுக்குரிய கூலியைக்கூட (அவர்களிடமிருந்து இதுவரை) அடையப் பெறாமல்

சீர் பலவும் செறிதரு திரு நின் மார்பகம் அகலா வண்மை நாடி பேரழகும் பெருஞ் செல்வமும், நாடும் நன்மையும், நற்பு புகழும், வளரும் வாழ்வும் எனச் சீர்கள் பல பொருந்திய இலக்குமிதேவி உம்முடைய திருமார்பில் எப்பொழுதும் வீற்றிருக்கும் மெய்மையைக் கருதி

நின் திரு முன்னர் நேர்ந்தவாறு இசைக்கேன்—தேவரீருடைய திருமுன்பு அடியேன் உள்ளத்தில் உணர்ந்தவாறு) பாடு கின்றேன்

வென்றி எய்திடற்கு ஆம் வியன் இசைக்குதியோ—(அடியேனுடைய விருப்பத்தில்) வெற்றி பெறுவதற்குரிய பெருமையை அருளமாட்டீரோ!

அன்னவாறே அருளாது ஓரீஇ—பிற தெய்வங்களைப்போலவே அருளாது என்னைத் தள்ளிவைத்து

இன்னல் மிக்குற விட்டு இருக்குதி கொல்லோ—(அடியேனுக்கு மேன்மேலும்) துன்பமே மேலிடுகிறபடி, புரிவாயோ (ஏது நின் திருவுள்ளம்)

### குறிப்புரை

சிவபெருமான் முதலான பல தெய்வங்கள் மீதும் பல ஆயிரம் பாடல்களைப் பாடி விட்டேன். ஆயினும் என் வறுமை யும் நோயும் தீரவில்லை. ஆயின், நின் மார்பிடத்தே திருமகளையே வைத்திருக்கின்றாய் என்பதால் உம்முடைய சீர்மையை உள்ளவாறே உணர்ந்து பாடுகிறேன். விரைந்து வந்து அருளுவீராக என வேண்டுகிறார் ஆசிரியர்.

ஆதரம்—அன்பு. அவிரும்—ஒளி செய்யும். மிடி—வறுமை. திரு—இலக்குமி. வென்றி—வெற்றி. வியன்—பெருமை.

கண்ணா! இனியும் என்னை எண்ணாதிருந்தது போதும் உடனே வா! வந்து காப்பாற்றுவாயாக என்பது இவருடைய விண்ணப்பம்.

"புண்ணா ருடற்பிறவி போதுமெனக் கும்முனக்கு
மெண்ணா திருந்த தினிப்போதும்—கண்ணா
குழற்காளாய் தென்னரங்கக் கோயிலாய் நின்பொற்
கழற்காளாய் நின்றேனைக் கா" (திருவ. கலம்.99)

எனப் பிள்ளைப்பெருமாளையங்கார் வேண்டுவது போன்றே இவரும் வேண்டுகிறார்.

இது, ஈற்றயலடி முச்சீரடியும், மற்றை யடிகளெல்லாம் நாற்சீரடிகளுமாக வந்த **நேரிசை யாசிரியப்பா.**

## பதின்சீர் வண்ண விருத்தம்

(*தான தனதன தனதான தத்தனத்—தனதானா*)

100. நாரி லுயர்அடி யவர்தாள்ம லர்த்துகட்
—சிரமீதே
நாளும் அணிதரு பெருவாழ்வி னைக்கொடுத்
—தருள்நீதான்
வாரி அமுதுணும் அவர்தாமு மெச்சிடத்
— தகுமேலாம்
வாழ்வி லொருகடுக ளவேனும் இட்டிடத்
— துணியாயோ

காரி மகனருள் திருவாய்மொ ழித்தமிழ்க்
— கினியோனே
காம னுடன்அயன் முதனாள்வ ரச்செய்அச்
— சுதநாதா
வேரி மலிதுள வணிதாள்து திப்பவர்க்
— கெளியானே
வீரை நகர்வளர் நவநீத கிட்டிணத்
— திருமாலே.

நாரில் உயர் அடியவர் தாள் மலர்த்துகள் சிரம் மீதே நாளும் அணிதரு பெரு வாழ்வினைக் கொடுத்து அருள் நீதான்—

அன்பிற் சிறந்த திருமாலடியார்களுடைய திருவடித் துகள் களைத் தலைமேலணிந்து இன்புறும் ஒப்பற்ற வாழ்க்கை யைத் தந்தருளா நின்ற தேவரீர்

வாரி அமுதுண்ணும் அவர் தாமும் மெச்சிடத் தகும் மேல் ஆம் வாழ்வில் ஒரு கடுகு அளவேனும் இட்டிடத் துணியாயோ— (திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது) கடலில் தோன்றிய அமுதை அருந்தும் தேவரும் போற்றும்படியான உயர்ந்த புகழில் ஒரு கடுகளவு ஆகிலும் தந்தருள முற்பட மாட்டீரோ!

காரி மகன் அருள் திருவாய்மொழித் தமிழ்க்கு இனியோனே— திருக்குருகூர் காரியின் மகனாகிய சடகோபாழ்வார் மொழிந்த திருவாய்மொழியாகிய திவ்வியத் தமிழ்ப் பாசுரங்களில் திளைத்தவரே!

காமனுடன் அயன் முதல் நாள் வரச்செய் அச்சுதநாதா— மன்மதனுடன் பிரமனையும் அன்று உம்மிடத்தே தோன்றச் செய்த முழுமுதற்கடவுளே!

வேரி மலி துளவு அணி தாள் துதிப்பவர்க்கு எளியானே— நறுமணம் மிக்க திருத்துழாய் அணிவிக்கப்பெற்ற உம் முடைய திவ்வியத் திருவடிகளைப் போற்றிப் பாடியவர் களுக்கு உடன் அருள்பவரே!

வீரைநகர் வளர் நவநீதகிருட்டிணத் திருமாலே—வீரகேரளம் புதூரின்கண் (கோயில் கொண்டு சிறப்பிக்கும்) புதிய வெண்ணெய்க் குடத்தைக் கையிலேந்தியிருக்கும் திருமாலே!

## குறிப்புரை

எம்பெருமான் மீது அளவற்ற அன்பு கொண்ட அடியவர் தம் பாதத் தூளிகள் தலையில் சூடும்படி அருளிய கண்ணபிரான், அட்டமா சித்திகளையும் பெரும் புகழையும் அருளவேண்டுமென்கிறார் ஆசிரியர்.

நார்—அன்பு. துகள்—தூளி—வடசொற் சிதைவு. வாரி— திருப்பாற்கடல். அமுதம்—அம்ருதம்; வடசொல்; (உண்ட

வர்க்கு) மரணத்தைத் தவிர்ப்பது என்று காரணப் பொருள் பெறும். அவர் என்றது தேவர்களை. காரிமகன்—நம்மாழ்வார் காமன்—மன்மதன். அயன்—பிரமன். அச்சுதன்—வடசொற் றிரிபு. அச்யுதனென்பதற்கு—அழிவில்லாதவனென்றும், தன்னைச் சரணமாகப் பற்றினவரை நழுவவிடாமற் காப்பவனென்றும் பொருள். வேரி—நறுமணம். தாள்—திருவடி.

'நண்ணித் தொழுமவர் சிந்தை பிரியாத நாராயணா' என்பார் பெரியாழ்வார் (2-3-2).

'இருபாத மலர்போற்று மெய்யர் நெஞ்சில் இருத்தி நாராயணனே' என்றும், 'தொண்டர் இருதயத்துளிருக்கின் றாய் எம்பிரானே' என்றும் எம்பிரான் சதகம் (பா. 1, 45) மொழிந்தவாறே இவரும், 'தாள் துதிப்பவர்க் கெளியானே' என அழைக்கின்றார்.

நம்மாழ்வாரின் திவ்வியப் பாசுரங்களை விரும்பி ஏற்பவர் கண்ணபிரான் என்பதால் 'திருவாய்மொழித் தமிழ்க் கினியோனே' என்றார். திருமாலின் திருத்தோள்கள் 'அருமறை துணிந்த பொருண்முடி வையின் சொலமு தொழுகுகின்ற தமிழினில் விளம்பி யருளிய சடகோபர் சொற் பெற்றுயர்ந்தன' என்பார் பிள்ளைப்பெருமாளையங்கார் (திருவ. கலம். 7).

அறிதற்கரிய வடமொழி வேதங்களில் நிச்சயித்துச் சொல்லப்பட்ட தத்துவார்த்தங்களின் சித்தாந்தத்தை இனிய சொற்களையுடைய அமுதம் போன்ற இனிமை மிக்க செந்தமிழ் மொழியில் சடகோபர் திருவாய்மலர்ந்தருளினார். அவற்றைப் பெற்றதனாலேயே திருமாலின் திருத்தோள்கள் உயர்ந்தன என்பர்.

"யான்எனதென் றிடுஞ்செருக்கோர் இரண்டுமின்றிக்
குருகையிலுற் றென்னும் கையாத்
தேன்எனத்தண் டமிழ்மாரி திருமருமார்
பினன்புயத்தில் தினம்பெய் யாழ்வார்"
(சட. சத. 76)

என இவர் நம்மாழ்வாரைப் போற்றுவர். அத்தகைய நம்மாழ்வாரின் பாசுரங்களைத் திருவாய்மொழித் தமிழ் என்றே போற்றியுரைப்பர்,

திருமால்—திருமகளையுடைய மால். ஸ்ரீய : பதி; மால்—விட்டுணு. திருமகளிடத்திலே மால் (வேட்கை) கொண்டவன் என்றும் கூறுவர், வீரைநகரில் கோயில் கொண்டிருக்கும் கண்ணபிரானின் திருநாமம் நவநீதகிருட்டிணன் என்பதையும் சேர்த்து 'நவநீத கிட்டிணத் திருமாலே' என மொழிந்தார்.

கலம்பகத்தை அந்தாதியாக மண்டலித்துப் பாடுதல் மரபாதலின், இவரும் திருமகள் பூமகளொடு' என்று தொடங்கி, இச் செய்யுளில் 'திருமாலே' என நிறைவு செய்தார்.

இது, முதற்சீர் மாச்சீரும், இரண்டு நான்காம் சீர்கள் விளச்சீரும், மூன்று ஐந்தாம் சீர்கள் காய்ச்சீர்களுமாக வந்தது அரையடியாகவும், அஃது இரண்டு பெற்றது ஓரடியாகவும் வந்த கழிநெடிலடி நான்கு கொண்ட **பதின்சீர் வண்ண விருத்தம்.** 'தான தனதன தனதான தத்தனத் தனதானா' என்பது சந்தக் குழிப்பாம்.

## (நூற்பயன்)

### நேரிசை வெண்பா

பாரைக் கலந்து பதுமமக ளைப்பரிப்பான்
வீரைக் கலம்பகத்தை வேண்டுவார்—நீரைத்
தலைக்கணித லுள்ளான் சதுமுகனிற் சேர்க்கும்
நிலைக்கணித ராவார் நிசம்.

பாரைக் கலந்து பதும மகளைப் பரிப்பான்—பூமி தேவியை அடைந்து, தாமரைச் செல்வியாகிய இலக்குமி தேவியை மார்பிலே தாங்கியிருக்கும் திருமால் பற்றிய

வீரைக் கலம்பகத்தை வேண்டுவார்—(நவநீதகிருட்டிணனாக வீரகேரளம் புதூரில் திகழ்வதை எடுத்துரைக்கும்) இந்தக் கலம்பக நூலை விரும்புவோர்

நீரைத் தலைக்கு அணிதல் உள்ளான் சதுமுகனில் சேர்க்கும் நிலைக்கு அணிதர் ஆவார் நிசம்—கங்கையை முடியில் சூடிய சிவபெருமான், பிரமன் ஆகியோர் பெற்ற பெரும் பேற்றினைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவார்கள் என்பது முற்றிலும் உண்மையாகும்.

## குறிப்புரை

பூமாதும் திருமாதும் உடனிருக்க வீரை நகரில் கோயில் கொண்டிருக்கும் நவநீதகிருட்டிணனது புகழ் பேசும் இக் கலம் பகத்தைப் படிப்போரும், கேட்போரும், விரும்பி வேண்டு வோரும், சிவனும் பிரமனு மென்கிற இரண்டு பேரினும் சிறப் பினையுடையோராவர் என்பது குறிப்பு.

பார்—பூமகள். பதுமமகள்—இலக்குமி. நீரைத் தலைக்கணித லுள்ளான்—கங்காதரன்—சிவபெருமான். சதுமுகன்—பிரமன். நிசம்—உண்மை சத்தியம்.

இது, இருவிகற்பத்தால் வந்து மலர் என்னும் வாய் பாட்டான் முடிந்த **நேரிசை வெண்பா**.

## உரைப்பயன்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

**கொம்பார்பூம் பொழில்வீரைக் கோயிலுறை நவநீதக்**
**கோலக் கண்ணன்**
**நம்பான்தண் ணளிபரவும் நாவலராம் தண்டபாணி**
**நயமாய்ச் சொன்ன**
**இன்பாய கலம்பகமும் இயல்மாத வனுரையும்**
**இயம்பிக் கற்றோர்**
**தம்பால தீவினைகள் தகர்ந்தகலும் நல்வினைகள்**
**தளரா வன்றே.**

(இ-ள்) அழகிய பூஞ்சோலைகள நிறைந்த வீரகேரளம் புதூரிலே கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள நவநீத கிருட்டிணனாகிய எம்பெருமானின் தனிப்பெருங் கருணையை எப்பொழுதும் நினைந்து போற்றுகின்ற வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பல்சுவையோடு மொழிந்த இக் கலம்பக நூலையும், உரையாசிரியரின் உரை விளக்கங்களையும் ஆர்வமுடன் படிப்பவர்களின் துன்பங்கள் அனைத்தும் நீங்கும். நன்மைகளே பெருகும்.

இது, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு காய்ச்சீர்களும், ஐந்து, ஆறாம் சீர்கள் மாச்சீர்களுமாகிவந்த **அறுசீராசிரிய விருத்தம்.**

## ஆழ்வார் திருவடிகளே சரணம்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய
வீரகேரளம்புதூர் நவநீதகிருட்டிணன் கலம்பகம் மூலமும்
டாக்டர் வே. இரா. மாதவன் அவர்களின்
உரையும் நிறைவேறின.

# செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண் : செய்யுள் எண்)


| | |
|---|---|
| அஞ்சிலம்பணி | 72 |
| அண்ணகரிற்கடை | 77 |
| அதுலன்பன்மறை | 23 |
| அப்பணிசென்னியன் | 51 |
| அம்மானையைப் | 28 |
| அமரருந்தெரி | 5 |
| அமுதமுன்அமரர் | 42 |
| அயனுரைத்த | 81 |
| அரசர்ளுமிக்க | 10 |
| அவமேயுழல் | 69 |
| அளிக்கொந்தளக | 67 |
| அறுத்ததிங்கட் | 82 |
| அன்பிலரர்ய்த் | 83 |
| அன்றில் ஒலிக்கும் | 79 |
| அன்றுவந்தென் | 9 |
| ஆண்மகனேஉன்னை | 34 |
| ஆம்பலன்றோலிட | 12 |
| ஆரணற்பயந்த | 40 |
| ஆளரியாய் | 91 |
| ஆளாவார் சென்னி | 59 |
| ஆனேங்குறுங் | 76 |
| இசைப்பார் | 24 |
| இயல்முனிபோற்றிய | 93 |
| இரலையன்ன | 80 |
| இருந்தமிழ்ச்சொல் | 62 |
| இன்றுடன்போன | 57 |
| இனியுனக்கொரு | 18 |
| உண்டுண்டுறங்கி | 44 |
| உருவென்றருவென் | 46 |
| உளங்கலந்த | 75 |
| ஊச்லெனவே | 52 |
| ஏம்பெருமான் | கா. 3 |
| என்குறியை | 74 |
| என்றாழிடை | 96 |
| ஐயமுற்றுத் | 14 |
| ஒண்ணுதற்பொன் | 79 |
| ஒழிக்கரும் | 45 |
| ஓதருஞ்சீர் | 27 |
| கண்ணனைக்கரு | 55 |
| கண்ணும்கருத்தும் | 31 |
| கலனணிந்த மங்கை | 88 |
| கழல்வேட்டுன் | 53 |
| கள்ளன்என | 29 |
| களங்கமற்ற | 56 |
| குணங்கும்மார்தர் | 54 |
| குழல்கண்டுநாணுறு | 89 |
| கொண்டல்வண்ண | 35 |
| சித்தம் அறிய | 19 |
| சீதளநீர்ப்பதத் | 13 |
| சீரைத்திருவை | கா. 1 |
| சுடர்போமுன் | 21 |
| செங்கலிற்பொன் | 99 |
| செப்பமார்புகழ் | 25 |
| சொலபமல | 64 |
| ஞானகுருவென | 17 |
| தங்கம்வெள்ளி | 30 |
| தியங்கும்பலசர் | 87 |
| திருமகள் பூமக | 1 |
| துணிவொருகேர்டி | 15 |
| துறவாதுவேட | 66 |
| தெய்யஎன்னும் | 4 |
| தொடங்கியஎன் | 97 |
| தொழிலற்றொரு | 68 |
| நகமன்றேந்தி | 32 |

| | | | |
|---|---|---|---|
| நவில்பூம் புளி | 3 | மயன்வியக்கும் | 47 |
| நாரணனே | 43 | மருமலிபூங்குழல் | 70 |
| நாரியர்க்கெலா | 71 | மன்னர்மன்னவர் | 78 |
| நாரிலுயர் | 100 | மாயவுலகிடை | 6 |
| நானென்றெ | 41 | மாயன்ஆரணஞ் | 58 |
| நிலம்பகச்சம்மதி | கா. 2 | மாலலாற் | 7 |
| நின்றிடாத | 86 | மிகநொந்த | 22 |
| நெடியவனைச் | 8 | மூர்த்திகள் பலர் | 95 |
| நெடியவில்லும் | 90 | மேனிமுற்றும் | 50 |
| நேயமோர்சிறிதும் | 36 | மைக்கனமேநிகர் | 63 |
| பகலில்காரிருள் | 48 | மொழியொணாத | 89 |
| பாதிக்கலை | 61 | வஞ்சகம்பல | 26 |
| பாரணைந்தான் | 88 | வந்தூரும்மாரன் | 92 |
| பாரைக் கலந்து —நூற்பயன் | | வலியம்யாம் | 49 |
| பானுதயிற் | 94 | வழங்கெனஇரக்கும் | 84 |
| புண்ணருந்தச் | 73 | வாரணமும்இரணியன் | 16 |
| புயல்நேரு | 11 | வானகத்துமென் | 33 |
| பெருமலர்ப்பொருட்டுப் | 20 | விடுக்கும்தழை | 60 |
| பெருமையுடை | 85 | விளங்கனிமேற் | 2 |
| போதனைப்பல | 65 | வேயூதும்வாய் | 98 |

பின்னிணைப்பு : 1

# வீரகேரளம்புதூர்ப் பதிகங்கள், திருப்புகழ், வகுப்பு, விருத்தங்கள், கீர்த்தனை

ஓம் நாராயணாய நம :

# வீரகேரளம்புதூர் திருமால் பதிகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

காரைப் பழித்த கருநிறத்தெங் கண்ணனைத்தென்
வீரைப் பதியில் விளம்புதற்குத்—தாரைமதத்து
ஆனைமுக நாற்றோள் ஐந்துகரங் கொண்டவிருஞ்
சேனையர்கோன் காப்புச் செயும்.

## நூல்

### அறுசீர் ஆசிரிய விருத்தம்

உன்னதுசந் நிதியினில்வந்து உவணமிசை
உன்னுருவம் உன்னா நிற்கும்
முன்னம்எனது உளமறியப் புரிகருணை
உலகுணர மூதிர்நாள் என்றோ?
பன்னகத்தின் தலைஏறிப் பரதம்இயற்
ஜியமெழுந்தாட் பசும்பொற் குன்றே!
மின்னகுவேற் படைவீரர் பலர்போற்றக்
குலவுதமிழ் வீரை மாலே! 1

கச்சியில்ஓர் புலவன்நவில் கவிஒன்றாற்
போய்மீண்ட கதைமெய் யாகில்
நச்சியவாறு எத்தனையோ பனுவல்நுவன்
றுள்ளேனை நலிக்க லாமோ?
பச்சிறகொன்று அணிதருகு ழியக்குருந்தாய்ப்
பொர்துவர்மனை பலவுற்று ஊற்றாய்!
மெச்சியபா வலர்தமக்கோர் ஆதரமாத்
திகழ்தருதென் வீரை மாலே! 2

பூதலத்தில் உள்ள உயிர் அத்தனைக்கும்
தகும்உணவு புகட்டும் நீநின்
பாதம்மற வேனைஇவன் வருத்தலும்பே
ரருட்குரிய பண்பு தானோ?

மாதவன்என்று இறைஞ்சினருக்கு அருள்பேற்றை
இகழ்ந்தார்க்கும் வழங்கி ஆண்டாய்!
மேதகுசிற் றாறுஅதன்பால் விளங்கும்அம
ரர்பதிநேர் வீரை மாலே! 3

அல்லிக்கே ணியிற்கொடுத்த கடன்சிட்டும்
தலையாகி அலர்ந்த பூவில்
நல்லிக்கே எனஅனந்தை நகரில்உரைத்
திடும்மொழியும் நம்பொன் ணார்தோ?
புல்லில்தோல் உரித்தணிந்தான் தலைநடுச்செந்
நீரருவி பொலியத் தாக்கும்
வில்லிக்கோர் சாரதியாம் விளையாட்டும்
செயத்துணிந்தாய் வீரை மாலே! 4

திருவரங்கப் பெருநகரில் என்னதுபாட்டு
உவந்துசற்றே சிரித்த நின்வாய்
ஒருவரம்சத் தியமாக கொடுக்கில் இவ்வாறு
ஊரூர்தொறும்போய் உழல்வேன் கொல்லோ?
இருவான்புற் றமைவதற்கும் இடங்கொடுத்த
நெடுமேனி இறைவா! விண்ணோர்
வெருவரச்செய் வார்க்கறவும் வென்றியுளாய்!
வியன்குலவும் வீரை மாலே! 5

உரைக்கரும்பற் பலதொழும்பர் உனைத்துதிக்கின்
றார்கதிவேட்டு உன்கை ஓர்நாள்
வரைக்குடைதாங் கியும்புரந்த பசுவினம்வாழ்
வதுகுறித்து வருந்து கின்றேன்!
திரைக்கலைப்பா ரினர்இகழா வாறுஅருள்வாய்!
கவுத்துவமும் திகழ்பல் பூணும்
விரைத்துளவும் திருமகளும் மிளிர்மார்பா!
வீரர்மலி வீரை மாலே! 6

தெள்ளியசெந் தமிழ்ப்புலவர் குலம்மதிக்கும்
பேறளித்தாய்! சேணா றாக்கும்
ஒள்ளியசீர்க் குளிகையுளார் இனம்மதிக்கத்
தகும்வாழ்வும் உதவி ஆள்வாய்!
துள்ளியஏறு ஏழ்அடர்த்துஓர் மகட்புணர்ந்தாய்!
பாண்டவர்கை சோரா வண்ணம்
வெள்ளியசங்கு ஒன்றெடுத்து ஊதியகனிவாய்
முகிலனையாய்! வீரை மாலே! 7

கூர்த்தநெடும் கோட்டொருமால் களிறுஅழைப்பச்
    சென்றபுகழ் குன்றி டாமல்
தூர்த்தகுணக் கலியாய முதலையினால்
    தளரும்என்முன் தோன்றி ஆள்வாய்!
போர்த்தகுவர் குலத்தினுக்கோர் கூற்றாகும்
    ஆழியங்கைப் புயலே! பொல்லார்
வேர்த்தவச மூறத்தாக்கும் வெங்கலவன்
    மரபுயர்த்தும் வீரை மாலே! 8

தந்தைசினம் சகிப்பரிதாத் தன்னுயிர்காப்
    பதற்கிரங்கும் தகுவப் பாலன்
சிந்தைஉவப் புறத்தூணில் உதித்ததுண்டேல்
    எனக்குதவி செயத்தான் வேண்டும்!
பந்தைநிகர் கொங்கைமின்னார் பலர்கலைகொண்டு
    ஒருத்திபெறப் பலவாங்கு ஈந்த
விந்தையுளாய்! மண்ணுலகும் விண்ணுலகும்
    பரவுதிரு வீரை மாலே! 9

துதிபகர்என் றனக்குஉலவா அருட்பேறும்
    திருக்கோயிற் தொண்டே நாடும்
மதிஇதயா லயற்குஅருமை மகப்பேறும்
    இக்கணமே வழங்கி ஆள்வாய்!
பதின்மர்தமிழ்க்கு அருள்புரிந்தாய்! பரிமுகன்கைக்
    கனைஎரித்த பாலற் காத்தாய்!
விதிவிதிப்பார் பலர்பிறக்கும் வியன்உந்தித்
    தாமரையாய்! வீரை மாலே! 10

## (நூற்பயன்)

சீதளசந் திரனொடுசெங் கதிரனைய
    சங்காழித் திருக்கை யானை
வேதநெறி பிழையாமல் உகந்தெற்றும்பல்
    வாறுஉருக்கொள் வீரை மாலைப்
போதவளம் பொலியும்நெல்லைப் பதித்தவமே
    போன்றதிருப் புகழோன் பாடல்
ஏதமற்ற தெனத்துதிப்பார் எவரேனுங்
    கருதியபேறு எய்து வாரே. 11

முற்றிற்று

# வீரைநகர்க் கிருட்டிணமூர்த்தி பதிகம்

## காப்பு

### நேரிசை வெண்பா

*வீரைநகர்க் கோயிலிட மேவுங் கிருட்டிணனே!*
*சீரைமிகத் தாங்குந் திருமாலே!—பாரை*
*அளந்துண் டுமிழ்ந்தானே ஆள்என்று கெஞ்சும்*
*உளந்தந்த ஊழேநல் ஊழ்.*

## (நூல்)

### எண்சீர் ஆசிரிய விருத்தம்

*திருமுடியிற் புனைபீலிக் கவினும் தெய்வச்*
*சீர்அருட்கண் களும்பவளஞ் சிறந்த வாயும்*
*பொருவருந்திண் தோள்களும்ஐம் படையும் கஞ்சப்*
*புதுமலர்த்தாள் களும்பிறவும் பொலியத் தோன்றாய்!*
*தருமன்முதல் ஐவர்களும் வாழ அன்னோர்*
*தமைப்புணர்வாள் குழல்முடிப்பத் தரையோர் உய்ய*
*விருகமன்னார் பலர்மாயத் தூதுஞ் சென்றாய்!*
*வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே!* 1

*கிரியோர்என் றெழும்முலையார் மயலால் நொந்து*
*கிழவரிற் கடையாகிக் கெடும்என் றன்னைப்*
*பெரியோர்தம் திருக்கூட்டத் தொருபாற் சேர்த்துப்*
*பிறவாத முதல்வீடும் பெறச்செய் வாயோ?*
*பரியோடற் கானதொரு மாயஞ் செய்து*
*பார்த்தன்அழு தேங்கும்வண்ணம் படுத்தி அப்பால்*
*விரியோத நெடுங்கடல்மேற் தனித்தேர் விட்டாய்!*
*வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே!* 2

*பண்ணவர்கட் காகாத விதமே செய்வார்*
*பலர்வாழக் கண்டுமனம் பதைக்கின் றேனைத்*
*தண்ணருட்கண் ணாற்சிறிது பார்த்து வென்றித்*
*தனஞ்சயனுக் குரைத்தபொருள் தருவாய் கொல்லோ?*

மண்ணையும்பொன் னையும்மனைமா ராகக் கொண்டு
வானமுற்றும நிறைந்தபின்னோர் மகவாய் ஓரூர்
வெண்ணெய்தயிர் பால்முழுதுங் கவர்ந்துஉட் கொண்டாய்!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 3

பொன்னினைப்பால் ஊர்தொறும்போய்ப் புலர்வ தன்றிப்
பொறைஅறியாச் சமணர்சிலர் புகல்நூற் சார்பால்
சொன்னிறந்தீர் தருபுலமை யுடையார் தம்வாய்த்
துடுக்கினுக்கும் ஒல்கவிட்டாய் துயர்தீர்த்து ஆள்வாய்!
வன்னிருத ரேஅனையார் அவையின் ஊடுஓர்
வஞ்சகன்முன் றானைபற்ற வருந்திக் கூவும்
மின்னிடையாள் உணர்ந்ததிரு வருள்உள் ளானே!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 4

எப்பிறப்புற் றாலும்முன்வந்து இரந்திட் டோர்கட்கு
இல்லையென்னா வரம்பெற்றோன் இகத்திற் தோன்றாது
அப்பிறப்பி னோடுமுத்தி அடைந்தான் போலும்
அவன்நிகர்பேர் ஈகைஎனக்கு அமையச் செய்வாய்!
துப்பினைச்செவ் வாயில்வைத்துச் சங்கொன் றூதித்
தொடுகடற்பா ருலகும்விண்ணும் துலங்கக் கண்டாய்!
விப்பிரர்க்குந் தவத்தோர்க்குங் கலிநோய் தீர்க்கும்
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 5

ஆறுவகைச் சமயத்தி லுள்ளார் தாமும்
அவரவர்தம் கடவுள்என அரற்றும் வண்ணம்
வேறுவெவ்வே று உருவெடுத்து நீயே நின்ற
விதம்உணர்ந்துஉட் களிக்கும்என்னை வெருட்ட லாமோ?
கோறுதொழிற் தீர்ந்தோருக்கு எளிய ஞானக்
குருவாவந்து ஆண்டருளும் கொள்கை யானே!
வீறுபுகழ்த் தனிச்செங்கோல் முறைமை குன்றா
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 6

சங்காழி ஆதியநின் கோலம் முற்றும்
தமியனேன் மனவெளியிற் தழைக்கத் தோன்றி
அங்காண்ட விதஞ்சிறிதும் அறியார் உள்ளத்து
அகம்முழுதும் தொலைப்பதற்காம் ஆண்மை நல்காய்!
சிங்கார மடவார்தந் தானை முற்றும்
திருடும்ஒரு திருக்கூத்தும் செய்தாய்! தீநேர்
வெங்காள விடப்பாம்பின் நடித்த பாதா!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 7

வாழகிலம் முழுமையுமுன் படைத்தோன் சொன்ன
மறைவகுத்த நெறியுடைய மாந்த ரெல்லாம்
பாழதனிற் கதறிடும்புன் னெறியோர்க்கு ஒல்கும்
பழுதொழிக்க வல்லானைப் பார்ப்பேன் கொல்லோ?
காழரைப்பொய் மருதுஇரண்டும் சகடும் கொன்ற
கழற்கால்எம் பெருமானே! கருதிக் கூவும்
வேழமொன் றாற் தன்பெருமை விளங்கச் செய்தாய்!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 8

தனதுரத்தாற் றூணிடைநீ இலைஎன் றெண்ணித்
தடித்துறழ்வாள் எடுத்துவெட்டும் தகுவன் தன்னை
அனகநெடுங் கைவிரலின் உகிராற் கீன்றாய்க்
கடியனேன் துயர்ஒழிப்பது அரிதாங் கொல்லோ?
பனகவனைப் பாற்கடலின் மிசைகண் துஞ்சும்
பச்சைமுகில் போல்வானே! பரவு வார்சொல்
வினவுமிரு மகரமணிக் குழைகா தானே!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 9

மண்பொருள்பெண் என்றுளவே டணைகள் நீத்தும்
வகுளமணிந் தான்அனையார் மனத்து ளோர்காற்
கண்பொருந்தும் அவ்வளவு பொழுதும் நீங்காக்
கருணைவைத்தாய் எனைச்சிறிதும் கருதொண் ணாதோ?
தண்பொருநைத் துறையான்முற் கிழிகொய் தானைத்
தடுத்தாண்ட பெருங்கருணைத் தருவே! தக்க
விண்பொருவு கருமேனிக் கடவு ளானே!
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலே! 10

(நூற்பயன்)

வரைநிகர்தோள் வலியதனாற் புலவோர் தங்கள்
வறுமையொடு பகைஞரையும் வதைத்துச் சூடும்
விரைமலிதார்க் கிளுவைமரு தப்பன் போற்றும்
வீரைநகர்க் கிருட்டிணனாம் விமல மாலைத்
தரையினரெல் லாமறியக் கருங்கற் பாறை
தனிற்கிணறு செயும்ஒருவன் சாற்றும் பாடல்
கரைதவிர்பே ரானந்தக் கடலை நல்கிக்
கழிக்கரிய தனிவீடுங் காட்டு மன்றே. 11

முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளே சரணம்

# வீரைத் திருப்புகழ்

(தான தான தந்த தான தானன... ...தனதானா)

சீத வாரி சங்க ளான தாள்பணி
யாம லேசி டும்பொ லானு மீடறு
சீர்கு லாம்மெ வகுந்த வீடு சேரநல் கியதாலே
தேவ தேவ னென்ற நாம மானது
னாது பாக மென்று நாளு நாடுறு
தீர ஞான மொன்றி டாது நான்மரு ளுறலாமோ

பூத நாத னென்று பேய்க ளோடும
யான மேவி நொந்த கோர வாதனை
போக நீபு ரிந்த லீலை யாதிய புகல்மேலோர்
போல மாநி லஞ்சொல் வீறும் ஆன்நிண
மூண தாக வுண்டு ளாரெ லாமழி
போர்செய் வீர மூங்க ணாலி னேதர நினைவாயே

மாத வாபெ ருங்க லோல வாரிதி
யூடு சேட னென்ற பாயல் மீதமர்
மாய வாவ ரங்க நாத னேஎனின் மகிழ்கூர்வாய்
வான நாடர் தஞ்ச காய னாஅவு
ணேசர் வீற டுத்த யாப ராஅனு
மான னார்மு யன்ற யோக பாவனை அகலானே

வேத நூலு ணர்ந்த பாவர் ஆயிர
கோடி கோடி வந்த நாபி தோய்கரு
மேக நேர்மு குந்த னேஎ லாம்வல நெடுமாலே
மீளி மார்வி யந்த சிலைநாமித
யால யாதி பன்ற னாள்கை யாலுயர்
வீர கேர ளம்பு தூரின் மேவிய பெருமாளே.

# வீரை மாதவன் வகுப்பு

*(தானதன தந்தன... ...*
*... ...தானனா தனனா)*

ஆயிரம னந்தமென நீடுமுல கங்கள் செயும்
ஆரணன்வ ருங்கமல நாபிதோய் பெரியோன்
ஆயிழைம டந்தைகளி கூர்வதுநி னைந்துதினம்
ஆடல்புரி யும்பரமன் ஆவிநேர் உரவோன்
ஆகுலம லிந்துதள ராமலா டிந்திரனது
ஆள்கையிலொர் பங்கணிய நாணுறா வருளோன்
ஆகநிலை யென்றுமழி யாநலமு றும்படிமுன்
ஆழியமு தம்புலவ ராரவே யிடுவோன்.

வாயினிடை வெங்கடுவு நூலுரைக ளும்பொலியும்
மாசுணம தன்தலைஎ னாளுமே துயில்வோன்
மாசுறும னங்கொள்கன காசுரன ழிந்துமகன்
வாதனைத விர்ந்திடவொர் தூணிலே வருவோன்
வாரணமு யும்படிக ராவினைவ தஞ்செய்பெரு
வாகைமொழி கின்றவர்பி னேகும்வே லையினான்
மாவலியி டஞ்சிறிய பாலனிலி ரந்துபுவி
மாகமொட ளந்தபத மானதா மரையான்.

ஈயினமெ றும்பினமும் மீளநுக ருங்கலவி
யேயினிதெ னுஞ்சிறுவர் நாடொணா முதல்வோன்
ஏடணைத விர்ந்தமகிழ் மாறனுவ லுங்கவிக
ளேயெனம ணங்கமழ்து மாய்செய்மா லிகையான்
ஈரிருபு யங்களிலொர் ஆழியொடு சங்கபயம்
ஏர்வரத மொன்றுறநி லாவுபான் மையுளான்
ஏனவடி வுங்கொடுத ராதலமு யுந்தி றல்செய்து
ஏழுலக மும்பரவும் வாயினால் உமிழ்வோன்.

வேயினையி கழ்ந்திலகு தோளிருவர் தங்கணவன்
மேதகுத னஞ்செயன்வெண் மாவினீ ருணர்வோன்
வேனிலில முங்குமயில் போலமழவொர் பெண்கலைகொள்
வீணரும றிந்தவிளை யாடல்கோ டியினான்
வேசடைத விர்ந்தவனு பூதிநல மின்றியவென்
மீதுமருள் கொண்டுசில வாறுளே திகழ்வோன்
வேல்மருத னென்றஇத யாலயன்ம கன்பணிசெய்
வேளைவர வென்றுமுயல் வீரைமா தவனே.

ஆழ்வார் திருவடிகளே சரணம்

# மருதப்பன் விருத்தங்கள்

மருதப்பன் சபையின்முத லொலியலந்தா
திக்கடலை வார்த்திட் டின்பம்
பெருகுதில்லைத் திருவாயி ரப்பனுவற்
கவிதுவக்கிப் பேசும் நாளில்
பொருவிலவன் கனகசபா பதிமுதலி
வருகின்றான் போய்நான் கூட்டி
வருகின்றேன் ஐந்தாறு நாளில்எனச்
செழும்பவள வாய்விண் டானே!

அழையாத கோவில்கட்கும் போய்த்தனது
கட்டளைகள் அமைக்கும் சீலம்
தழையும்இத யாலயபூ பாலா! நின்
சத்திரத்தில் தானார் வந்து
நுழைதருநம் குகனைமட்டும் ஏன்மதித்தில்
லாய்! அழைத்து நோக்கச் சற்றும்
விழைகிலையே? இதுவும்ஒரு தருமம்என்னும்
ஞாயமுண்டேல் விளம்பு வாயே!

குருபாதத் தாணைஉன்னைப் போலும்ஒரு
வடிவம்என்னுட் குலவி என்றன்
அருகேநின் றொளிர்வேலைப் பார்த்திதென்னில்
பெரிதெனுஞ்சொல் அறையக் கேட்டேன்
திருமாதும் கலைமாதும் மருவுஇதயா
லயமகிபா! செவ்வேள் போன்றென்
அருமாந்த தமிழ்க்குருகா வண்மையும்தன்
மையுங்காட்டி அவிர்கோ மானே!

# மருதப்பன் கீர்த்தனை

### பல்லவி

ஏன்நான் அழைத்தும்நீ யான்பூசித் திடும்வேலை
எண்ணி வணங்க வந்திலாய்?

### அநுபல்லவி

வானா டரும்புகழ் வீரகே ரளம்புதூர்
மகாராச ராசச்சிரீ மருதப்ப பாண்டியா
மற்கடக் குணம்வித்துவச் சனருக்குள்
உற்றது உணர்ச்சி உற்றுளை (ஏன்)

### சரணம்

யுத்தம்செய் வோர்தலை உருட்டும்வாள் பிடித்தநாம்
ஊர்தொறும்போய் மண்டையோட்டி லேற்ற ருந்திய
பித்தன்ம கன்கைவே லைப்பார்க் கப்படாது
என்னும் பெருமைபா ராட்டியோ?
பெருமாள் விழிமுன்னாள் பெற்றபொற் கொடிகட்கு
உவப்புமிகப் பொருத்து புயத்தி லுற்றது
பேசுதொண்ட ரெலாம்அவி ரும்பருள் ளாவது
எண்தரு சூரை வென்றது (ஏன்)

கோடிமன்னர் கெஞ்சிக் கேட்டாலும் கொடுத்திடக்
கூடாத தமிழ்விலை கூறிவரு தல்கண்டு
சாடியில் பொன்வைத்துக் காக்கவிரும் பும்மூடத்
தன்மை யுடையாருடன் என்னையும் மதித்தாயோ!
சாலிவா கனன்ஆதியோர் விழைவோடு மாறுமுன்
ஓதினேன் அதுசரதம் என்றுகொள் எனது
நெஞ்சிடை அணுவும் வஞ்சகமிலை வலிந்துமுன் (ஏன்)

நின்குடைக் கீழுள்ள நகர்த்தொகைக் கதிகமா
நின்மக்க ளாம்படி நினைத்தாலும் நினைத்திடும்
என்குறிப்பின் படிஅருள் செய்துகலிப் பேயை
இருப்புச் செப்பில டைத்து நெருப்பிற் போடினும் போடும்

ஏழ்கடற்குளு மோடுஇரத்தம் அளாவிடச்
சமராடும் வெற்றியோடே யந்ததண் டார்பிரான்
பெருந்துயர் தீர்ந்துயும் படிதோன்றல் வம்பல (ஏன்)

இந்தப் பல்லவி தொட்டே நூறு சரணம் பாடி
ஏற்பித்தாலும் ஏற்பிப்பேன் என்று மறிவாய்
எண்சந்தத் துள்ளலும் ஒருபாடலிற் காட்டியும்
தக்கவுத விகள்செய்விக் கார்போன் றிருக்கின்றாய்!
தனையர்ர் பலர்மகிழு மாறு நல்கிய
குணாகர இருதயா லயதழையு மீடுறு
கிளுவை யாதிப முருகதாசன் என்உரிமை மீறியும் (ஏன்)

★

தெய்வமே துணை

பின்னிணைப்பு : 2

# தமிழில் உள்ள கலம்பக இலக்கிய நூல்கள் அகரநிரல்

1. அண்ணார்க் கலம்பகம்
2. அந்தாதிக் கலம்பகம்
3. அநுமக் கலம்பகம், மதுரை அநுமந்தன்பட்டி, மதுரகவி ஸ்ரீநிவாசனார் (19 நூ.) (அச்சாகவில்லை)
4. அர்ச் சூசையப்பர் கலம்பகம், செகராவு முதலியார் (20 நூ). சென்னை-1914.
5. அருணைக் கலம்பகம், சைவ, எல்லப்ப நாவலர் (17 நூ.), எம்.வி. நாயுடு அண் கோ, டிவைன் பிரஸ், சென்னை மற்றும் மதுரைத் தமிழ்ச் சங்கம்.
6. அழகர் கலம்பகம் அரபத்த நாவலர் (18 நூ.)
7. அழகர் கலம்பகம், வேம்பத்தூர்க் கவிகுஞ்சரம் ஐயர் (19 நூ.) (பதிப்) எம். சடகோபராமானுஜாசாரியார், சென்னை-1890.
8 அழைப்பிச்சான் கலம்பகம் கோவை மாவட்டம் வேள்ளோட்டில் உள்ள கல்வெட்டுச் செய்தி)
9. அறம் வளர்த்த முதலியார் கலம்பகம், அழகன் பெருமாள் பராக்கிரம பாண்டியன் (15 நூ.) (நூல் கிடைக்கவில்லை)
10. ஆதிக் கலம்பகம், இராமகிருட்டிணர் (20 நூ.)
11. ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் (திருஞான சம்பந்தர் திருக்கலம்பகம்) நம்பியாண்டார் நம்பி (10 நூ.)
12. இம்மானுவேல் கலம்பகம், ஜே பி. மானுவேல், (பதிப்.) சுந்தர முதலியார், சென்னை 1863.
13. எடப்பாடி ஆறுமுகசாமி கலம்பகம் கா.நா. நெல்லையப்பர்.
14. எண்ணூர்க் கலம்பகம், ஏ எஸ். செகராவு முதலியார் (20 நூ.)

15. எவ்வளூர்க் கலம்பகம், திரு எவ்வளூர் இராமசாமி செட்டியார் (19 நூ.)

16. கச்சிக் கலம்பகம், காஞ்சி ஞானப்பிரகாசர் (16 நூ.) (தொண்டை மண்டல சதகச்செய்தி-நூல் கிடைப்பதில்லை.)

17. கச்சிக் கலம்பகம் பூண்டி அரங்கநாத முதலியார் (19 நூ.) (பதிப்.) மோசூர்க் கந்தசாமி முதலியார், கழக வெளியீடு, சென்னை, 1947.

18. கண்டிக் கலம்பகம், வித்வத் தீபம், அப்துல் காதிர் புலவர் (1866-1918)

19. கண்ணப்பர் கலம்பகம், புதுவை. வி. துரைசாமி முதலியார் (20 நூ.)

20. கதிர்காமக் கலம்பகம், சரஸ்வதிபீடம், கந்தப்ப அடிகள் (19 நூ.) (பதிப்.) நா. கதிரைவேற் பிள்ளை, யாழ்ப்பாணம், 1897.

21. கயிலைக் கலம்பகம், குமரகுருபரர் (17 நூ.) (முழுமையாகக் கிடைக்க வில்லை) குமரகுருபரர் பிரபந்தத் திரட்டு-டாக்டர் உ.வே.சா. முன்னுரை.

22. கலைஞர்க் கலம்பகம்

23. காசிக் கலம்பகம் குமரகுருபரர் (17 நூ.), கழக வெளியீடு, சென்னை, 1925 மற்றும் டாக்டர் உ.வே.சா. பதிப்பு.

24. காந்திக் கலம்பகம், பி பெ. சுயம்பு, மதுரைக் காமராசர் பல்கலைக் கழகம், மதுரை, 1984.

25. கிறித்தவக் கலம்பகம்

26. குமரகோட்டக் கலம்பகம், அட்டாவதானம், புரசை. சபாபதி முதலியார் (காஞ்சி) (19 நூ.), ஆதிகலாநிதி அச்சுக் கூடம், சென்னை. 1892.

27. குருகைக் கலம்பகம், முத்துசாமி ஐயங்கார் (20 நூ.)

28. குவாலீர்க் கலம்பகம், குலாம்காதிறு நாவலர் (19 நூ.)

29. குழைக்காதர் கலம்பகம் (தென் திருப்பேரை) ஆசிரியர் பெயர் தெரியவில்லை. (பதிப்.) திருமதி பத்மஜா அனந்த ராமன், திருநெல்வேலி, 1992.

30. குறுக்குத்துறைக் கலம்பகம், தி.சு. ஆறுமுகம் (கவிஞர் சிவதாசன்), திருநெல்வேலி, 1978.

31. குன்றக்குடிக் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19 நூ.)

32. கூடற் கலம்பகம், ஆளவந்தார்

33. கொற்றந்தைக் கலம்பகம், புகழேந்திப் புலவர் (12-14 நூ.) (நூல் கிடைக்கவில்லை.)

34. கோவைக் கலம்பகம் (கா. சதாசிவ முதலியார் பேரில்), பி.ஆர். கிருஷ்ணமாச்சாரியார், கோயமுத்தூர் கூட்டுறவு அச்சகம், 1896, 1949.

35. சிவஞான பாலைய தேசிகர் கலம்பகம், துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் (17 நூ.), (பதிப்.) இராமலிங்க சுவாமிகள், மிமோரியல் அச்சுக் கூடம், சென்னை, 1887, கழக வெளியீடு மற்றும் மயிலம் மடத்து வெளியீடு.

36. சீகாளத்திக் கலம்பகம், திருஎவ்வளூர் இராமசாமி செட்டியார் (20 நூ.)

37. செஞ்சிக் கலம்பகம், புகழேந்திப் புலவர் (12 நூ.)

38. செய்யூர்க் கலம்பகம், முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் (1? நூ.)

39. சென்னை மாநகர்க் கந்தசாமிக் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19 நூ.) ஸ்ரீநிதி அச்சுக் கூடம், சென்னை. 1878

40. சேயூர்க் கலம்பகம், அந்தக்கவி வீரராகவமுதலியார் (17 நூ.)

41. சேறைக் கலம்பகம், சேற்றூர் பொன்னாயிரங் கவிராய மூர்த்திகள் (சிந்தாமணி பிள்ளை) (16 நூ.)

42. ஞான விநோதன் கலம்பகம், தத்துவராய சுவாமிகள் (16 நூ.), (பதிப்.) சண்முக சுந்தர முதலியார், கல்விக் களஞ்சிய அச்சுக் கூடம், 1869.

43. தணிகைக் கலம்பகம், கந்தப்ப ஐயர் (18 நூ.)

44. திருஎவ்வுட் கலம்பகம், கோயம்பேடு வேங்கட கிருஷ்ணதாசர் (19 நூ.)

45. திருக்கச்சியூர்க் கலம்பகம், இரட்டைப் புலவர்கள்

46. திருக்கண்ணபுரக் கலம்பகம், டி.எஸ். ராஜகோபாலன், புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை. 1966.

47. திருக்கலம்பகம், உதீசித் தேவர் (14 நூ.), இயற்றமிழ் விளக்க அச்சுக் கூடம், காஞ்சி, 1888, (பதிப்.) மு. இராகவையங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கம், 1911,

திருக்கழுக்குன்றக் கலம்பகம், திரு எவ்வளூர் இராமசாமி செட்டியார் (19 நூ.) 1901.

திருக்காவலூர்க் கலம்பகம், வீரமாமுனிவர், தத்துவப் போதினி அச்சுக் கூடம், சென்னை. 1872.

). திருக்குடந்தைக் கலம்பகம், நெல்லை எட்டிசேரி, தி, சங்குப் புலவர், 1893.

1. திருக்குற்றாலக் கலம்பகம், (குற்றால யமக வந்தாதி உரை மேற்கோள்)

2. திருக்கோட்டியூர்க் கலம்பகம், பெருங்கருணை முத்தழகர்

3. திருக்கோட்டாற்றுக் கலம்பகம், கொட்டாம்பட்டிக் கருப்பையப் பாவலர் (19 நூ. ), 1898.

4. திருச்சிற்றம்பல தேசிகர் கலம்பகம் (துறைசை யாதீன கர்த்தர் மீது), சீனிப்புலவர், (பதிப்.) த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை ஆதீன வெளியீடு, 1949.

5. திருச்சுசீந்தைக் கலம்பகம், வீரவனநூர் பழனிக் குமர பண்டாரம் (19 நூ.), மதுரை, 1912.

56. திருச்செங்கோட்டுக் கலம்பகம், சே. சுந்தர முதலியார், 1865.

57. திருச்செந்திற் கலம்பகம், துறைசை ஈசான தேசிகர் என்னும் சாமிநாத தேசிகர் (17 நூ.), (பதிப்.) சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயர், தமிழ்ச் சங்க முத்திராசாலை, மதுரை, 1905.

58. திருச்செந்தூர்க் கலம்பகம் (32 பாடல்களே கிடைக்கின்றன.) டாக்டர் உ.வே.சா. நூலகச் சுவடி.

59. திருஞானசம்பந்தர் கலம்பகம், மாணிக்கவாசகத் தம்பிரான் (20 நூ.) கவுணியன் அச்சகம், 41, பிராட்வே, சென்னை-1

60. திருத்தணிக் கலம்பகம், தொழுவூர் வேலாயுத முதலியார் (19 நூ.)

61. திருநல்லூர்க் கலம்பகம், வெண்பாப்புலி அரன்வாயில் வேங்கடசுப்புப்பிள்ளை.

62. திருநாராயணக் கலம்பகம், கட்டளை வரதராஜபிள்ளை; சுஜன ரஞ்சநி முத்திராக்ஷர சாலை, சென்னை, 1891.

63. திருப்பரங்குன்றக் கலம்பகம், நா. கனகராசையர் (அச்சிடப் பெறவில்லை.)

64. திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம், தொல்காப்பியத் தேவர் (14 நூ) (பதிப்) இராமலிங்க சுவாமி, சென்னை. 1908.

65. திருப்பெருந்துறைக் கலம்பகம், சாத்திரம் சாமிநாதமுனிவர் (18 நூ), (நூல் கிடைக்கவில்லை)

66. திருப்பேரூர்க் கலம்பகம், சிரவை கந்தசாமி சுவாமிகள், (உ. ஆ) புலவர் ப. வெ. நாகராசன், சிரவையாதீனம், கோவை 1978.

67. திருப்பேரூர்க் கலம்பகம், கு. நடேச கவுண்டர் (20 நூ.) கோயமுத்தூர், 1952.

68. திருப்பேரைக் கலம்பகம், தென்திருப்பேரை அபிநவ காளமேகம் அனந்தகிருஷ்ண ஐயங்கார் (20 நூ), (பதிப்) ஸ்ரீநம்பி ஐயங்கார், எஸ். பி. பிரஸ், விருதுநகர், 1937.

69. திருப்போரூர்க் கலம்பகம், அட்டாவதானம் புரசை சபாபதி முதலியார், (19 நூ). சென்னை.

70. திருப்போரூர்க் கலம்பகம், தா. சாமிநாதபிள்ளை (19 நூ)

71. திருப்போரூர் வேம்படி விநாயகர் கலம்பகம், போரூர் வேலுத் தேசிகர். பிரசங்காம்ருதம் (20 நூ)

72. திருமதீனக் கலம்பகம். பிச்சை இபுறாகீம் புலவர் (19 நூ)

73. திருமயிலக் கலம்பகம், (திருமயிலாசலக் கலம்பகம்), புதுப் பாளையம் அ. பெரியசாமிப்பிள்ளை.

74. திருமயிலைக் கலம்பகம், திருமயிலை. சண்முகம்பிள்ளை (19நூ), சென்னை. 1903

75. திருமலைக் கலம்பகம் (நூல் கிடைக்கவில்லை.)

76. திருவதிகைக் கலம்பகம், உத்தண்ட வேலாயுத பாரதி (1536) (இது, கல்வெட்டால் அறியப்படும் செய்தி)

77. திருவரங்கக் கலம்பகம், பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், வை. மு. கோ. உரை (பதிப்) வேங்கடாசல முதலியார், சென்னை 1874.

78. திருவல்லிக்கேணிக் கலம்பகம், அ. சங்கரலிங்கம்பிள்ளை (19நூ), சென்னை 1898.

79. திருவாமாத்தூர்க் கலம்பகம், இரட்டைப்புலவர்கள் (14நூ) (பதிப்) கு. நடேச கவுண்டர் உரையுடன்.

80. திருவாரூர்க் கலம்பகம். (நூல் கிடைக்கவில்லை).

81. திரு. வி. க. கலம்பகம், மறையரசன் (20நூ).

82. திருவிடை மருதூர்க் கலம்பகம், திருஎவ்வளூர் இராமசாமி செட்டியார் (19நூ,) (பதிப்,) த. ச. மீனாட்சிசுந்தரம். ஸ்ரீமகாலிங்கசுவாமி தேவஸ்தானம், திருவிடைமருதூர், 1900.

83. திருவிருதைக் கலம்பகம், பாலூர். எம். பார்த்தசாரதி நாயுடு, விருதுபட்டி 1914 (வண்ணச்சரபம் மாணவர்)

84 திருவீரைக் கலம்பகம். வீரவநல்லூர் பழனிக் குமர பண்டாரம், மதுரை. 1912.

85. திருவெங்கைக் கலம்பகம், துறைமங்கலம் சிவப்பிரகாசர் (17 நூ), (பதிப்.) இராமலிங்க சுவாமி, சென்னை, 1906. மற்றும் மயிலம் மடத்து வெளியீடு.

86. திருவெண்ணெய்நல்லூர்க் கலம்பகம், பஞ்சலட்சண சரபம் இராசப்ப நாவலர் (19 நூ.), சென்னை, 1911.

87. திருவேட்டீசுவரர் கலம்பகம். (பதிப்.) சிவானந்தசாகர யோகீசுவரர், சென்னை.

88. திருவேங்கடக் கலம்பகம், முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் (19நூ,), (பதிப்.) புட்பரதஞ் செட்டியார், சென்னை. 1894.

89. திருவேங்கடமுடையான் கலம்பகம், எஸ். கே. இராமராசன். (கம்பராமன்) (20நூ.)

90. திருவேரகக் கலம்பகம், சுவாமிமலை நாராயணசாமிக் கவிராயர், 1898,

91. திருவொற்றியூர்க் கலம்பகம், பூவை கலியாணசுந்தர முதலியார். மநோன்மணி விலாச அச்சுக்கூடம், சென்னை, 1904.

92. தில்லைக் கலம்பகம், இரட்டைப் புலவர்கள் (14நூ). புதுவை, 1871. துறைசையாதீன வெளியீடு.

93. துரியோதனன் கலம்பகம்.

94. துறைசை அம்பலவாண தேசிகர் கலம்பகம், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, (பதிப்.) த. ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, திருவாவடுதுறை ஆதீனம், 1963.

95. தென்தில்லைக் கலம்பகம், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (20நூ,)

96. நசரைக் கலம்பகம், சாமிநாதபிள்ளை (19நூ.), சென்னை, 1868. எஸ். மிக்கேல், தாம்பரம், சென்னை-59. 1976.

97. நந்திக் கலம்பகம், (9நூ.), (பதிப்.) அ. கோபாலய்யர். மதுரைத் தமிழ்ச் சங்கம், 1927.

98. நாகைக் கலம்பகம், சவ்வாதுப் புலவர் (18நூ.) சென்னை,

99. நாகூர்க் கலம்பகம், குலாம் காதிறு நாவலர் (19நூ.), ஊ. புட்பரதஞ் செட்டியார், சென்னை, 1893.

100. நெல்லைக் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19நூ.) (நூல் இன்னும் அச்சாகவில்லை.)

101. நேமக் கலம்பகம், குன்றக்குடி பாடுவார் முத்தப்பச் செட்டியார் (18 நூ.)

102. பகுதாதுக் கலம்பகம், குலாம்காதிறு நாவலர், (19 நூ,)

103. பதாயிகுக் கலம்பகம், குலாம் காதிறு நாவலர், (19நூ.) ஊ. புட்பரதஞ் செட்டியார், சென்னை, 1900.

104 பழனிக் கலம்பகம், (பழனித்திருவாயிரப்பகுதி), தண்டபாணி சுவாமிகள் (19நூ.) (உ. ஆ) ரசபதி.

105. பாக்தாதுக் கலம்பகம், (முகையத்தீன் அப்துல்காதர் ஜய்லானி ஆண்டகை அவர்கள் மீது), 1072

106. பாலூர்க் கலம்பகம், முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் (19நூ.)

107. பின்னத்தூர்க் கலம்பகம், பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (20நூ.)

108. புதுவைக் கலம்பகம், புதுப்பாளையம், அ. பெரியசாமிப் பிள்ளை.

109. புதுவைக் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19நூ.) (நூல் கிடைக்கவில்லை.)

110. புள்ளிருக்கு வேளூர்க் கலம்பகம், படிக்காசுப் புலவர் (17நூ.) (பதிப்.) இராமலிங்க சுவாமிகள், மிமோரியல் அச்சுக்கூடம், சென்னை, 1888.

111. பெத்லேஹம் கலம்பகம்.

112. பேரூர்க் கலம்பகம், ரா. சபாபதிபிள்ளை (19 நூ)

113. மக்காக் கலம்பகம், செய்க் அப்துல்காதிறு ஆலிம்புலவர் (19நூ)

114. மஹ்மாக் கலம்பகம், தொழுவூர் வேலாயுத முதலியார் (19நூ) மிமோரியல் அச்சுக்கூடம் சென்னை.

115. மதீனாக் கலம்பகம், சீவரத்தினக் கவிராயர் என்னும் முகமது லெப்பை (19 நூ.)

116. மதீனாக் கலம்பகம், குலாம் காதிறு நாவலர் (19 நூ.)

117. மதுரைக் கலம்பகம், குமரகுருபரர் (17நூ.). கழக வெளியீடு, 1925, டாகடர் உ. வே.சா. வெளியீடு,

118. மதுரைக் கலம்பகம், இளையான்குடி சோதுகுடி அப்துல் காதிர் நாவலர்.

119. மயிலாசலக் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19 நூ.)

120. மயூரக்கிரிக் கலம்பகம், வயிநாகரம். அ. இராமசாமி செட்டியார் (20 நூ.)

121. மறைசைக் கலம்பகம், யாழ்ப்பாணம் நீர்வேலி பீதாம்பரப் புலவர் (19 நூ)

122. மாறன் கலம்பகம், (நூல் கிடைக்கவில்லை).

123. முருகக் கடவுட் கலம்பகம், நாராயணசாமிக் கவிராசர்,

124. முருகக் கடவுட் கலம்பகம் அரசஞ் சண்முகனார் (19 நூ.)

125. வரமங்கைக் கலம்பகம், நரசிம்மாச்சாரியர் என்னும் கவிபூஷணம் அப்பு ஐயங்கார் (20 நூ.)

126. வாட்போக்கிக் கலம்பகம், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை (19 நூ.), டாக்டர் உ.வே.சா. பிரபந்தத் திரட்டு, ஸ்ரீ மட்டுவார் குழலம்மை அச்சக்கூடம், 1890.

127. விந்தைக் கலம்பகம், பஞ்சலட்சண சரபம் இராசப்ப நாவலர். (20 நூ.)

128. வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம், தண்டபாணி சுவாமிகள் (19 நூ.) (பதிப்.) டாக்டர் வே. இரா. மாதவன், பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர் 5, 1994.

129. வீரமாமுனிவர் கலம்பகம், செகராவு முதலியார் (20 நூ )

130. வீரமாமுனிவர் கலம்பகம், பேரா. சுந்தரமூர்த்தி (1977 )

131. வேலூர் (சேலம்) சத்திர விநாயகர் கலம்பகம், எஸ்.கே. இராமராசன் (கம்பராமன்) (20 நூ.)

132, வேளூர்க் கலம்பகம் (டாக்டர் உ.வே.சா. சுவடி.)

133. ஜகத்குரு சங்கரர் கலம்பகம், எஸ்.கே இராமராசன் (கம்பராமன்) (20 நூ.)

134. (பெயர் தெரியாத) கலம்பகம், வடமலையப்பப்பிள்ளையன்

## குறிப்புரை

1. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் 1984 இல் வெளியிட்ட தமிழ் இலக்கிய வகையும் வடிவும் என்ற நூலில், தமிழிலுள்ள கலம்பக நூல்கள் எழுபதுக்கும் மேற்பட்டவை என்கிறார்.

2. 1988 இல் வெளிவந்த 'தமிழில் கலம்பக இலக்கியம்' (தமிழ்க் கோட்பாட்டு வரிசை-6) என்ற நூலில் எஸ். சௌந்திர பாண்டியன் அவர்கள் 88 கலம்பக நூல்களைப் பட்டிய பட்டியலிட்டுத் தந்துள்ளார்.

4. 1993 நவம்பரில் வெளிவந்த 'கலம்பகத்திறன்' என்ற நூலினை எழுதியுள்ள டாக்டர் கு.வெ. பாலசுப்பிரமணியன் அவர்கள் தாம் சிரவை ஆதீனப் புலவர் ப.வெ. நாகராசன் அவர்கள் மூலம் தொகுத்ததாகக் கூறும் பட்டியலில் 106 கலம்பக நூல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

4. இவற்றைத் தொடர்ந்து, 1994 ஆம் ஆண்டில் வெளிவரும் இந்நூல் அச்சாகும் நிலையில் தொகுக்கப்பெற்ற மேற்காணும் பட்டியலில் 134 கலம்பக நூல்கள் அறியப் பெறுகின்றன

இவற்றுள். அந்தாதிக்கலம்பகம், துரியோதனன் கலம்பகம் போன்றவை பெயரளவிலேயே அறியப் பெறுகின்றன. பல நூல்கள் கிடைத்தற்கு அரிதாயுள்ளன.

# துணை நூல்கள்


1. அட்ட பிரபந்தம், பிள்ளைப்பெருமாளையங்கார், வை.மு.கோ. உரையுடன், வை.மு.கோ. கம்பெனி, சென்னை-5. 1966.

2. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார் ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி. 1982.

3. அழகர் கலம்பகம், வேம்பத்தூர்க் கவிகுஞ்சரம் ஐயர். (பதிப்.) எம். சடகோபராமானுஜாசாரியார், சென்னை, 1890.

4. அறுவகை இலக்கணம். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பதிப்பும் உரையும் புலவர் ப வெ. நாகராசன். தமிழ்ப் பல்கலைக் கழகம். தஞ்சாவூர். 1991.

5. ஊஞ்சல் இலக்கியம், (பதிப்.) த. அழகப்பராசு. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-1983.

6. ஊற்றுமலை தனிப்பாடல் திரட்டு, (பதிப்.) குரு. இராமசாமிக்கோன், இ. ராம. குருசாமிக்கோனார் சன் புத்தகசாலை, புதுமண்டபம், மதுரை. 1962.

7. எம்பிரான் சதகம், கோபால கிருஷ்ணதாசர், ஸ்ரீ கோபால விலாச அச்சியந்திரசாலை, சென்னை. 1903.

8. எழுபா எழுபஃது, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் 73 வது குருபூசை விழா மலர், 1971.

9. என் சரித்திரம், டாக்டர் உ வே. சாமிநாதையர், எஸ். கல்யாண சுந்தரம் பதிப்பு, சென்னை. 1950.

10. கண்ணன் பேசுகிறான், நஜன் (எஸ். நடராஜன்), திருமலை திருப்பதி தேவஸ்தான வெளியீடு, திருப்பதி.

11. கம்பராமாயணம் (பால காண்டம்), அ. இரங்கசாமி முதலியார் அண்டு சன்ஸ் சென்னை பூமகள் விலாச அச்சுக் கூடம், 1928.

12. கலம்பகக் கொத்து, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. 1950.

13. கலம்பகத்திறன், டாக்டர் கு. வெ. பாலசுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை-1, 1998.

14. குருபர தத்துவ நூல், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமி கள், ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் திருக்கோயில், சிரவணபுரம் கும்பாபிடேக விழா மலர், 1966.

15. குழைக்காதர் பிரபந்தத்திரட்டு (தென் திருப்பேரை) உரையாசிரியர்—பதிப்பாசிரியர். திருமதி பத்மஜா அனந்த ராமன், எம். ஏ., 1, சிவபுரம் தெரு, திருநெல்வேலி ஜங்ஷன், 627001, 1992.

16. குறுந்தொகை, மூலமும் உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் முதற் பதிப்பு, சென்னை. 1937.

17. சடகோபர் சதகத்தந்தாதி, வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், திருவாமாத்தூர் கௌமாரசபை வெளியீடு 1963.

18. செவ்வைச் சூடுவார் இயற்றிய பாகவதம், டாக்டர் உ வே.சா. பதிப்பு, திருமலை திருப்பதி தேவஸ்தான அச்சுக்கூடம், முதற்பாகம்—1949, இரண்டாம் பாகம்—1953.

19. ஞாயிறு ஆயிரம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-96.

20. தண்டபாணி விஜயம், தி. மு செந்தினாயகம் பிள்ளை, பி. ஆர். ராம அய்யர் அண்டு கம்பெனி, சென்னை

21. தமிழ் இலக்கிய வகையும் வடிவும், டாக்டர் ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-96. 198 ,

22. தமிழ் வளர்த்த பெரியார்கள், வித்துவான். இராஜ சிவ. சாம்பசிவ சர்மா, தென்னிந்தியப் பதிப்புக் கழகம், கோடம் பாக்கம், சென்னை-24. 1950.

23. தமிழில் கலம்பக இலக்கியம், எஸ். சௌந்தரபாண்டியன், ஸ்டார் பிரசுரம், சென்னை-5. 1988.

24. தனிப்பாடல் திரட்டு, உரையாசிரியர் புலவர் அ. மாணிக்கம், பூம்புகார் பிரசுரம், சென்னை-18, 1977.

25. திருக்குறள், பரிமேலழகர் உரையுடன், பாரதி பதிப்பகம், சென்னை-17. 1966.

26. திருப்பாவை, பி. இரத்தின நாயக்கர் சன்ஸ், சென்னை-1

27. திருவரங்கக் கலம்பகம், பிள்ளைப் பெருமாளையங்கார், வை. மு. கோ. உரை, (பதிப்.) வேங்கடாசல முதலியார், சென்னை, 1874.

28. திருவரங்கத் திருவாயிரம், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பி. ஆர். ராமய்யர் அச்சுக்கூடம், சென்னை.

29. திவ்விய தம்பதியர் புகழ்மாலை, வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள், (பதிப்) டாக்டர் வே. இரா. மாதவன். பாவை வெளியீட்டகம், தஞ்சாவூர்-5. 1990.

30. திவ்ய பிரபந்த அகராதி, அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை. 1961.

31. தீர்த்தகிரிப் புராணம், சைவ எல்லப்ப நாவலர், 1870.

32. தொல்காப்பியம் பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை' கழக வெளியீடு, சென்னை, 1977.

33. நாமதீப நிகண்டு, சிவசுப்பிரமணியக் கவிராயர், தமிழ்ப் பல்கலைக் கழக மறுபதிப்பு, தஞ்சாவூர், 19-5,

34. நாலாயிர திவ்யப்ரபந்தம், மயிலை மாதவதாசன் பதிப்பு, சாது அச்சுக் கூடம், சென்னை, 1948.

35. பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும், டாக்டர் உ. வே. சாமிநாதையர் நான்காம் பதிப்பு, சென்னை, 1956.


36. புறப்பொருள் வெண்பாமாலை, (பதிப்) டாக்டர். உ. வே. சாமிநாதையர், கபீர் அச்சுக்கூடம், சென்னை. 1963.

37. மாறனலங்காரம், செந்தமிழ்ப் பிரசுரம், 1-15.

38. வளவனூர் திருமால் பதிகம். வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், 86வது குருபூசை விழா மலர், 1984.

## டாக்டர் வே. இரா. மாதவன் அவர்கள் பதிப்பித்துள்ள நூல்கள்

1. கண் மருத்துவம் (1982 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த மருத்துவ நூலுக்கான முதற் பரிசு பெற்றது.) (சுவடிப் பதிப்பு).
2. சித்திரக் கவிகள் (1983 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் சிறந்த மொழி இலக்கியம் பற்றிய ஆய்வு நூலுக்கான முதற் பரிசு பெற்றது).
3. மீனாட்சியம்மன் திருப்புகழ் (சுவடிப் பதிப்பு)
4. விராலிமலை வேலவர் குறவஞ்சி (சுவடிப் பதிப்பு)
5. *Siddha Medical Manuscripts in Tamil*
6. *Heritage of the Tamils—Siddha Medicine*
7. *Heritage of the Tamils—Education and Vocation*
8. தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை—முதல் தொகுதி
9. தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை—இரண்டாம் தொகுதி
10. தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை—மூன்றாம் தொகுதி
11. தமிழ்ச் சுவடிகள் விளக்க அட்டவணை—நான்காம் தொகுதி
12. வைத்தீசுவரன் கோயில் பதிகங்கள் (சுவடிப் பதிப்பு)
13. திருவேங்கடவன் திருப்பாமாலை (சுவடிப் பதிப்பு)
14. வறுமைக்கு விடை கொடுத்த ஏழேழு வெண்பாமாலை (சுவடிப் பதிப்பு)
15. வேலூர்ப் பதிகங்கள் (சுவடிப் பதிப்பு)
16. நலம் தரும் நாராயண கவசம் (சுவடிப் பதிப்பு)
17. திவ்விய தம்பதியர் புகழ்மாலை (சுவடிப் பதிப்பு)
18. டாக்டர் உ. வே. சா. செவ்வைச் சூடுவார் பாகவதப் பதிப்பு (டாக்டர் உ. வே. சா. அறக்கட்டளைச் சொற்பொழிவு-7)
19. வீரகேரளம்புதூர் நவநீத கிருட்டிணன் கலம்பகம் (சுவடிப்பதிப்பு)
20. தமிழில் தலபுராணங்கள் (டாக்டர் வ. அய். சுப்பிரமணியம் அறக்கட்டளைச் சொற்பொழிவு) (அச்சில்)
21. அகத்தியர் வைத்திய காவியம்-1500 (அச்சில்)
22. வைத்திய சிந்தாமணி (அச்சில்)
23. குழந்தைகள் மகளிர் மருத்துவம் (அச்சில்)
24. தன்வந்தரி வைத்தியக் கும்மி (அச்சில்)
25. தணிகைவேள் பாரதியார் பிரபந்தத்திரட்டு (அச்சில்)
26. அருள்மிகு பல்கலை விநாயகர் போற்றி மாலை
27. சென்னை ஸ்ரீ கந்தகோட்ட முருகன் ஆறாறு மாலை



தமிழ்நூல் பதிப்புப் பணியில் அயராது உழைத்துத் தமக்கு என ஓர் சீரிய இடத்தைப் பெற்றுள்ளவர் டாக்டர் வே. இரா. மாதவன் எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., அவர்கள்.

வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் பிறந்த இவர் தமிழ், அறிவியல், கல்வியியல், சுவடியியல் சித்த மருத்துவம், ஓவியம் போன்ற பல துறைகளிலும் பட்டங்களும் பட்டயங்களும் பெற்றவர்.

ஆசிரியப்பணியிலும் ஆய்வுப்பணியிலும். நன்முயற்சியும் ஊக்கமும் ஆற்றலும் கொண்ட இவர் ஒரு சிறந்த ஓவியராகவும், மரபுக் கவிஞராகவும், உரையாசிரியராகவும் திகழ்கின்றார்.

தமிழ் இலக்கியச் சுவடிகள், மருத்துவச் சுவடிகள் ஆகியவற்றை ஆராய்வதில் மிகுந்த பயிற்சியும் திறமையும் பெற்றவர். தமிழ்ச் சுவடியியலில், குழந்தை மருத்துவச் சுவடிகளை ஆய்வு செய்து, சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்ற பெருமையுடையவர்.

சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆறு ஆண்டுகள் சிறக்கப் பணிபுரிந்த பின்னர்த் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கடந்த எட்டு ஆண்டுகளாகப் பணியாற்றி வருகின்றார்.

நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எழுதியளித்துள்ள இவர் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்து வழங்கியுள்ளார். எழுத்துலகில் எவ்விதச் சார்புமின்றி, அமைதியாக உழைத்துவரும் இவருக்குக் கிடைத்துள்ள பரிசுகளும் பாராட்டுகளும் மிகப்பல.

இவர் அரிதின் முயன்று பதிப்பித்துள்ள 'கண்மருத்துவம்' என்ற நூலுக்கு 1982 ஆம் ஆண்டின் சிறந்த மருத்துவ நூலுக்கான முதற்பரிசையும், 'சித்திரக்கவிகள்' என்ற நூலுக்கு 1983ஆம் ஆண்டின் சிறந்த மொழி இலக்கியம் பற்றிய ஆய்வு நூலுக்கான முதற்பரிசையும் அளித்து தமிழக அரசு இவரைப் பெருமைப்படுத்தியிருக்கிறது.

'காலம் பொன் போன்றது. கடமை கண் போன்றது' என்னும் குறிக்கோளே இவர்தம் குறிக்கோள். இவர்தம் இடைவிடா உழைப்புப் பலரால் சிறப்பாகப் பாராட்டப் பெறும்.

—பாவை வெளியீட்டகத்தார்